



உ

தெய்வமே துணை.

சத்தியவாக்கு

# அரிச்சந்திர நாடகம்.

இஃது


பழனிஸ்தலத்தில் வசிக்கும்

மு - சந்தனமாசாரியாரவர்கள்

சுவீகாரபுத்திரரும்

ஷை பழனிடவுன்முனிசிபல்கௌன்சிலராகிய

வே-மௌனகுருருத்திரமூர்த்தி ஆசாரியார்

அவர்கள் சகோதரரும்

ஷை பழனிஸ்தலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்

சற்ஜனசபாவுஞ்சித

சங்கீத வித்யாப்ரசங்கக் கம்பேனியென்னும்

ட்ராமாவினது ஸ்டேஜ்மானேஜராகிய

வே-முத்தாசாரியார்

அவர்களாலியற்றப்பட்டு



மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ரா. ம. குருசாமிக்கோனார்

அவர்களால்

சென்னை சூளை:

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.



ரிஜிஸ்டர் காபி ரயிட்.

O-,892 MMA2,5
NOS
119619
1816

ஸ்ரீ

சுந்தரேசர் துணை.

2

# சாற்றுக்கவிகள்.

கோயமுத்தூர் ஜில்லா
உடுமலைப்பேட்டையில் வசிக்கும்
பஞ்சவனாசாரியார் அவர்கள் குமாரர்
P. காளுச்சாமி ஆசாரியார்
அவர்களாலியற்றியது.

---

இரட்டையாசிரிய விருத்தம்.

பூமாதுவளர்ப்புளியம்பதிசெயுந்தவப்
 புண்யமீதென்னமேலோர்
புகழுமற்புததிவ்ய அசிதவிஸ்வப்ரம்ம
 புரிதவமென்னத்திகழ்ந்தே
பாமேவுவிநாதகன் பதுமமாதருளிலகு
 பருணிதவிசேஷவிபவப்
பக்குவசிரேஷ்ட ப்ரபலவிதரணமேகன
 பருவமுத்தையனன்பால்
காமேவுவுல்கங்க ளெங்கணும்பாவுசத்
 காரணவபாரஸர்வ
கௌரவமிகுஞ்சத்ய வாக்கரிச்சந்த்ரன்
 சுத்ரநாடகஞ்சொற்றனன்
நாமேயிவ்வழுதினுக் கிணைகூறல்வேண்டுமோ
 நற்றுளாய்மார்பன்முன்னன்
நல்லியதவஞ்சமென யாவர்தானறிகிலார்
 ஞாலந்தழைத்தோங்குமே.

---

மதுரை ஜில்லா
பழனித்தாலூகாவைச்சார்ந்த
சதுர்வேதமங்கலமென்றும் தாமரைக்குளத்தில்வசிக்கும்
V. ஆண்டியப்பபிள்ளை
அவர்களாலியற்றியது,

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நித்தியமயோத்திதனிற் செங்கோன்மைவழுவாது
நீதியோங்கச்
சத்தியமேவிரதமதாய்ப் பூண்டுலகையாண்டவரிச்
சந்த்ரவேளின்
பத்தியனைத்தையுமெடுத்துச் செந்தமிழ்நாடகமாயோர்
பாடல்செய்து
எத்திசையும்புகழ்படைத்தான் பழனியில்வாழ்முத்தைய
னெனும்பூமானே.

வேம்பத்தூர் ம-ா-ா-ஸ்ரீ, சிலேடைப்புலி பிச்சுவய்யாவர்களென்ற
முத்துவெங்கடசுப்பய்யர்வர்களியற்றிய
வெண்பா.

தாரணியோரேத்துமரிச் சந்திரன்மாநாடகத்தை
ஆரணியசேட னிசயித்தான் - தீர
வனவசத்தர்சேர்பழநி வாழ்முத்தயனெ
வினவரச மும்மொழுகவே.

இதுவுமது.

நண்பாவலர்புகழுந் நாடகத்தைப்புத்தகமாய்
விண்பாருமெச்ச வியந்தளித்தான்-பண்பார்ந்த
தொண்டிருக்குந்தூயகுணத் தோன்றல்குருசாமியெனுங்
கண்டிருக்குஞ் சொல்லியர்மோகன்.



சிவகெங்கை சமஸ்தானவித்துவான் ம-ா-ா-ஸ்ரீ,
வில்லியப்பபிள்ளையவர்களியற்றிய
அறுசீர்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாற்றிசையும்பேர்விளங்க வரிச்சந்த்ரநாடகத்தின்
நலினமோங்க
ஏற்றமுள்ளபுலவர்பல பாடியச்சிட்டிருக்கின்றார்
யாமும்பார்த்தோம்
தேற்றமிகும்பழநிவளர் முத்தயவேள்பாடியவிச்
செந்நூற்போலும்
ஆற்றுகலைமகளாலு மியலாதற்புதமென்ன
அருமைதானே.

இதுவுமது.

ஓங்கும்புகழ்மதுரைநகர் புத்தகவியாபார
முயர்ந்தசீமான்
பாங்குதிகழரசர்நண்பன் யாதவர்கள் குலத்துதித்துப்
பயினற்சிங்கம்
பூங்கமலக்கண்ணனடி யவன்ராமசாமியருள்
புதல்வனானோன்
றூங்குருசாமியிதை யச்சிலிட்டே யுலகமெங்குந்
தாபித்தானே.

முதுகுளத்தூர் அஷ்டாவதானி ம-ா-ா-ஸ்ரீ,
மு. வ. கலியாணசுந்தரம்பிள்ளையவர்களியற்றிய
அறுசீர்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இத்தலமோடெத்தலமும் புகழுடையயோத்திநக
ரேந்தல்சீரார்
சத்தியவாக் கரிச்சந்த்ரன் சரிதைதனை நாடகமாத்
தமிழாற்சொற்றான்
நத்தினங்க ளூர்பழநி நகர்வாழ்வான் மதுரகவி
நவிலுஞ்சீர்த்தி
முத்தயவே ளச்சிலிட்டான் மதுரைநகர்க் குருசாமி
முதல்வனம்மா.

கல்லணைக்கிராமம் ம-ா-ா-ஸ்ரீ, லக்ஷுமணய்யங்காரவர்கள் புத்திரரும்
மதுரைத்தமிழ் ஸ்கூல் உபாத்தியாயருமான ம-ா-ா-ஸ்ரீ,
முத்தழகபாரதியாரவர்களியற்றிய
அறுசீர்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இகபரமிவ் விரண்டினுக்கு மில்வுலகி லெண்ணிறிரு
வீய வல்ல
சகபரசற் குணவுசித சத்தியவாக் கரிச்சந்த்ரன்
சரிதந் தன்னை
சுகபரத சங்கீத நாடகமாய் முத்தயவேள்
சொற்றா னிஃது
மிகபசா தகமாகி யெல்லவர்க்குந் துணையிருந்து
விளங்கு மன்றே.

பிரமாபுரி ம-ா-ா-ஸ்ரீ,
வெங்கிட்டரமண அய்யரவர்கள் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ,
வெங்கிடபதி அய்யரவர்களியற்றிய
வெண்பா.

நாரதனு மொப்போ தற்கும் பணிகரோ
பாரதியை யீடாய்ப் பகர்வனோ - பார
முனிவர் தொழும்பழநி முத்தயவே ளைப்போல்
இனிநா டகஞ்சொல்வோ ரில்.

அலங்காநல்லூர் ம-ா-ா-ஸ்ரீ,
க. பெரியகங்கை அண்ணாவியவர்களியற்றிய
விருத்தம்.

பொன்னமர்முள் ளரைமுளரிக் குமுனிசெறி பழனிவளர்
புலமைசான்ற
கன்னயமுத் தயக்கவிஞன் சத்தியவாக் கரிச்சந்த்ர
நாடகத்தை



இன்னமுதந் திகரவிம்பர்க் கிசைத்தனன் கொற்கையிற்பொது
ரெல்லாங்கீர்த்தி
மன்னுகுரு சாமிவள்ள லச்சிட்டுப் பெரும்புகழா
வழங்கினனால்.

பிரமாபுரி ம-ா-ா-ஸ்ரீ,
பா. குமாரசாமித்தேவரவர்கள் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ
மீனாக்ஷிசுந்தரத்தேவரவர்களியற்றிய
விருத்தம்.

சீர்திகழிரவிகுலத்தினிலுதித்த தீரமாமணியரிச்சந்த்ரன்
பார்புகழ்கதையைப்பழனிமுத்தயவேள் பாகெனப்பகர்ந்த
தார்வினைபொதுவர்குலமகாலிங்கத் தனபதிமனமகிழ்தமை
கார்பொருங்கரத்தாங்குருசாமி காசினிக்களித்தனன்களித்

மதுரை உத்தங்குடிவித்துவான் ம-ா-ா-ஸ்ரீ
பொன்னுசாமிபிள்ளையவர்களாலியற்றிய
விருத்தம்.

பூவுலகிற்கீர்த்திதங்கயோத்தினைப் புரந்தளித்தபூமானேழு
தாவிபரியோன்குலத்துச் சத்தியவாக்கரிச்சந்த்ரன்சரிதந்த
காவமர்தேன்கனிரசமு முவமையமையாதெனவேகவிஞ
பாவதனால்விஸ்வகுலமுத்தயவேள்நாடகமாய்பாடினனே.

மதுரை மேல்மாசிவீதி ம-ா-ா-ஸ்ரீ சொக்கலிங்கம்பிள்ளையவர்கள்
நீதிநெறியரிச்சந்திரநாடகமியற்றியவரும்
ஷை நாடகத்திற்குபாத்தியாயருமாகிய ம-ா-ா-ஸ்ரீ,
சங்கிலியாபிள்ளையவர்களாலியற்றிய
அறுசீர்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இங்கிதஞ்சேரிந்திரன்மா சபையினில்யாழ்நாரதனும்
எழுதநோக்கி
எங்கிருந்துவருகின்றீர் மிகுகளைப்பாய்த்தோற்றுகிற
தென்னவன்னோன்

## சாற்றுக்கவிகள்.

ல்செறிமாடமரு விடுபழனித்தலமுறையும்
மகிபன்வாசப்
ங்கயநேர்முகத்தியர்கள் மடமொழிநவடிவழகன்
பன்பால்மிக்கோன். (௧)

ந்தரதிண்புயகுமுண முத்தையசிமான்கலையில்
மலையனையான்
கந்தமுறுமலர்வாவி சூழ்ந்திடுமயோத்திநகர்
காவல்பூண்ட
சந்தமமர்சத்தியவாக் கரிச்சந்த்ரபூபதியின்
சரிதந்தன்னைப்
பந்தமிகுகவராசசந் தெதநன்னாடகமெனவே
பாடப்பாடி. (௨)

துந்நகர்வாழினைஞர்கள்பாத் திரரூபமாய்நடித்தா
ரன்பாய்ப்பார்த்தேம்
என்னவியப்பதனைபுமக் கோதவிரைவாயோடி
யிங்குற்றேனென்
சொன்னதுசந்தேகமெனிற் றிருவாலவாய்நகருட்
சுகநன்வாசி
கனனணிகர்காதலகோ மான்குருசாமிக்குரிசிற்
கனாதையார்ந்தோன். (௩)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

புத்தகமாயச்சிலிட்டிவ் வுலகமெல்லாம்புகழவிடுத்தனனதைக்கை
பொருத்திப்பார்த்தால்
சித்தமமறையமுடனிரியுமென்றே சேப்பினனென்றுலகுற்குச்
சிறியேனெத்தை
யொத்ததெனவுரைத்திடுவேன் றேன்பாகென்னில்
உடைவாவண்டெச்சிலெரியுற்றதாகும்
சத்துளமுக்கனியெனிலோ வெளிறிவெம்புந்
தகாதுவமையெதையெடுத்துச்சாற்றுவேனால். (௪)

---



பரமபதிதுணை.

இந்நூ சிவகெங்கை ம-ா-ா-ஸ்ரீ, மு. பஞ்சாக்ஷரம் பிள்ளையவர்கள் குமாரரும், ராஜாஸ் ஹைஸ்கூல் தமிழ்த்தலைமைப் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ தெய்வசிகாமணி அய்யரவர்களின் மாணாக்கருமான ம-ா-ா-ஸ்ரீ

## கணபதியாபிள்ளையவர்களியற்றிய

நிலமண்டில வாசிரியப்பா.

பொன்னிறவனசம் பூத்தொளிர்சிறந்த
வென்னிலங்கட்கு மேறியபுகழார்
நற்பதிகுமுதம் நாப்பண்கமடம்
விற்பனத்துயிலை மேவியவாவிசூழ்ந்
திலங்கியமாமக ளின்னுதற்றிலதம்
வலங்கொளயோத்தி மாநகரதனைச்
சிரமதாய்க்கொண்டுஞ் சீர்சாலறத்தின்
றரமதுபெருகித் தங்கியகோசலை
நாட்டினைமனுநால் நன்காராய்ந்து
பூட்டியகளையாற் பொருந்தலர்வெருவ
மத்தம்மதியணி வரனடியதனைச்
சித்தத்திருத்திச் செங்கோல்புரிந்த
சத்தியவாக்கரிச் சந்திரனிதிமகன்
பத்தினிவிற்று பறையனுக்காளாய்
சமங்காத்தே யீசனதருளால்
வாமமேகலையார் மலைமகளோடு
பின்னரசாண்ட பெருமைசேர்காதையை
இன்னிலமதனி லெவர்களும்வியப்பக்
கட்டாயமுதக் கவின்சுவைமுதிர்பன்
மெட்டாய்ச்சேர்த்து வெகுவலங்கார
நாடகமாக நல்கினோன்யாரெனிற்
றேடவிற்றமலஞ் சுரும்பினமிதிப்பக்
கிழிகருதேன்கீழ்க் கீண்டியேயொழுகி
வழிதரப்புக்கி வயல்களிற்செந்நெல்
வானுறவளர்க்கும் வளமிகுபழனித்
தானமதுறைவோன் சாற்றிடும்விசவ

குலம்விளக்கிடுசெற் குணசித்தாமுனி
சிலைநுதன்மடவார் தின்மடற்றெழும்
ஐங்கணையேந்தா தவனியாரும்மதன்
சங்கரன்றடியைச் சதாத்துதிமனத்தன்
மங்களகுமண மகிபன்மாந்தனத்
துங்கவேடனுக்கு சுவிகாரச்சேய்
அருந்தியமென்னடம யான்மவுனகுரு
உருத்திரமூர்த்திற் குகந்தநற்சோதரன்
சற்சனர்பைபுசி தசங்கிதவித்தியா
விற்பவச்சங்க விதிதகம்பேனி
யெனவுலகோர்க யேற்றியகாமம்
புனைநாடகத்திற் பொருந்துமானேஜர்
முத்தயனிங்கா முலையர்களேய
முத்தயவேள்தான் மெய்மழிந்தனன தனைச்
சிலவாய்மைதிகழ்ச் செங்கயற்கணியார்
ஆலவாய்க்கோனுக் கனுதினம்பணிபுரி
இராமசாமிக்கோ னியற்றியதவத்தால்
கராமதயானையைக் கௌவியவந்நாட்
சென்றிடர்தீர்த்த திருமாலனையான்
குன்றெனுந்தோளான் குணமிலருளமுட்
புகாலிங்கமதைப் போற்றியசற்குண
மகாலிங்கக்கன வான்சோதரனென
வருசாமிக்கொடை வள்ளலென்னன்பன்
குருசாமித்தவக் குரிசிலுமுவந்து
பூவுலகிற்கோர் புதுவமுதமென்ன
வாவலரையச்சிற் களித்தொருபுத்தகம்
ஆக்கிடக்கண்டே யாரப்பானையம்வாழ்
மூக்கவேளாரும் முருந்தனடிபணி
சுந்தரராஜ சுகுணனும்பிரமனூர்ச்
சந்திரவதன சாகித்யவலவ
மீனாக்ஷிசுந்தர விவேகனும்பரம்பைவாழ்
மீனாட்சிமேவு மெய்விபர்மோக
கன்னனைநிகர்கரக் கருவல்வுசித
பொன்னயவரத பூமனுநிகாமனும்



6

சரணங்கள்.

காதலுடனே மேதினியுளோர் காணவே
நாதகீத விநோதசரிதை நயமுந்தோணவே
நாவிற் கூடவே மேவிப்பாடவே (வந்)

தொண்டர்கண்முத லண்டர்பணியுஞ் சொன்னமே
தண்டமிழ்க்கட லுண்டுகவிதை சாற்றும்அன்னமே
தஞ்சம் நீயே பஞ்சைநான்தாயே (வந்)

பத்தியுடனே முத்தையன்றுதி பாரதி
சித்தமிகவும் வைத்துக்கிருபை செய்யவேததி
தேனே மானே த்யானஞ்செய்தேனே (வந்)

ஸ்லோகம்.

சரஸ்வதிநமஸ்துப்யம் வரதேகாமரூபிணி
வித்யாரம்பம்கருஷ்யாமி சித்தர்ப்பவதுமேசதா
பத்மபத்ரவிசாலாக்ஷி பத்மகேசரவர்ணினி
நித்யம்பத்மலயாதேவி சாமாம்பாதுசரஸ்வதி.

விருத்தம்.

வேதமங்கள கீதசுந்தர மாதெனும்பரி பூரணி
போதமந்த்ரவி நோதசம்ப்ரம பூவையிங்கித நாரணி
தாதனின்புக ழோதிடும்படி தானுகந்தரு ளாரணி
பாதபங்கய சேவைதந்திடு பாரதண்டமிழ் வாணியே.

(சூத்-வ-ம்) ஹே-வாணி வேதபுஸ்தகபாணி நித்யவருட்கல் கிருபாபாணி பரிமளமலர்வேணி சாவித்ரி குங்குமதனவிசித்ரி நேத்ரி சூத்திரதார் வந்தனம்புரிகின்றேன்.

(சரஸ்வதி வசனம்.) கல்யாண் சூத்திரதார ஹே பாலகா யாம் ப்ரம்மலோகத்தில் எமது பர்த்தாவாகிய ப்ரம்மதேவனது வாமபாகத்திலிருந்து வீணாகானஞ் செய்துகொண்டிருக்குந் தருணத்தில் எம்மைக்கோரி யிங்ஙனம் ஸ்லோகபூர்வகமாய் ஸ்மரிக்கையே அத்ஸ்லோகத்தைக்கேட்டகமகிழ்ந்திங்ஙனம் ப்ராப்தமானோம் ஹே பக்தா உனக்கு யாதிச்சை கோரியவரத்தைக்கேள் தந்தருள்வோமாக.

(சூத்-வ-ம்.) தேவி தொண்டனுடைய ஸ்தோத்திரத்துக்கிரங்கிப் பிரசன்னதரிசனங் கொடுக்கப்பெற்றுக் கிருதார்த்தனாகினேன் யானிப்போது சத்தியவாக்கு அரிச்சந்திரபூபதியினது புண்யசரிதையை யிச்சபையினிடத்தில் நடாத்தப்போகின்றமையால் நாடகபாலீசர்களின் அக்ஞானம்போக்கிச் சுக்ஞானந்தேக்கி மதுரமாய்ச் சம்பாஷித்துச் சபையை ரஞ்சிக்கச்செய்யும்படி கிருபாகடாக்ஷவீக்ஷண்யம் பாலித்தருளவேண்டுந் தேவி.

(சர-வ-ம்.) ஹே வத்சா உனது நாடகபாலீசர்கள் பிரகஸ்புதியை நிகர்த்து மதுரிதவசன சாதுரியமாய்ச் சம்பாஷித்துச் சபையை ரஞ்சிக்கச்செய்யும்படி பூர்ணாசிர்வாத மளித்திருக்கின்றோம் யாம் ஸ்வயஸ்தானமாகிய ப்ரம்மலோகத்திற்கேக விடையளிப்பாயாக.

(சூத்-வ-ம்.) தேவி வந்தனம்புரிகின்றேன்.

(சர-வ-ம்.) கல்யாண் பக்தா.

## விதூஷகனுக்குஞ் சூத்திரதாருக்குந் தர்க்கம்.

| விதூஷகன் வினா. | சூத்திரதார் விடை. |
|---|---|
| ஹே சூத்திரதார் இந்தமாது யார் | ப்ரம்மபத்தினி |
| என்னப்ரம்மன் | சதுர்முகப்ரம்மன் |
| என்னசதுர் | நடனசதுர் |
| என்னநடனம் | மாதுநடனம் |
| என்னமாது | சரஸ்வதிமாது |

(விதூ-வ-ம்.) அப்படியா சபாஷ் நன்றாயிருக்கின்றது (ஆயிர முழக்கம்பத்திலேறியாடினாலுங் கீழேவந்துதான் தியாகம் வாங்க வேண்டும்) என்பதுபோல நீர் எவ்வளவு கோணல்மாணலாகக் கூறினாலுங் கடைசியில் உள்ளபேனாத்தான் சொல்லவேண்டும் ஆதலால் இந்தத் தட்டுவாணியையரை யொரோதரத்திற் சொல்லிவிடக்கூடாதா.

(சூத்-வ-ம்.) அடா மித்ரா அப்படியெல்லாம் பரிகாசம்பண்ணமல் நீயும் வேண்டிய வரப்பிரசாதங்களைப்பெற்றுக்கொள்வாயாக



(விதூ-வ-ம்.) ஹே சூத்திரதார் இவளை யெப்படியழைக்கின்றது.

(சூத்-வ-ம்.) தேவி வந்தனம்புரிகின்றேனென்று சொல்.

(விதூ-வ-ம்.) தேவி வந்தனம்புரிகின்றேன்.

(சர-வ-ம்.) கல்யாண் நீ யாவன்.

(விதூ-வ-ம்.) யான் விதூஷகன்.

(சர-வ-ம்.) உனக்கு யாதிச்சை.

(விதூ-வ-ம்.) தங்கள் காத்திலுள்ள அகப்பையைக் கொடுத்தருளப் பிரார்த்திக்கிறேன்.

(சர-வ-ம்.) சை மூர்க்கா நீ அகடவிகடபிரசங்கியாகக்கடவை

சூத்திரதார் பிரவேசம் முற்றிற்று.

ஶ்ரீதண்டபாணி துணை.

# சத்தியவாக்கு அரிச்சந்திர நாடகம்.

## இந்திரகாண்டம்.

பொது விருத்தம்.

வானவர்கள் முனிவோர்கள் மருங்கிற்சூட
மதிவட்டக் குடையதுவுஞ் சிரமேனிீடக்
கானரச மின்னார்கள் கீதம்பாடக்
கந்தருவ ரிருபுறமுங் கவரிபோட
மேனகை முதற்கணிகை மாதராட
மேதினியி லுள்ளவர்கள் புகழ்கொண்டாடத்
தானவர்கள் மனமருண்டு பயந்தேயோடச்
சம்ப்ரமமா யிந்திரனுங் கொலுவந்தானே.

இந்திரன் கொலுவுக்குவருந் தரு.

[வேதமனத்தெஜா நிற்குணதோப்பு.]

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்திரன்கொலுவில் வந்தானேயிதோ

அநுபல்லவி.

அந்தரர்புகழ அணிமுடிகிகழ (இந்)
சாணங்கன்.

மங்கையர்வெண்சா மரையதுபோட
நங்கையர்பாத நடனங்களாட (இந்)

நீடியகுடைகள் நிழல்தனைகொடுக்க
ஆடவர்சுயமாய் ஆலத்திமெடுக்க (இந்)

விண்ணவர் சேர்பதியெனும்   மேளங்கள்முழங்க
இந்திரனார்மந்த்ர   அக்ஷதைவழங்க   (இந்)

## இந்திரன் கடவுளைப்போற்றல்.

விருத்தம்.

தேவர்கள் முனிவரென்றுந் தேடிய பரனேபோற்றி
மூவரி லொருவனாகி முளைத்தமெய்ப் பொருளேபோற்றி
காவலா கயிலைமேவுங் கருணையங் கடலேபோற்றி
ஆவலா யென்னையாளு மையனே போற்றிபோற்றி.

## திக்குப்பாலகர் இந்திரனைப்பணிதல்.

(குபேரன் வசனம்.) விண்ணவர்புகழும் அண்ணலே குபேரன் வந்தனம்புரிகின்றேன்.

(இந்திரன் வசனம்.) கல்யாண் குபேரா.

(வருணன் வசனம்.) கின்னரர்துதிக்கு மன்னவா வருணன் வந்தனம்புரிகின்றேன்.

(இந்-வ-ம்.) கல்யாண் வருணா.

(வாயு வசனம்.) சுரர்முனிவருந்துதிக்கும் புரவலா வாயு வந்தனம் புரிகின்றேன்.

(இந்-வ-ம்.) கல்யாண் வாயு.

(அக்கினி வசனம்.) கலைவலோர்போற்றுந் தலைவனே அக்கினி வந்தனம்புரிகின்றேன்.

(இந்-வ-ம்.) கல்யாண் அக்கினி.

(எமதர்மன் வசனம்.) எம்மனோர்வணங்குஞ் செம்மலே எமதர்மன் வந்தனம்புரிகின்றேன்.

(இந்-வ-ம்.) கல்யாண் எமதர்மா யாவருஞ் சமீபத்தில் வீற்றிருங்கள்.

(திக்குப்பாலகர் வசனம்.) அப்படியே வீற்றிருக்கின்றோம்.



## இந்திரன் தேசவிசாரணைத் தரு.

[அகிலப்ரபஞ்சமும் உம்மாலேநான் ஆண்டுவாரேன் மந்திரி]

என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

இந்திரன்சொல் கண்ணி.

திக்குப்பாலகரோநான்   முக்கட்கடவுளது
திருவருளினாற்றானே
அக்கரையுடனிந்த   அமராபதியையாளும்
அதிசயஞ்சொல்வேனே

(இந்-வ-ம்) ஹே திக்குப் பாலகர்காள் பாருங்கள் எனக்கிந்தச் சிம்மாதனங்கிடைத்ததானது சாமான்யமன்று ஏனெனில் வேதாகமவிதிப்படி நூறஸ்வமேதயாகங்களியற்றித் தேவர்கள் மனோரம்யப்ரகாரம் அவிப்பாகமளித்தாலன்றி யிவ்விந்திரபோகங் கிடைக்கப்படமாட்டா. ஆதலின் யான் நீடித்த காலமாய் இவ்விந்திரபோகத்தை யடையவேண்டுமென்ற ப்ரீதியைவகித்து ஆகமவிதிப்படி நூறஸ்வமேதயாகமியற்றித் தேவர்கள் மனோபீஷ்டப்பிரகாரம் அவிப்பாகமளித்த நிமித்தம் சாக்ஷாத் கருணாகரதிரிலோசனபிரானாகிய ஜகதீசனது கிருபாகடாக்ஷவீக்ஷணத்தால் இவ்வமராபதிக்குச் சர்வசுதந்தர அரசனாயமர்ந்து தேவேந்திரனென்னும் நாமதேயத்தைவகித்து உச்சைச்சிரவமென்னும் அஸ்வமும், அயிராவதமென்னுங் குஞ்சரமும், இடியென்னுந் துவஜமும், வஜ்ராயுதமும் (அரிசந்தனம்-கற்பகம்-சந்தானம்-பாரிஜாதம்-மந்தார)மென்னும் பஞ்சதருக்களடர்ந்த நந்தனவனமுதலான மகதைஸ்வர்ய சாம்ப்ராஜ்ய பட்டாபிஷேகமும்பெற்று (அமரர்-சித்தர்-அசுரர்-தைத்தியர்-கருடர்-கின்னரர்-கிருதர்-கிம்புருடர்-காந்தருவர்-இபக்கர்-விஞ்சையர் - பூதர்-பைசாசர்-அந்தரர்-முனிவர்-உரகர்-ஆகாயவாசிகள்-போகபூமியர்) முதலான சகல தெய்வகணங்களும் எனதாக்ஞாசக்கரத்துக்கடங்கி நடந்துவருப்படியான மகாகௌரவத்துடன் (ஓதல்-வேட்டல்-ஈதல்-உலகோம்பல்-படையயிற்றல்-பொருத) லென்னும் அரசாங்கத்திற்குரிய ஷட்கர்மங்களோடு இச்சிம்மாதனத்திலிருந்து (ஸ்வர்க்க மத்ய க்ராணி சமேதனாக

பாதல) மென்னுந் திரிலோகங்கட்கும் ஏகசக்ராதிபதியாய்ச் செங்கோனடாத்திவருகின்றேனுதலின் எனது வரம்புக்குட்படிந்துவருகின்ற நீங்கள் உங்களுக்களித்திருக்கின்ற அதிகாரத்தையெவ்வாறு நடாத்திவருகின்றீர்களென்பதை யான் கிஞ்சிற்று விசாரிக்கவேண்டுமென் றபேக்ஷையுள்ளவனுயிருப்பதால் ஹே குபேரா உனக்குரிய வதிகாரத்தை யெவ்வாறு செலுத்திவருகின்றனை அதனை யொருவாறு கூறுவாயாக.

குபேரன்சொல் கண்ணி.

அரனது கிருபையாற் பெருமையுடனே நானும்
அளகாபுரியையாளுந்
தாமுழுதுமெடுத்து வரிசையுடனுரைப்பேன்
தலைவனேநீர்கேளும்

(குபே-வ-ம்.) மகாராஜ் பாருங்கள் சாக்ஷாத் பரப்ரம்மவஸ்துவாகிய கடவுளினது கிருபானுக்ரகத்தினலுந் தங்களாசிர்வசன கடாக்ஷத்தினலுஞ் சப்தமதிசையிலுள்ள அளகாபுரிக்குச் சர்வசுதந்தர அரசனுயமர்ந்து குபேரனென்னும் நாமதேயத்தைவகித்து கடகாயுதத்தையும் புஷ்பகவிமானத்தையும் (அரசு-மக்கள்-சுற்றம்-பொன்-மணி-நெல்-வாகனம்-அடிமை) யென்னும் அஷ்டாய்ஸ்வர்ய சாம்ப்ராஜ்ய பட்டாபிஷேகத்தையும்பெற்று அரசுக்குரிய ஷட்கர்மங்களோடு சித்ரரேகைசமேதனுகச் சிம்மாதனத்திலிருந்து ராஜ்யாதிகாரம் நடாத்திவருவதுமன்றி விரிகடல் சூழுந்தரணியில்வாழும் நரர்களிற் சத்யநெறிதவறாத உத்தமசீலர்களுக்கு என்போன்ற குபேரசம்பத்தையளித்தும் வஞ்சநெஞ்சமுடைய பஞ்சமாபாதகர்களுக்கு வறுமையாகிய தாரித்ராசாதனத்தையளித்தும் எனக்குரிய அதிகாரத்தில் எள்ளளவும் பிசகாது நடாத்திவருகின்றேன் மகாராஜ் இந்தப் பகதூராகிய குபேரனைப்பற்றித் தாங்கள் கிஞ்சிற்றேனும் யோஜிக்கவேண்டுவதில்லை ப்ரபு.

(இந்-வ-ம்.) அப்படியா யானதைப்பற்றி யத்யந்தசந்தோஷ்டியடைந்தேன் ஹே வருணா உனததிகாரத்தை யெவ்வாறு நடாத்திவருகின்றனையோ அதனை யொருவாறு பாஷிப்பாயாக.



வருணன் சொல்கண்ணி.

கர்த்தாவின்செயலாலே சுத்தாவதிக்குநானுங்
காவலனுயென்னுளும்
எத்தாலுங்குறைவின்றி யுத்தாரணஞ்செய்விதம்
இயம்புகிறேன்கேளும்

(வரு-வ-ம்.) மகாராஜ் பாருங்கள் ஸ்ரீமத் லோகேசனுகிய சிவபிரானது பரிபூரணகடாக்ஷவீக்ஷணத்தாலுந் தங்களாசிர்வசனத்தாலும் பஞ்சமதிசையிலுள்ள சுத்தாவதிப்பட்டணத்திற்குச் சர்வசுதந்தர அரசனுயமர்ந்து வருணனென்னும்நாமதேயத்தைவகித்து முதலைவாகனமும் பாசாயுதமும்பெற்று (சவ்வர்த்தம்-ஆவர்த்தம்-புட்கலாவர்த்தம்-சங்காரித்தம்-துரோணம்-காளமுகி - நீலவருண) மென்னுஞ் சப்தமேகங்களையும் எனதாக்ஞைசக்கரத்திற்குட்படிந்து நடந்துவரும்படி மகா கௌரவத்துடன் அரசாங்கத்திற்குரிய ஷட்கர்மங்களோடு காளிகைசமேதனுகச் சிம்மாதனத்திலிருந்து செங்கோலோச்சி வருவதுமன்றிப் பூலோகத்தில்வாழும்புண்யசீலர் நேத்திரத்திற்புலப்படும்படியாகச் (சவ்வர்த்தம்-ஆவர்த்தம்-புட்கலாவர்த்தம்-சங்காரித்த) மென்னுஞ் சதுர்மேகங்களைக்கொண்டு முறையே (மணி-நீர்-பொன்-பூ) முதலானவைகளை மாதமூன்றுதரம் வருஷிக்கச்செய்தும் பாபிஷ்டர் நேத்திரத்திற்புலப்படும்படியாகத் (துரோணம்-காளமுகி-நீலவருண) மென்னுந் திரிமேகங்களைக்கொண்டு முறையே (மண்-கல்-தீ) முதலியவைகளை வருஷமூன்றுதரம் பொழியச்செய்தும் எனக்களித்த அதிகாரத்தில் அணுவளவுங்குன்றாது செலுத்திவருகின்றேன் மகாராஜ் இந்தப் பகதூராகிய வருணனைப்பற்றித் தாங்கள் யாதொன்றும் யோஜிக்கவேண்டுவதில்லை ப்ரபு.

(இந்-வ-ம்.) அப்படியா யானதைப்பற்றி யத்யந்தமகிழ்ச்சியடைந்தேன் ஹே வாயு உனக்கீய்ந்த வதிகாரத்தை யெவ்வாறு முடித்துவருகின்றனையோ அதனை யொருவாறு புகலுவாயாக.

வாயுசொல் கண்ணி.

இந்திரபூமானுனுங் கெந்தாவதிநகருக்
கிறைவனென்றேயெல்லோரும்

விந்தையுடனேசொல்லச் சந்ததமுமியற்றும்
விதமுழுமையும்பாரும்

(வாயு-வ-ம்) மகாராஜ் பாருங்கள் ஸ்ரீமத் ஜகரக்ஷகனாகிய கங்காதரனது தயானுக்ரகத்தினாலுந் தங்கள் பூர்ணாசீர்வாதத்தாலுஞ் சஷ்டமதிசையிலுள்ள கெந்தாவதிப்பட்டணத்திற்குச் சர்வசுதந்தர அரசனையமர்ந்து வாயுவென்னும் நாமதேயத்தைவகித்து துவசாயுதத்தையும் கலைமான் வாகனத்தையும்பெற்று அரசாங்கத்திற்குரிய ஷட்கர்மங்களோடு அஞ்சனைசமேதனாகச் சிம்மாதனத்திலிருந்து தேசாதிகாரம் நடாத்திவருவதுமன்றி யெனதுவரம்பிற்குட்படிந்து நடந்துவருகின்ற (பிராணன்-அபானன்-சமானன் - உதானன்-வியானன்-நாகன்-கூர்மன்-கிருதரன்-தேவதத்தன்-தனஞ்சய) னென்னுந் தசவாயுக்களையும் ப்ரம்மாவாற் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு ஆன்மாக்களின்ஸ்தூலத்தில் வியாபித்து அவரவர்கள் புரிந்த நன்மைதீமைக்குத்தகுந்தபடி சுககஷ்டங்களையளித்து வரும்படி திட்டஞ்செய்து வருவதுமன்றி நெடிகடல் சூழும்புடவியில்வாழும் மானிடர்களில் (தவம்-ஒழுக்கம்-கொடை-கல்வி) முதலாகிய நற்கிரியையுடைத்தான புண்யதோற்றத்தாருக்கு வசந்தகாலங்களிற்றென்றலாயிருந்து குளிர்ந்த நற்சுகத்தையுந் தேகாரோக்யத்தையுங் கொடுத்தும் (கொலை-பொய்-களவு-கள்ளருந்தல்-குருநிந்தை) முதலாகிய துர்க்கிருத்தியத்தையுடைத்தாகிய பஞ்சமாபாதகர்களுக்குக் கோடைக்காலங்களிற் சண்டமாருதமாயிருந்து எரிந்த நற்கந்தத்தையுந் துன்பத்தையுமளித்தும் எனக்கேற்பட்ட வதிகாரத்திற் றினையளவுங்குறையாது அரசுபுரிந்து வருகின்றேன் மகாராஜ் இந்தப் பசதாராகிய வாயுவைப்பற்றித் தாங்கள் யாதுஞ் சந்தேகிக்கவேண்டுவதில்லை ப்ரபு.

(இந்-வ-ம்) அப்படியா யானத்யந்த குதூகலமடைந்தேன் ஹே அக்கினி உனக்குத்தந்த வதிகாரத்தை யெவ்வாறு செய்து வருகின்றனையோ அதனையொருவாறு செப்புவாயாக.

அக்கினிசொல் கண்ணி.

ஈசானுக்ரகத்தினாற் ஜோலவதிகருக்
கிறைவனென்றனும்



ராஜாதிகாரமது 13 கூசாமலே நடத்தும்
ரஞ்சிதந்தனைக்கேளும்

(அக்-வ-ம்) மகராஜ் பாருங்கள் ஸ்ரீமத் ஜடாமகுடதாரியாகிய சாம்பமூர்த்தியினது திருவருள்விலாசத்தாலுந்தங்களது மங்களாசிர்வாதத்தினாலுந் துவாதிசையிலுள்ள தேஜோவதிபட்டணத்திற்குச் சர்வசுதந்தர அரசனாயமர்ந்து அக்கினியென்னும் நாமதேயத்தைவகித்து சத்தியாயுதத்தையும்மேடவாகனத்தையும் பெற்று அரசாங்கத்திற்குரிய ஷட்கர்மங்களோடு ஸ்வாகைசமேதனாகச் சிம்மாதனத்திலிருந்து லோகாதிகாரம்புரிந்து வருவதுமன்றி எனததிகாரத்திற்குட்படிந்து நடந்துவருகின்ற (இராகம்-கோபம்-காமம்-சடம்-தீபன)மென்னும் பஞ்சாக்கினிகளையும் அயனால் நிர்மித்த ஒவ்வொரு ஜீவராசிகளிடத்திலும் வியாபித்து (உயிரிலும்-உதரத்திலும்-சினத்திலு)மிருந்து விளையாடிக்கொண்டிருக்கும்படி கட்டளையிட்டு வருவதுமன்றி யானுஞ் சத்தியமறவாத உத்தமசீலர்களிடத்திற் சீதளம் போல குளிர்ந்தும் கொடிய பாபிகளிடத்தில் வடவாமுகாக்கினிபோல காய்ந்தும் எனக்கு நல்கிய அதிகாரத்தில் அற்பமும் பின்னமின்றிமுடித்துவருகின்றேன்மகராஜ் இந்தப் பகதாராகிய அக்கினியைப்பற்றித்தாங்களெப்பொழுதுஞ் சந்தேகிக்கவேண்டுவதில்லை ப்ரபு.

(இந்-வ-ம்.) அப்படியா யானதைப்பற்றி மிகுந்த இன்பத்தையடைந்தனன் ஹே எமதர்மா உனக்கு நல்கிய அதிகாரத்தையெவ்வாறேற்சி வருகின்றனையோ அதனையொருவாறு மொழிவாயாக.

எமதர்மன்சொல் கண்ணி.

செம்மலாகவிருந்து
சைம்மினிநகருக்குச்
தரணியில் நடந்தேறுங்
நன்மைதீமைகள்செய்யுங்
கன்மவினைக்குத்தக்க
காரியந்தனைப்பாரும்

(எம-வ-ம்.) மகராஜ் பாருங்கள் பரிபூரணகருணாநந்த கர்த்தாவாகிய உமாபதியின் நயானுக்ரகப்ரசாதத்தாலுந்தங்களாசிர்வசன சிரேஷ்டதாலுந் திரயாதிசையிலுள்ள சைமினியென்னும் பட்டணத்திற்குச் சர்வசுதந்தர் அரசனாயமர்ந்து எமதர்மனென்

னும் நாமதேயத்தைவகித்து மகிஷவாகனத்தையுங் கதாயுதம் பாசக்கயிறு முதலியவைகளையும் சித்ரகுப்தனென்ற கணக்கனையும் சிரவணர்களென்ற துவாதசமந்திரிகளையும் யமபடர்களையும் உபபலமாகப்பெற்றுச் சாமளாசமேதனுஞ் ஸிம்மாதனத்திலிருந்து அரசாங்கத்திற்குரிய ஷட்கர்மங்களோடு நீதிசெலுத்தி வருவதுமன்றி சிரவணர்களின் மந்த்ராலோசனையின்படி நெடுங்கடல் சூழும் புடவியில்வாழுஞ் சேதனர்கள்செய்யும் பாவபுண்யங்களைப் பகுத்தறிந்து (மெய்யுரை-நல்வார்த்தை-இனியவைகூறல் - பயிர்படுசொல்-கோவில் வலம்வரல்-தவம் புரிதல்-தானஞ்செய்தல் - அருளினிவு - ஆசையறுத்தல்-தவப்பற்று) முதலாகிய நற்கிரியைகளைக் கைக்கொண்டொழுகித் தர்மார்த்த காமமோக்ஷமென்னுஞ் சதுர்வித புருஷார்த்தங்களைப் பெறுதற்குரித்தாகிச் சிவபிரானை யிடைவிடாது சிந்திக்குஞ் சிவானுபூதிச்செல்வர்களந்தியகாலத்திலும் ஜகரக்ஷகனாகிய வாசுதேவன் மலர்ப்பதத்தைச் சந்ததஞ்சிந்திக்கும் பக்திமான்களாகிய ராமதாசர்களந்தியகாலத்திலும் யானேரிற்சென்று தர்மமியற்றியசத்பவான்களை நூலேணியிலேற்றியும், பொருள் முதலியவற்றைப் பெரியோர்களுக்களித்த உதாரத்வகுணத்தரைக் கனகதண்டிகையிலேற்றியும், பெரியோர்கள் விரும்பியவற்றைக் கொடுத்த ஈகையாளரை அன்னங்களிலேற்றியும், மோக்ஷத்தைவிரும்பிய வேதாகமங்களறிந்து பக்திபுரிந்த பக்தசிரோமணிகளைப் புட்பகவிமானத்திலேற்றியும், அவரவர்கள் கோரிய (கைலாசம் வைகுந்த) மென்னுந் திவ்யபதவிக்கனுப்பியும், இன்னுங்குப்ரகத்திலுஞ் சம்பந்தப்படாமல் (பொய்யுரை-கோட்சொல்லல்-பித்துச்சொலல் - பயனிலச்சொலல் - களவாடல்-வரிசைகெடுத்தல்-செயல்-கொலைசெயல்-கொலைநினைக்கை காமப்பற்று-ஆசை) முதலிய துர்க்கிரியைகளை யுடைத்தான சண்டாளர்களந்தியகாலத்திலெனதுகிங்கரர்களாகிய (சண்டாமிருகன்-ஔதும்பரன்-சம்பராசித்தாலன்) முதலியவர்களைவிடுத்துக் குலத்திற்குத்திப் பாசத்தாற்பிணித்து வரும்படி செய்து, அவரவர்கள் பாபமிகாரத்திற்குத் தக்க சிக்ஷைபுரிந்து (அக்னிஸ்-இரௌரவம்-கும்பிபாகம் - கூடசாலம்-செந்துத்தானம் புதி (பாபுதி) யென்னும் நரகங்களுக்காளாக்கியும் எனதிடத்தந்த அதிகாரத்தில் யாதோரிடையூறின்றிச் சம்பூரணமாய் நடத்திவருகின்றேனாகையால் இத்தப்பசுவாரகிய எம





தர்மனைப்பற்றித் தாங்க ளெவ்வளவேனுங் கவலையுறவேண்டுவ தில்லை ப்ரபு.

(இந்-வ-ம்) அப்படியாயினதைப்பற்றிமிகுந்த ப்ரம்மானந்த மடைந்தேன் நல்லது கிருதி முதலானவர்கள் ஏன் ப்ராப்தமாக வில்லை.

(நிக்-வ-ம்) யாது காரணமோ தெரிந்திலோம் ப்ரபு.

பொது விருத்தம்.

காசினி தன்னில்வாழுங் காவலர் தமக்குள்ளாக
நேமமு மெய்யுநல்ல நீதியு முடையோரான
ராசர்க ளுளராவென்ற ரகசியந் தெரியவெண்ணும்
வாசவன் சபையைநாடி வசிஷ்டமா முனிவந்தாரே.

## வசிஷ்டர்வருந் தரு.

[செலியாசானுனே]

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம்-வசந்தம்-தாளம்-சாபு.

பல்லவி.

வசிஷ்டர் வந்தாரே தேவமன்னன்சபைக்கிதோ
வசிஷ்டர் வந்தாரே

அநுபல்லவி.

அதிஷ்டமும் பொறுமையும் அன்புமிகுந்துள்ள (வ)

சரணங்கள்.

காவியுடையுமேனுங் கையில்மாத்திரைக்கோலும்
மேவவேயரிச்சந்த்ர கோவின்குருவான (வ)
நாமம்நெற்றியிற்கூடி நாரணன் துதிபாடி
நேமமுடன் வளபத் தாமமணிந்திதோ (வ)

(வசிஷ்டர் வசனம்.) யாரடா இவிடத்திற் துவாரபாலகன்.

(மாதலி வசனம்.) தேவே யிதோ காத்துக்கொண்டிருக்கின் றேன்.

(வசி-வ-ம்.) இந்திரனென்னடா செய்கின்றான்.

(மாதலி-வ-ம்.) சிம்மாதனத்தில் வீற்றிருக்கின்றார் ப்ரபு.

(வதி-வ-ம்.) நல்லது வதிஷ்டர் வந்திருப்பதாகத் தெரிவிப்பா யாக.

(மாதலி-வ-ம்.) அப்படியே தெரிவிக்கின்றேன் * மகராஜ் வதிஷ்டர் வந்திருக்கின்றார் ப்ரபு.

(இந்-வ-ம்.) அப்படியா * ஹே திக்குப்பாலகர்காள் வதிஷ்ட மகரிஷியானவர் நமது சபையை நாடி வந்திருக்கின்றாராம் அவரை யெதிர்சென்றழைத்து வருவோம் வாருங்கள்.

(திக்-வ-ம்.) அப்படியே வருகின்றோம் மகராஜ்.

## இந்திரன்சொல் நாமாவளி.

[மோடியாலரா நாசாவிகுராவை மோடியாலரா]

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-ஏகதாளம்.

நாமாவளி.

வந்தனந்தந்தேன் ஓமாதவரோயிதோ வந்தனந்தந்தேன்

(இந்-வ-ம்) தவசிரேஷ்டரே இந்திரன் வந்தனம்புரிகின்றேன்

(வதி-வ-ம்.) கல்யாண் இந்திரபூமா.

(திக்-வ-ம்.) மாதவரே திக்குப்பாலகர் வந்தனம்புரிகின்றோம்

(வதி-வ-ம்.) கல்யாண் திக்குப்பால்கர்காள்.

(இந்-வ-ம்.) ப்ரபு இவ்வாசனத்தில் வீற்றிருக்கள்.

(வதி-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றேன்.

பொது விருத்தம்.

வண்ணநற் சடைகளாட மாமயிற் றோகையாட
ஒண்ணிய காவித்தரய்ந்த வுடையொரு பக்கமாடக்
கண்ணிய முடவேசெம்பொற் கரத்தினில் விசிறியாட
விண்ணவர் சபைக்குவிஸ்வா மித்திர முனிவூர்தாரே.



## விஸ்வாமித்திரர்வருந் தரு.

[வேலவனிணையடி துதிபுரிநெஞ்சே]

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

கோசிக முனியிதோ மகிழ்வுடன் வந்தார் மிகு
கோபத போபல (கோசி)

அநுபல்லவி.

வாசவன் சபைதனில் நேசமாய்நாடியே
மதியணி சிவனை துதியது பாடியே (கோ)

சரணம்.

காவிப் புடையாடைமேனியாடச் சடை
சுருங்குறியாடக் (காவி)
பூவினில்அரிச்சந்த்ர காவலன்பொய்யும்
புரட்டுஞ்சொல்லுவானென்று பிரட்டுகள்செய்யுங் (கோ)

(விஸ்வாமித்திரர் வசனம்.) யாரடா இவ்விடத்தில் துவாரபால கன்.

(மாதலி-வ-ம்.) தேவரீதோகாத்துக்கொண்டிருக்கின்றேன்

(விஸ்-வ-ம்.) இந்திரனென்னடா செய்கின்றான்.

(மாதலி-வ-ம்.) சிம்மாதனத்தில் வீற்றிருக்கின்றார் ப்ரபு.

(விஸ்-வ-ம்) நல்லது விஸ்வாமித்திரர் வந்திருப்பதாகத் தெரி விப்பாயாக.

(மாதலி-வ-ம்.) அப்படியே தெரிவிக்கின்றேன் *மகராஜ் விஸ் வாமித்திரர் வந்திருக்கின்றார் ப்ரபு.

(இந்-வ-ம்.) அப்படியா *ஹே திக்குப்பாலகர்காள் விஸ்வா மித்திரமுனிவரானவர் நமது சபையைநாடி வந்திருக்கின்றாராம் அவரை யெதிர்சென்றழைத்துவருவோம் வாருங்கள்.

(திக்-வ-ம்.) அப்படியே வருகின்றோம் மகராஜ்.

## இந்திரன்சொல் நாமாவளி.

[வந்தனமையா எனையா வந்தனமையா]

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-பியாகடை- தாளம்-ரூபகம்.

கண்ணி.

வந்தனந்தந்தேன் முனிவரோ வந்தனந்தந்தேன்

(இந்-வ-ம்) முனிசிரேஷ்டரே இந்திரன்வந்தனம்புரிகின்றேன்

(விஸ்-வ-ம்,) கல்யாண் தேவர்கோவே.

(திக்-வ-ம்.) தவக்கொழுந்தே திக்குப்பாலகர் வந்தனம்புரி கின்றோம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் திக்குப்பாலகர்காள்.

(இந்-வ-ம்.) ப்ரபு இவ்வாசனத்தில் வீற்றிருங்கள்.

(விஸ்-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றேன்.

## பொது விருத்தம்.

இலகுபட் டாடைதன்னை யிடையினிற் றிலங்கக்காட்டி
நிலவுநேர் வதனந்தன்னில் நேர்மையாய் நாமந்தீட்டி
சலசலென் றொலிக்குஞ்சொர்ணச் சதங்கையுங் காலிற்பூட்டி
நலசுதி வீணைமீட்டி நாரதர் வருகின்றாரே.

## நாரதர்வருந் தரு.

[ராமச்சந்த்ரரகுவீரஜெயஜெய ராமச்சந்த்ரரகுவீரஜெயஜெய]

என்ற க்ருத்திகையின் வர்ணமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

நாரதமுனிவர் வந்தாரே மகிழ்வுடன்
நாரதமுனிவர் வந்தாரே.

அநுபல்லவி.

சிருடன்சுதிகூட்டியே சங்கீதஞ்
செப்பியேவீணைமீட்டியே (நார)



17

கலகத்துக்கிடந்தேடியே ஆயிரங்
கண்ணனின்சபைநாடியே (நார)
நாரதாகலகப்ரியா என்றுசொல்
நாமந்தனக்குச்சரியாய் (நார)

(நாரதர் வசனம்.) யாரடா இவிடத்திற் றுவாரபாலகன்.

(மாதலி-வ-ம்.) தேவேயிதோகாத்துக்கொண்டிருக்கின்றேன்

(நார-வ-ம்.) இந்திரனென்னடா செய்கின்றான்.

(மாதலி-வ-ம்.) சிம்மாதனத்தில் வீற்றிருக்கின்றார் ப்ரபு.

(நார-வ-ம்.) நல்லது நாரதர் வந்திருப்பதாகத் தெரிவிப்பா யாக.

(மாதலி - வ-ம்.) அப்படியே தெரிவிக்கின்றேன் * மகராஜ் நாரதர் வந்திருக்கின்றார் ப்ரபு.

(இந்-வ-ம்.) அப்படியா *ஹே திக்குப்பாலகர்காள் நாரதப் ரம்மமானவர் நமது சபையை நாடிவந்திருக்கின்றாராம் அவரை யெதிர்சென் றழைத்துவருவோம் வாருங்கள்.

(திக்-வ-ம். அப்படியே வருகின்றோ மகராஜ்.

## இந்திரன்சொல் நாமாவளி.

[மாதவமேயிவ்வுருவாய் வந்ததுமென்னோ திவசயோ]

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ரூபகம்.

கண்ணி.

மாதவரோயுங்களுக்கு வந்தனமுந்தந்தேனிதோ

(இந்-வ-ம்.) ப்ரம்மபுத்ரரே இந்திரன் வந்தனம்புரிகின்றேன்.

(நார-வ-ம்.) கல்யாண் வஜ்ரபாணி.

(திக்-வ-ம்.) முனிபுங்கவரே திக்குப்பாலகர் வந்தனம்புரிகின் றோம்.

(நார-வ-ம்.) கல்யாண் திக்குப்பாலகர்காள்.

(இந்-வ-ம்.) ப்ரபு இவ்வாசனத்தில் வீற்றிருங்கள்.

(நார-வ-ம்) அப்படியே வீற்றிருக்கின்றேன்.

---

இந்திரன் விருத்தம்

மாதலி சொல்லக் கேளாய் மகிழ்வுடன்சபையிலென்றுங்
காதலாய் நடித்துப்பாடிக் களிப்புறச் செய்யுந்தாசி
மாதர்க ளின்னுமிங்கு வந்திடா திருப்பதென்ன
சேதிநீ யறிந்திருந்தாற் சீக்கிரந் தெரிவிப்பாயே.

---

(இந்-வ-ம்.) அடா மாதலி எப்போதும் நமது சபைக்குவந்து ஆடிப்பாடி யகமகிழச்செய்யும் (இரம்பை - ஊர்வசி - மேனகை- திலோத்தமை) யென்னுந் தேவதாசிகளின்னும் வராதிருக்குங்காரணம் யாது.

(மாதலி-வ-ம்.) யாதுகாரணமோதெரிந்திலேன் மகராஜ்.

(இந்-வ-ம்.) நல்லது சீக்கிரமழைத்துவருவாயாக.

(மாதலி-வ-ம்.) அப்படியே யழைத்துவருகின்றேன் மகராஜ்.

---

பொது விருத்தம்.

அண்ணல்கட் டளைப்படிக்கே யந்தமா தலியுஞ்சென்று
திண்ணமா யழைக்கக்கேட்ட தேவதாசியர்களான
வண்ணமே னகையும்நல்லூர் வசிதிலோத் தமையிரம்பை
விண்ணவர்சபையைநாடி வேகமாய் வந்திட்டாரே.

---

நடனமாதர்வருந் தரு.

[வந்தனந்தந்தேனே வந்தசபையோர்க்கும்]

என்ற ட்ராமாகோட்டின் வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

உம்பர்புகழுமையும் ரம்பைதிலோத்தமையும்
ஊர்வசி மேனகை வந்தனரே.



அநுபல்லவி.

இன்புகொளணிக | விலங்கிடவே
கும்பதனங்கள் | குலுங்கிடவே(உம்)

சரணம்.

மாதவருங்கண்டு | மையலதுகொண்டு
போதமனம்விண்டு | பொன்னடிக்குத்தொண்டு
புரிமேழிலுடையதோர் | பொற்கொடியார்
பரதமுறைமுழுதும் | பயில்நடியார் (உம்)

---

(இரம்பை வசனம்.) தேவர்கள் போற்றுங் காவலா இரம்பை வந்தனம்புரிகின்றேன்.

(இந்-வ-ம்.) கல்யாண் ரம்பாய்.

(ஊர்வசி வசனம்.) காந்திசேரிந்திரவேந்தனே ஊர்வசி வந்தனம்புரிகின்றேன்

(இந்-வ-ம்.) கல்யாண் ஊர்வசி.

(மேனகை வசனம்.) கீர்த்திசேரெங்கள் பார்த்திபாமேனகை வந்தனம்புரிகின்றேன்.

(இந்-வ-ம்.) கல்யாண் மேனகாய்.

(திலோத்தமை வசனம்.) பொன்னகர்புரக்கு மன்னனே திலோத்தமை வந்தனம்புரிகின்றேன்.

(இந்-வ-ம்.) கல்யாண் திலோத்தமாய் * ஹே ரம்பாய் எனது மனம்ரம்யமாகும்படி யிப்பொழுது சற்று நடனம்புரிவாயாக.

(இரம்-வ-ம்.) அப்படியே நடனம்புரிகின்றேன்-மகராஜ்.

## இரம்பைசொல் தரு.

[சரிகரிசஸ்ஸாஸா ரிகமகரிர்ரீ ஜகமுலோமாகுடு]

என்ற ட்ராமாகோட்டின் வர்ணமெட்டு.

இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

மன்னுமும்மைக்கண்டேனே | மையல்மிகக்கொண்டேனே
மனத்துயர்விண்டேனே | (மன்னு)

என்னையன்பாய்ச்சேருமையா இச்சைதனைத்தீருமையா
ஏந்திழையைக்காருமையா (மன்னு)

மாரன்கணைதாவுதையா மாங்குயில்கள்கூவுதையா
மதிகனல்தூவுதையா (மன்னு)

கந்தமுலைமீறுதையா கனியிதழூறுதையா
களபமுமீறுதையா (மன்னு)

முத்தையன்பதங்கள்பாடி மெத்தையதின்மீதுகூடி
மோகந்திரநாமுஞ்ஜோடி (மன்னு)

(இந்-வ-ம்.) ஹே ரம்பாயீ நீ நடனம்புரிந்ததை நேத்ரானந்தமாய்ப் பார்த்து அத்யந்த சந்துஷ்டியடைந்தனன் நல்லது *ஹே ஊர்வசி நீயும் எனதகமகிழ்வடையச், சற்று கீர்த்தனஞ்செய்வாயாக.

(ஊர்-வ-ம்) அப்படியே கீர்த்தனஞ்செய்கின்றேன் மகராஜ்

## ஊர்வசிசொல்தரு.

[மோடியாலரா நாசாமிகுநாபை மோடியாலரா]
என்ற ஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-காபி-ஏகதாளம்
கண்ணிகள்.

மையலாகினேன் என் மன்னுவும்மீது (மைய)
மாரன்வாதையால் இன் னேரம்பேதைநான் (மைய)
கிட்டவாருமே எனைக் கட்டிச்சேருமே (மைய)
கொங்கைமீறவே என் அங்கஞ்சோரவே (மைய)
தென்றற்றூவவே, நல் அன்றில்கூவவே (மைய)
முத்தையன்பாட்டு நான் மெத்தவுங்கேட்டு (மைய)

(இந்-வ-ம்.) ஹே-ஊர்வசி நீ கீர்த்தனஞ்செய்ததைக் கண்குளிரப்பார்த்து அத்யந்த குதூகுலமடைந்தனன் நல்லது * ஹே மேனகாய் நீயும் எனது சிந்தை ரஞ்சிக்கக் கிஞ்சிற்று நடிப்பாயாக.

(மே-வ-ம்.) அப்படியே நடிக்கின்றேன் மகராஜ்.



## மேனகைசொல் தரு.

[சக்ரவத்து என்னைச்சாரு மையல்தீரவாடா]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-இந்துஸ்தானி-கமாஸ்-தாளம்-ஆதி.
பல்லவி.

எந்தனைக்கூடி நல இன்பசுகந்தாருஞ்சாமி
அநுபல்லவி.

வந்தமன்மதப்பாவி வாதையால்மயங்குதாவி (எ)

சரணங்கள்.

மல்லிகைச்செண்டு நிகர் வன்னமாமுலைகள்ரண்டும்
மெல்லியகச்சைப்பீறி விம்முதேயென்செய்வேனரி (எ)

மாங்குயில்பாட அந்த மந்தமாருதமுஞ்சாட
ஏங்குதேயெந்தனெஞ்சம் ஏந்திழைமேலென்னவஞ்சம் (எ)

புத்தமுதென்னக்கவி முத்தையனெழுங்காய்ச்சொன்ன
சித்ராங்கினியாட்டுச் சித்திரப்பதங்கள்கேட்டு (எ)

(இந்-வ-ம்.) ஹே-மேனகாய் நீ நடித்ததை நயனோற்சவமாகப் பார்த்து மிகுந்த இன்பத்தையடைந்தனன் நல்லது * ஹே திலோத்தமாய் நீயும் எனதிருதயம்பூரிக்கக் கொஞ்சம் நாட்டியம் புரிவாயாக.

(திலோ-வ-ம்.) அப்படியே நாட்டியம்புரிகின்றேன் மகராஜ்.

## திலோத்தமைசொல் தரு.

[ஜர்மதேரஹை ஜானி ஜர்மதேரஹை]
என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு.
பல்லவி.

மருவவாருமே மன்னு மருவவாருமே.

அநுபல்லவி.

அரிவைமீது கிருபைகூர்ந்து (மரு)

சரணங்கள்.

காவமதனும் அருகினில்வந்து
கணைகளெய்கிறனையா
உருகினேனையா மனம் உருகினேனையா
அரிவைமீது கிருபைகூர்ந்து (மரு)

செங்கைக்கடங்காக் கொங்கையிரண்டுஞ்
செண்டுபோலவிம்முதே
பொங்கிக்கம்முதே மையல் பொங்கிக்கம்முதே
அரிவைமீது கிருபைகூர்ந்து (மரு)

மாங்குயில்களும் பாங்குடனிதோ
மனோசங்கீதம்பாடுதே
ஓங்கிச்சாடுதே தென்றல் ஓங்கிச்சாடுதே
அரிவைமீது கிருபைகூர்ந்து (மரு)

திங்கள்குணமும் பங்கமாகியே
தீயைப்போலகாயுதே
அங்கந்தீயுதே யெந்தன் அங்கந்தீயுதே
அரிவைமீது கிருபைகூர்ந்து (மரு)

சித்தமுகந்து முத்தையன்சொன்ன
செந்தமிழ்ப்பதங்கேள்சாமி
மெத்தவுங்காமி நானே மெத்தவுங்காமி
அரிவைமீது கிருபைகூர்ந்து (மரு)

---

(இந்-வ-ம்.) திலோத்தமாய் நீ நாட்டியம்புரிந்ததைத் திருஷ்டிபோகமாய்ப் பார்த்து வெகு ப்ரம்மானந்தமடைந்தனன் நல்லது *ஹே மாதலி இக்கணிகையர் பாதசாஸ்திரமுறைப்படி யாடிப்பாடி யெனது சித்தங் களிப்புறச்செய்தமையால் இவர்களுக்கு வேண்டிய சன்மான மளித்தனுப்புவாயாக.

(மாதலி-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் மகாராஜ்.

(நடனமாதர்கள் வசனம்.) மகாராஜ் யாங்கள் வெகுமதிபெற்றுச் சென்றுவருகின்றோம்.



(இந்-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள்.

(நடன-வ-ம்.) இதோ வந்தனம்புரிகின்றோம்.

(இந்-வ-ம்.) கல்யாண பரதமாதர்காள்.

(நடன-வ-ம்.) மாதலி செல்வோமாவென்ன.

(மாதலி-வ-ம்.) அப்படியே செல்வோம் பெண்காள்.

---

இந்திரன் விருத்தம்.

உம்பரே முனிவரேமூ வுலகினிற் சஞ்சரிக்கும்
நண்பரே வர்த்தமானம் நன்குணர்ந் துண்மைகூறும்
அன்பரே யாரேனுஞ்சேதி யறிந்திட விருப்பமுற்றேன்
இன்பமா யதனைச்சொல்ல விதுநல சமயந்தானே.

---

இந்திரன்சொல் தரு.

[மாதவமேயிவ்வுருவாய் வந்ததுமென்வி திவசமோ]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தேவர்களே நானுமொரு சேதிசொல்லக் கேளுமையா.

அநுபல்லவி.

பூவுலக காவலரிற்
பொய்யுரையா மெய்யருண்டோ (தேவர்)

---

(இந்-வ-ம்) ஆஆ தவசிரேஷ்டர்காள் பாருங்கள் பூலோகத்தில் வாழும் அரசர்களிற் பொய்கூறாமலும் பிறர்பொருளுக் கிச்சைகொள்ளாமலும் நீதிநெறிவழுவாமலும் அன்னியமாதர்மேலாசைப்படாமலும் வேதாகமபுராணே திகாசப் பயிற்சியும் அன்னோர்களுக்கடக்கமும் வணக்கமும் மெய்யன்புமுடைய மன்னர்கள் யாவரேனு மிருப்பார்களாகில் எனக்கு விபரமாகத்தெரிவிக்க வேண்டும் ப்ரபுக்காள்.

வதிஷ்டர் விருத்தம்.

வேந்தனே சொல்லக்கேளாய் மேதினி தனிற்குள்ளாக
மாந்தர்கள் மீதிலன்பு மனுநெறி குருவிஸ்வாசஞ்
சாந்தமுந் தெய்வபக்தி சத்திய வாக்குமுள்ள
எந்தனும் பூலோகத்தி லிருக்கிறானிருக்கிறானே.

## வதிஷ்டர்சொல் தரு.

[அன்னையேயானுன்னைநம்பி னேனெனக்கருள்புரிகுவாய்]
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நேத்தியாகிய கீர்த்திமேவிய நிருபனொருவனிருக்கிறான்

அநுபல்லவி.

சாத்திகமாய யோத்திவாழரிச்
சந்திரன்காணும் இந்திரா (நேத்)

சரணங்கள்.

பங்கயகுலமன்னவன்றிரி சங்குதவகுமாரன்காண்
மங்கையர்கண்டுமடல்வரைந்திடும் மாமதனவசீரன்காண் (நேத்தி)
கொண்டமனைவிநாயகன்மற்ற கோதையர்க்கெல்லாம்பாலன்காண்
அண்டர்மாமுனிவோர்களின்றிரு வடிபணிந்திடுஞ்சீலன்காண் ()
தன்னுயிரினைப்போலவேபல மன்னுயிரையுங்காப்பவன்
இன்னும்புவியிலகதிமுதலாய் ஏழைகள்குறைதீர்ப்பவன் (நேத்தி)
வேதசாஸ்திரநீதிமகிமை வித்தையனைத்துங்கற்றவன்
பாதகங்களைக்கண்டாலப்பாலே காதவழிசெல்கொற்றவன் ()
என்மிடிமைநேரிடினும்பொய் யெள்ளளவுஞ்சொல்லாதவன்
தன்னுடையசொல்மீறிநடக்குஞ் சண்டாளர்க்குப்பொல்லாதவன்.

(வதி-வ-ம்.) ஹே சுவர்க்காதிபதி பார் நீ வினவியதற்குத் தகுந்த சுகுணாதிசயங்களுடைத்தானவன் பூலோகத்திலொருவனிருக்கின்றான் அவன் யாவனெனில் சூர்யகுலதிலகனாகிய திரிசங்கு



மகாராஜனுக்குப் புதல்வனாயமர்ந்து அயோத்தியாபுரியிற் செங்கோல் நடாத்திவரும் அரிச்சந்திரமகாராஜன், அவன் சத்தியபூஷணன், பிறர்தாரபுத்ரன், வேதாகவிற்பனன், துஷ்டநிக்ரக, சிஷ்டபரிபாலனன், பெரியோரைத்துணைகொள்வோன், சற்பாத்ரபுண்ணியன், தன்னுயிர்போல மன்னுயிரைக்காக்குந் தயாளான், தெய்வபக்தி குருபக்திவிஸ்வாசன், கேட்டதையில்லையென்னாமற் கொடுக்குங் கீர்த்திமான்; அவனுக்கு நிகரான மனுநீதியரசர்கள் மாநிலத்தில் யாருங்கிடையாது வேந்தே.

பொது விருத்தம்.

முந்திமெய்ன தரும்புதல்வர் தம்மைக்கொன்று
முனைந்தெனையோர் தண்டில்வென்று முனிவனாக்கி
வந்தபகை யாளியெனும் வதிஷ்டனிந்த
வாசவன்முன் பேசியதோர் வார்த்தைதன்னைத்
தந்திரமாய்ப் பங்கமது செய்யாவிட்டாற்
றவமுனிவ னெனும்பெயருந் தகுமோநானும்
எந்தவகை செய்வமென்று விஸ்வாமித்ரன்
எண்ணுவான் யோசனையும் பண்ணுவானே.

## விஸ்வாமித்திரர் துராலோசனை.

ஆஆ-இவ்வதிஷ்டனானவன் முன்னம் எனது சதபுத்ரர்களையுங் கொன்றதுமன்றி யென்னிடத்திலும் யுத்தம்புரிந்து ஓர்தண்டினால்வென்று என்னையு முனிவனாகச்செய்த நேர்விரோதியாயிருப்பதால் இவன் வார்த்தையையிவ்விந்திரன்சபையிற் பங்கப்படுத்திவெட்கங்கெடுக்காவிடில் விஸ்வாமித்ரமுனியென்பதற்கு எனக்கென்ன யோக்யதையிருக்கின்றது நல்லது இவ்வதிஷ்டன் கர்வத்தை யடக்கிவிடுகின்றேனிப்போது.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

ஏதுகாண் வதிஷ்டரே நீ ரிப்பெருஞ் சபைமுன்பாகப்
பாதகஞ் செய்யுந்துஷ்டப் பயலைநல் லவனாய்ச்சொன்னீர்
மேதினி தனிலேயுள்ள விபரமா வறிந்திடேனோ
ஓதிய வுமதுவார்த்தை யொருவரு நம்பிடாரே.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[அங்கானிருந்தவனை யழைத்துவந்ததேண்டிகண்ணே]

என்ற இந்த்ரசபாவின் வர்ணமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

கண்ணிகள்.

ஏன்காணுமோய்வதிஷ்டா வீண்கருவமுள்ளேகொண்டீர்
போங்காணும்பூமிதனில் நான்காணச்சேதியுண்டோ (ஏ)

பஞ்சபாதகம்புரியும் நெஞ்சனரிச்சந்திரனை
ரஞ்சிதமாய்ப்பேசவந்த வஞ்சமுள்ளதந்திரனே (ஏ)

தினமாயிரம்பொய்மொழி செப்புமரிச்சந்திரனை
மனமாறமெய்யனென்று வழுத்துகிறதென்னவினை (ஏ).

அட்டுக்கொருபொய்யுரைக்குந் துஷ்டனரிச்சந்த்ரனென்று
எட்டுத்திக்கிலுந்தெரியும் ஏற்றுக்கொள்ளானிந்த்ரனின்று (ஏ)

---

(விஸ்-வ-ம்.) ஹே வதிஷ்டரே அவ்வரிச்சந்திரனுடைய யோக்யதையெனக்குத்தெரியாதா அவன் மகாதுஷ்டன், பரதாரகமனன், பொய்சொல்ல நாவுகூசாதவன், மெய்யைக்கனவிலும் நினையாதவன், நீதிநெறி சிறிது மில்லாதவன், அப்பேர்க்கொத்த வஞ்சநெஞ்சமுடைய பஞ்சமாபாதகனை நல்லயோக்கியனென்று சொல்லவந்தீரோ உமது வார்த்தையை யிந்திரனாவது தேவர்களாவது நம்புவார்களாவென்ன.

### வதிஷ்டர் விருத்தம்.

மெத்தவாய் பிதற்றும்விஸ்வா மித்திர முனியேகேளுஞ்
சத்திய வானையிந்தச் சபைதனிற் பலவாறாகப்
புத்தியில் லாமல்நிந்தை புரிந்ததா லுமக்குமோக்ஷஞ்
சித்தியா காமற்பாபஞ் சேருநீ தன்மைதானே.



## வதிஷ்டர்சொல் தரு.

[அவ்வேளா வந்தேனான் வேண்டினது பலனிதுவோ]

என்ற நீதிநெறி அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மேதினியில்நற்குணங்கள் மேவுமரிச்சந்திரனைப்
பாதகனென்றேயுரைத்த பண்புகெட்டவிஸ்வாமித்ரா
பாபங்காண் பாபங்காண் பாபங்காண் பாபங்காண். (மே)

எப்பொழுதும்பொய்யென்பதைச் சொற்பனத்திலும்நினையா
நற்புகழ்படைத்தவன்மேற் கற்பனைகள்பேசுகிறீர்
ஞாயமோ ஞாயமோ ஞாயமோ ஞாயமோ. (மேதி)

மெய்த்தவங்களின்னதென்ற விபரமறிந்திடாமல்
உத்தமனைத்தூஷித்திடுஞ் சித்தமுள்ளகோசிகனே
யோக்யமா யோக்யமா யோக்யமா யோக்யமா. (மேதி)

இப்படிப்பற்பலவிதச் சப்பிதமொழிகள்தனைச்
செப்பியவுமதுவாயிற் றீப்பிடித்துவேகலையே
சீச்சிபோ சீச்சிபோ சீச்சிபோ சீச்சிபோ. (மேதி)

பாங்குகெட்டுக்கண்டபடி பாபமொழிகூறும்போற்
தீங்கருக்காகப்பயந்து தெய்வங்கூடவோடிப்போச்சே
தெரிகிலேன் தெரிகிலேன் தெரிகிலேன் தெரிகிலேன். (மே)

---

(வதி-வ-ம்.) ஆஆ-கோசிகமுனியே எப்பொழுதும் நீதான காரியத்தைக் கனவிலும் நினையாது சத்தியமே விரதமாகப் பூண்ட சற்குண சிகாமணியாகிய அரிச்சந்திரனை மெய்த்தவமின்னதென்றறியாத நீர் கர்வங்கொண்டு பொய்யனென்றும் பாதகனென்றும் பற்பலவிதமாகத் தூஷித்த உமது வாயானது வேகவில்லையே. ஆஆ உம்மைப்போன்ற கற்பனைவார்த்தை பேசக்கூடியவர்களையுடனே தண்டிக்கவேண்டிய தெய்வங்கூடக் காலவித்யாசத்தினாற் பயந்தோடிப்போயிற்றோ யாதோ தெரியவில்லையே யென்செய்வினைறது ஆகிலும் நீர் பாபத்திற்குள்ளாவீர் காண்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

மந்தனி வேதமுள்ள வதிஷ்டரே தவத்திலேர்மை
சிந்தையி லறிந்திருந்தாற் றியனை மெய்யனென்று
இந்தநற் சபையிற்கூற வென்னிமுன் வரவேமாட்டீர்
விந்தையாய்ப் பொய்யுஞ்சொன்ன விதமதை யறிகுவேனே.

---

விஸ்வாமித்திரர்சொல் தரு.

(எங்கிருந்தோ யிங்குவந்த தெப்படிதாமே)

என்ற இந்த்ரசபாவின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தவமகிமை — நீரறிந்தாற்
சபையினிற்சொல்லா
அவலவரிச் — சந்திரனை
அருமையாய்ச்சொல்லீர்
தலைமையிரும் — நரைவிழுந்த
தன்மையால்யாரும்
சொனமொழிமெய் — யென்பரென்று
சொன்னீரோநீரும்
இமையவர்கள் — பித்தனைப்போல்
இருக்கிறதென்பார்
உமதுமொழி — தன்னையிங்கே
ஒருவருநம்பார்
மெய்யுரைத்த — எந்தன்வாயும்
வெந்தழுகுமோ
பொய்யுரைத்த — உமதுவாயிற்
புழுவிழுகுமே

---

(விஸ்-மி.) ஓய் வதிஷ்டரே நீரேதோ தவநிலையறிந்தவர் போலபிதற்றுகின்றீரோ உமதுயோக்யதை யெனக்குத் தெரியாதா. வென்ன அப்படிநீறறிந்திருக்கும்பக்ஷத்திற் பொய்யைப் பூஷனமாயணிந்திருக்கும் அற்பமனிதனாகிய அரிச்சந்திரனை யி[illegible]வ சபையிற் புகழ்ந்துபேசமாட்டீர் ஏதோ கிழமேனும் நரைத்துக்



கிழவனாயிருக்கின்றோம் நமது வார்த்தையை யாவரும் நம்புவார்களென்ற கர்வத்தாலும் அவ்வரிச்சந்திரன் உமக்குச் சிஷ்யனாயிருக்கின்ற பக்ஷபாதத்தாலும் பொய்மூட்டையையவிழ்த்துக்கொட்டிவிட்டீர் அப்படியிருப்பினும்நீர் பைத்தியம்பிடித்துக் கண்டபடி யுளறுகின்றீரென்று சபையோர்களெண்ணுவார்களேயன்றி யுண்மையாக வொருவரும் நம்பமாட்டார்கள் ஆசையாற் பொய் சொன்ன வுமதுவாயிற் புழுச்சொரியுமேயல்லாது மெய்யுரைத்த எனது வாயானது இருக்காலும் வேகமாட்டாது வதிஷ்டரே.

வதிஷ்டருக்கும் விஸ்வாமித்திரருக்குந் தர்க்கம்.

[அங்குநானிருந்தவனை யழைத்துவந்ததேண்டிகண்ணே]

என்ற இந்திரசபாவின் வர்ணமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

வதிஷ்டர்சொல் கண்ணி.

தலைமுறைதத்துவமாய்த் — தவமுனிநீயாயிருந்தால்
நிலைமைதவறிமொழி — நீபுகலாய்விஸ்வாமித்ரா

விஸ்வாமித்திரர்சொல் கண்ணி.

பாரம்பரிஷியானற் — பாவியரிச்சந்திரனை
பெருமையுடனெடுத்துப் — பேசிட்டாட்டாய்வதிஷ்டா

வதிஷ்டர்சொல் கண்ணி.

இப்படிமொழிந்தவர்கள் — எத்தனைபேர்கெட்டழிந்தார்
அப்படியிருக்கும்போது — ஆணவமேன்விஸ்வாமித்ரா

விஸ்வாமித்திரர்சொல் கண்ணி.

கெட்டழியுங்காலமது — கிட்டினதோவுந்தனுக்குக்
கட்டுரையாய்ப்பேசுகின்ற — கர்வமென்னடாவதிஷ்டா

வதிஷ்டர்சொல் கண்ணி.

கர்வமெனக்கில்லையடா — காசிபன்மகனேபோடா
சர்வமுந்தெரிந்தவன்போற் — சாற்றுகிறாயடாமூடா

விஸ்வாமித்திரர்சொல் கண்ணி.

மூடனீயுமானதினால் — முன்னும்பின்னும்யோசியாமற்
கேட்டினும்பொய்ப்பயலைச் — செப்பவந்தாய்நற்புகழாய்

வதிஷ்டர்சொல் கண்ணி.

அந்தவரிச்சந்திரனே அபத்தனல்லமெய்யனென்று
இந்திரன்சபையறிந்து விந்தைகொள்ளக்காட்டுவேனுன்

விஸ்வாமித்திரர்சொல் கண்ணி.

மெய்யனென்றுநீயுரைத்த வேந்தனரிச்சந்திரனைப்
பொய்யனென்றேயிச்சபையோர் புத்திக்கெட்டக்காட்டுவேனுன்

(விஸ்-வ-ம்) அடா துஷ்டவதிஷ்டா நீ மெய்யனென்று சொல்லிய அந்த அரிச்சந்திரனென்றும் பயலைப் பொய்யனென்று இச்சபையோரறியும்படி செய்யாமல் விட்டுவிடுவேனு இந்தப் பகனாகிய விஸ்வாமித்ரன்.

(வதி-வ-ம்) அடா மூர்க்ககோசிகா நீயவ்விதஞ்செய்யாவிடில் உன்னை யிச்சபையோரறியும்படி மானபங்கஞ்செய்யாமல் விட்டுவிடுவேனு இந்தப் பகனாகிய வதிஷ்டன்.

(விஸ்-வ-ம்) நல்லது பார்க்கின்றே னுருகை.

(வதி-வ-ம்) அப்படியே பார்க்கின்றேன் உன்சமர்த்து.

நாரதர் விருத்தம்.

வதிஷ்டரே விஸ்வாமித்ர மாமுனி வோரேகேளீர்
பதஷ்டம தாகசண்டை பண்ணிட வேண்டாமுங்கள்
அதிஷ்டபாக் கியத்திற்கேற்க வவரவ ருறுதிகூறி
விதித்திடுஞ் சபதம்போல விளங்கிடச் செய்குவீரே.

நாரதர்சொல் தரு.

[அன்னையோனுன்னை நம்பினேனெனக்கருள்புரிகுவாய்]
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தவமுனிவரேயென்வீணுகச் சண்டைபோடுகின்றீர்கள்

அநுபல்லவி.

அவரவரவர் செய்யுஞ்சபதம்
அழியாமற்செய்வதேயிதம் (தவ)



சரணம்.

வதிஷ்டரேநீருஞ் சொன்னவாக்கு
மாறினலாணைசொல்லுமே
பதஷ்டகோசிக முனியேசபதம்
பண்ணிக்காரியம்வெல்லுமே (தவ)

(நார-வ-ம்.) ஹேவதிஷ்ட விஸ்வாமித்ரர்காள் நீங்கள்வீணுகக்கலகம்புரிந்துகொள்கின்றீர்களேயன்றிக்காரியசித்தியாகும் வழியொன்றுங் காணேமாதலால் இப்போதுங்களிருவருக்கும் நடந்த சம்வாதப்படி அரிச்சந்திரனைப் பொய்யனுக்கிவைத்தால் இன்னது செய்வதென்றும் அப்படிப் பொய்யனுக்காவிடில் இன்னது செய்வதென்றும் இவ்விந்திரன் சபையிற் சமாதானவார்த்தைகளால் அவரவர்வல்லமைக்குத்தகுந்த சபதமேற்படுத்திக்கொண்டு அப்பாலவரவர்கூறிய காரியத்தை நிறைவேற்றுவதுதான் உசிதமேயன்றி வீண்கூச்சலிடுவதினு லென்னபிரயோஜனம் ஆதலின் இந்தத் தேவசபைமுன்பாகவே சீக்கிரஞ் சபதங்க ளேற்படுத்துங்கள் பார்ப்போம்.

வதிஷ்டர் விருத்தம்.

தபமுனி வீரேவானோர் தலைவனே சொல்லக்கேளீர்
கபடமாய் விஸ்வாமித்ரன் கட்டுரை வார்த்தைசொன்ன
விபரமுங் களுக்குநன்றாய் வெளிப்படத் தெரிந்ததாலே
சபதமு மதற்குநானே சாற்றுவேன் சாற்றுவேனே.

வதிஷ்டர்சொல் தரு.

[மோகமுனேநானலோ முத்துபெட்டோராசாமி]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்திராதிதேவர்களே யென்தன்சபதங்கேளுமையா

அநுபல்லவி.

அந்தவரிச் சந்த்ரன்வாயில்
ஒருந்தவிதமும் பொய்வார்த்தை

வந்திடவே செய்தாலன்றே
தந்திடுவே னென்றவத்தை (இந்)
புலையர்சேரி தன்னிற்சென்று
புத்திகெட்ட பித்தன்போலே
தலையிேனாட்டிற் பிச்சைவாங்கிச்
சாப்பிடுவே னந்தக்காலே. (இந்)
கட்குடத்தைத் தலையிலேந்திக்
கவனமுட னுனுந்தானே
தெக்குநோக்கிச் சென்றிடுவேன்
செப்புமொழி தப்பிடேனே (இந்)

(வசி-வ-ம்.) ஹே-இந்திராதிதேவர் முனிவர்காள் எனது சபதத்தைக் கேளுங்கள் இவ்விஸ்வாமித்ரனுனவன் அவ்வரிச்சந்த்ரன் வாக்கில் எவ்விதமான பொய்சொல்லச்செய்தாலும் வேறுவிதமான பாதகச்செய்கைகளைக் காட்டினாலும் அப்பொழுதே யான் செய்த தவத்தையிழந்து புலைச்சேரிக்குச்சென்று தலையோட்டில் அன்னம்வாங்கிப் புசித்துக் கட்குடத்தைத் தலையிலேந்திக்கொண்டு தென்றிசைநோக்கி யெமலோகத்திற்குச் செல்லக்கடவேன். இது சத்தியமான வசனம்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

எழில்பெறு முனிவிண்ணோரே யிந்திர பூமாகேளீர்
கிழவனிச் சபையின்முன்னே கேலிபே சியதுபோலே
வழுவெழன் றேவீணான வார்த்தைகள் பேசமாட்டேன்
அழிவிலாச் சபதந்தன்னை யறைகுவே னறிகுவீரோ.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

(வந்தனந்தந்தேனே வந்தசபையோர்க்கும்)
என்ற ட்ராமாகோட்டின் வர்னமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

இவ்விதமாய்ச்சொல்ல என்னாலாவதல்ல
இந்திராதிதேவர்களே மாமுனிவோரே.



அநுபல்லவி.

அவ்வரிச்சந்திரன் வாயாலே
எவ்விதபொய்புகிலே யென்றாலே
என்னுடையசேதி யென்றவத்திற்பாதி
மன்னனுக்கீய்வேனே மனமாறத்தானே
மற்றதோராணைய் மிகமெய்யாய்
உற்றதோர்சொல்லிது தானையா (இந்)

(விஸ்-வ-ம்.) ஹே இந்திராதிதேவர் முனிவர்காள் பாருங்கள் இக்கிழவசிஷ்டனைப்போல் வீணானசபதங்கூறஎன்னாலாகா அவ்வரிச்சந்திரன் வாக்கினால் எவ்விதமாயாவது பொய்சொல்லச் செய்யாவிடில் யான் அக்கினிமத்தியில்நின்று செய்ததவத்திற்பாதி அவ்வரிச்சந்திரனுக்குக் கொடுத்துவிடுகின்றேன் இதுதான் எனதுசபதம் ஹே தேவர்கோவே எனது சபதம் நிறைவேறும்வரையில் இவ்வசிஷ்டனை இத்தேவலோகத்திற்றானே யுனது காவலிற் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும் இல்லாவிடிற் பூலோகத்திற்கு வந்து அரிச்சந்திரனுக்குப் போதனையேற்றி யெனது சபதத்தைப் பங்கப்படுத்திவிடுவான் இந்திரபூமா.

(இந்-வ-ம்.) நல்லது அப்படியே செய்கின்றேன் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) ஆனால் யான் சென்றுவருகின்றேன்.

(இந்-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள் இதோ வந்தனம் புரிகின்றேன்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் வஜ்ரபாணி.

(நார-வ-ம்.) ஹே தேவர்கோன் விஸ்வாமித்ரன் றப்பித்துக்கொள்வானென்றெண்ணிச் சரியான முடிபோட்டுக்கட்டுப்படுத்திவிட்டேன் நல்லது யானுஞ் சென்றுவருகின்றேன்.

(இந்-வ-ம்) அப்படியே சென்றுவாருங்கள் இதோ வந்தனம் புரிகின்றேன்.

(நார-வ-ம்.) கல்யாண் சுரேந்த்ரா.

(திக்-வ-ம்.) மகராஜ் யாங்களுஞ் சென்றுவருகின்றோம்.

(இந்-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள்.

(திக்-வ-ம்.) இதோ வந்தனம்புரிகின்றோம்.

(இந்-வ-ம்.) கல்யாண் திக்குப்பாலகர்காள்.

இந்திரகாண்டம் முற்றிற்று.

# வஞ்சவிரா காண்டம்.

பொது விருத்தம்.

வாசவன் சபையில்வினுய் வார்த்தைக ளாடிச்சிந்தை
கூசியே புவிக்குவந்த கோசிக முனிபுஞ்சொந்தப்
பூசனை தவமும்விட்டுப் புத்தியிற் பலவாருக
யோசனை பண்ணிப்பண்ணி யுருகுவான் கருகுவானே.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

பொன்னுலகு மன்னவன்மா முனிவர்தேவர்
பொருமையுடன் வீற்றிருந்த சபைமுன்பாக
முன்னொருநாள் வஸிஷ்டனுக்கு மெனக்குங்காலில்
மூண்டமன ஸ்தாபமதா லறிவில்லாமல்
மன்னனரிச் சந்திரன்வாய் தன்னிற்பொய்யை
வருவிப்ப தாய்ச்சபதஞ் செய்துவந்தேன்
என்னவித மாயவனை ஜெயிப்பேனந்தோ
இதுமெனது பொல்லாத வேளைதானே.

விஸ்வாமித்திரர்சொல் தரு.

[இத்தனைகோபமாகுமா]
என்ற பதத்தின் வர்ணமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

புத்திமோசம்போச்சதே

அநுபல்லவி.

அந்தச் சத்தியவாக் கரிச்சந்த்ரன்
சித்தமறிந் திருந்தாம் (புத்தி)

சரணங்கள்.

சொன்னமொழி பின்னமிலா
மன்னவனென்றேபெருமை
யென்னிமுழம் பன்னுவதை
யுன்னிடாமலேசிறுமை



துன்னுதற்காகவஸிஷ்டன்
றன்னையெதிர்த்ததினென். 26 (புத்தி)

இந்திரனி ருந்தமகா
சுந்தரசபைசிறக்க
வந்துளவ ருந்தவர்கள்
தந்திரமுடனிருக்க
நிந்தைபெறவென்றுறைந்த
தொந்தவினையாலேயென் (புத்தி)

கற்பனையாய்ச் செப்பியமொ
ழிப்படியேசெய்வதற்குஞ்
சொற்பரவு மிப்புவியில்
நற்புகழாய்புய்வதற்கும்
எப்படியரிச்சந்த்ரனைச்
சற்பனைக்குள்ளாக்குவேன். (புத்தி)

(விஸ்-வ-ம்.) ஆஆ-என்ன காலவித்தியாசம் ஏதோஎனக்கும் வஸிஷ்டனுக்கும் ஏற்கெனவே யேற்பட்டிருந்த மனஸ்தாபத்தை புத்தித்தித்துக் கிஞ்சிற்றேனும் யோஜியாமல் மகாசத்தியவானென்று நன்றுபுணர்ந்திருக்கும் அரிச்சந்திரனைப் பொய்யனென்று வாதாடிய நிமித்தம் (வினைவெட்டப் பூதம்புறப்பட்டது) என்பதுபோல கலகநாரதன் கெட்டியாய் மூடிந்த கட்டுக்குள்ளகப்பட்டுச் சபதங்கூறிவந்தேனே ஆஆ அவ்வரிச்சந்திரனைப் பொய்யனாக்கி இந்திரன் சபையிற்கூறிய சபதத்தை நிறைவேற்றிப் பூவுலகில் நல்ல கீர்த்தியைப் பெறுதற்குத் தந்திரமொன்றும் புலப்படவில்லையே. ஆஆ மற்ற முனிவர்களைப்போல யானும் மௌனமாயிருந்திருக்கும் பக்ஷத்தில் இவ்வித சங்கடம் நேரிட்மாட்டாதே ஆஆ இவ்வற்பவிஷயத்திற்காக மயங்கியிப்பன்னகசாயிலிருந்து கொட்டாவிவிடும்படி நேரிட்டுவிட்டதே யிதற்கென்செய்வேன்.

பொது விருத்தம்.

இந்திரன் சபையின்முன்னே யியம்பிய சபதம்போல
தந்திர மாகவெல்லத் தக்கதோர் வழிகாணுமற்

சிந்தைகொள் திருக்கும்போது சிலதவ முனிவர்கூடி
அந்தவிஸ்வாமித்ரன்பா லன்புடன் வருகின்றனரே.

முனிவர்கள்வருந் தரு.

[காரணசரவணபவகுகனே]

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

மாமுனிவர்கள் மகிழ்வுடன்வந்தார் விஸ்
வாமித்ரர்தனைத்தேடி (மாமுனிவர்கள்)

அநுபல்லவி.

காமமதனைவென்று கானகந்தனில் நல்ல
நேமமுடனிருந்து நிஷ்டைபுரியும் வல்ல (மாமு)

(முனிவர்கள் வசனம்.) யாரடா இவிடத்திற் சிஷ்யன்.

(சிஷ்யன் வசனம்.) தேவே யிதோ காத்துக்கொண்டிருக்கின்றேன்.

(முனி-வ-ம்.) விஸ்வாமித்திரர் என்னடா செய்கின்றார்.

(சிஷ்-வ-ம்.) இஞ்சிதின்ற குரங்குபோல் விழித்துக்கொண்டிருக்கின்றார் ப்ரபு.

(முனி-வ-ம்.) அடா துஷ்டா அப்படிப் பாஷிக்கவேண்டாம் நல்லது சிலமுனிவர்கள் வந்திருப்பதாகத் தெரிவிப்பாயாக.

(சிஷ்-வ-ம்.) அப்படியே தெரிவிக்கின்றேன் * தேவே சில முனிவர்கள் வந்திருக்கின்றார்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அப்படியா நல்லது வரச்செய்வாயாக.

(சிஷ்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் * தேவே வரும்படி யுத்திரவாகியிருக்கின்றது சென்றுவாருங்கள்.

(முனி-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றோம்.



முனிவர்கள்சொல் நாமாவளி.

[வேதமனத்தெஜா நிற்குணதோ ப்ரபு]

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

27

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணி.

வந்தனந்தந்தனம் மாதவமுனியே வந்தனந்தந்தனம்.

(முனி-வ-ம்.) ஆஆ தவசிரேஷ்டரோ முனிவர்கள் வந்தனம் புரிகின்றோம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண முனிவர்காள் இவ்வாசனத்தில் வீற்றிருங்கள்.

(முனி-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றோம்.

(விஸ்-வ-ம்.) ஹே முனிசிரேஷ்டர்காள் என்னைத்தேடி வந்த காரணம் யாது.

(முனிவர்கள் விருத்தம்.)

வீரிய மிகுந்தவிஸ்வா மித்திர முனிவரோகேள்
சீரிய தேவர்கோன்முன் சென்றுவர் திருப்பதாகப்
பாரினில் வதந்திமென்மேற் பரவிய தாலேயும்மை
நேரினிற் காணுதற்கு நினைத்திவண் வந்தோமையா.

முனிவர்கள்சொல் தரு.

[விரசமானவார்த்தைவேண்டாம் விட்டுவிடடா]

என்ற ட்ராமாபதத்தின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்த்ரன்சபைக்குச் சென்றிருந்த தென்னகாரணம்.

அநுபல்லவி.

அந்தநல்ல சிந்தைகேட்க
ஆவலாய்நாங்கள்
வந்தோமையா சிந்தைகூர்ந்து
வழுத்துவீர்நீங்கள்

(முனி-வ-ம்.) ஆஆ-தவசிரேஷ்டரே தாங்களேதோ இந்திரன் சபைக்குச்சென்று வந்ததாகக் கேள்விப்பட்டுத் தங்களைக் காண வந்தோம் அங்கேதாவது விசேஷம் நடந்திருந்தால் எங்களுக்கு விபரமாயறிவிக்கவேண்டும் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

அவனியெண் டிசையிலுள்ளோ ரன்புடன் பணிந்துபோற்றுந்
தவமுனி வோரேயந்தச் சதமகன் சபையிலேதும்
விவரமுண் டோவென்றென்னை வினவிய படியினாலே
நவமுடன் யாகமொன்று நடந்ததை யறிகுவீரே.

---

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[மன்றுவுன்னைக்கண்டநாள்முதலாய் மையல்மிகக்கொண்டேனே]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-ஏகதாளம்.

பல்லவி.

மாமுனிகாள்தேவநகரில்வாழ் மன்னன்யாகஞ்செய்தானே.

அநுபல்லவி.

நாமுமதுபோலவிதுகாள் நல்லயாகம்பார்த்திலோம்-அதால்
நமதுபாபமுந்தீர்த்திலோம் , (மா)

அந்தவிதவேள்விசெய்திடில் அடர்ந்ததீவினைபோகுமே-நமக்
கரியபுகழுண்டாகுமே (மா)

அன்றுமுதலின்றுவரையும் அதுவேநினைவாயிருக்குதே-யெனக்
காவலானதுபெருக்குதே (மா)

---

(விஸ்-வ-ம்.) ஹே-முனிவர்காள் யானிந்திரன் சபைக்குச் சென்றிருந்தேன் அவ்வாசன் மகத்தான ஓர் வேள்விநடத்தினன் நாம் அதைப்போல இதுவரையும் பார்த்திருக்கவுமாட்டோம்கே ட்டிருக்கவுமாட்டோம் அப்பேர்ப்பட்டயாகங்களைச் செய்தாலன் றோ நமது பாவமுதலான தீவினைகளன்றுநல்ல கீர்த்தியுண்டாகும் எனக்கன்றுமுதல்அதுவேயெண்ணமாயிருக்கின்றது முனிவர்காள்.



28

முனிவர்கள் விருத்தம்.

புனிதமுந் தவமுங்கீர்த்தி பொருந்திய விஸ்வாமித்ர
முனிவரே நீருரைத்த மொழியினால் நாங்களந்தக்
கனமகுத் துவயாகத்தைக் கண்டது போலிப்போது
மனமதி லிணையில்லாத மகிழ்ச்சியுங் கொண்டிட்டோமே.

---

(முனி-வ-ம்.) ஆஆ-தவசிரேஷ்டரே அப்பேர்ப்பட்ட மகத்தான வேள்வியை யாங்கள் கண்ணாரப்பாராவிடினுந் தாங்கள் பார்த்து வந்ததையாவது செவியாரக் கேட்டுக்கொண்டோமன்றோ அதுவே நாங்கள் பார்த்ததாயெண்ணிச் சந்துஷ்டியடைந்தோம் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

கேட்டிரு தயம்பூரித்த கிருபைமா தவரேயோலை
யேட்டினிற் சுமைக்காயென்றே யெழுதினாற் கரிக்காகாது
மேட்டிமை யாகநாயே வேள்வியை முடித்துக்கீர்த்தி
நாட்டிடு வதற்கிப்போது நான்சொலும் வகைகேட்பீரே.

---

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

* [ராமமுநிப்ரணதபாலா தயய தயய தயய தயய ராம]
என்ற க்ருத்திகையின் வர்ணமெட்டு.

இராகம்-பூரிகல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாமுனிகாள் யானுமொரு வார்த்தையுரைக்கக்
கேளுங் கேளும் (மாமுனிகாள்)

அநுபல்லவி.

நாமுமதுபோல் நேமயாகமும்
நடத்திலல்லவோ கிடைக்கும்யோகமும் (மா)

சரணம்.

பொன்னுமதற்கு வேண்டுமிக்க
பொருளளித்திடுங் குணத்திற்றக்க
மன்னவனரிச் சந்த்ரனைக்கண்டு
வாக்குப்பெற்றிடிற் புண்ணியமுமுண்டு (மாமு)

---

(விஸ்-வ-ம்.) ஹே-முனிவர்காள் (எட்டுச்சுரைக்காய் கறிக்காகா) தென்பதுபோல வேள்வியின் மகத்துவத்தைக் கண்ணுற் பார்த்ததினுலுங் காதாற் கேட்டதினுலும் நமக்கொரு மேன்மையில்லை நாமே நடத்தினல்மட்டுங் கீர்த்தியுஞ் சுகிர்தமுங்கிடைக்கும் அதற்காக ஏராளமான திரவியம் வேண்டிவதிருப்பதால் அவ்வளவு பொருள்கொடுக்கத்தகுந்த தயாளபுருஷன் அரிச்சந்திரனையன்றி மற்றொருவரையுங் காணேமாதலின் நீங்களிப்பொழுதே அயோத்தியாபுரிக்குச் சென்று அவ்வரிச்சந்திரனைக்கண்டு விஸ்வாமித்ரர் ஓர்வேள்வி முடிக்கப்போவதால் அதற்குவேண்டியபொன் உன்னிடங் கேட்டுவரச்சொன்னுரென்று கூறி அவ்வரசன் றருவதாக நாவசையும்படி தந்திரமாய் வாக்குறுதிபெற்று வரும்பட்சத்தில் உங்களுக்கு மிகுந்தபுண்யங்கிடைக்கும் ஹே முனிவர்காள் இதற்கென் சொல்கின்றீர்கள்.

(முனி-வ-ம்.) தவசிரேஷ்டரே அப்படியே கேட்டு உறுதிப்படுத்திவருகின்றேம் விடைதாருங்கள்.

(விஸ்-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள்.

(முனி-வ-ம்.) இதோ வந்தனம்புரிகின்றேம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் முனிவர்காள்.

அயோத்தியாபுரிக்கிறைவனுகிய.

## சத்தியவாக்கு

## அரிச்சந்திரமகாராஜாவின்

முதலாவது சபை.

பொது விருத்தம்.

வேதியர்க ளனைவர்களு மறைகள்பாட
 விரிந்திலகும் பஞ்சவர்னக் குடைகணிட
மாதர்சிலர் பிரதமித நடனமாட
 வனிதையர்க ளிருமருங்குங் கவரிபோடச்



30

காதலுறக் கவிவாணர் புகழ்விசேடக்
கனகசிம்மா தனத்திலுறக் கருத்துநாடச்
சாதுஜன சங்கநிறை கொலுச்சபைக்குச்
சத்தியவாக் கரிச்சந்த்ரான் வருகின்றனே.

## அரிச்சந்திரன் கொலுவுக்குவருந் தரு.

[ஜிய்யாமேரேநாமோனசையா]

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

சத்யவாக்கரிச் சந்த்ரராஜன்கொலுவந்தானே.

அநுபல்லவி.

ரத்ன-மகுடமின்னப்-புவி யெத்திசைபுகழும்வன்னச்
சித்ரக்-குடைகணிடத் தெரிவையர்-சாமரைகளும்போடச்
சேவகர்பணிந்துபோற்றவே-தேவர்கள்கண்டு
பூவெனுநல்மாரிதூற்றவே (சத்ய)

சரணம்.

பூசுரர் ஆசிகள் பேசவே நேசமாய்-நல
தாசியர்நடனமாட
தேச-மன்னர்கூடச் சேர்ந்துமெய் யன்பாகவேகொண்டாடத்
தித்திமத்தளமுழங்கவே ஆலத்திப்பெண்கள்
நித்யமங்களம்வழங்கவே

## அரிச்சந்திரன் கடவுளைப்போற்றல்.

விருத்தம்.

அந்தரர் முனிவர்போற்று மம்பிகை பாகாபோற்றி
கந்தனை யின்றெடுத்த கங்கைவே ணியனேபோற்றி
மந்திர மறைகளென்றும் வழுத்துமெய்ப் பொருளேபோற்றி
சந்தத மென்னையாளுஞ் சம்புவே போற்றிபோற்றி.

## அரிச்சந்திரன் சொல் தரு.

[நித்யானந்தத்தைநாடு பர சின்மலசுகந்தேடு ஓமனமே]
என்ற சர்வசமயசமரசக்கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஈசாகிருபைசெய்வாயே-எந்தன்
இணையடிதொழும்நாயேன் மீதில்நீயே
ஈசாகிருபைசெய்வாயே.

அநுபல்லவி.

கோசலநாடது குறைவின்றிச்செழிக்கக்
குடிபடைகளனைத்தும் மிடியின்றித்தழைக்கத்
தேசமன்னவரெல்லாம் நேசமாய்ச்சூழ
சீர்த்தியுடனேயிவ்வ யோத்தியில்வாழ (ஈசா)

சூரியகுலத்திலிற் றோன்றியநானே
சொல்வழுவாமலென்றுந் செல்வமாய்த்தானே
ஆரியர்புகழுஞ்சிம் மாசனமீது
அமர்ந்துமனுமுறையா யாளவெப்போதும் (ஈசா)

தவமுனிவர்பரவு சங்கரிநேசா
சங்கினிகர்கைலை யங்கிரிவாசா
செவிதனக்கினியநற் கவிதைகள்சாற்றுந்
தென்பழனிமுத்தையன் அன்புடன்போற்றும் (ஈசா)

(அரிச்சந்திரன் வசனம்) ஓ ஜெகதீசா சந்ததம் உந்தனைச் சிந்தித்துக்கொண்டிருக்கின்ற எந்தனரசாக்ஷிக்குட்பட்ட கோசலநாடுகள் நன்றாய்ச்செழிக்கவும், சகலபிரஜைகளுங் குறைவின்றி வாழவும், யான் மனுமுறைதவறாது செங்கோலோச்சவும், எனது சத்தியவாக்குப் பொய்யாது என்றும் நிலைநிற்கவும், எனக்கெப் பொழுதுந் தீங்குநேராமற் பாங்குடன் ரக்ஷிக்கவுங் கிருபாநுக்ரகம் பாலித்தருளவேண்டும் பிரபு.



## அரிச்சந்திரன் சபைவணக்கம். 3/

விருத்தம்.

தகைமைசேர் கனகசிம்மாசனத்தினி லிருந்தெப்போதும்
பகைவரை வென்றுநல்ல பக்குவத் துடனேயிந்த
ஜெகமெலாம் புகழச்செங்கோற் செலுத்திடு மரிச்சந்த்ரன்யான்
மகிழ்வுடன் சபையோருக்கு வந்தனந் தந்திட்டேனே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

(சம பப்பப் பமகமா கமபரிகமகா கமபதபம நிசமபமக நிசனிசனிதப)
என்ற ட்ராமாநோட்டின் வர்ணமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

இதோ-வந்தனமிகவே தந்தனன் மகிழ்வாய்
வளர்சபைதனி லாகிவவர் மற்றனைவருக்கும்

அநுபல்லவி.

சுந்தரசிம்மா சனத்துக்குமே-நல
சுந்தரசிம்மா சனத்துக்குமே-இதோ (வந்)
அன்னைபிதாகுரு தெய்வத்துக்கும்-எந்தன்
அன்னைபிதாகுரு தெய்வத்துக்கும்-இதோ (வந்)
வையம்புகழுமுத் தையனுக்கும்-இந்த
வையம்புகழுமுத் தையனுக்கும்-இதோ (வந்)

(அரி-வ-ம்.) சகலகலாவல்ல பூகதிட வித்வரத்னக்குழாங்கள் நிறைந்த இம்மகோன்னதசபைக்கு அரிச்சந்திரனாகிய யான்வந்தனம்புரிகின்றேன்.

(சேவகன்-வசனம்.) விண்ணவர்புகழும் அண்ணலே சேவகன் வந்தனம்புரிகின்றேன்.

(அரி-வ-ம்.) கல்யாண் சேவகா.

அரிச்சந்திரன் விருத்தம்.

சிந்தையாய் வாசற்காக்கும் வீரசே வகனேகேளாய்
சந்தத மருகிருந்து தருந்தயோ ஜனைகள்கூறிச்

சிந்தையைக் களிக்கச்செய்யுந் திடமதி வல்லோனை
மந்திரி சத்யகீர்த்தி வந்திடா வகைசொல்வாயே.

## அரிச்சந்திரன்சொல் தரு

[வந்தனந்தந்தே னென்னுடைய வந்தனந்தந்தேன்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

எனதுசேவகா பிரதான் இன்னுமேன்வல்லே.

அநுபல்லவி.

என்னடா என்னடா என்னடா
என்னடாவிடை பண்ணடாபலே (எனது)

(அரி-வ-ம்) அடாசேவகா யானந்தப்புரத்தைவிடுத்து இந்தக் கொலுவையடுத்துவருஞ் சந்தர்ப்பத்திற்கு முன்னதாகவேவந்து வழிமேல் விழிவைத்து என்வரவுக்கெதிர் பார்த்திருந்து வந்தபின் அருகாசனத்திற்சரியாய் வீற்றிருந்துசிந்தைக்கிசைந்தமந்திராலோசனையெடுத்துப்போதிக்கத்தகுந்த தந்திரானுபவத்தைநவகித்த மந்திரியான சத்தியகீர்த்தியானவர் இதுவரை வாராதிருக்குங்காரணம் யாது.

(சேவ-வ-ம்.) யாதுகாரணமோ பேதையானறியேன் மகராஜ்

(அரி-வ-ம்.) விரைவுடன்சென்று பரிவுடனழைத்துவருவாயாக.

(சேவ-வ-ம்.) செப்பியபடியே யிப்பவே யழைத்து வருகின்றேன் மகராஜ்.

பொது விருத்தம்.

அத்தனருள்பெற்றோங்கு மரிச்சந்த்ர பூபன்மீது
பத்திவிஸ் வாசம்வைத்துப் பாங்குயோ சனைகள்சொல்லும்
புத்திவி சாலமும்நற் பொறுமையும் புகழும்பெற்ற
சத்திய கீர்த்திமந்த்ரி சபைதனிற் றோன்றினனே.



## சத்தியகீர்த்திசொல் தரு.

[வந்தனந்தந்தேனே வந்தசபையோர்க்கும்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

மந்திரியும்நானே வந்தனஞ்செய்தேனே
வையமெண்டிசையோர் துதிசெய்யுமெங்கள்கோனே

அநுபல்லவி.

சந்ததமுந்திரு வளர்சுமுகா
சுந்தரசந்த்ரனே நிகர்சுமுகா (மந்)

## சத்தியகீர்த்தி அரிச்சந்திரனைப்போற்றல்:

விருத்தம்.

அடியவர் துயரைப்போக்கி யாதுலர் கலியைநீக்கி
நெடியசா காஞ்சூழ்ந்த நேமியில்யாரும்போற்ற
முடிகுடை முதற்றசாங்க முறையொடு நீதியோங்கும்
படியர சியற்றுமெங்கள் பார்த்திபா போற்றிபோற்றி.

(சத்தியகீர்த்தி வசனம்) கீர்த்தியில் மிகுந்த பார்த்திபா மந்திரி வந்தனம்புரிகின்றேன்.

(அரி-வ-ம்) கல்யாண் ப்ரதான் சிரேஷ்டா நேசமாயிந்த ஆசனத்தமரும்.

(சத் வ-ம்) சாற்றியபடியே வீற்றிருக்கின்றேன் மகராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மதிவல மிகுந்தநல்ல மந்திரி சொல்லக்கேளீர்
அதிசய மாகநானிவ் வருஞ்சபை வருமுன்னைக
இதமுடன் வந்துநீரு மென்வர வுதனைநோக்கும்
விதமது தவிர்ந்தசேதி விபரமாய்ச் சொல்லுவீரே.

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் சிரேஷ்டா யானெப்பொழுது மிந்தப்பொற்கொலு நாடிவருதற்கு முன்னமே தாம்வந்து யானந்தப்புரத்தை விடுத்துவருஞ் சந்தர்ப்பமான் வரவுக்கு வழிமேல்

விழிவைத் தெதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடியவர் இன்றிது வரை காலகாரணமாகி வந்த காரணம் யாது ப்ரதான்.

சத்தியகீர்த்தி விருத்தம்.

சிற்றரசர்களளிக்குந் திறைப்பணை மனைத்துமவாங்கி
முற்றிலும் பொக்கிஷத்தில் முறைப்படி. சேர்த்துவிட்டு
மற்றவே லைகளும்பார்த்து வந்ததால் நேரமாச்சு
கொற்றவா நீருமந்தக் குற்றத்தை மன்னிப்பீரே.

(சத்-வ-ம்,) மகாராஜ் பாருங்கள் நமதாஞைக் குட்பட்ட (அங்கவங்க கலிங்க காஸ்மீர*சிங்கள கேரள கொங்கண தெங்கண* சிந்துசீன புலிந்த புகந்தகக்குந்தள சேகப கூர்ச்சர சாலவ*பல்லவ பாண்டிய பப்பர கன்னட*கொல்லநிடத சோனக திராவிட*மகத மச்ச மராட மாளவ*லாட போட கிராட கன்ருட*தருவ சோழ கருச காச*அவந்தி ஆந்திர யவன ஒட்டிய*குடக குருகு குலிந்த சவ்வீ*சகநேபாள வங்காள*.விதர்ப்ப*அருண காந்தார குரு மலையாள*காம்போஜ பாஞ்சால சூரசேன) மென்னும் ஐம்பத்தைந்து தேச சிற்றரசர்களாலனுப்பிய நமக்குரிய திறைப்பணங்களைக் கணக்குப்பார்த்து வாங்கி வரவுவைத்து ரசீதுகொடுத்துப் பணங்களைப் பொக்கிஷத்திற் சேர்த்து நல்லமுதருக்கிவருலதற்கிதுவரை கால காரணமாகி விட்டது அக்குற்றத்தை க்ஷமித்தல் வேண்டு மகாராஜ்.

(அரி-வ-ம்,) ஆஆ அப்படியா யானதைப்பற்றி யத்யந்த குதுகலமடைந்தவனுகினேன் ஹே நண்பா.

அரிச்சந்திரன் விருத்தம்.

அரனருளாலேயிந்த வாசனங் கிடைக்கப்பெற்றேன்
தரமுள மன்னர்சிம்மா தனத்தினி லிருக்கும்போது
புரமதில் நடக்குமுயப் புதுமைக ளுள்ளதெல்லாம்
உரிமுட னின்னதென்றே யுணர்த்திட வேணுமந்த்ரி.



அரிச்சந்திரன்சொல் தரு. 33

(மோகமுகேன் தாளவேரி முத்தபெட்டேராஜசாயி)
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு
இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தேச விசாரணைசெய்யச் சிந்தைபாகினேன் மந்திரி.

அநுபல்லவி.

வேசகல
காரியங்களுந்தெரிந்து
நீயெனக்கு
நிகழ்த்துவீரென்றேயுகந்து

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் பாரும் ஈசனருளால் எனக்கிந்தச் சிம்மாதனங்கிடைக்கப் பெற்றதானது எனது முன்னோர்கள் செய்த பூஜாபலமோ அல்லது யான்செய்த மாதவமகிமையோ தெரிந்திலேன் ஆனல்.

குறள் வெண்பா.

நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறு நாடுகெடும்.

அதாவது அரசனானவன் ஒவ்வொருநாளுந் தனது சிம்மாதனத்திலிருந்து நன்மைதின்மைகளை விசாரித்துச் சீர் திருத்தஞ் செய்யாவிடில் அந்த நாடானது கெட்டு விடுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது ஆதலின் யானெப்பொழுதிந்தச் சிம்மாதனத்துக்கு ராஜ்யத்திலுள (ப்ரம்ம ப்ராப்தமானேனே அப்பொழுதே நமது க்ஷத்திரிய வைஸ்ய சூத்ர) ரென்னுஞ் சதுர்வர்ணாச்ரமத்தார்களுடைய கிரியாதியொழுக்கங்களைப்பற்றி விசாரிக்கவேண்டுவது முக்யமான கடமையானதால் இப்பொழுது இஞ்சிற்று தேசவிசாரணை செய்ய ப்ரீதியுடைத்தானவனு யிருக்கின்றேன் ஹே நண்பா உமதபிப்ராயமெவ்வாறுளது சீக்கிரந்தெரிவிப்பீராக.

சத்தியகீர்த்தி விருத்தம்

தந்ததபோ லெனைப்புரக்குந் தலைவனே சொல்லக்கேளீர்
சுந்தர் மன்னுமோ தன் சூழ்ச்சிகள் கேட்கும்போது

விந்தையாய்த் தேசந்தன்னில் விளைந்திடுஞ் சேதியெல்லாம்
எந்தனைப் போலமந்த்ரி யியம்புதல் கடமைதானே.

(சத்-வ-ம்.) மகாராஜ் பாருங்கள் எப்பொழுதேராஜன் தேச விசாரணைசெய்யத் துவங்குகின்றாரோ அப்பொழுதே யென் போன்ற மந்திரிகள் உலகத்தில் நடக்குஞ் சகலவிசேஷவைபவங் களைப்பற்றிப் பதிலுத்தரங்கூறத் தயாராயிருப்பார்களென்பது தங் களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும் அங்ஙனமிருக்க என்னை யெதற் காக அபிப்பிராயங் கேட்கவேண்டு மகாராஜ்.

## தேசவிசாரணை வினாவிடைத்தரு.

[விஸ்வேசாவுந்தனைநான் வேண்டினபலனிதுவோ]
என்ற நீதிநெறி அரிச்சந்திரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

வேதியரனுதினமும் வேள்விகள்செய்கின்றார்களா

சத்தியகீர்த்திசொல் கண்ணி.

நீதிலாமலேநிதமுஞ் செய்துவருகிறாரையா
செம்மலே செம்மலே செம்மலே செம்மலே

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

சிற்றரசர்கப்பமெல்லாஞ் செலுத்திவருகிறாரா

சத்தியகீர்த்திசொல் கண்ணி.

சற்றுந்தடையில்லாமலே தந்துவருகின்றாரையா
தலைவனே தலைவனே தலைவனே தலைவனே

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

வைசியரொழுங்குடனே வர்த்தகஞ்செய்கின்றார்களா

சத்தியகீர்த்திசொல் கண்ணி.

மெய்சொலியேவர்த்தகத்தை மேன்மையாய்நடத்துகின்றார்
வேந்தனே வேந்தனே வேந்தனே வேந்தனே

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

சூத்திரர்வர்க்குரிய தொழில்கள்நடத்துறாரா



சத்தியகீர்த்திசொல் கண்ணி.

நேர்த்தியுடனேதொழில்கள் நித்தியமுஞ்செய்கிறரே
நிருபனே நிருபனே நிருபனே நிருபனே

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

திங்கள்தோறுமூன்றுமாரி செழுமையாய்ப்பெய்கிறதா

சத்தியகீர்த்திசொல் கண்ணி.

மன்னமாய்லோகமெங்கும் மாரியும்பொழிகிறதே.
வள்ளலே வள்ளலே வள்ளலே வள்ளலே

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

ஆலயஷட்காலபூஜை அனுதினஞ்செய்கிறரா

சத்தியகீர்த்திசொல் கண்ணி.

சிலமறையோர்கள்பூஜை சிறப்பாய்நடத்தாரே
தேவனே தேவனே தேவனே தேவனே

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

சத்திரத்தில்நித்தியமுந் தானதர்மஞ்செய்கிறரா

சத்தியகீர்த்திசொல் கண்ணி.

எத்திசையுமேபுகழ இன்பமுடன்செய்கிறரே
எந்தலே எந்தலே எந்தலே எந்தலே

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் சிரேஷ்டா இவ்வாறு நடந்துவருகின்றனவா வென்ன.

(சத்-வ-ம்.) தடையென்ன மகராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தரவைம் பத்தாறு தேசங்கட்குஞ்
சுயஏக சக்ராதி பதியாகி
விந்தையிரு மூமந்யோ ஜனக்கினங்கி
மேதினியில் நீதியுடன் செங்கோலோச்சிச்
சந்ததமுந் தேவனர் பூஜைநோன்பு
தன்னொழிப் புத்திரபாக் கியமும்பெற்று

நீந்தனெறிப் படிகுடிகள் நடக்கும்போது
இனியெனக்கு வேறுகுறை யுண்டோமந்த்ரி.

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் சிரேஷ்டா பாரும் யானிவ்வைம் பத்தாறு தேசங்கட்கும் ஏகசக்ராதிபதியாயிருந்து (மன்னவர்க்கழகு செங்கோன்முறைமை) யென்பதுபோல (ஓதல்-வேட்டல்-ஈதல்-உலகோம்பல்-படைபயிற்றல்-பொருத) லென்னும் அரசாங்கத்திற்குரிய ஷட்கர்மங்களோடு மகாகௌரவத்துடன் செங்கோன்மைவழுவாது ராஜ்யபரிபாலனஞ் செய்து வருகின்றேன் (மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்த) லென்பதுபோல மந்திராலோசனைக்குத்தகுந்த தந்திரானுபவத்தைவகித்த தாமும் எனதருகாசனத்திற் சரியாக வீற்றிருந்து எனக்குச் சமயோசிதமான யுக்தி சாதுர்யங்களை யெடுத்துப்போதித்து வருகின்றீர் அன்றியும் (ஆலயந்தொழுவது சாலவுநன்) றென்பதுபோல (சிவமாலய) தேவதா பூஜாவிரதங்களையும் யாதோரிடையூறின்றி யனுஷ்டித்து வருகின்றோம். ஹே துணைவா இன்னும் பாரும் (அரசனெவ்வழி யவ்வழி குடிக) ளென்பதுபோல நமது ராஜ்யத்திலுள சகல வர்ணாச்ரமத்தார்களும் நமதாக்ஞை கடவாது பக்தி விஸ்வாசத்துடன் அடங்கி நடந்து வருகின்றார்கள் இஃதன்றியும் எனது பட்டத்தைத் திட்டமாய்த் தாங்குவதற்காகக் கடவுள் கிருபானுக்ரகத்தால் ரத்தினத்தையொத்த புத்ரசிகாமணியாகிய தேவதாசனுங் கிடைக்கப்பெற்றிருக்கின்றேன். ஹே அன்பிற்கிசைந்த நண்பா இவ்வித சாம்ப்ராஜ்ய வைபவங்களுடன் (ஸ்வர்க்க-மத்ய-பாதல) மென்னும் திரிபுவனங்களும் புகழ்ந்து கொண்டாடும்படி செங்கோற்செலுத்தி வருவதற்கு முன்ஜென்மத்தில் யாது நோன்பிழைத்தேனோ தெரிந்திலேன் ஆஆ நேயா இனிமேலிந்தப் பகதூராகிய அரிச்சந்திரனுக்கு யாது குறையிருக்கின்றது ப்ரதான்.

சத்தியகீர்த்தி விருத்தம்.

பரிதியின் குலத்துதித்த பார்த்திபன் திரிசங்குக்கு
அரியபுத் திரனுமாகி யயோத்திமா நகரந்தன்னில்
விரதமுந் தவறிடாது மெய்யெனும் பணியைப்பூண்டு
தாமுடன் செங்கோலோச்சுந் தமக்கொரு குறைநேராதே.



(சத்-வ-ம்.) மகாராஜ் பாருங்கள் தாங்கள் மகா வீரசூரபராக்ரமத்தை யுடைத்தான சூர்யகுல க்ஷத்ரியமன்னுவாகிய திரிசங்கு மகாராஜாவுக்குப் புத்ரசிகாமணியாயுதித்து இவ்வயோத்தியாபுரிக்கரசனுயமர்ந்து சத்யமே பூஷணமாகப்பூண்ட சத்யவாக்கரிச்சந்திரபூபதியென்று எண்டிசையுங் கொண்டாடும்படி அவனி யைம்பத்தாறுதேசங்களையுந் தங்க ளாக்ஞாசக்கரத்திலடக்கி மனுநீதிதவறாது செங்கோல் நடாத்திவரும்போது தங்களுக்கு யாது குறைவு நேரிடப்போகின்றது மகாராஜ்.

பொது விருத்தம்.

தன்னுளத் தினில்நினைத்த சற்பனை முடியவேண்டிப்
பொன்னது கேளுமென்று பொய்யுரை விஸ்வாமித்ரன்
சொன்னதை மெய்யாய்நம்பித் தூயமா முனிவரெல்லாம்
மன்னவ னரிச்சந்த்ரன்றன் மாசபை வந்திட்டாரே.

(முனி-வ-ம்.) யாரடா இவிடத்திற்சேவகன்.

(சேவ-வ-ம்.) தேவே யிதோ காத்துக்கொண்டிருக்கின்றேன்

(முனி-வ-ம்.) அரசனென்னட செய்கின்றான்.

(சேவ-வ-ம்.) சிம்மாதனத்தில் வீற்றிருக்கின்றார் ப்ரபுகாள்.

(முனி-வ-ம்.) நல்லது சில முனிவர்கள் வந்திருப்பதாகத் தெரிவிப்பாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே தெரிவிக்கின்றேன் * மகராஜ் சில முனிவர்கள் தேடிவந்திருக்கின்றார்கள் ப்ரபு.

(அரி-வ-ம்.) அப்படியா * ஹே ப்ரதான் ஏதோ சில முனிவர்கள் நம்மைத் தேடிவந்திருக்கின்றார்களா மாதலின் அவர்களை யெதிர்சென்றழைத்துவருவோம் வாரும்.

(சத்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் மகராஜ்.

அரிச்சந்திரன்சொல் நாமாவளி

[சரவணபவனே கிருபைசெய் சரணஞ்சண்முகனே]
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.
கண்ணி.

தவமுனிவர்களே வாரும்வாருஞ் சரணஞ்சரணமே.

(அரி-வ-ம்.) ஆஆ முனிசிரேஷ்டர்காள் அரிச்சந்திரன் வந்தனம்புரிகின்றேன்.

(முனி-வ-ம்.) கல்யாண் வேர்த்த.

(சத்-வ-ம்.) தவசிரேஷ்டர்காள்மந்திரி வந்தனம்புரிகின்றேன்.

(முனி-வ-ம்.) கல்யாண ப்ரதான்.

(அரி-வ-ம்.) ப்ரபுகாள் இவ்வாசனத்தில் வீற்றிருங்கள்.

(முனி-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றோம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

தனத்துடன் மாதர் பூமி சகலபற் றுகளுநீங்கி
வனத்தினி லிருந் தநல்ல மகிமையே சர் தவமியற்றிக்
கனத்துடன் முன் னுகாலக் காரியம் புகல்மெய்யோரே
எனைப்பொருட் டாகவெண்ணி யிங்குவந் ததுசொல்வீரே.

அரிச்சந்திரன்சொல் தரு.

[பசிபத்தலார நைனஹார கௌரதனஹார]

என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-சாபு.

பல்லவி.

எனைத்தேடியிங்கே நாடிவந்த-தென்ன காரணம்.

அநுபல்லவி.

அனைத்தையுநல் — மனக்கண்ணுலே
மதியும்புகிகாள்
அப்பெருமை — செப்பவேணும்
அரியதேகிகாள் (எனைத்)

(அரி-வ-ம்.) ஆஆ முனிபுங்கவர்காள் இவ்வடியேனையோர் பொருட்டாவெண்ணி யிங்கு ப்ராப்தமானகாரணம் யாது அதனை யொருவாறு திருவாய்மலர்ந்தருளவேண்டும் ப்ரபுகாள்.

முனிவர்கள் விருத்தம்.

புத்தியா புகந்தனைப் புரந்தரற் கீர்த்திபெற்ற
சத்திய மன்னுநீங்கள் தவவலி பெற்றவிஸ்வா
மித்திர முனிவர்க்காக வேண்டியே யிங்குவந்தோம்
பத்தியாய் விபரங்கேட்டுப் பதிலுரை செய்குவாயே.



முனிவர்கள்சொல் தரு.

[கார்யோலாராமோதன்று வைகுந்தமன்று]

என்ற கீர்த்தனையின் வர்னமெட்டு.

இராகம்-தநாமக்கிரியை-தாளம்-சாபு.

பல்லவி.

கேள்காணுங் கேள்காணுமன்று வந்தசேதியைக்
கேள்காணுங் கேள்காணுமன்று

அநுபல்லவி.

வேள்வியொன்றுசெய்வதற்கு — விஸ்வாமித்திரருக்குத்
தாழ்விலாதபொன்கள்வேண்டுமாம் — யாகத்தினுக்குத்
தாழ்விலாதபொன்கள்வேண்டுமாம் — வந்தசேதியைக் (கே)

உன்னிடத்திற்கேட்டுவரச் — சொன்னதினுல்வந்தோமையா
என்னபதிற்சொல்கிறுய்மெய்யாய் — நீயுமிப்போது
என்னபதிற்சொல்கிறுய்மெய்யாய் — வந்தசேதியைக் (கே)

(முனி-வ-ம்.) ஹே கோவே விஸ்வாமித்ரமகாமுனிவர் ஏதோ வோர் பெரியயாகத்தைச் செய்யப் போகின்றாராம் அதற்கு வேண்டிய திரவியம் உன்னிடங்கேட்டுவரும்படி சொன்னர் அதற்காக வந்தோமேயன்றி வேறுவிஷேமில்லைமன்று திரவியங்கொடுப்பதற்கென் சொல்கின்றனை.

அரிச்சந்திரன் விருத்தம்.

சருவபாவங்களைசத் தக்கதோர் யாகஞ்செய்யப்
பொருளது வேணுமென்று பொறுமையாய்க் கேட்கவந்த
இருடிகாள் யாவுமுங்க ளிச்சையின் படியேபொன்கள்
தருகுவே னுதற்கேதேனும் தடையில்லை யறிகுவீரே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[இதுதானோவிரகமென்பது அறியாதிருந்தேன்வருந்துதே]

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இதுதானோ பெரியகாரியம் எவ்வளவு
வேண்டினுந்தருகிறேன் (இதுதானோ)

அநுபல்லவி.

யதிகள்வேள்விக்கு — நிதிகொடாமற்பின்
யாவருக்கீய்குவேன் பாவம்விட்டேகுவேன் (இது)

(அரி-வ-ம்.) ஆஆ முனிசிரேஷ்டர்காள் இதுதானா பெரிய காரியம் பாருங்கள் தங்களைப்போன்ற தவப்பற்றுடைய ஆன்றோர்கள் செய்யும் மகத்தான யாகாதிக்ருத்தியங்களுக்குத்திரவியங்கொடுத்துப் பாபதோஷங்களை நிவர்த்திசெய்து கொள்ளாது வேறென்ன காரியத்திற்குக் கொடுக்கப்போகின்றேன் ஆதலின் என்னிடமிருக்கும் பொருள்களில் எவ்வளவு வேண்டுமானாலுந் தருகின்றேன் ப்ரபுகாள்*ஹே ப்ரதான் நமது பொக்கிஷத்திலிருக்குந் திரவியங்களனைத்தையுங் கொண்டுவாருஞ் சீக்கிரம்.

(சத்-வ-ம்.) அப்படியே கொண்டுவருகின்றேன் மகராஜ்.

### முனிவர்கள் விருத்தம்.

பொன்னுமிப் போதுவேண்டாம் புரவலா விஸ்வாமித்ரர்
நன்னய மாகயாகம் நடத்திடுங் காலந்தன்னில்
அன்னவர் வந்துகேட்பா ரவரிடங் கொடுத்தாற்போதும்
முன்னுமோ ருறுதிவாக்கு மட்டுநீ சொல்லுவாயே.

(முனி-வ-ம்.) ஹே வேந்தே இப்பொழுது திரவியம் வேண்டுவதவசியமில்லை வேள்வி நடக்குங்காலத்தில் அந்த விஸ்வாமித்திரர் நேரில்வந்துபெற்றுக்கொள்வாராதலின் நீ கொடுப்பதா யுறுதிவாக்களித்தாற் போதுமானது கோவே.

### அரிச்சந்திரன் விருத்தம்.

இரவிமதி தெற்குவடக் காய்ச்சென்றாலும்
எழுகடலி னுள்ளஜலந் சுவறினாலும்



புவியதனின் மீன்முழுது முதிர்ந்திட்டாலும்
பட்டமாந் தளிர்த்தாலும் வேள்விக்காகத்
திரவியம்நான் றருகிறதா யுங்கள்முன்னுற்
செப்பியவாக் கெப்பொழுதுந் தப்பமாட்டேன்
அரவணிபுஞ் சிவபெருமான் பதத்தைப்போற்றும்
அருந்தவரே சத்தியமீ தறிகுவீரே.

(அரி-வ-ம்.) ஆஆ தவசிரேஷ்டர்காள் பாருங்கள் சந்திரசூரியோர் திசைமாறிச்சென்றாலும் கடல்நீர் முழுதும் வற்றிப்போனாலும் நக்ஷத்திரங்களனைத்தும் உதிர்ந்துவிட்டாலும் பட்டமரம் வேரோடித் தளிர்த்தாலும் யான் சொன்னவாக்குத் தப்பவேமாட்டேன் ஆதலின் யாகத்திற்குப் பொன்வேண்டும்போது சத்தியமாய்க்கொடுக்கச் சித்தமாயிருக்கின்றேன் ப்ரபுகாள் இதை யுண்மையாய் நம்புங்கள்.

(முனி-வ-ம்.) ஆனால் யாங்கள் சென்றுவருகின்றோம்.

(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள் இதோ வந்தனம் புரிகின்றேன்.

(முனி-வ-ம்.) கல்யாண் மன்னா.

(சத்-வ-ம்.) முனிசிரேஷ்டர்காள் மந்திரி வந்தனம்புரிகின்றேன்.

(முனி-வ-ம்.) கல்யாண் ப்ரதான்.

### பொது விருத்தம்.

நெறியது பிசகிடாத நிருபனு மரிச்சந்த்ரன்றன்
உறுதிவாக் கிடத்[illegible]ப்பெற்று வுயர்தவ முனிவரெல்லாம்
வெறியது கொண்டவிஸ்வா மித்திர ரிடத்திற்சென்று
பொறுமையாய் விபரமெல்லாம் புகன்றுள மகிழுவாரே.

(முனி-வ-ம்.) யாரடா இவிடத்திற் சிஷ்யன்.

(சிஷ-வ-ம்.) தேவே யிதோ காத்துக்கொண்டிருக்கின்றேன்.

(முனி-வ-ம்.) விஸ்வாமித்திரர் என்னசெய்கின்றார்.

(சிஷ்-வ-ம்.) ப்ரபுகாள் தங்கள்வரவை யெதிர்பார்த்துக்கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கின்றார்.

(முனி-வ-ம்.) நல்லது யாங்கள் வந்திருப்பதாகத்தெரிவி சீக்கிரம்.

(சிஷ-வ-ம்.) அப்படியே தெரிவிக்கின்றேன்*தேவே அயோத்திக்குச்சென்ற முனிவர்கள் வந்துவிட்டார்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அப்படியா வெகு சந்தோஷமுண்டாயிற்று நல்லது வரச்செய்வாயாக.

(சிஷ-வ-ம்) ப்ரபுகாள் வரும்படி யுத்திரவாகியிருக்கின்றது சென்று வாருங்கள்.

(முனி-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றோம்.

## முனிவர்கள்சொல் நாமாவளி.

[ராமமுகிப்ராணதபாலா தயய தயய தயய தயய ராம]

என்ற க்ருத்திகையின் வர்னமெட்டு.

இராகம்-பூரிகல்யாணி-தாளம்-ரூபகம்.

கண்ணி.

வந்தனமுந்தந்தோமையா மாதவமுனி காதனேயிதோ (வந்)

(முனி-வ-ம்.) தவசிரேஷ்டரே வந்தனம்புரிகின்றோம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் முனிவர்காள்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

தூயமா முனிவர்காளென் றுணைவர்காள் சொல்லக்கேளீர்
வாயினிற் பொய்சொல்லாத மன்னரிச் சந்திரன்பால்
நேயமாய் நீங்கள்சென்று நிகழ்ந்ததை யறியமாட்டேன்
காயதோ பழமோவுண்மை கழறுவீர் கழறுவீரே.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[என்னுளனைக்காணுமலே கண்ணிரண்டுந்தேடுதே]

என்ற இந்துஸபாவின் வர்னமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சென்றிருந்தசேதியென்ன செப்புவீர்காளெனத்தன்முன்னே.



40

அநுபல்லவி.

நன்றுநீதவென்றுமெய்யாய் நானறியச்சொல்லுமையா. ()

(விஸ்-வ-ம்.) ஆஆ முனிவர்காள் நீங்க ளரிச்சந்திரனிடத்திற்குச்சென்ற காரியமானது காயென்பதும் பழமென்பதும் யெனக்குத்தெரியவில்லை யாதலால் உண்மையைச் சொல்லுங்கள் முனிவர்காள்.

முனிவர்கள் விருத்தம்.

நன்னிலைத் தவங்கைகொண்ட நாதனே நாங்கள்சென்று
மன்னரிச் சந்த்ரன்முன்னே வழுத்தினேம் யாகத்துக்குப்
பொன்னது தருவதாகப் பொறுமையா யவனுமெங்கள்
முன்னிலை யினிலேசத்ய மொழியது கூறினனே.

(முனி-வ-ம்.) ஆஆ தவசிரேஷ்டரே தங்களுத்திரவின்படி அயோத்திக்குச்சென்று அரிசசந்திரனைக்கண்டு யாகத்திற்குப் பொன்கேட்டோம், அவன்கொடுப்பதாய் வாக்களித்தான், அந்தப்படியே யுறுதிமொழி வாங்கிக்கொண்டு வந்துவிட்டோம் தாங்க ளெந்தச்சமயத்திற்கேட்டாலுந் தருவதற்காக்ஷேபமில்லை ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அப்படியா யானதைப்பற்றி யத்யந்தசந்துஷ்டியடைந்தேன் முனிவர்காள்.

(முனி-வ-ம்.) யாங்கள் சென்றுவருகின்றோம் விடைதாருங்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள்.

(முனி-வ-ம்.) இதோ வந்தனம்புரிகின்றோம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண முனிவர்காள்.

பொது விருத்தம்.

கள்ளமது மனதினிலே குடியாய்நிற்குங்
கௌசிகனு முனிவரெல்லாஞ் சென்றபின்னர்
வள்ளலரிச் சந்திரனுந் தனதுமோச
வலைதனிலே யகப்பட்டுக் கொண்டானென்று

உள்ளமதில் மகிழ்கூர்ந்து வதிஷ்டன்றன்னை
யொருநொடியில் வெட்கமது கெடுப்பேனென்று
துள்ளிவிடை யேறுசிவ பெருமான்றன்னைத்
துதித்திட்டா னுடல்குலுங்கக் குதித்திட்டானே.

## விஸ்வாமித்திரர் சந்தோஷத்தரு.

[மோடியாலரா நாசாமிகுனாபை மோடியாலரா]

என்ற ஜாவளியின் வர்னமெட்டு.

இராகம்-காபி-ஏகதாளம்.

பல்லவி.

சிக்கிக்கொண்டானே அரிச்சந்த்ரனிப்பச்
சிக்கிக்கொண்டானே.

அநுபல்லவி.

தக்கதாய்நானேசெய்த பக்குவத்தாற்றானே (சிக்கி)
அந்தவதிஷ்டன்நாண வந்ததெனததிஷ்டம் (சிக்கி)
இப்பவேசெல்வேனொரு கற்பனையால்வெல்வேன் (சிக்கி)

(விஸ்-வ-ம்.) ஆஆ ஜெகதீசா இப்பொழுதல்லவோ நான்கோரிய எண்ணம் ஈடேறிற்று அவ்வரிச்சந்திரனென்பவன் எனது கபடயோசனையிலகப்பட்டுவேண்டிய திரவியங்கொடுப்பதாக முனிவர்களிடத்திற் பிரமாணஞ் செய்திருப்பதாய்க் கேள்விப்பட்டமையால் அவன் என்னிடத்திற் சிக்கிக்கொண்டானென்பதற்குச் சந்தேகமில்லை நான்கேட்கப்போகும் யோஜனைக்குத்தகுந்த திரவியம் அவ்வரசனிடமிருக்கமாட்டா அதனால் வதிஷ்டன்கூறிய சபதத்தைப் பங்கப்படுத்தி வெட்கங்கெடுப்பதற்கேதுவாயிருக்கும் இல்லாவிடில் விஸ்வாமித்ரனென்பதற்கு எனக்கென்ன யோக்யதையிருக்கின்றது ஆதலால் இப்பொழுதே யவ்வரிச்சந்திரனிடத்திற்குச் சென்று கணக்கில்லாதபொன்னைக்கேட்டுக் கொடாவிடிற் பொய்யனென்று வையமுழுதுஞ்சொல்லும்படி செய்துவருகின்றேனிந்தப் பகதார்.



# சத்தியவாக்கு .
# அரிச்சந்திரமகாராஜாவின்
## இரண்டாவது சபை.

(அரி-வ-ம்.) காவலாயுற்ற சேவகன் யாவன்.

(சேவ-வ-ம்.) பார்த்திபா அடியேன் காத்திருக்கின்றேன்.

(அரி-வ-ம்.) இமைப்பொழுதிலவ்விதுள் அமைச்சனையழைத்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) வழுத்தியபடியே யழைத்துவருகின்றேன் மகராஜ்.

சத்தியகீர்த்திசபைக்குவருதல்.

(சத்-வ-ம்.) தரணியோர்புகழும்புரவலா மந்திரிவந்தனம்புரிகின்றேன்.

(அரி-வ-ம்.) கல்யாண ப்ரதான சிரேஷ்டா யோசனைக்கிசைந்த ஆசனத்தமரும்.

(சத்-வ-ம்.) சாற்றியபடியே வீற்றிருக்கின்றேன்.

பொதுவிருத்தம்.

வதிஷ்டனை வெல்வதற்கு வகையது கிடைத்ததென்று
உதிஷ்டிரன் போலேசாந்த முற்றபோத் தியினில்வாழும்
அதிஷ்டவா னானவந்த வரிச்சந்த்ரன் கொலுவைநாடிப்
பதஷ்டகோ சிகனுநல்ல பண்புடன் வருகின்றானே.

(விஸ்-வ-ம்.) யாரடா இவ்விடத்திற் சேவகன்.

(சேவ-வ-ம்.) தேவே யிதோ காத்துக்கொண்டிருக்கின்றேன்.

(விஸ்-வ-ம்.) அரிச்சந்திர னென்னசெய்கின்றான்.

(சேவ-வ-ம்.) சிம்மாதனத்தில் வீற்றிருக்கின்றார் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) நல்லது விஸ்வாமித்திரர் வந்திருப்பதாகத் தெரிவிப்பாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே தெரிவிக்கின்றேன் ப்ரபு * மகராஜ் விஸ்வாமித்திரர் வந்திருக்கின்றார் ப்ரபு.

(அரி-வ-ம்.) அப்படியா ※ ஹே ப்ரதான் சிரேஷ்டா ஏதோ விஸ்வாமித்ரமுனிவர் நம்மைத் தேடிவந்திருக்கின்றாராம் ஆதலின் பாரும்.

வெண்பா.

பணியப் படுவார் புரங்கடைய ராகத்
தணிவில் களிப்பினுற் றாழ்வார்க் - கணிய
திளையான் முயற்கெனினுஞ் சேய்த்தன்றே மூத்தாள்
புணர் மூலைப் பேரகங் கொளல்.

அதாவது ஒருவன் தன்னாற் பணியத்தக்க பெரியோர்களை வாயலிற் காக்கவைத்துத் தனக்குரிய செல்வக்களிப்பினுல் எதிர்சென் றழையாமலிருப்பானாகில் அவனுக் கெவ்வளவு லக்ஷ்மிகடாக்ஷமிருப்பினும் அது நீங்கி மூதேவிவந் தணுகுவாளென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் அவரோ மகாபெரியவர் தவத்திற்சிறந்தவர் இங்குவந் தென்னோமாயிற்றோ தெரியவில்லை நல்லது எதிர்சென் றழைத்துவருவோம் வாரும்.

(சத்-வ-ம்,) அப்படியே வருகின்றேன் மகராஜ்.

அரிச்சந்திரன்சொல் நாமாவளி.

[மாதவமேயிவ்வுருவாய் வந்ததுமென்விதிவசமோ]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ரூபகம்.

கண்ணி.

மாமுனியேதங்களுக்கு வந்தனமுந்தேன்தோ
மகமேருவை நிகர்மாதவ
மடவார்மய விடர்மாறிய (மாமு)

(அரி-வ-ம்.) ஆஆ-தவசிரேஷ்டரே அரிச்சந்திரன் வந்தனம் புரிகின்றேன்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் மன்னா.

(சத்-வ-ம்.) முனிசிரேஷ்டரே மந்திரி வந்தனம்புரிகின்றேன்



(விஸ்-வ-ம்.) கல்யாண் ப்ரதான்.

(அரி-வ-ம்.) ப்ரபு இவ்வாசனத்தில் வீற்றிருங்கள்.

(விஸ்-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றேன் கோவே.

அரிச்சந்திரன் விருத்தம்.

முன்னவர் விரும்பிச்செய்த முழுத்தவ மகிமையோவென்
பன்னியின் கற்புநேர்மைப் பலனிதோ முனிவரேரோ
நன்னய மிகுமயோத்தி நகர்க்குநற் காலந்தானே
என்னரும் புண்யமோநீ ரிங்குவந் திடுவதற்கே.

அரிச்சந்திரன்சொல் தரு.

[ஒருமாதுவரச்சொன்னதென்னைத்தானே]
என்ற ட்ராமாஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னைத்தேடிவந்த தென்னமுனிநாதா.

அநுபல்லவி.

முனிநாதா குணபோதா மலர்ப்பாதா (என்னை)

(அரி-வ-ம்.) ஆஆ தவசிரேஷ்டரே இவ்வடியேனை யோர் பொருட்டாயெண்ணி யிங்கு ப்ராப்தமானகாரணம்யாது அதனை யொருவாறு திருவாய்மலர்ந்தருளவேண்டும் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

சொன்னசொற் றவறிடாத தோன்றலென் றுலகமெல்லாம்
பன்னாநற் கீர்த்திபெற்ற பார்த்திபா சொல்லக்கேளாய்
முன்னமென் சிஷரான முனிவர்கள் சிலபேர்கூடி
உன்னிடம் வந்தசேதி யுண்மையில் மறந்திட்டாயோ.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[நின்னுநம்மினானு நிஜமனயனு]

என்ற ஜாவளியின் வர்னமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

பொன்னுக்காகத்தானே நின்னைநாவந்தேனே

அநுபல்லவி.

முன்னம்நினைப்பூட்ட. முனிவர்கள்கேட்ட (பொன்)

(விஸ்-வ-ம்.) ஹே மன்னா யான்செய்யப்போகின்ற வேள்விக்காக எனது சிஷ்யர்களாகிய முனிவரிடத்திற் கொடுப்பதாக வாக்களித்த பொன்னுக்காக வந்தேனேயன்றி வேறுவிசேஷமில்லை வேந்தே.

அரிச்சந்திரன் விருத்தம்.

கன்னிய ராசைவிட்டுக் கடவுள்மீ தன்பூண்டு
மன்னிய தவமியற்றி மகிமையை யடைந்ததேவே
சொன்னில் தவறமாட்டேன் ஞாயவேள் விக்குமுன்னால்
என்னிடங் கேட்டபொன்னை யிக்ஷணந் தருகுவேனே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[பெண்ணேயுனக்கென்னகோபமடி கோபமடி]

என்ற வீரகுரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

பல்லவி.

தவமேயோருருவான நாதா முனிநாதா-பொன்
தருவதிற்றடையில்லை தாமரைப்பாதா. (தவமே)

அநுபல்லவி.

எவ்வளவுவேண்டுமதைச் சொல்லும் என்முன்சொல்லும் நான்
இப்பொழுதேதருவேன் எடுத்தநீர்செல்லும் (தவமே)

43



(அரி-வ-ம்.) ஆஆ முனிபுங்கவரே தாங்கள் நடத்தும் யாகத்திற்குவேண்டிய திரவியம் இவ்வளவென்று மதிப்பிட்டுச் சொல்லும் பக்ஷத்தில் இப்பொழுதே கொடுக்கத் தயாராயிருக்கின்றேன் ப்ரபு அதைப்பற்றி யோஜிக்கவேண்டுவதில்லை.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

பார்த்திபா கடல்சூழ்ந்தப் பாரினி லுனக்கெப்போதுஞ்
சீர்த்தியு மெனக்குநல்ல சித்தியு மெய்துதற்கு
நேர்த்திய தாகநானே நிகழ்த்திடப் போகும்வேள்வி
பூர்த்தியாய் முடிவதற்குப் பொன்றொகை சொல்லுவேனே.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[ஆதரித்தெனையினியாண்டருள்வாயே]

என்ற தோமிர்தசாரத்தின் வர்னமெட்டு.

இராகம்-பீல்-தாளம்-ஆதி.

பல்லவி.

சொல்லுகிறேனந்த விபரத்தைத்தானே
சுகமுடன்கேட்டருள் பூமானே. (சொல்)

அநுபல்லவி.

வல்லவனொருவன் வாரணமீது
வதிந்துகவண்கல்விண்ணில் எறிந்திடும்போது
செல்லுமத்தூரந் திரவியபாரஞ்
செம்மலேதந்தால்வேள்விக் குபகாரம் (சொல்)

(விஸ்-வ-ம்.) ஹே பூமா பாரா பலவந்தனை வோர்புருடன் யானையின்மீ தாரோகணித்துக் கரத்தினிற் கவண்கற்கொண்டு வீரமாய் ஆகாயமார்க்கத்திலெறிந்தால் அக்கல்லானது எவ்வளவு தூரஞ்செல்லுமோ அவ்வளவுயரந் திரவியங்கொட்டிக் கொடுக்கும்பக்ஷத்தில் எனது யாகஞ் சம்பூரணமாய் முடிவுறும் வேந்தே.

(அரி-வ-ம்.) இவ்வளவுதானா நல்லது அப்படியே தருகின்றேன் ப்ரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

தநியறிந் துரைக்குமந்த்ரி தவமுனி நாதருக்கு
மதகரி மீதிலேயோர் வல்லவ னேறிக்கொண்டு
இதமுடன் விசையாய்விண்ணி லெறிந்திடுங் கவண்கற்றூரம்
நிதியது குவித்தேயிந்த நிமிஷத்தி லளித்திடீரே.

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் முனிசிரேஷ்டர் சொன்னபிரகாரம் நமது பட்டத்துயானையைக் கொண்டுவந்து அதின்மீது பலிஷ்டனுருவனையேற்றிக் கவண்கற்கொண்டு விண்ணோக்கி யெறியும்படி செய்து அக்கல் எவ்வளவுதூரஞ் செல்லுமோ அவ்வளவுயரத்திற்கு நமது பொக்கிஷச்சாலையிலிருக்குந் திரவியங்களை யெடுத்துக் குவித்து இம்முனீஸ்வரருக்குக் கொடுத்துவிடும் ப்ரதான்.

(சத்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் மகராஜ்.

சத்தியகீர்த்தி விருத்தம்.

வரும்பல வின்னதென்று மன்னநி னுரைத்துசொல்லும்
அருந்தவ முனியேயெங்க ளண்ணலி னிடத்திப்போது
தரம்பெறு யாகத்திற்குத் தரும்படி கேட்டுக்கொண்ட
பெரும்பொருள் குவித்துவிட்டேன் பிரியமாய்க்கைக்கொள்வீரே

(சத்-வ-ம்.) ஆஆ தவசிரேஷ்டரே தங்கள் மனோரம்யப்படி திரவியங் குவித்துவிட்டேன் ப்ரபு எடுத்துக்கொள்ளுங்கள்.

பொது விருத்தம்.

இப்பெரிய தனக்குவிய லிவனிடத்தில்
இருந்திடவே மாட்டாதென் றெண்ணியிந்தச்
சற்பனையால் வென்றுபொய்ய னாக்கிவைக்கச்
சந்தோஷங் கொண்டிருக்கும் வேளை தன்னிற்
கற்பனையாய் நான்கேட்ட படியேபொன்னைக்
கண்ணெதிரே குவித்துவிட்டா னதையாலே
சொற்பழுதாய்ப் போச்சுதென்று விஸ்வாமித்ரன்
சோருவான் பின்னுமனந் தேருவானே.



விஸ்வாமித்திரர் ஆலோசனை.

ஆஆ என்ன விபரீதமாயிருக்கின்றது நானேதோ இவ்வரிச்சந்திரனிடத்தில் இவ்வளவு திரவியமிருக்கமாட்டாது இக்காரணத்தினாலேயே பொய்யனாக்கி விடலாமென்பதாகச் சந்தோஷங்கொண்டுவந்தேன் அங்ஙனமிருக்க இப்போது கேட்டபடியே பொன்னைக்கொடுத்துவிட்டானே யினியென்செய்கின்றது நல்லது யானிப்போது இந்தத்திரவியத்தை யெடுத்துக்கொண்டு போகும்பக்ஷத்தில் மறுபடி யிவனிடத்திற்கு வரவேண்டிய ஞாயமேற்படமாட்டாதாகையால் இத்திரவியத்தை யிவனிடத்திலேயே யொப்பிவைத்துவிட்டுச் சென்று அப்பால் இவனைப் பொய்யனாக்கும் விதத்தை யாலோசித்து எவ்விதமாயாவது சபதத்தை நிறைவேற்றி விடுகின்றேனென்று நினைத்தப் பக்தார்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

புத்தியில் மிகுந்தநல்ல புரவலா சொல்லக்கேளாய்
சித்திசேர் யாகத்திற்குத் திரவியம் பெற்றுக்கொண்டேன்
மொத்தமாய் மூட்டைகட்டி முத்திரை யிட்டுத்தாரேன்
பத்திர மாகவுந்தன் பாதுகாப் பிலில்வைப்பாயே.

விஸ்வாமித்திரர் சொல் தரு.

[எந்துகுவாடலவாடு மந்திமனை]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்னவனே பொன்னையிங்கே
வைத்துப்போகிறேன். (மன்)

அநுபல்லவி.

நன்னயமுள நாளைப்பார்த்து
நான்வருகிறேன். (மன்)

(விஸ்-வ-ம்.). ஹே மன்னா மனப் பூர்த்தியாய் நீ கொடுத்த இப்பொன்னை நான் பெற்றுக்கொண்டமையால் என்சொந்தமாயிற்று யானிதனால் செய்ய நல்லசுபதினத்தையேற்படுத்திக்கொண்டு

வந்து இந்தத் திரவியத்தை யெடுத்துப்போகின்றேன் அதுவரையி லும் உனதுபாதுகாப்பில்வைத்திருப்பதற்காக எனதுடையாளமிட் டுத் தருகின்றேன் கோவே வைத்திருப்பதற்கென்சொல்கின்றனை.

அரிச்சந்திரன் விருத்தம்.

தடுத்துநான் சொல்வதாகத் தவத்தரே யெண்ணவேண்டாம்
அடுத்துவந் தவர்களுக்கிவ் வவனியிற் றானமாகக்
கொடுத்தபொன் றன்னைவாங்கிக் கொள்வது குற்றமாகும்
எடுத்துமதிருப்பிடத்திற் கேகுவீர் தயவுகூர்ந்தே.

---

(அரி-வ-ம்.) ஆஆ தவசிரேஷ்டரே பாருங்கள் ஒருவருக்குத் தானமாகக்கொடுத்த பொருளை மறுபடியும் வாங்கிக்கொள்வதா னது மகா பாதகத்திற்கிடமாகுமாதலால் என்மீது கோபமின்றி யெடுத்துப்போய்த் தங்க ளிருப்பிடத்தில் வைத்துக்கொள்ளுங்கள் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

என்னிருப் பிடமோகான மியங்குவோ ரரக்கர்கூட்டம்
பொன்னதை யங்குவைத்தாற் போய்விடு மாகையாலே
மன்னவா நீயுமிங்கே வைத்திருந் தந்தவேள்வி
தன்னைநான் செய்யும்போது தருவதே புண்யமாமே.

---

(விஸ்-வ-ம்.) நானு செய்யமேல நீ யிப்போது பொன்னைக் கொ டுத்துவிட்டதினாற் யாதொருபலனில்லை எனெனில் நானிருப்பது கானகம் அங்கு சஞ்சரிப்பவர்களெல்லாம் ராக்ஷதபிண்டங்கள் யானிந்தப் பொன்னையெடுத்துப்போய் எனதிருப்பிடத்தில் வைப் பேனாகில் அன்றே கொள்ளையாடிப் போய்விடுவார்கள் அதனால் வேள்விக் கிடையூறுண்டாகுமாதலால் யான் வேள்விசெய்யுஞ் சம யத்தில் வந்து கேட்கும்போது கொடுப்பதினால் உனக்கு மிகுந்த புண்ணியங்கிடைக்கும் வேந்தே.

(அரி-வ-ம்.) ஆனைப்படியே வைத்துவைக்கின்றேன் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) ஆனால் இத்திரவியத்தை மூட்டைகட்டி யெனது முத்திரை போட்டுவைக்கின்றேன்.

(அரி-வ-ம்.) அப்படியே போட்டுவையுங்கள் ப்ரபு.



(விஸ்-வ-ம்.) இதோ மூட்டைகட்டி முத்திரைபோட்டுவிட் டேன் யான் சென்றுவருகின்றேன் பூமா.

(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள் ப்ரபு இதோ வந்தனம்புரிகின்றேன்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் கோவே.

(சத்-வ-ம்.) ப்ரபு வந்தனம்புரிகின்றேன்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் மந்திரி.

---

பொது விருத்தம்.

அளித்தபொருளதனையந்த வேந்தன்பாலே
யடைக்கலமாய் வைத்துவந்தே னவன்றேசத்தில்
முளைத்தபயிர் களைமிருகம் பறவையாலே
முழுதுமழித்திடச்செய்து பொன்னையெல்லாம்
இளைத்தகுடி களுக்கீந்து சோர்ந்தநேரம்
என்பொருள்தா வென்றபொழுதவ னென்று
நெளித்தசடைக் கோசிகனு மெண்ணித்துக்கம்
நீக்குவான் மனக்கண்ணால் நோக்குவானே.

---

விஸ்வாமித்திரர் துராலோசனை.

ஆஆ வேள்விக்காகக் கொடுத்த பொன்னை அவ்வரிச்சந்திர னிடத்திலேயே பொப்பிலைவத்து வந்துவிட்டமையால் இதுமுத லாக மிருகாதிபறவைகளையேவி அவ்வரிச்சந்திரனுடைய நாடுநக ரங்களிலுள்ள (காடு-தோட்டம்-தோப்பு-வயல்-நந்தவன) முதலா னவைகளில் முளைத்திருக்குந்தாவராதி புற்பூண்டு முதலான யா வையும் அழித்துக்கொண்டேயிருக்கும்படி செய்யும்பக்ஷத்தில் குடிகள் நைந்துவிடுவார்கள் அவர்களைப் பரிபாலிக்கும்பொருட்டு அரசன் பொக்கிஷச்சாலையிலுற்ற திரவியங்களைத்தாமெடுத்துத் தாராளமாய்ச்செலவிடுவான் போதாதசமயத்தில் நான் அடைக்க லமாகக் கொடுத்துவந்திருக்கின்ற யாகப்பொன்னையுமெடுத்துச் செலவுசெய்வான் அந்தச் சமயமறிந்து போய்த் திரவியத்தைக் கொடுக்கும்படி பிடித்துக் கசக்கினாற் பெய்யிறுப்பென்று விழிப் பான் அப்போதெப்படியாவது பொய்சொல்லும்படியான தந்தி

ரஞ்செய்துவிடுவேனெனதலின் இப்பொழுது மிருகஜாதிகளையும் பக்ஷி ஜாதிகளையும் வரும்படி மந்திரஞ்ஜெபிக்கின்றே னிந்தப்பக்தார்.

பொது விருத்தம்.

அறந்தமா முனியுங்கொண்ட குழ்ச்சிபோல் மனத்தின்கண்ணைத்
திறந்தநல் வேளை தன்னிற் சிறந்தகா னகத்தில்வாழும்
பறந்திடும் பக்ஷிஜாதி பற்பல மிருகங்கூடி
மறம்பெறு முனியைத்தேடி வந்தடி பணிந்ததன்றே.

மிருகங்கள் பக்ஷிகள்வருந் தரு.

[வாசுதேவனெனுந்தாருமெந்தனை]
என்ற கீர்த்தனையின் வர்னமெட்டு.
இராகம்-கல்யாணி-ஏகதாளம்.

கண்ணிகள்.

மிருகபறவைகள் அதி வேகத்தின்மேலே
வருகுதேயிதோ முனி மந்திரத்தாலே
காடிபுலிகளுங் கதிர் கலையுமெலிகளும்
நரியும்பன்றியுஞ் செந் நாய்களன்றியும்
சிங்கம்யானையும் முயல் சிவங்கிப்பூனையுந்
துங்கமான்களும் பல துஷ்டவான்களும்
குயில்கிளிகளுஞ் சில மயில்களளிகளும்
ஒயில்சேர்டேகையும் வல் லூறுகாகையும்
அன்னம்வெண்புறு நல் லன்றில்செம்புறு
இன்னுங்காடையும் அதற் கேற்றபேடையும்
கருடன்கௌதாரி கருங் காகம்வெண்ணுரை
குருவிகொக்குகள் பல கூடியொக்கவே (மிரு)

(மிருகங்கள் வசனம்.) தேவே மிருகஜாதிகள் வந்தனம்புரிகின்றோம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் மிருகஜாதிகாள்.

(பக்ஷிகள் வசனம்.) தேவே பக்ஷிஜாதிகள் வந்தனம்புரிகின்றோம்.



(விஸ்-வ-ம்.) கல்யாண் பக்ஷிஜாதிகாள்.

(மிருகபக்ஷிகள் வசனம்.) எங்களை வரும்படி மந்திரஞ்செபித்தகாரணம் யாது ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

விலங்குகாள் விண்ணின்மீது மேவுபக்ஷிக ளேயானு
குலந்தனி லுதித்தோனுங் கோசலை நாட்டிலுள்ள
நிலங்களில் விளைந்தயாவும் நிலைகெடும் படியதாகப்
பலன்களில் லாமல்நாசம் பண்ணியங் கிருந்திடீரே.

(விஸ்-வ-ம்.) ஹே மிருகாதிபக்ஷிகாள் பாருங்கள் நீங்களிப்பொழுதே அயோத்தியாபுரிக்கரசனாகிய அரிச்சந்திரனுடைய கோசலைநாட்டுக்குச்சென்று அங்குற்ற (காடு - தோட்டம் - தோப்பு-வயல்-நந்தவன) முதலானவைகளிலுற்ற தாவராதி புற்பூண்டு முதலியவைகளனைத்தையுஞ் சல்லிவேரின்றிச் சின்னபின்னமாயழித்து நாசஞ்செய்துக்கொண் டிருக்கவேண்டுந் தெரியவருமா.

(மிருக-பக்ஷி-வ-ம்.) உத்திரவின்படியே தும்சப்படுத்துகின்றோம் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) ஜல்தியிற் செல்வீர்களாக.

(மிருக-பக்ஷி-வ-ம்.) இதோ செல்கின்றோம்.

# சத்தியவாக்கு
# அரிச்சந்திரமகாராஜாவின்
## மூன்றுவது சபை.

(அரி-வ-ம்.) காவலாயுற்ற சேவகன் யாவன்.

(சேவ-வ-ம்.) பார்த்திபா அடியேன் காத்திருக்கின்றேன்.

(அரி-வ-ம்.) இமைப்பொழுதினுக்குள் அமைச்சனை யழைத்துவருவாயாக.

(சேவ-வ-ம்.) வழத்தியபடியே யழைத்துவருகின்றேன் மக

## சத்தியகீர்த்தி சபைக்கு வருதல்.

(சத்-வ-ம்.) சின்னாட்புகழ் மன்னவா மந்திரி வந்தனம்புரிகின்றேன்.

(அரி-வ-ம்.) கல்யாண் பந்தான் சிரேஷ்டா யோசனைக்கிசைந்த ஆசனத்தமரும்.

(சத்-வ-ம்.) சாற்றியபடியே வீற்றிருக்கின்றேன்.

### போது விருத்தம்.

பன்னவ னேவிவிட்ட பறவைகள் மிருகமெல்லாம்
நண்ணியே யந்தநாட்டை நாசமுஞ் செய்யும்போது
கண்ணினாற் கண்டுசிந்தை கலங்கிய குடிகளெல்லாம்
அண்ணலை யிடத்திற்சொல்லி யழுதிட வருகின்றாரே.

## குடியானவர்கள் வருந் தரு.

[சன்னதிகண்டுகொண்டேன் கண்டவுடனே
சௌபாக்யம்பெற்றுக்கொண்டேன்]
என்ற கவிக்குஞ்சரமையர் கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-சாபு.

பல்லவி.

குடியானவர் வந்தாரே மன்னன்சபைக்குக்
குடியானவர் வந்தாரே

அநுபல்லவி.

அடியானமதகரி கொடியானபுலிகரி
அஷ்டமிருகமற்றும் நஷ்டஞ்செய்ததையுற்றுக் (கு)

(குடியானவர்கள் வசனம்) யாரையா இவிடத்திற் சேவகர்.

(சேவ-வ-ம்.) என்காணுங் கேட்கின்றீர்கள்.

(குடி-வ-ம்.) ஐயா மகராஜா என்னசெய்கின்றார்.

(சேவ-வ-ம்.) சிம்மாதனத்தில் வீற்றிருக்கின்றார்

(குடி-வ-ம்) நல்லது நாட்டுக்குடிகள் வந்திருப்பதாகத் தெரிக்கவேண்டும்.



48



(சேவ-வ-ம்.) அப்படியேதெரிவிக்கின்றேன் * மகராஜ் நமது நாட்டுக் குடியானவர்கள் ஏதோ கார்யார்த்தமாகச் சமுகத்தை நாடிவந்திருக்கின்றார்கள் மகராஜ்.

(அரி-வ-ம்.) அப்படியா நல்லது விட்டுவிடுவாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் * ஹே குடிகாள் வரும்படி யுத்திரவாகியிருக்கின்றது சென்று வாருங்கள்.

(குடி-வம்.) அப்படியே சென்றுவருகின்றோம் * மகராஜா குடிகள் வந்தனம்புரிகின்றோம்.

(அரி-வ-ம்.) கல்யாண் குடிகாள் எங்குவந்தீர்கள் என்ன விசேஷம்.

குடியானவர்கள் விருத்தம்.

படிமிசை தருமநீதிப் படியர சியற்றித்தேசக்
குடிகளைப் பாதுகாக்குங் கொற்றவா சொல்லக்கேளீர்
அடிமைகட் கிதுநாள்மட்டு மவஸ்தையே வந்ததில்லை
இடிவிழுந் தாற்போலிப்போ திடறது நேர்ந்ததையா.

குடியானவர்கள்சொல் தரு.

[கருக்கினில் வளர்ந்தோங்கும் ஓ ஏகாம்பரியே]

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

விதைத்தபயிர்களெல்லாம் வீணாகப்போச்சுதே

அநுபல்லவி.

சதைத்தகரிபன்றி யெங்கள் தக்கபுலஞ்சென்று அங்கு
தழைத்துமிகச் செழித்தபயி ரழித்துப்போடுதே (வி)

சரணம்.

எப்படிப்பிழைப்பது இறைப்பணமளிப்பதுஐயோ
எங்கள்பெருமானேயிந்தச் சங்கடத்தைத்தானே யினி
யென்றுமவரா நன்றுமுறை யொன்றுசெய்குவீர் (வி)

(குடி-வ-ம்.) ஆஆ மகாராஜா தங்கள் கிருபையினால் நாங்களின்று காலபர்யந்தம் யாதொரு குறைவுமில்லாமல் வாழ்ந்துவந்தோம் அங்ஙனமிருக்க அப்பேர்க்ராமத்து நாட்டிலுள்ள (காடு-தோட்டம்-தோப்பு-வயல்-நந்தவனம்) முதலியவைகளிலுள்ள மரம் செடி கொடி பயிர் பச்சை முதலானயாவற்றையும் மிருகாதிபக்ஷிகள் அனுதினமும் அழித்துத் தும்ஸப்படுத்திக்கொண்டிருக்கின்றன அவைகளைத் துரத்தியோட்டுவதற்காகச் செல்லும் ஜனங்களைச் (சிங்கம்-யானை-புலி) முதலாகிய துஷ்டமிருகங்கள் . சம்மரித்துவிடுகின்றன மகாராஜா இப்படிச்செய்தால் யாங்களெப்படிக் காலக்ஷேபஞ்செய்வோம் தங்களுக்கெவ்வாறு வரிச்செலுத்துவோம் ஆகையால் இந்தத்துன்பத்தை நிவர்த்திசெய்யாவிடில் யாங்களூரைவிட்டோடிவிடுவோம் ப்ரபு.

(அரி-வ-ம்.) ஆஆ குடிகாள் உங்களுக்கிவ்வித கஷ்டஞ் சம்பவித்திருப்பதாக எனக்கிதுவரையிலுந் தெரியவில்லையே.

(குடி-வ-ம்) அந்தத்துன்பத்தை யெங்களாற் சகிக்கமுடியாது மகாராஜா.

அரிச்சந்திரன் விருத்தம்.

குடிகளே பயப்படாதீர் கொடியமா மிருகமெல்லாம்
மடியவே வேட்டையாடி மனப்பெருங்கவலைதீர்ப்பேன்
மிடியது கொண்டநீங்கள் விதிப்படி யெனக்குநல்குங்
கடமையீராண்டினுக்குக் கட்டிட வேண்டாம்போவீர்.

(அரி-வ-ம்.) ஹே பிரஜைகாள் யானிப்பொழுதே வேட்டைக்குச்சென்று அம்மிருகாதி வம்சங்களைக் கருவறுத்துவிடுகின்றேன் நீங்களதைப்பற்றிக் கவலைப்படவேண்டுவதில்லை இன்னுமிரண்டுவருஷத்திற்குநானக்குச் செலுத்தவேண்டிய வரியை நீங்கள் கொடுக்கவேண்டாம் குடிகாள்.

(குடி-வ-ம்) தங்களுத்திரவின்படியே நடந்துகொள்கின்றோம் மகாராஜா.

(அரி-வ-ம்.) ஹே பிரதான் நமது குடிகளெல்லாம் பயிர்களை மிருகஜாதிகளால் கெட்டுப்போகவிட்டுப் போஜனத்துக்கு வகையில்லாமல் முகவாட்டத்துடன் நம்மிடத்திற்கு வந்திருப்பதால் அவர்களுக்கு வேண்டியதிரவியங்கொடுத்தனுப்பும்படி செய்வீராக.



(சத்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் மகாராஜ * அடா சேவகா இக்குடிகளையழைத்துக்கொண்டு பொக்கிஷாதிபதியிடஞ்சென்று இவர்களுக்குவேண்டிய சன்மானங்கள் கொடுத்தனுப்பும்படி சொல்லிவருவாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே செய்துவருகின்றேன் ப்ரபு * குடிகாள் வாருங்கள் செல்வோம்.

(குடி-வ-ம்-) இதோ வருகின்றோமையா.

# வேட்டஞ்செய்காண்டம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

நாட்டிலின் றுள்வரைக்கும் நன்மையே விளைந்திருக்கக்
காட்டினில் மிருகஜாதி கதிர்களை யழிக்குதென்று
வாட்டமாய்க் குடிகள்சொன்ன வார்த்தையைக்கேட்டோமன்றோ
வேட்டைக ளாடியன்றோர் விசனத்தைத் தீர்ப்போமந்திரி.

அரிச்சந்திரன்சொல் தரு.

[சின்னுபாசி எட்ல உந்தரு]

என்ற க்ருத்திகையின் வர்ணமெட்டு.

இராகம்-பலஹம்ஸா-தாளம்-ஆதி.

பல்லவி.

வேட்டைக்கேக வேணுமந்த்ரி

அநுபல்லவி.

காட்டினில்வல் கரிமுதற்கொல்ல (வேட்)

சரணம்.

வில்லியர்யாரும் விரைவினிற்சேரச்
சொல்லுவீர்குடிகள் துயரதீர (வேட்)

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் சிரேஷ்டா பாரும் நமது குடிகளினுடைய நிலங்களிற் சஞ்சரித்துப் பயிர்முதலானவைகளைப் பலிகொள்ளும் துஷ்டமிருகாதிகளைக் கருவறுக்க வேட்டைக்குச் செ

ல்லவேண்டியதிருக்கின்றமையால் நமது நகரத்திலுள்ள வேடர்வில் லியர்களை விரைவினி லழைத்துவரும்படி செய்வீராக.

(சத்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் மகாராஜ். அடா சேவகா நமது நகரத்து வேடர்வில்லியர்களை யதிசீக்கிர மழைத்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே யழைத்து வருகின்றேன் ப்ரபு.

பொது விருத்தம்.

சல்லட மிடையணைத்துத் தருந்தசங்குகள் பிணைத்துத்
துல்லிய மீசைதன்னைச் சுருட்டியே முறுக்குமேற்றி
வில்லது கையிற்கொண்ட வேடுவ ரெல்லாங்கூடி
வல்லவ னரிச்சந்த்ரன்றன் வளர்சபை வருகின்றாரே.

## வேடர்கள்வருந் தரு.

[செலியாசாலுனே]

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம்-வசந்தம்-தாளம்-சாபு.

பல்லவி.

வேடர்கள் வந்தாரே யந்த வேந்தன்சபைநாடி
வேடர்கள்வந்தாரே.

அநுபல்லவி.

கேடயங்கத்திதண்டு கெட்டிவில்லுங்கொண்டு (வேடர்)

சரணம்.

சல்லடந்தனைத்தொட்டுத் தருந்தசங்குகள்விட்டு
வல்லபமுடன்மீசை வாகாய்முறுக்கிட்டு. (வேடர்)

(வேடர்கள் வசனம்.) மகாராஜ் வேடர்கள் வந்தனம்புரிகின்றோம்.

(அரி-வ-ம்) கல்யாண் வேடர்காள்.

(வேட-வ-ம்.) ப்ரபு வந்தனம்புரிகின்றோம்.

(சத்-வ-ம்.) கல்யாண் வீரர்காள்.



(வேட-வ-ம்.) எங்களை யழைத்துவரும்படி யாக்ஞாபித்தருளியகாரணம் யாது மகாராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

வேடர்வில் லியரோகேளீர் மேன்மைசேர் நமதுநாட்டுக்
காடுகள் தனிலேயுள்ள கதிர்களை மிருகஜாதி
கூடியே யழிப்பதாலே கொன்றிட வேண்டும்நீங்கள்
ஓடுவீர் கானம்பின்னால் நாங்களும் வருதுவோமே.

(அரி-வ-ம்.) ஹேவேடர்காள் பாருங்கள் நமது நாட்டிலுள்ள விளைப்பயிர்களனைத்தையும் மிருகஜாதிகள் புசித்து விடுவதாகத் தெரியவருவதால் இப்போது வேட்டைக்குச்செல்லவேண்டிய நிமித்தம் உங்களை வருவிக்கலாயிற்று நீங்கள் வேட்டைநாய்களுடன் முன்னோடி வனத்திற்குச் செல்லுங்கள் யானும் உங்களுக்குப் பலமாய்ச் சேனைசைன்யங்களுடன் பின்பற்றி வருகின்றேன் வேடர்காள்.

(வேட-வ-ம்.) அப்படியே யிதோ செல்கின்றோம் மகாராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

விநயமாய் வுர்சற்காக்கும் வீரசே வகனேகேளாய்
புனமதில் மிருகதுன்பம் போக்கிட நாங்களிந்தத்
தினமதில் வேட்டையாடச் செல்வதா லெனக்குநல்ல
மனைவியா யிசைந்தசந்த்ர மதிதனை யழைத்துவாடா.

(அரி-வ-ம்.) அடா சேவகா நீ யந்தப்புரஞ்சென்று என்னது பட்டமகிஷியாகிய சந்திரமதியையதிசீக்கிரமழைத்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே யழைத்துவருகின்றேன் மகாராஜ்.

பொது விருத்தம்.

செம்பொனொளிர் வர்ணப்பட் டுடைவிரித்துச்
சிற்றிடையி லொய்யார மாய்த்தரித்து
மின்பரவு நவரத்ந பரணம்பூட்டி
வேல்விழிக்குக் கோலமுடன் மையுந்தீட்டி

வம்பணிந்த கும்பதனங் கனுக்குலுங்க
மதிநிகர் வதனமது மிகத்துலங்கச்
சம்ப்ரமமா யரிச்சந்த்ரன் கொலுவைநாடிச்
சந்திரமா மதிமாது வந்திட்டாளே.

## சந்திரமதிவருந் தரு.

[வாடிநிற்பதேது காரணமோ]

என்ற ஸ்ரீராமாத்தருவின் வர்ணமெட்டு

இராகம்-கமாஸ்-ஜம்பை-தாளம்.

பல்லவி.

சந்த்ர மதி மாது வந்தனளே அரிச்
சந்திரனுக் கேயிசைந்த சுந்தரவதியாகிய
சந்த்ர மதி மாது வந்தனளே,

அநுபல்லவி,

விந்தைநெறிமேனியெங்குஞ் சுந்தரப்பணிகள்மின்ன மின்ன மின்ன மின்ன யாரும்
அந்தமன்மதவேளுக்கு சுந்தரிதியிவளென்னச் (சந்)
செம்பொனத்சரிகைச்சேலை சிற்றிடையிலசைந்தாட ஆட ஆட ஆட இரு
பம்பரந்தனைநிகர்த்த கும்பதனங்குதிபோடச் (சந்)
போகியர்கள்கண்டுநிலை யேகிமயலதுமூழ்க மூழ்க மூழ்க மூழ்க படி
யாகியவெழிலுடனே யன்னநடையாய்நடந்து

## சந்திரமதி அரிச்சந்திரனைப்போற்றல்.

விருத்தம்.

மன்னவர் மன்னுபோற்றி வசிஷ்டரின் சிஷ்யபோற்றி
சொன்னசொற் றவறிடாத சுகிர்தமெய் வசனுபோற்றி
அன்னிய மாதரானை யகற்றிய விரதாபோற்றி
தன்னைய சுமளிக்கும் நாயகா போற்றிபோற்றி,



(சந்திரமதி வசனம்) ப்ராணநாத் அடியாள் வந்தனம்புரிகின்றேன்.

(அரி-வ-ம்.) கல்யாண் ப்ராணகாந்தி.

சந்திரமதி விருத்தம்.

சுந்தர மிகுந்தநாதா தோழமை ருடனோராலும்
புந்தியர் புகழுநல்ல பொன்னார மனையிற்றனே
சந்ததம் நடக்கும்வேலை தனைமுடித் திருக்கும்போது
எந்தனை யழைத்ததிசதி யென்னதென் றியம்புவீரே,

## சந்திரமதிசொல் தரு.

[மின்னுகம்பீரனு நிரஜனயனு]

என்றஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னைக்கூட்டிவரச் சொன்னதென்னநாதா

அநுபல்லவி.

சொன்னம்நிகர்தேகா சுந்தரவைபோகா (என்னை)

(சந்-வ-ம்). அந்தப்புரத்திலிருந்த என்னையழைத்துவரும்படி யாக்ஞாபித்தருளியகாரணம் யாது ப்ரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

புனத்தினிற் பயிரைச்சேதம் புரிந்திடுமிருகஜாதி
யினத்தையுந் துரத்திவேட்டை யாடநான் செல்வதாலே
வனத்தினி லுள்ளநல்ல வளப்பம்நீபார்க்கவெண்ணி
யுனைத்தரு வித்தேனிந்த வுண்மையை யறிவாய்பெண்ணே.

(அரி-வ-ம்) ஹே ப்ராணசகி பார் யானின்று வனவேட்டையாடச்செல்லப் போகின்றேன் நீயுங் கூடவரும்பக்ஷத்தில் அங்குற்ற வேடிக்கைவிநோதங்கள் பார்த்துவருவாயென்றெண்ணியுன்னை வரவழைத்தமையன்றி வேறெவ்விசேஷ மில்லை ஹே நாயகி நீயும் வருகின்றனையாவென்ன.

(சங்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் ப்ராணநாத்.

(அரி-வ-ம்) ஹே ப்ரதான் சிரேஷ்டா சேனைசைன்யங்களை யழைத்துக்கொண்டு கானகஞ்செல்வோம் வாரும்.

(சத்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் மகராஜ்.

பொதுவிருத்தம்.

மன்றிலிருந் தரசனுமந் திரியுஞ்சந்த்ர
மதியுமிரு சேனைகளும் வனத்துக்கேகி
நன்றியுள குடிகளது பயிர்களியாவும்
நாசமது செய்தமகா கொடியதுஷ்டப்
பன்றிகரி கரடிபுலி சிங்கமென்னும்
பலமிகுத்த மிருகவதை செய்யமுன்னுற்
சென்றிருந்த வேடுவரைக் காணுமென்று
தேடினார் கண்டுடனே கூடினாரே.

அரிச்சந்திரன் விருத்தம்.

தந்திர மிகுந்தமந்த்ரி தளங்களை யழைத்துக்கொண்டு
சொந்தமா நகரைவிட்டுத் துரிதமாய்த் தடங்கடந்து
விந்தைசேர் வனங்களெல்லாம் வேடரை தேடிப்பார்த்தோம்
இந்தநல் வனத்திற்றனே யிருக்கிறு ரிருக்கிறாரோ.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[வந்தனமந்தந்தேனிதோ பந்தகாசமாய்]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவனம் வந்துவிட்டோ மெந்தன்மந்திரி.

அநுபல்லவி.

முந்திவேடர்கள் வந்துகூடியே
விந்தையாகவே வேட்டையாடிய (இந்த)



(அரி-வ-ம்.) ஆஆ-பிரதான் சிரேஷ்டா நாமோ சேனைகளுடன் நகரத்தைவிடுத்து அனேகதூரங்கடந்து இவ்வாரண்யத்திற்கு வந்தோம் நமக்கு முன்னுகவந்த வேடர்களும் இதோ வேட்டையாடுகின்றார்களாதலால் நாமும் இவர்களுடன்கலந்து வேட்டையாடுவோம் ப்ரதான்.

(சத்-வ-ம்.) அப்படியே யாடுவோ மகராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

வேடரே சொல்லக்கேளீர் வெகுதூலை சுற்றிச்சுற்றித்
தேடினேம் விலங்குயாதுந் தென்படவில்லையிந்த
நீடிய வனத்தில்வந்தோம் நீங்களு மிருக்கக்கண்டோம்
நடிலா மிருகமிங்கே யிருக்குது பார்த்திடீரே.

---

## அரிச்சந்திரன் வேட்டையாடுந் தரு.

[இது தானேனுவிரகமென்பது அறியர்திருந்தேன்வருத்துதே]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இதோபாரீர் மிருகஜாதிகள் எய்வோம் வதை
செய்வோம் வேடரே (இதோ)

அநுபல்லவி.

எதிரிலுஞ் சில
புதரிலுஞ் சில
போகுது வேகம தாகவ னேகமாய் (இ)

சரணம்.

கரடி புலி சிங்கம்யானை கத்துதேயதோ பாரீர்யானைக்
யாடலாம் வலை
காடெலாம் வேட்டை
கட்டுவீர் கிட்டியே வெட்டுவீர் திட்டமாய் (இ)

---

(அரி-வ-ம்.) ஹே வேடர்காள் இதோ (கரடி-புலி-சிங்கம்-யானை-மான்) முதலான மிருகஜாதிகளானது எதிரிலும் புதரிலுமிருந்து அதோ செல்கின்றன. அவைகளோடுதற்கு வழியின்றி நான்குதிசையிலும் இருப்பு வலைகட்டி நெருங்கிச்சென்று மிருகங்களைக்கலைத்து வாளீட்டிமுதலான ஆயுதங்களாக் கண்டதுண்ட

மாய் வெட்டிக்குத்திக் கொன்றுவிட்டு வாருங்கள் யாங்களந்தத் திசைக்குச்சென்று வேட்டையாடுகின்றோம் வேடர்காள்.

(வேட-வ-ம்.) அப்படியே செய்கின்றோம் சென்றுவாருங்கள் ப்ரபு.

(அரி-வ-ம்.) ஹே வேடர்காள் நீங்கள் மிகவுஞ் ஜாக்ரதை யாயிருந்து நாங்கள் கூப்பிடும்போது ஓடிவரவேண்டுந் தெரிய வருமா.

(வேட-வ-ம்.) அப்படியே வருகின்றோ மகாராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

சொந்தமந் திரியேகாமுஞ் சொன்னசொற் படியேயிங்கு
வந்திடு மிருகமெல்லாம் வதைபுரிந் திடுவார்வேடர்
தந்திர விலங்கினங்கள் தானையுந் தெரிவதாலே
மந்திர மந்தக்காடு முழுமையுஞ் சோதிப்போமே.

அரிச்சந்திரன் சொல் தரு.

(அங்குநானிருந்தவனை அழைத்துவந்ததேன்டிகண்ணே.)

என்ற இந்திரசபாவின் வர்ணமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

கண்ணிகள்.

இந்தத்திசைகடந்தே யெந்தனதமந்திரியே
அந்தத்திசையில்வேட்டை யாடுவோந்தந்திரியே (இ)
புலிகரடியானைசிங்கம் போனதடந்தெரியுதையா
மெய்விட்டேன்குடிகள்சொன்னவிடம்இல்லாமென்னபொய்யா ()
உள்ளவிலங்கைத்தனையும் ஒன்றிலாமற்கொன்றிடுவோம்
மெள்ளமெள்ளநாமிருந்து வேண்டியங்கேசென்றிடுவோம் ()

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் இந்தத் திசையிலுள்ள மிருகஜாதிகளை வேடர்கள் சம்ஹரித்துவிட்டு வருவார்களாதலால் குடிகள் முறையிட்டபடியே வனங்களிலுற்ற பயிர்களையழித்த அனேக துஷ்டமிருகங்கள் சென்றிருக்கின்ற காவலையாளந் தெரிகின்றமையால் நாம் அந்தத் திசைக்குச்சென்று அம்மிருகங்களனைத்தையுந் தும்ஸப்படுத்திவருவோம் ப்ரதான்.



(சத்-வ-ம்.) அப்படியே செய்வோ மகாராஜ்.

(அரி-வ-ம்.) ப்ராணசகி செல்வோம் வா.

(சந்-வ-ம்.) இதோ வருகின்றேன் ப்ரபு.

அரிச்சந்திரன்சொல் தரு.

[மோடியாலரா காசாமிகுசாவை மோடியாலரா]

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-ஏகதாளம்.

கண்ணிகள்.

ஓடிவாருங்கள் ஓ வேடரோயிங்கே (ஓடி)
யானைபாருங்கள் அலறுதேயிங்கே (ஓடி)
மானைப்பாருங்கள் மறையுதேயிங்கே (ஓடி)
சிங்கம்பாருங்கள் திரியுதேயிங்கே (ஓடி)
புலியைப்பாருங்கள் புதரிலேயிங்கே (ஓடி)
கரடிபாருங்கள் கத்துதேயிங்கே (ஓடி)
பன்றிபாருங்கள் பதுங்குதேயிங்கே (ஓடி)

(அரி-வ-ம்.) ஓகோ வேடர்காள் இங்கனேகவித மிருகஜெந்து வாசஞ்செய்துகொண்டிருக்கின்றன ஓடிவாருங்கள் சீக்கிரம்.

(வேட-வ-ம்.) இதோ வந்துவிட்டோம் காட்டுங்கள் மகாராஜ்

அரிச்சந்திரன் விருத்தம்.

ஓகோகோ வேடர்களே சப்தங்கண்டால்
ஓடிவிடும் பதறுமல் வந்துநிற்பீர்
மாகோப முடையகரி புலியைப்பாரீர்
வல்லசிங் கரடிபன்றி மான்கள்யாவும்
ஏகோபித் தெனதுமுன்னே வருவதாலே
யிப்பொழுதே பாணமதை யெய்கின்றேன்யான்
காகுமென் றவைபுயிர் விடும்படிக்குக்
காட்டுவீ ராயுதங்கள் நீட்டுவீரே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[அதிகமயலது பெருகுதனைகொடி யாகிலுஞ்சகியாதுகாண்]
என்ற சிந்தின்பப்பதத்தின் வர்னமெட்டு.
இராகம்-கல்யாணி-தாளம்-சாப்

பல்லவி.

இத்தநிபினிலே மெத்தநலகளை
யெய்கிறேன்வன வேடரே (இத்)

அநுபல்லவி.

சத்திராயுதம் கைத்திருப்பவர்
சாடிவீழ்த்துவீர் சேடரே. (இத்)

சரணம்.

கரியமகிஷிகர்யானையுஞ்சில கரடிபுலிநரிமானுமே
அரியகணையடிபட்டதே குடல்சரியவுயிரதுவிட்டதே (இத்)

(அரி-வ-ம்.) ஆஆ வேடர்காள் இங்குற்ற (சரப-சார்த்தூல-வராக-கண்டீரவ-குஞ்சர-குடாவடி-புல்வாய்) முதலான மிருகஜாதிகள்மீது யான் கணைதொடுத்து வீழ்த்தவும் நீங்களாயுதத்தினாற் குத்திக் குடல்சரிக்கவும் எல்லாம்வல்ல நமதுக்கிரையாக மாண்டுவிட்டன இனி யிந்தத்திசையிலேதேனு மிருகவிர்டை தென்படுகின்றதா வேடர்காள்.

(வேட-வ-ம்) யாதொன்றுங் கிடையாது மகாராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

புடவியெண் டிசையினுள்ளோர் புகழ்ந்திடுஞ் சிங்கம்போன்ற
திடமுள வேடரேமுன் செப்பிய படியேயந்த
வடதிசை தனிலேயுங்கள் வசத்தினில் விட்டுவந்த
அடவியில் மிருகப்பூண்டற்றிடச் செய்திட்டீரா.

(அரி-வ-ம்.) ஹே வேடர்காள் எங்களுத்திரவுப்படி நீங்கள் வேட்டையாடிக்கொண்டிருந்த வடதிசையிலுள்ள விலங்கினங்கள் யாவையுஞ் சம்மரித்துவிட்டீர்களாவென்ன.

வேடர்கள் விருத்தம்.

மன்னவா நாங்களந்த வனத்தினில் மிருகமெல்லாஞ்
சின்னபின்னமதாய்க்குத்திச் சீர்கெட வதைத்துக்கொன்றோம்



அன்னதிற் சிலதுதானே யுய்யது பட்டுக்கொண்டு
உன்னதம் பெற்றக்குகிளோரு யொளிந்ததை யறிகுவீரோ.

(வேட-வ-ம்.) மகாராஜ் பாருங்கள் யாங்களனேக மிருகங்களையும் பக்ஷிகளையும் வதைத்துவிட்டோம் அதிற்சிலது வேலுக்குத் தப்பியும் வேலாற் குத்துண்டு தெறித்தும் கால்முறிந்தும் எலும்பொடிந்தும் குடல்சரிந்தும் வல்லுயிராயோடிப்போய் விட்டபடியால் அவ்விலங்குகளைத் தேடிப்பிடித்துக்கொன்றுவிடுகின்றதா அல்லது இந்த மட்டிலும் வேட்டையை நிறுத்திவிடுகின்றதா மகராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஓடிய தென்றேயுண்மை யுரைத்தவே டுவரோகேளீர்
நீடிய வனத்திலின்னும் நேர்ந்திடு மிருகம்யாவுந்
தேடியவ் வுயிரனைத்துஞ் சீக்கிரம் வதைகள்செய்வீர்
கூடிய நாங்களங்கு கொல்லுவோம் விலங்கைத்தானே.

(அரி-வ-ம்.) ஹே வேடர்காள் பாருங்கள் குடிகளுக்கிடர் செய்த கொடியஜெந்துக்களை உயிருடன்விடக்கூடாதாகையால் நீங்களிப்பொழுதேசென்று தப்பிப்போனவைகளையுங் கண்டுபிடித்துக்கொல்லுங்கள் யாங்களும் அந்தப்புறஞ்சென்று வேட்டையாடுகின்றோம்.

(வேட-வ-ம்.) அப்படியே செய்கின்றோம் நீங்களுஞ் சென்று வாருங்கள் மகராஜ்.

(அரி-வ-ம்.) ப்ரதான் செல்வோமாவென்ன.

(சத்-வ-ம்.) அப்படியே செல்வோ மகாராஜ்.

(அரி-வ-ம்.) ப்ராணசகி வா செல்வோம்.

(சந்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் ப்ராணநாத்.

பொது விருத்தம்.

வேளரிச் சந்த்ரன்கானில் வேட்டைகளாடும்போது
வாளடி குத்துப்பட்டு வந்தநல் மிருகமெல்லாந்

கோளதை யுரைப்பதற்குக் கோசிக னிடத்திற் செல்வந்து
தாளினை வணங்கியுள்ள சங்கதி சொல்கின்றன்றே.

(மிரு-வ-ம்.) ப்ரபு மிருகஜாதிகள் வந்தனம் புரிகின்றோம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் மிருகஜாதிகாள்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

மிருகஜா திகளேகேளீர் மேனியில் வடுக்கள்பட்டும்
பெருகிய வுதிரந்தீர்ந்தப் பிடரிரோ மங்களற்றுங்
கருகிய மூகத்தோடென்னைக் கண்டிட ஞாயமென்ன
ஒருதொடி தனிலெனக்கு வுரைசெய்வீ ருரைசெய்வீரே.

(விஸ்-வ-ம்.) ஹே விலங்கினங்காள் நீங்களொருவிதமான வாட்டமுற்றிருக்கவும் தேகாதியந்தமுள் காயமும் ரத்தக்குறியுந் தோன்றவும் இன்னும் பற்பல கோரமாயிருக்கவுங் காரணம் யாது சீக்கிரந் தெரிவிப்பீர்களாக.

மிருகங்கள் விருத்தம்.

வன்மைபெறுங் கோசலைநாட் டதனிலுள்ள
வளமிகுந்த நன்செய்புன்செய்ப் பயிர்கள்யாவும்
உன்னையுடன் றங்கள்மொழிப் படியேநாங்க
ளுழுதுபல வனைத்தையுமே யழிக்கும்போது
நின்னையுட னரிச்சந்த்ரன் சேனையோடு
திரண்டுவந்து மிருகமெல்லாங் கொன்றுவிட்டான்
அன்னையுட னவனிடத்தி லுதைபட்டு
நொந்திட்டோ முனிநாதா வந்திட்டோமே.

(மிரு-வ-ம்.) ப்ரபு தங்களாக்ஞாபனையின்படி அரிச்சந்திரனுடைய நாட்டிலுற்ற நன்செய்புன்செய்ப்பயிர்களை யழித்துக்கொண்டிருக்கும்பொழுது அவ்வரிச்சந்திரனென்பவன் சேனைசைனியங்களுடன் வந்து எங்களினங்களையும் பக்ஷிஜாதிகளையும் சம்ஹரித்துவிட்டான் நாங்கள் மட்டும் வில்லடிவாளடிபட்டுத் தெய்வச்செயலாய்த் தப்பிப்பிழைத்தோடிவந்தோம் அவர்கள் இன்னும் வேட்டையாடுகின்றார்கள் ப்ரபு.



விஸ்வாமித்திரர் விருத்தம்.

ஏவிய வெந்தன்சொற்போ லேகியே தான்பட்ட
மாவிலங் குகளேயந்த மன்னனைப் படிச்செய்தானோ
பாவியவ் வரசன்வீர பதத்தைநா னடக்குகின்றேன்
ஆவியும் பதறிடாம லுதன்றிருப் பிடஞ்செல்வீரே.

(விஸ்-வ-ம்.) ஆஆ மிருகங்காள் அந்தத்துஷ்டன் அப்படிச் செய்தானோ நல்லது நீங்கள் யாதொன்றுக்கும் யோஜிக்கவேண்டுவதில்லை நீங்களிருப்பிடஞ்செல்லுங்கள் இப்போதவ்வரிச்சந்திரனுக்குச் சொல்கின்றேன் வழி.

(மிரு-வ-ம்.) ஆனலப்படியே சென்றுவருகின்றோம் ப்ரபு.

பொது விருத்தம்.

பாவியரிச் சந்திரனிடங் கானகத்திற்
ஏ பட்டமகா கஷ்டபடுதால் மிருகமெல்லாங்
கூவிமுறை யிட்டதைநா னினைந்தாலெந்தன்
கும்பிமிகக் கொதிக்குதிதற் கென்னசெய்வேன்
ஓவியமென் மருத்துவத்தி லுல்லபோதே
யுரமிகுந்த பன்றியொன்றை யுண்டுசெய்து
ஏவியவன் சேனைதனைக் கொல்வேனென்றே
யெண்ணுவான் முனிமிருகம் பண்ணுவானே.

## விஸ்வாமித்திரர் துராலோசனை.

ஆஆ கேவலம் அவ்வரிச்சந்திரனென்பவன் என்றுலேவைப்பட்ட மிருகாதி பக்ஷிகளனைத்தையுந் தும்ஸப்படுத்தி விட்டானல்லவா இதற்கென்செய்கின்றது நல்லது இப்பொழுதே பெனது தவமகிமையால் ஓர்பன்றியை சிருஷ்டித்து அவ்வரசனுடைய சேனைசைனியங்கள் யாவையும் அதமாக்கச்செய்கின்றே னிந்தப்பகலூர்.

பொது விருத்தம்.

தேகமது பொன்னுரு முகமும்பச்சை
திகழ்நயனஞ் சிவப்பாரும் பற்கள்வைரம்

வாகுடைய கழுத்ததுவும் புட்பராகம்
வளமான காற்பவளம் நகமும்வெண்மை
தோகைநிகர் வால்நீலம் ரூபம்நல்ல
தூயமகா மேருமலை தன்னையொக்கும்
பாகமுட னிவ்விதமாய் முனிசிருஷ்டி
பண்ணியநற் பன்றியுமே வந்ததன்றே.

பன்றிவருந் தரு

[ஜர்மதேரவைற ஜானி ஜர்மதேரவைற]
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு

பல்லவி.

மிருகம்வருகுதே பன்றி மிருகம்வருகுதே

அநுபல்லவி.

அரியதவத்த ரூருவமமைத்த (மிரு)

சரணம்.

வயற்றிலலகை யொளிப்பதாய்
வல்லுயிர்கொன் றுகளிப்பதாய்ப்
பயத்தையளிப்பதாய் யார்க்கும் பயத்தையளிப்பதாய்
அரியதவத்த ரூருவமமைத்த (மிரு)

(பன்றி-வசனம்.) ப்ரபு பன்றி வந்தனம்புரிகின்றேன்

(விஸ்-வ-ம்.) கல்யாண் பன்றி

பன்றி விருத்தம்.

கந்தமூ லங்களுண்டு கடவுளை மனத்திலுன்னி
விந்தையாய்த்தவஞ்செய்விஸ்வாமித்திர முனியேயையா
மந்திரத் தாலேபன்றி வடிவமா கிடவிப்போது
எந்தனைப் படைத்ததேதி யின்னதென் றியம்புவீரே

(பன்றி-வ-ம்) ஆஆ முனிநாதா தங்களுடைய தபோவல்லவ
ந்திரசக்தியினல் என்னை சிருஷ்டிசெய்தகாரணம் யாது ப்ரபு.



விஸ்வாமித்திரர் விருத்தம்.

தாட்டிகமா யெந்தன்முன்னே வந்துநின்று
சாஷ்டாங்க மாய்ப்பணிந்த பன்றியேகேள்
மேட்டிமையாய்க் கோசலதே சத்தையாளும்
வேந்தனரிச் சந்திரன யோத்திவிட்டுக்
காட்டில்வந்து வனவேட்டை யாடுகின்றான்
கடுமுடுக்காய் நீயுமங்கேசென்றேயன்னோன்
கூட்டிவந்த படைகளையுன் கொம்பாற்குத்திக்
கொன்றவனையிங்குகொண்டு வருகுவாயே.

(விஸ்-வ-ம்) வராகமே பார் நீ யிப்பொழுதே சென்று கோசலநாட்டிலுள்ள வனங்களில் வேட்டஞ்செய்யாநின்ற அரிச்சந்திரனுடைய சேனுதளத்திற்புகுந்து அச்சைனியங்களைக் கால்வேறு கைவேறு தலைவேறு குடல்வேறாகத் தும்சஞ்செய்து உனது தந்திரோபாயத்தால் அவ்வரிச்சந்திரனையும் என்முன்கொண்டுவந்து சேர்த்தவேண்டுந் தெரியவருமா.

(பன்றி-வ-ம்) அப்படியே செய்கின்றேன் ப்ரபு விடைதாருங்கள்.

(விஸ்-வ-ம்) ஜல்தியிற்செல்

போது விருத்தம்.

புண்ணவ னேவிவிட்ட பன்றியவ் வனத்துக்கேகி
அண்ணலின் சேனைதன்னை யழித்துயிர் வதைக்கும்போது
கண்ணினுற் கண்டவேடர்கலங்கியே விரைவிலோடிப்
புண்ணிய னரிச்சந்த்ரன்பாற் புகன்றகம் வருந்துவாரே.

வேடர்விருத்தம்.

பலகலை யுணர்ந்தமன்னு பதறுதே தேகமெல்லாங்
குலைநடுங் கிடுதேவாயுங் குளறுது குளறுதையோ
மலைதனைப் போலோர்பன்றி மாயமா யோடிவந்து
நல்திரு சேனைதன்னை நாசமுஞ் செய்புதையா.

## வேடர்சொல் தரு.

[ஆரண்யத்திலோரரசன் சித்திரைசெய்யவே]

என்ற இந்திரசபாவின்வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மன்னவனே உன்னதஞ்சேர்
மலைபோலோர்பன்றி
இன்னல்செய்யுஞ் சின்னமதை
யென்சொல்வோமின்று
யானைபரி சேனைமுதல்
அழியாத்தேருமே
வானுலகம் போனவிதம்
வந்துபாருமே

(வேட-வ-ம்.) ஆஆ மகராஜ் பாருங்கள் வயற்றிற் பூலோகத்தை மறைக்கத்தகுந்த காத்திரமும் கொம்பினல் எழுலகத்தையும் பேர்க்கத்தகுந்த பலத்தையும் எமனுங் கலங்கத்தகுந்த உறுமுதலையும் பலவிற உறுப்புகளையும்பெற்ற ஓர் பன்றியானது நமது சேனையில் வந்துபுகுந்து அனேகசேனைகளைக் கால்வேறு-கைவேறு குடல்வேறு-தொடைவேறு-தலைவேறு-மூளைவேறாகக்கொன்று வனமெல்லாம் ரத்தவெள்ளம் பெருகியோடுகின்றது. நாங்கள் பயங்கரமுற்று வந்துவிட்டோம். தாங்கள் வந்துபாருங்கள் மகராஜ்.

(அரி-வ-ம்.) ஆஆ அப்படியா இதுவுங் காலவித்தியாசந்தான் போலிருக்கின்றது. ஹே ப்ரதான் அவ்விடஞ்செல்வோம்வாரும்.

(மந்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் மகராஜ்.

(அரி-வ-ம்.) ப்ராணசகி அவ்விடஞ்செல்வோமாவென்ன.

(சந்-வ-ம்.) அப்படியே செல்வோம் ப்ராணநாதா.

பொது விருத்தம்

சேனைகள் மடிந்ததென்ற சேதியைக் கேட்டமன்னன்
கானமான் வேகம்போல கடுகியே நடந்துசென்று
தானைக ளிறந்தநேர்மை தனதுகண் ணாலேபார்த்து
ஞானமந் திரியினோடு நவிலுவான் றுயருற்றே.



அரிச்சந்திரன் விருத்தம்.

அடவியிற் சற்றேவேட்டை யாடுவோ மென்றேயங்கு
தடபுட லாகச்சென்ற சமயமே மாயமாகத்
திடமிகு பன்றிவந்து சின்னபின் னமதாயிந்தப்
படைகளை நாசஞ்செய்த பக்குவம் பாரீர்மந்திரி.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[சுந்தரிநீயெந்தனை வந்தாதரி]

என்ற கீர்த்தனையின் வர்னமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மந்திரி யிவ் விந்தைதன்னைப் பாருமே.

அநுபல்லவி.

இந்தவிதமடிந்தசேனைகள் எண்ணத்தீருமோ
என்ன செய்குவோம் எவரைவைகுவோம் (மந்)

சரணம்.

பன்றியெவ்விடம் நின்றிருக்குதோ பார்க்கலாம்
கொன்றபன்றியை வென்றுசேனையின் குறையைத்தீர்க்கலாம்
கூடி வாருமே தேடிப்பாருமே (மந்)

(அரி-வ-ம்.) ப்ரதான் நமது சேனைகள் மடிந்திருக்குங் கஷ்டத்தைப் பார்த்தீரா என்செய்கின்றது. நல்லது அக்கொடிய பன்றியானது இப்போது எங்கு பதுங்கிக்கொண் டிருக்கின்றதோ தெரியவில்லையாதலால் இப்பொழுதே தேடிப்பார்த்துக் கண்டு பிடித்துக்கொன்று வருவோம்வாரும்.

(சத்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் மகராஜ்.

பொது விருத்தம்.

கோவமுனி யரசனது தளங்கள் யாவுங்
கொன்றுவர வேணுமென்று குணமாய்ச்சொல்லி
யேவவொரு நொடியில்வந்து படையைக்கொம்பால்
இடித்துதிரம் வடித்ததனைக் குடித்துமென்மேற்

சிவவதைத் புரிந்தமகா கொடியபன்றி
செறிந்தபுதற் குள்ளாகப் பதுங்கிநிற்கக்
காவலனு மரிச்சந்த்ரன் கண்ணினாலே
கண்டிட்டான் கொல்மனங் கொண்டிட்டானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

அமைச்சனே சொல்லக்கேளீ ரதிசய வுருவங்கொண்டு
இமைப்பொழு தினுக்குள்ளாக விவ்விடம் வந்துசேர்ந்
தமைக்குட்டல் சரியக்குத்தித் தாக்கியே புவிநைக்கொன்று
நமைச்சதி செய்தபன்றி நன்கதோ தெரியுதையா.

அரிச்சந்திரன்சொல் தரு.

[மனமுருகமாரன் கணைகள்தாவுதே]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-இந்துஸ்தானி-தோடி- ஏகதாளம்:

பல்லவி.

பன்றியுமிதோ பாருந்தெரியுதே மந்த்ரி.

அநுபல்லவி.

கொன்றுவருவோம் வருவீர் (பன்றி)

சரணம்.

காளியாலீய்ந்த கனலதுதோய்ந்த
வாளியாலெய்திடுவோம் (பன்றி)

(அரி-வ-ம்.) ஹேற ப்ரதான் வேடர்கள் பாஷித்த சின்னங்களைப்பெற்றபன்றியானது இதோ புதர்க்குள்ளாக நிற்கின்றதாகையால் முன்னங் காளிதேவிகொடுத்த கனற்கணைதொடுக்கின்றேன் நீருஞ்சமீபத்தில் வாரும்.

(சத்-வ-ம்) அப்படியே வருகின்றேன் மகாராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

காளிமுன் னெனக்களித்த கனற்கணை யென்றகூறும்
வாளியொன் றினைவிடுத்த மாத்திரத் தினிலேபன்றி
கூளிபோற் கதறிக்கொண்டு கோமுனி யபயமென்று
தூளிகள் கிழம்பவோடுந் துரிதம்நீர் பாரீர்மந்த்ரி.



அரிச்சந்திரன்சொல் தரு.

[சாஹிக்கிச்சித்ரமனமீதமப்யாரே]
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஒருகணைபாயவே வெருவியேபன்றியும்
ஓடுதுபாருமென் மந்திரியே
அருகினிற்சென்றுமே சாசரவெனப்பல
அஸ்திரமெய்குவோமந்திரியே

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரதான் பாரும் யானிப்போது விடுத்த ஒரு தீக்கணையானது பன்றியின் நெற்றியிற்பட்டு வாயில் ரத்தங் கக்கிக்கொண்டு முனிநாதா அபயமென்று கூச்சலிட்டுக் கொண்டோடுகின்றமையால் அதை யின்னுஞ் சாமான்யத்தில் விடக்கூடாதலின் நாம் அதன் பின்றுயர்ந்து சென்று சரமாரியாய்ப் பாணப்பிரயோகஞ்செய்து எப்படியாவது கொன்றுவருவோம் வாரும்.

(சத்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் மகாராஜ்.

(அரி-வ-ம்.) ப்ராணகாந்திவா செல்வோம்.

(சந்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் ப்ராணபதி.

அரிச்சந்திரன் விருத்தம்.

இனிமேபிரி யாமலென்று மென்னுடனிருக்குங்கல்லி
துணைவரே சொல்லக்கேளீர் துரிதமாய் காணுமெய்து
கணையடி பட்டுக்கொண்டு கதறியே யிந்தமார்க்கம்
பகலிவுட னோடிவந்த பன்றியு மறைந்துபோச்சே.

அரிச்சந்திரன்சொல் தரு.

[அடா வாடாசாமிவாடா நாம்கூடியாடலாம்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-காம்போதி-ஏகதாளம்.

பல்லவி.

நாம்-தேடிவந்தபன்றி யெங்கே ஓடிப்போச்சதே

அநுபல்லவி.

நீடியவனவேட்டையும் — ஆடியாச்சுதே நாம் (தேடி)

சரணம்.

சந்த்ரமதிக்கந்தவன — விந்தைகாட்டுவோம்
சுந்தரவிநோதமதிற் — சிந்தைநாட்டுவோம் நாம் (தேடி)

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் நாம் தேடிவந்த பன்றியானது எப்படியோ மாயமாய் மறைந்துவிட்டது அது ஓடும்போது முனியே அபயமென்று முறையிட்டுக்கொண்டு போனமையால் இனிமேல் நமது தேசத்தைச்சொற்பனத்திலும் நினையாது நமதுவனங்களில் மிருகசஞ்சாரமே யற்றுப்போய் விட்டபடியால் இத்தமட்டிலும் வேட்டையை நிறுத்திவிட்டு அங்குதோன்றும் சிங்கார வனத்திற்குச்சென்று சந்திரமதிக்கு அங்குற்ற வேடிக்கை விநோதங்களைக்காட்டிச் சிரமபரிகாரஞ் செய்துவருவோம் ப்ரதான்.

(சத்-வ-ம்.) அப்படியே செய்வோமகராஜ்.

பொது விருத்தம்.

குலவுநன் மனைவிமந்த்ரி கூடவே வருதும்போது
கலைவலர் புகலவொண்ணுக் காரண முதலாயுள்ள
பலவள மிகுந்தவந்தப் பக்குவ வனத்துட்சென்று
நிலைமைக ளனைத்தும்பார்த்து நிருபனு மகிழுவானே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[உத்தமர்தந்தேனே வந்தசபையோர்க்கும்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவனம்பார்க்க வந்தவர்கள்யார்க்கும்
இகபரசுகமது மிகவருஞ்ஜோக்கு.

அநுபல்லவி.

விந்தையதாகிய — சோலைகளும்
வேள்விசெய்திடயாக — சாலைகளும்
விந்தைமுனிவோரும் அஞ்சலிசெய்வோரும்.



குஞ்சியர்கள்கோரும் — மிஞ்சுமலர்ச்சிரும்
விதவிதபறவையுங் — காணுவதால்
அதிகமனமகிழ்ச்சி — பூணுவதால் (இந்)

(அரி-வ-ம்.) ஆஆ என்னாச்சர்யம் இவ்வாரண்யத்திற் பிரவேசித்தவுடனே இங்கு பொற்றாமரைப்பீடத்தளாகிய ஸ்ரீமகாலக்ஷ்மியைப்போல தழைத்தோங்கிக் குளிர்ந்துநிழலைப்பரப்பியிருக்குஞ் சோலைகள் காவுகள் தோப்புகளும் பல்வித புஷ்பங்களைவிரித்து மதுரமிகுத்த நீர்நிறைந்த சுனைகள் மடுக்கள் ஓடைகளுமிருக்கின்றன அன்றியும் மாமரங்களானது இலக்ஷ்மியின்மேனியையொத்த இளந்துளிர்களையும் சரஸ்வதிமேனியைநிகர்த்தசற்றுவெளுத்ததளிர்களையும் உமையவள் மேனிபோன்ற முதிர்ந்ததழைகளையுமுடைத்தாகி அன்னவர்விழிபோன்ற வடுக்களையுந்தனம்போன்ற காய்களையும்மாதுரியவசனமொத்த கனிகளையுங்கொண்டு காமசரங்களனேகம்வகித்து மூன்றுஸ்த்ரீகளைப்போல் நிற்கின்றன இன்னும் மயில்களாடுதலும், குயில்கள்பாடுதலும், வண்டுகளொலித்தலுமாயிருக்கின்றன ஆஆ அதோ யாகசாலைகள் ஓமகுண்டங்கள் முனிவர்திருக்கூட்டங்கள் தோன்றுகின்றன நல்லது இன்னும் என்னென்ன அதிசயங்களிருக்குமோ அவைகளையுஞ் சற்று தூரஞ்சென்று பார்த்துச் சந்திரமதிக்கு விபரமாயெடுத்துக் காட்டுகின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மேதினியி லிவ்வளம்போ லின்னாள்மட்டும்
வேறொன்றைக் கண்டறியோம் வெகுவனப்பு
மாதவர்க ளிருப்பிடமுந் தருக்கள்சேர்பும்
மயில்குயில்கிள் ளைகள்முதலாய் வாழுஞ்சீருஞ்
சீதமலர்க் காவடர்ந்த சிறப்புமற்ற
சிங்கார முள்ளதெல்லா மின்னதென்று
காதலியே சந்திரமா மதியேநானுங்
கழறுகிறேன் பார்த்துளத்திற் கனிவுகூரே.

### அரிச்சந்திரன் சொல் தரு.

(மன்றே வுன்னைக்கண்டநாள்முதலாய் மையல்மிகக்கொண்டேனே)
என்ற ட்ராமாத்தருவின்வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-ஏகதாளம்.

பல்லவி.

இந்தவனம்போலவே நான்
எவ்விடத்துங்கண்டிலேன்

அநுபல்லவி.

சுந்தரமதியேநீயுஞ் சற்றேகண்ணாலேபாரடி யுனக்
குற்றசிரமந்தீரடி (இந்)

சந்தனங்கடம்புமாசி வந்திக்குதோணுதே புனை
வாழைதென்னையுங்காணுதே (இந்)

மல்லிகைசெவ்வந்திமுல்லை மலர்களும்பரிமளிக்குதே என்
மனதுமிகவுங்களிக்குதே (இந்)

கோலமிகுநீலமயில்கள் கூடிநடனமாடுதே கருங்
குயில்களிசைகள்பாடுதே (இந்)

பஞ்சவர்னக்கிளிகள்கூடிக் கொஞ்சியினிதாய்ப்பேசுதே யிதோ
குளிர்ந்ததென்றலும்வீசுதே (இந்)

மகிமையிதினுமேயல்லவோ மாமுனிவருங்கூடுரார் சிலர்
வனத்திற்றவத்தைநாடுரார் (இந்)

விஸ்தரித்துமுத்தையன்சொன்ன விபரமுழுதுமிருக்குதே யிந்த
வேடிக்கையென்னையுருக்குதே (இந்)

---

(அரி-வ-ம்.) ஆஆ ப்ராணசகி இவ்வனத்தின் அதிசயத்தையென்சொல்லப்போகின்றேன் பார் இதில் அநேக விருக்ஷஜாதிகளடர்ந்து நிழலாயிருப்பதற்கும் விதவிதமான புஷ்பஜாதிகள் பரிமளிக்கின்றதற்கும் கங்கையையொத்த அருவிகள் பெருகியோடுகின்ற குளிர்ச்சிக்கும் மயில்களாடுகின்ற வேடிக்கைக்கும், குயில்கள்பாடுகின்றசந்தத்துக்கும், கிளிகள்பேசுகின்ற இனியமொழிக்கும், வண்டுகள் ரீங்காரம்பண்ணுகின்ற தொனிக்கும், இங்கடிக்கின்ற தென்றலுக்கும், என்மனமானது ஒருவிதமான ரமணீகரமாயிருக்கின்றது சகி ஆஆ இவ்விபரீதத்தினலன்றோ ஆன்றோர்



கள் இல்லறத்தைநீக்கித் துறவறம்பூண்டு இவ்விதமான செழுமைபொருந்திய வனங்களிற் சஞ்சரித்துச் சந்தமூலபலாதிகளைப் போஜனமாயுபயோகித்துக்கொண்டு இப்பேர்க்கொத்த வேடிக்கை விநோதங்களைப்பார்த்துக் காலங்கழித்து வருகின்றார்கள் இல்லாவிடில் அவர்களுக்கு இக்கானகத்திலேவேறென்ன மகத்வமிருக்கின்றது பெண்மணி நீ யிந்த விநோதகாக்ஷிகளையெல்லாங் கண்ணுற்றுக் களிகூர்ந்தனையாவென்னை.

### சந்திரமதி விருத்தம்.

இவ்வனந் தன்னிலுள்ள வெழில்வளம் பார்க்கப்பார்க்க
வவ்விதன் மனத்தைநயந்த மகிமையை யென்னசொல்வேன்
ஔவியே நாமுமின்னு முள்ளவேடிக் கையெல்லாஞ்
செவ்வையாய்ப் பார்த்துக்கொண்டு செல்லுவோம் வருவீர்மன்னா.

---

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணகாந்தா யானிங்குற்ற சிங்காரங்களொவ்வொன்றையும் நன்றாய்க் கவனித்துக்கொண்டு வந்ததில் இவ்வேடிக்கையினூசியைக் காந்தமிழுப்பதுபோல் என்மனத்தை யிழுத்துக்கொண்டிருக்கின்றது ஆதலால் இன்னுஞ் சற்றுதூரஞ் சென்று அங்குற்ற விநோதமும் பார்த்துவருவோம் ப்ரபு.

(அரி-வ-ம்.) அவ்வப்படியே செல்வோம் பெண்ணே.

---

### பொது விருத்தம்.

சந்திரமா மதியுமரிச் சந்த்ரன்மந்த்ரி
தன்னுடனவ் வனஞ்சுற்றிப் பார்க்கும்போது
சுந்தரமாய்த் தன்னெதிரோர் புள்ளிமானுந்
துள்ளிவிளை யாடுகின்ற வொயிலைப்பார்த்து
எந்தனுக் குகந்தமனே கஜனைமைந்தன்
இசைந்துவிளை யாடுதற்குத் தகுதியான
விந்தையுள்ள மானிதுவ தாலேயங்கு
மேவென்றா ளதைப்பிடித்துத் தாவென்றாளே.

### சந்திரமதிசொல் தரு.

[மோகமுனேதாளலேரா முத்துபெட்டாராஞராமி]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்னவனே முன்னிற்காணும்
மானைப்பிடித்துத்தாருமே. (மன்)

அநுபல்லவி.

சொன்னமங்கிர் வன்னமுடன்
துள்ளிவிளையாடுதே
கன்னிகைநான் தானும்போது
கள்ளங்கண்டேயோடுதே (மன்)
தாயமதாய்ச் சேயன்வைத்துத்
தாவிக்ரீடைசெய்யத்தானே
காயமின்றி யேயதனைக்
கைப்பற்றிடக்கோரினேனே (மன்)

---

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணநாத் இதோ சமீபத்தில் விளையாடிக் கொண்டிருக்கின்ற மானைப் பார்க்கப்பார்க்க எனக்கு மிகுந்த ஆசையாயிருக்கின்றது இந்த மான் நமது வத்சனாகிய தேவதாசன் வைத்து விளையாடுதற்குத் தகுந்ததாய்க் காணப்படுகின்றமையால் அதின்மேரிற் காயம்படாமற் றந்திரமாய்ப் பிடித்துக்கொடுங்கள் ப்ரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

காயமில் லாமல்மானைக் கையினிற் பிடிப்பதென்றாற்
பாயுமோர் காததூரம் பார்த்திப னேடுவேளே
ஆயினு மருகிற்சென்றே யவ்வெழில் மானைத்தந்த்ரோ
பாயமாய்ப் பிடிப்பேன்பெண்ணே பார்த்திடாய் கன்னிற்றுனே.



### அரிச்சந்திரன்சொல் தரு.

[சாஹிக்கிச்சித்ரமனபீதமப்யாரோ மஹேனைபைராகினமோர்யாரோ]
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அருகினிற்செல்லவே வெருவியேமான்மெல்ல
அகனுதகனுதடி நாயகியே
ஓடுமான்றன்னை நாடிச்செல்லுவோமென்றால்
ஒளிமறைபொழுதாச்சே நாயகியே
பிரியமான்றனைநாளை பரியவேடுவராலே
பிடித்துவரச்செய்கிறேன் நாயகியே

---

(அரி-வ-ம்.) ஆஆ-பெண்ணரசி பார் மானைக் கையிற்பிடிப்பதென்றாற் சாமான்யமன்று ஏதோ வனது வற்புறுத்தலுக்காக அம்மானருகிற் சென்றவுடன் என்னைக் கண்டு பயந்தோடுகின்றது அதைத் தொடர்ந்துபோய்ப் பிடித்துவரலாமென்றால் அஸ்தமானமாகும் நேரமாயிருக்கின்றது. ஆகையால் நாளையத்தினம் வேடர்களைக்கொண்டு நல்லமான் பிடித்துவரும்படி செய்து வத்சனுக்குக் கொடுப்போம் பெண்ணே.

(சந்-வ-ம்.) அப்படியே செய்வோம் ப்ரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிநான் பிடிக்கவந்த மானுமெங்கோ
மாயமதாய் மறைந்துவிட்ட படியினாலும்
அந்தியிருள் நான்குபக்கஞ் சூழ்ந்ததாலும்
அகன்றிடுதற் குகந்ததடந் தெரியாதாலும்
இந்தவனந் தனிலிரவு பொழுதைப்போக்கி
யெல்லோரும் விடிந்தபின்னால் நகரஞ்செல்வோஞ்
சிந்தைகலங் காமலெந்த னருகிற்றானே
தங்குவீர் படுத்துநன்றாய்த் தூங்குவீரே.

---

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் யான் பிடிக்கவந்த மானனது மாயமாய் மறைந்தோடிப்போயிற்று இப்போது சூர்யாஸ்தமான

மாகி நான்குதிக்கினு மிருள்சூழ்ந்துகொண்டது வழியொன்றும் புலப்படவில்லையாதலால் வேடர் முதலான சேனைசைனியங்களைக் காவல்வைத்துவிட்டு நாமிவ்வாரண்யத்தில் ராத்திரிமுழுதுஞ் சயனித்திருந்து விடிந்தபின் நமது நகரத்திற்குச் செல்வோம் ப்ரதான்.

(சத்-வ-ம்.) அப்படியே செய்வோ மகராஜ்.

(அரி-வ-ம்.) ஆனால் யான் சயனித்துக்கொள்கின்றேன் நீருஞ் சேனைகளை யொழுங்காய் காவலமைத்துவிட்டுச் சௌகரியப்படி சயனித்துக்கொள்ளும்.

(சத்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் தாங்கள் சயனித்துக் கொள்ளுங்கள் மகராஜ்.

(அரி-வ-ம்.) அடி ப்ராணசகி நீயுமெனதருகிற் சயனித்துக் கொள்வாயாக.

(சங்-வ-ம்.) அப்படியே சயனித்துக்கொள்கின்றேன் ப்ராணநாத்.

பொது விருத்தம்.

மண்டலா திபனுந்தூங்கி மாயமாய்க் கனவுமொன்று
கண்டது மெழுந்திருந்து கவலையுற் றிருக்கும்போது
அண்டையிற் றுயின்றகோதை யவளுமந்நித் திரையும்நீங்கிக்
கொண்டநா யகனின்சோபக் குறிதெரிந் துரைகுவாளே.

சந்திரமதி விருத்தம்.

இந்தநல் வனத்தில்ராத்ரி யென்னரு கினிற்படுத்து
விந்தையாய் நித்ரைசெய்து விடிந்தபின் னெழுந்தநாதா
சந்தத மதியைப்போல தளதவென் றொளிவுகாட்டுஞ்
சுந்தர முகத்தில்வாட்டந் தோன்றுதென் சொல்வீரையா.



சந்திரமதிசொல் தரு.

[தஹ்நீரமாரேயிந்நிரேஹை சேபதல்கயி]

என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

மன்னவுமதா சந்த்ரமுகம் வாடலானதேன்.

அநுபல்லவி.

என்னுளுமிவ்விதமதா யிருந்ததில்லையே (மன்)

சரணங்கள்.

நேசமாய்த்தேவ தாசன்மீது
நினைவுகொண்டீரோ
மோசமாய்வந்த நீசப்பன்றி
முனையக்கண்டீரோ (மன்னு)

சேனைகள்சில போனதென்று
சிந்தைநொந்ததோ
கானிலலைந்த மேனியாலே
களைப்புவந்ததோ (மன்னு)

சித்தத்திலேகி னைத்தயர்ந்த
சேதியேதையா
பத்தினிதனக் கித்ததியே
பண்பாயோதையா (மன்னு)

(சங்-வ-ம்.) ஆஆ துரையே பாருங்கள் எப்பொழுதுஞ் சந்திரனைப்போற் பிரகாசிக்கும்படியான தங்கள் திருவதனமானது இன்று ஒருவிதமான வாட்டமுற்றிருக்கின்றதே ஆஆ தேவதாசனைவிட்டுவந்தோமென்ற வியாகூலமா அல்லது துஷ்டப்பன்றி மறுபடியும் வந்து சேஷ்டைபண்ணிற்று அல்லது சேனைகள் மடிந்த விசனமா அல்லது வேட்டியாடிய சிரமமா எனக்கொன்றும் புலப்படவில்லையே ஆஆ நாதா தங்களுக்குநேர்ந்த சங்கடத்தை யின்னதென்று அடியாளுக்குத் தெரிவிக்கவேண்டும் ப்ரபு

அரிச்சந்திரன் விருத்தம்.

கயல்விழி மானேயென்றன் காதலுக் கினியதேனே
நயகுண மின்னேயிந்த நானிலம் புகழும்பொன்னே
ஒயிலுள மயிலேசந்த முரைத்திடுங் குயிலேநாணும்
அயர்வுடன் வாட்டமுற்ற வதிசயஞ் சொல்லுவேனே.

அரிச்சந்திரன்சொல் தரு.

[மன்னன்வரக்காணேனே யென்னநான்செய்குவேன்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

சொல்லுகிறேனடிபெண்ணே
சுந்தரமிகுந்தகண்ணே (சொ)

அநுபல்லவி.

அல்லும்முதலென்மனத்தை மெல்லுகிறவிசனத்தைச் (சொல்)

சரணங்கள்.

அற்புதமாய்நானிரவில் அயர்ந்துறங்கிடும்போதி
கற்பனையாகவேயொரு சொற்பனமுங்கண்டசேதி (சொல்)

நன்றுதானோதீதுதானோ நானறிந்தசொற்பனமுங்
கன்றினைபிரிந்தமான்போற் கலங்குதேயென்மனமுஞ் (சொல்)

மந்திரியிடத்திலந்த விந்தையையுரைக்கவேணுஞ்
சுந்திரமிகுந்தவவர் சிந்தையில்விபரந்தோணுஞ் (சொல்)

(அரி-வ-ம்.) ஆஆ பிரியசகி யான்றூங்கும்பொழுது ஓர் விபரீதமான சொற்பனங்கண்டு விழித்தேன் விடிந்துபோயிற்று விடியற்காலத்திற்கண்ட சொற்பனம் உடனே பலிக்குமென்று பெரியோர்கள் சொல்வார்களாதலாற் கனவின் பலனின்னதென்று தெரியாமல் மனங்கலங்கிமுகவாட்டமுற்றிருக்கின்றேனேயன்றி வேறு விசேஷமில்லை நல்லது நமதுமந்திரியிடத்திற்சொல்லிப் பலனின்னதென்று தெரிந்துகொள்வோம் பெண்ணே.

(சந்-வ-ம்.) அப்படியே செய்வோம் ப்ரபூ.



(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் எழுந்திருஞ் சீக்கிரம்.

(சத்-வ-ம்.) இதோ எழுந்துவிட்டேன் மகராஜ் என்ன விசேஷம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

விற்பன யூகந்தன்னில் மிகுந்தமந் திரிசீர்கேளீர்
சற்பனை தானோதெய்வ தத்துவ மோவலாது
அற்பனே நினைவோவேறு காரண மெதுவோகாணேன்
சொற்பன மொன்றுகண்டேன் சூழ்ச்சிசெய் துரைத்திடீரே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[மல்லிகைமுல்லைமலரையிறைத்தகையாலே]

என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-எதுக்குல்காம்போதி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

தூங்கும்பொழுதொரு சொற்பனங்கண்டேனே மந்திரி-அது
தீங்குநன்றென்பது தெரிந்திடவில்லையே மந்திரி
எந்தனையீன்றதோர் தந்தைதிரிசங்கு மந்திரி-நல்ல
அந்தணருக்கு யாக்கையுடன்சென்றார் மந்திரி
அன்னவிலேதேவர் அவரைவிட்டகற்றினர் மந்திரி-பின்பு
மன்னனும்நக்ஷத்ர மண்டலம்போய்ச்சேர்ந்தார் மந்திரி
அன்றியும்எழில்மாதர் ஐவரெனைப்புணர்ந்தார் மந்திரி-அதில்
ஒன்றொன்றாய்விலகியவுண்மையைச்சொல்கிறேன்மந்திரி
ஒருத்தியைத்தவமுனிக் குகந்துகொடுத்தேனையா மந்திரி-பின்னுந்
திருத்தடனொருமங்கைசெப்பாமற்சென்றாள்காண்மந்திரி
பின்னுமொருத்தியன்னம் பேணுதேகினளையா மந்திரி-ரண்டு
கன்னிகையிலொருத்தி கண்குருடாய்கன்றாள் மந்திரி
இப்படிநால்வரும் என்னைவிட்டகன்றனர் மந்திரி-ஒரு
கற்புடையாள்மட்டுங் கைவிடாதிருந்தாள்காண் மந்திரி
அவளாலேநானும் அநேகசுகம்பெற்றேன் மந்திரி-ராத்திரி
இவளாவுங்கனவிலே யேற்பட்டவிபரங்காண் மந்திரி
இப்படியாகநாம் என்றைக்குமில்லாமல் மந்திரி-கண்ட
சொற்பனத்தினால்நேருஞ் சுகதுக்கமறிவிப்பீர் மந்திரி

(அரி-வ-ம்.) ஆஆ ப்பிரதான் பாரும் ராத்திரியான் சயனித்து நித்திரைசெய்யும்போது எனது தந்தையானவர் தேகத்துடன் தேவலோகத்திற்குச்செல்லவும் அவரைத் தேவர்கண்டு தள்ளிவிடவும் அதன்பின் அவர் நக்ஷத்திரமண்டலத்துக்குச்சென்று நிலையாயிருக்கவும் அப்பாலெனது பூர்வபுண்யவசத்தினால் ப்ரான் அப்ஸரஸ்திரீகளைப்போன்ற ஐந்துபெண்களைப்புணரவும் அதிலொருத்தியை நானே மனஸ்பூர்வமாய் ஒரு முனிவனுக்குக்கொடுக்கவும் மற்றொருத்தி தானாகவே அம்முனிவனிடஞ்செல்லவும் பின்னுமொருத்தி போஜனமில்லாததாகவும் இன்னுமொருத்தி தானாகவிலக கண்குருடாகியலைந்து திரியவும் கூடாதியாயிருந்த ஓர் மாதரசியானவள் என்னைவிட்டகலாமல் இம்மைக்கும் வேண்டிய நன்மையைச்செய்துகொண்டிருக்கவுஞ் சொற்பனங்கண்டு விழித்தேன் விடிந்துபோயிருக்கின்றது ப்ரதான் இதன்பலனை யின்னதென்று விபரமாய்ச் சொல்லவேண்டும்.

சத்தியகீர்த்தி விருத்தம்.

சென்னியில் மகுடந்தாங்குஞ் செம்மலே விடியற்காலம்
மன்னிய தூக்கந்தன்னில் மாயமாய்க் கனவுகண்டு
சொன்னநல் விபரமெல்லாஞ் சூழ்ச்சிசெய் தறிந்துகொண்டேன்
இன்னதென் றுமக்குக்கூற வென்மனம் நடுங்குதையா.

## சத்தியகீர்த்திசொல் தரு.

[வந்தனமுந்தந்தேனிதோ மந்தகாசமாய்]

என்றட்ராமாத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவினைக் கென்னசெய்வோஞ் சுந்தரமன்னா

அநுபல்லவி.

சிந்தையாகவே — வந்தகோசிகர்
சிந்தையாலேவி — னைந்தமோசமே (இந்த)

(சத்-வ-ம்.) ஆஆ மகராஜ் தாங்கள் கண்ட சொற்பனத்தின் பலன்களைன்சொல்லப்போகின்றேன் பாருங்கள் தவமுனிவரென்பதுவிஸ்வாமித்திரர்க்கும் அவருக்கு மனப்பூர்த்தியாய்க்கொடுத்த



பெண் நமது பொருளாகும் உத்திரவில்லாமற்சென்றபெண் நமது அரசாக்ஷியாகும் போஜனமின்றிச் சென்ற பெண் சந்திரமதியாகும் நேத்திரந்தெரியாமற்சென்ற பெண் நமது தேவதாசனாகும் நீங்காமல் நிலையாயிருந்த பெண் சத்தியமாகுமாதலால் விஸ்வாமித்திரமுனிவருடைய வஞ்சனையினால் செல்வத்தையும் ராஜ்யத்தையுமிழந்து மனைவிமைந்தனைப்பிரிந்து கஷ்டப்பட்டுக் கடாசியிற் சத்தியவல்லமையினால் முன்போல சகல சம்பத்துடன் ராஜ்யபரிபாலனஞ் செய்வதற்கு முற்குறி காணப்பட்டிருக்கின்றது மகராஜ் என்செய்யலாம்.

(அரி-வ-ம்.) ஆஆ-அப்படியா இதுவுந் திருவுளச்செயல்தான் போலிருக்கின்றது என்செய்கின்றது பாரும்.

ஸ்லோகம்.

ஹரிணாபிஹரேணாபி ப்ரம்ஹணாபி சுரைரபி
லலாடலிகிதாரேகா பரிமார்ஷ்டும் நஸக்யதே.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது அதாவது விஷ்ணுவினாலாகினும் சிவனாலாகினும் பிரம்மாவினாலாகினும் மற்ற தேவதைகளினாலாகினுந் தலையிலெழுதியவெழுத்தை யழிக்கமுடியாதென்று நீதிசாஸ்திரங்கள்முறையிடுகின்றனவாதலால் தெய்வகற்பனையால் நேருஞ் சம்பவத்தையுத்தேசித்து நாம் வியாகூலப்படுவதி லென்ன பிரயோஜனமிருக்கின்றது நல்லது உள்ளபடியாகின்றது ப்ரதான்.

(சத்-வ-ம்.) தாங்கள் சொல்வது வாஸ்தவந்தான் மகராஜ்.

சந்திரமதி விருத்தம்.

பாங்குடனிதுநாள்மட்டும் பாரரசாண்டிருந்தோந்
தூங்கிடும் பொழுதுகண்ட சொற்பனந் தன்னையுன்னித்
தீங்குகளுறுமென்று செம்மலே மயங்கவேண்டாந்
தாங்கிடும் வந்ததெல்லாஞ்சத்திய மொன்றுதானே.

## சந்திரமதிசொல் தரு.

[அருமைக்கண்மணியைக்காணேனே யிந்த ஆபத்துக்கென்செய்வேனே]

என்றட்ராமாத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாபு.

பல்லவி.

சத்தியந்தவறுதீர்மன்னா என்றுஞ்
சாமிதுணைவருவார்முன்னால் நீருஞ் (ச)

அநுபல்லவி.

புத்திரன்போனாலு நானே கொண்ட
பத்தினிபோனாலுஞ் சோர்ந்தேன் நீருஞ் (சத்தி)
நாடுநகரமிழந்தாலும் நாமுந்
தேடியபொருள்கள் போனாலும் நீருஞ் (சத்தி)
என்னைமிடிமைநேரிட்டாலும் இன்னுந்
துன்னமிடஞ்சகல்கஷ்டமுற்றாலும் நீருஞ் (சத்தி)

(சந்-வ-ம்.) ஆஆ பிராணநாதப் பிரபுவே தாங்களென்னை யிழந்து விட்டாலுஞ்சரி நமது மைந்தனையிழந்துவிட்டாலுஞ்சரி நாடு நகரம் பாக்யாதிகளை யிழந்துவிட்டாலுஞ்சரி இன்னும்நமக்கெவ்வித துன்பம் நேரிட்டாலுஞ்சரி நமக்குற்ற துணையாகிய நீதியென்னுஞ் சத்தியத்தை மட்டும் இழந்துவிடாமற் காப்பாற்றி வாருங்கள் பிரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

பூவையே சொல்லக்கேளாய் பொருந்திய சத்தியத்தை
நீவிடச் சொற்றிட்டாலும் நிருபனான் விடவேமாட்டேன்
காவினிற் கணையுமொன்று கருதுவ தாலேயிங்கு
மேவினீ ராசபூசை விதிப்படி முடிப்போம்வாடி.

(அரி-வ-ம்.) அடி நேசரஞ்சிதமேபார் மெய்யைக் கைதவற விட்டுவிடும்படி நீயே வற்புறுத்திக் கேட்டுக்கொண்ட போதிலும் யாரொருக்காலும் விடமாட்டேன் கல்லது அதோ வோர் தடாகந் தோன்றுகின்றமையால் அங்குசென்று ஸ்நானபானாதியனுஷ்டானத்தை முடித்துவருவோம் வருவாயாக.

(சந்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் பிரபு.

(அரி-வ-ம்.) பிரதான் வாருஞ் செல்வோம்.

(சத்-வ-ம்.) இதோ வருகின்றேன் மகராஜ்.



# சூழ்விலைக்காண்டம்.

பொது விருத்தம்.

சேனையை மடித்துவிட்டுத் தீக்கணை யடியும்பட்டுக்
கானக மார்க்கமாகக் கடுகியே சென்றபன்றி
தானடி பட்டசேதி சகலமும் விபரமாக
மோனகோ சிகனிடத்தில் முறையிட வந்ததன்றே.

(பன்றி-வ-ம்.) ப்ரபு பன்றி வந்தனம்புரிகின்றேன்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் பன்றி ஹே வராகமே நீ பற்பல வியாகூலத்துடன் வாயில் ரத்தங்கக்கிக்கொண்டு வந்தகாரணம் யாது சீக்கிரந் தெரிவிப்பாயாக.

பன்றி விருத்தம்.

நற்றவ முனியேதாங்கள் நவின்றசொற் படியேயந்தக்
கொற்றவன் சேனைதன்னைக் கொம்பினாற் குத்திமாய்த்துச்
சற்றகன் றேனவ்வேளை தலைவனுங் கணைகளேவி
நெற்றியைப் பிளந்தான்யானும் நெஞ்சமுங் கலங்கிவந்தேன்.

(பன்றி-வ-ம்.) ஆஆ ப்ரபு தங்களாக்ஞாபனையின்படி யானரிச்சந்திரன் சேனையிற்புகுந்து அவர்களைக் குத்திக் குடலைச்சரித்து எமலோகத்திற் கனுப்பிவிட்டுச் சற்றுநேரம் ஓர்புதரிலொதுங்கித் தப்பியசேனைகள்மீது கண்வைத்துக்கொண்டிருந்தேன் அந்தச் சமயத்தில் அரிச்சந்திரன்வந்து என்மீதோர் பாணந்தொடுத்தான் அப்பாணமானது எனது நெற்றியிற்றைத்து வாயில் ரத்தத்தைக்கொட்டிற்று அதனைச் சகிக்கமுடியாமல் இனிமேலிருந்தாற் கொன்றுவிடுவானென்ற பயங்கரத்தால் ஓடிவந்துவிட்டேன் ப்ரபு என் செய்கின்றது.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

மதிமிக மயங்கியென்முன் வந்தழும் பன்றிகேளாய்
இதுவரை நாளும்லேசா யிருந்ததி லைலேதானே

அதிகமாய் வெற்றிபெற்று னவ்வரிச் சந்த்ரனுக்குக்
கதியினி நடப்பதெல்லாங் கண்ணிஹற் பார்த்திடாயே.

(விஸ்-வ-ம்.) ஹேற காண்மா நீசொல்வது நன்றாயிருக்கின்றது ஏதோ இதுவரையிலும் லேசாய்விட்டிருந்தமையால் அரிச்சந்திரன் எடுத்தகாரிய மெல்லாஞ் செயித்துக்கொண்டான் இனியவனைச் சாமான்யத்தில் விடுகின்றதில்லை நல்லது அவனுக்குச் செய்கின்றேன்வழி.

பொதுவிருத்தம்.

முன்னனுப்பி வைத்தமிரு க பக்ஷி
முழுமையுங்கொன் றனதனைச் சகித்துக்கொண்டேன்
பின்னனுப்பி வைத்தபன்றி தன்னைநெற்றி
பிளந்துதிரங் கக்கிடவே பாணமெய்தான்
அன்னவனை மயக்குதற்குக் கோபமூர்சால்
அழகுபெறு மாதர்களைப் படைப்பேனென்று
உன்னதமா தவமியற்றும் விஸ்வாமித்ரன்
யோசிப்பான் நாசியிற் சுவாசிப்பானே.

## விஸ்வாமித்திரர் துராலோசனை.

ஆஆ கேவலம் அவ்வரிச்சந்திரனனவன் முன்றலென்று லேவப்பட்ட மிருகாதிபக்ஷிகளனைத்தையும் தும்ஸஞ்செய்துவிட்டான் அதனைச் சகித்துக்கொண்டேன் எனது தவமேயுருவாய்க்கொண்ட பன்றியையும் வாயில் ரத்தங்கக்கப்புடைத்துத் துரத்திவிட்டானல்லவா நல்லது இப்பொழுதே யெனது கோபாக்கினி மகிமையால் அதிரூபலாவண்யமுள்ள இரண்டு பெண்களைப்படைத்து அவர்களுக்குப் பாதசங்கீதமுபதேசித்து அவ்வரிச்சந்திரனிடத்திற் கனுப்பி ஆடல்பாடலைக்காட்டி மையலையூட்டி மருவும்படிக்கும் மருவாவிடில் வெற்றிக்குடையைத் தரும்படிக்கும் தராவிடிற் கலகத்துக்குக்காரணந் தேடிவரும்படிக்குஞ்செய்து அக்காரணத்தை முன்னிட்டு அவனைப் பலவித சங்கடத்திற்குட்படுத்தி யெவ்விதத்திலேனும் பொய்சொல்லும்படியான ஏற்பாடு செய்கின்றேனிந்தப் பகதூர்.



பொது விருத்தம்.

பண்ணவன் கோபமூச்சாற் பார்ப்பவர் தமைமயக்கும்
விண்ணாரம் பையரைப்போல விளங்கிரு மாதர்தோன்றிக்
கிண்ணநேர் முலைகுலுங்கக் கிரணமா முகந்துலங்க
வெண்ணரும் பணிகளாடை வயங்கிட வருகின்றாரே.

பாணப்பெண்கள்வருந் தரு.

[சித்துவதமாரி கைரேகடா]

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-இந்துஸ்தானி-ஆதிதாளம்.

பல்லவி.

சுந்தரஞ்சேர் பாணப் பெண்கள்வந்தார் அஹா-அஹா
சுந்தரஞ்சேர் பாணப் பெண்கள்வந்தார்

அநுபல்லவி.

இந்தவுலகிலிணை யில்லையெனும் அஹா-அஹா (சுந்)

சரணங்கள்.

கோசிகமுனியரு காசியிலுற்று ஆஆஆ
நேசத்துவமது நேரப்பெற்று
இந்தவுலகிலிணை யில்லையெனும் அஹா-அஹா (சுந்)

இட்டமுகிலோதி கண்டோம்நாண ஆஆஆ
இட்டமுறவேயார்க்கும் இச்சைபூண
இந்தவுலகிலிணை யில்லையெனும் அஹா-அஹா (சுந்)

(பாணப்பெண்கள் வசனம்.) பிதா வந்தனம்புரிகின்றோம்

(விஸ்-வ-ம்.) கல்யாண் வத்சிகாள்.

(பாண-வ-ம்.) எங்களை சிருஷ்டித்த காரணம் யாது பிதா.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

கோசலை நாட்டையாளுங் கோவினை வசப்படுத்தத்
தேசராப்ச் சிருஷ்டிசெய்தேன் செல்விகாள் நீங்களொத்தன்

நாசியிற் பிறந்ததாலே நானிலத் தோர்கள் கண்டால்
நீசமா தர்களாய்ப்போனீர் நிமித்தமில்லைத்தாமே.

(விஸ்-வ-ம்.) ஆஆ புத்திரிகாள் பாருங்கள் கோசலைநாட்டை யாளுகிய அரிச்சந்திரனை மயக்கி வசப்படுத்த உங்களைச் சுந்தரமாய் சிருஷ்டிசெய்தேன் ஆனால் நீங்கள் எனது கோபாக்கினிச்சுவாசமோடிக்கொண்டிருந்த நாசிவழியாயுற்பவித்தபடியால் நீசமங்கையாகிவிட்டீர்கள் ஆகினும் பாதகமில்லை கண்மணிகாள்.

பாணப்பெண்கள் விருத்தம்.

எங்களைப் படைத்ததேவே யெந்தையே தவக்கொழுந்தே
மங்கையர் நாங்களந்த மன்னனை வசப்படுத்துஞ்
சங்கதி யின்னதென்று சாற்றினா லதுபோலின்று
தாங்கவே யிடத்திற்கேகிச் சொற்படி முடிப்போமையா.

(பாண-வ-ம்) ஆஆ பிதா அந்த அரிச்சந்திரனை வசப்படுத்து மவகை யின்னதென்று எங்களுக்காக்ஞாபிக்கும் விஷயத்தில் அந்தப்படியே முடித்துவரத் தயாராயிருக்கின்றோம் பிதா.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

கற்றறியா மோகனப்பெண் காளுங்கட்குக்
கல்வியறி வுண்டாகக் கடாக்ஷஞ்செய்தேன்
சற்றினிமேற் றடையின்றித் தடாகத்தோரந்
தங்கியுள வரிச்சந்த்ரன் றன்னைக்கண்டு
நற்றிரமா யாடல்பாடல்களைக் காட்டி
நவினமதாய் மருவவழைத் திடுங்களந்தக்
கொற்றவன்கூ டாதென்றாற் குடையைத்தானே
கோருவீர் வாங்கிவந்து சேருவீரே.

(விஸ்-வ-ம்) ஹே மோகினிப்பெண்காள் நீங்கள் கல்வியின் சுகுணமறியாத கன்னியராயிருப்பதால் உங்களுக்குச் சகல கல்வியப்பியாசமும் சங்கீதஞானமும் பரதசாஸ்திரப்பயிற்சியு முண்டாகும்படி யாசீர்வதித்திருக்கின்றேனாதலின் இவ்வனத்தில் நமது பெரிய குளத்துக்கருகில் அரிச்சந்திரன் றங்கியிருப்பதாக முனி



வர்கள் சொல்லத் தெரியவந்தமையால் நீங்களவ்வரசனிடத்திற்குச் சென்று *(அலுக்கு-குலுக்கு-அமட்டு-சிமிட்டு-அபிநய) முதலான அங்கச்சேஷ்டையுடன் நடனங்களாடிப் பதங்களைப்பாடி மையலூட்டி மருவும்படி கோருங்கள் அவன் மருவானாகில் அவனுக் குரிய வெற்றிக்குடையையாவது கட்டாயமாய்க் கேட்டுவாங்கி வாருங்கள் சீக்கிரம்.

(பாண-வ-ம்.) இரண்டிலொரு காரியத்தை முடித்துவருகின்றோம் பிதா விடைதாருங்கள்.

(விஸ்-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள் கண்மணிகாள்.

பொது விருத்தம்.

பன்னவ னனுப்பிவைத்த பாணப்பெண் களுமேசென்று
வண்ணாநற் குளத்திறோரம் மகிழ்வுடன் வாசஞ்செய்த
அண்ணலைக் கண்ணிற்கண்டே யற்புதப் பயில்கள்காட்டிப்
புண்ணிய வானேயென்று புகழ்ந்தடி வணங்கினாரே.

பாணப்பெண்கள் சொல் தரு.

[ஒருமாதுவரச்சொன்னாளென்னைத்தானே]
என்ற ட்ராமாஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.
பல்லவி.
இதோவந்தனமுந் தந்தனம்பூமானே.
அநுபல்லவி.
பூமானே குணவானே யெங்கள்கோனே (யிதோ)

(பாண-வ-ம்.) மகராஜ் வந்தனம்புரிகின்றோம்.

(அரி-வ-ம்.) கல்யாண் பெண்காள் ஹே கோதையர்காள் நீங்கள் யாவர்கள் எங்குவந்தீர்கள் என்னவிசேஷம்.

பாணப்பெண்கள் விருத்தம்.

கொற்றவா நாங்கள்ஞானக் கோசிக முனிவர்சார்பில்
உற்றதோர் நீசப்பெண்க ளுமதுநற் சமுகந்தன்னில்

நற்றிரக் கீதம்பாடி நடனமு மாடித்யாகம்
பெற்றிடத் தானேயிங்கு பிரியமாய் வந்தோமையா.

(பாண-வ-ம்.) மகராஜ் யாங்கள் வைதிகரான விஸ்வாமித்திர மகரிஷியின் சார்பில்வாழும் நீச்சகுலத்துப் பாணப்பெண்கள், எங்களுக்குக் கிஞ்சிற்று நடனப்பயிற்சியுஞ் சங்கீதப்பயிற்சியுந் தெரியுமாதலால் அதனைச் சமுகத்தி லாடிப்பாடிக்காட்டிச் சன்மானம் பெறுவதற்காக வந்தோம் மகராஜ்.

(அரி-வ-ம்.) அப்படியா வெகு சந்தோஷம் நல்லது அப்படியே செய்யுங்கள் பார்க்கலாம்.

## பாணப்பெண்கள்சொல் தரு.

(ச்ரிக்கக்கக்கா ரிகமம்மம்மா சரி கமபத பமகரி ஸஸ்ஸஸ்ஸா)
என்றஅட்டாமாகோட்டின் வர்ணமெட்டு.
இராகம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

**பல்லவி.**

மிக மையற்கொண் டுளம் நையுற்றோ மெமை
மருவியே சுகமருள் வீர்மன்னா.

**சரணங்கள்.**

வாரணிகொங்கை மீறுதே யெழில் வாரணிகொங்கை மீறுதே
வருவீர் வருவீர் வருவீர் வருவீர் (மிக)

மாரனும்வாளி யெய்கின்றான் இதோ மாரனும்வாளி யெய்கின்றான்
வருவீர் வருவீர் வருவீர் வருவீர் (மிக)

மாருதம்வந்து சாடுதே மந்த மாருதம்வந்து சாடுதே
வருவீர் வருவீர் வருவீர் வருவீர் (மிக)

மாங்குயில்கீதம் பாடுதே யிதோ மாங்குயில்கீதம் பாடுதே
வருவீர் வருவீர் வருவீர் வருவீர் (மிக)

மாமுத்தையன் புகழ்பூமா கவி மாமுத்தையன் புகழ்பூமா
வருவீர் வருவீர் வருவீர் வருவீர் (மிக)



## அரிச்சந்திரன் விருத்தம்.

நாடியே வந்தபெண்காள் நன்றுநன் றென்முன்னீங்கள்
ஆடிய நடனம்பார்த்தே யகமகிழ்ந் தேன்சங்கீதம்
பாடினு லதுவுங்கேட்கப் பார்த்திப னுவலானேன்
நாடிய பதமுமொன்று நிகழ்த்துவீர் நிகழ்த்துவீரோ.

(அரி-வ-ம்.) ஹேபெண்காள் நீங்கள் நடித்த நடனத்தைநேத்திரமாய்ப்பார்த்து அத்தியானந்த சந்தோஷமடைந்தனன் ...னது செவியின்புற ஒரு பதம்பாடுவீர்களாக.

(பாண-வ-ம்.) அப்படியே பாடுகின்றோம் மகராஜ்.

## பாணப்பெண்கள்சொல் தரு.

(அடியனமே மயிலினமே பொன்றனமே மிருகனமே)
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.

**பல்லவி.**

துரை மன்னனே கொடைக் கனனே யும்மேல்
மையலாகினோந் தையல்கள் கிட்ட
வருவீர்முத்தந் தருவீரெம்மை
மருவிச்சுகம் அருள்வீர் துரை (மன்)

**சரணங்கள்.**

இந்தவேளையில் வந்துவேள்கணை
யெய்கிறான் றுயர் செய்கிறான் கிட்ட
வருவீர்முத்தந் தருவீரெம்மை
மருவிச்சுகம் அருள்வீர் துரை (மன்)

கந்தமாமுலை பந்துபோல்விம்மிக்
காட்டுதே தலையாட்டுதே கிட்ட
வருவீர்முத்தந் தருவீரெம்மை
மருவிச்சுகம் அருள்வீர் துரை (மன்)

காவில்வாழ்குயில் கூவுதேமதி
காயுதே யுடல் தீயுதே கிட்ட
வருவீர்முத்தந் தருவீரெம்மை
மருவிச்சுகம் அருள்வீர் துரை (மன்)

சண்டமாருதம் பெண்டுகள்மீது
சாடுதே மனம் வாடுதே கிட்ட
வருவீர்முத்தந் தருவீரெம்மை
மருவிச்சுகம் அருள்வீர் துரை (மன்)
மாதர்மீதின்னம் வாதுசெய்துவ
தேதுகா ணிது சூதுகாண் கிட்ட
வருவீர்முத்தந் தருவீரெம்மை
மருவிச்சுகம் அருள்வீர் துரை (மன்)
சுத்தமாகவே முத்தையன்பதஞ்
சொல்லுவோ முமைப் புல்லுவோங் கிட்ட
வருவீர்முத்தந் தருவீரெம்மை
மருவிச்சுகம் அருள்வீர் துரை (மன்)

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதர்காள் சொல்லக்கேளீர் மதுரமாய் நீங்களென்முன்
கீதமும் பாடக்கேட்டுக் கெக்கலிப் பதிகங்கொண்டேன்
ஆதலி னுமையுங்கட் கடுத்தநற் பொருளைக்கேட்டால்
எதொரு தடையுமின்றி யிப்பொழு தீய்குவேனே.

(அரி-வ-ம்.) ஹே வஞ்சியர்காள் நீங்கள் நெஞ்சமுருகும்படி-யாய்ப் பாடிய செஞ்சொற்பதத்தைக்கேட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தனன் நல்லது உங்களுக்குத் தகுதியான வெகுமதியைக் கேட்டுக்கொள்ளுங்கள் தருகின்றேன்.

பாணப்பெண்கள் விருத்தம்.

மன்னவா தங்களாசீர் வசனத்தி னுமெங்கட்குப்
பொன்னணி புடவைமற்றும் பொருளது வேணதாண்டு
துன்னிய மருவியின்ப சுகமது பெறுவதற்குக்
கன்னியர் கோரியந்தோங் கருணைகூர்ந் தணுகுவீரே.



## பாணப்பெண்கள்சொல் தரு.

[மன்னவுன்னைக்கண்டநாள்முதலாய் மையல்மிகக்கொண்டேனே]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-ஏகதாளம்.

பல்லவி.

சாமியும்மைத் துரையேயும்மை அரசேயும்மை
மன்னவும்மைச் சாமியும்மைக்கண்டநேரமதாய்
தையல்மையல் கொண்டோமே.

அநுபல்லவி.

காமிகள்படுந்துயரத்தைக் கண்ணுற்சற்றுநீர்பாருமே-மிகக்
கட்டியணைந்துசேருமே (சாமி)

மன்மதனும்வண்மையுடனே வாளிகளெய்கிறனையா-மிகு
வாதைகள்செய்கிறனையா (சாமி)

கொவ்வைவிதழுயிர்தழுறக் கொங்கையிரண்டுந்துடிக்குதே-கருங்
குயில்களிசைகள்படிக்குதே (சாமி)

விர்தையுடன்மந்தமாருதம் வந்துபுவிபோற்சாடுதே-காம
வெள்ளம்பெருகியோடுதே (சாமி)

சித்தம்வைத்துமுத்தையன்சொன்னசெந்தமிழ்ப்பதங்கேளுமே-நா
ம்-சேரவிதநன்னுமே (சாமி)

(பாண-வ-ம்.) ஆஆ மகராஜ் நாங்கள் கோரிய வெகுமதியான து தங்கள் ரூபலாவண்யத்தைக்கண்டு மையல்கொண்டதற் கனுசரணையாய்க் காமக்குறிகளனேகந் தோன்றுவதால் நாடிவந்த எங்களை யோடிவிடச்செய்யாமற் கூடிக்குலவிப்பஞ்சணையிற்கொஞ்சிச் சரசமிஞ்சி வஞ்சியர்நெஞ்ச மகிழ்வுறச்செய்யும் கிருபானுக்ரகமென்னும் வெகுமதி நல்கினும்போதும் இவ்வுபகாரத்தை யெப்போது மறக்கவேமாட்டோம் பிரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

சத்திய விரதம்பூண்டு ..ரணியெண் டிசையிலுள்ளோர்
பத்தியாய் வணங்கநீதிப் படியர சியற்றுகாலும்

இத்ததி தனிலேகாதி வீழிவுசொற் கேட்பதற்கு
வைத்ததுஞ் சிவனேயுந்தன் மகிமையோ வறிகிலேனே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[அடிமைநானுன்னடைக்கலமினி யாகிலுமென்னையாளையா]
என்ற கிராமிர்தசாரத்தின் வர்ணமெட்டு.
இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பாதிமதியைச் சிதர்சடையிற்
பற்றியஞானகர்த்தனே
சேதிபிதனைக் காதிலறியச்
செய்யவோநீயும்வைத்தனை
எந்தன்மனைவி சந்திரமதி
யின்றிமற்றவர்தாயென்று
சிந்தையிலெண்ணி வந்தகானிந்தத்
தீயமொழிகேட்டேனின்று
புத்தியில்லாவ சத்தியமுள்ள
பூவையர்சொன்னவாய்மொழி
இத்தனையுமுன் சித்தலாமல்வே
றெவ்விதம்வந்ததிப்பழி

(அரி-வ-ம்.) ஆஆ ஜெகதீசா யானெப்பொழுதுஞ் சந்திரமதியைத் தாரமென்றும் மற்றதையலரெல்லாந் தாய்மாரென்றுஞ் சத்தியமாயெண்ணியிருக்க அறிவில்லாத இந்தச்சமாதர்கள்மொழிந்த அவலவார்த்தையைச் செவியிற்கேட்கும்படி செய்ததும் உனது மகிமையேயன்றி வேறுகாரணம் யாதிருக்கின்றது ஆஆ சந்த்ர ஜடாதரா இதற்காகவா என்னைப்படைத்தனை ஆஆ என்செய்வேன்.

### அரிச்சந்திரன் விருத்தம்.

ஆடல்பாடல்களைக்காட்டி யளித்திடும் பொருளைவாங்கி
ஓடிட வேண்டுமல்லா லுற்றபெண் ஜாதிபோல
கூடிட வேண்டுமென்றுங் கொஞ்சிட வருவீரென்றும்
மேடியாய்ப் பேசவந்த முறையடுக்காது பெண்காள்.



## அரிச்சந்திரனுக்கும் பாணப்பெண்களுக்குந் தர்க்கம்.

[தட்டிமறுவார்த்தைநீசொல்லாதே யுந்தன்
சாஸ்திரங்களென்னிடஞ் செல்லாதே]
என்ற சதாரம்நாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-முகாரி-தாளம்-சாபு.

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

கெட்டமொழி யென்னிடஞ்சொல் லாதீர்-பெருங்
கட்டம்வருங்கிட்டியேயில் லாதீர்

பாணப்பெண்கள்சொல் கண்ணி.

காதலைத் தணிப்பதுங்கள் பாரம்-எம்மை
வாதனைப்படுத்துதேவி காரம்

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

ஒப்பியிந்த வார்த்தைதனைக் கேளேன்-இனிச்
செப்பினுலெந்தன்மனமுந் தாளேன்

பாணப்பெண்கள்சொல் கண்ணி.

காமிகளைக் கூடிவது ஞாயந்-துரைச்
சாமியென்செய்திதிர்சம்ப்ர தாயம்

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

கொண்டமனையாட்டியன்றி வேறே-அயற்
பெண்டுகளெந்தனுக்குத்தாய் மாரே

பாணப்பெண்கள்சொல் கண்ணி.

இப்படிச்சொல் வதுதர்ம மாமா-சொன்னல்
உற்பவித்தகாமவெறி போமா

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

நீறுடைய காரியங்கள் தன்னை-யென்முன்
ஓதுதல்தகாதுநீங்க ளன்னை

பாணப்பெண்கள்சொல் கண்ணி.

எத்தனைசொன் னலுமிரங் காது-நீரும்
மெத்தவுஞ் செய்கிறீரேவீண் வாது

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

வேண்டிய பொருள்கள்கேட்டாற் றருவேன்-மையல்
பூண்டுவந்தவுங்களைநான் சேரேன்

(அரி-வ-ம்.) ஹே மங்கையர்காள் பாருங்கள் எனது சொந்த மகிஷியாய சந்திரமதியையன்றி வேறு நங்கையர்களைச் செங்கையாற் றீண்டமாட்டேன் ஏனெனில் மனுதர்மமுறைப்படி அன்னியமாதர்களெல்லாம் அன்னையாகவேண்டும் அங்ஙனமிருக்கத்தீண்டாப் புலைச்சிகளாகிய நீங்கள் என்னருகில் நின்று அவலவார்த்தைகளைப் பாஷிப்பது உசிதமன்று உங்களுக்கேதேனும் கேட்கத்தகுந்த திரவியாதி யாடையாபரணங்கள் வேண்டியதிருந்தாற் கேளுங்கள் தருகின்றேன் அதைவிடுத்துக் கெட்டவார்த்தைகளை யினிமேற் பாஷிக்கும்பக்ஷத்திற் கோபந்தாளமாட்டேன் ஹே மாதர்காள் கண்டிப்பாயறிவீர்களாக.

பாணப்பெண்கள் விருத்தம்.

புவனியில் வேதநூல் புராணசாஸ்திரங்கள்யாவுங்
கவனமாய்க் கற்றகோவே காமிகள் தனைச்சேராமல்
அவலமாய் விடும்பக்ஷத்தி லதிகபா பங்கள்சேரும்
விவரம்நீரறிந்திடீரோ வெகுண்டினை செய்கிறீரே.

பாணப்பெண்கள்சொல் தரு.

(விரசமானவார்த்தைவேண்டாம்விட்டுவிடடா)
என்ற ட்ராமாபதத்தின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சாமியெங்கள்மேற் கோபம் வேண்டாந்
துரையல்லாங்களே.

அநுபல்லவி.

பூமிதனிற் காமிகளைப்
புணரவேணுமே
காமகலை கற்றிருந்தாற்
கருத்திற்றேணுமே (சாமி)



ஆபத்தினை நூவையரை
யணைவதல்லாது
கோபத்துடன் வார்த்தைசொல்லுங்
கொடுமைபொல்லாது (சாமி)

கூடமனை மில்லையென்றாற்
குடையைத்தாருமே
நீடுலகில் என்றுங்கீர்த்தி
நிலையாய்ச்சேருமே (சாமி)

(பாண-வ-ம்) ஆஆ மகராஜ தங்கள்கோபத்திற்குப் பேதைமையாகியயாங்கள் பாத்திரமாகத்தகுந்தவர்களன்று அங்ஙனமிருக்க எங்கள்மீதேன்கோபிக்கவேண்டும்பாருங்கள் மையல்கொண்ட மங்கையர்களை மருவிச் சுகங்கொடாவிடிற் பாபஞ்சம்பவிக்குமென்று மதனநூல் முறையிடுகின்றதை யுணர்ந்திருந்தால்வெறுத்துப்பேச ஞாயமிராது ஏதோயாங்கள் கொண்டகாதலானது விழலுக்கிறைத்த நீராகிவிட்டது அதுதான் போகட்டும் தங்களுடைய பூச்சக்கரக்குடையையாவது தரும்பக்ஷத்தில் யாங்களெப்பொழுதுந் தங்களை மறக்கவேமாட்டோம் அதனாற்றங்கள் கீர்த்திப்ரதாபமானது வையமெண்டிசையுஞ் ஜொலித்துக்கொண்டிருக்கு மகராஜ இதற்கும் என்சொல்கின்றீர்கள்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதர்காள் வெகுமானங்கள் வாங்கிடக் கருத்துண்டானால்
நீதமாய்க் கேட்கத்தக்க நிதிகளை விரும்புவீர்கள்
சாதனக் குடையைக்கேட்குஞ் சங்கதி தனையோசித்தாற்
சூதிடயாகக்கேட்குந் தோற்றமாய்க் காணுமீதடி.

அரிச்சந்திரன்சொல் தரு.

(கருக்கினில்வளர்ந்தோங்கும் ஏகாம்பரியே)
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

கொடுக்கக்கூடாதகுடை கேட்குதல்ஞாயமோ

அநுபல்லவி.

அடுக்காதுன்றப்பேச்சு பிடிக்குங்குடையாச்சு-அதை
யல்லால் வேறே யெல்லாந்தரவல்லேன் பெண்களே (சொ)

(அரி-வ-ம்.) ஓ பெண்காள் நீங்கள் கேட்பதை யோஜித்தால் மோசத்திற்கிடமாய்க் காண்கின்றதே பாருங்கள் எதுவுங் கேட்கத்தக்கவைகளைக்கேட்டால் யாவருங் கொடுப்பார்கள் கொடுக்கத்தகாதவைகளைக்கேட்டாற் கொடுப்பார்களாகொடுக்கமாட்டார்களன்றோ அதுபோல தலைமுறைதத்துவமாய்ச் சூரிய குலத்தரசர்கள் பிடித்துவரும் வெற்றிக்குடையை நீச்சப்பெண்களாகிய நீங்கள் கேட்கவும்யான் கொடுக்கவுந் தகாதாகையால் உங்கட்குத் தகுதியுள்ள வேறே திரவியமாவது ஆபரணங்களாவது ஆடைகளாவது தேவையிருந்தாற் கேளுங்கள் தருகின்றேன் தேவையில்லையென்றால் வந்தவழிபார்த்துச் சென்றுவிடுங்கள் வீணான முகாந்திரங்களைப் பாவிக்கவேண்டாம்.

பாணப்பெண்கள் விருத்தம்.

தக்கதாய்ப் பொருளைக்கேட்டாற் றருகுவே னென்றுசொன்ன
பக்குவம்நிசமென்றெண்ணிப் பார்த்திபா குடையைக்கேட்டோம்
வெட்கமில் லாமல்நீரும் விளம்பிய வார்த்தைமாறி
முக்கியக் குடையென்றையோ மொழிவது ஞாயமாமோ.

## பாணப்பெண்கள்சொல் தரு.

[மன்னா வுன்னைக்கண்டநாள் முதலாய் மையல்மிகக்கொண்டேனே]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-ஏகதாளம்.

பல்லவி.

மன்னவனேயும்மைப்போன்றவர்கள்
இன்னிலத்திற்கண்டிலோம்

அநுபல்லவி.

கன்னியர்களாசைநதியிற் கரைத்தபுளிப்போலாச்சுதே-கொண்ட
காதலும்வீணாய்ப்போச்சுதே (மன்)



உம்மைக்கூடிச்செம்மையாக உகந்துசுகிக்கவந்தோமே-இப்ப
உள்ளமுருகிநொந்தோமே (மன்)

கேட்டதில்லையெனாதுகொடுக்குங் கீர்த்திமானென்றுகேட்டோமே
வெட்கக்-கேடென்றால்வரமாட்டோமே (மன்)

சத்தியவானென்றேயும்மைச்சாற்றுவதும்பொய்யாகுமே-உம்மை
ப்-போற்றுவோர்கள்வாய்வேகுமே (மன்)

(பாண-வ-ம்.) ஆஆ-மகராஜ் உம்மைப்போன்ற கள்ளமனத்துடைய வள்ளலை யிதுவரை கண்டதேயில்லை ஏனென்றால் நீர் மன்மதசொரூபியென்று கேள்விப்பட்டு உம்மைக்கூடிச் சுகிக்கலாம் அல்லது உமதடையாளமாக வெற்றிக்குடையையாவது பெற்றுப் போகலாமென்று வந்தோம் அங்ஙனமிருக்க யாங்கள் கொண்ட காதலை ஆற்றிற்கரைத்தபுளிப்போல வியர்த்தமாக்கிவிட்டதுந்தவிர ஆவலாய்க்கேட்ட பூச்சக்கரக்குடையுங் கொடுக்க மனமில்லாமற் போய்விட்டதன்றோ ஆஆ இப்போர்க்கொத்த வெட்கக்கேடுடையலோபியென்று தெரிந்திருக்கும்பக்ஷத்தில் இங்கு வந்திருக்கவேமாட்டோம் ஆஆ கேட்டதையில்லையெனாது கொடுக்குங் கீர்த்திபொருந்திய சத்தியவானென் றும்மைப்புகழ்ந்து பேசுவோர் வாயானது உடனே வெந்துபோகும். ஆஆ நீரும் அரசனென்று பெயர்மட்டும் வைத்திருக்கின்றீரே இதுதானோ யோக்யதை.

அரிச்சந்திரன் விருத்தம்.

மண்டலந் தனில்விதண்டா வாதமு மிதனைப்போலே
கண்டதே யில்லையிந்தக் கன்னியர் கெட்டவெண்ணங்
கொண்டயோக் கியமாய்வார்த்தை கூறுவ தாவிப்போது
தண்டனை கொடுக்காவிட்டாற் சங்கடம்நேருமந்த்ரி.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[காந்தனக்காரத்தாரோ பிட்டிரவாரே]
என்ற கன்னடஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

பிடித்துவெளியிற்றள்ளுவீர் மந்த்ரியிப்போது
பிடித்துவெளியிற்றள்ளுவீர்

(அரி-வ-ம்.) ஹே சேனாவீரர்காள் வேடர்களுடன் நீங்களும் புடைசூழ்ந்துவருவீர்களாக.

(சேனாவீரர்கள் வசனம்.) அப்படியே வருகின்றோம் மகாராஜ்.

பொது விருத்தம்.

மந்திரியாற் றள்ளுண்ட மங்கைய ரிரண்டுபேருஞ்
சிந்தையுங் கலங்கிவாடித் தேகமும் நடுக்கமுற்று
முந்தியங் கனுப்பிவைத்த முனிவிசு வாமித்ரன்முன்
விந்தையாய் நடந்தசேதி விளம்பிட வருகின்றாரே.

(பாண-வ-ம்.) பிதா வந்தனம் புரிகின்றோம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் வத்சிகாள்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

ஆட்டபாட் டங்கள்காட்டி யரசனை வசப்படுத்த
நாட்டமாய்ச் சென்றபின்காள் நளினமா முகமுமேதே
வாட்டமுற் றிடவும்நீண்ட மயிர்விரி கோலங்கொண்டு
ஓட்டமா யோடிவந்த வுண்மையை யுரைசெய்வீரே.

(விஸ்-வ-ம்.) ஆஆ புத்திரிகாள் அரிச்சந்திரனை வசப்படுத்தி விடுகின்றோமென்று மகிழ்வுடன்சென்ற நீங்கள் ஒருவிதவாட்டமுற்று நாட்டமற்று மயிர்விரிகோலமாய்வந்த காரணம் யாது சென்ற விடத்தில் நடந்த காரணம் யாது சீக்கிரந் தெரிவிப்பீர்களாக.

பாணப்பெண்கள் விருத்தம்.

ஐயனே முனியேகாக்க வவமதிப் படவேவிந்த
வையகத் தினிலுண்டாக்கி மன்னன்முன் னனுப்பிவைத்தீர்
மெய்யனென் றேவீணாக வேஷமும் போட்டுக்கொண்ட
பொய்யனுஞ் செய்ததெல்லாம் புகலுவோங் கேட்டிடீரே.



பாணப்பெண்கள்சொல் தரு.

[ஆரண்யத்திலோராசன் நித்ரைசெய்யவே]
என்ற இந்திரசபாவின் வர்ணமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தந்தையரே அந்தவரிச்
சந்திரனோடுஞ்
சிந்தைநோகச் செய்தவிதஞ்
செப்புவோங்கேளும்
வேந்தனிடம் பாந்தமுற்று
வேகமாய்ச்சென்றோஞ்
சாந்தமதாய் வந்தனமுந்
தந்தோமேகின்றோம்
எங்களையார் எந்தவூரென்
றிறைவனுங்கேட்டான்
சங்கதிகள் சாற்றிடவே
தலையசைபோட்டான்
நற்புகழ்சேர் அற்புதமாய்
நடனமாடினோம்
பற்பலவாய்க் கற்பனைசேர்
பதமும்பாடினோம்
வேண்டியதை வினவுமென்று
வேந்தன்கூறினான்
பூண்டமையற் சேதிகேட்டுப்
புத்திமாறினான்
குடையாகினுங் கொடுமெனவே
குணமுடன்கேட்டோம்
தடைமொழியுஞ் சாற்றித்தாரந்
தள்ளியேபோட்டான்
மெய்யினிலே கைகள்பட்டு
மிகவும்நோகுதே
வையம்புகழ் மாமுனியே
மனமும்வேகுதே

(பாண-வ-ம்) ஆஆ பிதா தங்களுத்திரவின்படி அரிச்சந்திரனிடஞ்சென்று விசித்திரமாயாடினேம் மதுரமாய்ப்பாடினேம் அவையெல்லாங் கண்டுகளித்து என்னவேண்டுமென்றான் எங்களைச் சேரவேண்டுமென்றேம் அதற்குடன்படாமல் வேண்டியபொருளைக் கேளென்றான் வெற்றிக்குடையைக் கொடுமென்றேம் அதைக் கொடுக்கமாட்டேனென்றான் இப்படிச் சொல்வது ஞாயமாவென்று சிலநீதிகளையெடுத்துக் கூறினேம் அதற்காக வெகுண்டு எங்கள் தேகம்நோக அடித்துக் கழுத்தைப்பிடித்துத் தூரத்தள்ளிவிடும்படி செய்தான் பிதா இதுதான் நடந்தகாரியம் இதற்கென் செய்கின்றது பிதா.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

கட்டழகுடையசெல்வக் கண்மணி மக்காளந்தத்
துட்டனுங் களையுந்தள்ளித் துன்பமுஞ் செய்திட்டானு
வெட்டிதா னிவைகள்யாவும் மாமுனி நானும்லேசாய்
விட்டிட மாட்டேனிந்த வேளையே செல்கின்றேனே.

(விஸ்-வ-ம்.) ஆஆ-கண்மணிகாள் உங்களையும் அடித்துத் துரத்திவிட்டானு வெகுநேர்த்தி சபாஷ் நன்றாயிருக்கின்றது இனி மேலவனைச் சாமான்யத்தில் விடுகின்றதில்லை இப்பொழுதே யவ்வரிச்சந்திரனிடத்திற்குச் சென்று அடித்தகைக்குக் கிட்டிக்கோலும் காலுக்குங் கழுத்துக்கும் அண்ணாந்தாளும்போட்டு அந்தத் துஷ்டனுக்குத் தகுந்த சிக்ஷைசெய்து வருவதற்கு இதோ செல்கின்றேனிந்தப் பகதூர்.

(பாண-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள் பிதா.

## சத்தியவாக்கு அரிச்சந்திரமகாராஜாவின்

### நான்காவது சபை.

பொது விருத்தம்.

ஆரணி யத்திற்கேகி யரியமா மிருகமெல்லாம்
பூரண மாசுத்கொன்ற புரவலன் மீண்டுசொந்த



ஊரனு மெய்துஞ்செங்கோ லோச்சிடத் தகுதியுற்ற
காரணக் கொலுச்சபைக்குக் கண்பமாய் வந்திட்டானே.

(அரி-வ-ம்.) காவலாயுற்ற சேவகன் யாவன்.

(சேவ-வ-ம்.) பார்த்திபா அடியேன் காத்திருக்கின்றேன்.

(அரி-வ-ம்.) அடா சேவகா நீ யந்தப்புரத்துக்குச்சென்று வேட்டைக்கேகிய தந்தைதாய் மந்திரிமுதலானவர்கள் கொலுச் சபைக்கு வந்திருப்பதாகத் தெரிவித்து எனதாவனுக்குகந்த தேவ தாசனைச் சிக்கிரமழைத்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) செப்பியபடியே யிப்பவே யழைத்துவருகின் றேன் மகாராஜ்.

பொது விருத்தம்.

சுந்தரப் பணியிலங்கத் தூயபட் டுடைதுலங்கக்
கந்தமு மிருந்தநல்ல களபசந் தனமும்பூசிச்
சிந்தூரப் பொட்டுமிட்டுத் திகழுடைப் புகள்தரித்துத்
தந்தையின் சபைக்குத்தேவ தாசனும் வருகின்றானே.

## தேவதாசன்வருந் தரு.

[பள்ளிதனிலேயிருந்து பிள்ளைகளுக்குமெனக்கும்
படிப்புச்சொல்லிவையம்மா]
என்ற தாராச்சந்திரசபாவின் வர்ணமெட்டு.
இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

சந்திரனைநிகர்வதனந்துலங்கச்சிறுதேவ
தாசனுமிதோவந்தானே.

அநுபல்லவி.

சுந்தரப்பணிகளாட விந்தையுடனொளிரவே
தந்தைதாய்மந்திரிமார்களும் சிந்தைமிகக்குளிரவே (சந்தி).

(தேவதாசன் வசனம்.) பிதா வந்தனம்புரிகின்றேன்.

(அரி-வ-ம்.) கல்யாண கண்மணி.

(தேவ-வ-ம்.) மாதா வந்தனம்புரிகின்றேன்.

(சந்-வ-ம்.) கல்யாண் செல்வமே.

(தேவ-வ-ம்.) பிரதான் வந்தனம்புரிகின்றேன்.

(சத்-வ-ம்.) கல்யாண் பாலகா.

(அரி-வ-ம்.) ஆஆ தனயா எனது மடிமீது வீற்றிருப்பாயாக.

(தேவ-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றேன் பிதா.

பொது விருத்தம்.

கோபமா யெழுந்துசென்ற கோசிக முனியுமங்ஙல
மாபதி யெனுமயோத்தி மாநகர் தனக்குச்சென்று
பூபதி யரிச்சந்த்ரன்றன் பொற்கொலு வதனைநாடித்
தாபமாங் குணத்தினோடு தடதட வெனவந்தானே.

விஸ்வாமித்திரர் அரிச்சந்திரனிடங்
கோபமாய்வருந் தரு.

[வந்தனமிகத்தந்தேன்யான் வந்தஇச்சபையோர்க்குமே
வந்தமர்ந்த இந்தநல்ல மாசபையிலுள்ளவர்க்கும்]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அண்டமுழுதுமதிரவே அதனில்மீன்களுதிரவே
கண்டவர்மருள் கொண்டயர்ந்திடக்
கௌசிகமுனிதோன்றினான்
ஆதிசேஷனும்நெளியவே அஷ்டகஜமுமொளியவே
கோதிலாதவன் மீதுகோபமாய்க்
கோசிகமுனிதோன்றினான்
கண்ணில்நெருப்புஞ்சிதறவே அஞ்சனயன்மால்பதறவே
விண்ணிற்றுவியே மண்ணில்மேவியே
விஸ்வாமித்திரன்றோன்றினான்
நீண்டசடைகளாடவே கிருபனையுதைபோடவே
வேண்டிவழியுந் தாண்டிமுனிவன்
வெகுண்டுசபையிற்றோன்றினான்



(விஸ்-வ-ம்.) யாரடா இவிடத்திற் சேவகன்.

(சேவ-வ-ம்.) ப்ரபு இதோ காத்துக்கொண்டிருக்கின்றேன்.

(விஸ்-வ-ம்.) அரசனென்னடா செய்கின்றான்.

(சேவ-வ-ம்.) சிம்மாதனத்தில் வீற்றிருக்கின்றார் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) நல்லது விஸ்வாமித்திரர் வந்திருப்பதாகத் தெரிவித்து அவனை யிங்கழைத்துவா சீக்கிரம்.

(சேவ-வ-ம்.) அப்படியே யழைத்துவருகின்றேன் ப்ரபு * மகராஜ் விஸ்வாமித்திரர் வந்திருக்கின்றார் தங்களையழைத்துவரச் சொன்னார் மகராஜ்.

(அரி-வ-ம்.) அப்படியா * ஹே ப்ரதான் விஸ்வாமித்திரமுனிவர் வந்திருக்கின்றாராம் அவரை யெதிர்சென்றழைத்துவருவோம் வாரும்.

(சத்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் மகராஜ்.

அரிச்சந்திரன் செ[illegible] நாமாவளி.

[வாசுதேவனே வந்தா[illegible] மெந்தனை]
என்ற கீர்த்தனையின் [illegible]மெட்டு.
இராகம்-கல்யாணி-ஏக-தாளம்.

கண்ணி.

வந்தனந்தந்தேன் தவ மாமுனிவரே
வந்தனந்தந்தேன் தவ மாமுனிவரே.

(அரி-வ-ம்.) ஆஆ முனிசிரேஷ்டரே அடியேன் வந்தனம்புரிகின்றேன்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

வந்தனம் புரிந்தேனென்று வழுத்திய வண்டா நீயுந்
தந்திடு நமஸ்காரந்தைத் தவமுனி யேற்கமாட்டேன்
உந்தனை நாடிவந்தோர்க் குதவிகள் செய்திடாமல்
நிந்தைசெய் தனுப்பிவைத்த நீதிவா னீதானேடா.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[வீதிவீதிகள்தோறும் விலைகூறினேன்]

என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

பல்லவி.

☞ அடித்திடத்துணிந்தாயோடா என்மக்களை
அடித்திடத்துணிந்தாயோடா

அநுபல்லவி.

கொடுக்கமனமில்லாமல் அடுக்கும்வார்த்தைசொல்லாமல்
கொழுத்துப்போய்மிசத்துள்ளிக் கழுத்தைப்பிடித்துத்தள்ளி ()

சரணம்.

சத்தியவானும்நீயோடா அடாபயலே
புத்தியிலானுனையடா
அத்தியமுனக்கேது நத்திவந்தாயிப்போது
துஷ்டப்பயலேநேராய் எட்டியுதைப்பேன்பாராய் (அடி)

(விஸ்-வா-ம்.) அடா துஷ்டா எனது புத்ரிகளையடித்துத் துரத்தினையல்லவா நீதானு நீதிநெறிவழுவாத சத்தியவான் அடா பாபி உனது புஜபலபாராக்கிரமத்தைப் பேதைமைகளாகிய மாதர்களிடத்திற்றானு காட்டவேண்டும் தியாகியென்று வந்தவர்களை யடித்தோட்டினது உனது நெஞ்சின் துணிவல்லவா அந்தத் துணிவுதணியும்படி யிதோ வுதைக்கின்றேன் பார் மூர்க்கா.

அரிச்சந்திரன் விருத்தம்.

தப்பிதஞ் செய்யவில்லை தவமுனி நாதாநீங்கள்
இப்படி யுதைத்ததாலே யெனக்கொரு துன்பமில்லை
கற்பதி வுற்றக்கீடங் கட்டெனக் கேட்டதாலே
பொற்பதத் திலுக்கேதேனும் புன்களு முண்டோசாமி.

☞ இந்தத்தருவைத் துரிதமாய்ப் பாடவேண்டும்.



## அரிச்சந்திரன்சொல் தரு.

[விரசமான வார்த்தைவேண்டாம் விட்டுவிடடா]

என்ற ட்ராமாப்பதத்தின் வர்ணமெட்டு

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பட்டுதேக்கீடஞ் சாமியுங்கள் பாதம்நோகுதோ

அநுபல்லவி.

எட்டியுதைத் திட்டகாலில்
இந்தத்துடிப்பேன்
அட்டியன்றிக் கெட்டியாகக்
கட்டிப்பிடிப்பேன் (பட்டு)

முத்தரிய ரத்தினஞ்சூழ்
முடியம்வீழ்ந்ததே
இத்தரையில் ஒத்தமன்னர்
இகழநேர்ந்ததே (பட்டு)

கோதகன்ற மாதவரே
கோபங்கொள்ளாதீர்
பேதையென்மேற் றீதையெண்ணிப்
பிரித்துத்கள்ளாதீர் (பட்டு)

---

(அரி-வ-ம்.) ஆஆ முனிநாதா யானுதைபட்டதினாலும் அதனால் என்போன்ற மன்னர்கள் நகைத்தற்கிடமாக எனது ரத்தினமுடி கீழேவீழ்ந்துவிட்டதினாலும் யாதொரு வருத்தமில்லை அம்மகுடம்பட்ட தங்கள்பாதம் நோகுதோ யாதோவென்று வியாகூலமாயிருக்கின்றது ஆஆ தேவே யாதொரு குற்றமுஞ் செய்யாதயான் றையலர்மையனுக் குடன்படாதகாரணத்தை முன்னிட்டு என்மீதிவ்வளவு கோபங்கொண்டால் யானதற்குப் பாத்திரமாகத் தகுந்தவனா ஆஆ ப்ரபு என்னை வித்தியாசமாயெண்ணாமற் றங்கள் சீஷனிலொருவனாகப் பாவித்துக்கொள்ளுங்கள் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

என்னுடைய வல்லமைக ளின்னதென்றே
யிதுவரையும் நீயுநன்கு யறியமாட்டாய்

மின்னியமே லுலகினைக்கீ ழிறங்கச்செய்வேன்
விளங்கிடுங்கீ ழுலகினைமே லெழும்பச்செய்வேன்
அன்னவா கனன்சிருஷ்டிக் கெதிர்சிருஷ்டி
யிப்பொழுதே செய்திடுவே னரிச்சந்த்ரா நீ
உன்னுடைய நயவஞ்ச கத்தைத்தானே
யுரைக்கின்றாய் பசப்பிமனங் கரைக்கின்றாயே.

---

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[எங்கிருந்தோ மிங்குவந்ததெப்படி நாமே]
என்ற இந்திரசபாவின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

காவினிலே மாவிலங்கு
களையெலாங்கொன்றாய்
பாவியுன்முன் மேவிவந்த
பன்றியைவென்றாய்
நங்கையர்கள் அங்கம்நோக
நன்றாயடித்தாய்
இங்குநல்ல தங்கவன்போல்
என்கால்பிடித்தாய்
வாய்ச்சரசப் பேச்சுடனே
வந்தாயென்பாலே
சீச்சிமூடா மூச்சிடாதே
செல்வாயப்பாலே

---

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீ யென்குணத்தை நன்று யறிந்தவனல்லப்போலிருக்கின்றது பார் யான் கீழுலகத்தை மேலுலகமாகவும் மேலுலகத்தைக் கீழுலகமாகவுஞ் செய்ய வல்லவ ப்ரம்மசிருஷ்டிக்குப் பதிற்சிருஷ்டி செய்யும் சாமர்த்தியமுடையவன் அங்ஙனமிருக்க யான் விடுத்த மிருகங்களைக் கொன்றனை எனது பன்றியையும் பாணத்திலெய்தனை எனது புத்திரிகளின் ஆடல்பாடல்களைக்கேட்டு பாதங்கொடாது அடித்துத் துரத்தி விட்டனை இப்போது மகா யோக்கியனைப்போல பாசாங்குப

84167



ணிக்கொண்டு கால்நோகுதோ சுவாமியென்று பசப்புகின்றனை யோ சைசை துஷ்டா அப்பாற்செல்.

அரிச்சந்திரன் விருத்தம்.

காவினை யழித்திட்டாலுங் காவலன் நகரம்நாடு
யாவையு மழித்திட்டாலும் யாதொரு தீங்குஞ்செய்யேன்
தேவரீ ரனுப்பிவைத்த செயலினை யறிந்திடாமற்
பூவிநான் செய்தகுற்றம் பண்ணவா மன்னிப்பீரோ.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

[மாயாகானிமோசமேலா எமந்தனேசெலி]
என்ற ஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவிதமென்றெளியேன் ஏதுமறியேன்சாமி

அநுபல்லவி.

மந்திரவேத மாமுனிநாதா
மகிதலந்தனிலுளோர் புகழும்ப்ரக்யாதா (இந்)

சரணம்.

தெரியாமல்நான்செய்த சிறுபிழைதன்னைத்
தேவரீருமன்னிப்புச் செய்தினியென்னை
அரியபொன்னடிதனக் காளாக்கிக்கொள்ளும்
ஐயாமனக்கோபத்தை யப்பாலேதள்ளும் (இந்)

---

(அரி-வ-ம்.) ஆஆ சுவாமி எனது நாடுநகரங்களை யழித்தாலுஞ்சரி காடுகரைகளை யழித்தாலுஞ்சரி பவுஷுபாக்கியங்களை யழித்தாலுஞ்சரி இன்னும் எனது வம்ஸத்தையும் மரியாதையையு மழித்தாலுஞ்சரி தேவரீரனுப்பி வைத்ததாய்க் கிஞ்சிற்றேனுந் தெரிந்திருக்கும்பக்ஷத்தில் அந்த மிருகங்களை யான் கொன்றிருக்கவேமாட்டேன் ஏதோ நாயேன் றெரியாமற்செய்த குற்றத்தை க்ஷமித்து ரக்ஷிக்கவேண்டும் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

கெஞ்சினால் மிஞ்சுகின்ற கீண்டுணித் தனமும்பின்னும்
மிஞ்சினாற் கெஞ்சுகின்ற வித்தையும் படித்துக்கொண்ட

வஞ்சகா வுன்னைத்தேடி வந்துகிர்த் தனம்புரிந்த
என்சிறு பிகளைநீயு மிழுத்தடித் துதைத்ததேண்டா.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீயோ கெஞ்சினல் மிஞ்சு வதும் மிஞ்சினற் கெஞ்சலுமான வஞ்சககுணத்தையுடையவ னென்று நன்றாய்த் தெரியவருகின்றது நல்லதிருக்கட்டும் உன்னிடம் ஆடிப்பாடித் தியாகம்பெறவந்த என் புத்திரிகளை நீயடித்துத் துரத்திய காரணம் யாது சீக்கிரந் தெரிவிப்பாயாக.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதவ முனியேயந்த மங்கையர் தங்களுக்குக்
காதல்சேர் மக்களென்ற காரணை மறியமாட்டேன்
தீதுரை மொழிந்தார்கெட்ட செய்கையிலமிழ்த்தப்பார்த்தார்
ஆதலாற் கோபமிஞ்சி யவர்களைத் தள்ளினேனே.

(அரி-வ-ம்.) ஆ ஆ-முனிநாதா அந்தப்பெண்கள் தங்கள் புத்திரிகளென்ற விபரம் எனக்குத்தெரியாது அவர்களென்னிடம் வந்து ஆடல்பாடல்களைக்காட்டி மையலையூட்டி மருவவழைத்தார்கள். யானிணங்கவில்லை பின்னர் அரசாங்கத்திற்குரிய வெற்றிக் குடையைக் கேட்டார்கள். அதன்றி வேறுபொருள்த் தருகின்றேனென்றேன் அதற்காகப் பலவாறு தூஷித்தார்கள் அதனாற் கோபமுண்டாகி அவர்களை யப்பாற்றள்ளும்படி செய்தேனே யன்றி அடிக்கவில்லை இந்தக் குற்றத்தையு மன்னிக்கவேண்டும் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

நாரிக ளுடையபாட்டும் நடனமுந் தெரிந்துகொண்டு
கோரிய படியேவேண கொடையது தந்திடாமல்
வீரிய வார்த்தைபேசி விரட்டிநீ யடித்துவிட்டுக்
காரிய மாகவென்முன் காரணங் காட்டினயே.

---



## விஸ்வாமித்திரருக்கும் அரிச்சந்திரனுக்குந் தர்க்கம்.

[அங்குநானிருந்தவனை யழைத்துவந்ததேண்டிகண்ணே]

என்ற இந்திரசபாவின் வர்னமெட்டு.

இராகம்-சுருட்டி.-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

விஸ்வாமித்திரர்சொல் கண்ணி.

முன்னமேநீகற்றவித்தை முழுதுமெடுத்தெடுத்து
என்னிடத்திற்காட்டவந்த தென்னடாவரிச்சந்திரா

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

கற்றவித்தைதானெடுத்துக் காட்டவில்லையேழைசெய்த
குற்றமதைநீர்பொறுத்துக் கொண்டிணைப்பீர்மாமுனியே

விஸ்வாமித்திரர்சொல் கண்ணி.

என்னுடையசெல்விகளை யின்றேமணங்கொண்டாயானல்
உன்னுடையகுற்றமதை யுன்னேனடாவரிச்சந்த்ரா

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

மாண்டாலுமன்னவனன் மனுநீதியைக்கடந்து
நீண்டாப்புலைச்சிகளைச் சேரமாட்டேன்மாமுனியே

விஸ்வாமித்திரர்சொல் கண்ணி.

வசிஷ்டனுன்றகப்பன் வண்புலையனானடா
அதனுலேநீபுலைய னல்லவோடாவரிச்சந்த்ரா

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

அச்சாபந்தீர்ந்தவர்நீ ராயிருக்கவிப்பொழுது
சிற்சாதிமாதர்களைச் சேரச்சொன்னீர்மாமுனியே

விஸ்வாமித்திரர்சொல் கண்ணி.

சேருவதால்சேருகின்ற தீயபுலைமையையும்
பூருவபாபங்களையும் போக்கடிப்பேனரிச்சந்த்ரா

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

வெட்டிவிட்டாலுஞ்சரியே மேலுமுங்கள்கோபத்தியாற்
சுட்டுவிட்டாலுஞ்சரியே தோகையரைச்சேரேன்சாமி

விஸ்வாமித்திரர்சொல் கண்ணி.

மாபுதல்விகளைநீயும் மகிழ்ந்துமணஞ்செய்யாயானால்
சாபமதுநானுனக்குத் தந்திடுவேனரிச்சந்திரா

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

கோபமதுதீரும்படி கொடுக்கும்பெரிதாகிய
சாபமதுதாருமையா தமியேனேற்றுக்கொள்கிறேன்

விஸ்வாமித்திரர்சொல் கண்ணி.

வலியவேதேடிவந்த மங்கையரைக்கூடாதநீ
புலையனுக்கடிமையாய்ப் போகக்கடவாயடா

அரிச்சந்திரன்சொல் கண்ணி.

அன்னைபிதாகுருதெய்வம் அத்தனையும்நீரேசாமி
பொன்னடிதனைப்பணிந்தேன் புண்ணியனேகாருமையா

(அரி-வ-ம்.) ஆஆ முனிநாதா எனக்கு அன்னை பிதா குரு தெய்வமென்று சொல்லும்படியான சகல ஆதாரமுந் தாங்களாயிருக்க இப்போது கொடுத்த சாபத்தை மாற்றுகின்றேன் பயப்படாதேயென்று சொல்வதற்கு வேறுயாவரிருக்கின்றனர் ஆஆ ப்ரபு இதோ தங்கள் பாதத்தைப்பிடிக்கின்றேன் என்னை ரக்ஷிக்க வேண்டுந்தேவே.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

இந்திர ஜாலக்காரன் எத்தினிற் கெட்டிக்காரன்
தந்தைதாய் தெய்வமென்று சாற்றியே பதம்பிடித்தாய்
உந்தனுக் கீய்ந்தசாப மோட்டுவே னிப்போதெந்தன்
சுந்தர மின்னார்தம்மை சுகமுடன் மணஞ்செய்வாயே.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீ மகா எத்துவித்தைகள் படித்த சித்தனாயிருக்கின்றாய் இப்போது தந்தையென்றும் தாயென்றும் தெய்வமென்றும் பசப்பி யென்பாதமிரண்டையுங் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டனை நல்லது இப்போதேனும் எனது புதல்விகளை மணஞ்செய்துகொள்ள விரும்புவாயாகில் உனக்கிட்ட சாபத்தை நிவர்த்திசெய்யத் தடையில்லை இதற்கென் சொல்கின்றனை அரிச்சந்திரா.



அரிச்சந்திரன் விருத்தம்.

பொன்னது வேண்டினாலும் புரவல னரசோடிந்த
நன்னகர் வேண்டினாலும் நாட்டினை வேண்டினாலும்
மின்னிடு கண்கள்ரண்டும் வேண்டினுந் தருவேனீசக்
கன்னியர் தன்னைமட்டுங் கருத்தினிற் குறியேனையா.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனது செல்வத்தை வேண்டினாலும் நாடுநகரம் அரசாக்ஷி முதலானவைகளைக் கேட்டாலும் அல்லது எனக்கு ப்ரதானமாயுள்ள இரண்டு கண்களைக்கேட்டாலுங் கொடுப்பேனேயன்றி பரதாரகமனமில்லாமலும் பொய்யுரையாமலும் நீதிமுறைப்படி நடக்க விரதம் பூண்டயான் நீசப்பெண்களை மணம்புரியச் சொற்பனத்திற்கூட விரும்பமாட்டேன் ப்ரபு இதை யுண்மையாய் நம்புங்கள்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

திருநகர் நாடுமற்ற செல்வமுங் கொடுப்பேனென்று
பெருமையா யுரைத்தவார்த்தை பிசகிடா மற்படிக்குத்
தருவது மெய்யேயானால் சந்திரா தித்தர்காண
மருமலர்க் கையாற்றாரை வார்த்தெனக் களிப்பாய்மன்னா.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீ யிப்போது நாடுநகர பவுஷ பாக்யாதிகளனைத்துங் கொடுப்பதாய்ச் சொன்னாயல்லவா அந்த வாக்கு மாறாமற் சந்திரசூரியாளறிய இப்பொழுதே யுனது ராஜ்யமுதலான சகல சம்பத்துகளையும் எனக்குத் தாரைவார்த்துக் கொடுபார்ப்போம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மதியிர வியுமாகாய வாணியும் பூமிதேவி
நிதியெனு மூவர்மற்ற தேவர்க ளறியத்தானே
பதியா சுரியநாடு பவுஷ பாக் கியங்கள்யாவுந்
ததியிதி லுமக்குநானுந் தாரைவார்த் தளித்திட்டேனே.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி சந்திரசூரியாள் ஆகாயவாணி பூமாதேவி ப்ரம்மா விஷ்ணு சிவன்முதலான தேவர்களறிய எனக்

குரிய நாடுநகரபஷுஷைபாக்யாதிகளனைத்தையும் மனஸ்பூர்வமாக இதோ தங்களுக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டேன் இனிமேலெனக்கிந்த ராஜ்யத்தில்யாதொரு பாத்யதையுமில்லையென்பது சத்தியம் ப்ரபு.

## விஸ்வாமித்திரர்சொல் தரு

[பசியக்தஹரா ஸைனஹரா ஸௌரதனவு ]

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-சாபு.

பல்லவி.

அடா-உன்னைப்போல மன்னனிந்த
உலகிலுண்டுமோ (அடா-உன்னை)

அநுபல்லவி.

சொன்னமொழி பின்னமிலாத்
தோன்றல்நீதானே
குதிலாத நீதவானைத்
தூஷித்தேனனே அடா (உன்னை)

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா உன்னைப்போல வாக்குறுதியுள்ள மன்னவர்களை யானெங்குங் கண்டிலேன் அங்ஙனமிருக்க யான்முன்பின் யோஜனையின்றி யுன்னைத்தூஷித்து விட்டதைப் பற்றி நீ வருத்தங்கொள்ளாதே யரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரபு தாங்களென்னைத் தூஷித்த வாசகங்களெல்லாம் ஆசீர்வாதமேயன்றி வேறன்று அங்ஙனமிருக்க யானதற்காக வருத்தங்கொள்ளப்போகின்றேன் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) ஹே அரிச்சந்திரா நீயேதோ ராஜ்யாதிசம்பத்துக்களை மொத்தமா யெனக்குத் தாரைவார்த்துவிட்டாயேயன்றி உனக்குரியவை யின்னின்னதென்று விபரங்காட்டவில்லை ஆகையாலவைகளை யென்னிடத்தில் வகைதொகையாகக்காட்டி யொப்பிப்பாயாக.

அரிச்சந்திரன் விருத்தம்.

அங்காதி யைம்பத்தி யாறுதேசம்
அடக்கு மென் னுக்கிளைக்குட் படிந்தநா



மங்காத கோசலையென் சொந்தராஜ்யம்
வயங்குமிவ் வயோத்தியெந்தன் வாசஸ்தானஞ்
சிங்கார மாகவிங்கே தோன்றும்நல்ல
திருமனை முதற்சகல விபரமெல்லாம்
மின்காவி யுடைதரித்த முனியேநன்றாய்
விள்ளுவேன் நீருமொப்புக் கொள்ளுவீரே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[வேதமுடிவிலிசே யானவிஸ்வாமித்ர ரிஷியே]

என்றகருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

முத்திதனக்குநல்ல
முனியே-தவக்
ரத்தினங்கள்விளைவு
நாடு-வயற்
மாதமும்மாரிபெய்யும்
தேசம்-நல்லோர்
பதமில்லாமற்புவி
வாழும்-இன்னுங்
தாரணியிற்குடிகள்
காலம்-அவாள்
ஆறிலொருகடமை
வாரம்-பெரும்
எதிரிகள் நுழையாமல்
கோட்டை-கள்ளப்
அதனருகுமுழுதும்
அகழி-நெடுங்
பத்தியுடன்பஜிக்க
லக்ஷமே-பூஜை
நித்தியமெவர்க்கும்ப
சத்ரம்-வெகு

வித்தாய்வந்தகோசிக
கனியே-நவ
மெத்தவுளகோசல
காடு
நீதமிகுந்தவிந்தத்
வாசம்-பசு
யாதரவினைநாடி
கேளும்
சாகுபடிசெய்திடுங்
மூலம்-அதில்
சேரும்நமக்குக்குடி
பாரம்
மதில்கள்நிறைந்தவிந்தக்
பாட்டை-யின்னும்
உதகம்நிறைந்திருக்கும்
தகழி
முத்திதருமீசனை
நயமே-யிங்கு
டித்தரந்தருந்தர்மச்
சித்ரம்

| | |
|---|---|
| சிற்றரசர்கொடுக்கும் | பொற்பணம்போடும்பணச் |
| சாலை-ஆங்கை | யாலே-பிதைச் |
| சுற்றிலுமுள்ளவர்கள் | முற்றிலுமேகணக்கப் |
| பிள்ளை-வேலை | கொள்ளை |
| சானைதிரியைவெல்லச் | சேனையுடனேசெல்லுந் |
| தேரோ-பிதோ | நேரோ-பின்னும் |
| வானையளாவுமிது | யானைகள்கட்டிடுஞ்சஞ் |
| சாரம்-வெகு | தாரம் |
| வாயுவேகத்தைப்போலே | பாயுங்குதிரைகட்டும் |
| லாயம்-சம்ப்ர | தாயம்-இது |
| தாயகமுடனெங்கள் | ஆயுதாஸ்திரம்வைக்குஞ் |
| சாலை-நல்ல | வேலை |
| ஒவியநவரத்ன | மேவியவெனதரண் |
| மணையே-பிது | தனியே-நானுந் |
| தேவிசந்த்ரமதியுஞ் | சேர்ந்துபடிக்கும்பள்ளி |
| அறையே-யெங்க | ளிறையே |
| ஜோதியருளால்மனு | நீதிசெலுத்துங்கொலுக் |
| கூடம்-இந்த | மாடம்-ஐயா |
| ஆதலினுலேநீரும் | பேதகமின்றியர |
| சாளும்-சாந்த | நாளும். |

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தங்களுத்திரவின்படியே யாவும் ஒப்பித்துவிட்டேன் தாங்களிந்தச் சிம்மாதனத்திலிருந்து சுகமாய் ராஜ்ய பரிபாலனஞ்செய்யுங்கள் யாங்கள் சென்றுவருகின்றோம் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீ யிவைகளைக் கைநீட்டிக் காட்டிவிட்டதினுல் அரசாக்ஷியெனக்குரித்தாகாது குடிபடைகள் என்தாக்கினைக்குட்படிந்து நடக்கமாட்டார்களாதலாம் யாவருமறியப் பட்டாபிஷேகஞ் செய்துவைப்பாயேயானுல் அரசாக்ஷிபுரிவே னரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் இந்தச் சிம்யாதனத்தில் வீற்றிருங்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றேன்.



(அரி-வ-ம்.) இந்தமகுடத்தைத் தரித்துக்கொள்ளுங்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அப்படியே தரித்துக்கொள்கின்றேன்.

(அரி-வ-ம்.) இந்தச் செங்கோலைப் பிடித்துக்கொள்ளுங்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அப்படியே பிடித்துக்கொள்கின்றேன்.

பொது விருத்தம்.

அருமையுட னரசரெல்லா முடிகள்தாழ
அருந்தவமா முனிவரெல்லா மருகிற்சூழ
மருவுலவுங் களபமுலை மாதராட
மதுரமுடன் கணிகையர்கள் கீதம்பாட
இருபுறமுஞ் சேவகர்சா மரைகள்போட
இதுவென்ன புதுமையென்றே நகரோர்கூடப்
பருவதவ விஸ்வாமித் திரனுமுள்ள
படிகண்டா னபிஷேக முடிகொண்டானே.

## பட்டாபிஷேகத்தரு.

[ராஜாதிராஜமகா ராஜேந்த்ரன் கொலுவந்தான்]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

மகுடாபிஷேகங்கொண்டான்
மாமுனிவிஸ்வாமித்ரன் (மகு)

அநுபல்லவி.

| | |
|---|---|
| | வெண்சாமரை |
| சில-மங்கையராட | தண்பாவல |
| நங்கையர்போட | விண்மேவிய |
| ருங்கவிபாட | பண்பாகவே |
| பொன்குடைநீட | கொங்கணர்புடைசூழ |
| அங்கர்கலிங்கர்கள் | தெங்கணர்முடிதாழ(மகு) |
| சிங்களர்வங்கர்கள் | |

(அரி-வ-ம்) ஆஆ ஸ்வாமி தங்களிஷ்டம்போல மகுடாபிஷேகஞ்செய்துவிட்டேன் இனிமேல் மந்திரிபிரதானிகளை வைத்துக்கொண்டு ராஜ்யாதிகாரம் நடாத்திவருவதற்கு யாது தடையிருக்கின்றது ப்ரபு.

(விஸ்-வ-ம்.) இனி யாதுந்தடையில்லை யரிச்சந்திரா நீங்கள் சுகமாய்ச் சென்றுவரலாம்.

(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றோம்.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா ஓடிவா ஓடிவா யாது மறந்துவிட்டேன் நீயுமறந்துவிட்டாய்போலிருக்கின்றதே.

(அரி-வ-ம்.) இதோ வந்துவிட்டேன், என்ன விசேஷம் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அரசாங்கத்திற்சகையாளமான கணையாழியைக் கொடுக்காமற்போகின்றனையே.

(அரி-வ-ம்.) வாஸ்தவந்தான் இதோ கொடுத்தேன் பெற்றுக்கொள்ளுங்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) நல்லது சென்றுவா.

(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றேன்.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா ஓடிவா ஓடிவா இன்னொன்று மறந்துவிட்டேனே.

(அரி-வ-ம்.) இதோ வந்துவிட்டேன் என்ன விசேஷம் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) நீயும் உனது மனைவியும் உனது மைந்தனுந் தேகத்திலணிந்திருந்திருக்கின்ற ஆபரணங்களையுங் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்.

(அரி-வ-ம்.) அப்படியே யிதோ கொடுத்தோம் விடைதாருங்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) நல்லது சென்றுவாருங்கள்.

(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றோம்.

(விஸ்-வ-ம.) அடா அரிச்சந்திரா ஓடிவா ஓடிவா எனக்கடிக்கடி மறதியுண்டாகின்றதே.

(அரி-வ-ம்.) இதோ வந்துவிட்டேன் என்ன விசேஷம் ப்ரபு.



(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீங்கள் தேசாந்திரிகளாகச் செல்லக்கூடிய நிலைமையாய்ப்போனவர்களுக்குச் சொர்னச்சரிகையுடைகளெதற்காக வேண்டும் ஆகையால் அவைகளையும் அவிழ்த்துக்கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பணிந்துல கோர்கொண்டாடும் பண்ணவா கிருபையின்றித்
துணிந்துநீ ரெந்தவுள்ளந் துடித்திட வார்த்தைசொன்னீர்
தணிந்தவ ராகினுமுந் தருந்தனன் மானங்காக்க
அணிந்திடுந் துகிலையீந்து யாங்களென் செய்வோமையா.

அரிச்சந்திரன்சொல் தரு.

[மாதே நீயென்னோடே வனத்துக்கேகலாம்வாடி]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-இந்துஸ்தானி-காபி-ஏகதாளம்.

பல்லவி.

மாதவரோ நாநுமக்கு மறுவார்த்தையென்னசொல்வேன்.

அநுபல்லவி.

நீதமோவிதைக்கேட்பது நீனிலமேகமேசாமி (மாத)

சரணங்கள்.

உடமையில்லையானாலும் உணவில்லாதபோனாலும்
புடவையில்லாமலெங்கும் போகலாகுமோவென்சாமி (மாத)
நாடுநகரங்கொடுத்தோம் நல்லசெல்வமுங்கொடுத்தோம்
ஆடையுங்கொடுத்துவிட்டு யாரிடம்போய்க்கேட்போம் (சாமி)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தங்கள் திருவாக்குக்கு மறுவார்க்கென்னசொல்லப்போகின்றேன் பாருங்கள் உண்ணாதிருந்தாலும் உடைமையில்லாமற்போனாலும் ஆடையில்லாமல் வெளியிற்சென்றால் யாவரும் நகைப்பார்களல்லவோ ப்ரபு ஆகையால் ஏதோ நாடுநகரசெல்வமுதலனைத்துங்கொடுத்துவிட்டோம் அணிந்திருக்கின்ற ஆடைகளையுங் கொடுத்துவிட்டு நாங்கள் யாரிடம்போய்க் கேட்போம ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீ யேதோ ஆடைகளைப் பிடுங்கிக்கொண்டு நிர்மாணமாயனுப்புவேனென்று யோசித்துக் கொண்டனையோ அப்படியன்று இதோ யானணிந்திருக்கின்ற காவிவஸ்திரத்தை மூன்று துண்டாகக் கிழித்துக்கொடுக்கின்றேன் நீங்கள் மூவருமணிந்துகொண்டு அந்த வஸ்திரங்களை யவிழ்த்துக் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள்.

(அரி-வ-ம்.) அப்படியானால் இதோ கொடுக்கின்றோம் ப்ரபு * ஹே சந்திரமதி இந்தக் காவிவஸ்திரங்களில் நீயொன்றுதேவதாசனொன்று தரித்துக்கொண்டு அந்த வஸ்திரங்களை யவிழ்த்துக் கொடுத்துவிடுங்கள்.

(சந்-வ-ம்.) அப்படியே யிதோ தருகின்றோம் ப்ராணநாத்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தங்களுத்திரவின்படி யிதோ ஆடைகளைக் களைந்துவைத்துவிட்டோம் இனியேனும் யாங்கள் செல்ல நல்விடைதாருங்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள்.

சந்திரமதி விருத்தம்.

பொன்னுலகத் தோர்வாழ்த்தப் புவியுளோர் பணிந்துபோற்ற
நன்னக ரதனிற்செங்கோல் நடத்திநா மிருந்ததற்குப்
பின்னமுண் டாகியெல்லாப் பெருமையு மிழந்திப்போது
இன்னிலை மைக்குவந்த தீசனார் செயலோமன்னா.

சந்திரமதிசொல் தரு.

[என்னகாலம்எங்களுக்கு வந்ததோகலம்ஈனதியேன் ஈஸ்வரனே]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

என்னசெய்வோம் ஏதுசெய்வோம்
இந்தவிதி வந்ததையா
என்மன்னா
மாசிலாத தேசமன்னர்
பூசிதஞ்செய் ராஜரீகம்
போச்சுதையா.



நாடிழந்து நகரிழந்து
வாடிநிற்க வாய்த்ததையா
மன்னவனே
பாவிமுனி பங்குவத்தால்
காவியுடை கட்டலாச்சே
காவலனே
எவ்விதமாய் இனியிருந்து
ஒவ்விநாமும் உயிர்பிழைப்போம்
உத்தமனே

(சந்-வ-ம்) ஆஆ ப்ராணகாந்தா சிற்றரசர்கள்போற்றப்பூச்சக் கரக்குடைநீழலிலிருந்து மகா கௌரவத்துடன் ராஜரீகஞ்செய்த நாம் பாவியாகிய விஸ்வாமித்திரருடைய வஞ்சனையினால் நாடுநகர பவுஷுபாக்கியங்களையிழந்து பரதேசிகளைப்போல காவித்துணி களையணிந்து நிற்கநிழலில்லாமல் இப்படி நடுத்தெருவில்நின்று தயங்கும்படி நேரிட்டதே ஆஆ நமக்குத்தானு இவ்வித கஷ்டஞ் சம்பவிக்கவேண்டும் ஆஆ நாதா காலக்ஷேபத்திற்கு யாதொரு வகையுமில்லையே இவ்விதிவசத்திற் கென்செய்வோம் ப்ரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

மதிதயன் மகளேசந்த்ர மாமதி மானேதேனே
பதிகதி யெனக்கொண்டாடும் பண்புள மயிலேகேளாய்
நதியணி சிவனுனும் நான்முகன் மாலனும்
விதியினால் நேருந்துன்பம் விலக்குவோ னுறுபெண்ணே.

அரிச்சந்திரன்சொல் தரு.

[அறியாமல்மதிமோசமானனே யிந்தமங்கையாலேதான்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-சாபு.

பல்லவி.

என்னசெய்குவோமடி யன்னமே யினிமேலிதற்
கென்னசெய்குவோமடி யன்னமே

அநுபல்லவி.

அன்னமே-பசுஞ் சொன்னமே-யினிமேலிதற் (கென்)

சரணங்கள்.

அழுதால்நமதுகுறை தீருமோ-மனமுருகி
அழுதால்நமதுகுறை தீருமோ
தீருமோ-விதி மாறுமோ-இனிமேலிதற் (கென்)

வந்ததெல்லாமடைய வேண்டுமே-சுகதுக்கங்கள்
வந்ததெல்லாமடைய வேண்டுமே
வேண்டுமே-வினை தூண்டுமே-யினிமேலிதற் (கென்)

மனதுநொந்தழுகாதே மங்கையே போனதையெண்ணி
மனதுநொந்தழுகாதே மங்கையே
மங்கையே-யினி நங்கையே-யினிமேலிதற் (கென்)

(அரி-வ-ம்.) ஆஆ ப்ராணசகி நீயேன் விசனப்படுகின்றனை பார் (உடைமையும் வறுமையு-மொருவழி நில்லா) தென்பது போல செல்வமுந் தாரித்ரமும் ஒருநிலையில் நிற்கமாட்டாதென்பது யாவர்க்குந் தெரிந்தவிஷயம் அதற்குத் திருஷ்டாந்தமாக.

பழமொழி.

குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினுநண்ணுவர்.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது அதாவது வெண்முத்துக்குடை பிடித்து யானைமீதாரோகணித்துச் செல்கின்ற அரசரும் காலால் நடந்து தளர்வடைந்து மற்றொரு தேசத்திற்சேர்ந்தாலுஞ் சேருவாரென்றும் இன்னும்,

பழமொழி.

சிறப்புஞ்செல்வமும் பெருமையுமுடையோர்
அறக்கூழ்ச்சாலை யடையினுமடைவர்.

அதாவது உயர்வையுஞ் செல்வத்தையும் மேன்மையையுமுடையவர் அவைகளை யிழந்து வறுமையுற்றுப் பின்னுற் றருமச்சத்திரங்களைச் சேர்ந்தாலுஞ் சேருவாரென்றும் இன்னும்,

பழமொழி.

அறத்தொடுபிச்சை கூவிரப்போர்
அரசரோடிருந்தர சாளினுமாளுவர்.

91 | 181



அதாவது தருமமாயிடும் பிச்சையுண்டோ வென்று வீதியில் யாசிக்குந் தாரித்திரர்கள் அரசிலக்கினத்தோடிருந்து உலகத்தையாண்டாலும் ஆள்வார்களென்றும் நீதிநூல்கள் முறையிடுகின்றன ஆகையால் எதோகாலமட்டிலுமவரை நல்ல அதிஷ்டமிருந்தமையாற் சுகமாக ராஜரீகத்திலிருந்தோம் இப்போது கஷ்டதிசையேற்பட்டபடியால் நமக்கிவ்வித தீங்கானது நேர்ந்து விட்டது அதற்காக வியாகூலப்படும்பக்ஷத்தில் நம்மைப்பிடித்த விதிவினையானது விலகப்போகின்றதா ஒருக்காலுமில்லை வந்த சுகதுக்கங்களெல்லாம் அனுபவித்துத்தான் தீரவேண்டும் நீயதற்காக ரோதனஞ் செய்யவேண்டாம் பெண்ணே வா செல்வோம்.

(சந்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் ப்ராணநாத.

(விஸ்-வ-ம்.) ஓஹோ மறந்துவிட்டேனே அடா அரிச்சந்திரா ஓடிவா ஓடிவாவேகமாயோடிவா சீக்கிரஞ் சீக்கிரம்.

(அரி-வ-ம்.) இதோ வந்துவிட்டேன் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) நல்லவேலைசெய்தனை பார் யான்மறந்துவிட்டாலும் நீயாவது சொல்லாமலும் வந்தனங்கூடச்செய்யாமலும் தப்பித்தேன் தப்பித்தேனென்று ஓடவழிபார்க்கின்றனையே யிதுதானு யோக்யதை:

(அரி-வ-ம்.) அது யாதுவிஷயம் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

இன்னொரு தரமுநீயு மென்னிடம் வருவதுண்டோ
முன்னமே வேள்விக்காக முத்திரை யிட்டநாளும்
உன்னிடம் வைத்துப்போன துண்டுமோ விலையோவந்தப்
பொன்னையுங் கொடுத்துவிட்டுப் போகலாம் போகலாமே.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீ யினிமேலிங்கு வரப்போகின்றதுமில்லை யானுன்னைக் காணப்போகின்றதுமில்லை ஆதலால் யான் முன்னால் வேள்விக்காக ரொக்கமாய்க்கட்டி முத்திரையிட்டு உன்னிடம் அடைக்கலமாக வைத்துப்போன பொன்னையுங் கொடுத்துவிட்டுச் சுகஜீவியாய்ச் சென்றுவா.

அரிச்சந்திரன் விருத்தம்.

மண்ணினில் நன்மைதீமை மற்றவை யனைத்துமஞ்ஞானக்
கண்ணினு லறிந்துரைக்குங் கடவுளே யுமக்குத்தத்தம்
பண்ணிய பொக்கிஷத்திற் பாரயா கத்திினுக்கு
ஒவ்வணிய பொருளிருக்கு முண்மைநீ ரறிந்திடீரே.

அரிச்சந்திரன்சொல் தரு.

(கின்னுபாகி எட்லகந்தரு)

என்ற கிருத்திகையின் வர்னமெட்டு.

இராகம்-பலஹம்ஸா-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னவார்த்தை சொல்கிறீரையா

அநுபல்லவி.

பொன்னொரமந்தப் பொக்கிஷந்தானே (எ)

சரணம்.

தனிமையாய்வேறே தனமெனக்கேது
இனிமையாய்ப்போவென் றியம்புமிப்போது (எ)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி என்னவார்த்தை பாஷிக்கின்றீர்கள் பாருங்கள் தாங்கள் கொடுத்த பொன்னை அந்தப் பொக்கிஷத்திற்றான் போட்டுவைத்திருக்கின்றேனேதவிர யாதொன்றுங் கொண்டுவரவில்லையே அங்ஙனமிருக்க என்னிடத்திலந்தப்பொன்னைக்கொடுவென்றுகேட்டால் யானெங்கிருந்து தருவேன் வீணுகத் தொந்தரிக்காமல் விடைதாருங்கள் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

அடுக்குமோ விந்தவார்த்தை யாதவன் குலத்துவேந்தர்
எடுத்தநற் கீர்த்தியுன்பா லில்லையே தாரைவார்த்துக்
கொடுத்ததைப் பின்னும்வாயாற் கூறிட லாமோசொன்ன
முடிப்பதை யில்லையென்று மொழிந்திடிற் போதுமன்று.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீ பாஷிப்பது நன்றாயிருக்கின்றதே பார் முன்னிருந்த சூர்யகுலத்து மன்னர்கள் சொற்றவறமாட்டார்கள், அந்தக்குணமுஞ் சத்தியமும் உன்னிடத்திலில்



லைப்போலிருக்கின்றது ஏதோ பசப்பிப்பசப்பி அடிக்கடி காலில் வீழமட்டுங் கற்றுக்கொண்டனை இந்த மோசவித்தையெல்லாம் எனக்குந்தெரியும் பார் எப்பொழுது ராஜ்யத்தை யெனக்குத் தாரைவார்த்துவிட்டனையோ அப்பொழுதே யதற்குள்ளடங்கிய திரவியமெல்லாம் எனக்குரித்தாகிவிட்டது நீ யதைப்பற்றிப் பேசுதற்குருகனன்று ட கொடுத்துவைத்திருந்த பொன்னுக்குப் பதிற்பொன் கொடுக்கமுடியுமானுற்கொடு இல்லாவிடில் யான் பொன் கொடுத்துவைக்கவில்லையென்று சொல்லிவிடு நீ தாரைவார்த்துக்கொடுத்த ராஜ்யாதிபாக்கியங்களை வேண்டுமானுலுந் திருப்பிக்கொடுத்துவிடுகின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஆகம வேதசாஸ்த்ர மனைத்துமே பொய்த்திட்டாலுந்
தேகமே யழிந்திட்டாலுஞ் ஜீவனுங் கழிந்திட்டாலும்
யோகமா முனியேபென்பா லுண்மையாய்க் கொடுத்தபொன்னைப்
பாகமா யில்லையின்று பகர்ந்திட முடியாதையா.

அரிச்சந்திரன்சொல் தரு.

[மன்றுநீர்மணம்கொண்டு வாடநான்சகிப்பேனு]

என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பொய்யனுவளவேனும் புகலேனொருபொழுதும்

அநுபல்லவி.

வையம்பணியும்பாதா மாதவமுனிநாதா (பொ)

சரணம்.

இந்தநகரிலேனும் இரந்துபொன்றருகிறேன்
சந்தோஷமாகவிடை தாரும்போய்வருகிறேன் (பொ)

(அரி-வ-ம்.) ஆஆ-ஸ்வாமி அடியேன் ஒருபோதும் பொய்மொழி பாஷிக்கமாட்டேன் எனது திரவியத்துடன் றங்கள் பொன்னையும் பெற்றுக்கொண்டீர்களென் றெண்ணினேனேயன்றி வேறன்று நல்லது இந்த நகரத்திற் பிச்சையெடுத்தாவது தங்களுக்

குரிய பொன்னைச் சேகரித்துவந்து தருகின்றேன் விடைதாருங்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீயிந்த நகரத்திற் பிச்சையெடுத்தாலும் அதுவும் எனக்குச் சொந்தந்தானே ஆதலால் நீ யிந்த ராஜ்யத்திற்குள்ளாகவே பிரவேஜிக்கக்கூடாது தெரியவருமா.

(அரி-வ-ம்.) ஆனால் வேறு நகரங்களுக்குச்சென்றாவது பொருட்சேகரித்துக்கொண்டு வருகின்றேன் அதற்காவது ஒரு கெடுக்கொடுங்கள் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

தக்கவன் றனிடத்திற் சவைக்குச் சேலைபோட்டுக்
கொக்கதின் பின்னேசென்ற கொள்கைபோற் போவந்தாய்
கைக்குளே வெண்ணைவைத்துக் காலெலாம் நோவெடுக்க
நெய்க்கலை வாருமுண்டோ நின்மொழிக் கிணங்கேன்போடா.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[நின்னுகம்பிருனு கிரஜனயனு]

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஓடிப்போகவழி தேடப்பார்க்கிறாயோ

அநுபல்லவி.

ஜாடைப்பேச்சுங்கேட்டேன் தப்பவிடமாட்டேன் (ஓடி.)

சரணம்.

எப்படியாகிலும் இங்கேதானேபொன்னை
ஒப்பிவிப்பாயானால் ஓட்டிடுவேனுன்னை (ஓடி)

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா உன்னுடைய ஜாடையெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரிகின்றது பார் நீ யென்முன்பாக விருக்கின்றபோதே யிவ்வளவு ஜாலமுஞ் சம்பிரதாயமும் பேசுகின்றவன் என்னைவிட்டகன்றால் அப்படியே யோடிப்போய்விடு



வாய் அப்பாலுன்னைத் தேடிக்கண்டுபிடிக்க என்னாலாகாது ஆகையால் எனக்குச் சேரவேண்டிய பொன்னை யிவ்விடத்திலேயே கொடுத்துவிட்டுத்தான் போகவேண்டும் இல்லாவிட்டால் உன்னை விடமாட்டேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

வரமரத் தினிலேறாரும் வந்திடா ததுபோல்நீருங்
கரமதிற் பொருளிலானைக் கசக்கினா லென்னசெய்வேன்
குரவனே யெந்தனோடு கூடவோர் மனுஷன்றன்னைத்
தாமுடனனுப்பிவைத்தாற் றருகுவேன் பொன்னைத்தானே.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமிபட்டமரத்தில் நாருரிக்கமுயன்றது போல கையிற்பொருளில்லாத என்னை நிர்ப்பந்தஞ்செய்தால் யானெப்படிக் கொடுப்பேன் ஆகையால் என்னை யனுப்புவதற்குத் தங்களுக்கு நம்பிக்கையில்லாவிடிற் கூடவே யாரேனும் ஒருமனுஷனை யனுப்பிவைத்தால் அவனிடம் பொன்னைக்கொடுத்தனுப்பிவைக்கின்றேன் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) இந்த வார்த்தை வாஸ்தவந்தானா.

(அரி-வ-ம்.) வாஸ்தவந்தான் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அப்படி யான் கொடுக்குங் கெடுக்குள்ளாகப் பொன்கொடாமற்போனால் அதற்குப் பிரமாணமென்சொல்கின்றனை.

அரிச்சந்திரன் விருத்தம்.

தந்திடுங் கெடுக்குள்ளாகத் தக்கபொன் கொடுக்காவிட்டால்
விந்தைசேர் கற்புமாதர் மீதினி லாசைபூண்டு
சொந்தவில் லறதர்மங்கை சோரவிட் டிடுவோன்கொள்ளும்
அந்தமா பாபந்தன்னை யானடைந் திடுவேன்சாமி.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தாங்கள் கொடுக்குந் தவணைக்குள்ளாகப்பொன்கொடாமற்போவேனாகிற் கற்புவழுவாத அன்னியமாதர்கண்மே லிச்சைபூண்டு இல்லறதர்மத்தைக் கைவிட்டவனடையும் பாபத்திற்குப் பாத்திரமாகக்கடவேன் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

மன்னவனே நின்மனதுப் படியேநானோர்
மண்டலமுங் கெடுக்கொடுத்தே னாகையாலே
யென்னுடைய தேசமதை விட்டேயப்பால்
ஏமகூடங்காசி நகரஞ்சென்று
பொன்னதனைச் சவதரித்துக் கொடுக்கவேண்டும்
பொருள்வாங்க வனதாயினால் மறையோனை
சின்னவனை யனுப்புகின்றே னவனைக்கூட்டிச்
செல்லுவாய் தடையிருந்தாற் சொல்லுவாயே.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா உனது வேண்டுகோளுக் காக இதுமுதல் நாற்பத்தெட்டுநாட் கெடுக்கொடுத்திருக்கின்றே னாதலால் நீயெனக்குத் தத்தஞ்செய்த ராஜ்யத்திற்குட்பிரவேசியா மல் அதற்கப்பாலுள்ள ஏமகூடபர்வதம்காசிமுதலான இடங்கட் குச்சென்று தவணைதப்பாமற் பொன்சேகரித்துக்கொடுத்தனுப்ப வேண்டும் அந்தப் பொன்னை வாங்கிக்கொண்டு வருவதற்காக உன்னுடன் ஓர் அந்தணச்சிறுவனைத் தாசனாயனுப்பிவைக்கின்றே னரிச்சந்திரா இதற்கேதாவது தடையிருந்தாற் சொல்வாயாக.

அரிச்சந்திரன் விருத்தம்.

தடைமொழி யேதுமில்லை தவத்தரே நகரில்வாழுங்
குடிபடை மந்திரிமார்கள் குற்றமென் செய்திட்டாலுங்
கடினகோ பங்கொள்ளாமற் கருணைவைத் தென்றுந்தாங்கள்
அடிமைகொண் டாளவேண்டி யஞ்சலி செய்கிறேனே.

(அரி-வ-ம்.) ஆ ஆ ஸ்வாமி தங்கள் திருவாக்குக்கு மறுவாக்கு யாதுமில்லை மந்திரிபிரதானிகள் குடிபடைகள் யாதேனும் பிழை புரிந்தாலுங் கோபங்கொள்ளாது மன்னித்துப் பாதுகாத்துவர வேண்டும் பிரபு.

(விஸ்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் பொன்னுக்காக வுன்னுடன்வருந் தாசனாகிய சிறுவனுக்கு வேண்டிய வுணவுகள ளித்துப் பாதுகாத்தனுப்பவேண்டு மரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) என்றால் வஞ்சகமில்லாமல் நடந்துகொள்கின் றேன் அவனை யென்னுடனனுப்பிவையுங்கள் ஸ்வாமி.





(விஸ்-வ-ம்.) ஹே அரிச்சந்திரா நீ யுனது மனைவிமைந்தனை யழைத்துக்கொண்டு சாயுந்திக்கரைபோய்ச்சேர் அதற்குள்ளாக நக்ஷத்திரத்தரகனை யுன்பின்னாலனுப்பிவைக்கின்றேன்.

(அரி-வ-ம்.) அப்படியேசெல்கின்றோம்விடைதாருங்கள்ப்ரபு.

(விஸ்-வ-ம்.) சுகமாய்ச் சென்றுவாருங்கள்.

(அரி-வ-ம்,) இதோ வந்தனம்புரிகின்றேன் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) கல்யாண் அரிச்சந்திரா.

(சந்-வ-ம்.) இதோ வந்தனம்புரிகின்றேன் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) கல்யாண் மாதே.

(தேவ-வ-ம்.) இதோ வந்தனம்புரிகின்றேன் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) கல்யாண் குழந்தாய்.

# நகர் நீங்கியகாண்டம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அன்னமே யரியதேனே யன்பினுக் குகந்தமானே.
மன்னிய சுருணைசந்த்ர மதியெனு மயிலேகேளாய்
இன்னகர் விட்டுநீங்கி யேமகூடத்தைத்தாண்டி
நன்னய மிகுந்தகாசி நகர்செல வருகுவாயே.

அரிச்சந்திரன்சொல் தரு.

[சாமிநீயென்னுடனே சரசமாடவாருமே]

என்ற ட்ராமாப்பதத்தின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

காசிமாநகர்செல்வோம் கடுகியென்னுடன்வாராய்

அநுபல்லவி.

மாசிலாச்சந்த்ரமதியே நாமுமே (காசி)

சரணம்.

கோசிகமுனிவருங் கொடுத்திட்டகெடுவுக்குள்
பேசினபொன்சேகரிக்க நாமுமே (காசி)

(அரி-வ-ம்.) ஆஆ-ப்ராணகாந்தி பார் விஸ்வாமித்திரர் நமக்குக்கொடுத்த நாற்பத்தெட்டுநாட் கெடுக்குள்ளாக அவருக்குச் செல்லவேண்டிய பொன்னைச் சவதரித்துக் கொடுக்கவேண்டுவதிருப்பதால் இப்போது காசிதேசஞ்செல்வோம் வருவாயாக.

(சந்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் ப்ராணநாத்.

பொது விருத்தம்.

வேந்தனு மயோத்திவிட்டு வெளியினிற் செல்லும்போது
பார்த்திவ் வாசம்ராஜ பக்தியும் வழித்தவூரில்
வாழ்ந்திடுங் குடிகள்கண்டு மனமதில் வருந்தமுற்று
ஏந்தலின் பாதந்தன்னை யிறைஞ்சியே யழுதிட்டாரே.

குடிகள் விருத்தம்.

திங்களும் ரவியுஞ்செல்லுந் திசையது மாறினாலும்
பொங்கிய கடல்நீர்சுண்டிப் போயினும் பொய்சொல்லாத
மங்கள சுகுணமன்று வஞ்சக முனிவனாலே
யெங்களைத் தனிமையாய்விட் டேகுதல் ஞாயந்தானே.

குடிகள்சொல் தரு.

[தேவாவீதென்னமாயஞ் செய்தாயேயனியாயம்]

என்ற சதாரம்நாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயோமன்னவரே நீர் அரசைவிட்டுப்போரோ

அநுபல்லவி.

தெய்வசங்கற்பமிதோ தெரியோமேயென்னசெய்வோம் (ஐயோ)



சரணங்கள்.

உம்மைச்சதமென்றெண்ணி ஊரினில்வாழ்ந்திருந்தோம்
நன்மையினிமேலில்லை நாங்களிங்கேபொருந்தோம் (ஐ)
நீதனெனுங்கோசிகன் செய்தசூதாலிப்போது
நாதனேபதம்நோக நடக்கின்றீரேமண்மீது (ஐ)
எப்போதுங்கள்முகத்தை யேழைக்குடிகள்பார்ப்போம்
ஒப்பாதயாரிடத்தில் உள்ளகுறையைத்தீர்ப்போம் (ஐ)

(குடிகள் வசனம்.) ஆஆ மகராஜ் எங்களையும் இவ்வரசாக்ஷியையும் பாவியாகிய விஸ்வாமித்திரனுக் கொப்படைத்துவிட்டுப் பஞ்சைகளைப்போல காவியுடையணிந்து காலால் நடந்து கானகமார்க்கஞ்செல்லும்படி தேவரீருக்கு விதிவசம் நேர்ந்துவிட்டதே ஆஆ தங்களைப்போன்ற மனுநீதியரசர்கள் இவ்வையகத்தி லெங்குங்கிடையாதே ஆஆ தங்களைச் சதமென்று நம்பியிருந்த ஏழைக்குடிகளாகிய நாங்கள் தங்களைவிடுத்து என்னமாய் மனஞ்சகிப்போம் ஆஆ இனிமேலெப்பொழுது தங்கள் திருமுகத்தைப்பார்த்து எங்கள் குறைதீர்த்துக்கொள்ளப்போகின்றோ மகராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அன்புள குடிகாளிங்க ளயர்ந்துள மயங்கவேண்டாந்
துன்பமுஞ் சுகமும்யார்க்குந் தோன்றுதல் சகசந்தானே
முன்பழ வினையைநீக்க முடியுமோ முனிசொற்கேட்டுத்
தென்புட னிருந்துநல்ல செல்வமாய் வாழ்குவீரே.

(அரி-வ-ம்.) ஆஆ குடிகாள் நீங்களேன் விசனப்படுகின்றீர்கள் பாருங்கள் (துக்கமுஞ்சுகமும் பக்கம்பக்கம்) என்பதுபோல எந்தெந்தக் காலத்தில் என்னென்ன சுகதுக்கங்களேற்படுகின்றனவோ அவைகளை யனுபவித்துத்தானே தீரவேண்டும் (வரும்விதிரத்தங்கா) தென்பதுபோல விதிவசத்தைத்தள்ள யாவரால் முடியும் ஆதலால் நீங்கள் சுகமாய் நகரத்திலிருந்து விஸ்வாமித்திரமுனிவருடைய ஆக்கினைகடவாது நடந்துவாருங்கள் குடிகாள்.

(குடி-வ-ம்.) ஆஆ-மகராஜ் நாங்கள் வேண்டுமானால் அந்த விஸ்வாமித்திரமுனிவனை யடித்துத் துரத்திவிடுகின்றோந் தாங்கள் வந்து ராஜ்யத்தை யொப்புக்கொள்ளுங்கள் மகராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

தாரைவார்த் தளித்ததேசந் தன்னிலே யினியிருந்தாற்
பாரினி லுள்ளோர்யாரும் பழிப்பதற் கிடமாம்நீங்கள்
கோரிய படிநாஜெப்புக் கொண்டிட மாட்டேனுங்கள்
சேரியை நோக்கிச்செல்வீர் செல்லுவீர் நகரத்தோரே.

(அரி-வ-ம்) ஆஆ குடிகாள் முனிவருக்குத் தாரைவார்த்துக் கொடுத்த ராஜ்யத்தில் மறுபடியும்வந்து அரசுசெலுத்துவது பழிப்புக்கிடமாவதன்றி மனுநீதிக்குங் கீர்த்திக்கும் விரோதமாகுமாதலால் யான் வரத்தகாது நீங்களிருப்பிடஞ்செல்லுங்கள் குடிகாள்.

(குடி-வ-ம்.) ஆஆ மகராஜ் பாருங்கள்.

பழமொழி.

கொடுங்கோன்மன்னர் வாழ்நாட்டிற்
கடும்புலிவாழுங் காடுநன்றே.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது அதாவது கொடுங்கோற் செலுத்தும் அரசர்கள்வாழுந் தேசங்களிலுங் கொடிய புலிகள் வாழ்கின்ற காடு நலமென்று நீதிநெறிகள் முறையிடுகின்றமையாற் கொடிய பாதகனாகிய விஸ்வாமித்திரன் அரசுசெலுத்தும் நகரில் இனிமேல் வாசம்புரிவதைப் பார்க்கினும் இப்படியே தங்களுடன் வந்துவிடுகின்றோம் மகராஜ்

(அரி-வ-ம்.) ஹே குடிகாள் அந்த விஸ்வாமித்திரர் யாதொரு குறைவுஞ்செய்யமாட்டார் என்னைவிட எண்பங்கதிகமாகப் பாதுகாப்பார் யானும் நேரிற்சொல்லிவைத்திருக்கின்றேனாதலின் நீங்களதைப்பற்றிக் கவலைப்படவேண்டாஞ் சுகமாய்ச் சென்றுவாருங்கள் குடிகாள்.

(குடி-வ-ம்.) ஆனாலப்படியே சென்றுவருகின்றோம் இதோ வந்தனம்புரிகின்றோ மகராஜ்.

(அரி-வ-ம்.) கல்யாணன் குடிகாள் யாங்களுஞ் சென்றுவருகின்றோம்.

(குடி-வ-ம்.) சுகமாய்ச் சென்றுவாருங்கள் மகராஜ்.



பொதுவிருத்தம்.

எந்தனது தந்திரத்திற் கிணங்கிடாமல்
எழிலரிச்சந் திரன்றனது சம்பத்தெல்லாந்
தந்தரிய மனைவிமக னுடனேசென்றான்
சத்தியவா னவனுது மிந்த்ரன்முன்னே
விந்தையதாய் நான்மொழிந்த சபதவார்த்தை
வீணாகு மென்றுடனே விஸ்வாமித்ரன்
சிந்தைநொந்து பின்றெளிந்து வேந்தன்றன்னைத்
தேடுவான் பின்றுயர்ந்தே யோடுவானே.

## விஸ்வாமித்திரர் தாராலோசனை.

ஆஆ எனது தந்திரமந்திரோபாயங்களுக்கெல்லாம் அரிசசந்திரன் கட்டுப்படாமல் நாடுநகரபாக்யாதிகள் யாவற்றையுந் தாரைவார்த்துவிட்டுப் பஞ்சைக்கோலமாய்க் காவியுடைதரித்து மனைவி மைந்தனுடன் சென்றுவிட்டானல்லவா ஆஆ அவனது சத்தியமேயன்றி யான் இந்திரன் சபையிற்சொன்ன வாக்கு அனித்தியமாகப் போய்விடும்போலிருக்கின்றதே யிதற்கென்செய்கின்றது நல்லது இப்பொழுதே யவ்வரிச்சந்திரனிடத்திற்குச் சென்று இன்னும் எனக்குத்தெரிந்த சம்பிரதாயங்களைக் காட்டி யெப்படியாவது எனது மாயவலைக்குள் மாட்டிச் சபதத்தை நிறைவேற்றிவருகின்றே னிந்தப்பகதார்.

பொது விருத்தம்.

தோதக மாகத்தேசஞ் சொத்துயா வையுங்கைக்கொண்ட
பாதக னென்றேயாரும் பழித்திடக் குடிகெடுத்த
மாதவன் பின்றுயர்ந்து வருகிற சேதிதன்னை
நீதவா னறிந்துநேச நேரிழைக் கோதுவானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

மங்கையர்க் கரசேசந்த்ர மாமதி யனமேதேனே
நங்கையர்க் கமுதேயாசை நாயகி சொல்லக்கேளாய்
தங்கமும் வாங்கப்பின்னுந் றரகனை விடுப்பேனென்ற
துங்கமா முனிவேநம்மைத் தொடர்ந்திதோ வருகின்றாரே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[பெண்ணேயுனக் கென்னகோபமடி கோபமடி]

என்ற வீரகுமாரநாடகத்தருவின் வர்னமெட்டு

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

மாமுனிவருகிறார்-மானே மடமானே-யென்ன
வஞ்சனை நடந்ததோ வகையறியேனே (மாமு)
சீமைதனைவிடுத்து-தேனோ யிங்கேநேரோ-நம்மைத்
தேடிவரும்வேகத்தைத் திரும்பிநீபாரோ (மாமு)
குடிகள்பிழையென்னசெய்-தாரோ என்செய்தாரோ-இந்தக்
கோசிகர்மேற்கோபங் கொண்டிவ்வதாரோ (மாமு)

(அரி-வ-ம்.) ஆஆ ப்ராணகாந்தி என்ன விந்தையாயிருக்கின்றது தரகனை யனுப்பிவைப்பதாகச் சொல்லிய விஸ்வாமித்திரர் இதோ தானே நம்மைத்தேடிவருகின்றாரே ஒருவேளை குடிபடைகள் ஏதாவது இவர்வார்த்தைக்கடங்கி நடவாமற் பிழைசெய்திருப்பார்களோ யாதோ தெரியவில்லையே நல்லது விசாரிப்போம் பெண்ணே.

(சந்-வ-ம்.) அப்படியே செய்யுங்கள் ப்ராணநாத.

## அரிச்சந்திரன்சொல் நாமாவளி.

[வந்தனமையா எனையா வந்தனமையா]

என்ற ப்ராமாத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-பியாகடை-தாளம்-ரூபகம்.

கண்ணி.

போற்றினேனையா வுமதடி போற்றினேனையா

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரபு இதோ வந்தனம்புரிகின்றேன்.

(விஸ்-வ-ம்.) கல்யாண அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

நெடியசா காஞ்சூழிந்த நேமியில் யாரும்போற்றும்
படிதவப் பெருமைகொண்ட பண்ணவா நகரந்தன்னிற்
குடிபடை யாவரேனுங் குற்றமுஞ் செய்ததுண்டோ
அடிமையைத் தேடிவந்த வதிசயம் புகலுவீரே.



(அரி-வ-ம்.) ஆஆ ப்ரபு ஏதோ தரகனையனுப்பிவைப்பதாகவும் எங்களைச் சரயுநதிக்கரையிலிருக்கும்படிக்கும் ஆக்ஞாபித்தீர்கள் நாங்கள் நகரத்தைக்கடந்து வெளியேவருவதற்குள்ளாக இவ்வடியேனைத்தேடி ப்ராப்தமான காரணம்யாது ப்ரபு குடிபடைகளேதேனுங் குற்றஞ்செய்தார்களா யானேதாவது மோசஞ்செய்துவந்தேனு அல்லது கூடவருவதற்கு மனுஷாள்கிடைக்கவில்லையா அதன் விபரத்தைத் தெரிவிக்கவேண்டும் ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

நல்லசுகத் துடனிருந்த மன்னுஞ்செரந்த
நாடுநக ரிழந்துபர தேசிபோல
செல்லுமலங் கோலமதை நினைந்தேயுன்னைத்
தேடிவந்தே னுதவினுல் யானிப்போது
சொல்லுமொழிப் படியெனது புதல்விமாரைச்
சுகமுடனே மணமுடித்துக் கொண்டுநீயும்
அல்லலிலாட் டகன்றுமுன்போ லரசுதன்னை
யாளுவாய் நகரினுக்கு மீளுவாயே.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திராபார் நீயனேக சுகத்துடனிருந்துவாழ்ந்த நாடுநகரத்தைவிடுத்துப் பரதேசியைப்போலநடந்து வந்ததை நினைக்க நினைக்க எம்மனந்தாளாமலுன்னைத் தேடிவந்தேனு இனி எனது வார்த்தையைமறுக்காமல் நீயெனது புத்திரிகளை விவாகஞ்செய்துகொள்ளும்பக்ஷத்தில் இந்த ராஜ்யத்தை யுன்வசம் விட்டுவிடுகின்றேன் நீ முன்போலவே சுகமாயிருந்து அரசாட்சிபுரியலாம் அதைவிடுத்து வீணுனகஷ்டத்தை யனுபவிக்கவேண்டாம் வா நம்மரண்மனைக்குச் செல்வோம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பலகலை புணர்ந்ததேவே பண்ணவர்க் கெல்லாங்கோவே
தலையினி விடிவீழ்ந்தாலுஞ் சாவுமே நேர்ந்திட்டாலும்
மலைமலை யாகத்துன்பம் வந்தெனைச் சூழ்ந்திட்டாலும்
நிலையது தவறியுந்த நேரை மணந்திடேனே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[விரசமானவார்த்தைவேண்டாம் விட்டுவிடடா]
என்ற ட்ராமாபதத்தின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னவந்தாலும் அந்தச்சேதிக்
கிணங்கமாட்டேனே.

அநுபல்லவி.

முன்னிருந்த மன்னர்களின்
முறைமைபோலவே
என்னிடத்தும் மன்னும்நெறி
யென்னுஞ்சாலவே (யென்)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனக்குமுன்னே யரசாண்ட சூர்யகுலத்தரசர்கள் இருபத்தொருபேருந் தாங்குதற்கரிய அதியாகிய பெரும்பாரத்தை யான் றாங்கவல்லேனாதலின் இன்னும் எவ்வித கஷ்டநஷ்டங்கள் நேர்ந்தாலுஞ்சரி அந்த வார்த்தைக்குடன் படமாட்டேன் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நானேதோ தர்மதேவதைக்குப் பொதுவாகச் சொல்லவேண்டியதைச் சொன்னேன் உனக்குக் கஷ்டதிசை கெட்டியாய்ப் பிடித்திருப்பதால் என்சொல்லைத் தட்டிவிட்டனை ஆகிலும் பாதகமில்லை நான்போய்த் தூதனையனுப்பிவைக்கின்றேன் நீங்கள் சரயுநதிக்குப்போய்ச் சேருங்கள்.

(அரி-வ-ம்.) அப்படியே போய்ச்சேர்கின்றோம் ப்ரபு இதோ வந்தனம்புரிகின்றேன்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் அரிச்சந்திரா.

பொது விருத்தம்.

முனிவனை யனுப்பிவிட்டு முதல்வனுஞ் சரயுநோக்கிக்
கனிவுடன் செல்லும்போது கதறியே யழுதுகொண்டு
தனிமையாய்ச் சத்யகீர்த்தி தனதுபின் வருகக்கண்டு
மனமது தேற்றிமன்னன் வார்த்தைக ளாடுவானே.



## அரிச்சந்திரன் விருத்தம்.

நித்திய மென்பால்வந்து நிகழ்ந்திடும் விஷயமெல்லாம்
புத்திநுண் மையிறைக்கண்டு புகன்றிடும் பொறுமையுள்ள
சத்திய கீர்த்தியென்னுஞ் சற்குண மந்த்ரிநீரும்
மெய்த்தவ முனியைவிட்டு விலகிவந் திடத்தகாதே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[ரிஜாஜிமைஜாபைகோங்கி ஆசமானிஜோவியா]
என்ற இந்துஸ்தானியின வர்னமெட்டு.
இராகம்-தேசிங்குதோடி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

பல்லவி.

மந்திரிநீசெந்தனுடன் வந்திடுவதுஞாயமா

அநுபல்லவி.

எந்தன்விதியாலேநானே யிக்கெதிக்காளாகினேனே (மந்)

சரணம்.

கோசிகமுனிவருக்கு யோசனையெடுத்துச்சொல்ல
நேசமுடையவரித்தத் தேசமதிலுண்டோமெல்ல (மந்)

(அரி-வ-ம்.) ஆஆ-சத்தியகீர்த்தியென் றெத்திசையும் புகழ்பெற்ற ப்ரதான்சிரேஷ்டா ஏதோ எனது வித்யாசத்தால் சுகானுபவங்களையிழந்து பரதேசியைப்போல பெண்டுபிள்ளையையழைத்துக்கொண்டு வெளியிற் புறப்படும்படி நேர்ந்துவிட்டது நீரும் எங்களுடன் கஷ்டப்பட்டுவருவது ஞாயமன்று அப்படி வரும் பக்ஷத்தில் விஸ்வாமித்திர ரருகிலிருந்து மந்திராலோசனையெடுத்துப் போதிக்கத்தகுந்த மனுநீதிதெரிந்த மந்திரிகள் உம்மைத்தவிர வேறு யாவரிருக்கின்றார்கள் ஆகையால் நீர் முனிவரிடத்திலிருந்து உமக்குரிய காரியாதிகளைப் பார்த்துக்கொண்டிரும் ப்ரதான்.

## சத்தியகீர்த்தி விருத்தம்.

அன்பினில் மிகுந்தகோவே யன்னைதந்தை யைப்போலும்மை
நம்பினே னதுபோல்நீரும் நற்புதல் வனைப்போலென்னை
யின்பமாய் வளர்த்தீரிப்போ திருப்பிட மிழந்தெல்லோருந்
துன்பமாய்ச் செல்லநானுஞ் சுகத்தினி லிருக்கப்போமோ.

### சத்தியகீர்த்திசொல் தரு.

[மோகமுனேதானலோ முத்தபெட்டோனுசாமி]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

உம்மைவிட்டுநான்பிரிய என்மனமுந்தாளாதையா

அநுபல்லவி.

செம்மலேநீர் சிந்தைநொந்து
தேசம்விட்டுப்போகும்போது
நன்மையுடன் நன்னகரில்
நானிருக்கவேயாகாது (உம்)

(சத்-வ-ம்.) ஆஆ-மகராஜ் பாருங்கள் தாங்கள் ராஜ்யாதிசம்பத்துக்களை விஸ்வாமித்திரருக் கொப்படைத்துவிட்டுப் பஞ்சைகளைப்போல ராஜ்யத்தைவிட்டுப் போகும்போது பெற்றபிள்ளையினும் உற்றபிள்ளையாயிருந்து ஊழியஞ்செய்துவந்த யான்மாத்திரம் நகரத்திலிருந்து சுகத்தையநுபவிப்பதானது தெய்வத்திற்குச் சமாதானமாயிராது. அன்றியுந் தாங்களே யெனக்கு அன்னைதந்தையென்று நம்பியிருந்தேன் அதுபோலவே நீங்களும் என்னை பிதாகாறும் பாதுகாத்துவந்தீர்களே அங்ஙனமிருக்க இப்போதுங்களை விட்டுப் பிரிந்திருக்க உன்மனஞ் சம்மதிக்குமா ஆகையால் யானுந் தங்களுக்கேற்பட்ட சுகதுக்கங்களை யநுபவித்துக்கொண்டு கூடவே வருகின்றேன் மகராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பிள்ளையார் தனைப்பிடித்த பிரபலச் சனியனங்கே
யுள்ளாசல் லரசுதன்னை யொட்டிய கதையைப்போல
சன்னையில் வருந்துமெங்கள் தலைவிதிப் பயனுமும்மை
மென்னவே தொடுத்துக்கொண்ட விதமதாய்க் காணுதையா.

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் நீர் வியாகூலப்படவேண்டாம் எதோயாங்கள் வாழுங்காலத்தில் நீரும் வாழ்வடைந்தீர் யாங்கள் தாழ்வடையும்போது நீருந்தாழ்வடையக்கருதினதானது (பிள்ளை



யாரைப்பிடித்தசனியன் அரசமரத்தையும்பிடித்தது) போல விதிவசத்தால் எங்களைச்சூழ்ந்த ஊழ்வினைப்பயனானது உம்மையும் பிடித்துக்கொண்டதுபோலிருக்கின்றது இனி யென்செய்கின்றது நல்லது சரயுநதிக்குச்செல்வோம் வாரும்.

(சத்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் மகராஜ்.

(அரி-வ-ம்.) ப்ராணசகி தாசர் வந்துவிடுவார் நடந்துவா சீக்கிரம்.

(சந்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் ப்ராணநாத்.

பொது விருத்தம்.

என்னபய பயங்களைக்காட்டியுஞ்சற்றேனும்
இணங்காம லரிச்சந்த்ரன் மறுத்துச்சென்றான்
பொன்னதனை வாங்கிவரத் தாசனாகப்
புகழ்பெற்ற சுக்கிரனை யனுப்பிவைத்து
அன்னவனைக் கிட்டிகட்டி யடிக்கச்செய்தே
யிவன்வாயிற் பொய்புதிக்கச் செய்வேனென்று
கொன்னுமொழிக் கோசிகனும் வெள்ளிதன்னைக்
குறித்திட்டான் மந்திரமுச் சரித்திட்டானே.

### விஸ்வாமித்திரர் ஆலோசனை.

ஆஆ எவ்வித பயபயங்களைக்காட்டியும் அரிச்சந்திரன் கட்டுப்படாமற் சென்றுவிட்டானல்லவா இதற்கென்செய்கின்றது நல்லது சுக்கிரபகவானைவரவழைத்து அவருக்கு வேண்டிய தந்திரங்களை யெடுத்துக்காட்டிப் பொன்வாங்குந் தாசனைப்போற்சென்று. அவன்கைக்குக் கிட்டிகட்டிக் கஷ்டப்படுத்திப் பொய்சொல்லும்படியான எற்பாடுசெய்யும்படி நக்ஷத்திரத்தாசனென்று நாமங்கொடுத்து அவ்வரிச்சந்திரனுடனனுப்புவதற்காக இப்போது சுக்கிரபகவானைவரும்படி மந்திரஞ்ஜெபிக்கின்றேன் விந்தப்பசுதாங்.

பொது விருத்தம்.

வருந்தியே முனிவனல்ல மந்திரஞ் ஜெபித்தபோதே
தெரிந்தனுஞ் சுக்ரன்கையிற் றிடமுள கிட்டிதன்னை!

பொருந்திய மார்பிற்சொர்ன்னப் பூணூல் மினுமினென்ன
அருந்தவன் முன்னால்நக்ஷத் திரையனுப்த் தோன்றினனே..

நக்ஷத்திரத்தாரகர்வருந் தரு.

[வீதிவீதிகள்தோறும் விலைகூறினேன்]

என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

பல்லவி.

தாரகரிதோவந்தாரே நக்ஷத்திரத்
தாரகரிதோவந்தாரே.

அநுபல்லவி.

கரமதிற்கிட்டிகொண்டு காலதூதனைப்போலே
விரைவினிலேமாதவ விஸ்வாமித்ரன்முன்னாலே (தா)

சரணம்.

சொன்னப்பூணூலிலங்க இடையினிலே
ஞாயபட்டுடைதுலங்க
மன்னனரிச்சந்திரன் வாயினிற்பொய்யொன்று
நன்னயமுடன்சொல்ல நானுஞ்செய்குவேனென்று (தாரக)

(நக்ஷத்திரத்தாரகர் வசனம்.) ஹே விஸ்வாமித்திரரே யிதோ வந்துவிட்டேன் வந்துவிட்டேன்.

(விஸ்-வ-ம்.) ஹே சுக்கிரபகவானே வந்துவிட்டீரோ மெத்தச் சந்தோஷம் வாரும் வாரும்.

(நக்ஷ-வ-ம்.) என்னை வரும்படியாக மந்திரஞ்ஜெபித்த காரணம் யாது.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

இந்திரவேள் சபைதனில்நீ யிருக்கும்போதே
யென்தனுக்கும் வசிஷ்டனுக்கும் நடந்ததர்க்கஞ்
சிந்தையில்நன் றாய்த்தெரிந்தே யிருப்பீரந்தச்
செம்மலரிச் சந்த்ரனர சிழந்துபொன்னுந்
தந்திடுவ தாகவொரு தவணைபெற்றுச்
சரயுநதிக் கரைதனிலே தங்கியுள்ளரின்

101 119212



அந்தமன்னன் வாயினிற்பொய் புதிக்கவும்மை
யழைத்திட்டேன் வெள்ளியினிப் பி[illegible]திட்டேனே.

(விஸ்-வ-ம்.) ஆ ஆ சுக்கிர பகவானே முன்னம் யானும் வசிஷ்டனும் இந்திரன் சபையிற் செய்துகொண்ட சபதம் உமக்கு நன்றாய்த்தெரியுமன்றோ அவ்வரிச்சந்திரனைப் பொய்யனாக்கவேண்டுமென்று என்னாலான ஜகஜாலசம்பிரதாயங்களெல்லாங் காட்டியும் அவனது நாடுநகரபண்டார பாக்யாதி சம்பத்துகளைப்பறித்தும் கடனுக்குட்படுத்தியும் எனது கோரிக்கை பயன்படாமற்போய் விட்டது கடனுக்காகவல்லவன் யானைமீதேறி விண்ணிற் [illegible] கல்லெறிந்த வுயரப்பொன்றரவேண்டும் அதற்காக [illegible] லான இடங்களுக்குச்சென்று நாற்பத்தெட்டு நாட் கெடுவுக்குள் ளாகச் [illegible] மனைவிமைந்தனுடன் சரயுநதிக்கரையிற் றங்கியிருக்கின்றான் அவன்வாயிற் பொய் வருவிக்கத்தகுந்தவர் நீரேயென்றெண்ணி வரும்படி மந்திரஞ்செபித்த பிரகாரம் வந்துவிட்டீர் யானும் பிழைத்தவனானேன் ஆதலால் நீர் நக்ஷத்திரத்தாரகனென்ற நாமம்பூண்டு பொன்வாங்கவருபவர்போற் பாவனைகாட்டி உமக்குத்தெரிந்த சாமார்த்தியத்தைக்கொண்டு அவன்வாயி லெவ்விதமேனும் பொய்வரும்படி செய்யவேண்டியது உம்மைச்சார்ந்த கடமையாயிருக்கின்றது இல்லாவிடில் எனது தவமுங்கெட்டுப் பெயருங்கெட்டு இந்திரன் சபைக்குப்போவதற்கு யோக்கியதையில்லாமற் போய்விடுஞ் சுக்கிரபகவானே இதற்கென்சொல்கின்றீர்.

நக்ஷத்திரத்தாரகர் விருத்தம்.

சுக்கிரன்சா மார்த்தியத்தை யறிந்திலீரோ
தூயமுனி யேயரிச்சந் திரனைக்கண்டு
தக்கபடி பயபயங்கள் காட்டுவேன்யான்
சரிக்குசரா விட்டாக்காற் றடையேதப்பாற்
கைக்கரிய கிட்டிகட்டி நெருக்கிக்கொண்டு
கண்களிலே நீர்ததும்பச் சவுக்காற்சீட்டி
வெட்கமதைக் கெடுத்தாகிலே குலைபவாட்டி
மெய்யைவிட்டுப் பொய்புகலச் செய்குவேனே.

(நக்ஷ-வ-ம்.) ஹே விஸ்வாமித்திரரே என்னுடையபேதைமைக் குத் தெரியாதாவென்று பாரும் அரிச்சந்திரனைக்கண்டு நயபயங்களால் வசப்படுத்திப் பார்ப்பேன் அவனதற்கிணங்கா விட்டாற் கைக்குக் கிட்டி மாட்டிச் சவுக்கினாற்றட்டி உடலீனைவாட்டியென் வேலையைக்காட்டி மெய்ப்பினையோட்டிப் பொய்யினை வேண்டியமட்டுஞ் சொல்லச் செய்குவேனிந்தப் பகதூர் அதைப்பற்றி யோஜிக்கவேண்டுவதில்லை முனிவரே.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

வனத்தினிலே புசிப்பதற்குக் கனிகாயீய்ந்தால்
வாங்காதீர் முப்பழமுஞ் சாதங்கேளும்
நனைத்திடுமென் மழைவெயிலில் நடக்கவேண்டாம்
நான்கொடுத்த கெடுநாளைத் தடத்திற்போக்கும்
இனித்தமொழி யவனிடத்திற் பேசிடாமல்
எப்பொழுதுங் கடுகடுத்து வார்த்தைகூறுந்
தனத்தையளித் தால்வாங்கிக் கொளுமதற்குத்
தடையிருந்தாற் சாக்ஷிவைத்திங் கடைகுவீரே.

(விஸ்-வ-ம்.) ஹே சக்கிரபகவானே அரிச்சந்திரன் கானகங்களிற் காய்கனிகளைப்பறித்து உணவுக்காகக் கொடுப்பான் நீரதை வாங்காமல் அறுசுவை பதார்த்தத்துடன் சாப்பாடு கேளும் மழைவெய்யற்காலங்களில் நடக்கவேண்டாம் நான் கொடுத்த தவணைநாளைத்தடத்திலேயே கழியும்படியான வகையைத்தேடும் அவனிடத்திற்சந்தோஷகரமான வார்த்தைகளைப் பாஷியாமல் எப்போதுங் கோபமாகவே பேசும் இன்னும் எட்டிக்குப்போட்டியான வார்த்தையாடிக்கொண்டும் உமக்குவேண்டிய உபசாரணைசெய்யச்சொல்லிக் கொண்டுங் கஷ்டப்படுத்திக் கொண்டு கெடுவுக்குள்ளாகப் பொன்னைக்கொடுத்தால் வாங்கிக்கொள்ளுந் தவறினால் அங்கிருப்பவர்களைச் சாக்ஷிவைத்துச் சரேலென்று வந்துவிடும் சும்மா வந்துவிடாதீர் தெரியுமா.

நக்ஷத்திரத்தாசர் விருத்தம்.

பொன்னதும் வாங்கிடாமற் பொய்சொலச் செய்திடாமற்
பின்னமாய் வருகுவேனோ பிரம்பினால் நொருக்கிகாசி
தன்னிலே மிளகாய்தூவித் தாகினுக் குரியதான
சொன்னமும் வாங்காவிட்டாற் சுக்கிர னானவேனோ.



(நக்ஷ-வ-ம்.) ஹே விஸ்வாமித்திரரே அப்படிச் சும்மா வந்துவிடுவேனா பிரம்பினால் நொருக்கிப்பிழிந்து காசியிலுங்கண்ணிலு மிளகாய்ப் பொடியைத்தூவிப் பொன்னை வாங்குவதுடன் என் கூலியும் வாங்காவிட்டால் என்னைச் சுக்கிரனென்றும் நக்ஷத்திரத் தாசனென்றுஞ் சொல்வதற்கு எனக்கென்ன யோக்யதையிருக்கின்றது.

(விஸ்-வ-ம்.) எந்தவிதமாகவேனும் எனது சபதம் நிறைவேறும்படியாய் வகைதேடிவாரும்.

(நக்ஷ-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் விடைதாரும்.

(விஸ்-வ-ம்.) நல்லது சென்றுவாரும்.

பொது விருத்தம்.

தினையளவேனும்பொய்யஞ் செப்பிடாச் செம்மல்முன்னாள்
வினையதின் பயனால்வந்து விளைந்ததீங் கதினாற்சொந்த
மனைமகன் மந்திரியோடு வளமைசேர் சரயுசென்று
தனதுகா தலியைநோக்கிச் சங்கதி சொல்லுவானே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[தாணிபோதனலுவிண்டிவோரா அவ]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

தாகரின்னமும்வரக் காணோமே-பெண்ணே
தாகரின்னமும்வரக் காணோமே.

அநுபல்லவி.

சரயுநதிக்குவந்தோர் சாமநேரமாகியுந் (தாக)

சரணம்.

முனிவர்போற்கொடுங்கோபியோ மகாபாபியோ
கனிவொடுமைச்சர்க்குங் கருணையன்னவர்தானோ (தாக)

(அரி-வ-ம்.) ஹே ப்ராணசகி நாமிந்தச் சரயுநதிக்கு வந்து ஒருசாமநேரமாகியும் முனிவரனுப்பி வைப்பதாகச் சொன்ன தாகர் இன்னும் வரவில்லை அவர்முனிவரைப்போலவே கோபமுடையவரோ அதைவிட மகாபாபியோ அல்லது நம்மைக் கஷ்டப்படுத்தாமற் காத்துரக்ஷிக்குந் தயாளபுருஷரோ யாதொன்றுந் தெரியவில்லையே என்செய்கின்றது.

(சந்-வ-ம்.) அவர்வந்தால் எல்லாம் வெட்டவெளிச்சமாய்த் தெரிந்துவிடும் ப்ராணநாத்.

---

பொது விருத்தம்.

சுரர்முனி வரர்கள்போற்றுஞ் சுக்கிர பகவானென்னுந்
தாரகரு முனியைவிட்டுச் சரயுமா நதிக்குச்சென்று
கரைதனில் வீற்றிருக்குங் காவலன் றன்னைக்கண்டு
பரபரப் புடனேவார்த்தை பகருவார் பகருவாரே.

---

(நக்ஷ-வ-ம்.) யார்க[illegible] அங்கு வீற்றிருக்கின்றது.

(அரி-வ-ம்.) யாங்கள் [illegible]ஞ்சாரிகள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) இந்தமார்[illegible]ரிச்சந்திரன் வரவில்லையோ.

(அரி-வ-ம்.) பட்டம்பக[illegible] சந்திரன்வருவதற்கு ஞாயமுண்டா ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) பின்னை முனிவர்சொன்னது பொய்யோ.

(அரி-வ-ம்.) எந்தமுனிவர் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) விஸ்வாமித்திரமுனிவர் முன்னுக்கு ரண்டெழுத்துச்சேர்த்துச்சொன்னார் அதை மறந்துவிட்டேன்.

(அரி-வ-ம்.) அரிச்சந்திரனென்று சொல்லியிருப்பாரோ.

(நக்ஷ-வ-ம்.) அவன்றான் அவன்றான் எங்கேவோய் அவன்.

(அரி-வ-ம்.) ஆஆ நக்ஷத்திரத்தாரகர்போலிருக்கின்றதே யான்றான் அரிச்சந்திரன் ப்ரபு இதோ வந்தனம்புரிகின்றேன்.

நக்ஷத்திரத்தாரகர் விருத்தம்.

வந்தனத்தில் மண்ணையிட்டேன் கொடுப்பதற்கு
வகையில்லாப் பாதனக்குக் கடனேதுக்கு





எந்தனது பெண்டுபிள்ளை யுதவியின்றி
யிருக்கவுநா னிங்கோடி வரலாயிற்று
உந்தனுடன் காடுமலை வனங்கள்மற்றும்
ஊரூரா யலைந்திடவென் னலாகாது
அந்தமுனி போலவெனை மதிக்கவேண்டாம்
ஆட்டுவே னென்சமர்த்தைக் காட்டுவேனே.

### நக்ஷத்திரத்தரகர்சொல் தரு.

[வாடிலிற்பதேதுகாரணமோ]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-ஜம்பை-தாளம்.

பல்லவி.

பொன்னுக் கென்ன வழிசொல்கிறாய் இனிப்
பொறுக்கே னரைக்ஷணமு மிருக்கேனடாபயலே
பொன்னுக் கென்ன வழிசொல்கிறாய்.

அநுபல்லவி.

மன்னிப்பேனென்றவெண்ணந் தன்னையப்பாலே யோட்டு
ஓட்டு ஓட்டு ஓட்டு கிட்டி
மாட்டுவேன் சவுக்காலே நீட்டுவேனடாபலே (பொன்)

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா என்னை விஸ்வாமித்திரரைப்போலசாமான்யமாய் நினைத்திடாதே நானோ பெண்டுபிள்ளைகளை யொண்டியாய் விட்டுவிட்டு முனிவர் தாக்ஷண்யத்திற்காக ஓடிவந்தேன் இனி உன்னுடன் காடுமலைநாடுநகரங்களிற் சுற்றித் திரியமுடியாது கடனுக்குரிய பொன்னை யிங்குநின்ற நிலையிலேயே கொட்டிவிடுவாயானால் உன்னை விட்டுவிடுவேன் இல்லாவிட்டால் உன்கைக்குக் கிட்டிகட்டிக்கழுத்துக்கு அண்ணாந்தாளிட்டு இந்தச் சவுக்கினால் உடல்முழுதும் உதிரவெள்ளம்பெருகப் பிளந்துவிடுவேன் றெரியுமா இப்போது பொன்னுக்கென்னவழி சொல்கின்றனை.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயரே நீதிநூல்க ளறிந்தமா மறைவல்லோரே
கையினிற் பொருளிருந்தாற் கடனுடன் வருவதன்றோ

மெய்யினில் வருத்தமுற்ற வேளையி லெரியுந்தியில்
நெய்யைவிட் டெரித்தல்போல நீரதை மொழிகின்றீரே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[ஸெசுப்ரமண்ய தேவேயென்கோவே]
என்ற கீதாமிர்தசாரத்தின் வர்ணமெட்டு.
இராகம்-சுருட்டி-தாளம்-சாபு.

பல்லவி.

கோபமென்மீது கொள்ளாதீரையா
கொடுத்தகெடுவிற்பொன்னைக் கொட்டுவேன்
மெய்யாய்க் (கோபமென்மீது)

அநுபல்லவி.

ஆபத்துவேளை அடியேனுனேழை
அநுசரிசெய்கிறேன் அரியபொற்றனைக் (கோ)

(அரி-வ-ம்.) ஆஆ தாகரே என்மீது சினங்கொள்ளவேண்டாம் முனிவர்கொடுத்த தவணைக்குள்ளாகப் பொன்னைச் செலுத்திவிடுகின்றேன் இவ்வாபத்துவேளையில் என்னைவருத்தித் துன்பப்படுத்தாமல் மன்னித்து ரக்ஷிக்கும்படியாய்த் தங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) வெகுநேர்த்தி வெகுநேர்த்தி நன்றாயிருக்கின்றது என்னையும் (நாற்பத்தெட்டு நாளைக்குக்கூட) அலையச் சொல்கின்றனையா வென்ன.

(அரி-வ-ம்.) முனிவர் அந்தப்படிதானே உத்தரவு செய்தார் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அவருக்கென்ன ஆத்திலிருந்துகொண்டு நேர்த்தியாய்ப் பேசிவிடுவார் நடக்கிறவனுக்குக் கன்றோ தெரியும் வருத்தம்.

(அரி-வ-ம்.) காசிக்குச் சென்றவுடன் பொன்னைக் கொடுத்துவிடுகிறேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரவெர்ன்னெக் காசிகாசியென்று கட்டியழரியே நானுமா உன்னுடன் அழுட்டும்.



(அரி-வ-ம்.) அதற்கு என்னை யென்னசெய்யச் சொல்கின்றீர்கள்ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) நல்லது இப்படிவா சமீபத்தில்.

(அரி-வ-ம்.) அப்படியே வந்தேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) இதோ கோடுகீறியிருக்கின்றேன் இதில் ஒற்றைக்காலையூன்றி மற்றொருகாலை முழந்தாளின் பேரிற்றாக்கிவை பார்ப்போம்.

(அரி-வ-ம்.) அப்படியே வைத்தேன் ப்ரபு.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

அடுத்தநா னுன்பின்றாலே யலைந்திட மாட்டேனப்பால்
விடுத்திட முடியாதாசான் மீதினி லாணைவைத்தேன்
கொடுத்திடும் பொன்னையிங்கே கொட்டிவிட் டுனதுகாலை
யெடுத்திட வேண்டுங்கண்டா யினித்தடை சொலக்கூடாதே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நான் உன்னோடு வரவு மாட்டேன் உன்னையும் அந்தண்டை விடவுமாட்டேன் உன் குருவாகிய வசிஷ்டர்மேலாணைப்படி நேக்குப் பொன்னைக்கொடுத்துவிட்டுத்தான் அந்தக்காலைக் கீழேயூன்றவேண்டும் தெரியுமா.

அரிச்சந்திரன் விருத்தம்.

விதிவசத் தாலேயெந்தன் மேன்மையு மரசுநாடும்
பதியரும் பொருள்கள்யாவும் பண்ணவர்க் களித்துவிட்டு
நதியினில் வந்திருக்கும் ஞாயம்நீ ரறிந்திருந்தும்
கொதிபொறுக் காதநோய்போற் கொடுமைகள் செய்கிறீரோ

## அரிச்சந்திரன்சொல் தரு.

[பெண்ணேயுனக்கென்னகோபமடி கோபமடி]
என்ற வீரகுமாரநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

ஐயோவீதென்ன வனி-யாயம் அனியாயம்-எந்தன்
ஆசான்மீதாணைவைப்ப தடுத்திடாஞாயம். (ஐயோ)

ஒற்றைக்காலினில்நிற்கப்போமோ நிற்கப்போமோ-மகா
உத்தமனேயிப்படி வைத்திடலாமோ. (ஐயோ)

நிற்கமுடியவில்லை-யையா நக்ஷத்ரையா-இந்த
நிலைதவிர்த்தருள்செய்வீர் கலைபுகழ்மெய்யா (ஐயோ)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனது செயல்கள் யாவும் நன்றாயறிந்திருந்தும் இவ்வித கொடுமைசெய்கின்றீர்களே ஆஆ யான்பட்டகடனுக்குக் குருவின்மீது ஆணைவைப்பது ஞாயமா ஆஆ ஒற்றைக்காலில் நிற்கமுடியவில்லையே ஆஆ ஸ்வாமி ஆணையை விலக்கிக் காலையூன்றிக் கொள்ளும்படி யுத்தரவு கொடுக்க வேண்டும் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடா அரிச்சந்திரா உன்னிஷ்டம்போல ஆணையைவிலக்கிப் பாதத்தையூன்றிக் கொள்ளும்படி யுத்திரவு கொடுத்தேன் நீ பொன்னைக்கொட்டிவிடு சீக்கிரம்.

(அரி-வ-ம்.) இவ்விடம் எங்கிருந்து கொடுப்பேன் கூடவந்தால் எப்படியாவது சம்பாதித்துக் கொடுக்கின்றேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) ஆனால்லிப்படிவா சீக்கிரம்.

(அரி-வ-ம்.) இதோவந்தேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) நல்லது குனிந்துகொள் இந்த அண்ணாந்தாள் நோக்குச்சரியாயிருக்குமாவென்று பூட்டிப் பார்க்கலாம்.

(அரி-வ-ம்.) அப்படியே குனிந்துகொண்டேன் ப்ரபு.

நக்ஷத்திரத்தாரகர் விருத்தம்.

உந்தன்வீட் டாளோநானு முனதுசொற் படிநடக்க (வெ
ன்றிந்தையா யினிமேல்வார்த்தை விளம்பிட வேண்டாஞ்சொன்னே
சந்தர முனிவருக்குச் சொல்லிய பொன்னையிங்கே
தந்திடும் வரையிலண்ணாந் தாளினை யெடுக்கொணாதே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நான் உன் மனப்படி நடக்க உன்னுடைய வேலைக்காரனன்று முனிவருக்குச் செல்லவேண்டிய பொன்னை யிவ்விடத்திலேயே கொடுத்துவிடவேண்டும் அதுவரை யண்ணாந்தாளை யெடுக்கமாட்டேன் றெரியுமா.



அரிச்சந்திரன் விருத்தம்.

கடன்பொருள் கையிலில்லாக் காரணந் தெரிந்திருந்துஞ்
சுடாது மேலேகாயச் சுடுமணல் காலைத்தீய்க்கத்
தடமதில் நிறுத்தியண்ணாந் தாளினைப் பூட்டிவீணாய்
இடாது செய்தால்நானு மெவ்விதஞ் சகிப்பேன்சாமி.

அரிச்சந்திரன்சொல் தரு.

[இத்தனைகோபமாகுமா]

என்ற பதத்தின் வர்னமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

இப்படிச்செய்யலாகுமோ

அநுபல்லவி.

நான்-எப்படிச்ச கிப்பதென்னி
ப்பதுக ப்புற (இப்)

சரணம்.

அன்னைபிதா தன்னைகர்
ஐயரேயிதுதர்மமா

சொன்னமொழி புண்ணிடாமல்
தொண்டன்மீதினிலோர்மமா

நன்னயஞ்சேர் பொன்னதுதா
வென்னவேநீ ரென்னையும் (இப்)

(அரி-வ-ம்.) ஆஆஸ்வாமி எல்லாந்தெரிந்த தாங்கள் ஒன்றுந்தெரியாதவரைப்போல சூரியவெப்பத்தால் மேனிதீய்வுஞ் சுடுமணலாற் கால் கொப்பளிக்கவும் இன்னதிக்கரையிற்குனியவைத்து நிறுத்திக்கொண்டு அண்ணாந்தாள்ப்பூட்டி யவதிப்படுத்துகின்றீர்களே ஆஆ எனக்கு இடுப்பு மிகவும் நோகின்றதே ஆஆ என்னாற் சகிக்கமுடியவில்லையே ஆஆ ஸ்வாமி இவ்வண்ணாந்தாளை யெடுத்துவிடுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா இதோ வுன்மனம்போல அண்ணாந்தாளை யெடுத்துவிட்டேன் இனியாவது பொன்னைச் செலுத்துகின்றனையாவென்ன.

(அரி-வ-ம்.) அதற்குள்ளாகப்பொன்னெங்கிருந்துவந்துவிடும் காசிக்குப்போனவுடன் தருவதாகச்சொன்னேனே அந்தவார்த் தைதான் இப்பவும் வேறாகஇயேது ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) காசிக்குப்போனல் உங்களப்பனா இருக்கின் றுன் அள்ளிக்கொடுப்பதற்கு.

(அரி-வ-ம்.) ஸ்வாமி இவ்வளவு கசப்பாய்ப்பேசினல் நா னென்செய்வேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) நல்லது நோக்குக்கால்நோகும் இப்படி யுட்கா ர்ந்து வானத்தை யண்ணார்ந்துபார் சீக்கிரம்.

(அரி-வ-ம்.) அப்படியே பார்த்தேன் ஸ்வாமி.

(நக்ஷ-வ-ம்.) இதோ நெற்றியில் வைத்திருக்கின்றேனே அது வென்ன தெரியுமா.

(அரி-வ-ம்.) அது கல்லாகக்காணப்படுகிறது ப்ரபு.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

பசப்பிநீ வார்த்தைசொன்னுற் பயன்படா தாகையாலே
நிசப்படி பொன்னையிங்கே நேரினிற் கொட்டிவிட்டாற்
கசப்பது நீங்குமென்று கண்டுகொள் ளதுவரைக்கும்
வசைப்பட நெற்றிமீது வைத்தகல் வீழ்த்திடாதே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நீ பசப்பிப்பசப்பி வார் த்தை பாவிப்பதினுற் காரியசித்தி யாகமாட்டாது பொன்னைக் கொட்டிவிட்டால் மட்டும் நேக்குரிய கசப்புநீங்கி நோக்குச் சுக ங்கிடைக்கும் அதுவரை நெற்றியில் வைத்தகல்லை வீழ்த்திவிடா தே யரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

எங்கள்தன் னிலைமைகண்டோ ரிரக்கமுற் றிடுவா ரன்றித்
தங்களைப் போலவிந்தச் சங்கடப் படுத்தமாட்டார்
பிங்கலப் பணிகள்பூணும் பிடாரியும் நோவெடுக்க
வெங்களைப் பிடித்தில்வாறு வேதனை புரிகின்றீரே.



அரிச்சந்திரன்சொல் தரு.

[வீதிவீதிகள்தோறும் விலைகூறினேன்]

என்றசருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

பல்லவி.

எப்படியிதைப்பொறுப்பேன் ஐயையோசாமி
யெவ்விதமுயிர்தரிப்பேன்.

அநுபல்லவி.

கற்பழுவானதினுற் கழுத்துமிகநோகுதே
கனக்கக்கனக்கத்தானே யெனக்குத்தகையாகுதே (யெப்)

சரணம்.

உம்மைப்போற்கடுநெஞ்சமும் உலகினிலே
யொருவர்க்குமில்லைகொஞ்சமும்
அம்மானிவரைவிட அதிககொடுமைக்காரர்
இம்மையிலெனக்காக ஏற்பட்டநமவீரர் (எப்)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி இப்படி யெனது நெற்றியிற் கல் லேற்றிக் கழுத்துநோகும்படி செய்கின்றீர்களே ஆஆ சுமைதாங்க முடியாமற்றலைபதிகரிக்கின்றதே ஆஆ நரம்புகளிசிவெடுத்து உயிர் பறந்து தவிக்கின்றதே ஆஆ விஸ்வாமித்திரரைவிடத் தாங்கள் அதிக கடினசித்தமுடையவர்களாயிருக்கின்றீர்களே ஆஆ என் னுற்சகிக்கமுடியவில்லையே ஆஆ ஸ்வாமி கல்லையெடுத்து விடுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நோக்குத் துன்பம்வந்த போதே நேக்குச் செம்பொன் வந்துவிட்டதென்பதற்குச் சந் தேகமில்லை பொன்னைக்கொட்டிவிடு கல்லைத்தட்டிவிடுகின்றேன்.

சந்திரமதி விருத்தம்.

வேதியரே நீரிந்த வேளையி லிறைவன்றன்னை
வாதனைப் படுத்திறுற்பொன் வழிதனிற் கிடைக்கப்போமோ
ஆதியிற் சொன்னவார்த்தை யழிந்திட மாட்டோமையா
காதலன் முகத்திலுள்ள கல்லினை யெடுப்பீர்சாமி.

(சர்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எப்பொழுதும் துன்பமென்பதைக் கனவிலுங்காணாத ஏனது பர்த்தாவை யிப்படி வருத்துகின்றீர்களே அதனாற் பொருள்வந்துவிடுமா ஆஆ ஸ்வாமி கெடுவுக்குள்ளாகப் பொன்னைக் கொடுத்துவிடுகின்றோம் நெற்றிக்கல்லையெடுத்துவிடுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) நாயகனுக்கு நேர்ந்த துக்கம் நோக்குப் பக்கமாய் வந்தபோதே நேக்கு நொக்கமுந்தந்துவிட்டாற் கல்லையெடுத்துவிடுவேனன்னோ பொம்மனாட்டிக்கு இதுதெரியர்தோ.

சத்தியகீர்த்தி விருத்தம்.

மறையவா நாளுமிந்த மன்னவ னிடத்திக்மந்திரி
முறையதா பார்த்துவந்த முதலிது நாள்வரைக்குள்
குறையது நேர்ந்ததில்லை கொடுமையைத் ததிகமாக
இறைவனின் யிம்சைசெய்தா லெப்படிச் சகிப்பாரையா.

(சத்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி யான் மந்திரியாயமைந்த முதல் இதுவரைக்கும் எங்கடரசன் இவ்வித கஷ்டத்தை யனுபவித்ததேயில்லை அங்ஙனமிருக்க இப்படி வாதைப்படுத்துகின்றீர்களேவேண்டாம்விட்டுவிடுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் மந்திரி நோக்குமட்டும் ரோஷம்வருகின்றதோ நேக்குக் காசுவரவேண்டாமோ நன்றாயிருக்கின்றது போடாபோடா பைத்தியக்காரப்போ.

தேவதாசன் விருத்தம்.

எந்தனுக் காகவேண்டி யிறைவனே யின்றெடுத்த
தந்தையி னெற்றிக்கல்லைத் தயவுட னெடுத்துவிட்டுத்
தொந்திரை கொடுத்திடாமற் சுகமுடன் காசிவந்து
அந்தநல் முனிவர்க்கிய மரும்பொருள் பெறுவீர்சாமி.

(தேவ-வ-ம்) ஆஆ ஸ்வாமி என்முகத்துக்காகவேனு மனமிரங்கித் தந்தைக்குவைத்த நெற்றிகல்லையெடுத்துவிட்டுக் காசிக்கு வந்தவுடன் பொன்னைப்பெற்றுக்கொள்ளுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் குஞ்சு நேக்கு இன்னும் ரொம்பவேலைகள் தெரியும் அதையெல்லாங் காட்டலாமென்றிருந்தேன் இப்



போது நீ கேட்கின்றமையால் உன்முகத்திற்காக இதோ நெற்றிக்கல்லை யெடுத்துவிட்டேன் பொன்னுக்கென்னசொல்கின்றனை.

(தேவ-வ-ம்.) காசிக்குப்போனவுடன் கொடுத்துவிடுகின்றேனும் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா உனது கிச்சான் வேண்டுதலுக்காகப் பாறைபோலிறுகிய மனம் மெழுகுபோலுருகிக் கல்லையெடுத்துவிட்டேன் இனிப்பொன்னுக்கென்னவகை சொல்கின்றனை.

(அரி-வ-ம்.) முனிவர் கொடுத்த நாற்பத்தெட்டுநாட் கெடுவுக்குள்ளாகக் கொடுத்துவிடுகின்றேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் உன்கையில் ஒருகாசுக்குக்கூட வகையில்லையே அங்ஙனமிருக்க நாற்பத்தெட்டுநாளைக்குள்ளாக அவ்வளவு பொன் எவ்விதமாகக் கொடுப்பாய்.

(அரி-வ-ம்.) காசிதேசத்திற்குப் போனவுடன் எவ்விதமாவது பொன்சேகரித்துக்கொடுத்துவிடுகின்றேன் ப்ரபு.

நக்ஷத்திரத்தாரகர் விருத்தம்.

வல்லவன் யானையேறி வன்மையாய்க் கவண்கைகொண்டு
கல்லினை வீசியெறியக் காணுமவ் வுயரம்பொன்னும்
அல்லலுற்றோன் றன்னியெவ்வா றளித்திட முடியுமன்னோ
நல்லமா முனிவர்சொற்போல் நடந்தரசடைந்துவாழே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா பார்யானையின்மீது வல்லபுருஷனேறிநோக்கணித்து விண்ணிற் கவண்கல்லெறிந்தவுயரம் பொன் சேகரித்துக்கொடுக்க வுன்னாலாகாது ஆகையால் நீ வீணாயவ் வதைப்படாமல் விஸ்வாமித்திரர் சொற்பிரகாரம் நடந்துகொள்வாயானால் உனது ராஜ்யாதிபாக்கியங்களனைத்தையும் நானே வாங்கித்தருகின்றேனரிச்சந்திரா இதற்கென்சொல்கின்றனை.

(அரி-வ-ம்.) கெடுத்தவருமற் பொன்னைக் கொடுத்துவிடுவேனேயன்றி அந்தவார்த்தைக்குடன்படமாட்டேன் ப்ரபு கூடவாருங்கள் செல்வோம்.

(நக்ஷ-வ-ம்.) அல்லது கொடுக்கவேண்டுவதில்லையென்றாவது ஒரு வார்த்தைசொல்லி விடும்பக்ஷத்தில் யானிப்படியே செ

ன்று விடுவேனே என்னையேன் வீணையலைக்கழிக்கப் பார்க்கின்றனை.

(அரி-வ-ம்.) ஒருக்காலும் பொய்சொல்லமாட்டேன் ப்ரபு நேரமாகின்றது வாருங்கள் செல்வோம்.

(நக்ஷ-வ-ம்) ஆஆ என்னடாப்பா (அரசமரத்தைப்பிடித்த சனியன் பிள்ளையாரையும்பிடித்துக்கொண்டது) என்பதுபோல உங்களைப்பிடித்த ஆறேமுக்காலும் அரையுங்காலும் என்னையும் பிடித்துக்கொண்டதுபோலிருக்கின்றது கல்லது அப்படியே வருகின்றேன் பொன்னைக்கொடுத்தாற் போதுமானது.

அரிச்சந்திரன் விருத்தம்.

சந்திர மதியேயெந்தன் சராசரந் திதமேமிக்க
மந்திர மறையோர்நம்மேல் மனதிரங் கினதினலே
சிந்தையில் வருத்தமின்றிச் சிறுவனை யழைத்துக்கொண்டு
சுந்தரக் காசிசெல்வோந் தொடர்ந்துநீ நடந்துவாடி.

அரிச்சந்திரன்சொல் தரு.

[எங்கேவந்தாயேடா]

என்ற ட்ராமாத்தருவின்றாடை வர்ணமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

நடந்துவாடிசகியே நலிவுகொள்ளாமற்கூட
நடந்துவாடிசகியே.

அநுபல்லவி.

அடர்ந்தசரயுநதி கடந்திடவிதுசதி (நடந்)

சரணம்.

பாலகனைக்கூட்டியே பாதைவழிகாட்டியே
சோலைமார்க்கமாய்ச்செல்லநீகோதையேமெல்லமெல்ல(நட)

(அரி-வ-ம்) ஆஆ சிந்தைக்கிசைந்த சந்திரமதி நாகருக்கிப்போதுதான் நயமுவந்தது ஆதலால் இந்தச்சரயுநதிகடந்து அந்தச் சோலை மார்க்கமாகச் செல்வோம் நமது கண்மணியாகிய தேவதாசனுக்கு வழிகாட்டிக் கொண்டு கூடவே மெல்ல நடந்து வருவாயாக.



சந்திரமதி விருத்தம்.

இதுவரை நடந்ததில்லை யெங்குமே சென்றதில்லை
ததிவரை வந்ததாலே நற்பத மிரண்டும்வீங்கி
அதிகமாய் நோகுதேயிவ் வடர்வனத் திலுக்குள்ளாகத்
ததியிநிற் செல்வதற்குத் தையலால் முடியாதையா.

சந்திரமதிசொல் தரு.

[மன்னன்வரக்காணேனே யென்னநான்செய்குவேன்]

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

நடக்கமுடியவில்லை நானென்னசெய்வேன் மன்னா

அநுபல்லவி.

தடத்தினிற்கல்லுமுள்ளுந் தைத்துயிர்வதைத்திடுதே (நட)

சரணங்கள்.

பாதமதுநோகுதையா பாரக்கலையாகுதையா
ஆதவன்கிரணம்பட்டு அங்கமிகவேகுதையா (நட)

தூய்யகுடைநீழலிலே வையகத்தையாண்டோமையா
வெய்யலிலடிபடவே விதிவசம்பூண்டோமையா (நட)

எப்படித்தனையன்மனம் ஒப்பியிவ்வழிநடப்பான்
பற்புலகொடிசெடிசூழ் பாதையெவ்விதங்கடப்பான் (நட)

(சத்-வ-ம்.) ஆஆ ப்ராணகாந்தா எப்பொழுதும் நடந்தறியாத யான் இன்னதிவரை வந்ததற்குள்ளாக எனது பாதங்களிற் கற்கள் முட்கள்தைத்து அதிகமாய் நோகின்றதே ஆஆ இன்னும் நடப்பதென்றால் என்னாற் சாத்தியப்படவில்லையே ஆஆ இக்கொடிய வெய்யலின் கொடூரத்தாற் றேகாதியந்தந் தளர்கின்றதே ஆஆ பஞ்சணைமீது விளையாடிக்கொண்டிருந்த பாலகன் இவ்வடர்ந்த கானகத்துள் எவ்வாறு நடந்துவருவான் ஆஆ குடைநிழலிலிருந்தரசுபுரிந்த நமக்கு இவ்விதகஷ்டமா நேரவேண்டும் ப்ரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாசிலா மணியேநல்ல மதுரமேதள் ளமுதேயென்தன்
நேசநா யகியேசூத்ரி நிழலினில் வாழ்ந்தாலென்ன
காசினி முழுதுமன்பாய்க் கட்டியாண் டாலுமென்ன
ஈசனார் விதியைமீறி யெவர்களும் நடப்பதுண்டோ.

அரிச்சந்திரன்சொல் தரு.

[எதுக்குவாங்குரீர்லஞ்சம் உமக்கிதைவிடவேறுண்டோபஞ்சம்]
என்ற சர்வசமயசமரசக்கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாபு.

கண்ணிகள்.

விதிவசத்திற்கென்செய்வோம் பெண்ணே-மிந்த
விபரம்யேறியாயோ கண்ணே (விதி)

மதிமுகம்வாடாதே மானே-உன்னை
வாகினிலெடுத்துக்கொள் வேனே (விதி)

சங்கடப்படுவதா லென்ன-நம்மள்
தலையெழுத்தகலுமோ மெள்ள (விதி)

(அரி-வ-ம்.) ஆஆ ப்ராணசகி பார் நமக்கு நேர்ந்த விபத்தை யுத்தேசித்து வியாகூலப்படும்பக்ஷத்தில் நமக்குச் சதுர்முகன் விதித்த லொட்டைபி மாறிவிடுமா ஒருக்காலுமில்லை நீ நடக்கமுடியாவிடில் எனது புஜத்திலாரோகணித்துக்கொள் யானுன்னைச் சுமந்துவருகின்றேன் பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

என்னரும் பாபஞ்செய்தோ ரிப்பெரும் பூமிசன்னிற்
பெண்ணொரு வெடுப்பாரென்று பேசுவா ருலகிலுள்ளோர்
அண்ணலின் றோள்மீதேறி லதிகமாய்ப் பாபம்வந்து
நண்ணுவ தன்றிப்பாழும் நரகினுக் காளாவேனே.



சந்திரமதிசொல் தரு.

[மோகமுனேதாளலேரா முத்துபெட்டாரனுசாமி]
என்ற ஜாவளியின்வர்னமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்னவனேயுங்கள்தோள்மேல்
மங்கைநானேறத்தகாது (மன்)

அநுபல்லவி.

இன்னிலமும் பொன்னிலமும்
ஏசித்திட்டுமேசாமி
நன்னிலைமை தன்னைவிட்டால்
நரகுகிட்டுமேசாமி (மன்)

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணப்ரியா பாருங்கள் லக்ஷ்மிதேவியானவள் வாசம்புரியும்படியான தங்கள் புயத்திற் பிறராலிகழத்தக்க பெண்பாலான அடியாள் ஏறத்தகாது அப்படி யேறுவேனாகில் மண்ணுலகும் விண்ணுலகும் ஏசுதற்கிடமாவதன்றி ரௌரவாதிநரகத்திற்கும் ஆளாகும்படிநேரிடும் ப்ரபு.

(அரி-வ-ம்.) ஆஆ நேசரஞ்சிதமே உனக்கெப்பொழுதும்இவ்வித நீதியைக் கவனிக்கக்கூடிய குணமேயேற்படுகின்றதன்றிக் காரியத்தைக் கைக்கொள்ளும்படியான குணங் கொஞ்சமேனுமில்லையே இனி யென்செய்வேன்.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா இன்னும் உங்களுடைய சமுக்கமே பெரிதாயிருக்கின்றதேயன்றிப் பணத்துக்கு வழிதேடும்படியான கவலையானது நோக்குக் கொஞ்சமேனுமில்லையே இதற்குத்தானா யான்வந்தது வெகுநேர்த்தி வெகுநேர்த்தி நன்றாயிருக்கின்றது.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி கோபிக்கவேண்டாம் இதோவருகின்றோம் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) சரிசரி விரைவாய் வாருங்கள்.

(அரி-வ-ம்.) ஆஆ நேசநாயகி தாகர் கோபிக்கின்றார் மெதுவாய் நடந்துவருவாயாக.

(சந்-வ-ம்.) அப்படியே வருகின்றேன் ப்ராணவல்லபா.

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரதான் மெல்லச்செல்லுவோமா வென்ன

(சத்-வ-ம்.) அப்படியே செல்வோ மகராஜ்.

(அரி-வ-ம்.) அடா கண்மணி வாசெல்வோம்.

(தேவ-வ-ம்.) இதோ வருகின்றேன் பிதா.

சந்திரமதி விருத்தம்.

தண்டிகை யின்றிராங்கள் தரைதனில் நடந்ததில்லை
வண்டியில் லாமலெந்த வழிகளுங் கடந்ததில்லை
எண்டிசை யுள்ளோர்போற்ற விளிதுரைழ்க் ததுபோயின்று
உண்டிட வுணவுமின்றி யுளைவிட் டகல்கின்றேமே.

சந்திரமதிசொல் தரு.

[தேவரீதென்னமாயஞ் செய்தாயேயனியாயம்]

என்ற சதாரம்நாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயோசதென்னகாலம் அமைந்ததேயிந்தக்கோலம்

அநுபல்லவி.

வெய்யோன்சுடர்காயவும் மேனியெல்லாந்தீயவும் (ஐயோ)

சரணங்கள்.

நாடுநகரிழந்து நாடியெல்லாந்தளர்ந்து
காடுகளுந்துறையவுங் கனமெல்லாங்குறையவும் (ஐ)

மன்னவர்நடக்கவும் வழியெல்லாங்கடக்கவுஞ்
சின்னவன்றுடிக்கவுஞ் செடிகள்பட்டிடிக்கவும் (ஐ)

மந்திரிமயங்கவுஞ் சிந்தையுந்தியங்கவுஞ்
சந்திபிலேநிற்கவுந் தடத்தில்முள்ளுறுத்தைக்கவும் (ஐ)

இப்படியென்றுநானே சொற்பனமறியேனே
சிற்பரனருளிதோ கற்பனையினியேதோ (ஐ)

112-223



(சந்-வ-ம்.) ஆஆ என்னகாலவித்தியாசம் நாடுநகரமுதலான சகல சம்பத்துக்களையுங் கோசிகமுனிவருக்குத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு பஞ்சைகளைப்போல நிலைகுலைந்து மிருகஜாதிகளடர்ந்த கானகத்தில்வந்து திகைத்துநிற்கவும் சிற்றரசர்கள் மணிமுடிபடியும்படியான எனதாசைநாயகர் பாதநோகும்படியாய் நடக்கவும் மேனியெங்கும் அகோரமானவெய்யற்சுடவும் அவர் மதிமுகம்வேறுபடவும் எனதருமைப்புதல்வன்மனந்துடித்தழவும் அன்பார்ந்த மந்திரியானவர் தக்கசுகத்தைவிடுத்து எங்கள் துக்கத்துக்குடன்பட்டுத் தயங்கிவரவும் தெய்வசங்கற்பம்நேர்ந்துவிட்டதே ஆஆ இப்படிவருமென்று சொற்பனங்கூடக் காணவில்லையே ஆஆ இவ்விதிவசத்திற் கென்செய்வேன்

தேவதாசன் விருத்தம்.

பஞ்சணை மெத்தைமீது பாக்கியர் மடியில்வைத்துக்
கொஞ்சிநல் லமுதமூட்டக் கோலமாய் வளர்ந்தநானுங்
கஞ்சியில் லாமலிந்தக் காட்டினில் நடந்துவந்தேன்
மிஞ்சிய பசியினாலே மேனியுந் தளருதம்மா.

தேவதாசன்சொல் தரு.

[ஐயோசதாரம் உனைத்தேடியே யிப்போதுமிகத்
தயங்குதேமனம்வாடியே]

என்ற சதாரம்நாடகத்தருவின் வர்னவெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-சாபு.

பல்லவி.

ஐயோ-அம்மாபசியாகுதே நடக்கவென்னால்
ஆகுமோபதம் நோகுதே

அநுபல்லவி.

சும்மாவிதுவரையும் பெம்மானருளினாலே
தொடர்ந்துநானடந்தேனம்மா-கரி
சிம்மாதிமுதலின்னும் நன்மான்புலிகரடி
திகழ்வனங்கடந்தேனம்மா-ஐயோ (அம்மா)
கண்ணிரண்டிருளுது கனக்குடல்சுருளுது
கால்களுப்புமிகவுங்காணுதே-பிப்ப

உண்ணுதற்காயேதேனும் உணவிருந்தாற்கொடம்மா
உடம்பெர்விதமாய்த்தோணுதே-ஐயோ

(தேவ-வ-ம்.) ஆஆ மாதா சுகமாய்வளர்ந்த யான் (இளங் கன்று பயமறியா) தென்பதுபோல தெய்வானுகூலத்தால் யாதொன்றுந் தோன்றாமல் அனேக மிருகஜாதிகள் வாழுங் கானகமெல்லாந் தாண்டிவந்தேன் இப்போது பாதம்நோவெடுக்கின்றது எனக்கு மிகுந்த பசியாயிருப்பதாற் கண்களெல்லா மிருண்டுவருகின்றது காதடைக்கின்றது குடல்கள் சுருளுகின்றது தலையதிகரிக்கின்றது உடம்பு ஒருவிதமான சங்கடத்துக் குள்ளாகின்றதாகையால் இப்போது கொஞ்சஞ் சாதங்கொடுத்தாற் புசித்துப் பசியாற்றிக்கொள்வேன் மாதா.

சந்திரமதி விருத்தம்.

பாலுடன் சினிநெய்தேன் பழமுடன் லட்டுமிட்டாய்
சாலவே யுண்டுமேனி தளர்வுறா திருந்தபாலா
காலது நோகுதென்றுங் கனபசி யாகுதென்றும்
ஓலமிட் டழுதாலிங்கே யுணவது கிடைக்குமோடா.

## சந்திரமதிசொல் தரு.

[கருத்தினில்வளர்த்தோங்கும் ஏகாம்பரியே]
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

பசிக்குதென்றழுகின்ற பாலகாவென்செய்வேன்

அநுபல்லவி.

புசிக்கச்சாதமேது பொறுத்துக்கொள்ளிப்போது-இது
நடுவினா காடு-ஒரு வீடு-மில்லையே (பசி)

சரணம்.

கத்தினாலென்னடா காய்கனி தின்னடா-எந்தன்
கட்டழகே பா-தெளி விட்டகனிவாயா-யாருங்
கண்டு-சாதங் கொண்டு-வர வேண்டாமோசொல்லடா (பசி)



(சந்-வ-ம்.) அடா கண்மணி நீயேன் சோதனைசெய்கின்றனை பார் யான் சாதங்கொண்டுவரவில்லை இதுவோ புற்பூண்டுகள் மரஞ்செடிகளடர்ந்த காடு இதில் ஊர்முதலானவை சமீபத்திற்கிடையாது அங்ஙனமிருக்க இவ்வாரண்யத்திற் பசிக்குதென்று வருந்தினால் உனது பரிதாபத்துக்கிரங்கி யாவரேனுஞ் சாதங்கொண்டுவந்து கொடுக்கப்போகின்றார்களா ஒருக்காலுமில்லை யானையால் ஏதாவது காய்கனிபறித்துத் தருகின்றேன் அதனைத்தின்று பசியாற்றிக் கொள்ளடா கண்மணி.

(தேவ-வ-ம்.) அப்படியானது பறித்துக்கொடம்மா தின்று பசியாற்றிக்கொள்கின்றேன்.

(சந்-வ-ம்.) அடா தனையா இவ்வனத்தில் நல்ல கனிவர்க்கங்களைக்காணோம் இன்னுங் கொஞ்சதூரஞ்சென்றால் அங்கு (மா-பலா-கொய்யா-நாவ-விளா-வாழை)முதலானவை கிடைக்கும் உனக்கு வேண்டியமட்டும் பறித்துத்தருகின்றேன் அதுவரை மெல்ல நடந்துவா கண்மணி.

தேவதாசன் விருத்தம்.

இடையெலாம் நோகுதுள்ளந் துடிக்குது காலும்பின்னி
நடையது தளருதம்மா நரம்புகள் குடையுதம்மா
கொடியதோர் பசியுமென்னைக் கொன்றுயிர் வருத்துதம்மா
அடவியி லினிமேலுன்பின் னடர்ந்துநா னடந்திடேனே.

## தேவதாசன்சொல் தரு.

[அழகுள்ளஇவராடி யென்பிராணசகி]
என்ற ட்ராமாஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

என்னமாயினிநடப்பேன் எனதன்னையே
என்னமாயினிநடப்பேன்

அநுபல்லவி.

இன்னலெவ்விதஞ்சகிப்பேன் எனதன்னையே (என்ன)

சரணங்கள்.

பசிப்பிணியொருபக்கம் படுத்துதேமிகத்துக்கம்
புசிப்புக்குவகையில்லையே கொஞ்சமாகினும்
புசிப்புக்குவகையில்லையே
இன்னலெவ்விதஞ்சகிப்பேன் என்தன்னையே (என்ன)

பொடிமணற்கனலாலே அடிமுழுதுந்தீப்போலே
சுடுதுசுடுதுசுடுதே கொப்புளெழச்
சுடுதுசுடுதுசுடுதே
இன்னலெவ்விதஞ்சகிப்பேன் என்தன்னையே (என்ன)

இடையிலென்னையெடுப்பாய் இவ்வழியைக்கடப்பாய்
அடவிதனிலேவிடுப்பாய் கானிருக்கும்
அடவிதனிலேவிடுப்பாய்
இன்னலெவ்விதஞ்சகிப்பேன் என்தன்னையே (என்ன)

(தேவ-வ-ம்.) ஆஆ மாதா எனக்குப் பசிக்கொடுமை யொருபக்கம் வாதிக்கின்றது நடந்து நடந்து காலகளெல்லாம் புண்ணாயிருக்கின்றது இத்துடன் பாதைகளிலுள்ள நொய்மணல்களானது சூரியவெப்பத்தாற்சூடுண்டு பாதத்தைப்பற்றித் தீய்க்கின்றதே இத்தனை கஷ்டத்தையுஞ் சகித்துக்கொண்டு யானெப்படி வழிநடப்பேன் ஆஆ தாயே ஏதோ கனிவர்க்களிருப்பதாய்ச் சொன்னகானகம்வரையென்னை யெடுத்துக்கொண்டுசெல்லும்பக்ஷத்தில் வெய்யலுந் தணிந்துவிடும் யானும் பசியாற்றிக்கொண்டு மெல்ல மெல்ல நடந்துவருவேனம்மா.

(சந்-வ-ம்.) ஆனலப்படியே யெடுத்துக்கொள்கின்றேன் கண்மணி.

(நக்ஷ-வ-ம்) அடாய் அரிச்சந்திரா நன்றாயிருக்கின்றது நீயேதோநல்லயோக்கியனென் றெண்ணியிருந்தேன் இப்போது நீ செய்ததெல்லையையோசித்தாற் றிருடனுக்கு முதற்பிறந்தவனாகக் காணப்படுகின்றதே.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி அப்படி யென்ன தப்பிதஞ்செய்தேன் ப்ரபு.



நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

தினையள வேனுமென்னைச் சிந்தையி லெண்ணிடாமல்,
மனைவியை யேவியுந்தன் மைந்தனை யெடுக்கச்சொன்னாய்
தனையனும் பத்துமாதத் தவணையிற் பிறந்திட்டானோ
எனையென தன்னைமாத மெட்டினி லீன்றிட்டாளோ.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா உன் மைந்தனைமட்டும் பாதம்நோகாம லெடுத்துக்கொள்ளும்படி யுனது மனைவிக்குச் சமிக்கைசெய்தாயேயன்றி நோக்குபகாரமாய் வரும்பார்ப்பானைக் கிஞ்சிற்றேனும் நினைக்கவில்லையன்றோ அவனென்ன பத்துமாதத்திற்பிறந்தவன் யானென்ன எட்டு மாதத்திற்பிறந்தவன்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி யானேதொரு சமிக்கையுஞ்செய்யவில்லை அவன் சிறுகுழந்தையானதால் நடக்கமுடியாததையுத்தேசித்து எடுத்துக்கொண்டாளேயன்றி வேறு விசேஷமில்லை ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) யானுஞ் சிறுவன்றானே நேக்கிப்போதுதானே நரைவிழறது யானெப்படி யிவ்வெய்யலில் நடப்பேன்.

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரபு அதோ தோன்றுகின்ற கூடாரச்சோலைக்குப்போய் விடும்பக்ஷத்தில் வெய்யலின் கொடுமை தோன்றாது அப்பால் மெல்லமெல்லச் சென்றுவிடலாம் ஸ்வாமி.

(நக்ஷ-வ-ம்.) நோக்குத்தான் விதிவசம் நேக்கென்னடா வந்துவிட்டது யாரொருக்காலும் நடந்துவரமாட்டேன்.

(அரி-வ-ம்.) இப்படிப் பாஷித்தால் யாங்களென்ன செய்வோம் ப்ரபு.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

சுடுமணற் காட்டிலுன்னைக் குடர்த்துநா னடக்கமாட்டேன்
கடுவெளி நீருமட்டுங் கதித்தவா கனம்நீதந்தாற்
சடுதியில் வருவேனுக்குச் சம்மத மில்லாவிட்டாற்
கொடுகொடு பொன்னைத்தானே கோசிக வீடஞ்செல்வேனே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திராயானிந்தச் சுடுமனையில் நடந்துவர முடியவேமுடியாது நேக்கேதாவது வாகனங் கொடுப்பாயானல் இந்தப் பாலைவனங்கடக்கும் வரை, யேறிக்கொண்டு வருவேன் இல்லாவிட்டால் இப்படியே பொன்னைக்கொடுத்துவிடு யானிப்படியே சென்று விடுகிறேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

வனத்தினி லேறிச்செல்ல வாகனங் கிடைத்திடாது
தனத்தினைக் கொடுவென்றாலுந் தடத்தினி லகப்படாது
சினத்தினை விட்டென்மீது தேவரீ ரேறிக்கொண்டாற்
கனத்துடன் றாக்கிச்செல்வேன் சுடுவெளி கடக்கத்தானே.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி இப்பாலைவனத்தில் வாகனமெப்படிக்கிடைக்கும் அதற்காகப் பொன்னைக் கேட்டால் யானெவ்விதங்கொடுப்பேன் ஆஆமறைவல்லவா தாங்கள்கோபியாமல் எனது புஜத்தி லேறிசோகனிர்த்துக் கொள்ளும்பக்ஷத்தில் இக்கடும் வெளிதாண்டும்வண்ண மெடுத்துச்செல்கின்றேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அப்படியானல் மெத்தச்சந்தோஷம் அரிச்சந்திரா நேக்கென்ன ஓட்டைப்பானையானாலுங் கொழுக்கட்டை வெந்தாற்போரும்.

சத்தியகீர்த்தி விருத்தம்.

மண்டலந் தன்னையாண்ட மன்னவா மகிதலத்தோர்
கண்டடி பணிந்துபோற்றுங் காவலா கருணையென்மேற்
கொண்டவா மறையோர்தன்னைக் குணமுடன் றோளின்மீது
தொண்டனு னெடுத்துக்கொள்வேன் சுகமுடன் வருகுவீரோ

(சத்-வ-ம்.) ஆஆமகராஜ் இவ்வந்தணரை யான்பக்குவமாய்த் தோளிற்சுமந்து வருகின்றேன் தாங்கள் சுகமாய்க் கூடவாருங்கள் ப்ரபு.

(அரி-வ-ம்.) ஆஆ புத்தியில் மிகுந்த சத்தியகீர்த்தி மந்திரி எனது விதிவசக்கடனை யான்றீர்க்க வேண்டுமேயன்றி உம்மையுட்படுத்துவது தகாதகாரியமாதலால் நீர் சும்மா கூடவாரும்.



(சத்-வ-ம்.) ஆஆ மகாராஜ் தங்களுத்திரவைமீறி நடக்க முடியாதே இனி யென்செய்வேன்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி இதோ குனிந்துகொண்டேன் நன்றுயேறிக்கொள்ளுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அப்படியே யேறிக்கொண்டே னரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

அரகரா சிவனேயுந்த னருளினாற் புவியிலுள்ள
பரவலர் முதல்மற்றோரும் புடைபர விக்கொண்டாடக்
கிரமமாய்ச் செங்கோலோச்சிக் கீர்த்திபெற் றிருந்தேனிந்தத்
தூரகருக் கின்றுநானுந் தருந்தவா கனமானேனே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[பஞ்சமாபாதகம்படாதோ எந்தன் பாவவினைகளுன்னைத்தொடாதோ]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-திரிபுடை-தாளம்.

கண்ணிகள்.

மங்கையுமைபுடனே வாழ்பவனே-யிந்த
வாதைக்குள்ளாக்கினைவத்தா யேசிவனே
வீரகூஷ ரிவளர் என்புசமே மறை
வேதியனைச்சுமக்க விதிவசமோ
மணிமுடிதனைமட்டுஞ் சுமந்தேனே-யிப்ப
மறையோர்க்குவாகனமாய் அமைந்தேனே
இப்படி வருமென்றே யறியேனே-யின்னும்
என்னென்னவிளையுமோ தெரியேனே

(அரி-வ-ம்.) ஆஆ ஜெகதீசா யான் சத்தியநெறிவழுவாமற் செங்கோற் செலுத்தும்பொழுது மணிமுடியொன்றைச் சுமந்ததைத்தவிர மற்ற சுமையறியேன் அங்ஙனமிருக்க வீரகூஷமீசுதாவும் வீற்றிருக்கும் எனது புஜத்தில் இவ்வேதியனைத்தூக்கிச் சுமக்கும்படி விதித்துவிட்டனையே ஆஆ இப்படி வருமென்று சொற்பனங்கூடக் காணவில்லையே ஆஆ இன்னும் என்னென்ன விபரீதம் விளையுமோ தெரியவில்லையே இனி யென்செய்வேன்.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நேக்கு ரொம்ப சுகமாயிருக்கின்றது பாவம் நோக்குச் சுமக்கவருத்தம் நேக்கு இறங்க வருத்தம் இதற்கென்செய்கின்றது.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தாங்களதைப்பற்றி யோஜிக்க வேண்டாம் இன்னும் எவ்வளவுதூரம் வேண்டுமானாலுஞ் சுமந்து வருகின்றேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா சூரியவெப்பமோ தணிந்துவிட்டது சோலைக்குச் சமீபமாய்வந்துவிட்டோம் நீயும் ரொம்பத்தூரஞ்சுமந்துவந்தமையால் நோக்குச்சிரமமாகத்தானிருக்கும் நல்லது என்னை மெதுவாயிறக்கிவிடு யான் இனிமேல் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் நடந்துவருகின்றேன் அரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) இதோ இறக்கிவிட்டேன் ப்ரபு மெல்லவாருங்கள்.

(நக்ஷ-வ-ம்.) அப்படியே வருகின்றேன்.

---

பொது விருத்தம்.

வருத்தமுடன் மனைவிமகன் மந்திரியோடு
மன்னவனும் பதம்நோக வழிநடந்து
திருத்தமிடு மயில்குயில்க ளன்னங்கிள்ளை
கிளையிருந்த புலிகரடி சிங்கம்வாழும்
பெருத்தவனத் தினுக்குள்ளே சென்றாரல்ல
பெருமையுள்ள கோமதியா றணுகும்போது
கருத்தவிருள் நான்குபுறம் பரவிச்சூழக்
கண்டிட்டான் றங்கமனங் கொண்டிட்டானே.

---

அரிச்சந்திரன் விருத்தம்.

சோமனை நிகர்த்தநல்ல சுந்தர வதனமந்திரி
தாமத மின்றிகாமுந் தடங்களைக் கடந்துவந்தோந்
கோமதி நதியுமிங்கே குறுக்கினிற் றெரிவதன்றி
ஏமமு மடுத்ததாலே யிருளது சூழுதையா.

---



அரிச்சந்திரன்சொல் தரு.

[அன்னையோ நுன்னைநம்பினேனெனக்கருள்புரிகுவாய்]
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மந்திரிகாமெந்தவிதமாய் வனத்தைக்கடந்துபோவது

அநுபல்லவி.

தந்திபுலிகள் வாழுதேயிதோ
அந்தியிருளுஞ்சூழுதே (மந்)

சரணங்கள்.

இரவுமுழுதும் இங்கேயிருந்தே
யேகுவோம்வைகறையிலே
பரிவுடனேநாம் ஒருமையாகவே
படுத்துறங்குவோந்தரையிலே (மந்)

கோமதிநதி தானுநமக்குக்
குறுக்கினிலேதோகாணுதே
மாமரங்களில் நல்லகாய்கனி
வர்க்கங்களிங்கேதோணுதே (மந்)

பசிக்குத்தகுந்த காய்கனிகளைப்
பறித்துக்கொண்டுநீர்வாருமே
புசிக்கத்தரகர்க் ~~கரிய~~கனியாய்ப்
பொறுக்கிக்கொண்டுபோய்த்தாருமே. (மந்)

---

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரதான் பாரும் நாம் சரயுநதியைவிடுத்து அனேகதூரங்கடந்து இவ்வாரண்யத்திற்கு வந்தோம் சூரியனஸ்தமிக்குந் தருணமாயிருக்கின்றது அந்தப்புறத்தில் மிருகஜாதிகள் வசிக்கும் புதர்களடர்ந்த வனமாயிருப்பதால் இப்போது அங்கு பிரவேஜித்தாற் கெடுதிநேரிடுமாதலால் இதோ கோமதியாறுதோன்றுகின்றது அதனருகிலுள்ள மரங்களில் அனேக கனிவர்க்கங்கள் பழுத்திருக்கின்றன அவைகளிற் புசிப்புக்குத்தகுந்த பழங்களைப்பறித்துவந்து நக்ஷத்திரத்தாகருக்கு நல்ல கனிகளாய்க் கொடுத்துவிட்டு மீந்தவையை நாமெல்லோருஞ் சாப்பிட்டுவிட்டு இன்றிராமுழுதும் இவ்விடத்திற் சயனித்திருந்து விடியற்காலமெழுந்து காசியைநோக்கிச் செல்வோம் ப்ரதான்.

(சத்-வ-ம்.) அப்படியே செய்வோம் மகாராஜ் இதோ கனிபறித்துவருகின்றேன்.

(அரி-வ-ம்.) நல்லது அப்படியே பறித்துக்கொண்டுவாரும்.

பொதுவிருத்தம்.

ஆங்குள மரங்களெல்லா மமைச்சனும் பரிசோதித்து
மாங்கனி கொய்யாவாழை மாதளை நாவல்மற்ற
தீங்கனி பறித்துக்கொண்டு சீக்கிர மாகவந்து
பாங்குடன் வீற்றிருக்கும் பார்த்திப னிடத்தந்தானே.

சத்தியகீர்த்தி விருத்தம்.

மன்னவா வனத்தி லுள்ள மாபலா வாழைநாவல்
தன்னைப்போல் ருசிக்குமற்ற கனிகளுங் கொண்டுவந்தேன்
அன்னவர்க் களித்தீங்க ளனைவரும் வேண்மட்டும்
நன்னய மாய்ப்புசித்து நற்பசி தணித்திடீரே.

(சத்-வ-ம்.) ஆஆ மகாராஜ் தங்களுத்திரவின்படி (மா-பலா-வாழை-நாவல்-கொய்யா-மாதளை) முதலான ருசியுள்ள கனிகளைக் கொண்டுவந்தேன் இவைகளையெடுத்துத் தாங்களுக்குவேண்டியவற்றைக்கொடுத்து மீந்தவைகளை நீங்கள் யாவரும் புசித்துப் பசியாறுங்கள் மகாராஜ்.

(அரி-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ப்ரதான்.

அரிச்சந்திரன் விருத்தம்.

கோசிகர் சூதாகீருங் கோமதி நதியில்நித்ய
பூசனை முடித்துக்கொண்டு பொறுமையாய் நாங்களியும்
மாசிலாத் தேனையொத்த மதுரமாங் கனிகள்தன்னை
ஆசையாய்ப் புசித்திப்போதே யரும்பசி தீர்த்திடீரே.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தாங்களிக்கக் கோமதிநதியில் நித்யகட்டளை முடித்துக்கொண்டு இம்மதுரமான கனிகளைப்புசித்துப் பசியாறிக்கொள்ளுங்கள் ப்ரபு.



நக்ஷத்திரத்தாரகர் விருத்தம்.

சரிசரி நேர்த்திநேர்த்தி சமர்த்தினிற் கெட்டிக்காரன்
பிரியமாய் வார்த்தைகூட்டும் பேசுகின் றுமேயன்றி
உரிமையாய் நடந்துகொள்ளு முண்மையுன் னிடத்திலில்லை
விரிசடை முனிவர்வாக்கு வியர்த்தமாய்ப் போச்சுதேடா.

நக்ஷத்திரத்தாரகர்சொல் தரு.

[அங்குநானிருந்தவனை யழைத்துவந்ததேண்டிகண்ணே]
என்ற இந்திரசபாவின் வர்ணமெட்டு.
இராகம்-சுருட்டி-தாளம்-இங்லீஸ்தானி-ஆதி.

கண்ணிகள்.

வாய்ருசிக்கச்சாதமுனி வாங்கியுண்ணச்சொன்னாடா
நாய்நரிகள்தின்றிடாத காய்கனியைத்தின்னேனடா (வாய்)
மாங்கனிகள்தின்பேனால் வயிறும்பெருக்குமடா
நீங்குடையநோயணுகித் தேகமுங்கருக்குமடா (வாய்)
நல்சுவையோடேயன்னம் நல்கினையாற்புசிப்பேன்
இல்லையென்றால்நாளுமுன்னை யிப்பொழுதேயிம்சிப்பேன் ()

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா வெகுநேர்த்தி கண்ணுயிருக்கின்றது பார் விஸ்வாமித்திரமுனிவரானவர் உன்னிடம் அறுசுவைப் பதார்த்தத்துடன் சாதம்வாங்கி யுண்ணச்சொன்னார் அங்ஙனமிருக்க நாய்நரிகூடத்தின்னா யோக்யதையில்லாத காய்கனிகளைக்கொண்டுவந்து கொடுக்கின்றனையே ஆஆ இதுதானு யோக்யதை பார் இக்காய்கனிகளைத் தின்பேனுகில் மாடுபோல வயிறு பெருத்துக் கொடிதான நோயணுகும் இப்பொழுது தேக்குப் பசியதிகமாயிருப்பதால் (தயிர்-மோர்-நெய்-பா) லுடன் சட்சுட்சாதங்கொண்டுவந்து கொடுக்கவேண்டும் இல்லாவிட்டால் உன்னைச் சாமான்யத்தில் விடமாட்டேன் தெரியுமா.

அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தணரே யென்சொந்த வரசினை யிழந்துவிட்டு
மைந்தனுக் கேனுஞ்சாதம் வழங்கிட வகையில்லாமற்

சிந்தையு மயங்கிவாடித் தேவரீ ருடனேவந்து
எங்கனைச் சாதங்கேட்டா லெப்படித் தருவேன்சாமி.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[மாயாசனிமோசமேலா எமந்தனேசெவி]

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவனந்தன்னிற்சாதம் எப்படிக்கிட்டும் சாமி

அநுபல்லவி.

சந்தோஷமாயிதைச் சாப்பிடுமையா
தமியேனெடுத்துரைக்குஞ் சங்கதிபொய்யா (இந்த)

சரணம்.

தேசந்திரவியமுங் கோசிகர்க்கீய்ந்து
சிற்றரசர்நகைக்கச் சிரமதுசாய்ந்து
காசியைநாடிவரக் களைப்புடன்வேர்த்துக்
கஷ்டபட்டனைத்துங் கண்ணாலேபார்த்தும் (இந்த)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனது ராஜ்யாதி பாக்கியங்களைக் கௌசிக முனிவருக்குத் தாரைவார்த்து விட்டுச் சிற்றரசர்களுங் கண்டு நகைக்கும்படியான பஞ்சைக்கோலத்துடன் காசிதேசத்தை நாடி அகோரவெய்யலில் நடந்து வேர்த்துக்களைத்து யாதும் பயனில்லாத இவ்வாரண்யத்திற்கு வந்ததைத்தாங்கள் கூடவேயிருந்து பார்த்தும் இப்போது ஷட்வர்க்கபோஜனம் வேண்டுமென்று வினவினால் அடியேன் எவ்விதமாகக் கொடுக்கமுடியும் ப்ரபு.

சந்திரமதி விருத்தம்.

வஞ்சக முனிவரெங்கள் வாழ்வினைக்கெடுத்துத்தாழ்வில்
மிஞ்சவே விடுத்ததைப்போல் வேதிய மணியேநீரும்
நெஞ்சமுங் கடுத்தாலிந்த நேரமிவ் வனத்தில்நாங்கள்
என்செய்வோங் கனியைச்சோறு யெண்ணியே புசித்திடீரே.

118 235



(சங்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எங்கள் வாழ்வைக்கெடுத்துத் தாழ்வைக்கொடுத்துச் சந்தியில்விடுத்த கன்னெஞ்சமுடைய கௌசிகரைப்போல தேவரீரும் வன்னெஞ்சமாகினால் யாங்களென்செய்வோம் ஆஆ விப்ரசிகாமணி தாங்களிப்போது தயவுகூர்ந்து இக்கனிகளைச் சாதமாய்ப் பாவித்துப் புசிக்கவேண்டும் ப்ரபு.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

இனியுனை வருத்தமாட்டே னிறைவனே நீயுமிந்த
வனிதையு மெனக்குச்சொன்ன வார்த்தையே யுண்மையாகுங்
கனிகளை யெடுத்துக்கொண்டேன் காவலா பழங்களைதைத்
தனிமையா யெடுத்துநீங்கள் சகலரும் புசித்திடீரே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நீயும் உனது மனைவியும் பாவிப்பது வாஸ்தவந்தான் இக்காரணத்திற் சாதத்திற்கு நீங்கள் கா னென்செய்வீர்கள் நல்லது யானிந்தக் கனிவர்க்கங்களில் நல்லவையெடுத்துப்புசிக்கின்றேன் மீந்ததை நீங்களெடுத்துப்புசியுங்கள்.

(அரி-வ-ம்.) அப்படியே புசிக்கின்றோம் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா யான் புசித்துவிட்டேன் நீங்கள் யாவரும் புசித்துவிட்டீர்களாவென்ன.

(அரி-வ-ம்.) எல்லோரும் புசித்துவிட்டோம் ப்ரபு.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

மண்டலத்தை யரசாண்ட மன்னனேகேளாய்
மதுரமிகு கனிவகைகள் புசித்ததாலே
உண்டகளை தொண்டருக்கு முண்டென்றெங்கும்
உரைப்பதுமெய் யானதினால் நானுஞ்சோபங்
கொண்டயர்ந்தே யுறக்கமது கொள்ளத்தானே
கோதையுட னீயுமெந்த னருகிருந்து
கண்டகமாய்ப்பாடி நேக்குநித்ரை
காட்டுவீர் மகிழ்வின்று பாட்டுவீரே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா யானுங்களுடன் வழிகளிலவஸ்தைப்பட்டு வந்ததினாலும் இப்போதிந்தக் காய் கனிகளைத்

தின்றதினுலும் (உண்டமயக்கந் தொண்டருக்குமுண்) டென்பதுபோல நேக்குக் கொஞ்சம் ஆயாசமுங்களைப்பும் வருகின்றது ஆகலால் யானிங்கு சயனித்துக்கொள்கின்றேன் நீ யெனதருகிருந்து விசிரிவீசவேண்டும் உனது மந்திரிமேலமுக்கவேண்டும் உனது கிச்சான் காலமுக்கவேண்டும் உனது மகிழ்பானவள் நேக்குநித்திரை வரும்படி சுகமாய்ப்பாடித் தாராட்டவேண்டும் அரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் சயனித்துக்கொள்ளுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) இதோ சயனித்துக்கொண்டேன்.

(அரி-வ-ம்.) அடி ப்ராணசகி ஐயருக்கு நன்றாய் நித்திரைகொள்ளும்படி சுகமாய்த் தாராட்டுவாயாக.

(சந்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ப்ராணநாத்.

## சந்திரமதிசொல் தாராட்டு.

இராகம்-நீலாம்புரி-ஏகதாளம்.

கண்ணிகள்.

ராரிராரிராரோ ரரிராரிரரிராரோ
தாரணிதோள்நக்ஷத்திரந் தாசரேகண்வளரீர் (ராரி)

ஆங்காரங்கொண்டவரே யரியகனியுண்டவரே
பூங்காவனத்திலுள்ளே பொறுமையாய்கண்வளரீர் (ராரி)

வாழ்வனைத்தும்வஞ்சநெஞ்ச மாமுனிவர்க்கொப்படைத்துத்
தாழ்வதனைக்கொண்டுவனந் தங்குதற்குநாளாச்சோ (ராரி)

சிற்றரசர்சூழ்ந்திருக்கத் தேசமதையாண்டதுபோய்ச்
சுற்றிலும்புலிகரடி சூழ்ந்திருக்கக்காலமிதோ (ராரி)

பழமுடனேபாலும் பாம்மான்னமுண்டதபோய்
அழுகியதோர்காய்கனிக ளருந்தவிதிவசமோ (ராரி)

மலரணையிற்றூங்குகின்ற மார்க்கமெல்லாம்விட்டுத்
தலைவிதியோகாங்களிந்தத் தரையிற்படுத்திடவே (ராரி)

ரதங்குதிரையானையின்மேல் நங்கிசமாயூர்ந்ததுபோய்ப்
பதங்களில்நடந்துவரப் பண்ணினாதுமீஸ்வரனோ (ராரி)



தொண்டரெல்லாமெங்களிடஞ் சொற்பணிகள்செய்ததுபோய்க்
கண்டவர்க்கெல்லாம்பணிந்து காற்பிடிக்கநாளாச்சோ (ராரி)

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணநாத் மறையவர் நன்றாயுறங்கிவிட்டார் ப்ரபு.

(அரி-வ-ம்.) ஆனல் யானுமிவ்விடத்திற் சயனித்துக்கொள்கின்றேன்நீயுந் தேவதாசனும் எனதருகிற் சயனித்துக்கொள்ளுங்கள்.

(சந்-வ-ம்.) அப்படியே சயனித்துக்கொள்கின்றோம் நாதா.

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் நீருஞ் சயனித்துக்கொள்ளும்.

(சத்-வ-ம்.) அப்படியே சயனித்துக்கொள்கின்றேன் மகராஜ்.

பொது விருத்தம்.

அதிக்கிரமஞ் செய்தமுனி யன்றராத்தி
யரிச்சந்த்ரன், செயலனைத்து மறியவேண்டி
உதித்தமனப் படிஞான திருஷ்டியாலே
ஓர்ந்திடவே மன்னன்மகன் மனைவிமந்த்ரி
கொதித்தருணம் படைத்திடுசுக் கிரனுமந்தக்
கோமதியா றென்றுலகோர் கூறும்நல்ல
நதிக்கரையிற் படுத்துறங்கக் கண்டேயுள்ளம்
நைகுவான் மழைபொழியச் செய்குவானே.

## விஸ்வாமித்திரர் துராலோசனை.

இப்போது அரிச்சந்திரன் என்ன ஸ்திதியிலிருக்கின்றனென்று ஞானதிருஷ்டியாற் பார்க்கின்றேன் ஆஆ இவ்வர்த்தசாமவேளையில் கோமயாற்றுக்கருகில் மிருகஜாதிகளடர்ந்த கானகத்தில் அரிச்சந்திரனும் அவன் மனைவிமைந்தன் மந்திரிமுதலானவர்களும் நக்ஷத்திரதாசனுகிய சக்கிரபகவானுடன் படுத்துச் சுகமாய் நித்திரைசெய்கின்றார்கள் நல்லது இப்பொழுதே யவ்விடத்திற்காற்று மழையுங் கலந்தடிக்கச்செய்து நித்திரையைப்பங்கப்படுத்தி யான் கொடுத்த நாற்பத்தெட்டுநாட் கெடுவரையும் அப்பாற்போவொட்டாமல் நதியில் வெள்ளம்பெருகியோடிக்கொண்டிருக்கும்படி செ

ய்து பலவிதமா யல்லோகலப்படுத்திப் பொய்யனாகும்படி செய்கின்றே னிந்தப்பகதூர்.

பொது விருத்தம்.

மாமுனி யேவிவிட்ட மழையது பொழியக்கண்ட
சேர்மகன் முதலாயுள்ளோர் குணமுடனெழுந்திருந்து
தாமத மாகத்தூங்குந் தாகனை யரசன்கண்டு
நேமமா யருகிற்சென்று நிஷத்தி லெழுப்புவானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

கடையிரு லனுத்திட்டமோ நடந்தவர் ததிறற்கண்ட
இடைவழி யாலேமிக்க சோபமுங் கொண்டிட்டீரோ
இடியுடன் மழையுங்காற்று மிடாது செய்வதாலே
கடுதியிற் றுயிலைவிட்டுத் தாகரே யெழுந்திடீரே.

அரிச்சந்திரன்சொல் தரு.

[மோடியாலரா ராசாமிரு ராவை மோடியாலரா]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு
இராகம்-காபி-ஏகதாளம்.

பல்லவி.

எழுந்திருங்காண் ஓ இறைவனேநீரும்
எழுந்திருங்காண்

அநுபல்லவி.

மழைபெய்யுதே மிகு வாதைசெய்யுதே(எழு)
வெள்ளமாய்ச்சாடுமே நதி பெருகியோடுமே(எழு)
அப்பாற்செல்லுவோம் இதற் காரைச்சொல்லுவோம்(எழு)

(அரி-வ-ம்) ஆஆ ஸ்வாமி விரைவாயெழுந்திருங்கள் இதோ காற்று மழையுங் கலந்தடிக்கின்றது இனிமேற்சாமானியத்தில் விடமாட்டாது போலிருக்கின்றது இனி யிங்கிருக்கும் பக்ஷத்தில் நதியிற் பிரவாகம் பெருக்கெடுத்து கொண்டுவிடும் அப்பால் அக்கரை செல்வதற்கு முடியாதாகையால் இப்பொழுதே நதியைக்கடந்து அக்கரைக்குச்சென்றுவிடுவோம் பிரபு.



நக்ஷத்திரத்தாகர் விருத்தம்.

ஈதென்ன சனியனடா பகலனைத்தும்
இணைபிரியா துன்னுடனே நடந்துவந்த
வேதனையாற் சற்றயர்ந்து நித்திரைசெய்த
வேளைதனில் மழைபொழிந்து துணிநனைந்து
கூதல்மிக நடுக்குதின்னும் போகப்போகக்
கொடுமையென்ன விளைந்திடுமோ தெரியவில்லை
ஆதலினாற் பொன்னையிங்கே கொடுத்துச்செல்வாய்
அட்டிசொன்னா லுன்னையப்பால் விட்டிடேனே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா பார் யான் பகலெல்லாம் உன்னுடனே நடந்து திரிந்து சிரமமடைந்து இவ்வர்த்தராத்திரியிற் சற்றயர்ந்து தூங்கும்போது மழையும் வந்துவிட்டது துணியும் நனைந்துவிட்டது குளிருஞ் சகிக்கக்கூடவில்லை வெடவெடென்று நடுக்கின்றது நீயுஞ்சும்மா இளவுகொடுக்கின்றனையே அப்பப்பா உன்னுடன் வந்து சுகமடைந்ததுபோரும் இன்னும் போகப்போக என்னென்ன கஷ்டஞ்சம்பவிக்குமோ தெரியவில்லையாதலால் இனிமேல் நீபோகுமிடங்களுக்கு யான் வரமாட்டேன் நீ செலுத்தவேண்டிய பொன்னை யிவ்விடத்திலேயே செலுத்திவிடு இல்லாவிட்டா லுன்னை யப்பால்விடமாட்டே னரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

இதுவரை யொருருக்கு மேகவே யில்லையன்றோ
ஸ்திதியெலா மின்னதென்று திருவுள மறிந்திருந்தும்
நிதிதனை யிங்குகேட்டால் நிருபன்யா னென்னசெய்வேன்
மதிவலா முன்னேசொன்ன வார்த்தைபோற்றருவேன்பொன்னே

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி நாம் இன்னும் யாதொரு நகரத்திற்குச் செல்லவில்லையே அங்ஙனமிருக்க இவ்வாரண்யத்தில் எவ்விதமாய்ப் பொன்கிடைக்கும் தங்களுக்குத் தெரியாத யோஜனையென்னவிருக்கின்றது ஆகையால் முன்சொன்ன கெடுக்குள்ளாகப் பொன்னைச் சேகரித்துத்தருகின்றேன் அதுவரையுந் தயவுசெய்து கூடவாருங்கள் பிரபு.

(நக்ஷ-வ-ம்.) நேக்குக் கண்ணுந்தெரியவில்லை வழியுந்தோண வில்லையே அங்ஙனமிருக்க இவ்விருளில் எப்படி நடந்துவருவே னரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) ஸ்வாமி இதோ அடிக்கடி மின்னல்வெளிச்ச முண்டாகின்றது அந்த வெளிச்சத்திலேயே யென்கரத்தைப் பற் றிக்கொண்டு மெல்ல நடந்துவாருங்கள் ப்ரபு.

(நக்ஷ வ-ம்.) அப்படியே வருகின்றேன்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி இதுதான் கோமதிநதி தாங்கள் பயங்கரப்படாமலிறங்கி வாருங்கள்.

நக்ஷத்திரத்தாரகர் விருத்தம்.

புத்தியுனக் கணுவளவு மில்லையோடா
பொறுமையுட னயோத்தி னகர்க்குச்சென்று
சித்தமுடன் முனிவரது புதல்விமாரை
வேட்டல்புரிந் தன்னுடைக் கைகொள்ளாமற்
பித்தியுடன் காடுமேடா றுங்காற்றுப்
பாரமழை மின்னலிடி தன்னிற்சிக்கி
மெத்தவிடர் கொள்வதன்றிப் பாலன்றன்னை
வேதனைக்குள் ளாக்கிவைத்துக் கொல்கிறாயே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நேக்குக் கொஞ்சமே னும் புத்தியில்லைப்போலிருக்கின்றதே பார் அயோத்தியாபுரிக்குச் சென்று விஸ்வாமித்திரமுனிவரின் செல்விகளை மணம்புரிந்துகொ ண்டு நல்ல சுகத்திலிருப்பதைவிடுத்து காட்டிலும் மேட்டிலும் மழையிலும் காற்றிலும் மின்னலிடியிலும் கல்லிருளிலும் நதிவெள் ளத்திலுமகப்பட்டுக் கஷ்டிப்படுவதுமன்றியில் அரிய சிறுகுழந் தையைக்கூட அவஸ்தைப்படுத்திக் கொல்கின்றனையே வேண்டாம் வேண்டாம் நான் சொன்னபடிகேள் நேக்கு ராஜ்யத்தைவாங்கித் தருகின்றேனரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

பொன்னகர் புகழுமல்ல புவிதனு சுரரேகேளீர்
மன்னிய கற்பாள்சந்த்ர மதிதனை யன்றிவேறு



கன்னியர் மீது நானுங் காதலே கொள்ளமாட்டேன்
இன்னுமுன் சூதவார்த்தை யியம்புவ தடுத்திடாதே.

அரிச்சந்திரன்சொல் தரு.

[ஐயோநானொரு பெண்பிறந்தகதையை
யாருடன்சொல்வேனம்மா திரிச்சடையே]
என்ற இராமநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயாமுனிநாதரே பொய்யாமொழிநாதரே
அடுக்குமோஇவ்வசனம் அந்தணரே (ஐயா)
என்னபோனாலுஞ்சரி எதுவந்தாலுஞ்சரி
இணங்கேனொருபொழுதும் இறையவனே (ஐயா)
சொன்னபடியுமக்குப் பொன்னைநான்றருகிறேன்
சுகமுடனேவருவீர் தூயவனே (ஐயா)

(அரி-வ-ம்.) ஆஆ, ஸ்வாமி என்னபோனாலும் எதுவந்தாலும் எங்களுக்கின்னுமெவ்வித துன்பம்நேரிட்டாலும் சந்திரமதியைத் தவிர வேறுமாதர்களை யிச்சிக்கமாட்டேனாதலால் இனிமேலிவ்வித வார்த்தை பாஷிக்கவேண்டாம் கெடுக்குள்ளாகப் பொன்னைக் கொடுத்துவிடுகின்றேன் கூடவாருங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நேக்கு நதியைப் பார்க் கப்பார்க்கப் பயங்கரமாயிருக்கின்றதே இதிலெப்படியடா இறங் குவேன்.

(அரி-வ-ம்.) நாங்களெல்லாங் கூடவரும்பொழுது தங்களுக் கென்ன பயம் ப்ரபு இதோ கரத்தைப் பிடித்துக்கொள்கின்றேன் மெல்ல இறங்கிவாருங்கள்.

நக்ஷத்திரத்தாரகர் விருத்தம்.

அடிக்கடி பொன்னைத்தாவென் றலட்டிய தாலேயந்தக்
கடுப்பினை மனதில்வைத்துக் காரிருள் நேரம்பார்த்து

நடுத்தடத் தினிலேயுள்ள நதியினிற் பிடித்துத் தள்ளி
மடித்திடத் துணிவுகொண்ட பரிக்கமாய்க் கருதுதேடா.

### நக்ஷத்திரத்தரகர்சொல் தரு.

[வாழியிங்குநீவாடி நான்வுந்தனனுக்னைத்தேடி]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-சகானு-தாளம்-ஆதி.

கண்ணி.

| | |
|---|---|
| கொல்லப்பார்க்கிறு | யோடா-உன் |
| கூடநான்வரமாட்டேன் | போடா |
| அல்லினிசிறங்கிடக் | கேடா-இந்த |
| ஆற்றினில்நீந்திட | மாடா |
| சொல்லியபொன்னையிங்கே | தாடா-இனிச் |
| சுகமில்லை நடைசொலக் | கூடா (கொல்) |

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா யான் பொன்னுக்காக இம்சித்துவந்ததை யுத்தேசித்து என்னைக் கொன்றுவிட்டாற் கறுப்பற்றுப் போகுமென்றெண்ணி யிருக்கின்றாய்போலிருக்கின்றது அப்படியா னிறந்துவிட்டால் என் பெண்டுபிள்ளையெல்லாம் ஆலாய்ப்பறக்குமே யதற்கென்செய்கின்றது. இப்பவோ நதியில் வருகின்ற வெள்ளத்தைப் பார்த்தால் மனமெல்லாம் நடுங்கின்றது. இதில் நீந்திவருதற்கு யான்மாடல்ல நீயேதோ (சாகிறவனுக்குச் சமுத்திரமுழங்காளாழ) மென்பதுபோல உயிர்போனாலுஞ் சரி மயிர்போனாலுஞ்சரியென்று இறங்கத்துணிந்தனை யானிறங்கவே மாட்டேன் இனிக் கிஞ்சிற்றேனுந் தடைசொல்லாமற் பொன்னைக் கொடுத்துவிடு யானிப்படியே யோடிப்போய்விடுகின்றே னரிச்சந்திரா.

### அரிச்சந்திரன் விருத்தம்.

மும்மையிற் செய்தபாப முழுமையு மொன்றுசேர்ந்து
இம்மையி லெனைவருத்த விடுக்கனும் போதாதென்று
உம்மையுங் கொல்வதற்கு முன்னிடு வேனோசாமி
செம்மையா யெடுத்துக்கொண்டு செல்குவேன் வருகுவீரே.



(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி யான் முப்பிறப்பிற்செய்த பாபத்தினால் இப்பிறப்பிலனுபவிக்குங் கஷ்டம்போதாமற் றங்களையுங் கொன்று நரகத்திற்காளாகக் கருதுவேனா ஆஆ ஸ்வாமி தங்களுக்கு நதியிலிறங்கப் பயங்கரமாயிருந்தால் யான் றங்களை யெடுத்துக்கொண்டுபோய் அக்கரை சேர்த்துவிடுகின்றேன் வாருங்கள் ப்ரபு.

### நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

மன்னவா நீநடந்து வருவதே கஷ்டமாகும்
என்னையு மெடுத்துக்கொண்டே யெப்படிச் செல்வாயப்பா
சொன்னது போதுமக்கையைத் தொட்டுநீ முன்னாற்சென்றால்
நன்னய மாகவுன்பின் னடந்துநான் வருகுவேனே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நீ நடந்துவருவதே துர்லபம் அங்ஙனமிருக்க என்னை யெங்ஙித மெடுத்துச்செல்லமுடியும் நல்லதிருக்கட்டும் என்கரத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள் யான் மெல்ல நடந்துவருகின்றேன்.

(அரி-வ-ம்.) அப்படியே பிடித்துக்கொள்கின்றேன் வாருங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடடா வெள்ளங் காலையிழுக்கின்றதடா.

(அரி-வ-ம்.) பெருவிரலையூன்றி மெல்லவாருங்கள் ஸ்வாமி.

(நக்ஷ-வ-ம்.) அப்படியே வருகின்றேன்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி நதியைக்கடந்து வந்துவிட்டோமாதலால் இப்போதிவ் வாரண்யத்திற்றங்கியிருந்து வைகறையிலெழுந்து வேறிடத்திற்குச்செல்வோம் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அப்படியே செய்வோ மரிச்சந்திரா.

### பொது விருத்தம்.

ஏவிவிட்ட மறையிலரிச் சந்த்ரனென்போன்
என்னகதி யானுமினன் றெண்ணமுற்றுப்
பாவிவிஸ்வா மித்திரனு மனக்கண்ணாலே
பார்த்துநதி கடந்துவிட்ட விபரங்கண்டு

தாவிமனங் கொதித்திதற்கென் செய்வேனென்று
சங்கடமுங் கொண்டுமனந் தேறியந்தக்
காவினுக்குச் சென்றுபயங் காட்டவென்று
கனப்புறுபூ தத்தினையு மனுப்புவானே.

## விஸ்வாமித்திரர் துராலோசனை.

நானேவிட்ட மழையினால் அரிச்சந்திரன் இப்போதென்ன நிலைமையி லிருக்கின்றானென்று ஞானதிருஷ்டியாற் பார்க்கின்றேன். அடடா அரிச்சந்திரன் வெள்ளம் வருவதற்கு முன்னமே ஜாக்கிரதையாயிருந்து கோமதிநதியைக்கடந்து அக்கரைசேர்ந்து விட்டானே இனியென்செய்கின்றது நல்லது இப்போது அவ்வனத்துக்குப் பூதத்தையேவிவிட்டுப் பயங்காட்டும்படி செய்து அதனால் அரிச்சந்திரன் நிலைகுலைந்து எனது வலையிலகப்படும்படி செய்கின்றே னிந்தப்பகதூர்.

பொது விருத்தம்.

புங்கவ னனுப்பிவைத்த பூதமும் விண்ணுமண்ணும்
பங்கமுற் றிடக்கெற்கிப்புப் பண்ணியே மலையைப்போல
கங்குலி லோடியந்தக் காவலன் முதலெல்லோருந்
தங்கிய வனத்திற்சென்று நடல்புடற் செய்ததன்றே.

## பூதம்வருந் தரு.

[ஜர்மதோஹை ஜானீ ஜர்மதோஹை]
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு.

பல்லவி.

பூதம்வருகுதே பெரும்-பூதம்வருகுதே.

அநுபல்லவி.

சூதமுடனே மாதவன்விட்ட (பூதம்)

சரணம்.

விண்ணும்பூமியுமதிரவே வேந்தன்மனமும்பதறவே
எண்ணஞ்சிதறவே நல்ல எண்ணஞ்சிதறவே
சூதமுடனே மாதவன்விட்ட (பூதம்)





நக்ஷத்திரத்தாகர் விருத்தம்.

படபடென் றுள்ளமெல்லாம் பதைக்குது மன்னபார்பார்
குடலது நடுங்கிவாயுங் குளறுது குளறுதையோ
உடலது பெருத்துக்கண்ணை யுருட்டியே விழித்துக்கொண்டு
அடட்டா பூதமென்றிங் கணுகுவ தறிகுவாயே.

நக்ஷத்திரத்தாகர்சொல் தரு.

[பதசா பதசா நதமுனிஜனசுகமபா]

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு

இராகம்-காம்போதி-தாளம்-சாபு.

பல்லவி.

அடடா அடடா குடலதாடுங்குதடா

அநுபல்லவி.

தடல்புடலுடனே பூதமிருகுது
தப்பவழியினி யெப்படியோ (அடடா)

(நக்ஷ-வ-ம்.) ஆஆ அரிச்சந்திரா இதென்ன கஷ்டகாலமாயிருக்கின்றது அப்பப்பா இதோபார் ஓர் பெரும்பூதமானது திரிலோகங்களும் நடுங்கும்படியாய்க் கர்ச்சித்து வருகின்றது அதைப் பார்க்கப்பார்க்க நேக்குப் பயங்கரமுண்டாகி மயிர்க்கூச்சலெடுக்கின்றது இனி நம்மை யென்னசெய்யுமோ தெரியவில்லை இதைவிட்டுத் தப்பியோடுவதற்கும் வழியொன்றும் புலப்படவில்லையே இதற்கென்செய்கின்ற தரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) பூதம்வந்தால் வருகின்றது அதற்காகப் பயப்படவேண்டாம் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) ஹே அரிச்சந்திரா நீயோ தான வனவேட்டையாடி வழக்கப்பட்ட க்ஷத்திரியனானதாற் கொஞ்சந்தைரியமாய்ப் பாவிக்கின்றனை நோக்காறுற் கட்டிப்பியெல்லாங் கூழாய்க்கலக்கின்றதே யானென்செய்வேன்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி யானிருக்கும் பொழுது தங்களுக் கென்னபயம்.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

நீவழுத் தியதோர்வார்த்தை நேக்கொன்றும் பிடிக்கவில்லை
தாவியே வரும்பூதத்தைத் தப்பிநா மகன்றாலன்று
ஆவியும் பிழைப்பதன்றி யன்னையின் வயற்றிற்றானே
ஓவிய மறுபிறப்பா யுதித்ததா யுன்னலர்மே.

(நக்ஷ-வ-ம்.) ஆஆ அரிச்சந்திரா நீ பாஷிக்குஞ் சமாதானம் நேக்கொன்றும் பிடிக்கவில்லை இப்பூதத்தைவிட்டுத் தப்பினால்மட்டும் நாம் தாய்வயற்றில் மறுஜென்ம மெடுத்தது போலாகுமே யன்றி வெள்ளம்வந்தபின் அணைபோடுவதுபோல் அஜாக்கிரதையாயிருந்தால் உயிருக்கபாயம் வந்துவிடும் யானோ ஏழைபார்ப்பான் அதிலும் பிள்ளைகுட்டிக்காரன் என்னை யிந்தச் சமயத்திலெப்படியாவது காத்துரக்ஷிக்கவேண்டு மரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தாங்கள் கிஞ்சித்தேனும்பயப்படவேண்டுவதில்லை என்பின்னால் நின்று கொள்ளுங்கள் யானந்தப் பூதத்தை நிமிஷநேரத்திற் றுரத்திவிடுகின்றேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அப்படிச்செய்தால் நேக்கு ரொம்பப் புண்ணியங்கிடைக்கு மகாராஜா இதோ சமீபத்தில் வந்துவிட்டது.

பூதம் விருத்தம்.

மிக்கவே பசியினாலே மெலிந்துடல் வருந்திக்கொண்டு
துக்கமா யிருக்கும்போது சூழ்ந்தநல் லிருள்நேரத்தில்
தக்கதோ ருணவாயைந்து ஜனங்களு மகப்பட்டார்கள்
இக்கணந் தின்றுநன்று யேப்பமிட் டகலுவேனே.

## பூதஞ்சொல் தரு.

[பசிபந்தனாரா நைனஹாரா நௌரதனஹாரா]
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-தோடி-தாளம்-சாபு.

பல்லவி.

என்-காவனுக்குள் வந்தநீங்கள் யாவர்சொல்லுமோ



அநுபல்லவி.

கோவமது — திரவிதோ
கொன்றிடுவேனே
கொன்றுபசி — யின்றகலத்
தின்றிடுவேனே-என். (காவ)

(பூதம் வசனம்.) அடா துஷ்டர்காள் பாருங்கள் கிஞ்சித்தேனும் பயமில்லாமல் எனது காவனுக்குள்ளமைந்த இவ்வாரண்யத்திற்குட் பிரவேசித்த நீங்கள் யாவர்கள் உங்களை யிதோ க்ஷணநேரத்திற்குள்ளாகப் புசித்து எப்பசியடங்குகின்றே னிந்தப்பசுதூர்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பாதகஞ் செய்ததில்லை பாரினி லொருவரேனுந்
தீதர சியற்றுகின்ற செம்மலென் றுரைத்ததில்லை
நீதமா யுலகையாண்ட நிருபனு னுகையாலே
பூதமே மகிழ்ச்சியாகப் புசித்திட வருகுவாயே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[செவியாசாதுனே]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-வசந்தம்-தாளம்-சாபு.

பல்லவி.

பூதமேவருவாய் கொலை
புரியத்திடமுள (பூதமே)

அநுபல்லவி.

ஏதுமிலாவெங்களை — யெடுத்துவிழுங்கிடப் (பூதமே)

சரணம்.

ஆதாரமெனக் — காயுதமேதுமில்லை
நீதமெனுமாயுதம் — நெஞ்சிலிருக்குது (பூதமே)

(அரி-வ-ம்.) ஆஆ பூதமே யானோ அயோத்தியாபுரியையரசாண்ட சத்தியவாக்கரிச்சந்திரன் இவள் எனது மனைவி இவன் எனது புத்திரன் இவர் எனது மந்திரி இவர் எங்களுடன்வந்த வேதியர்

ஏதோ எங்களைக் கொல்லவேண்டு மென்று வந்திருக்கின்றாய் போலிருக்கின்றது யாங்களோ ஊனில்லாத ஏழைகளாயிருப்பதால் நீகொல்வதைப்பற்றி யெங்களுக்கு யாதொரு வியாகுலமுமில்லை அன்றியும் என்கரத்தில் வில்வாள்முதலிய ஆயுதங்களொன்று மில்லை ஆனால் சத்தியமென்னும் வசனவாளொன்றுதானிருக்கின்றது ஆகையால் நீ தடையில்லாமல் வருவாயாக.

பூதம் விருத்தம்.

மன்னவா நீயுஞ்சத்ய வானெனச் சொல்வதாலே
உன்னையுங் கொல்லேனுந்த னொண்டொடி மைந்தன்வேண்டேன்
மன்னிய மந்திரிவேண்டாம் மறையவன் றன்னை யீய்ந்தால்
இன்னள விநிலேதின்றே யென்பசி யாற்றுவேனே.

(பூதம்-வ-ம்) ஹே மன்னவா உன்வாக்கினாலேயே நீசத்தியவானென்று வெளியானதால் உன்னையும் உன்மனைவி மைந்தன் மந்திரிமுதலானவர்களைத் தீண்டேன் உன் பின்னால் நிற்கின்ற சுடுமூஞ்சிப்பார்ப்பானைக் கொடுப்பாயாகில் நன்றாய்த் தின்றுபசியாற்றிக்கொள்வேன்.

(நக்ஷ-வ-ம்.) ஹே அரிச்சந்திரபூபதி இப்பூதமானது உங்களையெல்லாம் விட்டுவிட்டு என்னைமட்டுங் குறிப்பாய்க் கேட்கின்றதே ஆ ஆ மண்டலாதிபா இதற்கென்செய்வேன்.

(அரி-வ-ம்.) ஆ ஆ ஸ்வாமி தங்கள் மாமிசம் ருசியாயிருக்குமென்று கேட்கின்றது ப்ரபு.

(நக்ஷ.வ-ம்.) ஆனால் என்னைப்பிடித்துக் கொடுத்துவிடுவீரோ

(அரி-வ-ம்.) அப்படியொருக்காலுஞ் செய்யமாட்டேன்ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) ஹே மகாராஜா வப்பாளானையர்க நேர்க்குப் பொன்னும் வேண்டாம் சாதமும் வேண்டாம் இந்த ஆபத்திலிருந்து விடுவித்தால் யானிப்படியேயோடிவிடுவேன் ப்ரபு.

(அரி-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ப்ரபு

(பூதம்-வ-ம்.) ஹே மன்னா எனக்குப் பசியதிகமாயிருக்கின்றது அவ்வேதியனைக்கொடு சீக்கிரம்.



அரிச்சந்திரன் விருத்தம்.

எந்தனைத் துணையாய்நம்பி யிங்குவந் திருக்குமிந்த
அந்தணர் தன்னைத்தின்ன வளித்திட மாட்டேன் கூளி
உந்தனற் பசியுந்தீர வுகந்தெனைப் புசிப்பதென்றால்
வந்திடு வேண்டாமென்றால் மறைந்துநீ யோடிடாயே.

(அரி-வ-ம்.) ஹே பூதமே என்னை யாதரவாய் நம்பி வந்திருக்கும் வேதியரைத்தின்னக் கொடுக்கமாட்டேன் உனக்கிஷ்டமிருந்தால் என்னைப் புசித்துப் பசிதணித்துக்கொள் இல்லாவிடில் எங்கள் கண்ணுக்குத் தென்படாமல் மறைந்தோடிப் போய்விடு சீக்கிரம்.

(நக்ஷ-வ-ம்.) ஹே அரிச்சந்திரா இங்கு நின்றிருந்த பூதத்தைக்காணோமே எங்குபோய்விட்டது.

(அரி-வ-ம்.) ஏனது சத்தியமென்னும் வசனவாளுக்குப் பயந்தோடிப்போய்விட்டது அன்றியும் விடிந்தும்போய்விட்டது இனிமேல் நமக்கென்னபயம் ப்ரபு.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

பூதமென் றுரைத்தாலிந்தப் புவிதனி லுள்ளயாருங்
காததூ ரத்துக்கப்பாற் கதறியே யோடுவார்கள்
ஏதுகா ரணத்தினாலோ வேகிடச் செய்தாய்நீயுந் (டா.
சூதன்யான் வரவேமாட்டேன் சொர்ணத்தைக் கொடுத்துப்போ

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா பார் பூதமென்றால் யாருங்காதவழியோடுவார்க)ளென்றுசொல்வார்கள் அங்ஙனமிருக்க நீ கிஞ்சிற்றேனும் பயமின்றி அப்பூதத்தை யெவ்விதமாகவோ துரத்திவிட்டாயன்றோ அதனால் உன்னைப்பார்க்க நேக்குப் பயங்கரமாயிருக்கின்றது இனிமேலுன்னுடன்கூடவரமாட்டேனாதலால் இப்பொழுதே ரொக்கத்தைச் செலுத்திவிட்டு அப்பாற்செல்வாயாக

அரிச்சந்திரன் விருத்தம்.

மன்னன்யா னுமக்குத்துன்பம் வந்திடி லஞ்சிடாமல்
அன்னள விநிலேயெந்த னருயிர் தன்னையீய்ந்து

துன்னிடு மிடாவின்த்தார் தொலைத்திட வல்லென்சாமி
என்னினீர் விலக்கமாக எண்ணிட வேண்டாம்வாரீர்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தங்களுக்கேதேனும் அன்பம்சேரி டும்விஷயத்தில் அடியேனை மிடியேனையிரைத் தத்தஞ்செய்தாவது விடுவிக்கக்கூடியவனுதலால் என்னைச் சிஞ்சித்தேனும் விகற்பமா யெண்ணவேண்டாம் ப்ரபு கூடவாருங்கள் செல்வோம்.

(நக்ஷ-வ-ம்.) அனுலப்படியே வருகின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பற்பல வனங்களெல்லாம் பார்த்துமக் தோமொன்றேனும்
இப்படி யிருந்ததில்லை யிந்த்ரனுக் குரித்தாயுள்ள
கற்பகச் சோலைதன்னைக் காவிதற் கிடநாகச்
செப்பிடப் போமோசெபெண்ணே செவ்வையாய்ப் பார்த்திடாயே.

அரிச்சந்திரன்சொல் தரு.

[கண்மணியேயின்னக்துக்கமா யெழுந்திடடா]
என்ற நீதிநெறி அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-தேசிககமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

இந்தவனம்வந்துபாரடி சந்த்ரமதியே
இந்தவனம்வந்துபாரடி.

அநுபல்லவி.

கந்தமலர்ச்சோலைகளும் காய்த்தமரச்சாலைகளும்
பந்திபந்தியாகத்தோணுதே எழிலுடனே
பந்திபந்தியாகத்தோணுதே சந்த்ரமதியே (இந்)

மாவிலங்குக்கூட்டங்களும் வர்னப்பட்சியோட்டங்களும்
ஓவியமாய்க்காணுதேபெண்ணே கண்ணுக்குநல்ல
ஓவியமாய்க்காணுதேபெண்ணே சந்த்ரமதியே (இந்)

இங்கிதமதாகவெழுந் துங்கஜலம்பொங்கிவிழுந்,
கங்கையுந்தெரியுதேமானே குளிர்ச்சியுடன்
கங்கையுந்தெரியுதேமானே சந்த்ரமதியே (இந்)



(அரி-வ-ம்.) ஆஆ ப்ராணசகி இங்கு தோன்றும் வனத்தின் சிங்காரத்தினைப் பார்த்தனையா இதற்கு இந்திரன் கற்பகச்சோலை யும் நிகராகாதெனில் வேறென்ன வுவமையிருக்கின்றது பார் இதில் (அத்தி-ஆல்-இத்தி-சந்து - உசில்-ஒமை-எட்டி-எலுமிச்சை-கடம்பு-கமுகு-கொன்றை-கொய்யா-சந்தனம்-தணக்கு - தெங்கு-தேக்கு-நாவல்-நாரத்தை-பனை-பாதிரி-புளி-பூவரசு-முருக்கு - மூங்கில்-வன்னி - வாகை - வில்வம்-விளா-வேங்கை-வேல்-வேம்பு-மர-பலா) முதலான விருட்சஜாதிகள் நிறைந்திருக்கின்றன இதோ (மல்லிகை-முல்லை-இருவாக்ஷி-சண்பகம்-பாரிஜாத) முதலிய புஷ்ப ஜாதிகள் பரிமளிக்கின்றன இதோ சில சாதுமிருகங்களும் அனந் தம் பக்ஷிஜாதிகளும் ஆடிப்பாடி விளையாடிக்கொண்டிருக்கின்றன அதோ கங்கையானது பெருகியோடுகின்றது அதில் அனேகயானை கள் ஜலக்ரீடைசெய்கின்றன ஆஆ சந்திரமதி இவ்விபரீதங்களைப் பார்க்கப்பார்க்க என் மனதிற்கு ஓர்வித ரமணீகரமுண்டாகின்ற தாகையால் இவ்விந்தைகளனைத்தையும் சிந்தைகளிக்கப் பார்த்து முந்திய சாஞ்சல்யத்தை மாற்றிக்கொள்வாயாக.

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணப்பிரியா இவ்வதிசயங்களைப் பார்க் கப்பார்க்க எனக்கும் ஒருவிதமான சந்தோஷமாகத்தானிருக்கின் றது ப்ரபு.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

இல்லமதை விடுத்துவந்து மழையுங்காற்றும்
இலகுவெயில் தன்னில்விடாய்ப் பட்டுநானும்
நல்லபோ ஜனமின்றி யுன்பின்னாலே
நடந்துவரு வதையெல்லாங் கவனியாமல்
வல்லபமாய்ப் பெண்டுபிள்ளை களிதோடிந்த
வனவளப்பம் பார்த்துமன மகிழ்கின்றாய்நீ
செல்லவேண் டியமுனிவர் கடனையிங்கு
தீர்த்திடாய் வனப்பெருமை பார்த்திடாயே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா வெகுநேரத்தியாயிருக்கின் றதே பார் யான் வீடுவாசலைவிடுத்து வெய்யிலினுங் காற்றிலும் விடாய்ப்பட்டும் மழையினில் நனைந்தும் காலாகாலத்திற்றகுந்த போஜனமில்லாமலும் அவஸ்தைப்பட்டுக்கொண்டு வருகின்றேன்

அதையெல்லாங் கவனியாமற் பெண்டுபிள்ளைகளுடன் வனவேடிக்கை பார்த்துக்கொண்டு ஒய்யாரமாய்த் திரிகின்றனையே இப்படியெல்லாஞ் ஜாலம் பண்ணிக்கொண்டிருந்தாற் பார்ப்பான் சொல்லாம லோடிப்போய்விடுவானென் றெண்ணிக்கொண்டனையோ சரிசரி முனிவர்க்குச் செல்லவேண்டிய பொன்னைக் கொடுத்துவிட்டு நீ மகாராஜனைக வேடிக்கைவினோதங்கள் பார்த்துக்கொண்டிரு யானிப்படியே யூருக்குத்திரும்பிவிடுகின்றே னரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி யாங்கள் வனவேடிக்கை பார்க்க வேண்டுமென்றும் அதனால் மகிழ்ச்சி யடையவேண்டுமென்றும் அபிப்பிராயப்படவில்லை கண்ணுக்குநேராய்ப் புலப்பட்டமையாற் பார்க்கும்படி நேரிட்டதேயன்றி வேறில்லை அதற்காகக் கோபித்துக்கொள்ளவேண்டாம் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) நோக்குக் கடன்கட்டவேண்டுமென்கின்ற கவலை யின்சிற்றேனுமில்லையே, அதனாலேதான் கோபிக்கவேண்டுவதாயிருக்கின்றது.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி அப்படியெண்ணவேண்டாம் காசிதேசம் போனவுடன் எப்படியாவது கடனைச் செலுத்திவிடுகின்றேம் அதுவரையிலும் வற்புறுத்தாமற் கூடவாருங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) ஆனாலப்படியே வருகின்றேன்.

பொது விருத்தம்.

பூதமரிச் சந்திரனை யெவ்வாறின்னல்
புரிந்ததுவோ வதனானன்று யறிவேனென்று,
பாதகவிஸ் வாமித்ரன் ஞானக்கண்ணாற்
பார்த்தாவிப ரந்தெரிந்து மனதுநொந்து
ஏதுசெய்வே னிதற்கென்று யோசித்துப்பின்
எழில்மிருக ஜாதிகளை யழைத்தன்னோனை
வாதுசெய்து பயங்காட்டி வருவீரென்று
வனத்திலுக்கே யனுப்புதற்கு நினைத்திட்டானே.

## விஸ்வாமித்திரர் துராலோசனை.

யானனுப்பிய பூதமானது அரிச்சந்திரனை யென்னஸ்திதியில் வைத்திருக்கின்றதென்று ஞானதிருஷ்டியாற் பார்க்கின்றே னிப்



போது ஆஆ அரிச்சந்திரனனவன் வழிகளிலேற்பட்ட இடறுகளையெல்லாந் தப்பித்துக்கொண்டு வந்ததுபோல பூதத்தையுஞ் சத்தியமென்னும் வாளினாற் பஞ்சாய்ப்பறக்கச்செய்துவிட்டானல்லவா தாகனாகிய சக்கிரபாகவானுந் தன்னாலான சாமார்த்தியங்களைத்துங் காட்டியும் ஒன்றும் பலிக்கவில்லை, அவர்களுங் காசிப்பட்டணத்துக்குச் சமீபமாயடுத்துவிட்டார்கள் எனது சபதமாறவும் வசிஷ்டன் சபதம் நிறைவேறவுமான காலஞ்சம்பவித்துக்கொண்டிருக்கின்றதுபோ லிருக்கின்றதே இதற்கென்செய்கின்றது நல்லது இப்போது பலவகையான துஷ்டமிருகங்களையேவி அவர்களுக்குப் பயங்காட்டி அரிச்சந்திரன் பொய்சொல்லும்படியான ஏற்பாடு செய்யும்படி தந்திரஞ்செய்கின்றே னிந்தப்பகதார்.

பொது விருத்தம்.

மாமுனி யனுப்பிவைத்த வனவிலங் குகளனைத்துந்
தாமத மின்றியோடித் தடுத்துநற் பயமுங்காட்டப்
பூமலி வனத்திற்சென்று புரவலன் றனக்குமுன்னால்
எமதூ தர்களைப்போல்கின் றிடர்பல புரிந்ததன்றே.

## மிருகங்கள்வருந் தரு.

[சாஹிக்கிச்சித்ரமனபீதமப்யாரே மஞேனைப்ராகினமோர்யாரே]

என்ற இந்துஸ்தானியின்ஜாடை வர்ணமெட்டு.

இராகம்-கருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

விதவிதமாகிய மிருகங்கள்கூடி
வேந்தன்முன்னால்வந்துசேர்ந்தனகோடி

அநுபல்லவி.

இதமுடனிறைவனும் மந்தலையுந்தாகனும்
இனியமனைவிமந்திரிமனம்பதற
மதகரிபுலிசிங்கம் கதறியேசினம்பொங்க
வனமெல்லாங்குதித்தனமண்ணதிர (விதவி)

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

பட்டகா லதிலேயின்னும் படுமென முன்னோர்சொன்ன
கட்டுரை மெய்யேயாகுங் காவலா சுற்றிப்பாராய்
அட்டதிக் கிதுமிருந்தே யாக்கிர ஷத்திரோடு
தட்டமா மிருகமாகச் சூழ்ந்திதோ வருகுதப்பா.

(நக்ஷ-வ-ம்.) ஆஆ அரிச்சந்திரா யாமென் செய்வேன் பார் (பட்டகாலிலேபடுங் கெட்டகுடியேகெடு) மென்பதுபோல் அடிக்கடி துன்பமே சம்பவிக்கின்றதே இதோ (புலி-கரடி-சிம்மம்-யானை) முதலான மிருகஜாதிகள் நம்மைநோக்கி யெதிர்த்து வருகின்றது அவைகளைப்பார்க்க வெனக்கு மனந்தாளவில்லை என்னை யிவ்வாரண்யத்திற் கழைத்துவந்து மிருகங்களுக்கிரைகொடுக்கலாமென்று எத்தனை நாளாகத் தவமிருந்தனையோ தெரியவில்லையே ஆஆ இனி யென்செய்வேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

விலங்குகள் வருகுதென்று வேதிய விளக்கேநீருங்
கலங்கிட வேண்டாமேதுங் கஷ்டமுஞ் செய்யவந்தால்
இலங்குமென் னுயிரையேது மிரையதாய்க் கொடுத்தப்போதே
துலங்குமும் முயிரைத்தானே சுகமுடன் ரக்ஷிப்பேனே.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தாங்கள் மிருகஜாதிகளுக்காகயோஜிக்கவேண்டுவதில்லை அப்படியேதாவது தங்களுக்குத் துன்பஞ்செய்ய வரும்பக்ஷத்தில் என்னுயிரைக் கொடுத்தாவது தங்களை மீட்டிவிடுகின்றேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) ஆஆ அரிச்சந்திரா அவைகளைப் பார்க்கப்பார்க்கநேக்குச் சிறுநீர்வருகிறாப்போலிருக்கின்றது இந்தச்சமயத்தில் என்னை ரக்ஷித்தால் நேக்கு ரொம்பச் சுகிர்தங்கிடைக்கு மகாராஜா.

மிருகங்கள் விருத்தம்.

எங்களி னினத்தைமுன்னு விரக்கமில் லாமற்கொன்று
பங்கமுஞ் செய்தமுன்னு பழிக்கெதிர் பழியாய்த்தானே
உங்களைக்கொன்று நாங்க ளுதிரமுங் குடித்திப்போது
பொங்கிய பசியைத்தீர்த்துப் போகிறோம் பார்த்திடாயே.



(மிருகங்கள் வசனம்.) ஹே ஜீவகாருண்யமில்லாத மன்னா நீ முன்னங்கானகத்தில் வேட்டையாட வந்தவிடத்தில் எங்களினங்களையெல்லாங் கொன்று நாசஞ்செய்தனையல்லவோ அந்தப்பழிக்கெதிர்ப்பழியாக இப்போ துங்களைக்கொன்று ரத்தங்குடித்துப் பசிதீர்த்துக் கொள்கின்றோம் பார்சீக்கிரம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மிருகஜா திகளேநாங்கள் மேதினி தனிலெப்போதும்
ஒருவருக் கேனுந்தீமை யுண்டுசெய் திடவேயில்லை
தருமமே விரதம்பூண்டோந் தயவுடன் ரக்ஷித்தாலுங்
கருவமாய் பக்ஷித்தாலுங் கடவுளே துணைகாண்பீரே.

(அரி-வ-ம்.) ஆஆ மிருகஜாதிகள் பாருங்கள் யாங்களிதுவரையிலும் மனுநீதிக்கு விரோதமாக யாருக்குந் தீங்குமுதலிய பாதகங்கள் செய்யவில்லை சத்தியத்தையே விரதமாகக்கொண்டிருக்கின்றோமாகையால் நீங்களெங்களை ரக்ஷித்தாலுஞ்சரி பக்ஷித்தாலுஞ்சரி திக்கற்ற எங்கட்குத் தெய்வந்தான்றுணை இதோ வருகின்றேன் உங்களிஷ்டப்படி செய்துகொள்ளுங்கள்.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நம்மை யெதிர்த்துவந்த மிருகஜாதிகளானவை நீ யென்னமோ முணுமுணவென்று முனங்கினவுடனே திரும்பியோடிப்போய் விட்டனவே அதன் காரணம் யாது.

(அரி-வ-ம்.) நமக்குத் தெய்வகடாக்ஷமிருக்கும் வரையிலும் மலைபோலவருந்துன்பமெல்லாம் பனிப்போல பறந்துவிடும் ப்ரபு.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

அல்லலிவ் வளவுநானு மடைந்தது போதுமின்னந்
தொல்லையெவ் வளவுண்டாமோ தோன்றலே யறியமாட்டேன்
நல்லமா முனிவருக்கு நல்கிடும் பொன்னையீயும்
இல்லையென் றுரைத்தாலுருக் கிக்ஷண மேகுவேனே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா யான் இவ்வளவு அவஸ்தைப்பட்டது போருமானது இன்னும் போகப்போக என்னென்ன கஷ்டங்கள் சம்பவிக்குமோ தெரியவில்லையாதலால் யானினி

மேல் உன்னோடு வரமாட்டேன் நீ முனிவருக்குக் கொடுக்கவேண்டிய பொன்னை யில்லையென்று ஒருவார்த்தைமட்டுஞ் சொல்லிவிடு- யானிந்தண்டையே ஊருக்கோடிப் போய் விடுகின்றே னரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

தடுத்துநா னுரைத்ததாகச் சஞ்சலங் கொள்ளவேண்டாம்
அடுத்திடா வார்த்தைசொன்னால் யாவருங் கேட்டிடார்கள்
எடுத்தநல் விரதத்திற்கே யெதிரிடை யாகப்பொன்னுங்
கொடுத்ததை யில்லையென்று கூறிட மாட்டேன்சாமி.

அரிச்சந்திரன்சொல் தரு.

[சந்திரவதனு என்னைச்சாருமையல்தீரவாடா]

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தானி-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

புங்கவாநானும் ஒரு பொய்புஞ்சொலமாட்டேனையா

அநுபல்லவி.

திங்கள்ரவிபின்னாலுந் தெற்குவடக்கானாலும் (புங்க)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி சந்திரசூரியாள் முறைதவறித் தெற்குவடக்காய்ச் சென்றாலும் அடியேன் ஒருக்காலும் பொய்சொல்லமாட்டேன் இவ்வளவு தூரங் கூட வந்தீர்கள் காசியும் இன்னுங் கொஞ்சதூரத்திற்று னிருக்கின்றது அங்குபோகும்வரை யவசரப்படாமல் வந்து தவணைக்குள்ளாகப் பொன்னை வாங்கிக்கொண்டு போவீர்கள் வாருங்கள் ப்ரபு,

(நக்ஷ-வ-ம்.) அப்படியே வருகின்றேன்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி இதோ யமுனையாற்றங் கரைக்கு வந்து சேர்ந்தோம் இவ்விடத்திற் சற்று தங்கியிருந்து அப்பாற் செல்வோம் ப்ரபு,

(நக்ஷ-வ-ம்.) அப்படியே செய்வோம்.





பொதுவிருத்தம்.

மிருகஜா திகளிடத்தி லரிச்சந்திரன் எவ்
விதமானு னென்றறிவே னென்றே யந்த
அருமுனிவன் மனக்கண்ணைத் திறந்துபார்த்து
யமுனைநதிக் கரையினில்வந் திருக்குஞ்செதி
தெரியவுட னேயெழுந்து நானிப்போதே
செம்மலிடஞ் சென்றுஜெக ஜாலத்தாலே
அரிதமுடன் காரியத்தை முடிப்பேனென்று
சொல்லுவான் யமுனைநதி செல்லுவானே.

விஸ்வாமித்திரர் துராலோசனை.

அரிச்சந்திரன் மிருகஜாதிகளிடத்தில் என்னகதியடைந்தானென்று ஞான திருஷ்டியாற்பார்க்கின்றேனிப்போது ஆஆ நானென்னென்ன வுபாயங்கள் செய்தும் ஒன்றுக்காவது சிக்காமல் மிருகஜாதிகளையும்விட்டுத் தப்பித்துக்கொண்டு இப்போது யமுனைநதிதீரத்திற் றங்கியிருக்கின்றானே இனியென்செய்கின்றது நல்லது யானிப்பொழுதே யவ்வரிச்சந்திரனிருக்குமிடத்திற்குச் சென்று அரட்டிமிரட்டிக் கண்ணைபுருட்டி இன்னும் எனக்குத்தெரிந்த தந்திரமந்திர ஜாலசம்பிரதாயங்களெல்லாங் காட்டி என்னாற்கூடியவரை யொருகைபார்த்துக் காரியத்தை முடித்துவருகின்றே னிந்தப்பகதூர்.

பொது விருத்தம்.

மாசிலாத் தவமியற்றி மகிமைமென் மேற்படைத்த
கோசிக முனியுமெண்ணங் கொண்டது போலப்போதே
காசியை நோக்கிச்சென்று காவலன் றன்னைத்தேடி
ஆசையா யமுனையென்னு மாற்றினை யடைந்திட்டானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

சுந்தர மயிலேநல்ல சோலைவாழ் குயிலேயெந்தன்
சிந்தையைக் கவர்ந்துகொள்ளுஞ் சித்திர மானேதேனே
சந்திர மதியேயந்தத் தவமுனி நம்மைத்தேடி
வந்திடும் வேகந்தன்னை மங்கையே பார்த்திடாயே.

### அரிச்சந்திரன்சொல் தரு.

[மோகங்கொண்டேன்றுரையே]
என்ற டாமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாதேவியேதோபாராய் மாமுனிவரவலைநேரார்

அநுபல்லவி.

இதேதேனுமுளதோ தேவியேநம்மேற்பழுதோ (மா)

சரணம்.

குடிகள்குற்றஞ்செய்தாரோ கொடுமையாகவைதாரோ
மடமயிலேநாமுங்கூடி மலரடிதுதிப்போம்வாடி (மா)

---

(அரி-வ-ம்.) ஆஆ ப்ராணசகி இதோ விஸ்வாமித்திரமுனிவர் வருகின்றார் அவர் வருகின்ற கோலத்தை யுத்தேசிக்கும் விஷயத்தில் ராஜ்யத்துக்குடிக ளேதாவது குற்றங்குறைகள் செய்திருப்பார்கள்போற் காணப்படுகின்றது நல்லது நாமெல்லோரும் எதிர்சென்று வணங்கி யழைத்துவந்து சங்கதி விசாரிப்போம் பெண்ணே.

(சங்-வ-ம்.) அப்படியேசெய்வோம்ப்ரபு.

### அரிச்சந்திரன்சொல் நாமாவளி.

[சித்துவதமாரி ஸைகோகடாரி]
என்ற இத்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-இந்துஸ்தானி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

வந்தனமுந்தந்தேன் மாமுனியே.

---

(அரி-வ-ம்.) ஆஆ தவசிரேஷ்டரே அடியேன் வந்தனம்புரிகின்றேன்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் அரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தாங்கள் ராஜ்யாதிகாரத்தைவிடுத்து ஏகாந்தமாயிக்கு ப்ராப்தமானகாரணம் யாது குடிபடைகள் ஏதாவது குற்றங்குறைகள் செய்தார்களா ப்ரபு.





விஸ்வாமித்திரர் விருத்தம்.

குடிகள்குற்றஞ் செய்யவில்லை யுனதுதுன்பக்
கொள்கைதனை நினைத்துவந்தே னெனக்குத்தந்த
படியரசு தேவையில்லை முன்னுளுள்ள
பரதேசிக் கோலமதே போதுமன்னா
கெடிதலத்தை யெனக்கீய விலையென்றேனும்
கீர்த்தியுள்ள மக்களைநீ மணங்கொண்டேனும்
அடைவுட னயோத்திதனை யென்றும்போலே
யாளுவாய் சுகமாக வாழுவாயே.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா குடிப்படைகள் யாதொரு தீங்குஞ்செய்யவில்லை நீ நல்ல சுகானுபவங்களனைத்தும் விடுத்து இக்கானகத்திற் படுகின்ற கஷ்டங்களைப்பார்ந்தால் எனக்கு மிகுந்த வியாகூலமாயிருக்கின்றதாகையால் நான் பரதேசியானதால் எனக்கொருவாழ்க்கையுந் தேவையில்லை எனக்குரியகாவியுடையும் கானகசஞ்சாரமுங் கந்தமூலபலாதியுணவுமே போதுமானது நீ கொடுத்த நாடுநகரபாக்கியங்களைக் கொடுக்கவில்லையென்று ஒரு வார்த்தைசொல் அல்லது என துடத்திரிகளையாவது விவாகம்புரிந்துகொள் யானிப்பொழுதே நீ கொடுத்தயாவற்றையும் உனக்குத் தாரைவார்த்துவிட்டு எனது ஸ்வயஸ்தானத்திற்குச் சென்று விடுகின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

இன்னலென் விளைந்திட்டாலு மென்னுடலழிந்திட்டாலும்
நன்னில மொழிந்திட்டாலும் நற்கடல் சுவறினாலும்
முன்னுரை தன்னைவிட்டு மொழியது மாறிமாறிப்
பின்னுமோர் வார்த்தைதன்னைப் பேசிடமாட்டேன்சாமி.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[சீராரவையில்வளர் சிறந்தோர்களேவந்தனம்]
என்ற நவரசலீலாமிர்த ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

மாதவரேநீரிந்த வார்த்தைசொல்லத்தகாது

அநுபல்லவி.

ஏதுவந்தாலும்நானே யென்னும்பொய்யைச்சொல்லேனே (மாத)

சரணம்.

தந்தைதயிலேயென்று சாற்றிடவெனுல்லாமோ
அந்தமங்கையர்களை யான்மணங்கொளப்போமோ (மாத)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தாங்களிந்தவார்த்தை பாவிப்பது அவ்வளவு உசிதமன்று ஏனெனில் (ஒருபானைசோற்றுக்கு ஒருசோறுதான்பதம்பார்க்கவேண்டு) மென்பதுபோல என்னைபொருதரஞ் சோதித்தாற்போதாதா அடிக்கடி யெதற்காகப் பரிக்ஷிக்கவேண்டும் வேண்டாம் வேண்டாம் என்னை நறுக்கிச் சாருகப்பிழிந்தாலும் இரத்தமானது வழிந்தாலும் சத்தசாகரமழிந்தாலும் இத்தரையொழிந்தாலுந் தங்களுக்குக்கொடுத்ததை யில்லையென்று ஒருக்காலுஞ் சொல்லுமாட்டேன்தங்கள் புதல்விகளைமணங்கொள்ளவுமாட்டேன் ஏன் வீண்வம்புசெய்கின்றீர்கள்.

(விஸ்-வ-ம்.) உனக்கு ப்ரார்த்தமில்லைப் போலிருக்கின்றது நல்லது யான்சென்று வருகின்றேன்.

(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள்.

(விஸ்-வ-ம்.) ஹே நக்ஷத்திரத்தாரகரே இந்தச் சோலைக்குச் சென்று வருகின்றேன்.

பொது விருத்தம்.

அவ்வரிச்சந் திரனென்போ னொருவழிக்கும்
அகப்படவே யில்லையந்தச் சுக்ரன்றன்னால்
ஒவ்வியசா மார்த்தியங்க ளெல்லாங்காட்டி
ஒன்றேனும் பயனில்லா மற்போச்சந்தோ
செவ்வையுட னின்னுமுள தந்திரங்கள்
செப்பியவ னைச்செயிக்கத் தாரகன்றன்னை
இவ்வனத்திற் கழைப்பேனென் றருந்தவத்தோன்
எண்ணுவான் மந்த்ரஜெபம் பண்ணுவானே.



## விஸ்வாமித்திரர் துராலோசனை.

ஆஆ அரிச்சந்திரனானவன் ஒருவழிக்குங் கட்டுப்படவில்லை நக்ஷத்திரத்தாரகனாகிய சுக்கிரபகவானுந் தன்னாலியன்ற சம்பிரதாயங்களைக் காட்டியும் ஒன்றும் பயன்படவில்லையே இதியென் செய்கின்றது நல்லது சுக்கிரபகவானை யிச்சோலைக்கு வரவழைத்து அவருக்கு இன்னுஞ் சிலதந்திரங்களை யெடுத்துக் காட்டிக்காரியத்தை முடிக்கும்பொருட்டாக இப்போது சுக்கிரபகவானை வரும்படி மந்திரஞ்ஜெபிக்கின்றே னிந்தப்பகுதார்.

பொது விருத்தம்.

காயமே யழிந்திட்டாலுங் கனவிலும் பொய்சொல்லாத
தூயவே ளிடத்திலுற்ற சுக்கிர பகவான்றன்னை
மாயமாய் வருகவென்று மாமுனி ஜெபித்தபோதே
சேயமாய் வெள்ளியந்த நிமிஷத்திற் சென்றிட்டாரே.

(நக்ஷ-வ-ம்.) ஹே விஸ்வாமித்திரரே இந்தச்சோலையிற்றனிருக்கின்றீர் நல்லது என்னை வரும்படியாய் மந்திரம் ஜெபித்தகாரணம் யாது.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

உள்ளதைப் பறித்தேன்காட்டுக் கோட்டினேன் மழையாலாற்றில்
வெள்ளமும் பெருகச்செய்தேன் விலங்குகள் பூதத்தாலே
சள்ளையும் படவேசெய்தேன் சமர்த்துகள் நீருஞ்செய்தீர்
வள்ளல் நமதுமாய வலைக்கெலாந் தப்பித்தானே.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[இத்தனைகோபமாகுமா]
என்ற பதத்தின் வர்னமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

சிக்கவில்லையே சுக்கிரா

அநுபல்லவி.

நம்மை-பக்குவம ... னைத்தையும்வி
லக்கியதோ ... நீற்கிறான் (சிக்

சரணம்.

தந்திரத்துக்குஞ்சிலது மந்திரத்துக்-குமவன்ப
யந்துநடப்-பானெனவே சிந்தையில்-நினைந்திருந்தோம்
வந்தவிட ரத்தனைக்கும்
அந்தவரிச் சந்திரன் (சிக்)

(விஸ்-வ-ம்.) ஹே சுக்கிரபகவானே பாரும் நாம் எவ்வித தந்திரமந்திர சாமார்த்தியங்களைக் காட்டியும் அரிச்சந்திரன் நமது கண்ணியிற் கொஞ்சமேனு மகப்படவில்லை அவனுடைய தவனை நாளுஞ் சமீபித்துவிட்டது இனிச் சும்மாவிராமல் அடிக்கடி பலவிதமான இம்சைகளைச்செய்து எப்படியாவது அவன் வாயிற்பொய் வரும்படியான முயற்சியை நீரே தேடவேண்டும் இல்லாவிடிற் பழிப்புக்கும் நகைப்புக்கும் இடமுண்டாகுஞ் சுக்கிரபகவானே இதற்கென்சொல்கின்றீர்.

நக்ஷத்திரத்தாகர் விருத்தம்.

இன்னமென் னலேயான விடைஞ்சல்க ளனைத்துங்காட்டி
முன்னமே யுமதிடத்தில் முடிப்பதா யுறுதியாகச்
சொன்னசொற் படியேபொய்யைச் சொல்லிடும் படியேசெய்வேன்
மன்னவ னிடத்திற்செல்ல மகிழ்வுடன் விடையீய்வீரே.

(நக்ஷ-வ-ம்.) ஹேவிஸ்வாமித்திரரே இன்னும் என்னாற்கூடிய வரையிம்சித்துப் பொய்சொல்லும்படி செய்து உமது மனக்குறையைத் தீர்க்கின்றேன் அதைப்பற்றி யோஜிக்கவேண்டாம் இப்போதரிச்சந்திரனிடஞ் செல்கின்றேன் விடைகொடும்.

(விஸ்-வ-ம்.) அப்படியே சென்றுவாரும்.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நாமிவ்விடத்திற்கு வந்து காலகரணமாகிவிட்டமையால் இனியமுனையாற்றைக்கடந்து அப்பாற் செல்வோம் வருவீர்களாக.

(அரி-வ-ம்.) அப்படியே யிதோவருகின்றோம் ப்ரபு.

பொது விருத்தம்.

எண்ணியவெண் ணங்களெல்லாம் வீணாய்ப்போச்சே
என்னசெய்வே னென்றுளமும் வாடிப்பின்னும்



நண்ணியசுக் கிரனுடனக் கினியைச்சேர்த்து
நன்றாகத் துன்பமது செய்யச்சொன்னாற்
புண்ணியவான் பயந்திடனே வாக்கினாலே
பொய்சொல்வா னென்றுவிஸ்வா மித்ரனன்று
திண்ணியமா யக்கினியை வரவழைக்கத்
தேறுவான் மந்திரமுங் கூறுவானே.

விஸ்வாமித்திரர் துராலோசனை.

ஆஆ யானெண்ணிய வெண்ணமெல்லாம் மண்ணாய்ப்போய்விட்டதே என்செய்கின்றது நல்லது அடிமேலடியடித்தா லம்மியும் நகரு மென்பதுபோல சுக்கிரபகவான் செய்யும் இம்சையுடனே இப்போது அக்கினிபகவானையும் வரவழைத்து அரிச்சந்திரன்செல்லும்வழியைமறித்துச் சுடும்படியாகச்செய்து என்து வார்த்தைக்குக் கட்டுப்படும்படியான தந்திரஞ்செய்யும்பொருட்டு அக்கினிபகவானைவரும்படியாய் மந்திரஞ்செபிக்கின்றேனிந்தப்பகதார்.

பொது விருத்தம்.

விக்கியே மாக்கவிஸ்வா மித்திரன் வனத்துக்குள்ளே
முக்கிய மானமந்த்ர முறையினாற் ஜெபமுஞ்செய்த
பக்குவந் தன்னைக்கண்டு பண்புட னன்புங்கொண்டு
அக்கினி பகவானென்றே யந்தணர் போல்வந்தாரே.

அக்கினிபகவான்வருந் தரு.

[வேதமெனத்தெஜா கிற்குணதோப்ரபு]

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

அக்கினிபகவான் வந்தாரேயிதோ
அக்கினிபகவான்.

அநுபல்லவி.

தக்கவிவேக தவத்தின்முன்பாக (அக்)

சரணம்.

ஓதியமந்த்ர உண்மையைக்கண்டு
வேதியர்போலே வேடமுங்கொண்டு (அக்)

(அக்கினிபகவான் வசனம்) ஹே விஸ்வாமித்திரரே இதோ வந்துவிட்டேன்.

(விஸ்-வ-ம்.) ஹே அக்கினிபகவானே யானதைப்பற்றி மிகுந்தசந்துஷ்டியடைந்தேன்.

(அக்-வ-ம்.) ஆஆவிஸ்வாமித்திரரே என்னை வரும்படி மந்திரஞ்செபித்தகாரணம் யாது

விஸ்வாமித்திரர் விருத்தம்.

அக்கினியே யையோத்திக் கரசனை
அரிச்சந்த்ரன் மனைவிமகன் மந்த்ரியோடு
சுக்கிரனு மாகவிதோ வனத்துக்குள்ளே
துரிதமுடன் செல்லுகின்ற ராகையாலே
பொக்கெனவே யவர்கள்தடைப் பட்டுக்காசி
போகவொண்ணு மற்படிக்கு நீருஞ்சென்று
இக்கணமே கோட்டைகட்டி வளைந்துதீயாய்
எழுந்திடீர் வானுறவே வளர்ந்திடீரே.

(விஸ்-வ-ம்.) ஆஆ அக்கினிபகவானே பாரும் அயோத்தியாபுரிக்கிறைவனாகிய அரிச்சந்திரனென்பவன் மனைவி மைந்தன் மந்திரிமார்களுடன் என்னாலனுப்பப்பட்ட சுக்கிரபகவானை யழைத்துக்கொண்டு இவ்வாரண்யத்திற்குள்ளாகக் காசிப்பட்டணம் நோக்கிச் செல்கின்றனுதலால் அவர்கட்கு முன்னதாக நீர்சென்று அவர்களந்தப்புறம்போக மார்க்கமில்லாமல் ஆகாயமண்டல மளாவும்படியாக நான்குதிக்கிலும் நெருப்பாய்வளர்ந்து அவர்களைச் சுடுவதுபோல பாவனைகாட்டி என்வார்த்தையைக்கேட்பதா யொப்புக்கொள்ளும்படியான தந்திரஞ்செய்யவேண்டும் அக்கினிதேவா இதற்கென்சொல்கின்றீர்.



அக்கினிபகவான் விருத்தம்.

அவ்வரிச் சந்த்ரன்மெய்யன் அவன்மனை கற்பில்வல்லாள்
இவ்விரு நீதித்தீயு மெந்தனைச் சுட்டுக்கொல்லும்
ஒவ்விரா னருகிற்செல்லே னொக்கமா யிருந்துகொண்டு
செவ்வையா யெரிவேன்கிட்டச் செறிந்திடில் மறைகுவேனே

(அக்-வ-ம்.) ஹே முனிவரே பாரும் அரிச்சந்திரனென்றுலென்னசாமானியமா அவனே மகாசத்தியவான் அவன் மனைவியோ பதிவிரதாசிரோமணி அங்ஙனமிருக்க யானவர்கள் பாலணுகினால் அவர்களுடைய விரதநெருப்பானது என்னைச் சுட்டுவிடுமாதலால் ஏதோ நீர் கேட்டுக்கொள்வதி னிமித்தம் தூரத்தில் நின்று நீர்சொன்ன பிரகாரம் என்து சொரூபத்தைக் காட்டுகின்றேன் முனிவரே.

(விஸ்-வ-ம்.) ஆனாலப்படியாவது செய்யும் இனி யென் செய்கின்றது.

(அக்-வ-ம்.) ஆனால் யான் சென்று வருகின்றேன்.

(விஸ்-வ-ம்.) அப்படியே சென்று வாரும்.

பொது விருத்தம்.

அருந்தவன் வேண்டுதற்க யக்கினி விரைவாய்ச்சென்று
வருந்தியே காசிசெல்லு மன்னனை வழிமறித்துப்
பெருந்தண லாகத்தோன்றப் பெருந்தகை யரசன்கண்டு
பொருந்திய தரகனை பூசுர விட்டுஞ்சொல்வனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயரோ வேதநூல்க ளனைத்தையுங் கரைத்தேயுண்ட
மெய்யரே ஞானவிஸ்வா மித்திர முனிவர் தூதா
துய்யதா யிங்குநல்ல ஜோதிபோற் பிரபைதோன்றி
வெய்யகா னகத்தைச்சுற்றி விண்ணுற வளருவதையா.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[தின்னுநம்பிநானு கிரஜனயனு]
என்ற ஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

இதைப்பாருமையா எரியுதேமெய்யாய்

அநுபல்லவி.

கொதிப்பதுந்தீயோ கொள்ளிவாயின்பேயோ (இதை)

சரணம்.

இன்னதென்றுநானே ஏதுமறியேனே
துன்னியதைக்கண்டு சொல்லுவீர்நீர்தானே. (இதை)

(அரி-வ-ம்.) ஆஆஸ்வாமி இதோ பாருங்கள் இதுநேரபரியந்தம் ஒன்றுமில்லாதிருந்த இவ்வாரண்யத்தில் நிஷ்காரணமாய் திடீரென்று கொழுந்துவிட்டெரிகின்றது அது நெருப்போ அல்லது கொள்ளிவாய்ப்பேயோ ஒன்றுந்தெரியவில்லை ஆஆ இருக்க இருக்கமண்டலத்தைச்சுற்றி யண்டத்தையளாவுகின்றபடியால் அதனை யின்னதென்றறிந்து சொல்லுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) ஆஆ அரிச்சந்திரா கெடுதிவந்துவிட்டது கெடுதி வந்துவிட்டது பார் இதுதான் வடவாமுகாக்கினியென்பது இதில் நீங்கள்தான் சாகப்போகின்றீர்களென்றால் யானுமல்லவோ சாகும்படி நேரிட்டுவிட்டது ஆஆ நான்குபுறத்திலுஞ் சூழ்ந்துகொண்டதே ஆஆ இதற்கிரைகொடுக்கவா என்னையழைத்துவந்தீர்கள்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எங்களுக்கபாயம் நேரிட்டாலுந் தங்களுக்குயாதொரு தீங்கும் நேரிடாமற் பாதுகாத்துக்கொள்கின்றோம் பயப்படாதீர்கள் ப்ரபு.

நக்ஷத்திரத்தாரகர் விருத்தம்.

பசித்திடத் தாவிநம்மைப் பற்றியே வருகுந்திக்குப்
புசித்திட வேள்குலத்திற் பொருந்திய வுயிரொன்றீய்ந்தால்
வசப்பட வுணவாய்க்கொண்டு மறைந்திடு மன்றேல்நம்மை
நசித்திடச் செய்யுமன்று நன்குட னெனைக்காப்பாயே.

136



(நக்ஷ-வ-ம்.) ஆஆ அரிச்சந்திரா இந்தநெருப்பானது கொடிய பசியினாற்கொதித்துத்தாவி நம்மை நடுவேவிடுத்து நான்குபுறத்திலுஞ் சூழ்ந்துகொண்டமையால் இத்தீயானது அரசர்குலத்திலொருவனையாவது சுட்டுப் பக்ஷணம்பண்ணாமல் வெர்ன்னதணியமாட்டாது ஆதலால் நீங்களெப்படிக் கெட்டுப்போனாலும் என்னைமட்டுந் தப்பித்துவிடவேண்டு மகாராஜா.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஜீவனைக் கொடுத்தால்மட்டுந் தீபது தணியுமென்று
ஓவிய வார்த்தைசொன்ன வுண்மைவே தியரேயெந்தன்
ஆவியை யளித்தேயுங்க ளனைவரை யுந்தீண்டாமல்
தாவியே வருகுந்தீயைத் தணிந்திடச் செய்குவேனே.

(அரி-வ-ம்) ஆஆஸ்வாமிதாங்களதைப்பற்றி யோஜிக்கவேண்டாம் உயிரைப்புசித்துத் தணியக்கூடிய நெருப்பாயிருக்கும்பக்ஷத்தில் யானொருவனே யிந்த நெருப்புக்கிரையாகி யுங்களையெல்லாந் தப்பித்துவிடுகின்றேன் ப்ரபு இதோ செல்கின்றேன்.

சத்தியகீர்த்தி விருத்தம்.

சேயனைப் போலேயென்னைச் செல்வமாய் வளர்த்துவந்த
தூயமன் னவனேயும்மைச் சுடரினுக் கிரைகொடுத்தென்
காயமும் வைத்திருந்தாற் காசினி யேசுமிந்தத்
தீயினுக் குணவாயெந்தன் ஜீவனைக் கொடுப்பேனையா.

## சத்தியகீர்த்திசொல் தரு.

[ஆரண்யத்திலோரரசன் நித்ரைசெய்யவே]
என்ற இந்திரசபாவின் வர்னமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்

கண்ணிகள்.

மற்பொருதும் பொற்புளதோள்
மன்னவாகேளும்
இப்பொழுது செப்புவது
ஏற்காதோர்நாளும்
நானிருக்கக் கோனிறக்க
ஞாயமல்லவே

ஆனதினல் யானுயிரை
யளிப்பேன்மெல்லவே

(சத்-வ-ம்.) ஆஆ மகராஜ் சற்று நிதானித்துக்கேளுங்கள் பாருங்கள் யானிருக்கும் பொழுது தாங்களக்கினிக்கிரையாவது நீதிக்குவிரோதமாதலின் தாங்கள் நில்லுங்கள் யானொருவனேசென்று அவ்வக்கினிக் கென்னுயிரை கொடுக்கின்றேன் மகராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

புத்தியி லும்மைப்போல புவியினி லொருவர்காணேன்
உத்தம செங்கோல்மன்ன ருயிரது கொடுத்தால்மட்டுஞ்
சத்தியந் தப்பிடாமற் றனலது தணியுமென்று
இத்தகு தெரிவதாலே யென்னுயி ரளிப்பேனையா.

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் உம்மைப்போன்ற சற்குணமுடைய மந்திரிகள் யாவரிருக்கின்றார்கள் பாரும் அரசரையல்லாது மற்றவருயிரைப் புசியாதென்று தெரியவருகின்றமையால் இப்போது என்னுயிரையே யந்தநெருப்புக்குத் தத்தஞ்செய்கின்றேன் ப்ரதான்.

(சத்-வ-ம்.) தாங்களிறந்து விடும் பக்ஷத்தில் யானுங் கூடவே மடிந்து விடுவேனேயன்றி உயிருடனிருக்கமாட்டேன் மகராஜ்.

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரதான் நாமிருவரு மிறந்துவிடும் பக்ஷத்திற் சந்திரமதியையுந் தேவதாசனையும் ஒரூரிற்கொண்டு போய்ச் சேர்க்கவேண்டுமே அதற்குத்துணை யும்மையன்றி யாவரிருக்கின்றார்கள் ப்ரதான்.

சந்திரமதி விருத்தம்.

தங்கமந் திரியேகேளீர் தொல்லுல கினிலேயுள்ள
மங்கையர்க் கெல்லாவாழ்வும் மகிழ்கணு லென்பார்மேலோர்
என்கண வனைவிடுத்தே யேந்திழை யுயிர்தரிக்கேன்
வெங்கனற் கெந்தனுவி னைவினிற் கொடுப்பேனையா.



சந்திரமதிசொல் தரு.

[மாதவமேயிவ்வுருவாய் வந்ததுமென்விதிவசமோ]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மந்திரிநான்சொல்லுகின்ற மர்மமதைக்கேளுமையா

அநுபல்லவி.

எந்தனுயிர் இந்தநெடுஞ்
செந்தழற்குத் தந்திடுவேன் (மந்)

சரணம்.

நாதர்களால் மாதருக்கு
நல்லவாழ்வுஞ்சாவுமென்று
மேதினியோர் ஓதுகின்ற
விபரமெல்லாந்தெரியுமின்று (மந்)

(சந்-வ-ம்.) ஆஆ ப்ரதான் பாரும் பெண்களுக்குப் புருஷர்களால் வாழ்வுஞ் சாவுமென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கின்றேன் அன்றியும் எனது பர்த்தா இறந்தால் முனிவர்கடனுந் தீராதாகையால் நீர் மன்னவனையுந் தேவதாசனையுங் கைவிடாமற் காத்துக்கொள்ளும் நானிந்த நெருப்புக்கு என்னுயிரைத் தத்தஞ் செய்துவிடுகின்றேன் நீங்களதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம் இதோ செல்கின்றேன்.

தேவதாசன் விருத்தம்.

அன்னையே சொல்லக்கேளா யவனியிற் றந்தைதாய்க்கு
மன்னிய தீமைபோக்க மைந்தனைப் பெறுவதுண்டு
என்னையின் ககலவிட்டே யிறந்திடத் துணிந்தாயம்மா
உன்னைநான் கொடுக்கேனெந்த னுயிரிதை யீய்குவேனே.

தேவதாசன்சொல் தரு.

[மோகங்கொண்டேன்றனையே]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

தாயேசொல்லக்கேளம்மா சற்றேமனந்தாளம்மா

அநுபல்லவி.

தீயிதின்பாலடுப்பேன் நாயேனுயிர்கொடுப்பேன் (தாயே)

சரணம்.

தடைமொழியுஞ்சொல்லாதே தனலருகேகில்லாதே
வடவைவிட்டுஇங்குவாராய்மைந்தனுக்குவிடைநாராய் (தாயே)

(தேவ-வ-ம்.) ஆஆ மாதா சற்றுநின்றுகேள் பார் உங்களுக்குவந்த துன்பங்களுக்குதவியாகவல்லவோ என்னைப்பெற்றீர்கள் அங்ஙனமிருக்க யானிருக்கும்பொழுது நீநெருப்பில்வீழ்ந்து உயிரைத் தத்தஞ்செய்வது தகுதியன்று ஆதலால் இப்போது என்னுயிரையிரைகொடுக்கின்றேன் நீங்கள் யாவருந் தப்பித்துக்கொள்ளுங்கள் மாதா.

சந்திரமதி விருத்தம்.

கண்மணி மகனேசினிக் கற்கண்டே யமுதேபாகே
உண்மது ரசமேயெந்த னுச்சிதக் கட்டிமுத்தே
விண்மணி குலத்தில்வந்து விளங்கிடுந் தீபமேநல்
வண்மையா யுனக்குமீசன் மதிவலங் கொடுத்திட்டானே.

## சந்திரமதிசொல் தரு

[எதுக்குவாங்குரீர்லஞ்சம் உமக்கிதைவிடவேறுண்டோபஞ்சம்]
என்ற சர்வசமயசமரசக்கீர்த்தனையின் வர்னமெட்டு.
இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாபு.

கண்ணிகள்.

கண்ணேயுனக்குமிந்தப் புத்தி-தந்த
கடவுள்கொடுப்பார்நல்ல முத்தி (கண்)

பல்லுவிழாதிருக்கும் பாலா-நல்ல
பரிதிகுலத்துக்கனு கூலா (கண்)

பாற்குடிமறவாத சேயே-இந்தப்
பக்குவமெங்கறிந்தாய் நீயே (கண்)

(சந்-வ-ம்.) ஆஆ கண்மணி நீ யின்னும் பல்விழாத பாலகனுகவும் பாற்குடி மறவாத சேயனுகவுமிருக்கின்றனை அங்ஙனமிருக்க



...யிவ்வளவு கூ... அறிவும் சாந்தகுணமுய... கொண்டனையோ ...தரியவில்லை ஆஆ உன்னைப்படை... கடவுள்னவர் இன்னும் உனக்குவேண்டிய விவேகமும் பூர்ணாயுசுங்கொடுத்து ரட்சிப்பார் கண்ணே நீ நெருப்பில்வீழவேண்டாம் சுகமாயிருந்து வாழ்வாய் செல்வமே.

நக்ஷத்திரத்தாகர் விருத்தம்.

கடித்தபாக் களியாத சிறியதந்தை
கடைத்தெருவில் வழிவிடுத்த கதையைப்போல
படித்தசமர்த் துகளனைத்துங் காட்டிக்காட்டிப்
பசப்புகின்றீ ரதையோர்ந்து பார்க்கும்போது
துடித்துயிரை மடித்துக்கொள் வோரைப்போலுஞ்
சுகிர்தமுட னெனைக்காப்போர் போலுங்காட்டிப்
பிடித்தெனையே தள்ளிவிட்டுத் தப்பித்தோடப்
பேணுவதா யெந்தனுக்குத் தோணுதேடா.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா பார் (கடித்தபாக்குக்கொடாத சிற்றப்பன் கடைத்தெருமட்டும்போய் வழிவிடுத்துத்துடித்தழுதா) னென்பதுபோல நீங்கள் பேசுகின்ற சாமர்த்தியங்களைப் பார்த்தால் ஏதோநீங்களெல்லாயிறந்து என்னைமட்டுங் காப்பாற்றுவதுபோல உலகத்தார் நினைக்கக்கூடியதாயிருக்கின்றது ஆனால் உன்மனைவிமட்டும் பசப்புகின்றதை யோஜிக்குமிடத்தில் மெள்ள என்னைப்பிடித்து இந்த நெருப்பிற்றள்ளிவிட்டு நீங்களெல்லாந் தப்பியோடிப்போகுமார்க்கமாய்க் காணப்படுகின்றதே.

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தாங்களப்படி யொருக்காலும்நினைக்கவேண்டாம் யானே யிவ்வக்கினிக்கிரையாகின்றேன் ப்ரபு.

நக்ஷத்திரத்தாகர் விருத்தம்.

சூழ்ந்தது நெருப்புக்கிட்டத் தோகையே நீயும்வீணாய்
வீழ்ந்திட வேண்டாம்விஸ்வா மித்திர முனிவருக்கு
வாழ்ந்திடக் கொடுத்தநாட்டை வழங்கிட வில்லையென்றால்
தாழ்ந்திடும் நெருப்புமுன்போற் றாணியை யாள்குவீரே.

([illegible].) ஹே மாதே பார் அக்கி[illegible]து சமீபத்து
நெருங்கி[illegible]து இன்னும் ஒருமுகூர்த்தான் [illegible]க்கியிருக்கின்றது
ஆனையால் நீயக்கினிக்கிரையாகவேண்டாம் உனது புருஷன் பொ
ய்சொல்லாவிடினும் நீயாவது விஸ்வாமித்திரமுனிவருக்குக்கொடு
த்தராஜ்யத்தைக்கொடுக்கவில்லையென்று ஒருவார்த்தைசொல்லிவிடு
இந்த நெருப்பானது சூரியனைக்கண்ட பனிபோல மறைந்துவிடும்
முன்போல ராஜ்பத்திலிருந்து அரசுபுரிவீர்கள் பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

தக்கதோ விந்தவார்த்தை தரகரே நன்றாய்ச்சொன்னீர்
இக்கனல் பக்ஷித்தாலு மெங்களை ரக்ஷித்தாலும்
அக்கினி சாக்ஷியாக வளித்ததை யில்லையென்று
பக்குவ மில்லாப்பொய்யைப் பகர்ந்திட மாட்டேன்சாமி.

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி இந்தத் தணலானது எங்களைத்தகி
த்து எமனுக்கிரைகொடுத்தாலுஞ்சரி அல்லது ரக்ஷித்தாலுஞ்சரி
இவ்வக்கினி சாக்ஷியாகக்கொடுத்ததை யில்லையென்று உமது வார்
த்தைக்குக் கட்டுப்பட்டு ஒருக்காலும் பொய்சொல்லமாட்டேன்
ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் கிச்சான் நீயாவது ஒரு பொய் சொல்
லடா நோக்கு ராஜ்யத்தை வாங்கித் தருகின்றேன்.

(தேவ-வ-ம்.) ஸ்வாமி உயிர்போனாலும்பொய்சொல்லக்கூடா
து ப்ரபு ஏன் வீணாகத் தொந்தரிக்கின்றீர்கள்.

(நக்ஷ-வ-ம்.) ஆனால் நீங்கள் வந்ததெல்லாம் அனுபவியுங்கள்
இனி யென்செய்கின்றது.

சந்திரமதி விருத்தம்.

இக்குவல யத்தில்யாங்க ளிடரெதுஞ் செய்ததில்லை
பக்குவக் கற்பினுக்குப் பழுதுற நடக்கவில்லை
தக்கால் விரதம்பூண்ட சத்தியந் தவறவில்லை
அக்கினி தேவாவுந்த னடைக்கலங் காத்திடாயே.



சந்திரமதிசொல் தரு

[சந்த்ரவதனே என்னைச் சாருமையல்தீரவிடா]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-இந்துஸ்தானி-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

அக்கினிதேவா நாங்கள் யாதும்பிழைசெய்திலையே

அநுபல்லவி.

வக்ரமெங்கள்மீது மருவினாற்கொல்லிப்போது (அக்)

சரணம்.

நடுநிலைநீயே-யெங்கள் ஞாயமெல்லாந்தெரிவாயே
சுடுதுணைந்தனைமெய்யாய் தொலைத்தெனைக்காருமையா (அக்)

(சந்-வ-ம்.) ஆஆ அக்கினிதேவா உலகத்திற்செய்யும் ஞாயா
ஞ்யாயங்களுக்கு உன்னையே சாக்ஷியாகக் கோருகின்றார்கள் ஆத
லால் யாங்களுன்னையறியாமல் யாதொரு குற்றமுஞ் செய்யவில்லை
அப்படியேதாவது குற்றமுஞ்செய்திருப்போமாகில் என்னை யிக்ஷ
ணமே கொல்லக்கடவை இல்லாவிடில் என்னை ரக்ஷிக்கக்கடவை
இதோ வுன்பால் வருகின்றேன்.

நக்ஷத்திரத்தாரகர் விருத்தம்.

இந்திரஜா லத்தினில்நீ வல்லோனென்றே
எண்ணியிருந் தேனுனது மனைவியின்னுந்
தந்திரமு கேந்திரஜா லங்கள்கற்ற
சமர்த்தியென நன்றாகத் தெரியலாச்சு
அந்தமகா நெருப்புமுன்னே முணுமுணென்றாள்
அப்பொழுதே யக்கினியு மறைந்துபோச்சு
எந்தனையுங் காணாமற் செய்வாள்ரொக்கம்
எண்ணுவா யெனைப்பயணம் பண்ணுவாயே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நீதான் இந்திரஜாலங் கற்
றவனென் றெண்ணியிருந்தேன் உன்மனைவி யதைவிட மகேந்திர
ஜாலங்கற்றவளா யிருக்கின்றாள் பார் அந்த அக்கினியிடத்திற்குப்
போய் முணுமுணுவென்று முனங்கினாள் அவள் வசியத்தால் அந்

தநெருப்பானது இருந்தவிடந் தெரியாமல் மறைந்து விட்டதே இனியுங்களுடன் யான் வரும்பக்ஷத்தில் என்னையும் இவ்விதமாய்க் காணமற்செய்து விடுவாளென்று நேக்குச் சந்தேகமாயிருக்கின்றதாகையால் இனிமேல் யானுங்களுடன் வரமாட்டேன் இவ்விடத்திலேயே ரொக்கத்தைச் செலுத்திவிடுங்கள் இப்படியே யூருக்கோடிப்போய் விடுகின்றே னரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

வாக்குவல் லவரேயிந்த வாரண வாசிவந்தோம்
ஆக்கவே பொறுத்துக்கொண்ட வரும்பசி யாறும்நேரம்
போக்கவே பொறுத்திடாதோ புண்ணியக் காசிக்ஷேத்ரந்
தீர்க்கமாய்த் தெரிவதாலே சென்றதும் வகைசெய்வோமே.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி யாங்கள் யாதொரு குற்றமுஞ் செய்யாதவர்களா யிருந்ததினிமித்தம் அக்கினியானது மறைந்து போய்விட்டது அங்ஙனமிருக்கத் தாங்களேதோ வேறுவிதமாயெண்ணிப் பயங்காமுற்றுப் பொன்னைக் கொடுக்கும்படி கண்டிக்கின்றீர்களே (ஆக்கப்பொறுத்தபசி ஆறப்பொறுதா) பாருங்கள் அதோ வாரணாசி யென்னுங் காசிமாநகரந்தோன்றுகின்றது அங்குசென்றவுடன் ரொக்கத்திற்கு வழிதேடுகின்றோம் அதற்குள்ளாகத் தாங்களவசரப்படவேண்டாம் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அது காசிமாநகரந்தானா.
(அரி-வ-ம்.) ஆம் ப்ரபு கூடவாருங்கள் செல்வோம்.
(நக்ஷ-வ-ம்.) ஆனால்தோ வருகின்றேன்.

# காசிகாண்டம்.

பொது விருத்தம்.

மலைமலை யாகத்துய மாமுனி யேவிவிட்ட
பலவித துன்பமெல்லாம் பானுமுன் பனியைப்போல
நிலைகுலைந் தோடச்செய்த நிருபனு மற்றுள்ளோருங்
கலைவலர் புகழுகின்ற காசிமா நகர்வந்தாரே.



## அரிச்சந்திரன் விருத்தம்.

அன்னமே மானேதேனே யாசைநா யகியேயிந்தப்
பொன்னக ரிதற்கீடாமோ பூவினில் வாசஞ்செய்யும்
மின்னகர் தனைநிகர்த்து விந்தைசேர் வளங்கள்மற்ற
நன்னய முள்ளகாசி நகரிதோ பாராய்பெண்ணே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[இந்தவனச்சிங்காரம் நந்தவனச்சிங்காரம்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-ஏகதாளம்.

பல்லவி.

இன்னகரச்சிங்காரந் தன்னைமதித்திங்காரும்
ஈடுரைத்திடுதற்குக் கூடுமோ ஆதி
சேடனுஞ்சொல்லமனம் நாடுமோ (இன்)

அநுபல்லவி.

வன்னப்பூஞ்சோலையும் வளர்மரச்சாலையும்
மறையவர்கள் வீதிகளும்
மற்றுமுள்ள ஜாதிகளும்
உறையுமெத்தை வீடுகளும்
ஒய்யார மேடைகளும்-இதற்
கீடுரைத்திடுதற்குக் கூடுமோ-ஆதி
சேடனுஞ்சொல்லமனம்-நாடுமோ (இன்)

தையலெல்லோருங்கூடித் துய்யகங்கையைநாடி
ஜலமெடுக்குஞ் சிங்காரம்
சார்ந்துவருஞ் சிங்காரம்
விலகிவருஞ் சிங்காரம்
வீடுபுகுஞ் சிங்காரம்-இதற்
கீடுரைத்திடுதற்குக் கூடுமோ-ஆதி
சேடனுஞ்சொல்லமனம் நாடுமோ (இன்)

அகிலந்தன்னுயாரும் மகிபர்கள் வாழும்
அரண்மனைச் சிங்காரம்
ஆஸ்தானச் சிங்காரம்

பரவுகொலுச் சிங்காரம்
பந்தல்களின் சிங்காரம்-இதற்
கீடுரைத்திடுதற்குக் கூடுமோ-ஆதி
சேடனுஞ்சொல்லமனம் நாடுமோ (இன்)
கோலமாய்மின்னும் ஆலயமென்னுங்
கோவில்களின் சிங்காரம்
கோபுரத்தின் சிங்காரம்
தேவதைகள் சிங்காரம்
தேர்களது சிங்காரம்-இதற்
கீடுரைத்திடுதற்குக் கூடுமோ-ஆதி
சேடனுஞ்சொல்லமனம் நாடுமோ (இன்)

(அரி-வ-ம்.) ஆஆ சந்திரமதி பார் இக்காசிமா நகரத்திற்குத் தேவர்கோனாகிய இந்திரன்வாழும் அமராபதிபட்டணத்தை யிணைத்துப்பேசலாமென்றால் ஆயிரபணாமகுடத்தை யுடைத்தாகிய ஆதிசேஷனுஞ் சொல்லுதற்கரிதெனில் நாமெப்படிச்சொல்லக்கூடும் பார்திருமாலினிடப்பாகத்தமர்ந்த லக்ஷ்மிதேவியானவள் வாசம்புரியும் வைகுந்தத்தைநிகர்த்த இன்னகரத்திற் பற்பல சாலைகளும் பரிமளச்சோலைகளும் ப்ராம்மக்ஷத்திரிய வைசிய சூத்ராதிவர்ணாச்சிரமத்தார்கள் வாழும் ஒழுங்காயுயர்ந்துதோன்றும் அடுக்குமெத்தைவீடுகள் நிறைந்த வீதிகளும் கடைவீதிகளும்இதோ மங்கையர் செங்கையாற்றங்கக்குடமெடுத்துக் கங்கையிற் ஜலமெடுத்துக்கொண்டு வரும்வேடிக்கையும் அரசர்கள்வாழுங் கோட்டை-கொத்தளம்-மண்டபம்-விமான முதலானவை சூழப்பெற்ற அரண்மனைகளும் இன்னும் அனேகவிதமான காக்ஷிகளுங் காணப்படுகின்றது அன்றியும் இதோ வுன்னதமாகத் தோன்றப்படுகின்ற கோபுரமானது ஜெகதீசனாகிய விஸ்வநாதாலயமானதால் நாமிந்தக் கங்கைக்குச்சென்று ஸ்நானபான நியமநிஷ்டை முடித்துக்கொண்டு விஸ்வேசராலயஞ்சென்று நமது ஜென்மமீடேறும்படி ஸ்தோத்தரித்துவருவோம் வாருங்கள்.

(சந்-வ-ம்.) அப்படியே வருகின்றோம் ப்ராணநாத்.



## காசிவிஸ்வநாதர் தேவஸ்தானவிசாரணை.

(மானேஜர் வசனம்.) யாரடா இவிடத்திற் சேவகன்.

(சேவ-வ-ம்.) ப்ரபு இதோ காத்துக்கொண்டிருக்கின்றேன்.

(மானே-வ-ம்.) நமது சம்பிரதியையழைத்துவா சீக்கிரம்.

(சேவ-வ-ம்.) அப்படியே யழைத்துவருகின்றேன்.

(சம்பிரதி வசனம்.) ப்ரபு வந்தனம்புரிகின்றேன்.

(மானே-வ-ம்.) கல்யாண சம்பிரதி ஆசனத்தில் வீற்றிரும்.

(சம்-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றேன்.

(மானே-வ-ம்.) ஹே சம்பிரதி நேற்றையதினந் தாசிகளெல்லாம் ஆலயத்திற்கு சேவகஞ்செய்தார்களா வென்ன.

(சம்-வ-ம்.) வந்து சேவகஞ்செய்தார்கள் ப்ரபு.

(மானே-வ-ம்.) எந்தெந்தத் தாசிகள் வந்தார்கள்.

### சம்பிரதி சொல்லுதல்.

ஆசிரியவிருத்தம்.

திருவுலவு காசிவாழ் தெய்வதா சிகளினிற்
சிதா மனோரஞ்சிதம்
செங்கமல மிந்துவத னாள்சந்தி ரோதயம்
சிந்தா மணிசவுந்தரம்
பருவமிகு மோகனங் கல்யாணி யம்புஜம்
பருவதங் கோகிலாம்பாள்
பரிமளங் கனகாம்பு ஜங்குமுத மஞ்சுகம்
பங்கஜஞ் சொர்னகாந்தி
மருவுலவு சாரதாம் பாள்சபா ரஞ்சிதம்
மனோன்மணி மோகனாங்கி
மங்களஞ் ஜானகி சபாரத்தி னஞ்சந்த்ர
வதனிய மிர்தம்பூரணம்
பெருமையுள ரத்னாங்கி நீலா முதற்சகல
பெண்களெல் லோருமிங்கு
பிரியமுட னேவந்து நடனம் புரிந்துதவி
பெற்றகஞ் சென்றனர்களே.

(சம்-வ-ம்.) ஆகு ப்ரபு இத்யாதி தாசிகளெல்லாம் வந்து கீர்த்தனம் புரிந்து பிராசுவீதங் கொடுக்கலான பரிசுகளைப் பெற்றுச் சென்றனர்கள் ப்ரபு.

(மானே-வ-ம்.) அப்படியா வெகுசந்தோஷம் இன்னும் வரா ததாசிகள்யாராரிருக்கின்றார்கள்.

(சம்-வ-ம்.) ப்ரபு பாருங்கள் (ஜகன்மோகினி-சுரதரம்பை-ஜேட்டுச்சுந்தரம்-குளோசப்சுந்தரம்-மத்தாப்புச்சுந்தரம்-மகமல்ச்சுந்தரம்-வெல்வெட்சுந்தரம் பாலாமணி-லீலாமணி) முதலானவர்கள் வரவில்லை ப்ரபு.

(மானே-வ-ம்.) இன்றயத்தினம் யார்முறை யேற்பட்டிருக்கின்றது.

(சம்-வ-ம்.) சிட்டாவைப்பார்த்துச் சொல்கின்றேன் ப்ரபு.

(மானே-வ-ம்.) சிக்கிரஞ் சொல்லும்.

(சம்-வ-ம்.) லீலாமணியின் முறையேற் பட்டிருக்கின்றது ப்ரபு.

(மானே-வ-ம்.) ஆனுலவளை நடனத்துக் கழைக்கலாமல்லவோ.

(சம்-வ-ம்.) அவளைக் கூப்பிடவேவேண்டாம் ப்ரபு.

(மானே-வ-ம்.) ஏனப்படிச் சொல்கின்றீர்.

(சம்-வ-ம்.) அவள் முன்முன்றயில் ஆடின ஆட்டத்திற் கோவிற்கூட ஒருபுறத்தில் இடிந்துவிழுந்துவிட்டது அவள்வந்தாற் கழுதைக்குதியாட்டம்போட்டு நடனக்கொட்டகையைக்கூடக் கிழே வீழ்த்திவிடுவாள் ப்ரபு.

(மானே-வ-ம்.) இப்போது நடனத்தில் நன்றாய்த் தேர்ச்சியடைந்திருக்கின்றாளாதலாற் கூட்டிவரச்சொல்கின்றேன்.

(சம்-வ-ம்.) ஆனலப்படியே செய்யுங்கள்.

(மானே-வ-ம்.) அடா சேவகா நமது நகரத்திலுள்ள லீலாமணி யென்னுந் தாசியை யழைத்துவருவாயாக.

(சேவ-வ-ம்.) ஆகு ப்ரபு மோகனுங்கி விட்டுக்கடுத்த சொர்ணகாந்திவீட்டுக்குப்பக்கத்திற் கோகிலாம்பாள் வீட்டோரமாய்



அம்புஜத்தின் வீட்டுக்கருகில் நீலாவீட்டையொட்டிக் கதவுவைத்தி ருக்கின்ற வீட்டிற் குடியிருக்கின்றுளே அந்தலீலாமணியா ப்ரபு.

(பாணே-வ-ம்.) ஆம் ஆம் விரைவாய்க் கூட்டிவா.

(சேவ-வ-ம்.) அந்தத் தோலாமணிதானு நல்லது இதோ கூட் டிவருகின்றேன்.

---

பொது விருத்தம்.

கீரவலன் முதலெல்லோருங் கங்கையில் நறுநீராடி
மேவுநித் யானுஷ்டான விதிதன்னை முடித்துக்கொண்டு
பாவதீ வினைகள்தீர்க்கும் பரமனைப் பணிவதற்கு
ஆவலாய் விஸ்வநாத ராலயம் வந்திட்டாரே.

---

அரிச்சந்திரன் விருத்தம்.

பூமினுள் குணத்தைப்போன்ற பொறுமையுள் ளவளேகேளாய்
காமினி தாகக்கங்கை நதியில்நீராடிவந்தோம்
நேமியின் பாதலத்தோர் நித்தியம் பணிந்துபோற்றுஞ்
சாமியாம் விஸ்வநாதர் சன்னதி பாராய்பெண்ணே.

---

அரிச்சந்திரன்சொல் தரு.

[மோகமுனேநானலோ முத்துபெட்டானுராமி]

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சந்த்ரமதியேநேராய்ச் சாமிசன்னதியைப்பாராய்.

அநுபல்லவி.

அந்தாரர்கள் வந்துபோற்றுஞ்
சுந்தரவிஸ்வேசன்மாதே
பந்தவினைத் தொந்தமாற்றும்
பாபநாசன்மானேதேனே
மயிலேகுயிலே கண்ணேபெண்ணே (சந்)

(அரி-வ-ம்.) ஆஆ சந்திரமதி நாம் கங்கையில், ஸ்நானபான நியமநிஷ்டையெல்லா முடித்துக்கொண்டு இதோவிஸ்வநாதாலயத்திற்கு வந்துவிட்டோம் அதோஸ்வாமிசன்னதி தெரிகின்றது அங்குசென்று பக்திபூர்வமாய் ஸ்தோத்தரித்துவருவோம் வாருங்கள்.

(சந்-வ-ம்.) அப்படியே வருகின்றோம் ப்ராணகாந்தா.

அரிச்சந்திரன் விருத்தம்.

தந்தனன் முனிக்கென்வாழ்வைத் தாழ்வினை யடைந்தநானும்
நொந்தனன் கவலைத்தீயால் நுண்ணறி வயர்வுற்றுள்ளம்
வெந்தனன் குறைகள்மற்ற வினையெலாந் தீர்ப்பாயென்று
வந்தனன் பொற்பதத்தை வணங்கினேன் விஸ்வநாதா.

---

## அரிச்சந்திரன்சொல் தரு

[தேவாவிதென்னமாயஞ் செய்தாயேயனியாயம்]

என்ற சதாரம்நாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

காசிவிஸ்வேசா எந்தன் கவலைதீருமையா

அநுபல்லவி.

கோசிகமுனிசெய்த கொடுமைப்பாருமையா (காசி)

சரணங்கள்.

நாடுபொருள்கொடுத்தேன் நல்லசுகம்விடுத்தேன்
காடுதனிற்படுத்தேன் கதியென்றுனையடுத்தேன் (காசி)

உந்தன்பதமல்லாது உற்றதுணையுமேது
சுந்தரவிடையீது தோன்றிவந்தேயிப்போது (காசி)

முத்தையன்பணிபாதா முனிவரர்க்கருள்போதா
சத்தியம்பிகைநாதா சாதனஞானவிநோதா (காசி)

---

(அரி-வ-ம்.) ஆஆ காசிவிஸ்வேசா கோசிகமுனிவருக்கு என்னரசாக்ஷிமுதலான சகல சம்பத்தையுங் கொடுத்துவிட்டு...



களைப்போல காடுமலைவனாந்திரங்களிற் படுத்துறங்கி இப்போதுனது சன்னிதானத்தை நாடிவந்தேனாதலால் என்னைத் துன்பக்கடலினின்று கரையேற்றிக் காத்துரக்ஷிக்கவேண்டுந் தேவா.

## சந்திரமதிசொல்லுதல்.

தேவாரம்.

மாசிலா மணியேகாசி மாநகர் விஸ்வநா,
கோசிக முனிவர்செய்த கொடுமையா லெங்கட்குற்ற
தேசமும் பொருளுமீய்ந்து சிறுமையுற் றிங்குவந்தோம்
ஆசையா யெங்கள்மீதி லன்புவைத் தாளுவாயே.

---

(சந்-வ-ம்.) ஆஆ விஸ்வநாதா விஸ்வாமித்திரர் செய்தகொடுமையால் எங்களுடையநாடுநகரபவுஷா பாக்யாதிகளனைத்து மொப்படைத்து விட்டுச் சிறுமையடைந்து கஷ்டப்பட்டு உனது மலரடியையடுத்தோமாதலால் எங்கள் கவலையைத்தீர்த்துக் காத்துரக்ஷிக்கவேண்டும் ஸ்வாமி.

## தேவதாசன்சொல்லுதல்.

கலித்துறை.

மாதா பிதாகுரு தெய்வமென் றுன்னை மனத்திலுன்னிப்
பாதார விந்தத்தை வந்தடுத்தோமுகம் பார்த்தருள்வாய்
வேதா முனிவரர் போற்றிடுங்காசி விசுவலிங்க
நாதா வுயிர்த்துணை நீயலதாரிந்த நானிலத்தே.

---

(தேவ-வ-ம்.) ஆஆ ஈசா மாதா குருதெய்வம் நீதானென்று நம்பி உனது திருவடியை யடுத்தோமாதலால் எங்கள் முகம்பார்த்து ஏற்பட்ட குறையைத்தீர்த்துக் காத்துரக்ஷிக்கவேண்டும் உன்னையன்றி யெங்கட்கு உற்றதுணை வேறில்லைதேவே.

## சத்தியகீர்த்திசொல்லுதல்.

விருத்தம்.

கோசிகமா முனிசெய்த கொடுமையாலே
குணமிகுந்த வேந்தன்மனங் குன்றிடாது

தேசமுதற் பொருளனைத்துந் தாரைவார்த்துத்
  திரும்பியும்பொன் றருவதற்கன் றொப்புக்கொண்டு
பேசிவந்த பொன்னுக்கு வகையில்லாமற்
  பித்தனைப்போல் மயங்குகின்றார் பிறவிநீக்குங்
காசிவிஸ்வ லிங்கேசா கடனைத்தீர்த்துக்
  காத்து மனக்குறையைத் தீர்த்திடாயே.

(சத்-வ-ம்.) ஆஆ செகதீசா எங்களரசரானவர் வஞ்சநெஞ்சமுடைய விஸ்வாமித்திரமுனிவருடைய சூதறியாமல் நாடுநகர் செல்வமுதலானவைகளையுந் தாரைவார்த்துவிட்டுப் பின்னும் பொன் கொடுப்பதா யொப்புக்கொண்டு இக்காசிக்ஷேத்திரத்திற்கு வந்து கடன்தீர்க்க வகையில்லாமற் கலங்கித் தவிக்கின்றாராதலில் அவர் கோரிய காரியத்தை நிறைவேற்றிக் காத்தாரக்ஷிக்க வேண்டும் ப்ரபு.

நக்ஷத்திரத்தரகர் சொல்லுதல்.

விருத்தம்.

அன்னைவிசா லாக்ஷியருங் கமர்ந்தநாதா
  அரிச்சந்த்ரன் றரவேண்டுங் கடனுக்குள்ள
பொன்னதனை வாங்கிவர வேண்டுமென்று
  புனிதவிஸ்வா மித்திரமா முனிவரென்முன்
சொன்னவுடன் யானவருக் குறுதிவார்த்தை
  சொல்லிவந்த தனக்குநன்றாய்த் தெரிந்திருக்கும்
என்னுடைய மனப்படிநீ முடிப்பதற்கே
  எண்ணுவாய் நிறைவேறப் பண்ணுவாயே.

(நக்ஷ-வ-ம்.) ஆஆ விஸ்வேஸ்வரா விஸ்வாமித்திரருக்குச் செல்லவேண்டிய கடன்பொன்னை வாங்கிவரும்படி யென்னையனுப்பும்போது யான் முனிவரிடஞ்சொல்லிவந்த ஆணைப்படி நிறைவேற்றி யெனது வாக்கை நிலைநிறுத்தவேண்டுந் தேவா.



பொது விருத்தம்.

கோவிலில் நடனமாடக் கூட்டிவா வென்றுசொல்லச்
சேவக னழைக்கப்போன தெய்வதா சிகளில்நல்ல
மாவடி வமைந்தலீலா மணியுடை நகைதரித்து
ஆவலாய் விஸ்வநாத ராலயம் வருகின்றாளே.

லீலாமணிவருந் தரு.

[சாமிகாநேதோமாட்லாடாதெந்துரா]

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம் - கமாஸ் - தாளம் - ஆதி.

பல்லவி.

லீலாமணியும்வந்தாளே-நடனமிடும்
லீலாமணியும்வந்தாளே.

அநுபல்லவி.

கோலாகலத்தைக்கண்டு கோதையர்கள்தியங்க
  மாலாதியோர்மயங்கவே நடனமிடும் (லீ)
கும்பமுலைகுலுங்கக் கோலப்பணியிலங்கச்
  செம்பொற்பட்டுடைதுலங்க நடனமிடும் (லீ)

(லீலாமணி வசனம்.) ப்ரபு லீலாமணி வந்தனம்புரிகின்றேன்.

(மானே-வ-ம்.) கல்யாண் லீலாமணி ஹே கணிகாய்நீஉனது முறைகாலங்களில் நேரந்தவறாமல்வந்து நடனம்புரிந்து ஸ்வாமிகாரியத்தை நிறைவேற்றிப்போகக்கூடியவள் இன்றிதுகாலபர்யந்தங் காலகரணமாகிவந்த காரணம்யாது.

(லீலா-வ-ம்.) ஆஆ ப்ரபு நேற்றுராத்திரித் தங்களைப்போன்ற சில ப்ரபுக்கள் என்னிடம்வந்து சங்கீதம்படிக்கக் கேட்டுக்கொண்டிருந்தார்கள் அதனால் நெடுநேரம் விழித்துக்கொண்டிருந்தமையாற் கிஞ்சிற்று அயர்ந்து நித்திரைசெய்தநிமித்தங் காலகரணமாகிவிட்டது ப்ரபு.

(சேவ-வ-ம்.) அது வாஸ்தவந்தான் ப்ரபு நான் ராத்திரி ஜாமநேரத்திற் கோவிலிலிருந்து வீட்டுக்குப் போம்பொழுது இவள் கழுதைக்காம்போதிராகம் பாடிக்கொண்டிருந்தாள் ப்ரபு.

(லீலா-வ-ம்.) என்ன அத்தான் பரிகாசம்பண்ணுகின்றீர் அது எதுக்குலகாம்போதி யல்லவோ.

(சேவ-வ-ம்.) ஆஆ மச்சி தெரியாமற்சொல்லிவிட்டேன் கோபித்துக்கொள்ளாதே.

(மானே-வ-ம்.) உங்களுக்குள்ளாக அத்தான் மச்சிமுறைமையேற்பட்டிருக்கின்றதுபோலிருக்கின்றது நல்லது இப்போது ஸ்வாமிக்குப் பூஜாகைங்கரியவேளையாயிருப்பதாற் சற்று நடனம்புரிவாய் மாதே.

(லீலா-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ப்ரபு.

(சேவ-வ-ம்.) மண்டபம் அதிர்ந்துவிழுந்தாலும் விழும் கொஞ்சம் உஷாராயிருங்கள் ப்ரபு.

## லீலாமணிசொல் தரு.

[கம பப்பப் பமகமா கமபரிகமகா கமபதபம ரிகமபமக ரிசனிசனிதப]

என்ற ட்ராமாரோட்டின் வர்னமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

மனம் வைத்துப்பிரியமாய் மருவியணையவே
வருவாய்காசிவாழ் விஸ்வநாதனே மையல்பெருகுதே.

சரணங்கள்

இரு-மாமுலைமீறுது — தாமதமேன்-இரு
மாமுலைமீறுது — தாமதமேன் (மனம்)
இதோ-துய்யவேள்ளாளிகள் — எய்புகிறான்-இதோ
துய்யவேள்வாளிகள் — எய்புகிறான் (மனம்)
இதோ-மாருதஞ்சாடுது — நேரமதாய்-இதோ
மாருதஞ்சாடுது — நேரமதாய் (மனம்)
இதோ-மாங்குயில்கூவுது — பாங்குடனே-இதோ
மாங்குயில்கூவுது — பாங்குடனே (மனம்)
கவி-முத்தையன்போற்றிடும் — வித்தகனே கவி
முத்தையன்போற்றிடும் — வித்தகனே (மனம்)



(மானே-வ-ம்.) ஹே லீலாமணி நீ சுவாமியின்மீது மதுரமாய் பதம்பாடி அற்புதமாய் நடித்ததை நேத்திரானந்தமாய்ப் பார்த்து அத்யந்த சந்துஷ்டியடைந்தேன் நல்லது * ஹே சம்பிரதி இவ்வி யுக்கிரானத்திற்கழைத்துச்சென்று மிராசுப்படி யிவளுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்தனுப்புவீராக.

(சம்-வ-ம்.) அப்படியேகொடுத்தனுப்புகின்றேன் ப்ரபு.

(சேவ-வ-ம்.) என்னிடஞ்சொன்னால் யான் கொடுத்தனுப்புவேன் ப்ரபு.

(மானே-வ-ம்.) என்னடாகொடுத்தனுப்புவாய்.

(சேவ-வ-ம்.) உதைதான் வேறென்ன கொடுக்கப்போகின்றேன்.

(லீலா-வ-ம்-) ஏனத்தான் அப்படிச்சொல்கின்றீர்

(சேவ-வ-ம்.) முட்டிக்கால் தட்டுகின்றதே அதுநிமித்தான்.

(லீலா-வ-ம்.) என்னைக் கழுதையென்று நினைத்துவிட்டீர்.

(சேவ-வ-ம்.) அப்படி யென்வாயினாற் சொல்வேனமச்சி.

(லீலா-வ-ம்.) உமக்கென்னவேலை சும்மாகிடங்காணும்.

(சேவ-வ-ம்.) இராத்திரிக்காகட்டும்.

(லீலா-வ-ம்.) ஆஆ ப்ரபு யான்சென்றுவருகின்றேன்.

(மானே-வ-ம்.) அப்படியே சென்றுவா.

(லீலா-வ-ம்.) இதோ வந்தனம்புரிகின்றேன்,

(மானே-வ-ம்.) கல்யாண் தாசி.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா உன்னுடைய யோக்யதை நன்றாய் வெளியாகிவிட்டதே.

(அரி-வ-ம்.) என்ன ப்ரபு வெளியாகிவிட்டது.

(நக்ஷ-வ-ம்.) நல்லது கோவிலைவிட்டு வெளியே தெருவுக்குள்ளாகவா சொல்கின்றேன்.

(அரி-வ-ம்.) இதோ வந்துவிட்டேன் சொல்லுங்கள் ப்ரபு.

## நக்ஷத்திரத்தாகர் விருத்தம்.

வாடிக்கை விடுவதில்லை யரிச்சந்த்ரா நீ
வந்தவிடங் களில்மாடு போலேநின்று

ஆடிக்கை காட்டிவிழி கெட்டிப்பொன்னை
அபகரிக்கும் பாத்திரநாடகம்புரிந்த
வேடிக்கை பார்ப்பதிலே கருத்துவைத்தாய்
விமலர்பதம் பணிவதிலுந் திரவியத்தைத்
தேடிக்கை தனிற்கொடுத்தே யனுப்புதற்குஞ்
சித்தமிலா திருப்பதுவும் விந்தைதானே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திர பார் (இருட்டுவீட்டுக்குள் நுழைந்தாலுந் திருட்டுக்கை சும்மாவிருக்கா) தென்பதுபோல எங்குசென்றாலும் மாடுபோல் தின்றுகொள்கின்ற வழக்கத்தை யின்னும் விட்டாயில்லை ஏதோ காசிக்கு வந்தாலும் பொன்னைக் கொடுப்பதாகச் சொல்லி யென்னையழைத்துவந்து கோவிலுக்குள் நுழைந்தவுடன் ஸ்வாமிதரிசனஞ்செய்யும் பக்திமானைப்போல பாவனைகாட்டித் தாசிநடனம்புரிந்த வேடிக்கையின்மேலிற் கண்ணோட்டமாயிருந்தாயேயன்றி ஸ்வாமியைப் பஜிக்கவேண்டுமென்றாவது ரொக்கத்திற்கு வகைதேடவேண்டுமென்றாவது நோக்குக் கிஞ்சிற்றேனும் எண்ணமில்லையே இதுதானா யோக்யதை.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனக்கு வேடிக்கைப் பார்க்கவும் யோக்யதையிருக்கின்றதா ப்ரபு ஸ்வாமிதரிசனஞ்செய்ததன்றி வேறொரு விநோதமும் பார்க்கவில்லை ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) காசிக்குப்போனால் உங்களப்பன் யாவனோ பொன்னள்ளிக் கொடுப்பானென் றெண்ணி யழைத்துவந்தனையே இப்போது ரொக்கத்திற்கென்னவழி சொல்கின்றனை.

அரிச்சந்திரன் விருத்தம்.

தாயினுக் கொளித்தசூலுந் தாதியி லுண்டோவெங்கள்
ஞாயமவ் வளவும்நீரும் நன்குட னறிந்திருந்தும்
மாயமா யென்னையிந்த வழிதனில் நிறுத்திக்கொண்டு
தூயபொன் கேட்டாலென்ன சொல்லுவேன் சுகுணவானே.



அரிச்சந்திரன்சொல் தரு.

[நாமனவினிவினவையா நாகராஜசயனா]
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-சக்கரவாகம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நீர்மனம்பொறும் பொறுமையா
நிதியைவாங்கித்தருகிறேன் (நீர்)

அநுபல்லவி.

ஊர்வருவதுந் சத்தம்போட்டால்
யார்தருகுவார் பொன்னைக்கேட்டால் (நீர்)

சரணம்.

நோக்கமுழுதுங் கண்டீரோ
நொடியினிற்கோபங் கொண்டீரோ
ஆக்கப்பொறுத்த பசிகொஞ்சம்
ஆறப்பொறுகா தென்னவஞ்சம் (நீர்)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி பாருங்கள் எங்களுடைய நிலைமையெல்லாம் நன்குணர்ந்திருந்தும் இவ்வளவு தூரம் வந்த தாங்கள் (ஆக்கப்பொறுத்தபசி யாறப்பொறுதா) வென்பதுபோல காசிக்கு வந்தவுடன் பொன்னைக் கொடுவென்று கண்டித்தாற் றிடீரென்று பொன்வந்துவிடுமா ப்ரபு யாரிடத்திலாவது கேட்டுத்தானே வாங்கிக்கொடுக்க வேண்டியதாயிருக்கின்றது அதுவரை தயவுசெய்து மனம்பொறுத்துக்கொள்ளுங்கள் ப்ரபு.

நக்ஷத்திரத்தாகர் விருத்தம்.

என்னசொன் னாலும்யானு மினியொரு போதுங்கேளேன்
முன்னமே யெனதிடத்தில் மொழிந்தது போலேகாசி
நன்னகர் வந்தேனந்த ஞானமா முனிவர்க்குள்ள
பொன்னதைக் கொடுத்திடாமற் புகல்சொல ஞாயமுண்டோ

## நக்ஷத்திரத்தரகர்சொல் தரு.

[அலவானிபெலாம்மனே]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏண்டாதடைசொல்கிறாய்-இனி
ஏண்டாதடைசொல்கிறாய்.

அநுபல்லவி.

மாண்டாலும் நான்விடேனே-இனி (ஏண்)

சரணங்கள்.

பூசனைமேவுமிக் காசிக்குவந்ததும்
பொன்னைக்கொடுப்பதாய்ச் சொன்னையே-நீயும்
பொன்னைக்கொடுப்பதாய்ச் சொன்னையேயிப்போது
மாண்டாலும் நான்விடேனே-இனி (ஏண்)

என்னசொன்னாலும் இனிவரமாட்டேனே
பொன்னைக்கொடுத்தாநீ போகலாம்-அந்தப்
பொன்னைக்கொடுத்தாநீ போகலாமிப்போது
மாண்டாலும் நான்விடேனே-இனி (ஏண்)

எட்டியடிவைக்க வொட்டேனினிமீது
கிட்டியுனக்குநான் கட்டுவேன்-கைக்குக்
கிட்டியுனக்குநான் கட்டுவேனிப்போது
மாண்டாலும் நான்விடேனே-இனி (ஏண்)

கோட்டுக்கப்பாலேயுன் பாட்டுக்குப்போகாதே
சாட்டையதினாலே தீட்டுவேன்-இந்தச்
சாட்டையதினாலே தீட்டுவேனிப்போது
மாண்டாலும் நான்விடேனே-இனி (ஏண்)

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நீ காசிக்கு வந்தவுடன் பொன்றருவதாயழைத்துவந்து (உழுகிறவன் ஏழையானால் எருது மைத்துனன் முறைமைகொண்டாடு) மென்பதுபோல நானுனது சொல்லுக்கெல்லா மிணங்கிவந்ததினால் என்னைப் பைத்தியகாரப் பார்ப்பானென்றெண்ணிக்கொண்டனை போலிருக்கின்றது (கொட்





டினாற்றேள் கொட்டாவிட்டாற் பிள்ளைப்பூச்சி) யென்பது உலகவியற்கைதான் நல்லது யானினிக் கூடவரமாட்டேன் இதோ கோடு கிழிக்கின்றேன் இக்கோட்டுக்குள்ளாகவே நின்று ரொக்கத்தைச் செலுத்திவிட்டுத்தான் அப்பாற்செல்லவேண்டும் அதுவரை உனது கரத்திற் கிட்டிகட்டிக் கண்ணிற்ஜலமுதிரும்படி நெருக்கி முதுகில் ரத்தவெள்ளம் பெருக இச்சவுக்கினாலடித்துப் பார்ப்பானுடைய சாமர்த்தியத்தைக் காட்டுகின்றே னிந்தப்பகதூர் கரத்தைநீட்டு சீக்கிரம்.

சந்திரமதி விருத்தம்.

கன்மன முனிவராலே கஷ்டமு மிகவேகொண்ட
தன்மவான் றன்னைபின்னுஞ் சங்கடப் படுத்திவீணாய்
வன்மம்நீர் சாதித்தாக்கால் மறையவ ரேயென்செய்வோம்
பொன்மன மிரங்குங்கிட்டி பூட்டிட வேண்டாஞ்சாமி.

## சந்திரமதிசொல் தரு.

[சித்துவசமாரி கைக்ஷேடா]
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-இந்துஸ்தானி-ஆதிதாளம்.

பல்லவி.

கிட்டிகட்ட வேண்டாங் கைநோகுமே அஹா-அஹா
கிட்டிகட்ட வேண்டாங் கைநோகுமே.

அநுபல்லவி.

அட்டதிக்கும்போற்றும் அரசருக்கு அஹா-அஹா (கிட்)

சரணம்.

நன்னிலையோவிது நவிலுவீர்சாமி ஆ-ஆ-ஆ-ஆ
பொன்னைப்பெறுமளவும் பொறுமையா
அட்டதிக்கும்போற்றும் அரசருக்கு அஹா-அஹா (கிட்)

(சந்-வ-ம்.) ஆ-ஆ ஸ்வாமி விஸ்வாமித்திரர் செய்த கஷ்டங்களெல்லாம் போதாதென்று தாங்களுமிந்தக் கொடிதான துன்பத்தைச்செய்யத்துணிவது தர்மமா ப்ரபு பாருங்கள் எனது பத்தா

வுக்குக் கிட்டிகட்டி நெருக்கினற் கைநோகுமாதலால் எப்படியா வது பொன்னை வாங்கிக்கொடுத்து விடுகின்றோம் அதுவரை பொறுத்துக்கொள்ளுங்கள் ப்ரபு.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

உருக்கமும்நோக்குண்டானு லுண்மையாய்ப்பொன்னையென்முன்
வருக்கமாய்க் கொட்டிவிட்டால் வாரிநா னெடுத்துக்கொண்டு
தருக்கமில் லாமலிந்த க்ஷணத்திலே கிட்டிதன்னைச்
சுருக்கமா யெடுத்துவிட்டுத் தோகையே செல்லுவேனே.

(நக்ஷ-வ-ம்.) ஹே மாதே நோக்கவ்வளவு உருக்கமிருக்கும் பக்ஷத்தில் இப்பொழுதே பொன்னைக்கொட்டிவிடு யானெடுத்துக் கொண்டு கிட்டியை வாங்கிவிட்டு இப்படியே யோடிப்போய் விடுகின்றேன் பெண்ணே.

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி யாரிடத்திலாவது கேட்டுத்தானே வாங்கித்தரவேண்டும் நடுத்தெருவில் நிறுத்திக்கொண்டு பொன் கேட்டால் எப்படிக் கொடுக்கமுடியும் ஸ்வாமி.

(நக்ஷ-வ-ம்.) அதற்குச் சாமர்த்தியமில்லாமல் வெறுங்கையில் முழம்போடப் பார்க்கின்றனையோ போடிபோடி பசப்புக்காரி இதோ பார் கிட்டியை நெருக்கிப் பொன்னைக்கொட்டும்படி செய்கின்றேனிந்தப்பகதூர் * அடாய் அரிச்சந்திரா இப்போது பொன்னுக்கென் சொல்கின்றனை.

அரிச்சந்திரன் விருத்தம்.

முப்பிறப் பினிலேயந்த முழுமுதற் கொருநாளேனுந்
தப்பிதஞ் செய்ததுண்டோ தவமுனி வோனைநிந்தை
செப்பியே யடித்ததுண்டோ தேவரீர் கிட்டிகட்டி
இப்படி வருத்தினல்யா னெப்படிச் சகிப்பேன்சாமி.



அரிச்சந்திரன்சொல் தரு.

[என்னகாலம்எங்களுக்கு வந்தகோலம்நானறியேன் ஈஸ்வரனே]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

கட்டியதோர் கிட்டியெடுங்
கற்பிலுயர் விப்பிரரே
கைநோகுதே (கட்டி)

நடுத்தெருவில் விடுத்துப்பொன்னைக்
கொடுத்திடென்று தடுத்துக்கொண்டாற்
கொடுப்பாருண்டோ (கட்டி)

ஊரினிலே யாரிடமும்
நேரிற்சென்றே கோரிக்கொண்டால்
நிதிதருவார் (கட்டி)

ஆகையினற் பாகமுடன்
எகிப்பொன்னைச் சேகரித்து
ஈய்வேன்வாரும். (கட்டி)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி கையில்யாதொரு வகையுமின்றிக் கஷ்டப்பட்டு வந்திருப்பதைப் பார்த்திருந்தும் இப்படி நடுத்தெருவில் நிறுத்திக்கொண்டு கையிற் கிட்டிகட்டி நெருக்கி வாதைப்படுத்தினற் பொன்வந்துவிடுமா யாரிடத்திலாவது நேரிற்சென்று எங்களுடைய வறுமையைக்கூறினலன்றோ எந்தப் புண்ணியசீலர்களாவது மனமிரங்கிப் பொன்கொடுப்பார்கள் தாங்கள் வாங்கிக்கொண்டு போகலாம் அதைவிடுத்து இவ்வித துன்பத்தைச்செய்வது தர்மமா ப்ரபு ஆஆ கை நோகின்றது கிட்டியை யெடுத்துவிட்டுக் கூடவாருங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா பார் (கன்னத்தடங்கேட்டாற் பள்ளம்பள்ளமாய்க்காட்டுவான்) என்பதுபோல நீ சமயத்திற்குத்தகுந்தபடி பேசக்கூடிய திருடனுகையால்உன்னைக்கோட்டுக்கப்பால் விடமாட்டேன் நீரொக்கத்தைச் செலுத்தும்வரையிலும் உன்முதுகுபிழந்து ரத்தமொழுகும்படி இதோ இச்சவுக்கினற்றீட்டுகின்றே னிந்தப்பகதூர்.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயயோ வென்னசெய்வே னந்தை ரேயிப்போது
கையொரு பக்கம்ரோகக் கட்டினீர் கிட்டிதன்னை
மெய்யெலாந் துடித்துரத்தம் வெளிப்படச் சவுக்கினாலே
நையவே புடைக்கின்றீரே நானிதைச் சகிக்கப்போமோ.

## அரிச்சந்திரன் சொல் தரு.

[பெண்ணேயுனக்கென்னகோபமடி கோபமடி]

என்ற வீரகுமாரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

ஐயோசகிக்கவென்னா லாமோ என்னாலாமோ-நக்ஷத்
 திரரேநான்சொன்ன துறியாமற்போமோ (ஐயோ)

கையுங்கிட்டியினாலே நோக மிகநோக-நீருங்
 கட்டியடிக்கவுளங் கலங்கியேவேக (ஐயோ)

சாமீரேயெனக்குத் தஞ்சம் நல்லதஞ்சம்-இந்தச்
 சமயந்தெரியாமலே தாக்குதல்வஞ்சம் (ஐயோ)

பூமிபுரந்தவனும் நானே ஐயாநானே-அடி
 பொறுக்கேனெனைரக்ஷியும் புண்ணியவானே (ஐயோ)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனதுவர்த்தமானங்களனைத்தையு மெடுத்துச் சொல்லியுந் தாங்கள் கிஞ்சிற்றேனு மேற்றுக்கொள்ளாமல் இப்படிக் கிட்டிகட்டி நெருக்கிக்கொண்டு சவுக்கினாலடிக்கின்றீரே ஆஆ என்னுளிதுடிக்கின்றதே ஆஆ சுகசரீரியா யரசாக்ஷிபுரிந்த யான் இவ்வடியைச் சகிக்கமுடியவில்லையே ஆஆ எங்களுக்குத் தங்களையன்றி வேறு துணையாவரிருக்கின்றார்கள் ஆஆ ஸ்வாமி என்னையிந்தத் துன்பத்திலிருந்து நீக்கிக் காத்துரக்ஷிக்கவேண்டும் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா பழையபாட்டுகளைப் படிப்பதினாற் பிரயோஜனமில்லை இந்த ஜாலமெல்லாம் நேக்குந்தெரியும் ரொக்கத்தைக்கொட்டிவிட்டுப் பக்கத்தில்வந்து பாஷி இல்லாவிட்டாற் பொன்கொடுக்கவேண்டுவதில்லையென்றுசொல் சீக்கிரம்



(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தலைபோனாலும் பொய்சொல்லமாட்டேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) ஆனால் ரொக்கம்வந்து சேராமற் கிட்டியையவிழ்க்கமாட்டேனரிச்சந்திரா ரொக்கம் ரொக்கம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

வாரண வாசியீசா மணிசா லாக்ஷிநேசா
காரணம் பலவியற்றுங் கர்த்தனே கயிலைவாசா
ஆரண முடிவில்நின்றே யாடும்நிர்த் தனவிலாசா
பூரண கிருபையுவைத்துப் பொருட்கருள் புரிகுவீரே.

## அரிச்சந்திரன் சொல் தரு.

[கண்ணாளனைக்காணேழுலே கண்ணிமைக்கெடுக்கதே]

என்ற இந்திரசபாவின் வர்னமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னசெய்வேனீஸ்வரனே யேழைதனைக்காருமையா

அநுபல்லவி.

பொன்னுக்குவகையில்லையோவென்னிடங்கொகையில்லையே (என்)

சரணங்கள்.

கைதனிலேகிட்டிகட்டி மெய்வருந்தச்செய்கிறாரோ
செய்தியெலாங்கண்டிருந்துஞ் சினமுடனேவைகிறாரோ (என்)

எங்கனைப்போல்மாபாவிகள் எங்குமுண்டோவையகத்தில்
வெங்கலிதவிர்த்திடவே விழித்திடாயோவென்முகத்தில் (என்)

வித்தைசெறிகாசிவாசா விஞ்சையர்சூழ்பாபநாசா
முத்தையன்பணியுமீசா மோனவிசாலாக்ஷிநேசா (என்)

(அரி-வ-ம்) ஆஆ ஜெகதீசா இந்த நக்ஷத்திரத்தர்காரனவர் நாங்கள்பட்ட கஷ்டங்களனைத்தும் பார்த்திருந்தும் கொஞ்சமேனும் நெஞ்சிளகாது பலவிதமாயேசிப் பொன்னைக்கொடுக்கும்படி கைக்குக் கிட்டிகட்டியடித்துத் தொந்தரிக்கின்றாரே ஆஆ கையிலொருகாசுக்குக்கூடவகையில்லையே ஆஆ இட்டன் றிருவடியைக்காணேமே ஆஆ விஸ்வநாதா எங்கள்முகம்பார்த்து இக்குறைதீர்த்து ரக்ஷிக்கலாகாதா ஆஆ இவ்வருத்தத்தை யெவ்விதஞ்சகிப்பேன்.

சந்திரமதி விருத்தம்.

நகத்தினி லழுக்குறுமல் காட்டினி லரசியற்றிச்
சுகத்துட னிருந்தமன்னு னாதருங் கிட்டிகட்டி
முகத்தினில் வியர்வைசிந்த முதுகினில் ரத்தமோடத்
தகர்த்திடு மடியைநீருஞ் சகித்திடப் போமோநாதா.

சந்திரமதிசொல் தரு.

[எந்தகுலமைந்தனே]

என்ற ஜாவளியின் வர்னமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

என்னமாயிதைச்சகிப்பீர் என் துரையே
காம்போ கிறதோ என்னமாயிதைச்சகிப்பீர்

அநுபல்லவி.

மன்னமன்னவரெல்லாம் வந்துவணங்கும்பூமா
கன்னிகைநானிருந்தக் கஷ்டம்பார்த்திடலாமா(என்)

கிட்டிதனையிறுக்கிக் கட்டிநெருக்கிமேலே
பட்டிமாட்டினைப்போலே வெட்டியடிப்பதாலே(என்)

தெய்வத்திநுக்குங்கூடச் சித்தமிரங்கிடாதோ
கைகுவித்துப்பணிந்த காரியந்தெரியாதோ(என்)

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணவல்லபா இத்துன்பத்தை யெவ்வி தஞ் சகிப்பீர்கள் ஆஆ கரத்திற்கிட்டிகட்டி நெருக்கி மாட்டை யடிப்பதுபோற் சவுக்கிறைற் றீட்டுகின்றனரே ஆஆ தெய்வங்கூட நமது பக்கிலில்லாமற் போய்விட்டதே ஆஆ மிருதுவான கரமும் முதுகும்நோகுமே ஆஆ இக்கொடுமையை அடியாள் எவ்விதம் பார்த்து மனஞ்சகிப்பேன் ஆஆ விஸ்வநாதர் சன்னிபதானத்திற் கைகூப்பி வணங்கிக்கேட்டுக்கொண்டதற்கு இந்தப்பலனு கிடைக் கவேண்டும்.

அரிச்சந்திரன் விருத்தம்.

காதல்நா யகியேயின்பக் கடலமு தேகேனாய்
வேதன்முன் னுனக்கு விதித்ததோர் பயனைப்போல



சோதனைக் காளாய்ச்சிக்கித் துன்புறுங் கொள்கிலாச்சு
வாதனை வருவதெல்லாம் ஈசுதான் றீரும்பெண்ணே.

(அரி-வ-ம்.) ஆஆ ப்ராணசகி நமக்கு முன்னுற் ப்ரம்மாவிதி த்த விதிப்பயனல் இப்போதிந்தத் துன்பத்திற்காளாகும்படி நேர் ந்திருக்கின்றது வந்ததெல்லாம் அநுபவிக்கத்தானே வேண்டும் இதற்கேன் செய்கின்றது பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

கருத்தனே காசிவாழுங் கடவுளே நாங்களென்றும்
வருத்தமொன் றறிந்திடாமல் மனுமுறை தவறிடாமற்
பொருத்தமா யுலகையாண்டு புகழுட னிருக்கவிந்த
விருத்தமுஞ் செய்தவைக்க நேர்ந்ததுன் செயலோசாமி.

சந்திரமதிசொல் தரு.

[மல்லிகைமுல்லைமல்லாயிதைத்தகையாலே]

என்ற கருநாடகஅரிச்சந்திரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-ஏதுச்குலகாம்போதி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

இந்தத்துன்பப்படவோ எங்களைப்படைத்த ஈஸ்வரா-மன்னன்
சிந்தைகலங்கிமிகத் திகைத்திடவிட்டனையே ஈஸ்வரா

பக்கத்திலரசர்கள் பணிந்துகொண்டாடவே ஈஸ்வரா-முன்னே
தக்கசுகத்திருந்து தரணியையாண்டோமே ஈஸ்வரா

கவுசிகமுனிசெய்த கடினவஞ்சகத்தாலே ஈஸ்வரா-எங்கள்
பவுஷுமுழுதுந்தோற்றுப் பரதேசியானோமே ஈஸ்வரா

பின்னுங்கடனுக்காகப் பொன்னைக்கொடுக்கும்படி ஈஸ்வரா-அந்த
வன்னெஞ்சமுனிவரும் மறையவனைவிடுத்தார் ஈஸ்வரா

இந்தத்தரகர்பொன்னை யிப்பவேதரும்படி ஈஸ்வரா-மன்னன்
நொந்திடக்கிட்டிகட்டி நொருக்கிறார்சவுக்காலே ஈஸ்வரா

நிர்த்தாக்ஷண்யமாயிவர் நிகழ்த்துமிம்சையாலே ஈஸ்வரா-எந்தன்
பர்த்தாபடுங்கஷ்டத்தைப் பார்க்கச்சகிக்கலையே ஈஸ்வரா

கையிற்பொருளுமில்லை கடன்கொடுப்பாருமில்லை ஈஸ்வரா-இந்த
வெய்யலிலேநின்று வெந்துதவிக்கிறேமே ஈஸ்வரா

எங்களின்முகம்பார்த்து எற்றகுறைதவிர்ப்பாய் ஈஸ்வரா-உமை
மங்கைதனைமகிழ்வாய் வாமபாகத்தில்வைத்த ஈஸ்வரா

(சந்-வ-ம்.) ஆஆ ஜெகதீசா இந்தத்துன்பத்திற்கா எங்களை யாளாக்கிவைத்தனை ஆஆ மகா கொடூரத்தையுடைய புலியாண்டநாங்கள் வஞ்சக விஸ்வாமித்திரருக்குச் சம்பத்துகளைத்துந் தோற்றுப் பரதேசிகளானதுமன்றிக் கடனுக்கும் பாத்திரப்பட்டு முனிவராலனுப்பிய இத்தாகர் இப்பொழுதே பொன்னைக் கொடுக்கும்படி வெய்யலில் நிறுத்திக் கைக்குக்கிட்டிகட்டிச் சவுக்கினடிக்குந் துன்பத்தை மன்னவன் சகிக்கமுடியாமல் மயங்குகின்றாரே ஆஆ கடன்தீர்ப்பதற்குக் கையிலும் பணமில்லை கடன்கொடுப்பாரையுங்காணோமே ஆஆ விஸ்வநாதா இக்கஷ்டத்தை நிவர்த்திக்காவிடில் யாங்களென்செய்வோம்.

நக்ஷத்திரத்தாகர் விருத்தம்.

மன்னவா நீயோர்பக்கம் மனந்துடித் தேவிழ்கின்றாய்
கன்னிகை யழுதிட்டாலுங் கண்ணினிற் ஜலத்தைக்காணோம்
பொன்னது வருவதற்குப் புகலெதுங் காணவில்லை
இன்னள வினிலோர்பொய்யையியம்பிடில் நான்செல்வேனே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நீயந்தப்புறத்திற் பதறி விழுகின்றனை உனது மனைவி யிந்தப்புறத்திற் கதறியழுகின்றனள் கண்ணில்மட்டுஞ் ஜலம்வடியக்காணோம் அப்படியிருந்தாலும்பொன்வருகின்ற வழியையுங்காணோம் என்செய்கின்றது நல்லது ஒரு பொய்யாவது சொல்லிவிடு நான் யாரிடமுஞ்சொல்லாமற் (கடன் கழிந்ததுவடமலையப்பா) வென்று முனிவரிடம்பாடத்தை யொப்பித்துவிட்டுத் தப்பித்தோடிப்போய்விடுகின்றேன் நேக்கேனித்தனைவம்பு.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தலைமீதுமலைசாய்ந்துவீழ்ந்தாலும் பொய்பாஷிக்கமாட்டேன் வீணாய் வற்புறுத்தவேண்டாம் ப்ரபு.



(நக்ஷ-வ-ம்.) ஹே மாதே நோக்குமட்டுந் தூக்கந்துருத்திக் கொண்டு வருகின்றதே நீதானென்னசொல்கின்றனை.

சந்திரமதி விருத்தம்.

ஆய்ந்தமா மறைவல்லோனே யருந்தவ முனிக்குத்தூது
வாய்ந்தவே தியரேயுங்கள் மனமது கொடியகல்லோ
மாய்ந்திடும் படியேகிட்டி வரிந்துவேள் முதுகில்ரத்தந்
தோய்ந்திட வடித்தாலிந்தத் தோன்றலென் செய்வாரையா.

சந்திரமதிசொல் தரு.

[மாதவமேயிவ்வுருவாய் வந்ததுமென்விதிவசமோ]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேதியரே நாதனையிவ் வேதனைசெய் யாதிரையா

அநுபல்லவி.

நீதியிது வோதயவு
நீரும்வைத்துக் காரும்மையா (வேதி)

சரணம்,

திட்டிமிக நெட்டியடித்
திட்டிடுக்கண்செய்யலாமோ
கட்டியதோர் கிட்டியாலே
கைவிரல்நோகாமற்போமோ (வேதி)

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி உயிர்வேதனையுண்டாகும்படி இப்படிக் கிட்டிகட்டி ரத்தமொழுகும்படியடித்தால் மன்னவன் எவ்விதம் பொறுப்பார் வேண்டாம் வேண்டாம் தயவுசெய்து கட்டவிழ்த்துவிடுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) இதற்குத்தானு கள்ளப்பாசாங்குசெய்தனை அந்தப் பாட்டைப்பாடாதே தூரக்கப்போடி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

கன்னிகை சொன்னவார்த்தை காதினி லேற்றிடாமல்
இன்னமும் பஞ்சகாதித்தா லிவ்வழி தனிலேயாரும்

பொன்னது கொடுப்பதுண்டோ பூசுர மணியேயிந்த
மன்னவன் சகியார்கிட்டி வாங்கியே ரக்ஷிப்பீரே.

---

## சத்தியகீர்த்திசொல் தரு.

[மன்னன்வரக்காணேனே யென்னநான்செய்குவேன்]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னவன்பொறுக்கமாட்டார்
வாங்குமையாகிட்டிதன்னை (மன்)

அநுபல்லவி.

சொன்னபடிகெடுத்தன்னில் பொன்னையளிப்போம்முன்னில் (ம)

சரணம்.

கிட்டிகட்டிநெருக்கினும் கேட்டபொன்னும்வந்திடுமோ
கட்டிமிகஅடித்தாலுங் காசுகைக்குமுந்திடுமோ (ம)

---

(சத்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி மன்னவனையிப்படித் துன்பப்படுத்தினால் பொன்னானது வந்து முன்னால் நிற்கப்போகின்றதா எங்காவது கேட்டுத்தானே வாங்கிக்கொடுக்கவேண்டும் அதற்குள்ளாக வழியிலிப்படிக் கஷ்டஞ்செய்வது தர்மமன்று தங்களுக்குச் சொன்ன தவணைக்குள்ளாகப் பொன்னைச் சேகரித்துக் கொடுத்துவிடுகின்றோம் எங்களரசன் வேதனைசகிக்கமாட்டாராதலின் கிட்டியை யெடுத்துவிடுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அவனைவிட நீ கெட்டிக்காரன்போலிருக்கின்றதே போடாபோடா பைத்தியகாரா ரொக்கம்வராமற் கிட்டியை யெடுக்கமாட்டேன் அந்தண்டைசெல்.

## தேவதாசன் விருத்தம்.

குடைநிழல் தனியிருந்து குவலயந் தன்னையாண்ட
திடமுள தந்தையிந்தச் சிறுமையும் படுவதற்குக்
கடமையோ வேண்டாம்வேண்டாங் காலினில்விழுகின்றேன்யான்
தடையிலா மற்கைக்கிட்டி தனையெடுத் திடுவீர்சாமி.

---



## தேவதாசன்சொல் தரு.

[நின்னுநம்மிநானு நிரஜனயனு]
என்ற ஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

கிட்டியெடுமையா கீர்த்தியுள்ளமெய்யா

அநுபல்லவி.

அட்டிசொல்லொணாது ஐயரேயிப்போது (கிட்டி)

சரணம்.

சிந்தைமிகநொந்து தியங்கியேவேர்த்துத்
தந்தைபடுகின்ற சங்கடத்தைப்பார்த்துக் (கிட்டி)

---

(தேவ-வ-ம்.) ஆஆ ஸ்வாமி ...னது தந்தை யிதுவரையிப்பேர்க்கொத்த கஷ்டப்பட்டதில்லை ...ங்ஙனமிருக்க தாங்களிப்படி வேதனைப்படுத்துகின்றீர்களே ... ஆ ஸ்வா...மி தங்கள் பாதத்திலாவது விழுகின்றேன் என் முகத்திற்கா... மனமிரங்கித் தந்தைகைக்கிட்டியை யெடுத்துவிடுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் குஞ்சு எல்லோருஞ் ...ன்னது என் செவியிற்படவேயில்லை நீசொன்னவுடனே நேக்கு ஊசிபோலபாய்ந்து கல்லாயிருந்தமனங் கரைந்துவிட்டதே உனது கரத்திலேதாவது வசியரேகையுண்டோ.

(தேவ-வ-ம்.) அது விபரம் எனக்குத்தெரியாது ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) நல்லது இதோ கிட்டியை வாங்கிவிட்டேன் உனது கரத்தைநீட்டி ரேகையிருக்கின்றதாவென்று பார்ப்போம்.

(தேவ-வ-ம்.) இதோ நீட்டினேன் ப்ரபு

(நக்ஷ-வ-ம்.) அடாய் சும்பத்தேவடியாள்பிள்ளை சிக்கிக்கொண்டனையா ஒருச்சாணிருந்துகொண்டு வொன்ன நாக்கைச் சுழட்டிச்சுழட்டிப் பேசினையே இப்போது கிட்டி யெப்படிப் பேசுகின்றது பார்.

## தேவதாசன் விருத்தம்.

ஊட்டியே வளர்த்ததாயே யுண்மையாய் ரேகைபார்க்க
நீட்டடச் சொன்னாகையை நிசமெனநம்பினானுங்

காட்டினேன் கொஞ்சமேனுங் கருணையில் லாமற்கிட்டி
மாட்டினு ரைபோகையும் வலிக்குது வலிக்குதம்மா.

## தேவதூதன்சொல் தரு.

[ஒலியா சாலுனே]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-வசந்தம்-தாளம்-சாபு.

பல்லவி.

ஐயையோநோகுதே எனதன்னையேயிரனும்
ஐயையோநோகுதே.

அநுபல்லவி.

உபயைக்கிட்டியெடுத்து — கையக்கட்டினரோ (ஐயை)

சரணம்.

கரம்துடிக்குதே — நரம்புகள் துடிக்குதே
சிரமப்படவிட்டதே — சிந்தைகலங்குதே (ஐயை)

(தேவ-வ-ம்.) ஆஆ மாதா இத்தரகாரனைவர் ஏதோவகையாரப்பதாகத் தமாயென்று கரத்தைநீட்டச்செய்து கிட்டியை நெருக்கிக் கட்டிவிட்டார் கையெல்லாம்வீங்கி நோவெடுக்கின்றது கரம்பெல்லாம் இசிக்கின்றதே ஆஆ என்னாலிவ்வருத்தஞ் சகிக்கமுடியவில்லையே இதற்கென்செய்வேன் மாதா.

சந்திரமதி விருத்தம்.

பிள்ளைகுட்டிகளேதேனும் பெற்றிருப் பீரேயானால்
உள்ளமுந் துணிந்தேயிந்த வுயிர்வதை செய்யமாட்டீர்
அள்ளியே கதறிநெஞ்சந் துடித்திடப் பாலன்கையில்
மெள்ளவே கிட்டிகட்டி வேதனை செய்திட்டீரோ.

## சந்திரமதிசொல் தரு.

[மாயாகாரிமோசமேவரா ஏமந்துனேசெலி]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாலகன்கைக்கிட்டியெடும் பிரதாபிக்கிறேனே



அநுபல்லவி.

காலமோவிதுவுங் — கையதுவீங்கிக்
கஷ்டப்படவிடுத்தீர் — கிட்டியைத்தாங்கி (பால)

சரணம்.

வையகம்புகழ்ந்திடும் — மாமறையோனே
வகையுடனேயுமக்குத் — தொகைதருவேனே
பையனைப்பிடித்திந்தப் — பழியெடுத்தீரோ
பிரமனுக்கடுக்குமோ — நரகரோநீரே (பால)

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி பல்விழாத சிறுபாலகனைப்பிடித்து இவ்விதந் துன்பப்படுத்துவது தங்களுக்குசிதமா ஆஆ இப்படிப்பழியெடுக்கலாமென்று எத்தனைநாளா யெண்ணியிருந்தீர்களோ தெரியவில்லையே ஆஆ பிள்ளைகுட்டிகள் பெற்றிருந்தால் இப்படிச்செய்வீர்களா ப்ரபு தங்களுக்குச் செல்லவேண்டிய பொன்னைவாங்கிக் கொடுத்துவிடுகின்றோம் பாலகன் கைக்கிட்டியை யெடுத்துவிடுங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) பொன்னைக் கொடுப்பதாயிருந்தால் நேக்கென்ன தடையிருக்கின்றது இதோ—அவிழ்த்துவிட்டேன் ரொக்கத்தைக்கொட்டு சீக்கிரம்.

சந்திரமதி விருத்தம்.

மன்னவா விவிமேல்நாமும் வகைசொல மார்க்கமில்லை
பொன்னது தருவதாகப் பூசுரரிடத்தில்வார்த்தை
சொன்னதி னாலேநம்பிச் சுதன்றனை விட்டாரிப்பப்
பின்னமில் லாமலிந்தப் பெருங்கடன் தீர்ப்பீரையா.

## சந்திரமதிசொல் தரு.

[விரசமானவார்த்தைவேண்டாம் விட்டுவிடடா]
என்ற ட்ராமாப்பதத்தின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்னைகடனைத் தீர்ப்பதற்கு வழியைப்பாருமே.

அநுபல்லவி.

இன்னளவுஞ் சொன்னதெல்லாம்
ஏற்கவில்லையே
பொன்னளிக்கப் பின்னிடைந்தாற்
பொருந்துந்தொல்லையே (மன்னு)

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணநாத நமது பரிதாபங்களெல்லா முறையிட்டும் இந்தக்ஷத்திரத்தரகாரனவர் கிஞ்சிற்றேனும் ஏற்றுக் கொள்ளாமல் நமதுபாலகன் கரத்திலுங் கிட்டிகட்டித்துணிந்தார் இப்போது பொன்கொடுப்பதாகச் சொன்னதினிமித்தம் விட்டு விட்டார் நாமினிமேற் (பூனையைக்கண்டஎலி) போல மனங்குன்றித் தலைகவிழ்ந்து நிற்கும்பக்ஷத்தில் இன்னுந் தொந்திரவுக்காளாகவேண்டிவருமாதலால் எவ்விதமேனுங்கடனைத்தீர்க்கும்படியான வழிதேடுங்கள் நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

சந்திர மதியேயெந்தன் சராசரஞ் சிதமேயென்னுஞ்
சிந்தையின் படிநடந்து திகட்டிடச் செய்யுந்தேனே
விந்தைசேர் கடனைத்தீர்க்க வேண்டுகின் றாயேயிப்ப
உந்தனை யறிந்திடாமலொருபொரு ளுண்டோபெண்ணே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[நின்றுபாசிவட்லஉர்தரு]
என்ற க்ருத்திகையின் வர்னமெட்டு.
இராகம்-பலஹம்சா-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னமாக இக்கடன்தீர்ப்பேன்

அநுபல்லவி

உன்னையல்லாது பொன்னமக்கேது (என்)

சரணம்.

கோசிகர்க்கெல்லாங் கொடுத்ததுங்கண்டே
பேசவந்தாயே பெண்ணேவேறுண்டோ(என்)



(அரி-வ-ம்.) ஆஆ ப்ராணசகி நமபதுயாக்கிங்களையுத்தைம் விஸ்வாமித்திரருக் கொப்படைத்துவிட்டு வந்ததுந் தெரிந்திருந்துங் கடனைத்தீர்க்கும்படி சொல்கின்றனையே உன்னுயிரும் என்னுயிரும் ஒன்றுயிற்றே உன்னையறியாமல் என்னிடத்திலேதாவது பொன்னிருக்கின்றதா அங்ஙனமிருக்க எவ்விதமாகக் கடன்தீர்ப்பேன். பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

சற்பனை முனிவர்செய்த சதியினால் நமக்குவாய்த்த
கற்பனைக் கடனைத்தீர்க்கக் காலமுங் கேட்டுவந்து
பொற்பணத் திற்குயாதும் புகலிலை யென்றுநீரும்
இப்படித் தயங்கிநின்றா லெப்படிச் சகிப்பேனையா.

## சந்திரமதிசொல் தரு.

[மாதேநீயென்னோடுகூட வனத்துக்கேகலாம்வாடி]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-இந்துஸ்தானிகாபி-ஏகதாளம்.

பல்லவி.

சாமிநீர்மனதுநொந்து தவிக்கநான்சகிப்பேனோ

அநுபல்லவி.

பூமியெண்டிசையும்வென்ற பொன்னகரயோத்தியாண்ட (சாமி)

சரணங்கள்.

கையினில்வெண்ணெயிருக்கக் கடனுய்நெய்தேடுவாரோ
பையினிற்பொருளிருக்கப் பணமென்றுவாடுவாரோ (சாமி)

ஆபத்துக்குதவாப்பிள்ளை அரும்பசிக்கில்லாவன்னம்
பாபத்தைத்தவிர்க்காத்தீர்த்தம் பகர்வதிற்பலனென்ன (சாமி)

எந்தனுடனோமது மைந்தனையும்விலைகூறுஞ்
சிந்தையிளகாதவிந்த அந்தணர்கடனைத்தீருஞ் (சாமி)

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணகாந்தா தாங்களிவ்விதம் பொருளில்லையென்று மயக்கமுறுவதைப் பாவியாகிய யான்பார்க்கச் சகிக்கவில்லையே ஆஆ (ஆபத்துக்குதவாப்பிள்ளை யிருந்தென்னபோயென்ன) என்பதுபோல நாங்களெல்லாம் இந்த ஆபத்துக்குதவாம

விருந்தென்ன பிரயோஜனம் பாருங்கள் கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கலைவார்களா ஒருக்காலுமில்லையாதலால் இப்பொழுது என்னையும் நமது மைந்தனையும் யாவர்க்கேனும் விற்று இந்தத்தாசருக்கு ராக்கத்தைச் செலுத்தி விடுங்கள் ப்ரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

அன்னைபோ லருகிருந்தே யடிக்கடி வேளைபார்த்துத்
தின்னுதற் குகந்தநல்ல சிற்றுண வளித்தெப்போதும்
என்னைநற் பாதுகாத்த வின்பநா யகியேயூரில்
உன்னைநான் விற்பதென்று லொப்புமோ மனதுதானே.

## அரிச்சந்திரன்சொல் தரு

[ராஜாஜிமைந்தனைநோக்கி ஆசமானிஜோலியா]
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-தேசிங்குதோடி-இந்துஸ்தானி-ஆதி.

பல்லவி.

உன்னைவிலைசெய்வதற்கு என்னமாய்மனந்துணிவேன்

அநுபல்லவி.

அன்னமேசந்த்ரமதியே அற்புதகுணாநிதியே (உன்னை)

சரணங்கள்.

தேவர்களறியவுன்னைத் திருமணங்கொண்டேனடி
பூவுலகையாளநல்ல புத்திரனுங்கண்டேனடி (உன்னை)

இவ்விதமனைமக்களை யிப்புவியிலெல்லோர்க்கும்
ஒவ்விலைசெய்வதற்கு ஒக்குமோமனதுயார்க்கும் (உன்னை)

கொண்டகடனுக்குவிற்றுற் குவலயமேசிடுமே
பெண்டிரைவிற்றுனென்றுபெரும்பழிபேசிடுமே(உன்னை)

சங்கதிதெரிந்தேயுந்தன் தந்தைதாயாரென்முன்வந்து
எங்கள்மகளெங்கேயென்றால் என்னசொல்வேனுனக்கு ()

(அரி-வ-ம்.) ஆஆ ப்ராணசகி உங்களை விலைசெய்வதற்கு என் மனஞ் சம்மதிக்குமா பார் தவசிரேஷ்டர்கள் முயற்சியின்பேரில் அரியப்ரம்மாதி தேவர்களறிய உன்னை மணம்புரிந்து எனது சூரியகுலம் பிரகாசிக்கத்தகுந்த ரத்தினத்தைப்போன்ற புத்திரனையும்



பெற்று இதுநாள்வரை உடலும் உயிரும் நகமுஞ் சதையும்போல் இடைவிடாது கூடிச்சுகித்திருந்தேனே அங்ஙனமிருக்க உங்களை யெவ்விதமாய் மனந்துணிந்துவிற்பேன் அப்படி விற்றாலும் உலகத் தாரேசர்களா அப்படியேசினாலும் உனது தந்தைதாயார் வந்து எங்கள் மகளெங்கேயென்று கேட்டால் யானென்ன பதிற்சொல்வேன் பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

காசினி தனிலேயுள்ளோர் கண்டவார்த் தைகளனைத்தும்
பேசிடு வார்களென்று பித்தனைப் போலேநின்றுக்
கோசிக முனிவருக்குக் கொடுக்கவேண் டியநற்பொன்னை
ஏசிடுவோர்தீர்ப்பாரோ எங்களை விலைசெய்வீரே.

## சந்திரமதிசொல் தரு.

[மோகமுனேதாளலோரா முத்துபெட்டோராசாமி]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு
இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏசுவோரும்பேசுவோரும் இடர்தீர்ப்பாரோநாதா

அநுபல்லவி.

யோசனையேன் கூசிடாமற்
காசியில்விலைகூறுமே
பூசுரர்சந் தோஷமுறக்
கோசிகர்கடன்தீருமே (ஏசு)

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணநேசா நம்மை யேசுவோரும் பர்துத்வமாய் பேசுவோரும் நமக்குரிய கடனைத்தீர்ப்பார்களா ஒருக்காலுமில்லையாதலால் விபரீதமான யோசனையெல்லாம் விடுத்து இப்பொழுதே யெங்களை யாவர்க்கேனும் விலைக்கீய்ந்து கோசிகர்கடனைத்தீர்த்துத் தாசரைச் சந்தோஷப்படுத்தி யனுப்பிவையுங்கள் ப்ராணநாத.

(அரி-வ-ம்.) ஆஆ சந்திரமதி நீ பாவிப்பது வாஸ்தவந்தான் நல்லது அப்படியே செய்கின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

உன்னத மறையவா வென் னுயிரைநேர் பெண்டுபிள்ளை
தன்னையின் னகரில்விற்றுத் தவமுனி வருக்குச்செல்லும்
பொன்னதைக் கொடுக்கின்றேனிப் பொழுதினில் மனதுகந்து
நன்னயக் கோட்டைத்தாண்டி நடந்திட விடையீய்வீரே.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனது மனைவிமைந்தனை யின்னகரத்தில் யாருக்காவது விற்பனைசெய்து முனிவருக்குரிய கடனைத் தீர்த்துவிடுகின்றேன் இனியாவது கோட்டைதாண்டிச் செல்லுதற்கு விடைதாருங்கள் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நீயென்ன பைத்தியகாரனாயிருக்கின்றனை கடனுக்காகப்பெண்டுபிள்ளைகளை விற்பார்களோ வென்னை ஒருபொய் சொல்லிவிட்டாற் கடன்தீர்ந்து போகுமன்றோ இதற்காக ஏன் இவ்வளவு கஷ்டமடையவேண்டும்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி வையகமழிந்தாலும் பொய்சொல்வேனோ ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திராநோக்குக் கிஞ்சித்தேனும் மானாபிமானமில்லையே அப்படி நீ யிவர்களை விற்பதாயிருந்தாலும் இவர்கள் அரைக்காசுக் கூடப் பொறார்களே அங்ஙனமிருக்க எவ்விதமா யவ்வளவு பொன்கொடுப்பார்கள்.

(அரி-வ-ம்.) அந்த லாபமும் நஷ்டமும் என்னைச்சேர்ந்ததாயிருக்கத் தாங்களேன் பரிதாபப்படுகின்றீர்கள் எப்படியாவது பொன்னை வாங்கிக்கொடுத்துவிடுகின்றேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) ஆனால் நேக்கென்ன போகின்றது ஒட்டைப்பானையானாலுங் கொழுக்கட்டைவெந்தாற்போரும் இதோகோட்டைவிட்டுச்செல்ல உத்திரவுகொடுத்தேன்சீக்கிரம் விற்று ரொக்கத்தைக்கொட்டு பார்ப்போம்.

(அரி-வ-ம்.) ஹே சந்திரமதி இந்தத் துரும்பைக்கிள்ளி யுங்கள் சிரசில்வைக்கின்றேன் நீங்கள் சத்தியமாய் விலைப்படவேண்டுமென்று மனதில்நினைத்துக்கொண்டு முன்னால்நடந்துசெல்லுங்கள்

(சந்-வ-ம்.) அப்படியே யெண்ணிக்கொண்டோம் இதோ நடக்கின்றோம் ப்ராணநாத்.

158



அரிச்சந்திரன் விருத்தம்.

கற்பினுக் கரசியான காதலியு டனேயென் அந்
சொற்பமு தில்லாவெந்தன் சுதனையு மெனக்குநேர்ந்த
சற்பனைக் கடனுக்காகத் தனமது கொடுப்போருக்கு
விற்பதற் காகவந்தேன் வேண்டுவோர் விலைகேட்பீரே.

அரிச்சந்திரன்சொல்-தரு.

[அதிசயமானஷிட்டாயிருக்குது அனுபவிப்பவர்களுண்டானால்]
என்ற ஷிட்டாய்க்கண்ணியின் வர்ணமெட்டு.
இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

எந்தன்மனைவியுடன் மைந்தனையும்விலைக்கு
சயந்துவிடுவேன்நகரோரே
சிந்தையிலிவர்களைச் சொந்தவடிமைகொளத்
தேவையுள்ளவர்கள்கேட்பீரே (எந்)

சீர்த்திபெங்குஞ்சொலும பொந்திநகரையாண்ட
செம்மலரிச்சந்திரன்நானே
தூர்த்தவிஸ்வாமித்திரர் வார்த்தையால்நகர்செல்வந்
தோற்றதுங்கடனும்பட்டேனே (எந்)

அக்கடனுக்காகநான் விற்கவந்திருக்கிறேன்
அரியபொன்னைக்கொடுத்துவாங்கத்
தக்கவர்களிருந்தால் இக்கணமேபொருளைத்
தந்துவாங்கிக்கொள்ளுங்கள்நீங்கள் (எந்)

கற்பினுக்கருந்ததி பொற்புளசந்திரமதி
காதல்சேர்மகன்புத்திசாலி
விற்பதற்கென்மனதும் ஒப்பினதால்இவ்விதம்
விதியெனினுமெவர்க்குங்கேலி (எந்)

(அரி-வ-ம்.) ஆஆ நகரவாசிகளே யானோ அயோத்தியாபுரியை யரசாண்ட அரிச்சந்திரமகாராஜன் விஸ்வாமித்திரர் வஞ்சனையினால் எனக்குரிய சம்பத்தனைத்துந்தோற்றுக் கடனும்பட்டு அக்கடனுக்காக எனது மனைவி சந்திரமதியையும் எனது மைந்தன்

தேவதாசனையும்விற்க வந்திருக்கின்றேன் இவளோ கற்புக்கருந்ததியை நிகர்த்தவள் இவனோ மகா புத்திசாலியாகலால் இவர்கட்குத்தகுந்த பொன்கொடுத்து வாங்கிக்கொள்ள ப்ரீதியுடைய கனவான்கள் விலைக்குக்கேளுங்கள் ஃ ஆஆ நாகரே இந்தவீதியில் விலைக்கு வாங்கப்பட்டவர்கள் ஒருவரையுங் காணோமாதலால் இன்னொரு வீதிக்குச்செல்வோம் ப்ரபு.

நக்ஷத்திரத்தாகர் விருத்தம்.

இருக்கவிடங் கொடுத்திடிற்பின் படுப்பதற்கும்
இடந்தேடு வார்களென்ற கதையைப்போல
தருக்கமின்றிக் கோடுவிட்டுத் தாண்டுதற்குச்
சற்றிடமுங் கொடுத்ததினு லின்னுமுள்ள
தெருக்களுக்குள் விழுந்தடிக்கப் பார்க்கின்றாய்நீ
சீர்மாடா னிலிவனை விலையாகாதோ
சுருக்கமுடன் பொய்யொன்று மட்டுமென்முன்
சொல்லிவிடு பொன்வேண்டாஞ் செல்லுவேனே.

---

(நக்ஷ வ-ம்.) அடாய் அரிச்சந்திரா (இருக்கஇடங்கொடுத்தாற் படுக்கஇடந்தேடுவார்க)ளென்பதுபோல உன்னைக் கோட்டுக்கப்புறந்தாண்டவிட்டதே யென்பேரிற் பிசகுதான் போலிருக்கின்றதே இனி யந்தவீதிக்குவா இந்தத்தெருவுக்குப் போகலாமென்று இழுத்தடிக்கப்பார்க்கின்றனையோ பார் (உழுகிறமாடானல் உள்ளூரில்விலையாகாதா)வென்பதுபோல இவர்கள் நல்லவர்களாயிருந்தால் இந்த வீதியிலேயே வாங்கிக்கொள்வார்களன்றோ ஆஆ உன்யோசனையைக்கேட்டால் ஒருபோதுங் கடன்றீரமாட்டாது இனிமேல் என்னால் நடக்கவுமுடியாதாகையால் முனிவருக்குக் கொடுத்த நட்டைக்கொடுக்கவில்லையென்று ரகஸ்யமாய்ச் சொல்லிவிடு பொன்வேண்டாம் யானிப்படியே சென்றுவிடுகின்றேன்.

(அரி-வ-ம்) ஆஆ ஸ்வாமி தாங்கள் பாஷிப்பதானது (எரிகிறகண்ணுக்கு மிளகாய்ப்பொடி தூவினது) போலிருக்கின்றதே பாருங்கள் இப்போதடைந்திருக்குங் கஷ்டம்போதாமல் இன்னும் பாபத்திற்கஞ்சாத பொய்யுஞ்சொல்லிப் பாழ்நரகுக்காளாக்கவாய் பார்க்கின்றீர்கள் வேண்டாம் என்னகஷ்டப்பட்டாவது இவர்களை விற்றுக் கடனைத்தீர்த்துவிடுகின்றேன் கூடவாருங்கள் ப்ரபு.



(ஈகூ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா (உள்ளதைச்சொன்னால் நொள்ளைக் கண்ணனுக்கு நோப்பாளா) மென்பதுபோல கடன்தீர வகைசொன்னதற்கு லொள்ளென்று விழுகின்றனையே உன்பாடு பதினாயிரம் கேக்கென்றுவது எப்படியாவது பொன்னைக்கொடுத்தாற்போருமானது இதோ வருகின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஆசைநா யகியோடெந்த வருந்தவத் தினிலேவந்த
மாசிலா மணியைப்போன்ற மைந்தனை யும்பொல்லாத
கோசிகர் கடனுக்காகக் குணமுடன் விற்கவந்தேன்
காசிவா சிகளேவாங்கக் கருத்துறிற் கொள்ளுவீரே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[சுந்தரஞ்சேர் சந்திரன்மேற் றேகைநானு மோகமானேன்]
என்றதாராசந்திரசபாவின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

கண்ணிகள்.

காசிவாழும் பூசுரரே
கன்னிகையைக் கொள்வாருண்டோ (காசி)

மின்னுமுடி மன்னவரே
மெல்லிதனைக் கொள்வாருண்டோ (காசி)

ஐசுவர்ய வைசியரே
அரிவைதன்னைக் கொள்வாருண்டோ (காசி)

நேர்த்தியுள்ள சூத்திரரே
நேரிழையைக் கொள்வாருண்டோ (காசி)

மனைவிதன்னை விற்கவந்தேன்
மகிழ்வுடனே கொள்வாருண்டோ (காசி)

பெண்டுதன்னை விற்கவந்தேன்
பிரியமுடன் கொள்வாருண்டோ (காசி

காதலியை விற்கவந்தேன்
கனிவுடனே கொள்வாருண்டோ (காசி

பத்தினியை விற்கவந்தேன்
பக்ஷமுடன் கொள்வாருண்டோ (காசி)

தேவிதன்னை விற்கவந்தேன்
தேவையாகக் கொள்வாருண்டோ (காசி)

தாரமதை விற்கவந்தேன்
தயவுடனே கொள்வாருண்டோ (காசி)

தனையனையும் விற்கவந்தேன்
சந்தோஷமாய்க் கொள்வாருண்டோ (காசி)

சுதனையுந்தான் விற்கவந்தேன்
சொந்தமாகக் கொள்வாருண்டோ (காசி)

புதல்வனையும் விற்கவந்தேன்
பொன்கொடுத்துக் கொள்வாருண்டோ (காசி)

(அரி-வ-ம்.) ஆஆ இத்திருவீதியில்வாழும் (ப்ரம்மக்ஷத்திரிய வைஸ்ய சூத்ராதி) வர்ணாச்சிரமத்தார்களே எனது மனைவியையும் விலைக்கு விற்கவந்திருக்கின்றேன் தகுந்த விலைகொடுத்து வாங்கிக் கொள்ள ப்ரியமுள்ளவர்கள் வாருங்கள் கண்ணுற்பாருங்கள் விலையைக்கோருங்கள் பொன்னைத்தாருங்கள் அழைத்துக் கொண்டு வீடுசேருங்கள்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதவர் புகழுங்காசி மாநகர் தன்னிலுள்ள
வீதிகள் முழுதுஞ்சுற்றி வேண்டினே னொருவரேனுங்
காதினிற் கேட்கவில்லை கண்ணினும் பார்க்கவில்லை
ஜோதியே யென்னையிந்தச் சோதனை செய்யலாமோ.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[பெண்ணேயுனக்கென்னகோபமடி கோபமடி]
என்ற வீரகுமாரநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

வீதிமுழுதுஞ்சுற்றினேன் சுற்றினேனே-யாரும்
விலைகொடுத்துவாங்கவில்லை விடாங்குதேனே (வீதி)



பாதிமதிதரித்த-நாதா விஸ்வநாதா-எங்கள்
பங்கிலிருந்துதவி பண்ணலாகாதா (வீதி)

முனிவர்கொடுத்தகெடுக்-காலங் கெடுக்காலம்-இன்று
முடிவுறப்போகிறதே முத்தாநின்கோலம் (வீதி)

தரகருங்கடுங்கோபி-யாச்சே கோபியாச்சே-இனித்
தடைசொன்னாலெனக்குள்ள சத்தியம்போச்சே (வீதி)

கடன்கொடுப்பதற்கென்ன-செய்வே னென்னசெய்வேன்-இந்தக்
கவலையகன்றினியெக் காலம்நானுய்வேன் (வீதி)

(அரி-வ-ம்.) ஆஆ விஸ்வேசா இக்காசிமாநகரிலுள்ள சகலவர்ணாச்சிரமத்தார்களுடைய வீதிகளெல்லாஞ்சுற்றி விலைகூறினேன் ஒருவராவது வாங்குபவர்களைக்காணேமே ஆஆ முனிவர்கொடுத்த தவணைநாள் இன்றுடன் முடியப்போகின்றதே ஆஆ தரகரானவர் கடுங்கோபியாயிற்றே இனிமேற் றவணைசொல்லும் பக்ஷத்தில் எனது சத்தியவாக்குப்பொய்த்துவிடுமே ஆஆ ஜெகதீசா இக்கடனைத்தீர்க்கும்படி கிருபைசெய்யலாகாதா ஆஆ இதுவும் உன் சோதனைதானே இனியென்செய்வேன் நல்லது இந்தவீதி யொன்றுதான் பாக்கியிருக்கின்றது இதிலும் விலைகூறிப்பார்க்கின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

முன்னமே விஸ்வாமித்ர முனிவருக் களிப்பதாகச்
சொன்னசொற் கடனுக்காகச் சுதனுடன் மனைவிதன்னைப்
பொன்னது கொடுப்போருக்குப் பொறுமையாய் விற்கவந்தேன்
இன்னகரத்தில்வாங்க விஷ்டமுள் ளவர்கேட்பீரே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[இன்றும்காதன்வரக்காணேனே யென்னசெய்வேன்தோணாதே]
என்ற ப்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-சாபு.

பல்லவி.

பெண்டுபிள்ளை தன்னைவிற்கிறேன்
பிரியமாகக் கொள்வாருண்டோ,

அநுபல்லவி.

மண்டலவாழ்த் துண்டகாசி
மாநகர வாசிகளே
பிரியமாகக் கொள்வாருண்டோ (பெண்டு)

சரணம்.

எந்தன்கடனுக்காகத்தானே இவ்விடம்விற்கவந்தேனே
சொந்தமனை மைந்தனுக்குச்
சொன்னபடி பொன்னளித்துப்
பிரியமாகக் கொள்வாருண்டோ. (பெண்டு)

---

(அரி-வ-ம்.) ஆஆ இக்காசிமாநகர்வாசிகளாகிய (சதை-இரக்கம்-தயை-தாக்ஷிண்யம்-பக்ஷாதாப) முள்ள புண்ணியசீலர்களே என்னுடைய கடனுக்காக எனது மனைவிமைந்தனை விலைக்குவிற்க வந்தேன் யாவரேனும் இவர்களுக்குத்தகுந்த பொன்கொடுத்து வாங்கிக்கொள்ளப் பிரியமிருந்தால் வாருங்கள் உத்தமர்களே.

---

பொது விருத்தம்.

ஆதிதனிற் றேவாக சியப்படிக்கு
அக்கினியி னமிசமதாய்க் காசிதன்னில்
வேதியர் குலத்தினிலே யுதித்துநல்ல
வேதபுரா ணதிசாஸ் திரங்களெல்லாங்
காதலுடன் கற்றறிந்து சுகமாய்வாழுங்
காலகண்ட ரிச்சந்த்ரன் மனைவிசேயைச்
சாதனமாய் விலைகூறுஞ் சேதிகேட்டுச்
சந்துஷ்டி யடைந்தங்கு வந்திட்டாரே.

---

காலகண்டையர்வருந் தரு.

[விதிவீதிகள்தோறும் விலைகூறுவேன்]

என்ற சகுநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

பல்லவி.

காலகண்டையர்வந்தாரே காவலன்முன்னே
காலகண்டையர்வந்தாரே.



அநுபல்லவி.

நீலகண்டனைச்சதா காலமுந்துதிசெய்யுஞ்
சீலமுளவக்கினி தேவாமிசையாலுய்யுங் (கால)

சரணம்.

வன்னப்பட்டுடைதுலங்கப் பளபளென்று
மார்பிற்பூணூலிலங்கக்
கன்னிகையுடன்பிள்ளை தன்னையும்நானின்று
என்னவிலையானாலும் ஏற்றுக்கொள்ளுவேனென்று (கால)

---

(காலகண்டையர் வசனம்.) யாரடா இவ்விடத்திற் பசுவுங் கன்றும் விற்கவந்தவன்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி யான் விற்கவந்தது பசுவுமன்று கன்றுமன்று எனது மனைவியையும் மைந்தனையும் விற்கவந்தேன் ப்ரபு.

(கால-வ-ம்.) அப்படியா நல்லது யானிவர்களை விலைக்குப் பெற்றுக்கொள்கின்றேன் ஆனால் நீ விற்றுவிட்டுப்போனபின்னல் யாவரேனும் வந்துஎன்பெண்டுபிள்ளையென்று வழக்கிட்டால் யானென்செய்வேன்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி அப்படி யாதொரு வித்தியாசமும் நேரிடாது தாங்களதைப்பற்றி யோஜிக்கவேண்டாம் ப்ரபு.

(கால-வ-ம்.) அப்படி நான் இவர்களை விலைக்குவாங்கினால் இவர்கள் என்வீட்டுவேலைகளெல்லாஞ் செய்யவேண்டுமன்றோ.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி அப்படியே செய்வார்கள் ப்ரபு.

காலகண்டையர் விருத்தம்.

விப்பிரர் வீட்டுவேலை விடியுமுன் செய்யவேண்டுந்
தப்பிதஞ் செய்வாராகிற் சரிப்படா தெங்களுக்கு
அப்படி யானால்மட்டு மரும்பொருள் கொடுத்துவாங்க
ஒப்புமென் மனதுஞ்சொன்னே னுண்மையை யுரைசெய்வாயே.

## காலகண்டையர்சொல் தரு.

[இந்தவனச்சிங்காரம் சந்தவனச்சிங்காரம்]

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-ஏகதாளம்.

பல்லவி.

சொன்னபடிகேட்பாரோ சரங்கம்வைக்கப்பார்ப்பாரோ
என்னமோசஞ்செய்வாரோ எதிர்த்தெதிர்த்துவைவாரோ
என்னமோநானுமறியேனே இந்தக்
கன்னிகைகுணந்தெரியேனே (சொன்ன)

சரணங்கள்

விடியுமுன்னெழுந்திட்டு மிகுமலங்கழித்திட்டு
வீட்டையெல்லாங் கூட்டவேணும்
மெழுகிக்கோலந் தீட்டவேணும்
மாட்டுச்சாணந் தட்டவேணும்
வாரிக்குப்பை கொட்டவேணும்
என்னமோநானுமறியேனே-இந்தக்
கன்னிகைகுணந்தெரியேனே (சொன்ன)

நெல்லுகள்கொட்டியே கல்லெலாம்வெட்டியே
நேருநவே வைத்தல்வேணும்
நிமிஷமதைக் குத்தவேணும்
சேருமியைப் புடைக்கவேணும்
தினமுங்கூழைக் குடிக்கவேணும்
என்னமோநானுமறியேனே-இந்தக்
கன்னிகைகுணந்தெரியேனே (சொன்ன)

தெரிவைக்குஇதுதானே சிறுவனுமினித்தானே
தெர்ப்பையிலே கொய்யவேணும்
சிற்றெழில்கள் செய்யவேணும்
சொற்படி நடக்கவேணும்
சோளக்கூழ் குடிக்கவேணும்
என்னமோநானுமறியேனே-இந்தக்
கன்னிகைகுணந்தெரியேனே. (சொன்ன)



164



(கால-வ-ம்.) ஹே விலைகூறவந்தவனே பார் இந்த மங்கை யானவள் விடியுமுன்னெழுந்து மலஜலங்கழித்து விட்டு ஆத்தி லுள்ள ரேளிமுத்தம் பிரவடைமுதலானதும் நன்றாய்ப்பெருக்கிச் சாணந்தெளித்துக்கோலமிடவேண்டும்அன்றியும் மாட்டுச்சாணங் களை யெடுத்துமுட்டைதட்டவேண்டும் இன்னும் நெற்களையெடு த்துக் கல்வெட்டிக்குத்தி உமிவேறு தவிடுவேறு நொய்வேறு குறு ணிவேறு தண்டுலம் வேறாகப்புடைத்துக் கொடுத்துவிட்டு ஊற்றி யகூழைச் சாப்பிட்டுக்கிண் டிருக்கவேண்டும் இச்சிறுவனானவன் அனுதினமுங்காலையிலெழுந்து வனங்களுக்குச்சென்று (தர்ப்பை-சமித்து-மாவிலை-முன்னை-முஷ்டை-காரை-பிரண்டை)முதலானவை யும்பறித்துக்கொண்டுவந்துபோட்டுவிட்டுசோளக்கூழற்றிறையுங்குடி த்துக்கொண்டு சொன்னவார்த்தையெல்லாங்கேட்டு நடக்கவேண் டும்இந்தப்படி யிவர்கள்நடப்பார்களோ அல்லது ஆத்திலுள்ளபொ ருள்களைக்கவர்ந்துகொண்டுமோசஞ்செய்துபோய்விடுவார்களோ அல்லது எதுக்குமாறாய் வார்த்தைகூறி வைவார்களோ யாதோ நேக்கொன்றும் புலப்படவில்லை ஆகையால் உண்மையைச் சொல் வாயாக.

அரிச்சந்திரன் விருத்தம்.

கோலமா மயிலைப்போன்ற கோதையுந் தடைசொல்லாமற்
காலினா லிட்டவேலை கையினாற் செய்வாளெந்தன் [ன்
பாலகன் சொன்னசொற்போற் பணிவொடுநடந்துகொள்வா
ஜாலமுஞ் சதியுஞ்செய்யத் தலைப்படமாட்டார்சாமி.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனது மனைவியும் மைந்தனுந் தே வரீர் காலாலிட்ட வேலைகளைக்கையாற் செய்வார்களேயன்றிச்சூது வாது முதலானவைகள் ஒருக்காலுஞ் செய்யமாட்டார்கள் ப்ரபு இதையுண்மையாய் நம்புங்கள்.

(கால-வ-ம்.) நானோ கிழவன் என் ஆத்துக்காரி மகாபொல் லாதவள் அவளிடத்திற் பாததாடனம் பெறுதற்கு என்னால் முடி யாது அதற்காகத்தான் இவ்வளவு விபரங்கேட்டேன் நல்லது இவ ர்களுக்கு எவ்வளவு பொன்விலை கொடுக்கவேண்டும்.

அரிச்சந்திரன் விருத்தம்.

தந்தியின் மீதிலேயோர் தருந்தவல் லவனேயேறி
விந்தைசேர் கவண்கற்கொண்டு விண்ணினை நோக்கிநன்றாய்
உந்தியே யெறிந்தாற்செல்லு முயரமாய்ப் பொன்குவித்து
எந்தனுக் களித்துவிட்டா லிவர்களின் கிரயமாமே.

---

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி யானையின்மீது வல்லபுருஷனேறி விண்ணோக்கிக் கவண்கல்லெறிந்தால் எவ்வளவு தூரம்போமோ அவ்வளவுயரம் பொன்கொடுத்தால் இவர்கட்குரிய விலையாகும் ப்ரபு.

(கால-வ-ம்.) அடேயப்பாடா இவர்களுக்குஅவ்வளவுபொன் யாராவது கொடுப்பார்களோ.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி அவ்வளவு பொன் கொடுத்தால் மட்டும் என் கஷ்டம் நிவர்த்தியாகும் ப்ரபு.

காலகண்டையர் விருத்தம்.

இவர்களுக்கிவ் வளவுபொன்னுங் கொடுக்கப்போகா
இருந்தாலும் நீயேதோ மனதில்மிக்க
கவலையுற்று வந்ததற்குக் கொடுத்தாலன்றிக்
காற்காசு பொறமாட்டார் காணுதேவி
குவலயத்திற் பெண்டுபிள்ளை விற்பதற்குக்
கொடுமையென்ன நேர்ந்ததுவோ தெரியவில்லை
விவரமுட னின்னதென்றே யெந்தன்முன்னே
விள்ளுவாய் பொன்வாங்கிக் கொள்ளுவாயே.

---

(கால-வ-ம்.) ஹே விற்கவந்தவனே பார் இவர்களுக்கு அவ்வளவுபொன் கொடுக்கத்தகாது ஆனல் நீ படுகின்ற பரிதாபத்தைப் பார்த்தால் நேக்குவியாகூலமுண்டாகின்றது ஆகையால் உன்முகத்திற்காக அவ்வளவுபொன் கொடுக்கவேண்டுமேயன்றி இவர்கள் அரைக்காசுகூடப் பொறமாட்டார்கள் நல்லது அப்படியே பொன் தருகின்றேன் நீ பெண்டுபிள்ளையை விற்கும்படியான கஷ்டஞ்சம்பவித்ததை விபரமாகத் தெரிவிப்பாயாக.



அரிச்சந்திரன் சொல்லுதல்.

அகவல்.

என்வரலாற்றை யியம்புவேன்கேளும்
பொன்விளைவென்னும் பொருந்துகோசலையாம்
நாட்டிலயோத்தி நகரினையாண்ட
தாட்டிகமுளவரிச் சந்திரன்யானே
கவுசிகமுனியின் கற்பனைச்சூதாற்
பசுஷைகள்முழுதும் பற்றறத்தோற்றேன்
முன்னமேநானும் முனிவர்வேள்விக்குப்
பொன்னதுகொடுக்கப் புங்கவனென்பால்
வைத்ததைப்பின்னல் வஞ்சமாய்க்கவர்ந்து
அத்தனத்தினைபு மளித்திடச்சொன்னார்
கொடுப்பதற்கில்லாக் குறையதினாலே
கெடுத்தரும்படிக்குக் கேட்டுநான்வந்தேன்
இத்தரகரையு மென்னுடன்விடுத்தார்
உத்தமரேயவ் வுயர்கடன்தீர்க்க
மனைவியினுடனே மாதவச்செல்வத்
தனையனைவிற்கத் துலைப்பட்டனனே.

---

(கால-வ-ம்.) நீயயோத்தியையரசாண்ட அரிச்சந்திரனு நன்றாயிருக்கின்றது எதோ நான் றப்பித்துக்கொண்டேன் வேண்டாம்வேண்டாம் வந்தவழியைப்பார்த்துச்செல்.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி அப்படிச்சொல்லவேண்டிய காரணம்யாது ப்ரபு.

காலகண்டையர் விருத்தம்.

பெண்டிவ ளரசியுந்தன் பிள்ளையும் ராஜபுத்ரன்
தொண்டிவ லைகளைச்செய்யார் துஷ்டையென் னுதனக்குசரி
சிண்டினை யறுப்பேனென்பாள் திரவியம்போச்சுதென்று
மண்டையி லுள்ளசொற்ப மயிரையும் பிடுங்குவானே.

---

(கால-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா உன்மனைவியோ அரசி மைந்தனோராஜபுத்திரன் இவர்கள் உடம்புவளைந்து அடிமைவேலை

கள் செய்யமாட்டார்கள் இதினால் என்னுத்தக்காரி பணம்போச்சுதென்று கோபமுற்று என்மண்டையிலுள்ள மூன்றுமயிரையும் பிடுங்கிவிடுவாள் அத்தனை கஷ்டம் நேக்கேதுக்கு இந்தமட்டிலும் நன்றாய்த்தெரிந்துகொண்டேன் நல்லது மரியாதையாய்ப்போய்வா.

(அரி-வ-ம்.) அப்படித் தங்களுக்குத் தீங்குண்டாகும்படி நடக்கவேமாட்டார்கள் ப்ரபு என்வார்த்தையை யுறுதியாய் நம்புங்கள்.

(கால-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நீசத்தியவானென்று யான் முன்னமே கேட்டிருப்பதால்இப்போதுன்வார்த்தையை நம்பித்தான் வாங்கவேண்டியதாயிருக்கின்றது நல்லது விக்கிரயசாசனமெழுதிக்கொடுபொன்கொடுத்து விடுகின்றேன்.

(அரி-வ-ம்) அப்படியே யெழுதிக்கொடுக்கின்றேன் தங்கள் நாமதேயம் யாது ப்ரபு.

(கால-வ-ம்.) என்னைக் காலகண்டையனென்று சொல்வார்கள்.

(அரி-வ-ம்.) இதோ கிரயசாசனமெழுதிவிட்டேன் ப்ரபு.

(கால-வ-ம். ஆனதை வாசித்துக்காட்டு பார்ப்போம்.

(அரி-வ-ம்) அப்படியே வாசிக்கின்றேன்.

## அரிச்சந்திரன் சொல்லுதல்.

### ஆசிரியவிருத்தம்.

காசிமா நகரினிற் பூசுர குலத்தில்வாழ்
காலகண் டையருக்குக்
காவல னயோத்திமா நகரிச் சந்திரன்
கைப்பட வரைந்துதந்த
சாசனமு மென்னவென் றற்கோசி கர்க்குத்
தருங்கடன் தீரவேண்டித்
தனையனா கியதேவ தாசனுட னேமனைவி
சந்த்ரமதி தனையுமக்குப்
பாசமுட னேவிலைக் கீய்ந்துபொன் பெற்றதாற்
பாரிசுத னுக்கெனக்கும்



பார்முள்ள மட்டிலும் நீருள்ள மட்டிலும்
பாத்யமில்லை யென்பதற்கு
ஈசனும் பிரமனும் மால்பூமி தேவியும்
ஈஸ்வரி மகாலக்ஷ்மியும்
இசையாது சந்த்ரசூர் யாதிமுத லானமற்
றிமையோர்க ளுஞ்சாக்ஷியே.

(அரி-வ-ம்.) என்றெழுதியிருக்கின்றேன் ப்ரபு.

(கால-வ-ம்.) நல்லது அடியிற் கையொப்பமிட்டிருக்கின்றனையோ.

(அரி-வ-ம்.) இதோ வைத்திருக்கின்றேன் ப்ரபு.

(கால-வ-ம்.) நல்லது இவர்கள் பெயரை மறந்துவிட்டேன் இன்னொருதரஞ்சொல் பார்ப்போம்.

(அரி-வ-ம்.) ஸ்வாமி இவள்பெயர் சந்திரமதி இவன்பெயர் தேவதாசன் ப்ரபு.

(கால-வ-ம்.) அப்படியா நல்லது சாசனத்தையும் இவர்களையும் என்னிடத்தில் ஒப்பிவை சீக்கிரம்.

(அரி-வ-ம்.) இதோ பெற்றுக்கொள்ளுங்கள் ப்ரபு.

(கால-வ-ம்.) அப்படியே பெற்றுக்கொண்டேன் இப்போது பொன் யாவருக்குக் கொடுக்கவேண்டுவது.

(அரி-வ-ம்.) ஸ்வாமி இந்த நக்ஷத்திரத்தரகருக்குக் கொடுக்க வேண்டும் ப்ரபு.

## காலகண்டையருக்கும் நக்ஷத்திரத்தரகருக்குஞ் சம்பாஷணை.

(கால-வ-ம்.) யார்காணும் இங்கேநிற்கின்றது.

(நக்ஷ-வ-ம்.) ஏன்காணும் நான்தான்.

(கால-வ-ம்.) என்னையுமக்குத்தெரியாதோ.

(நக்ஷ-வ-ம்.) தெரியாமற்றானே விழிக்கின்றேன்.

(கால-வ-ம்.) நீர் எற்கெனவே பொட்டைக்கண்மூதேவி அங்ஙனமிருக்க உமக்கெப்படித் தெரியப்போகின்றது.

(நக்ஷ-வ-ம்.) ஓகோ நீர் கொள்ளிக்கண் குரங்கன்றோ இப்போதுதான் தெரிந்ததுகாணும்.

(கால-வ-ம்.) ஓய் நக்ஷத்திரத்தாரகரே முன்னே பார்த்ததற்கு இப்போது உமது மூஞ்சியைப்பார்த்தால் சுக்கிரன் வக்கரித்தது போலிருக்கின்றதே.

(நக்ஷ-வ-ம்.) ஓய் காலகண்டையரே உம்முடைய மூஞ்சிவாமூகின்றதோ அக்கினி நக்கினது போலதானிருக்கின்றது.

(கால-வ-ம்.) சரிசரி பரிபாஷையை விரிவாய்ப் பேசவேண்டாம்உமக்குத்தானே பொன்செல்லவேண்டும்.

(நக்ஷ-வ-ம்.) ஆமாங்காணும் நேக்குத்தான் இப்போது செல்லவேண்டும்.

(கால-வ-ம்.) பின்னே வெர்ன்னே மாடுபோல் நிற்கின்றீரோ குருட்டுத்தாயோழிமகனே வாங்கிக்கொண்டதாய்ச் சொல்லுமே.

(நக்ஷ-வ-ம்.) கொள்ளிக்கண் சும்பத்தேவடியாள் பிள்ளாய் வெர்ன்னே பாவனையாவது காட்டவேண்டாமோ வென்ன,

(கால-வ-ம்.) ஆனுற்கையை நீட்டுங்காணும்.

(நக்ஷ-வ-ம்.) இதோ நீட்டினேன்காணும்.

(கால-வ-ம்.) இதோ கையடித்துவிட்டேன் பொன் வந்துவிட்டதாகச் சொல்லிவிடும் இனி யிவ்வரசனைக் கேட்க வேண்டாம் நக்ஷத்திரத்தாரகரே.

(நக்ஷ-வ-ம்.) அப்படியே கேட்கவில்லை காலகண்டரே.

(கால-வ-ம்.) ஹே அரிச்சந்திரா இவர்களை யழைத்துக்கொண்டுபோகலாமன்றோ.

(அரி-வ-ம்.) ஆஆ தாரகரே முனிவர்க்குரிய பொன்னை வாங்கிக்கொண்டீர்களா ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) வாங்கிக்கொண்டே னரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) ஆனாலப்படியே யழைத்துக்கொண்டு போங்கள் ப்ரபு.

(கால-வ-ம்.) ஹே நக்ஷத்திரத்தாரகரே யான் சென்றுவரட்டுமாவென்ன.



(நக்ஷ-வ-ம்.) அப்படியே சென்றுவாரும் காலகண்டையரே.

(கால-வ-ம்.) ஹே பெண்ணே பையனையழைத்துக்கொண்டு வாசெல்வோம்.

(சந்-வ-ம்.) அப்படியே வருகின்றேம் ப்ரபு.

சந்திரமதி விருத்தம்.

அனைத்தையு மிழந்துவிட்டோ மப்பொழு திவளவாக
மனத்துயர் தோன்றவில்லை மன்னவா வுமதுஜென்மை
நினைத்திடி லெனக்குமென்மேல் நெஞ்சமும் பதறுதையா
வினைத்துய ரிதுவோவும்மை விட்டுநான் பிரிவதற்கே.

சந்திரமதிசொல் தரு.

[அழகுள்ள இவராரடி யென்ப்ராணசகி]
என்ற ட்ராமாஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

எப்படியுமைப்பிரிவேன் என்ப்ராணநாதா
எப்படியுமைப்பிரிவேன்

அநுபல்லவி

ஒப்புமோவெனதுள்ளமும் என்ப்ராணநாதா (எப்)

சரணங்கள்.

பஞ்சணையில்நடந்தாற் பாதம்நோகுமென்றெண்ணிக்
கொஞ்சிமடியில்வைப்பீரோ யெனையெடுத்துக்
கொஞ்சிமடியில்வைப்பீரோ
ஒப்புமோவெனதுள்ளமும் என்ப்ராணநாதா (எப்)

தலைவலிக்குதென்றுநான் சாற்றினவுடனேநீர்
பலவுதவிகள்செய்வீரோ அருகிருந்து
பலவுதவிகள்செய்வீரோ
ஒப்புமோவெனதுள்ளமும் என்ப்ராணநாதா (எப்)

மனைவிமைந்தனைவிற்று மனதில்வெறுப்புற்றுத்
தனியாகவிதிவசமோ துணையிலாது
தனியாகவிதிவசமோ
ஒப்புமோவெனதுள்ளமும் என்ப்ராணநாதா (எப்)

மன்னவரெலாங்கண்டு மகிழுந்திருமுகத்தை
என்னமாயினிக்காணுவேன் அடியாள்நானும்
என்னமாயினிக்காணுவேன்
ஒப்புமோவெனதுள்ளமும் என்ப்ராணநாதா (எப்)

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணகாந்தா எப்பொழுதும்பஞ்சணையில் நடந்தாலும் பாதம்நோகுமென்றும் அடிக்கடி யென்னை மடியிலெடுத்துவைத்து முத்திபிடுவீர்களே ஆஆ சிரம்நோகுதென்றவுடன் அருகிலிருந்து பலவித உபசாந்திகள் செய்வீர்களே ஆஆ என்னையும் மாதவச்செல்வனையும் விற்றுவிட்டு உரித்தாகிய துணையின்றித் தனிமையாயிற்குங்காலஞ் சம்பவித்ததே ஆஆ தங்களைவிட்டுப் பிரிவதற்கு அடியாள் மனங்கிஞ்சிற்றுமொப்பவில்லையே ஆஆ ஐம்பத்தைந்துதேசத்தரசர்களும் வந்து தரிசிக்குர் தங்கள் திருவதனத்தை யினிமே லெப்பொழுது காண்பேன் ப்ரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

புண்ணியஞ் செய்திட்டாலும் புவிதனி லவரவர்க்கு
ஒண்ணிய விதிபோற்றாழ்வு முயர்வுமுண் டாகுமன்றி
எண்ணிய படியார்க்கேனு மிசையுமோ சகியேநீயுங்
கண்ணினில் நீர்ததும்பக் கதறியே யழுகலாமோ.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[மாதேநீயென்னோடுகூட வனத்துக்கேகலாம்வாடி]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-இந்துஸ்தானிகாபி-ஏகதாளம்.

பல்லவி.

பெண்ணேயென்னசெய்வேனடி. பிரமன்வபிதத்திற்கு

அநுபல்லவி.

கண்ணேநீமயங்கிடாதே கருதிற்பயன்படாதே (பெண்)

சரணம்.

வேதியர்கூடவேயின்று மெல்லமெல்லநீங்கள்சென்று
ஏதுகுறைவும்நேராது இருந்துவாழ்வீரெப்போதும் (பெண்)



(அரி-வ-ம்.) ஆஆ பெண்கள்நாயகமே யானென்செய்வேன் யார் நாமெவ்விதம் பரதவித்தாலும் (அவனன்றியணுவசையா) தென்பதுபோல ப்ரம்மகற்பனைப்படி நடக்குமேயன்றி நமதுவியாகூலத்திற்காக நம்மெண்ணப்படி யொன்றும் நடவாதாகையால் வீணாய் ரோதனஞ்செய்து மயங்கவேண்டாம் உங்களை விலைக்கு வாங்கிய வேதியரிருக்கும்போது உங்களுக்கு யாதொருகுறைவும் நேரிடமாட்டாதாகையாற் பாலனை யழைத்துச்சென்று சுகமாய் வாழுங்கள் ப்ராணசகி.

சந்திரமதி விருத்தம்.

என்னசொன் னாலுமுங்க ளினியசற் குணமற்றெல்லாம்
உன்னிடிற் கல்லுங்கூட வுருகுமே மெழுகுபோலே
கன்னிகை யவையனைத்துங் கருத்தினி லெண்ணும்போது
மன்னவா பிரிந்துசெல்ல மனம்வசப் படுமோசாமி.

## சந்திரமதிசொல் தரு.

[அறியாமல்மதிமோசமானனே யிந்தமங்கையாலேநான்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-சாபு.

பல்லவி.

விட்டுப்பிரியமனம் வல்லையே-என்ப்ராணநாதா
விட்டுப்பிரியமனம் வல்லையே—

அநுபல்லவி.

வல்லையே-கதி-யில்லையே என்ப்ராணநாதா (விட்)

சரணங்கள்.

உம்மைவிட்டெவ்விதமா யுய்குவேன்-அடியாள்நானும்
உம்மைவிட்டெவ்விதமா யுய்குவேன்
உய்குவேன்-என்ன-செய்குவேன் என்ப்ராணநாதா (விட்)

யாரிருந்தாறுமைப்போ லாகுமோ-துணையெனக்கு
யாரிருந்தாலுமைப்போ லாகுமோ
ஆகுமோ-துயர்-போகுமோ என்ப்ராணநாதா (விட்)

சொன்னசமாதானங்க ளேற்குமோ-இப்போதெனக்குச்
சொன்னசமாதானங்க ளேற்குமோ
ஏற்குமோ-குறை-தீர்க்குமோ என்ப்ராணநாதா (விட்)

(சங்-வ-ம்.) ஆஆ ப்ராணப்ரியா தாங்களெவ்வித சமாதான மெடுத்துச் சொன்னபோதிலுந் தங்களைவிட்டுப் பிரிவதற்குக் கிஞ் சிற்றேனு மனமொப்பவில்லையே ஆஆ எத்தனைபேரிருந்தாலுந் தங் களைப்போலுரித்தானவர்களாவார்களா ஒருக்காலுமில்லையாதலால் யான் றங்களைப்பிரிந் தெவ்விதமுய்வேன் ஆஆ தாங்களெங்களை மறக்கும்படியான காலமும் வந்து நேர்ந்ததே இதற்கென்செய் வேன் ப்ரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

கடந்தனுரா னிகளுமக்கள் காதலை மறவாரென்று
இடந்தரு நீதிநூல்க ளியம்புவ தாலேயென்னைத்
தொடர்ந்தசம் சாரபாசந் தோன்றல்நான் மறப்பதுண்டோ
மடந்தையே மனதுகந்து மறையவ ருடன்செல்வீரோ.

---

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்த்ரீகள்ரத்தினமே பார் (கடந்தனுரானியு மறப்பரோ மக்கள்மேற்காத) லென்று நீதிநூல் முறையிடுகின்ற மையால் அப்பேர்க்கொத்த துறவறத்தார்க்கே சுற்றத்தார் பற்றனு- திருக்கும்பொழுது உங்களை நான் மறக்கக்கூடுமோ ஒருக்காலு மில்லையாதலால் நீ யாதொரு கவலையுங்கொள்ளாமல் எல்லாஞ் சிவன்செயலென்றெண்ணிக்கொண்டு சந்தோஷகரமாக மறையவ ருடன் சென்றுவாருங்கள் பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

இத்தனை நாளாயும்மை யிணைபிரி யாதிருந்த
பத்தினி நானுமிந்தப் பாலனும் பிரிவதற்கு
வைத்ததும் விதிதான்மன்னு மறையவர் வீடுசெல்வோம்
புத்தியே தேனுஞ்சொல்லிப் போய்வர விடையீய்வீரோ.

---

சந்திரமதிசொல் தரு.

[சாமிக்கார்போய்ச்சொல்லுவார்]

என்ற பதசாகித்தியத்தின்வர்னமெட்டு

இராகம்-காபி-இந்துஸ்தானி-ஆதிதாளம்.

பல்லவி.

புத்தியென்னசொல்கிறீர்



சங்கினமுருங்
குங்கடிகொள்பல
மதிவதிமாடம்
முதுகுளத்தூர்வாழ்
பூமின்தரவொடு
சாமிநாதப்பெயர்
உரியகர்வியங்க
பெரியசாமிக்கோன்
செப்பமாய்முன்னாட்
சுப்பராயப்புவித்
நாடகமாக
சேடனுங்காதுற்
வித்துவர்கேட்கில்
நத்தியேகொள்ளுவர்
யின்னாடகம்போ
என்னாற்பெருமை

தடம்பணைசூழ்ந்திலங்
குலமணிருயிற்றிய
மல்கியபொன்செறி
முத்தமிழ்க்கடலாம்
புகழ்மிகப்பெருகிடுந்
தருமாசாரியும்
ளொருங்குறவுணர்ந்த
பெட்புடனட்பாய்ச்
செய்தவத்தால்வரு
தோன்றலும்பெற்று
நடித்தனர்பார்த்தேம்
றினம்புவியசையும்
வெருவியப்புடனே
நானிலமறிய
வியற்றினரெவருளர்
யிசைத்திடவரிதே.

பாயிரம் முற்றுபெற்றது.

# சத்தியவாக்கு அரிச்சந்திர நாடகத்தை

ஆடிவருகிற கனவான்கள்

## திருப்புவணம் மூக்கவேளாரவர்கள் செற்று.

| | |
|---|---|
| இராஜபார்ட்டு | ஆரப்பாளையம்மூக்கவேளாரவர்கள் |
| சந்திரவதிபார்ட்டு | ஷையூர் புகழும்பெருமாள்வேளார |
| பாலபார்ட்டு | முத்துக்கிர்ஷ்ணவேளார் [வர்கள் |
| இஞ்சின்பார்ட்டு | நாகசாமிசெட்டியாரவர்கள் |
| மந்திரிபார்ட்டு | சுப்பராமய்யரவர்கள் |
| விஸ்வாமித்திரபார்ட்டு | சுந்தரராஜவேளாரவர்கள் |
| பலவேசபார்ட்டு | நல்லையநாயுடு |
| ஷை பார்ட்டு | துரைச்சாமிவேளார் |
| கோமாளிபார்ட்டு | சாத்தங்குடி சுந்தரக்கண்ணுப்புலவ |
| கட்டியன்பார்ட்டு | மதுரை சோமுஆசாரி [ர் |

ஆரப்பாளையம்

## சுந்தரராஜுவேளார் செற்று.

| | |
|---|---|
| இராஜபார்ட்டு | ஆரப்பாளையம் சுந்தரராஜவேளாரவர்கள் |
| சந்திரவதிபார்ட்டு | மதுரை சின்னவீரச்சாமிநாயுடவர்கள் |
| பாலபார்ட்டு | ஷையூர் இராமுபிள்ளையவர்கள்மகன் முத்து |
| மந்திரிபார்ட்டு | சுப்பிரமணியய்யரவர்கள் [ப்பிள்ளை |
| ஷை பார்ட்டு | லெட்சுமணசர்மா அவர்கள் |
| இஞ்சின்பார்ட்டு | அழகிரிசாமிநாயுடு |
| மோகனராஜன்பார்ட் | மூக்கவேளாரவர்கள் |
| மோகினிபார்ட்டு | வேணுப்பிள்ளையவர்கள் |
| விஸ்வாமித்திரர்பார்ட் | அய்யாச்சாமிபிள்ளை |
| விதூஷகபார்ட்டு | இராமசாமிசேர்வையவர்கள் |
| கோமாளிபார்ட்டு | காடிப்பட்டி பொன்னுச்சாமித்தேவரவர்க |
| பலவேசபார்ட்டு | லெட்சுமிநாராயணவய்யரவர்கள் [ள் |

இந்நாடகத்தை அச்சிட்டுத்தரவேணுமென்று
கேட்டுக்கொண்ட கனவான்கள்.

சொரிக்குளம் தம்புச்சாமித்தேவரவர்கள்
கண்ணுபட்டி நாராயணசாமிபத்தர்
எளாயிரம்பண்ணை அண்ணுமலைத்தேவர்
அசக்காபட்டி நா-இராமசாமித்தேவரவர்கள்
உண்ணிபட்டி முதலாளி சங்கரலிங்கரெட்டியாரவர்கள்



171

உ

தெய்வமே துணை.

# சத்தியவாக்கு அரிச்சந்திர நாடகம்.

## காப்பு.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

சுந்தர வயோத்தியென்னு நகரினுக்குத்
தோன்றலென வந்துதித்துப் புவியோர்போற்றச்
சந்ததமும் பொய்சொல்லா விரதம்பூண்ட
சத்தியவாக் கரிச்சந்த்ரன் சரிதைதன்னைச்
செந்தமிழி னாடகமாய்ச் செப்புதற்குத்
தென்பழனி க்ஷேத்திரத்தில் வீற்றிருக்குங்
கந்தனுக்கு முன்னவனாய் வந்ததொந்திக்
கணபதியின் பொற்சரணங் காப்புத்தானே.

## சூத்திரதார் பிரவேசம்.

பொது விருத்தம்.

சாஸ்திர நீதிநூல்கள் சகடறக் கற்றுணர்ந்து
நாஸ்திக மதத்தோரெல்லாம் நாவெழா தடங்கியோட
ஆஸ்திக மதமிவ்வாறென் றறிஞர்கட் குபதேசிக்குஞ்
சூஸ்திர தாரும்வந்து தோன்றினன் சபையிற்றானே.

## சூத்திரதார்வருந் தரு.

[ராஜாதிராஜமகா ராஜேந்த்ரன் கொலுவந்தான்]
என்ற டிராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

சாஸ்திரமறிந்தநற் சூஸ்திரதாரும்வந்தான்

அநுபல்லவி.

மிகு-சம்பிரதாயன் நல்லோர்கள்மீ
தன்புளநேயன் பொல்லார்களீ
வம்புசெய்வாயன் கல்லாதவ
ரும்புகழ்ஞாயன் அல்லாமலும்
உம்பரெவருமிவன் கம்பனெனவேசொல்ல
கும்பவிலதிமது ரம்பெறமொழிவல்ல (சா)

சூத்திரதார் விருத்தம்.

சகலவித வேதாக மேதிகாச
சாஸ்திரவிற் பன்னமகா சபையோருக்கும்
மிகுமதுர நயவசனு மிர்தசங்கீத
வித்யாப்ர சங்கமெனுங் கம்பேனிக்கும்
ககனமுனி வார்துதிசெய் கணபதிக்குங்
கந்தகவ ளாரவிந்த மலர்வாணிக்கும்
மகிழ்வுடனே யிருகரங்கள் கூப்பியானும்
வந்தனந்தந் தேன்குற்ற மன்னிப்பீரே.

## சூத்திரதார்சொல் தரு.

[வந்தனந்தந்தேனே வந்தசபையோர்க்கும்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ஆதி.

பல்லவி.

சந்தோஷமாய்நானே வந்தனஞ்செய்தேனே
சபைக்கும்வித்யாப்ரசங்கக் கம்பேனிக்குந்தானே.

அநுபல்லவி.

அந்தரர்வந்தித கணபதிக்கும்
செந்தமிழ்மலிஜெய சரஸ்வதிக்கும் (சந்)

சரணம்.

ஜின்மயகெம்பீரி தென்பழனிமாரி
யம்மனடிகோரி யெம்மோரதிகாரி
ஸ்டேஜ்மா னேஜர்விஸ்
வாசிகள் காரிய
தரிசிகட்கும் (சந்)



(சூத்-வ-ம்.) சதுர்ப்புஜபூதரா சந்த்ரஜடாதரா சாமிசண்முக சகோதரா சரசவல்லபை மனோகரா சர்வஜீவதயாபரா ஹேலம் போதரா சூத்திரதார் வந்தனம்புரிகின்றேன்.

(கணேசர் வசனம்.) கல்யாண் சூத்திரதாரா ஹே பாலகா. யாம் கைலாசகிரியில் எமது மாதாவாகிய பர்வதராஜ புத்திரியினது வாமபாகத்தில் வீற்றிருக்குந்தருணத்தில் எம்மைக்கோரி யிங்ஙனம் ஸ்லோக பூர்வகமாக ஸ்மரித்தனையே அத்ஸ்லோகத்தைக் கேட்டமகிழ்ந் திங்ஙனம் ப்ராப்தமாகினோம் ஹே பக்தா உனக்கு யாதிச்சை கோரியவரத்தைக்கேள். தந்தருள்வோமாக.

(சூத்-வ-ம்.) தேவா தொண்டனுடைய ஸ்தோத்திரத்துக் கிரங்கிப் பிரசன்னதரிசனங் கொடுக்கப்பெற்றுக் கிருதார்த்தனாகினேன் யானிப்போது சத்தியவாக்கு அரிச்சந்திரபூபதியினது புண்யசரிதையை யிச்சபையினிடத்தில் நடாத்தப்போகின்றமையால் யாதோரிடையூறின்றிச் சம்பூர்ணமாய் முடிவுறும்படி கிருபா கடாக்ஷ வீக்ஷண்யம் பாலித்தருளவேண்டுந் தேவா.

(கணே-வ-ம்.) ஹே வத்சா நீ நடாத்தப்போகின்ற நாடகமானது ஆதிமுதலந்தம்வரை யாதொரு விக்கினமின்றி நிர்விக்கினமாய் முடியும்வண்ணம் பூர்ணாசீர்வாத மளித்திருக்கின்றோம் இன்னும் ப்ரம்மபத்தினியாகிய வாணியைநோக்கி ஸ்மரிப்பாயாகில் அவளும் பூர்ணாசீர்வாதமளிப்பள் யாம் ஸ்வயஸ்தானமாகிய கைலேயங்கிரிக்கேக விடையளிப்பாயாக.

(சூத்-வ-ம்.) தேவா வந்தனம்புரிகின்றேன்.

(கணே-வ-ம்.) கல்யாண் பக்தா.

## விதூஷகனுக்குஞ் சூத்திரதாருக்குந் தர்க்கம்.

| விதூஷகன் வினா. | சூத்திரதார் விடை. |
|---|---|
| ஹே சூத்திரதார் இவர் யார் | இவர் தான் சங்கரன்மைந்தன் |
| என்னசங்கு | பாற்சங்கு |
| என்னபால் | ஞானப்பால் |
| என்னஞானம் | உலகஞானம் |
| என்னஉலகம் | பதினுன்குலகம் |
| என்னபதி | கணபதி |

(விதூ-வ-ம்.) அப்படியா சபாஷ் நன்ருயிருக்கின்றது (ஊடு சலாடியுந் தன்னில்) யென்பதுபோல எங்கு சுற்றினும் இருந்த விடந்தான்வந்து சேரவேண்டுமாதலால் இத்தனைதரம் உளறினதைப்பார்க்கினும் இந்தக் குண்டோதரன்பேரை யொரேதரத்திற் சொல்லிவிடக் கூடாதாவென்ன.

(சூத்-வ-ம்.) அடா மித்திரா அப்படியெல்லாம் பரிகாசம் பண்ணுமல் நீயும் வேண்டியவரங்களைப் பெற்றுக்கொள்வாயாக.

(வி-தூ-வ-ம்) ஹே சூத்திரதார் இவரை யெப்படியழைக்கின்றது.

(சூத்-வ-ம்.) தேவா வந்தனம்புரிகின்றேனென்று சொல்.

(விதூ-வ-ம்.) தேவா வந்தனம்புரிகின்றேன்.

(கணே-வ-ம். கல்யாண் நீ யாவன்.

(விதூ-வ-ம்.) யான் விதூஷகன்.

(கணே-வ-ம்.) உனக்கு யாதிச்சை.

(விதூ-வ-ம்) எனது மனைவி அரிசிபுடைக்கத் தங்கள் செவியென்னுமுறத்தைக் கொடுத்தருளப் பிரார்த்திக்கின்றேன்.

(கணே-வ-ம்.) சைதுஷ்டா நீ அகடவிகட அதிகப்பிரசங்கியாகக்கடவை.

{ சூத்திரதார் சொல்லுதல்.
சரஸ்வதி ஸ்தோத்திரம். }

[சுந்தரிநீயெந்தனைவந்தாதரி]

என்ற கீர்த்தனையின் வர்னமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்துநீவரந்தருள் கல்வாணியே.

அநுபல்லவி.

எந்தவேளையுங்கந்தமாமல    ரிலகும்வேணியே
எந்தன் வந்தனம்    சதோ தந்தனன்    (வந்)



(விதூ-வ-ம்.) இப்போதென்னை யெங்கே யழைக்கின்றீர்.

(சூத்-வ-ம்.) அடா மித்ரா பார் இப்போது நடாத்தப்போகின்ற (சத்தியவாக்கு அரிச்சந்திரநாடகம்) யாதோ ரிடையூறின்றி நிர்விக்கினமாய் முடியும்பொருட்டு யான் ஸ்மரிக்கப்போகின்ற கடவுளானவர் பிரசன்னமாகப்போகின்றார், அவரிடத்தில் யான் வேண்டிய வரப்ரசாதங்களைப் பெற்றுக்கொள்ளப்போகின்றேன். நீயுமென்னுடன் வருவாயாகில் உனக்கும் வேண்டிய வரப்பிரசாதங்கள் வாங்கித்தருவேனாதலால் இப்போது வருதற்கென்சொல்கின்றனை.

(விதூ-வ-ம்.) ஹே சூத்திரதார் யானிதுவரையினும் (சிவசாமி அரிச்சந்திரநாடகம், அணஞ்சபெருமாள்பிள்ளை அரிச்சந்திரநாடகம், மூக்கவேளார் அரிச்சந்திரநாடகம், நீதிநெறி அரிச்சந்திரநாடகம், மெய்யரிச்சந்திரநாடகம், நல்வழியரிச்சந்திரநாடகம்) என்ற பெயர்மட்டுங் கேட்டிருக்கின்றேனேயன்றி (சத்தியவாக்கு அரிச்சந்திரநாடகம்) என்ற பெயர் யானிதுவரையினுங் கேட்டிலேனுதலால் இது நூதனமா யேற்பட்டிருக்கின்றதுபோலிருக்கின்றதே.

(சூத்-வ-ம்.) வாஸ்தவந்தான் விதூஷகா.

(விதூ-வ-ம்.) நல்லது இந்நாடகம் யாவராலியற்றப்பட்டது எப்போதரங்கேற்றப்படி செய்யப்பட்டதென்பதை விபரமாய்த் தெரிவிக்கவேண்டுஞ் சூத்திரதார்.

சூத்திரதார்சொல்லுதல் விருத்தம்.

இக்கலியை யாயிரத்தோன் றதில்விகாரி
　　யெனும்வருடம் மாசிபதி னேழாந்தேதி
ஒக்குமல மங்களவா ரத்தோடோணம்
　　உள்ளசுப யோகதினஞ் சுபமாம்வேளை
திக்கெவனும் புகழ்விஸ்வ ப்ரம்மவம்ஸ
　　திலகன்முத்த னுசாரி பழனிதன்னில்
தக்கவரிச் சந்திரவேள் நாடகத்தைச்
　　சாற்றினன் சபையிலரங் கேற்றினனே.

(விதா-வ-ம்.) அப்படியா ஆனாலிதில் வெகு நூதனவர்னமெட்டுக்களேற்பட்டிருக்கும்போலிருக்கின்றதே.

(சூத்-வ-ம்.) அதனை யுத்தேசித்துத் தான் இன்னாடகத்தை நடாத்தத்துணிந்தேனாதலாற் கடவுளைப் பஜிக்கச்செல்வோம் வா.

(விதூ-வ-ம்.) ஆனால் வெகுசந்தோஷம் இதோவருகின்றேன்

{சூத்திரதார் சொல்லுதல்.}
{கணேச ஸ்தோத்திரம்.}

[கணபதிகெஜவதனா]

என்ற க்ருத்திகையின் வர்னமெட்டு.

இராகம் - கானடா - தாளம் - ஆதி.

பல்லவி.

வரமருள்கரிமுகனே நல வரமருள்கரிமுகனே
அரிமருமகனே வரமருள்கரிமுகனே.

அநுபல்லவி.

சுரர்துதிபாதனே சுகுணவிநோதனே
சரசவல்லபைநாதனே அரிமருமகனே (வர)

அங்குசபாசனே அமலகணேசனே
துங்கஞானப்ரகாசனே அரிமருமகனே (வர)

சத்திகுமாரனே சதுர்ப்புஜவீரனே
முத்தையனுக்காதாரனே அரிமருமகனே (வர)

---

ஸ்லோகம்.

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்னவதனம் த்யாயேத் சர்வவிக்னோப சாந்தயே
அகஜானன பத்மார்க்கம் கஜானன அகர்நிசம்
அனேகதந்தம் பக்தானாம் ஏகதந்தமு பாஸ்மஹே.

---

விருத்தம்.

சீதகங்கையு லாவுசெஞ்சடை நாதனா ரருள்பாலகா
போதகங்களர் மாமுகம் பெறுபூத வீரகணாதிபா
வேதசாந்தர கீதமந்த்ர விநோத சண்முகசோதரா
ஆதியந்த மிலாதபுங்கவ நீதஞான க்ருபாகரா.





ஆஆ-என்னாச்சர்யம் யானிப்பொழுது வித்வாத்தனக்குழாங் கள் நிறைந்த இவ்வரங்கசபையின்கண் சிவபெருமான் புதல்வனாகிய கணாதனை ஸ்மரிக்கப்போகுந்தருணத்தில் யாவனோ வொருவன் விகாரரூபியா யிங்கு ப்ராப்தமாயிருக்கின்றானாதலின்; அவன் யாவனென்று விசாரிக்கின்றேனிப்போது.

{ சூத்திரதாருக்கும் விதூஷகனுக்குஞ் சம்பாஷணை. }

(சூத்திரதார் வசனம்.) அடா நீ யாவன்.

(விதூஷகன் வசனம்.) யான் விதூஷகன்.

(சூத்-வ-ம்.) ஆஆ-நீ விதூஷகனா சபாஷ் நன்றாயிருக்கின்றது பார் யான் சத்தியவாக்கு அரிச்சந்திர பூபதியின்து சரிதையை நடாத்த முயன்றேன் அதற்கு நவரசங்கள் வேண்டியிருப்பதால் என்னிடம் அஷ்டரசங்களிருக்கின்றன. ஹாஸ்யரசமொன்று மட்டு மில்லாதிருந்தமையால் அதனை நிறைவேற்றுவதற்கு ஒரு மகானுபாவனையுங் காணேனென்று வியாகூலமுற்று அதனை முன்னின்று முடித்துவைக்கும்படி கணேசக்கடவுளை ஸ்மரிக்கப்போகுந்தருணத்தில் என்றும் எனது நேத்திரத்திற்புலப்படாத ஹாஸ்ய புருஷனாகிய நீ (தேடப்போன மருந்து காலடியிலிருந்த) தென்பது போல அகஸ்மாத்தா யிங்கு ப்ராப்தமானது அக்காரணக் கடவுளின் செயலென்றே நன்குவிளங்கின்றது விதூஷகா.

(விதூ-வ-ம்.) நல்லது தாம் யாவர்.

(சூத்-வ-ம்.) யான் சூத்திரதார்.

(விதூ-வ-ம்.) ஆஆ-நீர் சூத்திரதாரா நல்லது பின்புறந்திரும்பும் பார்ப்போம்.

(சூத்-வ-ம்.) அடா நண்பா எதற்காகத் திரும்பச் சொல்கின்றனை.

(விதூ-வ-ம்.) உமது சூத்தில் ஏதாவது தாரிருக்கின்றதாவென்று பார்க்கத்தான்.

(சூத்-வ-ம்.) அடா விதூஷகா நீ ஹாஸ்யபுருஷனென்று இச்சபையாரனைவருக்கும் நன்றாய்த்தெரியும். ஆதலாற் காலதாமதமின்றிக் கோரியகாரியத்தைத் துவக்கஞ்செய்வோம் வருவாயாக.

## சூத்திரதார்சொல் சபைவணக்கம்.

ஸ்லோகம்.

சபாகல்பதரும்வந்தே வேதசாகோபஜீவிதம்
சாஸ்த்ரபுஷ்பசமாயுக்தம் வித்வத்ப்ரமரசோபிதம்

வசனம்.

வேதங்களாகிய கிளைகளுள்ளதும் சாஸ்திரங்களாகிய புஷ்பங்களோடு கூடினதும் வித்வான்களாகிய வண்டுகளாற் பிரகாசிக்கப்பெற்றதுமான சபையாகிய இக்கற்பகவிருக்ஷத்தை யானத்தியந்தப்ரீதியோடு நமஸ்கரிக்கின்றனன்.

வேதாகம புராணேதிகாச பாண்டித்தியமுடைத்தாகிய வித்வசிகாமணிகாள் பாருங்கள் சாக்ஷாத் பரப்ரம்ம வஸ்துவாகிய கடவுளின் கிருபானுக்கிரகத்தையுந் தங்களாசிர்வசன கடாக்ஷத்தையு முன்னிட்டு இந்தச் சதசின்கண் அயோத்திமாநகரத்திற் கரசனும் சக்கரவர்த்திகளி லொருவனும் சத்தியமே விரதமாகப் பூண்டு வையகத்தில் மெய்யனெனக் கீர்த்திபெற்றவனுமாகிய (சத்தியவாக்கு அரிச்சந்திரமகாராஜன்) திவ்ய சரிதையை நடாத்தத்துணிந்தேனாதலின் கற்றறியாச்சிற்றறிவுடைய யான் சொற்றிடும்பொருளிற் குற்றமுற்றாலும் முற்றிலுமறிந்த விற்பனர் யாரும் பிள்ளைச் சொல்லி னுள்ளப்பிழைபோ லெள்ளத்துணியாதென் வெள்ளைச் சொல்லி னுள்ளப்பொருளைக் கொள்ளக்கடவீர்களெனப் பிரார்த்திக்கின்றனன்.

ஹே நண்பர்காள் பாருங்கள்.

வெண்பா.

விக்கினத்தைப்போக்கும் விமலகணேசன்பதத்தை
முக்கியமாய்ப்போற்று முதல்.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது யாவரேனும் ஓர்காரியத்திற் பிரவேசிக்கும்போது அக்காரியம் நிர்விக்கினமாக முடிவுறும்பொருட்டு ப்ரதமத்தில் விக்கினேஸ்வரக் கடவுளைத் தியானித்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதால் யானிப்பொழுது நடத்தப்போகின்ற சரிதையானது யாதோரிடையூறின்றிச் சம்பூரணமாய் முற்றுப்பெறச்செய்யும்படி லம்போதரக்கடவுளை ஸ்மரிக்கப்போகின்றனன்.





அநுபல்லவி.

இத்தனைகாலம் இருந்தநற்கோலம்
எல்லாம்பஞ்சாய்ப்பறந்து போச்சே சுகம்
எல்லாம்பஞ்சாய்ப்பறந்து போச்சே துயராச்சே (புத்தி)

எப்போதுபார்ப்பேன் என்றுயர்தீர்ப்பேன்
இனிப்புவியிலிருக்க லாமோ நான்
இனிப்புவியிலிருக்க லாமோ வசைபோமோ (புத்தி)

அருளுள்ள துரையே அய்யோதிக்கிறையே
ஆசைக்கிசைந்தமணவாளா எந்தன்
ஆசைக்கிசைந்தமணவாளா மலர்த்தாளா (புத்தி)

(சந்-வ-ம்.) ஆஆ எனதாசைக் கிசைந்தநேசா நாமிதுகாலபர்யந்தம் அநுபவித்த சுகமெல்லாம் விதிப்பயனாற் பஞ்சாய்ப்பறந்து ஆளுக்கொருபக்கம் அலைந்து திரியும்படியான காலஞ்சம்பவித்ததே ஆஆ தங்கள் திருமுகத்தை யெப்போது கண்டு மனோசாஞ்சல்யத்தைத் தவிர்ப்பேன் ஆஆ தங்களைப்பிரிந்து நான் றனியாகப் பூமியிலிருக்கதென்ன பிரயோஜனம் ஆஆ உலகத்தார் நகைப்பார்களேஇதற்கென்செய்வேன் ஆஆ நாதா இனி யென்னவிதமாக வருந்தினும் உள்ள்துகுறையாது நல்லது அடியாள் நடந்து கொள்ள வேண்டிய புத்திமதிகளிருந்தாற் சொல்லுங்கள் ப்ரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

நீயறி யாதபுத்தி நிருபனு னறிந்ததுண்டோ
தூயவே தியரினோடு தோகையே கிரகஞ்சென்று
தாயமாய்ச் சொல்லும்வேலை சகலமுஞ் செய்துகொண்டு
சேயனைப் பாதுகாத்துச் சீர்மையாய் வாழ்வாய்பெண்ணே.

(அரி-வ-ம்.) ஆஆ ப்ராணசகி உனக்குத் தெரியாத புத்திமதியானென்ன சொல்லப் போகின்றேன் பார் நீ யிவ்வேதியர் வீட்டுக்குச்சென்று அவர்களிட்ட வேலைகளைக் கட்டளையா யெண்ணிச் செய்துகொண்டு அவர்கள் கொடுக்கும் போஜனத்தை யமிர்தமாயெண்ணிப் புசித்துக்கொண்டு உலகத்தார் நல்லவளென்று சொல்லும்படி நடந்துகொண்டு பாலகனைப் பரிபாலனஞ்செய்துகொண்டு

சுகமாய்க் காலங்கழித்தவா பெண்ணே யானினி வேறென்ன விசேஷஞ் சொல்லப் போகின்றேன்.

சந்திரமதி விருத்தம்.

நட்புள துரையேயெந்தன் நாயகா வெனக்குப்புத்தி
செப்பிய படியேயெந்தத் தினமுநா னடக்துகொள்வேன்
இப்பவே நானுமிந்த வெழிலுள சுதனுங்கூடி
விப்பிர ருடனேசெல்ல விடையது தருகுவீரே.

## சந்திரமதிசொல் தரு.

[ஜம்மதோஜைறை ஜானி ஜம்மதோஜைா]
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

பல்லவி.

போய்வருகிறேன் மன்னா போய்வருகிறேன்

அநுபல்லவி.

தாயகமாய்ச் சேயனோடு (போய்)

சரணம்.

சாமியின்னமும் என்னநேரினுஞ்
சத்தியந்தனைகாருமே
பூமிகூறுமே-புகழ் பூமிகூறுமே
தாயகமாய்ச் சேயனோடு (போய்)

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணவல்லபா தங்களுத்திரவின்படி அடியாள் பாலகனை யழைத்துக்கொண்டு மறையவருடன்சென்று கிரமமாய் நடந்துகொள்கின்றேன் தங்களுக்கினிமேலும் எவ்வித துன்பங்கள் நேரிட்டாலுஞ் சத்தியத்தைமட்டுங் கைவிடவேண்டாம் ப்ரபு சென்றுவருகின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

சத்தியந் தவறேன்பெண்ணே தைரிய மாகநானும்
இத்தனை நேரமாக விருந்தெதன் வாரேறுகெட்டுப்
புத்திய மயங்குதுன்னைப் போய்வரும் படிக்கிப்போது
உத்திர வளிக்கவென்று துள்ளமும் நடுங்குதேடி.



## அரிச்சந்திரன்சொல் தரு

[சாமிநீயென்னுடனே சரசமாடவாருமே]
என்ற ட்ராமாப்பதத்தின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

உன்னைப்பிரிந்தினிமேல் என்னமாய்நானிருப்பேன்

அநுபல்லவி.

அன்னமேசந்த்ரமதியே அழகுள்ள
அன்னமேசந்த்ரமதியே தனிமையாய் (உன்னை)

சரணங்கள்.

அன்னைபோலடிக்கடி அமுதுகொடுத்துநீயே
என்னைநன்றாய்வளர்த்தாயே குறைவின்றி
என்னைநன்றாய்வளர்த்தாயே தனிமையாய் (உன்னை)

பதமதுநோகுதென்றுற் பதறிநீதுடிப்பாயே
இதமுடன்கால்பிடிப்பாயே சுகமுற
இதமுடன்கால்பிடிப்பாயே தனிமையாய் (உன்னை)

ஆசைமன்னவாவென்று அன்புடன்வருவாயே
நேசமுத்தந்தருவாயே கன்னத்தில்
நேசமுத்தந்தருவாயே தனிமையாய் (உன்னை)

கானமயிலேயுன்னைக் கானுவதெக்காலமோ
ஞானமுனிவர்ஜாலமோ இதுவுமே
ஞானமுனிவர்ஜாலமோ தனிமையாய் (உன்னை)

(அரி-வ-ம்.) ஆஆ காதலி யான் சத்தியந்தவறுவேனென்று கொஞ்சமேனும் நினைக்கவேண்டாம் உன்னைப்போகும்படி சொல்வதற்கு இப்போது மனமொப்பவில்லையே ஆஆ எனக்கநேக பணிவிடைத்துத் தேகபோஷணைசெய்து வருவாயே ஆஆ கால்நோகுதென்றவுடன் பதங்களைப்பிடித்துச் சாந்திசெய்வாயே ஆஆ அடிக்கடி மன்னவா மன்னவாவென்று வந்து கன்னத்தில் முத்தமிட்டுச் சந்தோஷிக்கச்செய்வாயே ஆஆ யானுன்னை யெவ்விதம் பிரிந்திருப்பேன் இனிமேலெப்போ துன்முகத்தைப்பார்ப்பேன் ஆஆ இதுவெல்லாங் கோசிகமுனிவர் மாய்கையோ யாதோ தெரியவில்லையே இனியென்செய்வேன் பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

நலிவிதிப் பயனைப்போலே சகலமு முடியுமன்றி
மலைவுறு விதிநால்வந்த வல்வினை யகன்றுபோமோ
கலைவலர் புகழுமன்னா கவலைகொண் டுளமும்வாடி
நிலைகுலை யாமலிங்கே நில்லும்யான் செல்லுவேனே.

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணகாந்தா நாம் வியாகுலப்படுவதினால் நமக்கு நேர்ந்த விதிப்பயன் மாறிவிடுமா ஒருக்காலுமில்லை தாங்கள் வீணாக மனக்கவலைகொண்டு மயங்கவேண்டாம் யான் சென்று வருகின்றேன் விடைதாருங்கள் ப்ரபு.

(அரி-வ-ம்) ஆஹா வாஸ்தவந்தான் நல்லது சென்றுவாபெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

அரிவைநான் மனத்தைக்கெட்டி யாக்கிடத் துணிந்திட்டாலும்
பரிவுடன் முன்னால்நாமும் பக்குவத் துடனிருந்த
உரிமையை யெண்ணியெண்ணி யுள்ளமுங் கலங்குதேயும்மைப்
பிரியவொண் ணாமற்காலைப் பின்னுமென் செய்வேன்மன்னா.

சந்திரமதிசொல் தரு.

[மன்னன்வரக்காணேனே யென்னநான்செய்குவேன்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

காவலனேபோவோமென்றாற்
காணுமிதோபின்னுதையா (கா)

அநுபல்லவி.

ஆவலும்டம்பீதினிலே அடியாட்குமன்னவனையா (காவ)

சரணம்.

எப்படியுமைவிடுப்பேன் ஏகிவரையடுப்பேன்
ஒப்பனில்லையெந்தன்மனம் விப்பிரகோபந்தனைக் (காவ)



(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணகாந்தா தங்களை விடுத்துச் செல்லலாமென்று மனதை யோர்மைப்படுத்திப் பார்த்தாலும் நாமிருந்த சுகானுபவங்களை யுன்னும்பொழுது எனது காலானது பின்னிக்கொள்கின்றதே அங்ஙனமிருக்கத் தங்களைவிடுத்து எவ்விதம் இவ்வேதியருடன் செல்வேன் ஆஆ தங்களைப்பிரியவும் இவ்விப்பிரரைப் பந்துக்களாயடுக்கவுமா நேர்ந்தது ஆஆ இதற்கென்செய்வேன் ப்ரபு.

(அரி-வ-ம்.) ஆஆ ப்ராணசகி பார்.

வெண்பா.

ஒன்றைநினைக்கி னதுவொழிந்திட்டொன்றாகும்
அன்றியதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாதமுன்வந்து நிற்பினுநிற்கும்
எனையாளு மீசன்செயல்.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது அதாவது ஒருபொருளையடையநினைத்தால் அப்பொருள் கிடையாமல் வேறொருபொருட் கிடைத்தாலுங் கிடைக்குமென்றும் அப்படியல்லாமல் நினைத்த பொருளே கிடைத்தாலுங் கிடைக்குமென்றும் நினையாதபொருள் தானாகவே வாய்த்தாலும் வாய்க்குமென்றும் இவையெல்லாம் ஈசன்செயலென்றும் நீதிநூல்கள் முறையிடுகின்றமையால் விப்பிருத்தடிமைப்பட்டதுங் கடவுள்செயலேயன்றி வேறன்று ஆதலால் நீ பலவித விபரீதங்களை யெண்ணாமல் மறையவருடன் சென்று வருவாயாக.

(சந்-வ-ம்.) ஆனைப்படியே சென்றுவருகின்றேன் இதோ வந்தனம்புரிகின்றேன் ப்ராணநாத்.

(அரி-வ-ம்.) கல்யாண் ப்ராணசகி சுகமாய்ச்சென்றுவா.

தேவதாசன் விருத்தம்.

விந்தையா யென்னையெந்தை மேவியு மடியில்வைத்துச்
சுந்தர முத்தமிட்டுச் சுவைமிகு லட்டுமிட்டாய்
தந்துநல் லருமையாகச் சந்ததம் வளர்த்துவந்த
எந்தையே யுமைப்பிரிந்தே யெப்படிச் செல்வேனையா.

## தேவதாசன்சொல் தரு.

[சாமிநீவாடா இன்பந்தாடா ஜாலமோடா என்னடா]

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

தந்தையேயும்மைத் தனிமையாய்
விட்டுவிட்டு என்செய்வேன்
தந்தையேயும்மை

அநுபல்லவி.

எந்தனைக்காப்பாற்றினீர் இதுவரையும்போற்றினீர்
வந்தநீவினையினாலே வாடிவிற்கிறீர்மண்மேலே (தந்தை)

எங்களைக்கைவிட்டீரே இடஞ்சல்மிகப்பட்டீரே
தங்கள்முகமெப்பப்பார்ப்பேன் சஞ்சலங்களெப்பதீர்ப்பேன் ()

நான்பிறந்தநேரமோ நடக்கும்விதிசாரமோ
மான்பொருதுங்கையன்செய்யும் மாயமோவிதுஞாயமோ ()

---

(தேவ-வ-ம்.) ஆஆ பிதா தங்களைத் தனிமையாகவிடுத்து யானெவ்விதம்பிரிந்துசெல்வேன் ஆஆ என்னை யருமையாயீன்றுபெருமையாய்ப்பாராட்டி வளர்த்துவந்தீர்களேஆஆ நீவினைப்பயனுல் என்னையும் என்மாதாவையும்வேதியர்க்குவிற்றுத் தனிமையாய் நின்று தவிக்கலானீர்களே ஆஆ தங்கள் முகாரவிந்தத்தை யென்றைக்குக்கண்டு என் சஞ்சலத்தை மாற்றுவேன் இவ்விபரீதமெல்லாம் யான் ஜென்மமெடுத்தநேரமோ அல்லது விதியின்சாரமோ அல்லது கடவுளின் சோதமோ யாதோ தெரியவில்லையே ஆஆ யான் தங்களைவிடுத்து எவ்விதமாய்ச்செல்வேன் பிதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

மகனேயென் கண்ணே ராஜமாமணியே நானுன்னைச்
சுகமுடன் வளர்த்துமெந்தன் சூரிய குலத்தைத்தாங்கும்
மகிமையில் லாமலிந்த மறையவர்க் கடிமையாகப்
பகலன்றுன் விதித்திட்டேனே பாவிநா னறியேனப்பா.

180-355



## அரிச்சந்திரன்சொல் தரு.

[ராஜாஜிமைகாபைநோங்கி ஆசமானிஜோவியா]

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

இராகம்-தேசிங்குதோடி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

பல்லவி.

பாலகாவுனைப்பிரியப் பாபமென்னசெய்தேனோடா

அநுபல்லவி.

சீல்மறையோர்க்குவிற்றுச் சிந்தையில்மயக்கமுற்றுப் (பா)

சரணங்கள்.

அடிக்கடிவருவாயே அன்பாய்முத்தந்தருவாயே
படிக்கவைத்துப்பார்த்தேனோபாலையவ்குறைதீர்த்தேனோ (பா)

இப்படிவருகுமென்று சொற்பனமுங்காணேனென்றும்
கற்பனைமுனிசதியோ கடவுளிட்டவிதியோ (பா)

என்றுனைநான்காணுவேண்டா இன்பமதுபூணுவேண்டா
கன்றிழந்தமான்போல்நானே நின்றுதவிக்கலானேனே (பா)

---

(அரி-வ-ம்.) ஆஆ வத்சா உன்னைக்கூடப் பிரிந்திருக்கும்படியென்னபாபஞ்செய்தேனோ தெரியவில்லையே ஆஆ எனதுசூரியகுலமானது உன்னுற்றழைத்தோங்குமென்றெண்ணியிருக்க வேதியர்க்கடிமையாக நேரிட்டது விஸ்வாமித்திரர் வஞ்சனையோ அல்லது கடவுளின் செயலோ தெரியவில்லையே ஆஆ உன்னைப் பள்ளியிற் படிக்கவைத்தாவது இளவரசுப்பட்டாபிஷேகஞ்செய்தாவது கண்ணுற்பார்க்கக் கொடுத்துவைக்காத பாவியானேனே ஆஆ அடிக்கடிவந்து அன்பான முத்தந்தருவாயே ஆஆ இதையெல்லாமிழந்துதனிமையாய்நின்று தவிக்கும்படி நேரிட்டதே ஆஆ கண்மணி இதற்கென்னடாசெய்வேன்.

(தேவ-வ-ம்.) ஆஆ பிதா (வரும்விதிரத்தங்கா) தென்பதுபோல யருவதெல்லாம் வந்துதான்தீரும் அவையெல்லாம் அனுபவிக்கத்தானேவேண்டும் அதற்காக வியாகூலப்படுவதி லென்னபிரயோஜனம் பிதா.

(அரி-வ-ம்.) அடா கண்மணி நீ பாஷிப்பது வாஸ்தவந்தான் நீ யாதொரு கவலையுமின்றி உன் மாதாவுடன் சென்றுவா வத்சா.

(தேவ-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றேன் யானுங் நடந்துகொள்ளவேண்டிய புத்திமதிகள் ஏதாவதிருந்தா சொல்லுங்கள் பிதா.

(அரி-வ-ம்.) அடா கண்மணி நீ மிகுந்த புத்திசாலியானதினி மித்தம் உனக்கு விசேஷமாய்ச் சொல்லவேண்டுவதில்லை ஆகிலும் பார்.

வெண்பா.

இப்புதல்வனைப்பெறுதற் கென்னோற்றான்றந்தையென்று
செப்புதற்குத்தக்கவனே செய்.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது சற்குணமுள்ள இந்தப்பிள்ளையைப் பெறுதற்கு இவன் றகப்பன் என்னென்ன தவங்களைச் செய்தானோவென்று உலகத்தார் கொண்டாடும்படி நடந்து கொள்பவனே புத்திரனென்று முன்னூல்கள் முறையிடுவதால் நீயும் அவ்வழியில் நடந்து நற்பெயரெடுத்துக்கொண்டு வேதியர் சொற்படி வேலைகளைச் செய்துகொண்டு சுகமாய்க் காலங்கழிப்பாய் கண்மணி.

(தேவ-வ-ம்.) அப்படியே நடந்து கொள்கின்றேன் பிதா விடைதாருங்கள்.

(அரி-வ-ம்) சுகம்பெற்றுச் சென்றுவா தனையா.

(தேவ-வ-ம்.) இதோ வந்தனம்புரிகின்றேன்.

(அரி-வ-ம்.) கல்யாண் வத்சா.

சந்திரமதி விருத்தம்.

மந்திரி யும்மைநம்பி மன்னவன் றனைவிடுத்து
அந்தணர் கிரகஞ்செல்ல யாங்களும் விடையேபெற்றோம்
எந்தவே ளையிலுமநீரே யிளையரசி யாமற்காத்து
வந்திடுந் துன்பமெல்லாம் மாற்றுதல் கடமைகண்டீர்.

(சந்-வ-ம்.) ஆஆ ப்ரதான் எனது பர்த்தாவை உமக்கடைக்கலமாக ஒப்பிவைத்துப் போகின்றோமாதலால் நீர் சதாவும் இவரருகிலிருந்து வேண்டிய உபசாரணைசெய்துகொண்டு யாதொரு தீங்கும் நேரிடாமற் பாதுகாத்து வரவேண்டும் ப்ரதான்.



சத்தியகீர்த்தி விருத்தம்.

அன்னையே யரசன்றேவி யருமைமா தாவேயிந்த
மன்னனைப் பற்றியுங்கள் மனதினிற் கவலைவேண்டாம்
நன்னக ரசுநீங்கி நரைத்தலை மறையோர்வீட்டிற்
சின்னவே லைகளைச்செய்யச் செல்வதே விசனமம்மா.

(சத்-வ-ம்.) ஆஆ தாயே நீங்கள் அரசனைப்பற்றி யாதொரு கவலைப்படவேண்டாம் யான் பாதுகாத்துக்கொள்கின்றேன் தாங்கள் அனேகந் தோழிமாதர்களை வைத்து ஏவற்பணிவிடை வேலைகள் வாங்கிக்கொண்டு சுகமாய் அரசாக்ஷிபுரிந்ததுபோய் வேதியர் வீட்டிற் சிற்றெழில்செய்யப்போவதைப்பற்றி மிகுந்த வியாகூலமாயிருக்கின்றதே இதற்கென்செய்வேனம்மா.

(சந்-வ-ம்.) ஆஆ ப்ரதான் காலவித்தியாசத்திற்கு நாமென்ன செய்யலாம் நீரதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம் யாங்கள் சென்றுவருகின்றோம் விடைதாரும் ப்ரதான்.

(சத்-வ-ம்.) ஆனலப்படியே சென்றுவாருங்களம்மா.

(தேவ-வ-ம்.) யானுஞ் சென்றுவருகின்றேன் ப்ரதான்.

(சத்-வ-ம்.) அப்படியே சென்றுவா கண்மணி.

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணநாத சென்றுவரட்டுமாவென்ன.

(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவா ப்ராணசகி.

காலகண்டையர் விருத்தம்.

காவலா நீயுங்கெட்டிக் காரனா யிருக்கின்றாயே
போயென வார்த்தையொன்றைப் புகல்வதை விட்டுவிட்டுச்
சாவகா சமதாய்ச்சம்பா ஷணைகள்செய் கின்றீர்விற்ற
ஆவினிற் பாற்கறந்தே யருந்திட வினையாருண்டோ.

(கால-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நீ கெட்டிக்காரன்போலிருக்கின்றதே பார் போய்வாவென்று ஒருவார்த்தைதானே சொல்லவேண்டும் அதைவிடுத்து வெகுநேரம் என்னென்னவோ சம்பாஷித்துக்கொண்டிருக்கின்றீர்களே விற்றமாட்டிற் பாற்கறந்து குடிக்கலாமென்று பார்க்கின்றனையோ.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி பிரிவாற்றாமையைக்குறித்து வியாகூலப்பட்டுக்கொண்டிருந்ததேயன்றி வேறு விசேஷமில்லை ப்ரபு.

(கால-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நீ நன்றாய்ப்பிழைத்துக் கெட்டவன்றான் அதற்கு மோசமில்லை நோக்குப் பெண்டுபிள்ளை பிரிவதைப்பற்றி விசனம், நேக்கு நேரமானதைப்பற்றி ஆம்பிடையான் தெண்டனைகொடுப்பானென்று விசனம். இதற்கென்செய்கின்றது.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி உலகத்திற் சுகமுந்துக்கமுங் கலந்துகொண்டுதானிருக்கின்றது அதற்கென்னசெய்யலாம் ப்ரபு.

(கால-வ-ம்.) சரிசரி எருக்கொடுத்த மாட்டுக்குக் கட்டுத்துறையிற்ஜோலியென்ன விருக்கின்றது ஆகையால் இனியுமைக்கூட மேலும் நிற்கமாட்டேன் இதோ இவர்களை யிழுத்துக்கொண்டு செல்கின்றேன்.

---

பொது விருத்தம்.

மாதவ மறையோர்க்க மங்கைமைந் தனைக்கைப்பற்றி
வீதியி லிழுத்துக்கொண்டு வேகமாய்ச் செல்லும்போது
காதல்மா தரசிபுள்ளங் கலங்கிமெள னமதாய்ச்செல்லுஞ்
சேதியை யரசன்கண்டு தியங்கியே புலம்புவானே.

---

அரிச்சந்திரன் விருத்தம்.

வாசமு மலரும்போலே மருவிநா மிதுநாள்மட்டும்
நேசமா யிருந்ததெல்லாம் நீங்கிப் போதிவீர்துப்
பூசுரர் பிடித்துத்தள்ளப் புத்திகெட் டெத்தனோடு
பேசிட வகையில்லாமற் பிரிந்திட விதியோபெண்ணே.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

[அடியனைமெய்யெனத் தனியாய்விட்ட மான்கண்ணே]
என்ற ப்ராயாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.
பல்லவி.
சந்த்ரமதியேயென்னை விட்டுவிட்டுப் போராயோடி.



அநுபல்லவி

போராயோடி-கண்ணாற் பாராயோடி (சந்)

சரணம்.

பிரியவந்த-விதி யறியேனடி-இளம்
பெண்ணே-புனை யெண்ணிமனம் புண்ணாகுதே அடி
போராயோடி-கண்ணாற பாராயோடி (சந்)

---

(அரி-வ-ம்.) ஆஆ சந்திரமதி அந்தணர் கரத்தைப்பற்றி யிழுத்தவுடனே (மௌனம்கலககாஸ்தி) யென்பதுபோல் யாதொரு மறுமொழியும் புகலாது செல்கின்றனையே அந்தோ இப்படியவ்வேடாய்ப் பிரியும்படி ப்ரம்மகற்பனை யேற்பட்டதோ யாதோ ஒன்றுமறியேனே ஆஆ ப்ராணகாந்தி உன்னையுஞ் சேயனையும் விடுத்து எவ்விதமாக ஜீவித்திருக்கப்போகின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

சங்கரா கைலைவாசா சம்புவே யுமையாள்நேசா
பொங்கர வணிந்தஈசா புனிதனி லென்னைப்போலே
மங்கை முடனேவாழ்ந்து வாழ்வையு மினிவிசேயன்
றங்களை யிழந்துவிட்டுத் தனிமையா யிருப்பாருண்டோ.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

[ஐயோநானொரு பெண்பிறந்ததைை
யாருடன்சொல்வேனம்மா திரிச்சடையே]
என்ற இராமநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.
கண்ணிகள்.

ஐயோ நான்தனைப்போலே வெய்யகொடும்பாவிகள்
அவனியில்யாருமுண்டோ சிவசங்கரா (ஐயோ)

தையல்சுதனுமென்னைக் கைதவறவிடுத்து
ஐயருடன்சென்றாரே சிவசங்கரா (ஐயோ).

தலைவிதியையெவருந் தடுக்கமுடியாதென்ற
சாஸ்திரம்நிசமாச்சே சிவசங்கரா (ஐயோ).

விலைக்குப்பெண்டுபிள்ளையை விற்கும்படியாய்வந்த
விதிவசமானறியேன் சிவசங்கரா (ஐயோ)

தாங்குவான்பிள்ளையென்று சந்தோஷமாய்வளர்த்துத்
தரணியோர்பலன்காண்பார் சிவசங்கரா (ஐயோ)

வாங்கினகடனுக்கு மைந்தன்மனைவிதனை
மறையவர்க்குவிற்றேனே சிவசங்கரா (ஐயோ)

மைந்தனையறியழ மனைவிசுதறியழ
மரம்போலானிருந்தேன் சிவசங்கரா (ஐயோ)

எந்தப்பிறப்பினினி யிவர்களுடனேகூடி
ஏகபோகமாய்வாழ்வேன் சிவசங்கரா (ஐயோ)

(அரி-வ-ம்.) ஆஆ ஜெகதீசா என்போன்ற கொடும்பாவிகள் யாவரிருக்கின்றார்கள் ஆஆ மனைவிமைந்தனு மென்னைத் தனிமையாய்விடுத்துச் சென்றுவிட்டார்களே ஆஆ விதிவசத்தைத் தவிர்க்கமுடியாதென்று சொன்ன பழமொழி கரதலாமலகம் போற் பலித்துவிட்டதே ஆஆ பெண்டு பிள்ளைகளைவிற்க நேரிடுமென்று சொற்பனங்கூடக் காணவில்லையே ஆஆ பிள்ளையைப்பெற்ற மாதாபிதாக்கள் அவனாற் சுகம்பெறுவது வழக்கமாயிருக்க யான் கடனுக்காக மனைவிமைந்தனை விற்றுக்கொடுத்து வெறுங்கையனாகிவிட்டேனே ஆஆ சேயொருபக்கந் தாயொருபக்கங்கதரியழக்கண்ணாற்பார்த்து மரம்போல் நிற்கும்படியான ப்ரம்மை கொண்டுவிட்டதே ஆஆ விஸ்வேசா இதுவும் உனது திருவருள்தானே இனியென்செய்வேன்.

சத்தியகீர்த்தி விருத்தம்.

கனத்துட னிருந்துகால கதியினால் நகரம்நாடு
தனத்துடன் பெண்டுபிள்ளை சகலமு மிழந்ததெல்லாம்
மனத்தினி லறிந்திருந்தும் மறுபடி யதனைநெஞ்சில்
நினைத்துநீர் மனதுசோர நீதியோ மறப்பீர்சாமி.

## சத்தியகீர்த்திசொல்தரு.

[சாமி என்னடாதாமதம்நீசெய்கிறாய்]

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

துரை-மன்னவா என்னநீர்மனஞ் சோருகிறீர்





சரணம்.

சத்தியங்கைத விர்த்திடாமலே
தலைவிமைந்தனைவிற்றீரே
சித்தமும்-ராஜா சித்தமும்-மன்னு
சித்தமும்-சாமி சித்தமும்-துரையே
சித்தமும் மெத்தவுந்
திகைத்துவ்யாகூலமுற்றீரோ-துரை (மன்ன)

(சத்-வ-ம்) ஆஆ மகராஜ் தாங்கள் சகலமுந்தெரிந்திருந்தும் இப்படி மனஞ்சோரலாமாப்ரபு பாருங்கள் சத்தியத்தை நிலைநிறுத்தும் பொருட்டு ஒருபொய்சொல்லக்கூடாமற் சகலசம்பத்தையுமிழந்து பெண்ஜாதி பிள்ளைகளையும்விற்றுக் கடனைத்தீர்த்தீர்களே அதினாற் சத்தியமுங் கீர்த்தியும் நிலைத்துவிட்டதன்றோ நமது காயமும் பெண்டுபிள்ளையும் நிலைநிற்கப்போகின்றதா ஒருக்காலுமில்லையாதலால் இனிமே லவ்வித ஞாபகங்களை யெல்லாமறந்து மனதைத்திடப்படுத்திக்கொள்ளுங்கள் மகராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

வண்மைசேர் மந்த்ரிநல்ல மதிவல மிகுந்தநண்பா
உண்மைதா னீருமிப்போ துரைத்தது மெய்யேயாகும்
பெண்மணி தனையுமெந்தன் பிரபலத் தவத்தால்வந்த
கண்மணி தனையுமெந்தக் காலம்நான் பார்ப்பேனையா.

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரதான் நீர்பாஷிப்பது வாஸ்தவந்தான் ஆனாற் சற்குணவதியாகிய சந்திரமதியையும் அருமைக்கண்மணியான தேவதாசனையும் இனியெந்தயுகத்திற்கண்டு முன்போல சேர்ந்துவாழ்வேன் ப்ரதான்.

(சத்-வ-ம்.) ஆஆ மகராஜ் எல்லாந் தெய்வசங்கற்பத்தால் நடக்குமேயன்றி நம்மால் ஒன்றும் நடவாது மகராஜ் சும்மாவிருங்கள்.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

நல்லதடா வரிச்சந்த்ரா வுந்தன்செய்கை
நன்றாகத் தெரிந்துகொண்டேன் மனமுங்கொண்ட

மெல்லியுடன் பிள்ளைதனை விற்பேனென்றால்
வேதமுனிக் குள்ளபொன்னை வேண்டாமென்று
சொல்லிவிடுவே னென்றேயிவ் வேஷம்போட்டாய்
துயருறுவோன் போற்பின்னும் பசப்புகின்றாய்
சல்லிவிட மாட்டேனோர் பொய்யைமட்டுஞ்
சாற்றியிருந் தாற்றுயர்ந் தோற்றிடாதே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா நீசெய்த தந்திரமெல்லாம் நேக்கு நன்னாய்த்தெரிந்துடுத்தே பார் பெண்டுபிள்ளைகளை விற்கின்றேனென்று பாசாங்குபோட்டால் நான் ரொக்கத்தை விட்டுடுவேனென்று வேஷம்போட்டனை இப்பவும் விசனப்படுபவன் போல பாவனைகாட்டுகின்றனை அதினால் ஒருகாசைக்கூடவிடமாட்டேன் ஆனால் பொன்கொடுக்கவேண்டியதில்லையென்று முன்னால் ஒரு பொய்சொல்லியிருப்பாயாகில் நோக்கிந்தத்துக்கமெல்லாஞ் சம்பவித்திருக்குமோ அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

பொற்பனைக் கொடுப்பதற்குப் புரவல னஞ்சவேனோ
விற்பன மிருந்தால்ல வேதிய ராயிருந்தால்
சற்பனை முனிவர்க்காகத் தாசராய் வந்ததாலே
கற்பனை யாகவார்த்தை கழறுகின் றீரோசாமி.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[விரசமானவார்த்தைவேண்டாம் விட்டுவிடடா]
என்றட்டாமாப்பதத்தின் வர்னமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அப்படியல்ல சாமிசாட்சும் அறைகுவேன்கேளும்

அநுபல்லவி.

இப்படியுங் கற்பனையும்
எற்பட்டதென்றே
பற்பலவாய் பொய்பன்கொண்டு
பதறினேனின்றே (அப்)



மறையவர்பாற் றிரவியத்தை
வாங்கிக்கொண்டீரே
இறைவனைந்தன் பெருமையெல்லாம்
இன்றுகண்டீரே (அப்)

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி அப்படியன்று பாருங்கள் இப்படியுந் தலைவிதிநேர்ந்ததாவென்று வியாகூலப்பட்டேயன்றிப் பொன்கொடாமற் றப்பித்துக்கொள்ளலாமென்றெண்ணவில்லையாதலால் என்து பெண்டுபிள்ளையைக்கூடப்பெரிதாயெண்ணாமல் வேதியர்க்குவிற்றுத் தங்களுக்குச் சேரவேண்டியகடன்பொன்னைக் கொடுக்கும்படி செய்ததினால் எனது சத்தியத்தின்பெருமையிப்போது தங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கக்கூடும் ப்ரபு.

நக்ஷத்திரத்தாகர் விருத்தம்.

முனிக்குள கடனையன்றோ முதல்வனே தீர்த்தாய்நானுந்
தனிக்கவே பெண்டுபிள்ளை தனைத்தனி யாகவிட்டுப்
பனிக்குளும் வெயிலினும்புண் பட்டுன துடனேவந்தேன்
எனக்குள தாருப்பொன்னு மீய்ந்திடிற் செல்லுவேனே.

(நக்ஷ-வ-ம்.) அடாய்அரிச்சந்திரா நல்லவார்த்தைபாஷித்தனை நான்றாசனன்னோநேக்கேது கடன்செல்லவேண்டுவதுபார்விஸ்வாமித்திரருக்குச் செல்லவேண்டிய பொன்மட்டுங் கிடைத்தது அதற்குத் தடையில்லை நான் பெண்டுபிள்ளைகளை யொண்டியாய் விட்டுட்டு இத்தனை தினமாகப் பனியென்றும் வெய்யிலென்றும் பாராமல் நீ வரச்சொன்ன விடமெல்லாம் வந்து நீ சொன்னபடியெல்லாங்கேட்டு உன்பின்னே திரிந்தேனே என்னை யின்னும் ஏன் வீணாக வெள்ளே காக்கவைத்திருக்கின்றனை நேக்குள்ள கூலியையுங் கொடுத்துவிடு யான் சென்றுவிடுகின்றேன்.

(அரி-வ-ம்.) ஆஆ அப்படியா இதுவுந் தெய்வகற்பனை தான் போலிருக்கின்றது என்செய்கின்றது நல்லது தங்களுக்குக்கொடுக்கவேண்டிய கூலி யிவ்வளவென்று சொன்னால் அதையுங் கொடுத்துவிடுகின்றேன் ப்ரபு.

(நக்ஷ வ-ம்.) வேறு அரிச்சந்திரா உன்னுடைய சொத்து நேக்கதிகம் வேண்டாம் நேக்குக் கிரமப்படி பதினாயிரம்பொன் றாகு

வரவேண்டும் அதை மட்டுங் கொடுத்துவிட்டால் யான் சென்று விடுவே னரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) அப்படியே யென்னை விற்றுத்தக்கதுங் கடனைத் தீர்க்கும்படி செய்கின்றேன் ஸ்வாமி.

(நக்ஷ-வ-ம்.) எப்படியாகிலுஞ்சரி சீக்கிரம் பொன் வந்து சேர்ந்தாற் போருமானது.

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரி வருவதெல்லாம் வந்துதான் தீருமென்னை
விந்தைசேர் இந்தவூரில் விலையது கூறிந்தானே
எந்தவர் ணத்தார்க்கேனு மிசைந்துவிற் பனையுஞ்செய்து
அந்தணர் தருகுப்பொன்னை யளித்துமீ ளுவப்புவீரோ

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரதான் வருகின்றகர்மம் வழியிலே கிற்கு மா வந்ததெல்லாம் அநுபவிக்கத்தானே வேண்டுவதாயிருக்கின்றது இதற்கென்செய்கின்றது நல்லது என்னை யிக்காசிமாநகரில் விலைகூறி எந்தவர்ணத்தார்பொன் கொடுப்பதாயிருந்தாலும் தடையன்றி விற்று இத்தாசர்க்குரிய கடனைத் தீர்த்தனுப்பிவைப்பும் ப்ரதான்.

சத்தியகீர்த்தி விருத்தம்.

பற்பல தேசராஜர் பணிந்துகுற் றேவல்செய்யப்
பெட்புட னரசியற்றும் பெருமைமெய் யிழந்தவேதன்
கற்பனைப் படியேயிந்தக் காசியோர்க் கடிமையாக
எப்படி யும்மைவிற்க வென்மனந் துணியுமன்றே.

*சத்தியகீர்த்திசொல் தரு.

[அடிமைமாலுன்னடைக்கலமினி யாகிலுமெனை யாளையா]

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்னவாவுமை இன்னகரிலே
என்னமாய்விலைசெய்குவேன்

186



அன்னியரிடம் பொன்னுக்குவிற்று
அடியேனெவ்விதமுய்குவேன் (மன்)

தந்தைநீயென்றே சிந்தையிலென்றுஞ்
சத்தியமதாய்நம்பினேன்
இந்தவாய்மொழி வந்ததாலேயோ
எந்தன்மனமும்வெம்பினேன் (மன்)

உள்ளநாள்வரை பிள்ளைபோலெனை
ஊட்டிவளர்த்தீரையனே
எள்ளளவுமீர் கள்ளமின்றியே
என்னைவிற்றிடுமெய்யனே (மன்)

விற்றுவேதியர்க் குற்றகடனை
வேந்தனேயிப்பதீருமே
சற்றுமினிமேற் சொற்றவரிடாச்
சத்தியந்தனக்காருமே (மன்)

(சத்-வ-ம்.) ஆஆ மகாராஜ் பாருங்கள் தாங்களெனக்குத் தந்தைபோலவுமியான் றங்களுக்குப்பிள்ளைபோலவுமிருந்து இதுநாள் பர்யந்தந்தங்களன்னத்தையுண்டுவளர்ந்தசேயனுகவிருக்கிப்போது தங்களை அன்னியருக்கு விலைசெய்வதற்கு என்மனஞ் சம்மதிக்குமா மகாராஜ் அவ்வார்த்தையைக்கேட்டவுடனே யென்மனம் பதறுகின்றதே ஆஆ தேவரீர் வளர்த்திய நாய்க்குட்டியாகிய என்னை விற்று இத்தாசருக்குரிய கடனைத்தீர்த்துச் சத்தியத்தை நிலைநிறுத்துங்கள் மகாராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

சிலைநுதல் மனைவியோடு சேயனை விற்றதெல்லாந்
தலைவிதிப் பயனேயாகுந் தாசரின் பொன்னுக்குமமை
விலையது செய்வேனுைல் மேதினி யோர்மெச்சுந்
நிலையது குலைபுமந்த்ரி நிருபனு னதற்கொவ்வேனே.

அரிச்சந்திரன்சொல் தரு

[மன்னன்வாக்காணேனெயன்னகான்செய்குவேன்]

என்ற டார்மாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

கவலைகொள்ளாதிர் மந்த்ரி
கடன்றனைத்திருந் தந்த்ரி (க)

அநுபல்லவி.

அவரவர்செய்தகர்மம் அனுபவிப்பதேதர்மம் (கவ)

சரணம்.

நான்பட்டகடனுக்கு நன்பாநீருட்படலாமோ
மேன்பட்டதைநினைந்தால், விதியும்விலகிப்போமோ (கவ)

---

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரதான் நாமுன்னிருந்த மேன்மையை நினைத்துக் கவலைப்படுகின்றீரே அதனால் விதிவசமாறப்போகின்றதா ஒருக்காலுமில்லை பாரும் அவரவர்செய்த நன்மைதீமைகளை யவர்களே யனுபவிக்கவேண்டும் அங்ஙனமிருக்க யான்பட்ட கடனுக்கு உம்மைவிற்பது ந்யாயவிரோதமாகையால் என்வார்த்தையைத் தவிர்க்காமல் என்னை விற்றுத் தாகர்கடனைத்தீர்த்து என் வாக்கை நிலைநிறுத்தும் ப்ரதான்.

(சத்-வ-ம்.) ஆனலப்படியே செய்கின்றேன் மகராஜ்.

நக்ஷத்திரத்தாகர் விருத்தம்.

புத்தியுள்ள மந்திரியே சொல்லக்கேளாய்
புரவலனைப் பிடித்தபித்து முன்னைத்தானே
நத்திவந்து பிடித்துக்கொண் டதுபோல்நேக்கு
நன்றாகத் தெரியுதடா இவனும்வீணாய்ச்
சத்தியத்தைக் காப்பாற்றி யாவதென்ன
சாயுஜ்யம் பெறப்போகின் றானுஇல்லை
இத்ததிவாழ்க் கையைமீட்டித் தருவேன்கூலி
யில்லையென்று இனுமோர்பொய் சொல்லச்செய்நீய,

---



(நக்ஷ-வ-ம்.) அடாய் சத்தியகிர்த்தி இவ்வரிச்சந்திரனுக்குப் பிடித்த பைத்தியம்நேக்கும் பிடித்துக்கொண்டதுபோலிருக்கின்றதே இவன் சத்தியத்தைக் காப்பாற்றுவதினால் மோக்ஷமடையப்போகின்றானா பார் எனக்குரிய தாருப்பொன்னையாவது இல்லையென்று ரகஸ்யமாய் ஒரு பொய்சொல்லும்படி செய்வாயானால் முன்போல சகல சம்பத்தையு மீட்டித்தருவேன் எதோ சொல்லிச் சரிப்படுத்து பார்ப்போம்.

சத்தியகிர்த்தி விருத்தம்.

முன்னமே யுரைத்துவிட்ட மொழிக்கெதி ரிடையாயிந்த
மன்னவன் வேறுவார்த்தை வழுத்திடும் வழக்கமுண்டோ
சொன்னசொற் படியேயிந்தத் தோன்றலை விலைக்குவிற்றுப்
பொன்னது கொடுப்பேன்வீணாய்ப் புகன்றிட வேண்டாஞ்சாமி.

---

(சத்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி இறைவன் சொன்ன திருவாக்கு மறுவாக்காகப் போகின்றதா ஒருக்காலுமில்லை தாங்களேன் வீண் வார்த்தை பாவிக்கின்றீர்கள் இதோ இவனைவிற்றுத் தங்கள்கடனைத் தீர்த்துவிடுகின்றேன் ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) அடாய் சத்தியகிர்த்தி (எவன்பெண்ஜாதி யெவனோடு போனாலும் லெவைக்கைதுப்பனா) மென்பதுபோல நீங்களெப்படிக் கெட்டாலும் நேக்கென்ன என்பொன்னைக் கொடுத்திடு சீக்கிரம்.

(அரி-வ-ம்.) ஹேப்ரதான் அவருடன் வீண்வார்த்தை பாவிக்கவேண்டாம் என்சிரசில் ஓர் துரும்பைவைத்து விலைகூறும் ப்ரதான்.

சத்தியகிர்த்தி விருத்தம்.

தேசமெண் டிசைகொண்டாடுஞ் சிரயோத் தியினையாண்டு
மாசிலாக் கீர்த்திபெற்ற மாவரிச் சந்த்ரமன்னைப்
பூசரர் கடனுக்காகப் பொறுமையாய் விற்கவந்தேன்
காசிவா சிகளேயாங்கக் கருத்துறில் விலைகேட்பீரே.

## சத்தியகீர்த்திசொல் தரு.

[கூட்டவொருவரொருவருண்டோ]
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-இந்துஸ்தானி-ஆதிதாளம்.

கண்ணிகள்

மன்னனைவிலைகொள்வார்க ளுண்டோ-இந்த
வையகத்தனையோர்குடையி லாண்டவரிச்சந்த்ர (மன்)

காதலியுஞ்சேயும்விற்றார் முன்னே-அந்தக்
கடன்கழிக்காயிவனை விற்கவந்தேன்பின்னே (மன்)

மாதவவிஸ்வாமித்திரர் மாயம்-தீரும்
வகைக்காகவிலைப்பட வந்தாரோசகாயம் (மன்)

பாவிநானிவனைவிற்க லாச்சே-நானும்
பண்ணியநற்புண்யமெல்லாம் பலியாமற்போச்சே (மன்)

பொன்பதினாயிரந்தந்து கொள்வீர்-இந்தப்
புண்ணியனைக்கொள்வீரானற் பாபமெல்லாந்தள்வீர் (மன்)

(சத்-வ-ர.) ஆஆ இக்காசிமாநகரில் வசியாநின்ற (ப்ரம்ம-க்ஷத்திரிய-வைஸ்ய-சூத்ர-பஞ்சம) வம்ஸத்தார்களே இம்மகானுபாவனை ஓரடிமைக்கடனுக்காக விற்கவந்தேனாதலின் வேண்டியோர் விலைகொடுத்துப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பொது விருத்தம்.

இதுவுமந்தத் தேவரக சியப்படிக்கு
ஏமதர்ம னிசமதாய்க் காசியென்னும்
பதிதனிலே பறையர்குலத் தினிற்பிறந்து
பகர்வீர வாகுவெனும் பெயரும்பெற்றுக்
கதியெனவே சுடலையுற்றுப் பிணங்கட்செல்லாங்
காற்பணம்வாய்க் கரிசிமுழத் துண்டும்வாங்கும்
விதியுடனே நீற்றுவரும் நாளில்மன்னன்
விலைப்பட்டான் அவன்வாங்கத் தலைப்பட்டானே.





## வீரவாகுத்தோட்டிவருந் தரு.

[சரவணபவனேகிருபைசெய் சரணஞ்சண்முகனே]

என்ற கீர்த்தனையின் வர்னமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தோட்டிவந்தனனே-வீரவாகுத்

தோட்டி-வந்தனனே

அநுபல்லவி

தாட்டிகமாகத்தன் பாட்டிற்றலைப்படச்

சத்தியவாக்கரிச் சந்த்ரன்விலைப்படக்

கேட்டபொருளினை பிட்டியேவாங்கிடக்

கெட்டிக்காரனென்ற பட்டமுமோங்கிடத்(தோட்)

## வீரவாகுத்தோட்டி சொல்லுதல்.

நொண்டிச்சிந்து.

தோட்டியும் நானுண்டே என்னுண்டேயாண்டே

தோட்டியும் நானுண்டே-வகை

சொல்லுகிறேன் மொழி வெல்லுகிறேன்

கேட்டிடும் விபரமெல்லாம் என்னுண்டேயாண்டே

கேட்டிடும் விபரமெல்லாம்-மிகு

கீர்த்திபெற்ற என்குலத்தின் சீர்த்திசொல்வேன்(தோட்)

ஆதியில் விஷ்ணுவுமே என்னுண்டேயாண்டே

ஆதியில் விஷ்ணுவுமே-மாபலி

யண்ணால்தலை மீதினிலே மண்ணளக்கவே

மேதினி யெண்டிசையும் என்னுண்டேயாண்டே

மேதினி யெண்டிசையும்-விண்ணும்

வெடிக்கவே யன்றுபறை யடித்தனனே(தோட்)

வதிஷ்டரு முன்னளில் என்னுண்டேயாண்டே

வதிஷ்டரு முன்னளில்-ஒரு

மாதிகப்பெண் ணைமணந்த சேதிகேட்டு

அதற்காக நான்சென்றே என்னுண்டேயாண்டே

அதற்காக நான்சென்றே-வழக்கு

ஆட்டிவைத்தேனவரென்னைக் கேட்டுக்கொண்டார்(தோ)

வள்ளியுங் குறப்பெண்ணே என்னாண்டேயாண்டே
வள்ளியுங் குறப்பெண்ணே-அந்த
வள்ளுவரு டன்பிறந்த கள்ளியல்லவோ
புள்ளிமயில் வேலவனை என்னாண்டேயாண்டே
புள்ளிமயில் வேலவனைத்-திருமணம்
புரிபுங்கா லத்திலும்நான் பறையடித்தேன் (தோட்)

அந்திராதி பன்மகளாம் என்னாண்டேயாண்டே
அந்திராதி பன்மகளாம்-தெய்வ
யானைமணத் திலும்பறை நானடித்தேனே
சுந்தர ருடன்காளி என்னாண்டேயாண்டே
சுந்தர ருடன்காளி-நடமிட்டுத்
தோற்றிட்ட போதும்பறை சாற்றினனே (தோட்)

விமலவே தாகமங்கள் என்னாண்டேயாண்டே
விமலவே தாகமங்கள்-எங்கும்
விளக்கிட நான்பறை முழக்கினேனே
சமயத்தில் நான்முதற்பாதம் என்னாண்டேயாண்டே
சமயத்தில் நான்முதற்பாதம்-ஆனல்
ஜாதிபேதத் தில்நானொரு காதஞ்சாமி (தோட்)

ஆண்டைகளே யின்னுங்கேளும் என்னாண்டேயாண்டே
ஆண்டைகளே யின்னுங்கேளும்-ராப்பகல்
ஆற்றருகி லெப்பொழுதும் காத்திருப்பேன்
மாண்டபிணம் வந்ததானல் என்னாண்டேயாண்டே
மாண்டபிணம் வந்ததானற்-பணமும்
வாய்க்கரிசி முழுத்துண்டுந் தூக்கிக்கொள்வேன் (தோட்)

கட்டைதனிற் பிணத்தைவைத்து என்னாண்டேயாண்டே
கட்டைதனிற் பிணத்தைவைத்து-மெதுவாய்க்
காற்றடிக்க நெருப்பிட்டு நீற்றிடுவேன்
சுட்டசாம்பல் தனையெடுத்து என்னாண்டேயாண்டே
சுட்டசாம்பல் தனையெடுத்து-உடனே
தூற்றிடுவேன் கங்கையெனும் ஆற்றினிலே (தோட்)

மாடறுப்பேன் றேலுரிப்பேன் என்னாண்டேயாண்டே
மாடறுப்பேன் றேலுரிப்பேன்-அந்த
மாமிசஞ் சமைத்திருப்பேன் சாமிகளே



நாடெங்குந் தெரிந்திடுமே என்னாண்டேயாண்டே
நாடெங்குந் தெரிந்திடுமே-நாங்கள்
நல்லகுல மென்றினிமேற் சொல்லவேணுமோ (தோட்)

மாண்டோ ரறிவாரே என்னாண்டேயாண்டே
மாண்டோ ரறிவாரே-நாங்கள்
மாலயனாரனுக்கு மேலோரென்று
தீண்டாப் பறையனென்று என்னாண்டேயாண்டே
தீண்டாப் பறையனென்று-என்னைச்
செப்புவது முங்களுக்கே யொப்புமோசாமி (தோட்)

---

(வீரவாகுத்தோட்டி. வசனம்) ஏ ஆண்டே இங்கே மாடுவிலை கூறிக்கிட்டு வந்ததாராண்டே.

(சத்-வ-ம்.) ஆஆ யான் விலைகூறினதுமாடுமன்று ஆடுமன்று இம்மகானுபாவனைத்தான் விற்கவந்தேனப்பா.

(வீர-வ-ம்.) அப்படியா நல்லது என் வேலைக்கி ஒரு ஆள்த் தேவையாயிருக்குது குடுப்பீங்களோ ஆண்டே.

(சத்-வ-ம்.) நீ விலைக்குக்கொள்வதாயிருந்தால் எனக்குச் சந்தோஷந்தான் நல்லது உன்னைப்பார்த்தால் எனக்கொருவிதமான சந்தேகமாய்க்காணப்படுகின்றதாகையால் உன்ஜாதியும் ஊரும் பேரும் விபரமாகச் சொல்வாயாக.

வீரவாகுத்தோட்டி விருத்தம்.

ஜாதியு மூரும்பேருஞ் சாற்றிட வேணுமென்று
ஓதினீ யாதிநாளி லுண்மையை யறிந்திடாமல்
மேதினி தனிலேயுள்ளோர் விளம்புவார் நீசரென்று
ஆதலி னலேநானே யதிற்பறைச் சாதியாண்டே.

---

## வீரவாகுத்தோட்டிசொல் தரு.

[சின்னுபாசிளட்லஉந்தரு]

என்ற க்ருத்திகையின் வர்ணமெட்டு.

இராகம்-பலஹம்ஸா-தாளம்-ஆதி.

பல்லவி.

நானும்பறைச் சாதிகாணுண்டே

அநுபல்லவி.

வானுறைகாசி மாநகர்வாசி (நானும்)

சரணம்.

தோட்டியும்நானே சுடலைகாப்பேனே
மாட்சிசேர்வீர வாகுவென்பேரே (நானும்)

(வீர-வ-ம்.) ஆஆ ஆண்டே நானுபறச்சாதி எம்பேர் வீரவாகு நானிந்தக் காசிநகரத்திலே சொடலைகாக்குந்தோட்டி நீயிந்த வீதியிலே விலைகூறிக்கிட்டு வந்ததாலே கேக்கவந்தேன் கோவிச்சுக்காதேயாண்டே குடுக்குறமுண்ணுக்குடு இல்லாட்டாப்போறேனுண்டே.

சத்தியகீர்த்தி விருத்தம்.

பலபல ஜாதியுள்ள பட்டணந் தனிலேநல்ல
குலமதா யுள்ளபேர்கள் கொள்வதற் கின்றிக்காதம்
விலகிடும் பறையன்வந்து விலையது கேட்பதற்குத்
தலைவிதி வசமோமன்னு தயங்குதென் மனதுதானே.

(சத்-வ-ம்.) ஆஆ மகராஜ் பற்பல ஜாதிகள் வசிக்கும் இக்காசிப்பட்டணத்தில் மேலான குலத்திற்பிறந்த யாவரேனும் விலைக்கு வாங்கும்படியானசெயலின்றி நீசப்பறையன்வந்து விலைகேட்கும்படிநேரிட்டதே ஆஆஎன்மனம் பதறுகின்றதே இவனுக்கெவ்விதம்விலைசொல்வேன் மகராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

விந்தைசேர் நீதிநூல்கள் விளம்பிடும் விபரமெல்லாஞ்
சிந்தையி லறிந்திருந்துந் தெரிந்திலா தவரைப்போல
இந்தநல் லுலகந்தன்னோ ரேசிடும் புலையனென்று
மந்திரி நீரும்புத்தி மயங்கிடிற் கடன்றீராதே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[மன்னுவோடாமையல்தீரடா]
என்ற ட்ராமாச்சருவின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

மந்திரிநீரும் மயங்கிடாதிரும்



அநுபல்லவி.

சந்தர்ப்பமிதே-கை தவரிடிற்றிதே (மந்)

சரணம்.

பறையனென்றாலும் பாதகமில்லையே
மறையவர்கடன் பொன் வாதைதொல்லையே (மந்)

(அரி-வ-ம்.) ஆஆ எனது புத்திக்கிசைந்த சத்தியகீர்த்தியென்னும் ப்ரதான் பாரும்.

வெண்பா.

ஜாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதிவழுவா நெறிமுறையின்-மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது அதாவது எளியோர்க்குக்கொடுக்குந் தன்மையையுடையோர் உயர்ந்த ஜாதியாரென்றும் கொடாதவர்கள் தாழ்ந்த ஜாதியாரென்றும் நீதிநூல்கள் முறையிடுகின்றமையால் எக்குலத்தவனு யிருப்பினும் (பணம்பந்தியிலே குலங்குப்பையிலே) யென்பதுபோல பணமுங்குணமு மிருப்பவனே பெரியவனுதலால் இந்தச் சமயத்தில் மனந்தளராமல் இவனுக்கென்னை விற்றுத் தாசர்கடனைத் தீர்த்துவிடும் இது தவறினல் என்னையொருவரும் விலைகொள்ளார்கள் அதனுல் எனது சத்தியவாக்கும் பொய்த்துப்போய்விடும் ப்ரதான் (பச்சரிசிக்குப் பறையனைச்சேவி) யென்னும் பழமொழியை மறந்துவிட்டீரோவென்ன.

சத்தியகீர்த்தி விருத்தம்.

இறையவன் மனைவிசேயை யிப்புவி புகழுகின்ற
மறையவருக்குவிற்று மகிமையும் பெற்றுக்கொண்டார்
குறையது கூறுமிந்தக் கொடியதோர் புலையனுக்
பறையனுக் கிவணைவிற்கப் பாவமென் செய்தேன்சாமி.

## சத்தியகீர்த்திசொல் தரு.

[ஐயோ சதாரப்பூனைத்தேடியே யிப்போதுமிகத் தயங்குதேமனம்வாடியே]
என்ற சதாரம்நாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-சாபு.

பல்லவி.

ஐயோ சிவனே யென்போதும் பாபிகளிந்த
ஜெகத்துண்டோ ஒருக்காலும்

அநுபல்லவி.

அவனியையபரசாண்ட அரசனைப்பறையனுக்
கடிமையாய்ப்படைத்தனையோ-செய்த
தவமும்புண்ணியமெல்லாந் தலையெடுக்காமலே
சதிசெய்துதடைத்தனையோ-ஐயோ (சிவ)

பாவமிகவேயிங்கு மேவியவனியாயம்
பார்க்கவுமானேனையோ-என்னை
ஒளியமாய்வளர்த்த காவலன்றனக்கினி
உதவாமற்போனேனையோ-ஐயோ (சிவ)

கெட்டாலுமேன்மக்கள் மேன்மக்களல்லாது
கீர்த்தியுங்கெடுவார்களோ-சங்கு
சுட்டாலும்வெண்மை தருமேயிவ்விதமான
துன்பங்கள்படுவார்களோ-ஐயோ (சிவ)

அணிமணிமுடியுனை அண்ணனுக்கிவ்வித
அவமானம்வரலாகுமோ-யார்க்கும்
பணிவிடைபுரிகின்ற பறையனடிமைகொளப்
பதியைநான்றரலாகுமோ-ஐயோ (சிவ)

இப்படிவருமென்று எப்பொழுதாகினுஞ்
சொற்பனங்காணலையே-இந்தக்
கற்பனையுமெவர்கள் சற்பனையோவெந்தன்
கருத்துக்குத்தோணலையே-ஐயோ (சிவ)

(சத்-வ-ம்.) ஆஆ ஜெகதிசா என்போன்ற கொடும்பாவிகள் இவ்வையகத்தில் யாவரிருக்கின்றார்கள் ஆஆ ஐம்பத்தாறுதேசங்களுக்கும் ஏகசக்கராதிபதியாயிருந்து அரசுபுரிந்த மன்னவனைச் சனு



க்கடிமையாகத்தான்படைத்தனையோ ஆஆ யாங்கள்செய்ததவம்புண்ணியமெல்லாந் தலையெடுக்கவொட்டாமற் றடைத்துவிட்டனையோ ஆஆ இவ்விதபாபங்களையெல்லாம்நானிருந்துபார்க்கும்படி செய்து விட்டனையே ஆஆ என்னைப் பிள்ளைபோற்பாவித்துக் காப்பாற்றி வந்த அண்ணனுக்கு யானுதவாமற் போகும்படி செய்தனையே ஆஆ ஈசா.

வெண்பா.

கெட்டாலு மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

என்று சொல்வார்களே அப்பேர்க்கொத்த மேன்மைதங்கிய அரசனுக்கு இவ்விதமான பங்கம் நேர்ந்துவிட்டதே ஆஆ கடவுளே நீண்டாப்புலையனுக்குச் செம்மலையடிமைப் படுத்திவிட்டு யானெவ்விதமா யுயிர்தரிப்பேன் ஆஆ இவ்விதமாக நடக்குமென்று யான் சொற்பனங்கூடக் காணவில்லையே இனி யென்செய்வேன்.

## வீரவாகுதோட்டி சொல்லுதல்.

ஆசிரியவிருத்தம்.

ஜாதிபே தகமேது நரியிடர் ஜம்புகர்
தவளையிட மாண்டவ்வியர்
சக்கிலிச் சியிவிட மதங்கருர் ஷியெனுந்
தாசியிட மேவதிஷ்டர்
காதிபி னிடங்கவுசி கர்கமுனை தன்னிடங்
கார்க்கேயர் முண்டச்சியின்
கர்ப்பத்தி லேகவுண் டன்யர் மானிடமே
கலைக்கோட்டு முனிவர்வேட
மாநிடம் வான்மீகர் நாயிடஞ் சௌனகர்
வண்ணாத்தி யிடம்நாரதர்
மாபஞ் சிடத்திற்கௌ தமர்செம்ப டச்சியின்
வயற்றினில் வியாசர்கும்பம்
மீதினி லகத்தியர் பறைச்சிபசற் சாங்கபர்
விநோதமா யுற்பவித்த
விபரமா யெசேதி கபடிலா மநுநீதி
வேதநூ லோதுதான்டே.

## வீரவாகுத்தோட்டிசொல் தரு.

[காமனவினிவினவையா காகராஜசயனே]

என்ற க்ருத்திகையின் வர்னமெட்டு.

இராகம்-சக்கரவாகம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அலறியழுகிறாயாண்டே
அடிமைதன்னையே வேண்டேன் (அ)

அநுபல்லவி.

வலியவந்துன்னைக் கேட்டேனே
மடியினிற்கையைப் போட்டேனே (அலறி)

சரணம்.

வீதியில்விலை கூறினாய்
வெகுண்டுமனமும் மாறினாய்
ஜாதிபேருங் கேட்டநீயே
சம்மதமானால் தருகுவாயே (அலறி)

---

(வீர-வ-ம்.) ஆஆஆண்டேநாம்பலவந்தம்பண்ணவந்தேனேஅப்படியிருக்க ஏனழுவுறாய் கடைத்தெருவிலே விலை கூறினதாலே கேக்கவந்தேன் அதுக்கா எங்குலத்தையும் பேரையுங்கேட்டு அழுவுறாயே எனக்குவிக்க ஒனக்குச் சம்மதமுண்ணா ஒங்குலத்தையும் பேரையும் உள்ள கிரயத்தையுஞ்சொல்லு எனக்குச் சம்மதமுண்ணா வாங்கிக்கிறேன் இப்படியழுதா எனக்குவாணாம் ஆண்டே.

அரிச்சந்திரன் விருத்தம்.

நானுறை கின்றேனெந்த னற்குலஞ் சூரியவம்சம்
கோனரிச் சந்த்ரனென்பேர் குடியயோத் தியுமேயாகும்
ஆனபத் தாயிரம்பொன் னளித்திடி லுன்சொற்போலே
ஈனவே லைகளானாலு மிசைந்துநான் செய்வேனப்பா.

---

(அரி-வ-ம்.) ஏறெ வீரவாகு நானே சொல்கின்றேன்கேள் என்குலஞ் சூரியகுலம், என்பெயர் அரிச்சந்திரமகாராஜன், யானரசாண்டவூர் அயோத்தியாபுரி, இப்போது பதினாயிரம்பொன் கொடுக்கும்பக்ஷத்தில் யானுனக்கடிமையாகி நீசொல்லும் ஏவல் வேலைகளைச் செய்துவருவேன் வீரவாகு.



(வீர-வ-ம்) வெவுநேத்திதான் சரிசரி வீரவாகு தப்பிச்சுக்கிட்டேன் போபோ ஆண்டேபோ.

(அரி-வ-ம்.) ஆஆ வீரவாகு ஏனப்பா அப்படிச் சொல்கின்றாய்.

வீரவாகுத்தோட்டி விருத்தம்.

மன்னனீ யானதாலே யெனக்கிடா துனக்குடம்பு
சொன்னவே லைகளைச்செய்யச் சுருசுருப் பதுமிராது
பொன்னது போச்சுதென்று புலைச்சியுங் கடுத்துவைவாள்
என்னைவிட் டகன்றுவேறே யிடந்தனைத் தேடிக்கொள்ளே.

---

(வீர-வ-ம்.) ஏ ஆண்டே நீராசாவாயிருக்குறாய் ஒனக்கு வேலைசெய்ய ஒடம்புவளையாது சுறுசுறுப்பிருக்காது அப்படியிருந்தா எம்பொஞ்சாதி கோவிச்சுக்குவா நீ வேறேயிடம்பார்த்துக்கோ ஆண்டே.

(அரி-வ-ம்.) நீ யெந்தவேலையைச் சொன்னாலும்அட்டியில்லாமற் செய்வேன் அதைப்பற்றியோஜிக்கவேண்டாம் வீரவாகு.

வீரவாகுத்தோட்டி விருத்தம்.

வள்ளலும்நீ யெனக்கடிமைப்பட்டாயானால்
மாடறுத்துத் தோலுரித்து வைக்கவேணும்
சொள்ளையின்றி படக்கயறு போடவேணும்
சுடுகாட்டி லிருந்துபிணஞ் சுடவேவேணும்
சள்ளையின்றி யெனக்குமெந்தன் பெண்ஜாதிக்குஞ்
சகலவே லைகளையும்நீ செய்யவேணும்
உள்ளவே லைகள்செய்யத் தடையுண்டானால்
உறுதியதாய்த் தெண்டனையும் பெறுவாயாண்டே.

---

(வீர-வ-ம்.) ஏ ஆண்டே பலபலவார்த்தைவாணாம் நீயெனக்கு அடிமையானா மாடு அறுக்குணும் தோலு உரிக்குணும் படக்கயறுபோடுணும் சொடலையிலே யிருந்துபொணஞ்சுடுணும் எம்பொஞ்சாதிக்கும் எனக்கும் பணிவிடைசெய்யணும் தப்புதஞ்செஞ்சா அப்பவே தெண்டிப்பேன் அதுக்குக் கோவிச்சுக்காமே நடந்துகொள்ள முடியுமோ ஆண்டே.

(அரி-வ-ம்.) அப்பா வீரவாகு யானெப்பொழுது உனக்கடிமைப்பட்டேனே அப்பொழுதே நீயெனக்கெஜமானுயிருந்து குற்றங்களைக்கண்டு தண்டிக்கவும் யானவைகட்கெல்லாங் கீட்படிந்து நடக்கவேண்டிய கடமைத்தானே அதற்கெல்லாங் கோபித்துக் கொள்வேனு வீரவாகு.

(வீர-வ-ம்.) செசமுண்ணு அடிமைச்சீட்டு எழுதிக்குடு சீக்கிரம்.

(அரி-வ-ம்.) ஹேற ப்ரதான் என்னையடிமைப்படுத்திப் பொன் பெற்றதாகச் சாசனமெழுதிக்கொடும் ப்ரதான்.

(சத்-வ-ம்.) அப்படியே யெழுதிக்கொடுக்கின்றேன் மகராஜ்.

(வீர-வ-ம்.) ஏ ஆண்டே ஒத்தப்பொணங்க மெத்தவந்து சுடுகாட்டுலே காத்துக்கிட்டிருக்கிது ஒருமாடு செத்துக்கெடக்குது அந்த வேலையெல்லாம் பார்க்கணும் சீக்கிரமாயெழுது ஆண்டே.

(சத்-வ-ம்.) இதோ எழுதிவிட்டேன் வீரவாகு

(வீர-வ-ம்.) ஆறு வாசியாண்டே பாக்கலாம்.

(சத்-வ-ம்.) அப்படியே வாசிக்கின்றேன்.

## சத்தியகீர்த்தி சொல்லுதல்.

ஆசிரியவிருத்தம்.

மகிமைபெறு காசியிற் புலையர்கன் குலந்தன்னில்
வாழ்வீர வாகுவுக்கு
மந்திரி யயோத்திமா நகர்சத்ய கீர்த்தியும்
வரைந்தசா சனமியாதெனிற்
றகைமையுள நக்ஷத் திரத்தாக ருக்குத்
தருங்கடன் தீரவேண்டிச்
சத்யமொழி தவறும லாகொண்ட வேளரிச்
சந்த்ரபூ மனையுனக்குப்
புகலவொண் ணுவடிமை தந்துபதி னுயிரம்
பொன்னையும் பெற்றதாலே
பூபனுக் கும்மெனக் கும்மினிச் சொந்தப்
பொறுப்பில்லை யென்பதற்குப்
பகவனுந் திருமாலயன் பூமி தேவியும்
பார்வதி மகாலக்ஷ்மியும்



பாரதி கலாநிதி திவாகரன் முதலான
பன்னவர்க ளுஞ்சாக்ஷியே.

(சத்-வ-ம்.) என்று எழுதியிருக்கின்றேன் வீரவாகு

(வீர-வ-ம்.) நல்லது அந்தச்சீட்டையேங்கிட்டக்குடு ஆண்டே

(சத்-வ-ம்.) இதோ பெற்றுக்கொள்ளப்பா வீரவாகு.

(வீர-வ-ம்.) அப்படியே பெத்துக்கிட்டேன் பொன்னு ஆருக்குக்குடுக்கணுமாண்டே.

(சத்-வ-ம்.) இந்தத் தாகர்கையிற் கொடுத்துவிடப்பா.

## வீரவாகுதோட்டிக்கும் நக்ஷத்திரத்தாகருக்குஞ் சம்பாஷணை.

(வீர-வ-ம்.) ஆராண்டே அங்கே தக்குரான்க்குணப்போலே முணுச்சுக்கிட்டு நிக்குறது.

(நக்ஷ-வ-ம்.) அடாய் எமத்தாயோழி பறப்பயலே ஏதுக்கடாய் என்னைவிசாரிக்கின்றனை.

(வீர-வ-ம்.) ஏ பாப்பாராண்டே வங்குட்டைக் கெடுக்கவாபாக்குறுய்.

(நக்ஷ-வ-ம்.) என்னடாய் கெட்டுப்போச்சு நீசத்தாயோழி காட்டி மறைக்கவேண்டாமோ.

(வீர-வ-ம்.) வெவுநேத்திதான் சரிசரி ஒனக்கா பொன்னுக் குடுக்கணும்.

(நக்ஷ-வ-ம்.) ஆமடாய் நேக்குத்தான் பதினுயிரம்பொன் செல்லவேண்டும்.

(வீர-வ-ம்.) இந்தா சாமி பாப்பாராண்டே இந்த முடிச்சுலே கொள்ளிவச்சகாசு கோடமொடச்சகாசு வாக்கருசி நோம்பிச்சோறு துண்டம்வித்தகாசு எல்லாமிருக்குது எடுத்துக்கோசாமி பாப்பாராண்டே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் புலைத்தாயோழி கிட்டவருகின்றனையே தொட்டுடாதே அந்தண்டை வெட்டிப்போடாய்.

(வீர-வ-ம்.) ஒன்னைத் தொட்டுப்போட்டுக் கங்கையிலே முணுகினுலுந் தீட்டுப்போவாதே பாபபாராண்டே.

(நக்ஷ-வ-ம்.) தாயோழி விதண்டாவாதம் பேசுகின்றனேயா இந்தத்துணியை யவிழ்த்துக்கோயேண்டா.

(வீர-வ-ம்.) என்சாமி பாப்பாராண்டே துணியிலே நீட்டு வந்து ஒட்டிக்கிச்சுங்குறயே காசுலேவந்து ஒட்டாதோ.

(நக்ஷ-வ-ம்.) அடாய் அறுதலிப் பறத்தேவடியாள் பிள்ளாய் பொன்னுக்குத் தீட்டுண்டோ நாய்விற்றகாசு குலைக்குமோ வேப்பெண்ணெய் விற்றகாசு கசக்குமோ நல்லது அவிழ்த்துக் கொட்டடாய்.

(வீர வ-ம்.) அவுத்துப்போட்டேனாண்டே துணியைத் தொட்டுப்போடாமலெடுத்துக்கோ ஆண்டே.

(நக்ஷ-வ-ம்.) அடாய் போக்குரித்தாயோழி துணியையெடுத்துக்கின்டு பொன்னைக் கீழேவையேண்டாய்.

(வீர-வ-ம்.) இதோ வெச்சிட்டேன் எடுத்துக்கோசாமி.

(நக்ஷ-வ-ம்.) ஏண்டாய் பொன் சரியாயிருக்குமோ குறையுமோ.

(வீர-வ-ம்.) காப்பணங் கொறையுமாண்டே.

(நக்ஷ-வ-ம்.) காற்பணமேண்டாய் குறைந்தது.

(வீர-வ-ம்.) நீ குடுக்கவேணுமேசாமி.

(நக்ஷ-வ-ம்.) நானேதடாய் கொடுக்கவேண்டியது.

(வீர-வ-ம்.) நீசெத்தாக்குணுமல்ல ஆண்டே அதுதான்.

(நக்ஷ-வ-ம்.) செறுப்பாலடி திருட்டுத்தாயோழி சரியாய் வையடாய்.

(வீர-வ-ம்.) இதோ வெச்சிட்டேன் எடுத்துக்கோசாமி.

(நக்ஷ-வ-ம்.) அப்படியே யெடுத்துக்கொண்டேன்.

நக்ஷத்திரத்தரகர் விருத்தம்.

இறைவனே நீயோர்பொய்யை யியம்பிடி லுனக்கிவ்வாறு
குறையது வருமோநல்ல கொள்கையைக் கெடுத்துக்கொண்டு
பறையனுக் கடிமையாகிப் பணிவிடை புரியநேர்ந்தாய்
அறைகுவாய் பொய்யைமுன்போ லரசினை யாளுவாயே.



(நக்ஷ-வ-ம்.) அடாய் அரிச்சந்திரா ஒரு பொய் சொன்னால் இவ்வளவுகஷ்டஞ் சம்பவிக்கமாட்டாதன்றோ வருகின்ற பாக்கியமெல்லாம் வாயினாற் போக்கடித்துக்கொண்டு பறையனுக்கடிமையாகிப் பிணஞ்சுடப்போகின்றனேயே இப்போதாவது ஒரு பொய் சொல் உன்னை முன்போலரசாளச்செய்கின்றே னரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) போதும்போதும் புண்யபுருஷா நீர் ஈகையிரக்கமுள்ள மகானுபாவன்றான் உமது கூலிவந்து சேர்ந்துவிட்டதா ப்ரபு.

(நக்ஷ-வ-ம்.) நேக்குக் கூலிவந்து சேர்ந்துவிட்டது அரிச்சந்திரா அதற்கென்ன தடையிருக்கின்றது நான் கேட்டதற்கென் சொல்கின்றனை.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி இதைவிட இன்னும் பலவித கஷ்டங்கள் சம்பவித்தாலும் பொய்சொல்லமாட்டேன் ப்ரபு ஏன்வீண் வார்த்தை பாஷிக்கின்றீர்கள்.

(நக்ஷ-வ-ம்.) ஹே அரிச்சந்திரா உன்னைப்போன்ற சத்தியவாக்குடையோனை யானெங்குங் கண்டிலேன் நல்லது யான் சென்றுவருகின்றேன் விடையளிப்பாயாக.

(அரி-வ-ம்) அப்படியே சென்று விஸ்வாமித்திரருக்குச்சொல்லுங்கள் ப்ரபு இதோ வந்தனம்புரிகின்றேன்.

(நக்ஷ-வ-ம்.) கல்யாண் அரிச்சந்திரா அப்படியே சொல்கின்றேன் இதோ செல்கின்றேன்.

(வீர-வ-ம்.) ஏ விலைப்பட்ட ஆண்டே இந்த மாட்டுக்காவடியைத் தூக்கிக்கிட்டு பறச்சேரியைநோக்கி முன்னேநட.

(அரி-வ-ம்.) அப்படியே யெடுத்துக்கொண்டு நடக்கின்றேன் வீரவாகு.

(சத்-வ-ம்.) ஆஆ மகராஜ் யானெடுத்துக்கொண்டு வருகின்றேன் என்னிடத்திற்கொடுங்கள் ப்ரபு.

(வீர-வ-ம்.) ஏதடா வெவுசனுக்காயிருக்குது உணிவாடாபோடாண்ணுதாங் கூப்புடுவேன் ஏ விலைப்படாத ஆண்டே நீகூடவரவாணும் தோட்டிச்சி கண்டாக் கோவிச்சுக்குவா.

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் யான் சென்றுவருகின்றேன் நீர் இவ்விடத்திலேயே நின்றுகொள்ளும்.

### சத்தியகீர்த்தி விருத்தம்.

பூவுல கினிலேயுள்ள புரவல ரெவருமன்பாய்ச்
சேவடி பணிந்துபோற்றுஞ் செயலெலா மாறிநீசன்
ஏவலா ளாகிநாற்ற மெடுத்திடுஞ் செத்தமாட்டுக்
காவடி தூக்கவேந்தன் கட்டளை தானேமன்னு.

### சத்தியகீர்த்திசொல் தரு.

[ஐயோநானொரு பெண்பிறந்தகதையை
யாருடன்சொல்வேனம்மா திரிச்சடையே]
என்ற இராமநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மன்னவாநீருமிந்த மாட்டுக்காவடி தூக்கி
வழிநடந்திடுவதும் விதிவசமோ (மன்)

ஐயோபறையனுக்கு வெய்யபணிகள்செய்ய
அடிமைப்பட்டதுந்தலை விதிவசமோ (மன்)

இதுநாள்வரையுமுங்கள் பதமேவாநங்காத்திருந்த
என்னையும்பிரித்ததும் விதிவசமோ (மன்)

என்றினியுமைப்பார்ப்பேன் என்மனக்குறைதீர்ப்பேன்
இப்படிமுடிந்ததும் விதிவசமோ (மன்)

(சத்-வ-ம்.) அந்தோ மகராஜ் தாங்கள் பறையனுக்கடிமைப் பட்டுத்தோற்காவடி தூக்கிச் செல்லவும் தங்கள் மலரடியிற் காத்திருந்த என்னைப் பிரிந்துவைக்கவும் விதிவசந்தானே ஆஆ இனிமே லெக்காலத்திற் றங்களைப்பார்த்து என்மனக்குறை தீர்த்துக் கொள்ளப்போகின்றேன் * ஆஆ அரசன் என்னைத் தனிமையாய் விடுத்துத் திரும்பிப்பாராமற் செல்கின்றாரே யிதற்கென்செய்வேன் நல்லது அவர் செல்லுமிடத்திற்கு யானும் பின்பற்றிச்செல்கின்றேன்.



பொது விருத்தம்.

வாளைநல் ரதிசேர்சந்த்ர மதியுமன் மதனைப்போன்ற
பாலகன் றேவதாசன் பண்புடன் றொடர்ந்துசெல்லக்
காலகண் டையரந்தக் காலமே யழைத்துக்கொண்டு
சீலமாய் வீடுசேர்ந்து தேவியி னிடஞ்சொல்வாரே.

## காலகண்டையருக்கும் காலகண்டியம்மாளுக்கும் சம்பாஷணை.

(காலகண்டையர்-வ-ம்.) யாரடி ஆத்துக்குள்ளே.

(காலகண்டி வசனம்.) என்காணும் அழைக்கிறீர்.

(கால-ர்-வ-ம்.) அடி காலகண்டி ஓடிவாயேண்டி.

(கால-டி-வ-ம்.) அப்படி யென்னகாணும் அவசரம் உம்மை யார் தூக்கிக்கிண்டுபோறாள்.

(கால-ர்-வ-ம்.) அடி காலகண்டி வேறொன்னுமில்லை ஒரு பசுவுங்கன்றும் வாங்கிக்கிண்டு வந்திருக்கேன் அதைப் பார்க்கத்தானழைக்கிறேன் ஓடிவாடி சிக்கிரம்.

(கால-டி-வ-ம்.) என்காணும் ரொம்பப் பால்க்கறக்குமோ.

(கால-ர்-வ-ம்.) என்னவோ ரேக்கென்ன தெரியும் வந்து பாரேன் வெர்ன்னே ஆத்துக்குள்ளேயிருந்துகிண்டு மொணமொணக்கிறையே சிக்கிரம் வாடி.

(கால-டி-வ-ம்.) இதோ வந்துவிட்டேன் காணும் எங்கே யந்தமாடு பார்ப்போம்.

(கால-ர்-வ-ம்.) இதோ நிற்கிறது பாரடி குருட்டுமுண்டே.

(கால-டி-வ-ம்.) ஆஆ நீர்பட்டுக்கிடந்தீரோ எதுகாணும் ஏமாற்றி விட்டார் இவாள் யார்காணும்.

(கால-ர்-வ-ம்.) அடி காலகண்டி நோக்குதவியாக வேலைசெய்யத்தான் கொண்டுவந்திருக்கேன்.

## காலகண்டிசொல் தரு.

[அந்தத்தோட்டமிந்தத்தோட்டம் பாதரித்தோட்டம்
பாதரித்தோட்டத்துக்குள்ளேவாடி பத்துப்பணந்தாரேன்]
என்ற அம்மாயிபாட்டின் வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஏதுகாணும் பட்டுக்கிடப்பன் — எங்கேபோனீரோ-இந்த
மாதுமீதி லாசைகொண்டு — வாங்கலானீரோ
சூதுவாதும் பேசுதற்குக் — கற்றுக்கொண்டீரோ-மெய்
ஓதவென்றே புபதேசமும் — பெற்றுக்கொண்டீரோ (ஏது)
கையும்நோக நெல்லுக்குத்தி — முட்டைதட்டியே-இன்னுங்
காட்டிலுள்ள இலையும்பறித்து — விறகுங்கட்டியே
பையக்கொணர்ந்து கடையில்விற்றுப் — பணமுமாக்கியே-அன்னம்
பனுமாறிறைற் றின்றுதிரிவீர் — காலம்போக்கியே (ஏது)

(கால-டி-வ-ம்.) என்காணும் பட்டுக்கிடப்பன் என்னண்டையே சூதுவாது பேசுறீரோ இந்தவுபதேசம் யாரிடத்திற் பெற்றுக்கொண்டீர் ஆஆ பளபளா தண்ணுயிருக்கு நான் வெர்ன்னே கைநோக நெற்குத்தி முட்டைதட்டி வனத்திலுள்ள விறகிலைபறிச்சுக்கிண்டு வந்துவிற்று ரொக்கமாக்கித் தளிகைபொங்கி வைத்தால் நண்ணுய்ச் சினைவிரால்போல வயறுபுடைக்கத் தின்னுட்டு உல்லாசமாய்த் திரிவதுபோராமல் இந்தப் பொம்மனாட்டிபேரிலும் ஆசைவைத்து இட்டுக்கிண்டுவந்து வேலைசெய்வதற் கழைத்துவந்தேனென்கிறீரோ உமது குடுமியறுந்தால்த் தானென்ன பட்டுக்கிடப்பன்.

(கால-ர்-வ-ம்.) அடி நற்கமுண்டே நாயேபே ரிருக்கச்சே எதுக்கடி யிவ்விதம் அவமரியாதையாய்ப்பேசிக் குடுமியைப்பற்றி யிழுக்கிறுய் நோக்குநண்ணுய் உதைகொடுத்தாலன்றோ பயமிருக்கும் அதுதவிமுண்டே.

(கால-டி-வ-ம்.) ஆஆ பட்டுக்கிடப்பன் பல்லுக்கருகி உம்மைக்கட்டையிலேவைக்கோ விரியன்பாம்பு வெடுக்கினுயிடுங்கோ சாரைப்பாம்பு சாக்கினுகடிக்கோ நல்லபாம்பு நாறுச்சினு கோத்ரோ



உம்முடைய கையிலே கொள்ளியை வைக்கோ என் காணும் அடித்தீர்.

(கால-ர்-வ-ம்.) பின்னே யேதுக்கடி திட்டுகிறுய்.

(கால-டி-வ-ம்.) நீர் என்காணும் இவர்களை யிட்டுக்கிண்டு வந்தீர்.

(கால-ர்-வ-ம்.) அடி காலகண்டி நேச்கிவளையும் நோக்கிவனையுமாகக்கூட்டிக்கிண்டு வந்தேன் அதனுல் விரோதமுண்டோ.

(கால-டி-வ-ம்.) நேக்கேதுக்குங்காணும் இவ்வறியாதபயல் உமக்கேதுக்குங் காணுமிவள் எது சாதுரியம்பேசுகிறீர்.

(கால-ர்-வ-ம்.) வேலைசெய்யத்தான் இதிலென்னடி சாதுரியம்.

(கால-டி-வ-ம்.) ஆஆபட்டுக்கிடப்பன் நீர் சொல்லும்போதே நேக்குநாணமுண்டாகிறதே.

(கால-ர்-வ-ம்.) என்னடி நாணம் அந்தைத்தான் சொல்லேன் பார்ப்போம்.

(கால-டி-வ-ம்.) இந்தப் பயலிருக்கானே எவ்விதஞ் சொல்கிறது.

(கால-ர்-வ-ம்.) ஆஆ இவன் சிறுபயல்தானே அதற்குப் பாதகமில்லே.

(கால-டி-வ-ம்.) அஞ்சுவயசுப் பயலானுலும் அவனும் புருஷனன்றோ அவ்விதமிருக்க எவ்விதஞ்சொல்கிறது.

(கால-ர்-வ-ம்.) ஆஆ நாணமேதுக்கு நீயறியாத புருஷாளுண்டோ

(கால-டி-வ-ம்.) என்காணும் உம்மையறியாமல் நேக்குயாரிருக்காள்.

(கால-ர்-வ-ம்.) என்டி காலகண்டி குப்பனையங்காரிருக்காரன்றோ.

(கால-டி-வ-ம்.) ஆம் அவர்தான் வேறேயார்.

(கால-ர்-வ-ம்.) சப்பாசாஸ்திரியோ.

(கால-டி-வ-ம்.) ஆம் அவர்தானென்று.

(கால-ர்-வ-ம்.) சிவராமையரோ.

(கால-டி-வ-ம்.) ஆம் அவர்தானே இதையெல்லாம் புருஷாள் சொல்வாளோ நல்லதிருக்கட்டும் பின்னேபேசிக்கிடுவோம் இவாள் வெறுமனே கிடைத்தாளோ பணங்கொடுத்து வாங்கினீரோ.

(கால-ர்-வ-ம்.) வெறுமனே கிடைப்பாளோ இவளுக்கு நாலு காசும் இந்தப்பயலுக்குமூனுகாசுங் கொடுத்தன்றோ வாங்கினேன்

(கால-டி-வ-ம்.) ஐயோ நாலுமூனும் ஏழுகாசாச்சே இது தெருவிலே வெறுமனே கிடக்கிறதோ என்காணும் வாங்கினீர் பட்டுக்கிடப்பன்.

(கால-ர்-வ-ம்.) அடி காலகண்டி ஏழுகாசு நோக்குப்பெரிதாய்ப்போயிடுத்தோவென்ன.

(கால-டி-வ-ம்.) போங்காணும் வேலைமெனக்கிட்ட ப்ராமணுநீர் பொம்மனாட்டிகள் பக்கத்துக்குப் பிருமனைபோலேயும் கம்மனாட்டிகள் பக்கத்துக்குக் கலவடைபோலேயும் வார்த்தையாடேதேயும் காணும் மங்கைமாட்டின் பின்னே திரிந்து சாணமெடுத்து முட்டைதட்டிச் சம்பாதித்தாலன்றோ தெரியும் வருத்தம் நேக்கு வயற்றைப்பற்றி யெரிகிறதே அடபட்டுக் கிடப்பன் இப்படியுஞ் செய்யலாமோ.

(கால-ர்-வ-ம்.) அடி காலகண்டி என்னடியடிக்கவருகின்றனை பார் நோக்குகஷ்டம்வாச்செய்வேனே இவளோ சாணந்தட்டிமுட்டையாக்குவள் நெற்குத்துவள் காதும்பிடிப்பள் இன்னுஞ் சகலவேலையுஞ் செய்வள் இந்தப்பயலோ வனத்திலுள்ள விறகு சமிதை தர்ப்பை முதலானவையெல்லாங் கொண்டு வந்து நமது வீடெல்லாங் காடாக்குவன் ஆகையால் நோக்கிஷ்டமான வேலையிடலாம் வயற்றுக்குமட்டும் ஏதாவது மீந்தகஞ்சிகள் நீர்வார்த்துச் சம்ரக்ஷணைசெய்துகொள்ளவேணுந் தெரியுமோ.

(கால-டி-வ-ம்.) என்காணும் காசைக்கொடுத்ததுமல்லாமல் இவாளுக்கு வயற்றுக்கும் படைக்கவேணுமோ நல்லது இவள்பேரென்ன.

(கால-ர்-வ-ம்.) இவள்பேர் சந்திரமதியாம் அத்தனைநீளம் வேண்டாம் சந்தியின்னு அழைத்தாற்போருமடி.

(கால-டி-வ-ம்.) நல்லது அந்தப்பயல்பேரோ.



(கால-ர்-வ-ம்.) அவன்பேர் தேவதாசனும் அதுவும் நீளந்தான் தாசனின்னு அழைத்தாற்போருமடி.

(கால-டி-வ-ம்.) சரிசரி * அடிசந்தி இங்கே நம்முடைய ரேழியிலே படுத்துக்கொள்ளவேணும் ராத்திரி மூனுஞ்சாமத்திலெழுந்து இந்தத் தொழுவத்திற் கட்டியிருக்கிற எருமைச்சாணம் பசுந்சாணம் கன்றுக்குட்டிச்சாணமெல்லாமெடுத்து ஒன்றாய்ச்சேர்த்து நன்னாய்ப்பிசைந்து முட்டைதட்டவேணும் தெருமுத்தம் வீட்டுமுத்தம் மாட்டுத்தொழுவ முதலானதுக்குஞ் சாணந்தெளிக்கவேணும் அங்கேயுள்ள குப்பையெல்லாம்பெருக்கி நம்முடைய கழனியிற் கொட்டவேணும் இதுவெல்லாஞ் செய்வையோ.

சந்திரமதி விருத்தம்.

அடிமையாய்க் கொண்டநீங்க ளறைந்திடு மொழிக்குவேறே
தடையது சொல்வதுண்டோ சகலவே லைகளுஞ்செய்யக்
கடமையுள் ளவர்களாலே கட்டளைப் படியேநாங்கள்
திடமுடன் செய்குவோஞ்சந் தேகமே வேண்டாமம்மா.

---

## சந்திரமதிசொல் தரு.

[மோகமுனேதாளலோ முத்தேபெட்டோராசாமி]

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அன்னையேநீர்சொன்னவேலை யட்டியில்லாமற்செய்வேனே

அநுபல்லவி.

என்னைநீரும் அன்னியமாய்
என்னிவிடவேண்டாமம்மா
சின்னவனுஞ் சொன்னவேலை
தன்னைச்செய்குவான் சும்மா (அன்னை)

---

(சந்-வ-ம்.) ஆஆ தாயே தாங்கள் காலாயிட்டவேலைகளைக் கையாற்செய்யத் தயாராயிருக்கின்றேன் என்புதல்வனும் அவ்விதமாகவே செய்வானாதலால் இனிமேலெங்களை விகற்பமாயெண்ணவேண்டாமம்மா.

(கால-டி-வ-ம்.) ஆனால் இன்னுங்கொஞ்சங் களிவானவேலை களிருக்கு அதுகளையுஞ் சொல்லட்டுமா சந்தி.

(சந்-வ-ம்.) அப்படியே சொல்லுங்களம்மா.

(கால-டி-வ-ம்.) அடி சந்தி பார் ஆத்தவேலை தீர்ந்தபின்னே மாட்டின்பின்னே திரிந்து சாணமெடுத்துவந்து முட்டைதட்டவே ணும் நித்தியம் பதினகலநெல்லவித்துக்கொட்டி நண்ணுயுலர்த்திக் குத்தவேணும் நேக்குத்தள்ளாத வேலைகளெல்லாஞ் செய்யவே ணும் நேக்குச்சற்றே கால்பிடிக்கவேணும் நோக்குச் சட்டமாய்க் கூழ்ச்சாதிக்கிறேன் நீயொரேவேளையாய்ச் சாப்பிட்டுக்கிண்டு ஆத் துவேலையிற் ஜாக்கிரதையாயிரடி சந்தி.

(சந்-வ-ம்.) அப்படியே நடந்துகொள்கின்றேனம்மா.

(கால-டி-வ-ம்.) ஏதோ நேக்குக் கைபழகியிருக்கிறது தெரி யட்டும் இந்தக் குடத்தையெடுத்துக்கிண்டுபோய் அந்தத் தொட்டி யில் ஜலமொண்டுவாபார்ப்போம்.

(சந்-வ-ம்.) அப்படியே மொண்டுவருகின்றேனம்மா.

சந்திரமதி விருத்தம்.

சத்திய மாகராங்கள் தரணியை யாண்டபோது
பத்தரை மாற்றுயுள்ள பசியபொற் குடமெடுக்குஞ்
சித்திரக் கையினாலே சீண்டுதற் கொவ்விடாத
பித்தளைக் குடத்தைத்தூக்கப் பிஞ்ஞகா விதித்திட்டாயோ.

---

சந்திரமதிசொல் தரு.

[பஞ்சமாபாதகம்படாதோ எந்தன் பாவவினைகளுன்னைத்தொடாதோ]

என்ற ப்ரமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-திரிபுடை-தாளம்.

கண்ணிகள்.

சுத்தப்பொற்குடந்தொட்ட கையாலே-யிந்தப்
பித்தளைக்குடஞ்சீண்ட விதிவசமோ
தெண்ணீரதனைத்தொட்ட கையாலே-உவர்நீரைத்
தண்ணீரதனைமொள்ள விதிவசமோ
மைந்தன்றனைச்சுமந்த என்னிடையும்-இந்த
மொந்தைக்குடஞ்சுமக்க விதிவசமோ



(சந்-வ-ம்.) அப்படியே ஜலங்கொண்டு வந்துவிட்டேனம்மா.

(கால-டி-வ-ம்.) அடிசந்தி எதுக்கடி நீளக்க முத்தமெல்லாஞ் சிந்திக்கிண்டுவந்தாய் தளம்பாமற் கொண்டுவரப்படாதோ நல்லது இந்தத் தெருமுற்றத்துக்குச் சாணந்தெளியடி பார்ப்போம்.

(சந்-வ-ம்.) அப்படியே தெளிக்கின்றேனம்மா.

சந்திரமதி விருத்தம்.

மங்கிலாக் கீர்த்திபெற்ற மன்னனை மணந்தநாளுங்
குட்டிலா மற்படிக்குச் சர்க்கரைப் பாலாயுண்ணக்
கெட்டிபா யமைத்ததங்கக் கிண்ணமும் பிடித்தகையால்
எட்டியே குரவன்சட்டி யெடுத்திட விதித்தாயீசா.

---

சந்திரமதிசொல் தரு.

[மல்லிகைமுல்லைமலரையிறைத்தகையாலே]

என்ற சருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு,

இராகம்-ஏதுக்குலகாம்போதி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

தங்கக்கிண்ணமெடுத்துத் தாங்கமாய்ப்பிடித்த கையாலே-இந்தச்
சட்டிதனைத்தொடத் தலைவிதிநேர்ந்ததே தெய்வமே
சந்தனம்புனுகத்தர் சவ்வாதுகரைத்த கையாலே-இந்தச்
சாணந்தனையெடுத்துத் தையல்கரைக்கலானேன் தெய்வமே
பன்னீர்தனையெடுத்துப் பாங்காய்த்தெளித்த கையாலே-இந்தப்
பாழுஞ்சாணத்தண்ணீரைப்பாவிதெளிக்கலானேன்தெய்வமே
என்னையடிமையாக்கி யித்தொழில்செய்யவே வைத்ததோ-எனக்
கிப்படிவருமென்று சொற்பனமறியேனே தெய்வமே

---

(சந்-வ-ம்.) அப்படியே சாணந்தெளித்துவிட்டேனம்மா.

(கால-டி-வ-ம்.) அடிசந்தி ஏதடி கட்டியுங்க தங்கமுமாயிருக்கு நன்னாய்க் கரைக்கவில்லையோ நல்லது இந்தத் துடைப்பத்தாலே முற்றம்பெருக்கடி பார்ப்போம்.

(சந்-வ-ம்.) அப்படியே பெருக்கின்றேனம்மா.

சந்திரமதி விருத்தம்.

ஏகபோ கமதாய்நானு மிருந்தகாலத்தில்வேர்வை
போகவே வீசுதற்குப் பொன்னினு லமைத்துவைத்த
தோகைகல் விசிறிகொண்ட சுந்தரக் கையினாலே
பாகமாய்த் துடைப்பந்தன்னைப் பற்றிட விதித்தாயோ.

சந்திரமதிசொல் தரு.

[ஐயோவொரு பெண்பிறந்தகதையை
யாருடன்சொல்வேனம்மா திரிசடையே]
என்ற இராமநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.
கண்ணிகள்.

தோகைவிசிறிகொண்டன் பாகவினைகையாற்
துடைப்பம்பிடிக்கலாச்சே ஈஸ்வரனே
குளிக்குவேல்செய்வதற் கனந்தம்பெண்களிருந்தும்
குளிக்குப்பெருக்கலானேன் ஈஸ்வரனே
வேண்டியதாதிகள்ளைத் தாண்டவன்காணுமிந்த
வேலைசெய்யநேர்ந்ததிதே ஈஸ்வரனே
சதென்னமுன்செய்தேனோ ஏதுதானுமறியேனே
என்னதான்செய்வினையோ ஈஸ்வரனே

(சந்-வ-ம்) அப்படியே முத்தம்பெருக்கிவிட்டேனம்மா.

(கால-டி-வ-ம்.) அடி சந்திரமதி கட்டைத்துடைப்பத்தால முத்தமெல்லாஞ் சிந்திவிட்டதே கெட்டியாய்ப் பிடிக்கவில்லைப் போலிருக்குதல்லது இந்தச் சாணத்தையெடுத்து முட்டைதட்டடி பார்ப்போம்.

(சந்-வ-ம்.) அப்படியே தட்டுகின்றேனம்மா.

சந்திரமதி விருத்தம்.

சீதமாய்க் கனகமேறு நீலிலக் குன்றையாண்ட
போதகி சயமதாகப் பூவையான் சேனிசேர்த்து
மாதவ மகனுக்காக மாப்பிளைச் சாணித்தகையிற்
பேதயாய்ச் சாணந்தன்னைப் பிசைந்திட விதித்தாயோ.



## சந்திரமதிசொல் தரு.

[அடிபாவி துணிந்துவெட்டக்கைவருமோ இந்தப்
பாதகத்தைப்பார்க்கவோநான் காத்திருந்தேன்]
என்ற சருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்

ஐயோ சர்க்கரைமாப்பிசைந்த கையாலே-இந்தச்
சாணிப்பிசையலாச்சே சங்கரனே
ஐயோ லட்டுருண்டைபிடித்த கையாலே-சாணந்
தொட்டுருண்டைபிடித்தேன் சங்கரனே
ஐயோ அதிரசந்தட்டியவென் கையாலே-சாணம்
அள்ளிமுட்டைதட்டலானேன் சங்கரனே
ஐயோ அழுக்குப்படாதிருந்த என்மேனி-இப்ப
அமர்ந்ததையாசாணமாகச் சங்கரனே
ஐயோ ஒருநாளுஞ்செய்தறியா இவ்வேலை-எனக்
குற்றதுவுமுன்செயலோ சங்கரனே.

---

(சங்-வ-ம்.) அப்படியே முட்டைதட்டிவிட்டேனம்மா.

(கால-டி.-வ-ம்.) அடிசந்தி ஏதடி நீதட்டினமுட்டையெல்லாம் பிண்டுபிண்டுவிழறது நன்றாய்ப்பிசைந்து தட்டவில்லையோ நல்லது இந்தநெல்லைக்குத்தி அரிசிவேறு உமிவேறு தவிடுவேறு பிரித்துவையடி பார்ப்போம்.

(சங்-வ-ம்.) அப்படியே குத்துகிறேனம்மா.

### சந்திரமதி விருத்தம்.

பகையிலா மற்படிக்குப் பாரினை யாண்டபோது
தகைமையாய் மன்னர்யாருந் தந்திடுங் கப்பமெல்லாந்
தொகைதொகை யாகவாரிச் சொகுசுடன் பார்த்தகையால்
வகையுடன் நெல்லைத்தானே வாரிட விதித்தாயீசா.

சந்திரமதிசொல் தரு.

[மல்லிகைமுல்லைமலரையிறைத்தகையாலே]

என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-சாபு.

கண்ணிகள்

மன்னர்தரும்பணத்தை வாரியெடுத்தகை யாலே-நெல்லை
வாரிவாரியெடுத்து வைக்கவும்விதிதானோ ஈசனே
சந்தோஷமாய்ப்பணச் சாலையிற்பொன்கொட்டுங் கையால்-இந்தக்
குந்தாணிதனில்நெல்லைக் கொட்டவும்விதிதானோ ஈசனே
சித்திரக்கோலினிற் செங்கோற்பிடித்தகை யாலே-நெல்லைக்
குத்தவுலக்கைபி டித்திடவிதிதானோ ஈசனே
முனந்தலைவணங்காமல் மோடியாயிருந்தேனே ஈசனே-இப்பக்
குனிந்துகுனிந்துநெல்லைக் குத்தவும்விதிதானோ ஈசனே
அடுப்புத்தீயூதினு லங்கம்நோகுமென்றிருந்தேன் ஈசனே-இப்ப
இடுப்பொடிந்திடநெல்லை யெட்டிக்குத்திடலாச்சே ஈசனே
மைகண்ணுக்கிட்டாக்காற் கைகடுக்குமென்றிருந் தேனே-இப்ப
மார்படைத்திடக்குத்தி மனமுங்கருத்ததே ஈசனே
செம்பஞ்சுகுடிச் சிவந்தமலர்க்கையி னாலே-இந்தச்
செக்குலக்கைபிடித்துச் செந்தழும்பாச்சுதே ஈசனே
முத்துக்கள்தனையள்ளி முறத்திற்புடைத்தகை யாலே-இப்பக்
குத்தியநெல்லையள்ளிக் கொழிக்கவும்விதிதானோ ஈசனே
கதம்பப்பொடியிர்த்தாற் களைக்குமென்றுடலெல்லாம் ஈசனே-இந்தக்
கப்பிபுடைக்குமுன்னே கப்புதேதவிடையோ ஈசனே
சலிக்காமல்நானிந்தத் தரணியையாண்டேனே ஈசனே-இப்பத்
தவிடுவேறுமிவேறுய்ச் சலிக்கவும்விதிதானோ ஈசனே
விதவிதமாய்ப்பன்னீர் மேவுமென்மேனியில் ஈசனே-இந்த
வியர்வையொழியப்பல வேலைகள்செய்தேனே ஈசனே

(சந்-வ-ம்.) அப்படியே நெல்லைக்குத்தி அரிசிவேறு உமி வேறு தவிடுவேறாகப் பிரித்துவைத்து விட்டேனம்மா.

(கால-டி-வ-ம்.) அடி சந்தி எதடி அரிசியெல்லாம் நாய்யுங் குறுணியுமாயிருக்கு உறக்கக்குத்திவிட்டையோ நல்லது நொய் கஞ்சு காய்ச்சாதிக்கிறேன் சாப்பிட்டுக்கொள்ளடி சந்தி.



(சந்-வ-ம்.) கூழிட்டாலுந் தேவாமிர்தமாயெண்ணிச் சாப்பிட்டுக்கொள்கின்றேனம்மா.

(கால-ர்-வ-ம்.) அடி காலகண்டி இவளுக்கு வேலையிட்டையே இந்தப் பயலுக்கும் வேலையிடேண்டி.

(கால-டி-வ-ம்.) நீர் பட்டுக்கிடந்திரோ குடுமியறுப்பன் நீர் தானே யிந்தப்பயலுக்கு வேலையிடுங்காணும் நேக்கு இந்தச் சந்தி போரும்.

(கால-ர்-வ-ம்.) அடாய் தாசா நேக்கு வேலையிடுகிறேன் கேட்கிறயோ.

(தேவ-வ-ம்.) அப்படியே கேட்கின்றேன் ப்ரபு.

காலகண்டையர் விருத்தம்.

விடியுமுன் காடுசென்று விறகிரு சுமையும்பின்னுந்
தடியுடனிலையுமூனு சுமையொடு தெர்ப்பைப்புல்லும்
பிடிபிடி யாகக்கொய்து பெருஞ்சுமை யாறுகட்டி
நொடியினி லெடுத்துக்கிண்டு நன்மையாய் வருகுவாயோ.

(கால-ர்-வ-ம்.) அடாய் தாசா பார் நீவிடிய ஒருசாமப்போதுக்கு எழுந்து காட்டுக்குச்சென்று விறகுரண்டுசுமை இலைமூனு சுமை தருப்பைப்புல் ஆறுசுமையுமெடுத்துக்கிண்டு உதயத்துக்கு முன்னதாகவே வந்து சேரவேணும் இந்தவேலை நீசெய்வையோ.

(தேவ-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) ஆனால் இன்னுங்கொஞ்சஞ் சுளிவான வேலைகளிருக்கு அத்தையுஞ்சொல்லட்டுமா தாசா.

(தேவ-வ-ம்.) அப்படியே சொல்லுங்கள் ஸ்வாமி.

காலகண்டையர் விருத்தம்.

நித்தியமுங் காற்பிடிக்க வேணும்பின்னும்
நேர்த்தியுள சோமனது மூனுமற்ற
உத்தரிய மேழுடன்கௌ பீனந்தாண்டு
உள்ளவையா றதனைநன்றாய் மூனுவேளை
சுத்தமதாயத் துவைத்துவர வேணுங்கொஞ்சஞ்
சும்மாவீண் பொழுதிருந்தாற் கன்றைமேய்த்து

பத்தினியாள் நோக்கவிக்குங் கூழையுண்டு
பக்குவமாய் மற்றவையுஞ் செய்குவாயே.

(கால-ர்-வ-ம்.) அடாய் தாசா பார் நேக்கு காற்பிடிக்கவேணும் இன்னும் என்னுடைய வேஷ்டிமூனு, உத்தரீகம் ஏழு, கௌபீனம்துண்டு ஆறு, இவைகளை யொவ்வொருதினம் மூனுவேளை நன்னாய்த்தோய்க்கவேணும் இந்தவேலை முடிந்து கொஞ்சந் தேசகாலமிருந்தாற் கன்றுக்குட்டி மேய்த்துவரவேணும் என்னுடைய ஆம்பிடையாள் நோக்குச் சட்டவட்டமாய்க் கொட்டைப்பாக்களவு கூழ்ச்சாதிப்பள் அதை நித்தியம் ஒருவேளையாய்ச் சாப்பிட்டுக்கிண்டு எவினவேலைகளுக்கு ஜாக்கிரதையாயிருக்கவேணுந் தெரியுமா.

(தேவ-வ-ம்.) அப்படியே நடந்துகொள்கின்றேன் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) ஆனல் எனது ஆம்பிடையாள் கூழ்ச்சாதிப்பள் அதைப் புசித்துவிட்டுக் கன்றுக்குட்டியை மேய்த்துவா பார்ப்போம்.

(தேவ-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ஸ்வாமி.

(கால-ர்-வ-ம்.) அடி காலகண்டி இந்தப்பயலையு மிட்டுக்கின்டுபோய்க் கூழ்ச்சாதியடி கன்றுக்குட்டி மேய்த்துவரட்டும்.

(கால-டி-வ-ம்.) பட்டுக்கிடப்பன் நேக்குத் தெரியும் உம்முடைய வேலையைப்பாருங்காணும் வெர்ன்னே இளவுகொடுக்கிறீர்.

(கால-ர்-வ-ம்.) இந்த அறுதலிமுண்டையிடத்தில் திட்டுவாங்கப்படலை நான் வெளியிலாவது போய்வருகிறேன்.

(கால-டி-வ-ம்.) பாழும்பிணமே அப்படியாவது தொலைந்து போம் * அடாய் தாசா நீயுங்கூடவா கூழ்ச்சாதிக்கிறேன்.

(தேவ-வ-ம்.) அப்படியே வருகின்றேனம்மா.

பொது விருத்தம்.

வீரவா கென்னைத்தோட்டி வேள் திருத் தோளின்மீது
காரண மானமாட்டுக் காவடிச் சுமையைவைத்துத்
தீரமாய்ப் புலைச்சேரிக்குச் சீக்கிர மழைத்துச்சென்று
தாரமா யமைந்தபேசத் தையல்முன் புகலுவானே.



வீரவாகுத்தோட்டிக்கும் தோட்டிச்சிக்குஞ்
சம்பாஷணை.

(வீர-வ-ம்.) டீ யிவளே தோட்டிச்சி வூட்டுக்குள்ளர என்னடி செஞ்சுக்கிட்டு இருக்குரே.

(தோட்டிச்சி வசனம்.) ஏனே தோட்டி எம்புருசா ஒன்னைக்காணுதே வூட்டிலிருக்கிராப்போலெயும் வாசலிலிருக்கிராப்போலெயுமிருக்குதே எம்மனசு சட்டிமேலேயிருக்குதா பானெமேலேயிருக்குதா புள்ளெமேலேயிருக்குதா ஓம்மேலேதானேயிருக்குது ஏனே நல்லது இருக்கட்டா பாப்பான் வூட்டுக்குப்போனயே அங்கெ யாருசெத்துப்போனுங்கோ.

(வீர-வ-ம்.) டீ யிவளே தோட்டிச்சி பாப்பான் வூட்டுலெ ஒருத்தருஞ்சாவுலே ஒருமாடுதாஞ் செத்துக்கெடந்துச்சு அதையெடுத்துக்கிட்டு வந்தேண்டி.

(தோட்-வ-ம்.) ஏனே அது இருக்கட்டா நானு ஓம்போலெ ஒட்டிலையா எனுதிப்படிச்சேன் சும்மா நோப்பாளம்வருதே அந்த மாடு தூக்கிக்கிட்டுவந்த கூலியெங்கே அந்தத்தோலெங்கே காலெங்கே வாலெங்கே சும்மா இப்படிச் சாக்குவெச்சுக்கிட்டுச் சின்னப்பறச்சி வூட்டுக்குப்போனயோ.

(வீர-வ-ம்.) டீ தோட்டிச்சி எங்கூத்தியாரே இந்தபாரடிமுனு மாடு தூக்கிவந்திருக்குறேன்.

(தோட்-வ-ம்.) ஏனே எம்புருசா அதிருக்கட்டும் இவனாடா கூட்டிக்கிட்டு வந்திருக்குரே.

(வீர-வ-ம்.) டீ தோட்டிச்சி இவனை வெலைக்கு வாங்கிக்கிட்டு வந்தேண்டி..

(தோட்-வ-ம்.) கண்ணுக்குட்டித் தோலுரித்த காசைக்குடுத்திட்டயா நல்லது இருக்கட்டும் என்னவெலை.

(வீர-வ-ம்.) ஆரோ வொரு ஆண்டை பத்தாயிரம் வெலையின்னு சொன்னுங்கோ நாங்குடுத்து வாங்கினேண்டி.

(தோட்-வ-ம்.) ஏனே பவுசுகெட்டவனே நீயென்ன பறயன் மகந்தானு இது ழம்பட்டகடனு பத்தாயிரம் பொன்னுக்குடுத்தியே இவன்தோலெ வுரிப்பானு மாட்டெயிசிப்பானு பொணஞ்சுடு

வாறு தோட்டிவொடமையைத் திருடாமலிருப்பானு ஏனே பாப்பான்மகனே என்னவேலை செய்வானின்னு வாங்கிக்கிட்டு வந்தயடா புளுகெட்டவனே.

(வீர-வ-ம்) டீ யிவளே இவன் எல்லாவேலையுஞ் செய்வானின்னுதான் வாங்கிக்கிட்டுவந்தேண்டி.

(தோட்-வ-ம்.) ஏனே எஞ்சாமி இவனேப்பாத்தாப் பயமாயிருக்குதே இவனேவெச்சு நீதான் வேலைவாங்கனுமடா.

(வீர-வ-ம்.) டீ யிவளே நீ சும்மாயிருடி இடுப்புக்கரிவொதச்சு வேலைவாங்குரண்டி.

(தோட்-வ-ம்.) டே சாமி ஓம்பாடு அவம்பாடு எங்கிட்டச் சொல்லாதே.

(வீர-வ-ம்.) டே ஆண்டே ஒம் பேரென்ன இன்னெருக்காச் சொல்லு.

(அரி-வ-ம்.) எனது பெயர் அரிச்சந்திரன் வீரவாகு.

(வீர-வ-ம்.) நல்லாயிருக்குதுச்சுபோ அந்தப்பேரை யின்னமா வெச்சுக்கிட்டு அருக்குரா எங்கொலத்தெக் கெடுக்குவா பாக்குரா.

(அரி-வ-ம்.) ஆனல் நீ வேறுபெயரிட்டாலும் வைத்துக்கொள்கின்றேன் வீரவாகு.

(வீர-வ-ம்.) இப்பத்தான் எனக்கும் எங்கதோட்டிக்கிக்குஞ் சந்தோசம்டீ யிவளே இவனுக்கு என்னபேரு வெய்க்காலம்.

(தோட்-வ-ம்.) ஏனே தோட்டி எப்பவும் நான் வெச்சாத் தானே ஒம்மனசுக்குச் செரியாயிருக்கும்.

(வீர-வ-ம்.) அதாண்டி எம்பொஞ்சாதி ஒனக்கும் எனக்கும் பண்ணிவெச்சாப்போலிருக்கும்.

(தோட்-வ-ம்.) டே சாமி இவனுக்கு அரிச்சத்தோட்டின்னு வெய்க்கலாண்டா.

(வீர-வ-ம்.) டே ஆண்டே எம்பொஞ்சாதி வெச்சதே யெனக்குச் செரியாப்போச்சு ஒனக்கு அரிச்சத்தோட் டின்னுபேரு வெச்சேண்டா.

(அரி-வ-ம்.) அதைப்பற்றி யெனக்குச் சந்தோஷந்தான் யானினிமேற் செய்யவேண்டிய வேலையைச் சொல் வீரவாகு.





(வீர-வ-ம்.) டே அரிச்சத்தோட்டி நாம் பணத்தை குடுத்து வாங்கி ஒன்னிடம் வேலைவாங்காமே மாப்புளேபோலே சும்மா வெச்சிருப்பேன்னு பாக்குறாயோ இந்தக்கத்தியையெடுத்து இந்த மாட்டையறுத்துத் தோலையுரிபாக்கலாம்.

(அரி-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் வீரவாகு.

அரிச்சந்திரன் விருத்தம்.

சத்தியந் தவறிடாமற் றருமமுங் கைவிடாமற்<br>
பத்தியாய்க் கடவுள்பாதம் பணிவது மறந்திடாமற்<br>
புத்தியா புலகையாண்ட புரவலன் யானுமிந்தச்<br>
செத்தமா டறுப்பதற்குத் தீவினை யென்செய்தேனே.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

[கணபதிகஜவதனு]

என்ற க்ருத்திகையின் வர்னமெட்டு.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுதலைவிதிவசமோ காசிவிஸ்<br>
வேசனே இதுதலைவதிவசமோ.

அநுபல்லவி.

சதியெனக்கிதுதானே கருணையில்லாததேனே<br>
சதிகளேதேனுஞ்செய்தேனே அறிகிலேனையா (இது)

தோட்டியாயிருக்கவும் மாட்டினையறுக்கவுந்<br>
சூட்டியதோலுரிக்கவும் ஆச்சுதேயையோ (இது)

கையறுபட்டதே கனாத்தங்கொட்டுதே<br>
மெய்யும்நடுக்கமிட்டதே என்செய்வேனையோ (இது)

---

(அரி-வ-ம்.) ஆஆ விஸ்வேசா என்னை யிக்கெதிக்காளாக்கி வைத்தனையே ஆஆ அரசனாயிருந்த நான் புலையனுக்கடிமைப்பட்டு சந்திரவாளாயுதங்கொண்ட சங்காரக்னியாற் புலால்நாற்றம்பொருந்திய கத்தியை பிடித்துச் செத்தமாட்டையறுத்துத் தோலுரிக்கும் படி செய்தனையே ஆஆ அறுக்க கைதெரியாமற் கையறுபட்டு

விட்டதே ஆஆ உதிரம் வடிகின்றதே ஆஆ என்னுடலெல்லாம் நடுங்குகின்றதே ஆஆ ஈசா இதுவுந் தலைவிதிதானு யானென் செய்வேன்.

வீரவாகுத்தோட்டி விருத்தம்.

கெடுத்துவிட்டா யனிச்சாநீ மாட்டுத்தோலைக்
கிழித்துவிட்டாய் கைவிரலை யறுத்துரத்தம்
வடித்துவிட்டுப் பார்த்துக்கொண் டழுகின்றாயே
வையகத்தை யாண்டமன்ன னுரையாலே
அடுத்ததல்ல வுனக்கிந்த வேலைதானும்
அணிந்திருக்குந் துணிகளெல்லா மவிழ்த்துப்போடு
கொடுத்திடுமிவ் வுடுப்புகளை யெடுத்துமாட்டிக்
கொள்ளதன்பின் வேலையொன்று விள்ளுவேனே.

(வீர-வ-ம்.) டேய் அனிச்சா நல்லவேலை செஞ்செய் நானுமாட்டுத்துத் தோலுரிக்கச்சொன்னதுக்கு ஏந்தோலையுங்கிளுச்சு நாசமாக்கிப் போட்டதுமல்லாமே கையயறுத்துக்கிட்டு நெத்தஞ் சொளக்குச்சொளக்கின்னு வடியப்பாத்துக்கிட்டு வூளையிட்டு அழுவுரயேநீ தானு இந்தவேலைசெஞ்சுபோடுறவன் நீராசாவாயிருந்தபடியாலேஇந்தவேலையெல்லாம் ஒன்னுலேயாவாது நல்லது அந்தத் துணிகளையெடுத்துப்போட்டு இந்தவுடுப்புகளை மாட்டிக்க அப்புறம் வேலைசொல்றேன்.

(அரி-வ-ம்.) இதோ அந்தப்படியே மாட்டிக் கொண்டேன் வீரவாகு.

வீரவாகுத்தோட்டி விருத்தம்

இந்நகர்ச் சுடுகாட்டுக் கேகியங்கே
யெப்பொழுதும் வரும்பிணங்க ளொவ்வொன்றுக்குந்
தந்திடும்வாய்க் கரிசியுடன் நோய்பிச்சோறு
தக்கமுழச் சீலையுடன் கொள்ளிக்காசு
விந்தைபெறுங் காற்பணமுஞ் சுட்டகொள்ளி
விறகினையு மெந்தனுக்கே யனுப்பிவிட்டுச்
சுந்தமா யங்கிருந்து பிணங்களெல்லாஞ்
சுட்டிருப்பா யுனக்குமிது திட்டந்தானே.



(வீர-வ-ம்.) டே அனிச்சா நீ விருவிரின்னு இந்தவூருச் சுடுகாட்டுக்குப்போயிச்சேந்து அங்கெ சுடவாரபொணம் ஒவ்வொண்ணுக்கும் வாக்கருசி நோம்பிச்சோறுமொளச்சீலை கொள்ளிக்காசு காப்பணமுங் குடுப்பாங்கோ அதைவாங்கி யெனக்கு அனுப்பிச்சிட்டுப் பொணங்களைச்சுட்டுச் சாம்பலாக்கிப்போட்டு மிச்சப்பட்டகட்டெமுட்டெகளையும் எனக்கு அனுப்பிச்சிட்டு நீயங்கயேயிருக்கணுந் தெரியுமா.

அரிச்சந்திரன் விருத்தம்.

முன்னமே கொடுத்தவேலை முடிவுறு திருந்தாலே
மன்னவ னென்றேநீயு மனதினிற் றயவுவைத்து
பின்னுமோர் வேலைதன்னைப் பிரியமா யுரைக்கலானுய்
இன்னமோர் விஷயந்தன்னை யியம்புவேன் கேளாயப்பா.

அரிச்சந்திரன்சொல் தரு.

[ஒருமாதுவரச்சொன்னுளென்னைத்தானே]
என்றட்ராமாஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நீயுஞ்சொன்னபடி செய்வேனென்று கேளே

அநுபல்லவி.

ஒன்றுகேளே மூன்றுவேளை பசிதாளேன்-நீயுஞ்(சொன்).

சரணங்கள்.

அன்னமெனக் கார்கொடுப்பா ரங்கே
எனக்கங்கே பசிக்குண்க வழியெங்கே-நீயுஞ்(சொன்)
ஈகைமிக வள்ளவீர வாகே
வீரவாகே வகையாகச் சொல்லேயகே-நீயுஞ்(சொன்)

(அரி-வ-ம்.) ஆஆ வீரவாகு நீ பாஷித்தபடியே யான்சுடலைக்குச்சென்று காத்திருந்து அங்குவரப்பட்ட பிணங்களுக்குக் கொள்ளிக்காசு வாய்க்கரிசி முழச்சீலை பிண்டச்சோறு காற்பணமுதலானதும் வாங்கியனுப்புவதுடன் மீந்த கட்டைமுட்டை பாடைக்கோய்புமுதலானது மனுப்பிவிடுகின்றேன் ஆனல் அங்கிருந்து

வயறு வளர்க்கவேண்டுமே அதற்கேதாவது ஒருவழி சொல் வீர வாகு.

(வீர-வ-ம்.) அனிச்சா அங்கெ வேறே யென்னிருக்குது ஒன்னுமில்லே நோம்பிச்சோறு தானிருக்குது அதுபோனுமா வுனுக்கு.

(தோட்-வ-ம்.) ஏனே தோட்டிப்பறப்பயமகனே குடியானவனைக் கொண்டுக்கிட்டுவந்து பறச்சாதியிலேபோட்டு எம்பவுசையுங் கெடுத்துக் கொதைத்தையுங்கெடுத்ததுமல்லாமே நோம்பிச் சோத்தையுமா குடுக்கப்பாக்குறா நம்பஜாதியிலே கேட்டாக்கா ஒம்பவுசையுங் கெடுத்துப்போடுவாங்கடா பவுசுகெட்டவனே.

(வீர-வ-ம்.) டே யிவனே அப்பானே சாமியானே அதைக்குடுப்பேனுடே அனிச்சா அந்த வாக்கருசியை நீசோத்துக்கு வெச்சுக்கிட்டுமத்ததை யனுப்புச்சுப்போடு தெரியுமா.

(அரி-வ-ம்.) நல்லது அப்படியே செய்கின்றேன் விடைகொடு வீரவாகு.

(வீர-வ-ம்.) ஆனலப்படியே போயிட்டுவா.

---

பொது விருத்தம்.

சுடலையுங் காப்பேனென்ற தோன்றலும் புலைஞன்பாலே
விடையது பெற்றுக்கொண்டு வெட்டியான் வேஷங்கொண்ட
கடமையை மனத்திலுன்னிக் கவலையாய் வருந்திக்கொண்டு
தடமதை நோக்கியந்தத் தலைவனுஞ் செல்லுவானே.

---

அரிச்சந்திரன் விருத்தம்.

மதியணி சிவனேகாசி மாநகர் விஸ்வநாதா
கதியது நீயேயென்றுன் கழலிணை பணிந்ததற்குச்
சதியது செய்தேயென்னைத் தரணியோ ரேசவைத்தாய்
விதியிதோ தோட்டிபோல வேடமுங் கொண்டிட்டேனே.

---





## அரிச்சந்திரன்சொல் தரு

[விஸ்வேசாவுந்தனைநான் வேண்டினபலனிதுவோ]
என்ற நீதிநெறி அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ண்மெட்டு
இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சுந்தரவிஸ்வேசாவுன்னைத் துதித்தபலனிதுவோ
தோட்டியைப்போல்வேடங்கொண்டு சுடலைகாக்கச்செல்கிறேனே
தூயனே தூயனே தூயனே தூயனே (சுந்)

பங்கயகுலத்துத்திரி சங்குவயற்றிற்பிறந்தேன்
மங்களவயோத்திதனிற் செங்கோல்நடத்திச்சிறந்தேன்
வள்ளலே வள்ளலே வள்ளலே வள்ளலே (சுந்)

மங்கைசந்திரமதியை மனைவியாய்ப்படைத்தேனே
திங்கள்முகத்தேவதாசன் சேயனைக்கிடைத்தானே
தேவனே தேவனே தேவனே தேவனே (சுந்)

புவனமெண்டிசையுள்ளோர் புகழ்ந்திடவேவாழ்ந்தேனே
தவமுனிபால்விளைந்த சங்கடத்தாலேதாழ்ந்தேனே
சம்புவே சம்புவே சம்புவே சம்புவே (சுந்)

தேசமும்நகரிழந்தேன் தேவிமகனையிழந்தேன்
நீசனுக்கடிமையாக நேர்த்துமனமுங்குழைந்தேன்
நித்தனே நித்தனே நித்தனே நித்தனே (சுந்)

இறைவனென்றேயெல்லோரும் எந்தனைப்பணிவதுபோய்
பறையனைநான்பணியப் பண்ணினதுமுன்செயலோ
பரமனே பரமனே பரமனே பரமனே (சுந்)

இந்நகர்வாசிகட்கு ஏற்றசுடுகாடிதுவோ
அந்தமயானத்தினிலே எந்தவிதம்நானிருப்பேன்
அத்தனே அத்தனே அத்தனே அத்தனே (சுந்)

(அரி-வ-ம்) ஆஆ விஸ்வேசா உன்னைப் பூசித்ததற்குக்கிடைத்த பலனிதுதானா ஆஆ சூரியகுலத்துதித்த திரிசங்குமகாராஜனுக்குப் புதல்வனாகி அயோத்திக்கரசனாயமர்ந்து கற்பாசியாகிய சந்திரமதியைப் பட்டமகிஷியாகக்கொண்டு தேவதாசன் புத்திரனைக்கிடைக்கப்பெற்று வையமெண்டிசையுந் துதித்துக்கொண்டாடும்

படி கௌரதையுடன் வாழ்ந்த யான் விஸ்வாமித்திரர் வஞ்சனையி ஞல் நாடுநகர பவுஷ பாக்கியாதியும் மனைவிமைந்தனையுமிழந்து புலைஞனுக்கடிமைப்பட்டு வெட்டியான் வேடம்பூண்டு சுடலைகாக் கச்செய்துவிட்டனையே ஆஆ உலகத்தாரெவரும் என்னை வணங்கு வதுபோய் நான் பறையனைவணங்கிக் குற்றேவல்செய்யும்படி நே ர்ந்துவிட்டதே ஆஆ இக்காரிமாகனுக்கேற்பட்ட சுடுகாடு இது தான்போலிருக்கின்றதே ஆஆ இதிலெவ்விதமாயிருப்பேன் ஆஆ இனி விபாகுலப்பட்டென்செய்கின்றது நல்லது இம்மயானத்திற் கிடக்கின்ற பாடைக்கொம்புகளாற் குடிசைகட்டி அதிலிருந்து காலந்தள்ளி வருகின்றேன்.

பொது விருத்தம்.

முடியர சனுமங்குற்ற மூங்கில்க ளெடுத்துவந்து
குடிசையு மமைத்துநல்ல கொள்கையாய்ப் பரணுங்கட்டித்
தடியது கையிற்கொண்டு தக்கவப் பரணின்மீது
சுடலைகாத் திடவேகிற்கத் தோன்றலும் பயங்கொண்டானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

நாட்டினை யரசசெய்த ஞாயமு மகன்றிப்போது
தோட்டிபோல் வேடங்கொண்டு சுடலையைக் காக்கவென்று
கூட்டிவிட் டனையேயீசா திருசுரிதுவோ எந்தன்
மேட்டிமைச் சுற்றமிங்கே வெந்திடும் பிணங்கள்தானே.

அரிச்சந்திரன்சொல் தரு.

[சாத்திஹு-ன்மவர்சாச்சஸதாகாமுஹைமோா]

என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-ஏகதாளம்.

கண்ணிகள்.

கடவுளேயெனைச் சுடலைகாத்திடக்
கட்டளையிட்டாய்
அடரும்பேய்களாய்த் தொடரத்தனிமை
யாகவேவிட்டாய் (௧௨)



210

புதனமாகநான் இதனையெப்படிப்
பார்த்துக்கொள்ளுவேன்
யுமநானுமெவ் விதமதாகவே
நேரந்தள்ளுவேன் (௧௨)

பதினமிக வருத்திப்பயமுங்
காட்டுதேயீசா
அருத்தமதியைத் தரித்தகயிலை
யங்கிரிவாசா
நானுமுந்தனைத் தானுந்துணையா
நம்பினேன்காராய்
தீனரக்ஷக ஞனசிவ
தீவினைதீராய்

(அரி-வ-ம்.) ஆஆ ஜெகதீசா என்னை யிவ்விதஞ் செய்தும்படி செய்துவிட்டனையே ஆஆ இக்குற்றபேய்பிசாசுகளி யல்லாமல் வேறொரு துணையுமில்லையே ஆஆ யான் றனித் திருந்து மயானங்காத்து எவ்விதங் காலங்கழிப்பேன் ஆஆ இங்குற் பிரேதங்களைப் பார்க்கப்பார்க்க எனக்கு மிகுந்த பயங்கரமாயிருக் கின்றதேயிதற்கென்செய்வேன் ஆஆ ஈசா உன்னைத்தான் றுணை யாய் நம்பியிருக்கின்றேனாதலால் என்னைக் காத்துக் கவலையைத் தீர்த்து ரக்ஷிக்கவேண்டும் பிரபு.

பொது விருத்தம்.

வீரவா கிடத்தில்மன்னன் விலையது பட்டுச்செல்லச்
சேரமாய்ப் பின்றுயர்ந்த சுகுணமங் திரியுமந்த
ஊரெலாம் வேந்தன்றன்னை யுரிமையாய்த் தேடிக்கொண்டு
தூரமா யுள்ளதான சுடலையை யணுகினனே.

சத்தியகீர்த்தி விருத்தம்.

பொன்னது கொடுத்துவாங்கிப் புலைஞனு மழைத்துக்கொண்டு
முன்னதாய்ச் சென்றன்யானு முதல்வனைப் பின்றுயர்ந்து தன்
என்னமா யமதாய்த்தகாதே என்னைவிட் டகன்ற
மன்னனைத் தேடிக்கொண்டு வருகிறேன் காணகிலேனே.

### சத்தியகீர்த்திசொல் தரு.

[அடியனமேயெனைத் தனிமையாய்விட்ட மான்கண்ணே]
என்ற டிராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

எங்கள்துரைமன்னனைக் காணேனினி யென்செய்வேன்

அநுபல்லவி.

ன்செய்வேன் இனி யென்செய்வேன் (எங்கள்)

சரணங்கள்.

நருந்தெருவாய்ச் சுற்றித் தேடினேனே-வள்ளல்
ிவிடம் ஒன்றறியேன் குன்றுதுள்ளம்-ஐயோ
செய்வேன் இனி யென்செய்வேன் (எங்கள்)

பிதோ வொன்று தோன்றிடுதே-அந்தச்
ாவேள் இந்தவிடம் வந்ததுண்டோ-ஐயோ
என்செய்வேன் இனி யென்செய்வேன் (எங்கள்)

(சத்-வ-ம்.) ஆஆ எனதெஜமானுகிய அரிச்சந்திரமகாராஜா னவர் பறையனுக்கடிமையாகிச் சென்றவுடன் யான் பின்றுயர் ிசென்றேன் எவ்விதமாகவோ மாயமாய் மறைந்துவிட்டார்கள் காசிமாநகரத்திலுள்ள (ப்ராம்ம-க்ஷத்திரிய-வைஸ்ய-சூத்ராதி) வர் ணத்தாருடைய தெருக்களெல்லாந் தேடினேன் பறைச்சேரிக்குஞ் சென்று தேடினேன் ஓரிடத்திலாவது தென்படவில்லையே என்செ ய்வேன் நல்லது இங்கு சுடுகாடொன்று காணப்படுவதால் வீரவா ட்ட குற்றேவல்செய்ய வந்திருந்தாலுமிருக்கலாமாதலால் இங்கு ற்றிப்பார்க்கின்றேன் ஆஆ எனதரசன் வெட்டியான்வேடம் ண்டு இதோபரணின்மீது நிற்கின்றாரே ஆஆ இவருக்கிவ்விதியா ிக்கவேண்டும் ஆஆ மகராஜ் மந்திரி வந்தனம்புரிகின்றேன்.

(அரி-வ-ம்.) கல்யாண் ப்ரதான் இங்கேன்வந்தீர் என்ன விசே ம.

### சத்தியகீர்த்தி விருத்தம்.

ஐயனே யார்தோவே யடர்மணி முடிதரித்து
வையகந் தன்னையாண்ட வள்ளலே பொய்சொலாத



மெய்யனே புவியிற்கீர்த்தி விளங்கிடச் செய்யவந்த
துய்யனே நீருமிந்தச் சுடலைகாத் திடவந்தீரோ.

### சத்தியகீர்த்திசொல் தரு.

[தேவாவீதென்னமாயஞ் செய்தாயேயனியாயம்]
என்ற சதாரம்நாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

இறையேநீருமிப்போது இச்சுடலைகாத்தீரோ

அநுபல்லவி

பறையனடிமைகொள்ளப் பாரிலுன்னோர்களெள்ள (இறை)

சரணங்கள்.

காசிநகரமெல்லாங் கால்கடுக்கத்தேடினேன்
தாசனுமைக்காணுமற் றயங்கிமிகவாடினேன் (இறை)
இந்தவேலைக்குநீரும் வந்திடத்தகுதியோ
அந்தப்பாவிபிரமன் அமைத்ததலைவிதியோ (இறை)

(சத்-வ-ம்.) ஆஆ மகராஜ் தாங்கள் புலைனுக்கடிமைப்பட்டு உலகத்தார் நகைக்கும்படி சுடலைக்காக்கவா வந்துவிட்டீர்கள் ஆஆ தங்களைக்காசிமாநகர் முழுதுந்தேடி ஓரிடத்திலுங்காணமல் மனது வாடிச் சந்தேகத்தின்பேரில் இச்சுடலையுந் தேடிப்பார்க்கலாமெ ன்று வந்தேன் ப்ரபு ஆஆ சிற்றரசர்கள் வணங்கவும் அன்னநடை ப்பெண்களாடவும் கவிவலர் பாடவுமிராஜ்யத்தின்ற பொன்னரண்மனை யை விடுத்துப் பூதங்களும் பசாசுகளுங் கூத்தாடும்படியான சுடலை காக்கவா ப்ரம்மதேவன் லலாடத்தில் வரைந்தான் இதை யெவ்வி தங் கண்ணுற்பார்த்துச் சகிப்பேன் மகராஜ்.

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரதான் விதியைவெல்ல யாவரால் முடி யும் யானேதோ ப்ராரத்தகன்மவசத்தினுற் சுடலைகாக்க வந்துவிட் டேன் நீர் காலகாணஞ்செய்யாமல் அயோத்திக்குச்சென்று சுக மாய் வாழ்ந்துகொண்டிரும் ப்ரதான்.

(சத்-வ-ம்.) ஆஆ மகராஜ் தங்களன்னத்தைப் புசித்துப் பின் ளைபோலிருந்த யான் தங்களுக்கேற்பட்ட சுகதுக்கங்களை யனுப

வித்துக்கொண்டு தங்களுக்குவேண்டிய பணிவிடைகள் செய்துவருவேனேயன்றி ஒருக்காலும் பிரிந்துசெல்லமாட்டேன் மகராஜ்.

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் நீரென்னிடமிருந்து கஷ்டப்படக்கூடாதென்று தடுத்தேனேயன்றி வேறில்லை எனக்கு நேர்ந்தவிதியும்மையும்விடலைப்போலிருக்கின்றதே இனி யென்செய்கின்றது.

(சத்-வ-ம்.) தங்களுக்கு யாமொருபிள்ளை தானே அங்ஙனமிருக்க எனவ்வித சுகதுக்கங்களையனுபவிக்கக்கூடாது மகராஜ்.

(அரி-வ-ம்.) ஆனால் நீர் எனக்குக்கிடைக்கும் வாய்க்கரிசிகளைப் புல்லுக்குள்வைத்துப் பசுக்களுக்குக்கொடுத்து அதுதின்று சாணத்தில்விழக்கூடிய அரிசிகளையெடுத்துச் சமையற்செய்து போட்டுக்கொண்டிரும் நாமிருவரும் புசித்துக்கொண்டு நமது கஷ்டசம்பவந்திரும்வரை இம்மயானத்திலேயேயிருந்து காலந்தள்ளுவோம் ப்ரதான்.

(சத்-வ-ம்.) அப்படியே செய்வோ மகாராஜ்.

(அரி-வ-ம்.) ஆற்றங் சமீபத்தில் வீற்றிரும்

(சத்-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றேன்.

காசிகாண்டம் முற்றிற்று.

---

# மயானகாண்டம்.

பொது விருத்தம்

கைதுவளச் சந்த்ரமதி தேவதாசன்
  காலகண்ட வேதியரின் வீட்டில்வேலை
செய்துவா வும்வீர வாகுசொன்ன
  செயலதுபோ லரிச்சந்த்ரன் சுடலைகாத்து
உய்துவர வங்காசி நகர்தன்னில்
  உள்ளபிரா மணச்சிறுவர் வனத்திற்றெர்ப்பை
கொய்துவர வேணுமென்று வீதிதன்னிற்
  கூடுவார் வார்த்தைசொ லாடுவாரே.

---



## அசலாத்துப்பிள்ளைகள்வருந் தரு.

[தேமசதிவ்யமதே சரஸ்வதி தேமசதிவ்யமதே]

என்ற க்ருத்திகையின் வர்ணமெட்டு.

இராகம்ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாலர்கள்வந்தனரே அசலாத்துப்
பாலர்கள்வந்தனரே.

அநுபல்லவி.

சாலவேதெர்ப்பை சமித்திலைகொய்யக்
  காலையிலேயெழுந்து அசலாத்துப் (பாலர்)
சேஷாசுப்பென்று தெருவினில்நின்று
  பாஷித்துமகிழ்வுடனே அசலாத்துப் (பாலர்)
காட்டுக்குச்செல்லக் காலகண்டையர்
  வீட்டுக்குமுன்னாகவே அசலாத்துப் (பாலர்)

---

## அசலாத்துப்பிள்ளைகள் சம்பாஷணை.

(சுப்பு வசனம்) அடாய் சேஷா என் வெள்ளனேதேசகாலம் பண்ணிக்கிண்டிருக்காய் காட்டுக்குப் போகவேண்டாமோ.

(சேஷா வசனம்) அடாய் சுப்பு சாதங்கட்டத்தான் தேசகாலம் இதோவந்துட்டேன்.

(சுப்பு-வ-ம்) உங்காத்திலே என்னசாதமடாது.

(சேஷா-வ-ம்) எங்காத்திலே புளியோதரையடா உங்காத்திலையோ.

(சுப்பு-வ-ம்) எங்காலத்திலே சுத்திரான்னமடாய்.

(சேஷா-வ-ம்) நல்லது நாணுவல்லையோ.

(நாணு வசனம்) இதோ வந்துட்டேண்டாய்.

(சேஷா-வ-ம்) ஏதடாய் இவ்வளவு தாமசம்.

(நாணு-வ-ம்) எங்காத்திலே யப்பாவுக்கு சாதம்பனுமாரிக்கிண்டிருந்தாள் அதனாலே தேசகாலமாய்விட்டதடாய்.

(சேஷா-வ-ம்) நீயென்ன சாதமடாய் கொண்டுவந்தாய்.

(நாணு-வ-ம்) தத்தியோதனமும் புளித்துவயனுங் கொண்டு வந்திருக்கேண்டாய்.

(சேஷு-வ-ம்) நல்லது விஸ்வநாதன் வல்லையோ.

(விஸ்வநாதன் வசனம்) அடாய்சேஷு இதோவந்துட்டேன்

(சேஷு-வ-ம்) நீயென்ன சாதமடாய் கொண்டுவந்தாய்.

(விஸ்-வ-ம்) சர்க்கரைப்பொங்கல் கொண்டுவந்திருக்கேன்.

(சேஷு-வ-ம்) வரதனெங்கடாய் இன்னுங்காணோம்.

(வரதன் வசனம்) இதோ வந்துட்டேண்டாய்.

(சேஷு-வ-ம்) நீயென்னடாய் சாதங்கொண்டுவந்தாய்.

(வர-வ-ம்) சம்பாச்சாதங் கொண்டுவந்திருக்கேண்டாய்.

(சேஷு-வ-ம்) சரி போலாமண்ணே.

(வர-வ-ம்) நேக்கு அந்தக்காட்டுக்குப்போக வழிதெரியாதே நோக்குத்தெரியுமோ.

(சேஷு-வ-ம்)அடாய் வரதாய் நேக்குக்கொஞ்சம் ஞாபகப் பிசகாய்த்தானிருக்கு.

(வர-வ-ம்) பின்னே யென்னடாய் செய்கிறது.

(சேஷு-வ-ம்) இவாளொருவருக்குந் தெரியாதோ

(வர-வ-ம்) அவாளுக்குந் தெரியாதடாய்.

(சுப்பு-வ-ம்) அடாய் சேஷு இந்த ஆத்துக்காலகண்டியும் வருவளன்னோ அவளுக்கு நன்னாய் வழிதெரியும் அவளையும் அழைச்சுக்கிண்டு போகலாமே.

(சேஷு-வ-ம்) ஆனாலழைச்சுக்கிண்டுவாயேன்.

(சுப்பு-வ-ம்) யார்காணும் ஆத்திலே.

(கால-ர்-வ-ம்) யாரடாய் சத்தமிடுகிறவன்.

(சுப்பு-வ-ம்) தாத்தா நான்தான் சுப்பு.

(கால-ர்-வ-ம்) எதுக்கடாயழைக்கிறாய்.

(சுப்பு-வ-ம்) காட்டுக்கு நீர்வாரீரோ உம்மிட ஆம்பிடியாளை கூட்டிவிடுகிறீரோ.



(கால-ர்-வ-ம்) எதடாய் குசும்பத்தாயோழி சாதுரியம் பேசுறாய் நம்மிட ஆம்பிடையாளுக்கு வேலைவைக்கப்பார்க்கிறயோ நம்மிட அடிமைப்பய லொருவனிருக்கான் அவனையழைச்சுக்கிண்டு போங்கள்.

(சுப்பு-வ-ம்) அவனெவனோ பார்க்கட்டும் கூட்டியனுப்புஞ் சிக்கிரம்.

காலகண்டையர் விருத்தம்.

சந்திநீ சொல்லக்கேளாய் தார்வனத் தினுக்குச்செல்லும்
இந்தநற் சிறுவரோடே யேகியே சமினைதெர்ப்பை
விந்தைசேர் முன்னைமுஷ்டை மிக்கவேழ் யிலையுங்கொண்டு
வந்திடும் படியுன்புந்தன் மைந்தனை யனுப்புவாயே.

(கால-ர்-வ-ம்.) அடி சந்தி காட்டுக்குப்போகும் இந்த அசலாத்துப்பிள்ளைகளோடு உன்மைந்தனைக் கூட்டியனுப்பி கொஞ்சநேரத்தானே ஆளெடுப்புக்கு ரெட்டிப்பாக ஒருசுமை (தெர்ப்பை இலை-சமிதை-முன்னை-முஷ்டை) முதலானதுங் கொண்டுவரும்படி செய்யடி சந்தி.

சந்திரமதி விருத்தம்.

மறையவர் நீர்சற்றேனு மனதினி லிரக்கமின்றித்
துறையறி யாதவிந்தன் சுதன்றனை வனத்துக்கேகிக்
குறையிலாச் சமிதைதெர்ப்பை கொணர்ந்திடச் சொன்னீரையோ
சிறியவ னந்தவேலை செய்திடத் தெரியான்சாமி.

சந்திரமதிசொல் தரு.

[ஒருமாதவரச்சொன்னதென்னைத்தானே]

என்ற ராமநாடகவின் வர்ணமெட்டு.

இராகம்-காபி- தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயோ-சின்னஞ்சிறு பாலனிவனையா.

அநுபல்லவி.

இவனையா இதுபொய்யா மலர்க்கையா-ஐயோ (சின்)

சரணங்கள்.

பையன்றெர்ப்பை கொய்யத்தெரியானே
தெரியானே இவன்றானே மறையோனே-ஐயோ(சின்)

புலிகரடி. பலவுறையும் நாடு
இந்தநாடு பொல்லாக்காடு வருங்கேடு-ஐயோ(சின்)

கொஞ்சமேனும் நெஞ்சிளகா தேனோ
ஐயாஎனோ பகைகாரனோ நீதிதானோ-ஐயோ(சின்)

மைந்தனுக்கு கந்தவேலை கூறும்
வேலைகூறும் என்னைக்காரும் புகழ்சேறும்-ஐயோ(சின்)

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி இவனோ பாற்குடிமறவாத பாலக னயிருக்கின்றான் அங்ஙனமிருக்கக் கிஞ்சிற்றேனு மனமிரக்கமின்றி மிருகஜாதிகள்வாழுங் காட்டுக்குச்சென்று தெர்ப்பைமுதலானவை கொண்டுவரச்சொல்கின்றீர்களே இது தர்மமா அவனுக்குத்தகுந்தவேலை சொல்லுங்கள் ப்ரபு.

காலகண்டையர் விருத்தம்.

பொன்னது கொடுத்துவாங்கிப் பூவையே நோகுமிந்தச்
சின்னவ னுக்குமெந்தன் றேவிநாள் மூன்றுவேளை
அன்னமும் படைக்கவுட்கார்ந் தபக்கபக் கென்றுநன்றாய்த்
தின்னுவிட் டுள்ளவேலை செய்யவின் னணமேண்டி.

## காலகண்டையர்சொல் தரு.

[அங்குநானிருந்தவனை யழைத்துவந்தேனேண்டிகண்ணே]

என்ற இந்திரசபாவின் வர்னமெட்டு.

இராகம்-சுருட்டி-இந்துஸ்தானி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

என்னடிசந்தியுனக்கு இத்தனைவின்னாணப்பேச்சோ
சொன்னபணிசெய்வோமென்றசொன்னதெல்லாம்வீணாய்ப்போச்சோ()
வெட்டிச்சோறுதின்றுவிட்டு வேலைசெய்யஎன்னகஷ்டம்
மட்டரியபொன்னுங்கட்குக் கொட்டினதெனக்கேநஷ்டம் ()
ஞாயமதுசொல்லவந்தாய் நானுமதையேற்கேனடி
தாயமதையெண்ணியினித் தாக்ஷணியம்பார்க்கேனடி(என்)

214



பாலகனானுமென்ன பணிவிடைசெய்யத்தானே
விலமுடன்வாங்கிவந்தேன் சென்றுவரச்சொல்வாய்மானே ()

(கால-ர்-வ-ம்.) ஏதடி சந்தி நான் விலைக்கு வாங்கும்போது சொன்னவேலையெல்லாந் தட்டாமற் செய்வதாய்ச் சொன்ன நோக்கு இத்தனை வின்னாணப்பேச்சுக ளேதுக்கு பார்ப்பன் வீட்டுச் சோற்றை நன்றாய் மூனுவேளை தின்றுட்டு உங்களுக்கு வேலை செய்யக் கஷ்டமாயிருக்கோ பொன்னையள்ளிக் கொட்டினவனுக் கன்றோ தெரியும் நஷ்டம் ஏதோ பாலகனென்று பசப்புவருகிறயே அவனையும் வேலைக்காகத்தானே வாங்கிவந்தேன் இனிக் கொஞ்சமுந் தாக்ஷண்யம் பார்க்கமாட்டேன் சீக்கிரம்போய் வரச் சொல்லடி சந்தி.

சந்திரமதி விருத்தம்.

மதலையுஞ் சமிதைதெர்ப்பை மற்றுள காரைகூரா
விதமுள முன்னைமுஷ்டை விபரமே யறியமாட்டான்
சுதனைநீ ணாகப்போகச் சொல்வதிற் பயனேயில்லை
இதமுடன் யானுஞ்சென்றே யிவைகொணர்ந்திடுவேன்சாமி.

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனது பாலகன் சமித்தென்றும் தெர்ப்பையென்றும் காரைகூரையென்றும் முன்னைமுஷ்டையென்றும் விபரமறியாத பிள்ளையாதலால் அவன்போய் என்செய்வான் அவனுக்குப் பதிலாக யானுவதுசென்று கொண்டு வருகின்றேன் ப்ரபு.

காலகண்டையர் விருத்தம்.

கயல்விழிமா தேநீயுஞ் சென்றாலாத்துக்
காரியங்க ளுங்களப்பன் செய்குவானோ
வயறுபுடைக் கத்தின்னு தின்னேயெந்தன்
வாழ்வதனைக் கெடுப்பதினா லென்னலாபம்
பயலிவனுக் குத்தெரியா தேபோனாலும்
பாலர்களநன் றாயதெல்லாங் காட்டுவார்கள்
இயல்புடனே கொண்டுவரும் படியாய்த்தானே
இப்பொழுதே போய்வருகச் செப்புவாயே.

(கால-ர்-வ-ம்.) அடி சந்தி நீபோய்விட்டால் ஆத்துவேலைக ளெல்லாம் உங்களப்பன் செய்வனோ இவன் தின்னுதின்னு குடியைக்கெடுப்பதற்குத்தா னென்னலாபம் இந்தப்பயலுக்குத் தெரியாதேபோனாலும் அசலாத்துப்பிள்ளைகள் அந்தவஸ்துக்களை நண்ணையக் காட்டுவாள் கூடப்போய்க்கொண்டுக்கிண்டு வரச்சொல்லடி சந்தி.

சந்திரமதி விருத்தம்.

இனத்தையும் நகரம்நாடு மெழிலரை சுடனேயுள்ள
தனத்தையு முனிவருக்குத் தாரைவார்த் தளித்துவிட்டு
மனத்துய ருடனேயும்பால் வந்தடைக் கலம்புகுந்தோஞ்
சினத்தினை யெங்கள்மீது செலுத்திடத் தகுமோசாமி.

---

## சந்திரமதிசொல் தரு.

[மாதேநீயென்னோடுகூட வனத்துக்சேகலாம்வாடி]

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-இந்துஸ்தானி-ஏகதாளம்.

பல்லவி.

கோபமதுகொள்ளவேண்டாங் கூட்டியனுப்புவேன்சாமி.

அநுபல்லவி.

தாபமுழுதுஞ்சொல்லியுந் தயவுவல்லையேசாமி (கோப)

சரணம்.

வன்னவேயுலகில்யார்க்கும் வந்தவிதியைக்கடக்க
என்னன்னவுமாகிடுமோ உள்ளபடியேநடக்குங் (கோப)

---

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எங்கள்மீது கோபங்கொள்ளவேண்டாம் எங்கள் குறைகளைச்சொல்லியுந் தாங்கள் கிஞ்சிற்றேனு மேற்றுக்கொள்ளவில்லையே யினியென்செய்கின்றது யாவர்க்கு மேற்பட்ட விதியைக்கடக்க முடியாதென்பதுபோல எங்கள் தலையெழுத்தின்படிதானே நடக்கும் நல்லது தங்கள் மனம்போலவே பாலகனைக்கூட்டியனுப்புகின்றேன் ப்ரபு.

(கால-ர்-வ-ம்) நேசகாலமாகிறது சீக்கிரம் சீக்கிரம்.

கால-டி-வம்.) அடி சந்தி நீ யென்னசெய்வை இந்தப்பட்டுக்கிடப்பன் நான் முட்டைதட்டிச் சம்பாதித்த காசைக்கொட்டிக்



கொடுத்து உங்களை வாங்கிவந்து உக்காத்திவச்சுக்கிண்டு மூக்குப்பிடிக்க மூணுவேளை நண்ணைப்ந்தின்னுதற்குச் சட்டவட்டமாய்ச் சோறுபோட்டதினாலன்றோ இப்படி விண்ணாணம்பேசச்சொல்கிறது போடிபோடி பைத்தியகாரி அசலாத்துப்பிள்ளைகள் வெர்ன்னே காத்துக்கிண்டிருக்காள் சீக்கிரமனுப்பிவையேண்டி திருட்டுமுண்டே.

(சந்-வ-ம்.) அப்படியே யனுப்பிவைக்கின்றேன் கோபிக்க வேண்டாமம்மா.

சந்திரமதி விருத்தம்.

மைந்தனே மறையோருன்மேல் மனதிளகாமலிந்த
அந்தணச் சிறுவரோடே யரியதோர் வனத்துக்கேகி
விந்தைசேர்தெர்ப்பைமற்ற விதமெல்லாம் பறித்துக்கொண்டு
வந்திடச் சொல்லிமேன்மேல் வன்மமுஞ் செய்கிறாரே.

---

## சந்திரமதிசொல் தரு.

[சண்முகனே சரணாகதிசானே சண்முகனே]

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்செய்குவேன் மகனே
தேவதாசா என்செய்குவேன்

அநுபல்லவி.

கொஞ்சமேனும் இளகாது நெஞ்சமும்
வஞ்சகமாய் வைத்தருதக் மறையோர் (என்)

விதிவசமோ அடாசேயா இதுவும்
அதையறியேன் கனிவாயா மதுர (என்)

மன்னர்சிகா நீயும்பைய மணியே
இன்னவரோ தெர்ப்பைகொய்ய டேகுவாய் (என்)

(சந்-வ-ம்.) ஆஆ தனயா இவ்வேதியர்க்கு கின்மீது கிஞ்சிற்றேனு மனமிளகவில்லையே ஆஆ இதுவும் விதிவசமோ யாதோ தெரியவில்லையே இனியென்செய்வேன் நல்லது நீயிந்த அசலாத்துப்பிள்ளைகளுடன் காட்டுக்குச்சென்று தெர்ப்பை-இலை-சமித்து-முன்னை-மூங்கை முதலானதுமெடுத்துக்கொண்டு சூதானமாகவந்து சேரவேண்டுமப்பா ஆஆ உன்னையனுப்புதற்கு எனக்குக் கிஞ்சிற்றேனுமனமில்லையே இதற்கென்செய்வேன் கண்மணி.

தேவதாசன் விருத்தம்.

முன்னமே வேதனும்நம் முடிமிசை யிவ்வாறென்று
மன்னவே யெழுதிவைத்த வண்மைபோல் நடக்குமன்றி
இன்னமோர் விதமாய்மாற விசையுமோ விசையாதெந்தன்
அன்னையே நீயும்வீணே யழுதுளங் கலங்கலாமோ.

## தேவதாசன்சொல் தரு.

[அருமைக்கண்மணியைக்காணேனே யிந்த
ஆபத்துக்கென்செய்வேனுனே]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாபு.

பல்லவி.

அழுகவேண்டாமென்முன்சும்மா நமக்
கயன்விதிபோலாகுமம்மா நீயும் (அ)

அநுபல்லவி.

பொழுதுபோகுமுன்னமே-நானே காடு
போய்த்தெர்ப்பைகொண்டுவருவேனே-நீயும் (அழுக)
வேலைசெய்திடத்தானே-வந்தோம் இந்த
வீட்டிலேநமக்கென்னசொந்தம்-நீயும் (அழுக)
பசிக்குதேயெனக்குச்சாப்பாடு கொஞ்சம்
பழையதிருந்தால்வாங்கிப்போடு-நீயும் (அழுக)

(தேவ-வ-ம்) ஆஆ மாதா நீயேன் வியாகூலப் படுகின்றனை யார் எல்லாம் ப்ரம்மலிகிதப்படிதானே நடக்கும் அதற்காக ரோதனஞ்செய்வதினாலென்னபயன் நாம் வேலைசெய்வதற்காக வேதியர்க்கடிமையானோமேயன்றி உட்கார்ந்து சொஸ்தமாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருக்கவரவில்லையே (உண்டவனுரஞ்செய்வா) னென்பதுபோல கொண்டவனுக்கு வேலைசெய்யாவிட்டாலும் உண்ட சோற்றுக்காவது செய்யவேண்டுமாதலால் யான் நேரத்திலேயே வனத்துக்குச்சென்று தெர்ப்பை-இலை சமிதை முதலானதுங் கொண்டுவருகின்றேன் இப்போதெனக்கு வயறு பசிக்கின்றமையாற் கொஞ்சம் பழையசாதமிருந்தால் வாங்கிப்போடம்மா சாப்பிடாமலிப்படி நடப்பேன்.



(சந்-வ-ம்.) நல்லது அப்படியே கேட்டுப்பார்க்கின்றேன் கண்மணி.

சந்திரமதி விருத்தம்.

அருமைசே ரெனதுபால னடர்வனந் தன்னிற்சென்று
பெருமைசேர் தெர்ப்பையோடு பின்னுளதெல்லாங்கொண்டு
வருகிற வரையும்ஞான மறையவா பசியுந்தாளான்
தருகுவீர் சாதங்கொஞ்சஞ் சாப்பிடு தற்குத்தானே.

## சந்திரமதிசொல் தரு.

[ராஜாஜிமைநாயைநோக்கி ஜகாணிஜோலியா]
என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு.
இராகம்-தேசிங்குதோடி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

பல்லவி.

பாலனுக்கேதேனுங்கொஞ்சம் பழஞ்சாதம்போடுஞ்சாமி.

அநுபல்லவி.

சீலமுள்ளமறையோனே சாலும்பசிதீரத்தானே (பால)

சரணம்.

காட்டினுக்குப்போவதாலே களையாகுமேமென்மேலே
தாட்டிகமாய்ச்செல்வதற்குத் தடையிலாமற்படிக்குப்(பால)

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனது மைந்தன் காட்டுக்குச்சென்று தெர்ப்பைமுதலானது பறித்துக்கொண்டு மீண்டுவரும்வரை பசிதாளமாட்டான் மிகவுங் களைத்துவிடுவானாதலாற் கொஞ்சந் தைரியமாகச் செல்வதற்காக ஏதேனும் பழஞ்சாதமிருந்தாற் போட்டனுப்புங்கள் ப்ரபு.

காலகண்டையர் விருத்தம்.

உங்களினால் வேலையொன்று மாகாட்டாதும்
 உண்டுகுடி கெடுத்திடுவீர் காலைவேளை
தின்னவுமே தளிகைசமைத் திருக்கோ இந்தத்
 திருநாள எங்கள்செய்தாற் காட்டுக்கேகப்
பங்கமுண்டா மென்றெண்ணிக் கொண்டாயோடி
 பழையதுமே யில்லைபுதி யதுமேயில்லை
இங்கினிமேல் சில்லாதுன் பாலன்றன்னை
 இக்கணமே யனுப்பிடுவாய் நற்கமுண்டே.

(காலு-ர்-வ-ம்.) அடி சந்தி உங்களாலொரு கவலையுமாகாட்டாதும் நன்னாயத்தின்னு குடியைக்கெடுத்துடுவீர்கள்போ லிருக்கே நன்னாயிருக்கு காலங்காத்தாலே வெர்ன்னே தளிகைசாதித்துப் புளித்தடவிவைத்திருக்கோ போடிபோடி பைத்தியகாரி இப்படியெல்லாங்கேட்டால் நம்மை வேலைசெய்யச் சொல்லமாட்டாளென்னு பார்க்கிறயோ இங்கே பழையதுமில்லை புதியதுமில்லை தேசகாலமாகிறது சிக்கிரம் போகச்சொல்லடி நற்கமுண்டே.

சந்திரமதி விருத்தம்.

விப்பிர மணியேகாண மேனியே தருப்பைமற்ற
செப்பிய பொருள்கள்கொண்டு திரும்பிடப் பொழுதுசெல்லும்
அப்படி யானாற்கஞ்சி யாதர வின்றிப்பாலன்
எப்படிப் பசிபொறுத்தே யிவ்விடம் வருவான்சாமி.

சந்திரமதிசொல் தரு.

[[illegible] கண்டுமே [illegible]]
என்ற இக்கிரசபாவின் வர்ணமெட்டு
இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கஞ்சியில்லாமற்பாலகன் காடுசெல்லப்போமோசாமி

அநுபல்லவி.

வஞ்சகமில்லையேகாளை மயங்கிடுவானோர்வேளை (கஞ்)



சரணங்கள்

உங்களுக்குத்தெரியாத யோசனையும்வேருளதோ
மங்கைநானுஞ்சொல்லுகின்ற வார்த்தையிலேதும்பழுதோ (கஞ்)

பாதையில்நடக்கும்போது பசிக்களைநேருமையா
மீதியுள்ளகூழேதேனும் விட்டாலதேபோருமையா (கஞ்)

(சந்-வ-ம்) ஆஆ ஸ்வாமி தங்களுக்குத்தெரியாதயோஜனையென்னவிருக்கின்றது பாருங்கள் அரியபாலகன் கஞ்சியின்றிக் காட்டுக்குச்சென்றால் வாடிமயங்கி விடுவனென்று தங்களை மன்றாடுகின்றேனேயன்றி மகனைக்காட்டுக்கனுப்பக்கூடாதென்ற வஞ்சகமில்லை ப்ரபு ஏதாவது வயற்றுக்காதார மிருந்தாற்றானே நடந்துபோகத் தைரியம்நேரிடும் இல்லாவிட்டா லெவ்விதம் போகமுடியும் ஆஆ ஸ்வாமி மிச்சமீதியுள்ள கூழ்த்தண்ணீரிருந்து கொடுத்தாலும் போதும் ப்ரபு.

காலகண்டையர் விருத்தம்.

எதிர்மொழி யாடுகின்றா யெனக்கது பிடிக்கவில்லை
அதிகமாய்க் கோபம்வந்தா லப்புற முனைதான்கண்டாய்
சுதனவன் பசியுங்கொண்டாற் றோகையை வழியிலுள்ள
நதிதனிற் ஜலத்தையள்ளி நன்குட னுண்ணச்சொல்லே.

(காலு-ர்-வ-ம்) அடி சந்தி நீ வெர்ன்னே பாவித்துக்கிண்டிருப்பது நேக்கொன்னும் பிடிக்கவில்லை நேக்குக் கோபம்வந்துடுத்தோ நன்னாய்ப்புடைத்திடுவேன் வீண்வார்த்தையாடாதே உன்பிள்ளைக்குப் பசியானால் வழிநீளக்க நதியிருக்கு அதிற்ஜலத்தையள்ளிச் சாப்பிட்டுக்கிண்டு போகச்சொல்லடி.

(சந்-வ-ம்) ஆஆ ஸ்வாமி இப்படிப்பாவித்தால் யானென்சொல்வேன் நல்லது அப்படியே போகச்சொல்கின்றேன் கோபிக்கவேண்டாம் ப்ரபு.

(காலு-டி-வ-ம்) அடி சந்தி இன்னும் ஏதுக்கடி தாமசம் நன்னாய்த் தளிகைவாங்கித் தின்னுட்டுப்போகச் சொல்லலாமென்னு எண்ணியிருக்கிறையோ அந்த எண்ணத்தை மறந்துட்டுச் சீக்கிரம் போகச்சொல்லடி சந்தி.

(சந்-வ-ம்) அப்படியே போகச்சொல்கின்றேனம்மா.

சந்திரமதி விருத்தம்.

மாதவந் தனிலுதித்த மைந்தனே மனதில்மேவுங்
காதலுக் குகந்ததேனே கண்மணி மகனேயந்த
வேதிய ரிடத்திற்சென்று வேண்டியு மிரக்கமின்றிச்
சாதமே யில்லையென்று சாற்றிவிட் டாரேயப்பா.

## சந்திரமதிசொல் தரு.

[என்னகாலம்எங்களுக்கு வந்தகோலங்காணறியேன் சுவாமியே]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு
கண்ணிகள்.

என்னசெய்வேன் என்மகனே
அன்னமில்லை யென்னவேதான்
அறைகிறாரே (என்ன)

கெஞ்சிக்கெஞ்சிக் கேட்டேனடா
வஞ்சமுள்ள மறையவரும்
வைகிறாரே (என்ன)

இப்படியும் உற்பவிக்குங்
கற்பனையுஞ் சொற்பனத்திற்
காணேனடா (என்ன)

பசியுடனே பாலருடன்
நிசிவரையும் நீநடக்க
நேருமோடா (என்ன)

(சந்-வ-ம்) ஆஆ கண்மணி வேதியரிடஞ்சாதம்வேண்டுமென்று பலவிதமாய்க் கெஞ்சிக்கேட்டும் (கன்மனப்பார்ப்பார் தங்களைப்படைத்துக் காசத்தையென்செயப்படைத்தா) யென்பதுபோல கொஞ்சமேனும் நெஞ்சமிளகாமற் கஞ்சிகூடஇல்லையென்று கண்டித்துச் சொல்லிவிட்டாரே ஆஆ நீயிவ்வரிய வயதிலேயே பிண்டத்துக்குத் திண்டாடுவாயென்று யான் சொற்பனங்கூடக் காணவில்லையே ஆஆ தனையா நீபசியுடனே வேதியச்சிறுவருடன் கூடிக் காட்டுக்குச்சென்று அஸ்தமிக்கும் வரை யலைந்துதிரிந்து தெர்ப்பை முதலானவை யெவ்விதங்கொண்டுவருவாய் கண்மணி.



தேவதாசன் விருத்தம்.

கஞ்சியு மில்லையென்று கடுகடுத் தையர்வார்த்தை
மிஞ்சியே சொன்னதாக விளம்பிட லானுயம்மா
என்செய்வோந் தலைவிதிக்கே யென்பசிக் குதவியாகக்
கொஞ்சமுந் தவிடிருந்தாற் கொடுத்தெனை யனுப்புவாயே.

## தேவதாசன்சொல் தரு.

[சாமிநீரென்னுடனே சரசமாடவாருமே]
என்ற ட்ராமாப்பதத்தின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.
பல்லவி.

சாதமில்லாவிடினுந் தவிடிருந்தாற்கொடம்மா

அநுபல்லவி.

பாதைதனிலேநடந்தாற் பசிக்குமே (சாத)

சரணம்.

பசித்திடும்பொழுதள்ளிப் புசித்துக்கொள்கிறேனம்மா
நசித்திடுங்காலம்வாச்சுதே நமக்குமே
நசித்திடுங்காலம்வாச்சுதே பசிக்குமே (சாத)

(தேவ-வ-ம்.) ஆஆ மாதா நமக்குக் கெட்டகாலங் கிட்டினமையாற் (பொன்னைத்தொட்டாலு மண்ணாய்ப்போய்விடு) மென்பதுபோல பழஞ்சாதத்திற்குக்கூடவழியில்லாமற் போய்விட்டது என்செய்யலாம் நல்லது வழியிற்செல்லும்போது பசியுண்டாகுமாதலாற் கையிலாதாரவாகக் கொஞ்சந் தவிடாகிலுங் கொடுப்பாயாகிற் பசியெடுக்கும்போது புசித்துக்கொண்டு தெர்ப்பைமுதலானவை கொய்துவருவேனம்மா.

சந்திரமதி விருத்தம்.

தடத்தினில் நடக்கும்போது சாதமில் லாமற்காதை
அடைத்திடும் பசிகாலத்தி லள்ளிநீ புசிப்பதற்குப்
படைத்தவர் மொழியில்லாமற் பாவிநான் றவிட்டையள்ளிக்
கொடுத்திடப் படுமோகேட்டுக் கொண்டிதோ வருவேனப்பா.

## சந்திரமதிசொல் தரு.

[வரீடியிங்குவாடி நான்வந்தனனுக்கனைத்தேடி]
என்ற ட்ராமரத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-சகானு-தாளம்-ஆதி.

கண்ணி.

தவமறையோர்மொழியில்     லாது-நான்
தவிடுகொடுக்கமுடி     யாது
கவலைகொள்ளாதேயடா     சேயா-நற்
கற்கண்டைநிகர்கனி     வாயா
அவரிடத்தினிற்கேட்டு     வாரேன்-அவர்
அளித்திடிற்கொண்டுவந்து     தாரேன் (தவ)

(சந்-வ-ம்.) ஆஆ கண்மணி நீயேதோ நமது சொர்தமாளிகை போலெண்ணித் தாராளமாகத் தவிடாகிலுங் கொடுவென்றுகேட்கின்றனையே ஆஆ இவ்வேதியருத்திரவன்றி ஸ்வயாதிகாரமா யெடுத்துக்கொடுக்கமுடியாதே என்செய்யலாம் நல்லது மறையவரைக் கேட்கின்றேன் அவர் மனமிளகிக்கொடுத்தாற் கொண்டுவந்துதருகின்றேன் கண்மணி நீவியாகூலப்படாதே.

(தேவ-வ-ம்.) அப்படியே கேட்டுவாங்கிக்கொண்டுவா மாதா.

சந்திரமதி விருத்தம்.

புவியெலாம் புகழுகின்ற பூரபப் புண்யவானே
விவரமில் லாதபாலன் வெகுதொலை நடக்கும்போது
கவலைசேர் பசியுண்டாகுங் காலையிற் புசிப்பதற்குத்
தவிடுநீ தாலுங்கொஞ்சந் தந்திட வேணுஞ்சாமி.

## சந்திரமதிசொல் தரு.

[தட்டிமறுவார்த்தைநீசொல்லாதே யுத்தன்
சாஸ்திரங்களைன்னிட்டுச்செல்லாதே]
என்ற சந்தாரம்நாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-முகாரி-தாளம்-சாபு.

கண்ணிகள்

தவிடிருந்தால் நீருங்கொஞ்சந்     தாருஞ்-சாமி
தனையனது பசியதனைத்     தீரும் (தவி)



கவலைகொண்டு வாடுகிறு     னையா-கொஞ்சங்
கருணையருள் கூருமலர்க்     கையா (தவி)
பசிபொறுக்க யாவராலே     கூடும்-பாலன்
பசியகற்றி நற்புகழைத்     தேடும் (தவி)
உள்ளமு மிரங்குமெங்கள்     மீது-எங்கட்
கும்மையன்றி வேறுகதி     யேது (தவி)

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தங்களைத்தவிர எங்களுக்கு வேறென்ன கதியிருக்கின்றது அங்ஙனமிருக்க எங்கள்மீது மனமிளகாதிருக்கின்றீர்களே ஆஆ பாலனானவன் பசியெடுத்தாற் புசிப்பதற்கு வழியில்லையேயென்று மயங்குகின்றனே ஆஆ ஸ்வாமி தாங்கள் சாதங்கொடாவிட்டாலுங் கொஞ்சந் தவிடாவது கொடுத்தால் அதையாவது தின்று பசியாற்றிக்கொள்வான் அதற்காவது கிருபைசெய்யுங்கள் ஸ்வாமி.

காலகண்டையா விருத்தம்.

நோக்குமே பிடித்துக்கொண்ட நுண்ணறி வில்லாப்பித்து
நேக்குமே பிடித்ததென்று நினைத்தனை யோடிவெர்ன்னே
சாக்குவார்த் தைகளைச்சொன்னாற் றுளவே மாட்டேன்கோபஞ்
சீக்கிர மவனையேகச் செய்குவாய் செய்குவாயே.

(கால-ர்-வ-ம்.) அடி சந்தி நோக்குப்பிடித்த பைத்தியம் நேக்குப்பிடிக்கவில்லை போடிபோடி எத்துக்காரமுண்டே வெர்ன்னே பேசிக்கிண்டிராதே இனிக் கோபம்வந்துடுத்தோ தாளமாட்டேனைக்குந் தெரியுமா சீக்கிரம் போகச்சொல்லடி.

சந்திரமதி விருத்தம்.

விப்பிர ராகவந்த மேதினி தனிலுள்ளோரில்
இப்படிக் கொடுமைக்கார ரெங்கனுங் கண்டதில்லை
அப்படித் தானேயுங்கட் கபயமென் றெண்ணியெந்தன்
நற்புதல் வனையிப்போதே நடந்திடச் செய்குவேனே.

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி அந்தணர்குலத்தில் இவ்விதமான கொடுமைக்காரர்களை யானெங்குங் கண்டிலேனே இனியென்செய்

வேன் நல்லது அப்படியே உங்களுக்கபயமென்று பாலகனைப் பட்டினியாயனுப்பிவைக்கின்றேன் ப்ரபு.

(கால-டி-வ-ம்.) அடி சந்தி நோக்குத் தவிட்டைக் கொடுத்துட்டு மாட்டுக்கு மண்ணையாகுழைத்து வைக்குறது எதடி சந்தி கிட்டவந்தால் மூஞ்சியை நக்குவைபோலிருக்கே நன்னுயிருக்கு பசியானல் ஆற்றிலுள்ள ஜலத்தையள்ளிச் சாப்பிட்டுக்கிண்டு போகச்சொல்லடி சிக்கிரம்.

(சந்-வ-ம்.) ஆஆ உத்தமி கோபங்கொள்ளவேண்டாம் அப்படியே போகச்சொல்கிறேனம்மா.

சந்திரமதி விருத்தம்.

கன்னல்போல் மொழிபுரைக்குங் கண்மணி மகனேநீயுஞ்
சொன்னதற் காகவேண்டித் தூயவே தியரிடத்தில்
நன்னய மானவார்த்தை நவின்றுநான் றவிடுகேட்டேன்
என்னிடங் கோபங்கொண்டே யில்லையென் றுரைத்திட்டாரே.

சந்திரமதிசொல் தரு.

[சீராமவையில்வளர் சிறந்தோர்களேவந்தனம்]
என்ற நவரசலீலாவபிர்தஜாநகியின் வர்ணமெட்டு
இராகம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

தவிடுமில்லையென்றாரே தனையாஎன்னடாசெய்வேன்

அநுபல்லவி.

கவலைநீயுங்கொள்ளாதே காடுசெல்வாயிப்போதே (தவிடு)

சரணம்.

போகும்வழியிலேனும் புனல்கண்டவுடனீயே
தாகசோகமல ஜலமள்ளிக்குடிப்பாயே (தவிடு)

(சந்-வ-ம்.) ஆஆ கண்மணி இக்கொடும்பாவியாகிய வேதியர் தவிடுகூட இல்லையென்று சொல்லிவிட்டாரே இனியென்செய்கின்றது நல்லது நீயதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம் வனத்துக்குப் போகும் வழியில் ஏதாவது நதிதடாகந் தென்பட்டால் அதில் ஜலத்தையள்ளித் தாகசோகமிமயக்கந்தீரச் சாப்பிட்டுக்கொண்டு தர்





ப்பை முதலானவையெடுத்துச் சுமைகட்டிக்கொண்டு பொழுது போகுமுன்னமே வந்துசேரவேண்டுந்தனையா.

(தேவ-வ-ம்.) நல்லது அப்படியே வந்துசேர்கின்றேன் விடைகொடு மாதா.

(சந்-வ-ம்.) ஆனல் யான்கொஞ்சந் தூரம்வந்து வழியனுப்புகின்றேன் கண்மணி.

(தேவ-வ-ம்.) நல்லது அப்படியே மாதா.

சந்திரமதி விருத்தம்.

பாலகா நமக்குமுன்னாற் பரமனு மெழுதிவைத்த
கோலமோ பின்னாலென்ன கொடுமைகள் விளையுங்கஷ்ட
காலமோ அல்லாலந்தக் கௌசிக முனிவர்செய்யுஞ்
ஜாலமோ பாராய்கெட்ட சகுனமுங் காணுதேடா.

சந்திரமதிசொல் தரு.

[அரவாபரணனே அபிராமிநேசனே]
என்ற இந்திரசபாவின் வர்ணமெட்டு.
இராகம்-சங்கராபரணம்-தாளம் சாபு.

கண்ணிகள்.

தனையாநீவீடுவிட்டுத் தாண்டுமுன்னமேபொல்லாச்
சகுனமுங்காணுதடா
தேனைநேர்மொழியானே பூனைகுறுக்கிடுதே
தெரிவைநானென்னசெய்வேன்
கண்மணியேயிதோபார் காகமதுகட்டுதே
காரிகையென்னசெய்வேன்
வட்டமிட்டுக்கருடன் வலமாகப்போகுதடா
மைந்தனேயென்னசெய்வேன்
எண்ணெய்க்குடமுமிதோ எதிராகவருகுதே
ஏந்திழையென்னசெய்வேன்
ஒற்றைப்பார்ப்பானெதிரே ஓடிவருகிறானே
[illegible]ண்டொடியென்னசெய்வேன்
குருடன்றடிபிடித்துக் கொண்டிதோவருகிறான்
கோதைநானென்னசெய்வேன்

தலைவிரித்தொருமங்கை தானுயழுகிறாளே
தனையனேயென்னசெய்வேன்
பொல்லாச்சகுனமது எல்லாங்காணுவதாலே
புத்தியுந்தடுமாறுதே
என்னபிழைவருமோ ஏதொன்றுமறியேனே
எப்படியுனைவிடுவேன்

(சங்-வ-ம்.) ஆஆ தனையா நீகானகத்திற்குச் செல்வதற்காக வீடுவிட்டுத்தெருவீதிக்கு வருவதற்குள்ளாகப் பலவித துற்சகுனங்களெல்லாங் காணுகின்றதே ஆஆ, இதோ பூனைகுறுக்கிடுகின்றது, அதோ காகங்கட்டுகின்றது, இதோ கருடன் வலஞ்செல்கின்றது அதோ என்னெய்க்குடப்வருகின்றது, இதோ ஒற்றைப்பார்ப்பானோடிவருகின்றான், அதோ குருடன் எதிர்ப்பட்டுவருகின்றான் இதோ ஒருமங்கை தலைவிரித்து ஒற்றைக்குரலாய்ரோதனஞ்செய்கின்றனள், ஆஆ இத்தியாதிகாரணங்களெல்லாங் காணப்பட்டதே இதனாலென்ன தீங்குகள் நேரிடுமோ தெரியவில்லையே ஆஆ, எனக்குப் பயங்கரமாயிருக்கின்றதே உன்னை யெப்படியனுப்ப மனமொப்புவேன் கண்மணி.

தேவதாசன் விருத்தம்.

எப்படி யிருந்தாலென்ன இன்னவர்க் கின்னதென்று
உற்பவித் திடும்போதீச னுண்மையாய் வரைந்துவைத்த
கற்பனைப் படியேதானே கஷ்டமுஞ் சுகமுங்காணுந்
தற்பர னருளிருந்தாற் சகுனமென் செய்யுமம்மா.

தேவதாசன்சொல் தரு.

[மன்னன்வரக்காணேனே யென்னநான்செய்குவேன்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

கவலைகொள்ளாதேயம்மா கடவுள் துணைதானம்மா

அநுபல்லவி.

அவனன்றியோரணுவும் அசையாதிதேதுணிவு (கவலை





சரணம்.

பாலகருடனேசென்று பாரவனந்தனிலின்று
கோலுடியினைதெர்ப்பைதேடிக் கொண்டுவருகின்றேன்கூடிக்(கவலை)

(தேவ-வ-ம்.) ஆஆ மாதா நீயேன் விசனப்படுகின்றனை பார் அவனன்றியோரணுவுமசையாதென்று சொல்லப்பட்டிருக்கின்றமையால் நமக்கு ஜெகதீசனுடைய கிருபானுக்கிரகமிருக்கும்பக்ஷத்தில் இந்தத் துற்சகுனங்களெல்லாம் என்செய்யும் நீயதைப்பற்றி யோஜிக்கவேண்டாம் யானிந்த வேதியச்சிறுவருடன் வனஞ்சென்று தெர்ப்பை இலை சமிதை முதலானதுங் கொண்டுவருகின்றேன் மாதா சீக்கிரம் விடைகொடு.

சந்திரமதி விருத்தம்.

எனக்குநீ-நீதிவார்த்தை யெடுத்துமே போதித்தாலும்
மனக்குறை தீர்ந்துபோமோ மதிவல மிகுந்தமைந்தா
புனத்தினுக் கின்றுநீயும் புதுமையாய்ச் செல்வதாலே
உனக்குநான் சொல்வேன்புத்தி யுண்மையாய்க் கேட்டிடாயே.

சந்திரமதிசொல் தரு.

[ஆயையோராகுராமா நீவனம்போகத் தெய்வஞ்சம்மதியாமா]
என்ற ராமநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கேளடாஎன்சுதனே அழகுடைய
வேளைநேர்மன்மதனே
நாளிதுபொல்லாதே நான்சொல்லும்புத்தி
நீளக்கேளிப்போதே (கேளடா)

வழிவிட்டுநடக்காதே இச்சிறுவர்கள்
மொழிதனைக்கடக்காதே
குழிதனிற்குதியாதே பாம்பினைக்கண்டாற்
பழிவருமிதியாதே (கேளடா)

மரங்களிலேறாதே எதிருற்கினை
முரிந்திமெய்ருதே

திங்கள்நீசொல்லாதே புதரடர்ந்த
மருங்கினில்நில்லாதே (கேளடா)

புற்றருகேசெல்லாதே நமக்குக்காலம்
முற்றிலும்பொல்லாதே
சுற்றியேதிரியாதே தெர்ப்பையைக்கண்டால்
ஒற்றையாய்ப்பறியாதே (கேளடா)

இணைபிரியாமற்கூடி தெர்ப்பைமுதலாய்
இலைகள்சமிதைதேடித்
துணையுடன்வருவாயே நான்பெற்றெடுத்த
சுகுணசுந்தரசேயே (கேளடா)

(சந்-வ-ம்.) ஆஆ கண்மணி இந்தத் துற்சகுனங்களெல்லாம் யோஜித்தால் நமக்குப் பொல்லாதகாலமா யேற்பட்டிருப்பதாய் காணப்படுகின்றமையால் நீ வனத்துக்குப்போகும்போது வழியைவிட்டுக் குறுக்காய்ச் செல்லாமலும் இவ்வசலாத்துப்பிள்ளைகள் வார்த்தைக்குமீறி வீரியம்பேசாமலும் பாதைகளிலுள்ள குண்டுகுழிகளிற் குதியாமலும் சர்பங்களைக்கண்டால் வெகுதூரம்விலகியும் கனிகாய்பிடுங்கக்கருதி மரங்களிலேறாமலும் புதர்களடர்ந்தவிடத்தில் நிற்காமலும் புற்றுகளுள்ளவிடத்திற்குச் செல்லாமலும் தனிமையாய்ச்சுற்றித்திரியாமலும் துணையின்றித் தெர்ப்பைமுதலானவை பறியாமலும் இந்தப் பிள்ளைகளை யிடைவிடாது கூடவே சேர்ந்துபோய் அவர்கள் தருப்பைமுதலானவை பறிக்குமிடத்திலேயே நீயும் பறித்துக்கொண்டு இவர்களுடனே பொழுதுபோவதற்குமுன்னதாகவே வந்துசேரவேண்டுந் தனையா யான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கின்றதாவென்ன.

(தேவ-வ-ம்.) ஆஆ மாதா எனக்குஞாபகமிருக்கின்றது அப்படியே நடந்துகொள்கின்றேன் விடைகொடு சீக்கிரம்.

சந்திரமதி விருத்தம்.

கரும்புபோல் மொழிபிசைக்குங் கண்மணி மகனேயுன்மேல்
திரும்பது பட்டிட்டாலுந் துடிக்குமே யென்றன்நெஞ்சம்
விரும்பிநீ வனத்திற்சென்று வேண்டிய தெல்லாங்கொண்டு
திரும்பியே வரும்வரைக்குஞ் சித்தமும் நிலைநில்லாதே.



சந்திரமதிசொல் தரு

[முகிழுழுநிற பெண்ணேயெனக்கொரு முத்தந்தாராயோ]
என்ற புதசாகித்தியத்தின் வர்ணமெட்டு
இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

வருகிறவரையிலும் மகனேயுனக்காக
வழிபார்த்திருப்பேனடா

அநுபல்லவி.

கருதுதுற்சகுனங்கள் கண்டதினாலே
காதலாநீயிந்தப் பாதையின்மேலே (வரு)

சரணம்.

உள்ளமுமொருநிலை கொள்ளவில்லையேபயம்
உருக்குதடா சுதனே
மெள்ளவேநீயிந்தப் பிள்ளைகளோடு
வேண்டியதெல்லாங்கொண்டு விரைவுடன்வீடு (வரு)

(சந்-வ-ம்.) ஆஆ கண்மணி யாவரும் பொல்லாதென்று மதிக்கத்தக்க துற்சகுனங்கள் கண்டபடியினால் என்மனம் ஓர்மைப்படவில்லையாதலால் நீவனத்திற்குச்சென்று தெர்ப்பை முதலானவை கொய்துகொண்டு வேகியச்சிறுவருடன் இவ்வழியாக மீண்டுவருகின்ற பரியந்தம் உன்வரவுக்கெதிர்பார்த்துக் கொண்டே யிருப்பேன் கண்மணி.

(தேவ-வ-ம்.) அப்படியே விரைவாய்வந்து விடுகின்றேனம்மா.

(சந்-வ-ம்.) ஆனாற் சென்றுவா கண்மணி.

(தேவ-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றேன்.

(சேஷ-வ-ம்.) அடாய் சப்பு, எதடாய் இவாள் சம்பிரமத்திலேயே பொழுதுபோகுதே.

சுப்பு விருத்தம்.

எதடாய் சேஷாபாப மென்னவோ அவர்கட்குள்ள
வேதனை வார்த்தைபேசும் வேளையி லிவ்வாறாக
ஓதவந் தனையேநோக்கே துருத்தது பாலன்றன்னை
ஆதரவாகாமே யழைத்தடா வனஞ்செல்வோண்டா.

(சுப்பு-வ-ம்.) அடாய்சேஷ ஏதடாய் அவாள் பாபங்ஷக்கப் பட்டுச் சம்பாஷித்துக்கிண்டிருந்தாள் அதற்குள்ளே நோக்கென்ன அவசரம்வந்துடுத்து இதோ வந்துட்டான் அழைத்துக்கிண்டு செல்லலாண்டாய்.

சந்திரமதி விருத்தம்.

அந்தணச் சிறுவரேநல் லன்புள தோழமாரே
சிந்தையி லிரக்கமுள்ள சீலரே தவத்திற்பெற்ற
மைந்தனுக் குதவியாக வந்தபுண் ணியரேயிதோ
எந்தன்மைந் தனமுந்தந்தே னேந்திழை மொழிகேளீரோ.

சந்திரமதிசொல் தரு.

[மாதேவியென்னோடு கூட வனத்துக்கேகலாம்வாடி]

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தானி-காபி-ஏகதாளம்.

பல்லவி.

அசலாத்துப்பிள்ளை மாரே அறைவேனோர்மொழிகேளீரே.

அநுபல்லவி.

சிசுவையுங்களிடனே சேர்த்தனுப்புகின்றேன்காடு (அச)

சரணம்.

கைதவறவிட்டிடாமற் காட்டினிற்றெர்ப்பையையீரே
கொய்துதந்தானந்தன்முன்னே கூட்டிவந்துசேர்த்துவீரே (அச)

(சந்-வ-ம்.) ஆஆ அசலாத்துப்பிள்ளைகாள் இந்தக் குழந்தையை உங்களுடன் காட்டுக்கனுப்பிவைக்கின்றேன் இவனைக் கைதவறவிட்டுவிடாமல் உங்கள் பிள்ளைபோற்பாவித்து அழைத்துக்கொண்டுபோய் இவனுக்குவேண்டிய தெர்ப்பை-இலை-சமிதை-முதலானதும் நீங்களேபறித்துக்கொடுத்துச் சூதானமா யழைத்துக்கொண்டுவந்து என்னிடத்தி லொப்பிவைக்கவேண்டும் கண்மணிகாள்.

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

அம்மணி நீயுமேதுக் கழுகிறு யழவேவேண்டாங்
கண்மணி மகனைக்கூட்டிக் காட்டினுக் கேகியங்கு



நன்மைசேர் தெர்ப்பையாவும் நாங்களே பறித்துத்தந்து
செம்மையா யழைத்துவந்து சேர்த்துவோம் பயப்படாதே.

(அசலாத்துப்பிள்ளைகள் வசனம்) ஆஆ அம்மா நோக்கேது க்கு விசனம் அப்படியே புனது பாலகனையிட்டுக்கிண்டுபோய் நாங்களே தெர்ப்பைசமிதைமுதலானதும் பறித்துச் சுமைகட்டிக்கொடுத்துச் சூதானமாயழைத்துக்கிண்டு வந்து சேர்த்துடுகிறோம் நீயழவேண்டாமம்மா.

(கால-டி-வ-ம்.) அடி சந்தி அசலாத்துப் பிள்ளைகளுடனே நோக்கேதுக்கடிவார்த்தை இந்தச் சாணத்தையெடுத்து முத்தத்திற்கொட்டேண்டி.

(சந்-வ-ம்) இதோ பாலகனையனுப்பிவிட்டு வருகின்றேனம்மா.

(கால-ர்-வ-ம்.) அடிசந்தி அந்தப்பயலை இன்னுமனுப்பவில்லையோ.

(சந்-வ-ம்.) இதோ அனுப்புகின்றேன் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) இனிமேலா அனுப்பப்போகிறை பிழைப்பு நன்றாயிருக்கு.

சந்திரமதி விருத்தம்.

சூக்கும குணமுமுள்ள சுந்தர மகனேயுள்ளம்
ஏற்குமோ வுன்னைக்கான மேகிட விடுத்துக்காலம்
போக்குவ தெவ்வாறப்பா புத்தியு மயங்கிமேனி
வேர்க்குதே பாலாவிந்த வேதனைக் கென்செய்வேண்டா.

(சந்-வ-ம்.) ஆஆ தனையா உன்னை விட்டுவிட்டு என்னமாய்ப் பொழுதுபோக்குவேன் கண்மணி ஆஆ உன்னையனுப்ப எனக்குக் கிஞ்சிற்றேனு மனம்பொருந்தவில்லையே யென்செய்வேன்.

(சுப்பு-வ-ம்) அடாப் சேஷ இந்தம்மாள் அழறதைப்பார்த்தால் நேக்குத்துக்கந்துக்கமாய்வாரதே நோக்கெப்படியிருக்கு.

(சேஷ-வ-ம்) எல்லோருக்கும் அப்படித்தாண்டாயிருக்கு இதைக்கேள்க்கணுமோ சீக்கிரமழைத்துக்கிண்டுவாயேண்டாய்.

(சுப்பு-வ-ம்.) ஆஆ அம்மா நாங்கள் கூட்டிவந்து உன்கையிலேயே ஒப்பிவைக்கிறோமம்மா- எதுக்கு வெர்ன்னே விசனப்படுகிறை.

(சந்-வ-ம்.) ஆனலழைத்துக்கொண்டு செல்லுங்கள் கண்மணிகாள்.

(சுப்பு-வ-ம்.) அடாய் பையா கூடவருகிறையோ.

(தேவ-வ-ம்.) அப்படியே வருகின்றேன் ப்ரபு.

(சுப்பு-வ-ம்.) ஆனாற் செல்வோம்.

(தேவ-வ-ம்.) மாதா யான் சென்றுவருகின்றேன்.

(சந்-வ-ம்.) அப்படியே சென்றுவா கண்மணி.

பொது விருத்தம்.

தாயைவிட் டகன்றதேவ தாசனு மறையோர்வீட்டுச்
சேயர்க ளுடனேகானஞ் சென்றிடும் பொழுதுமுன்னாள்
ஞாயமும் பின்னுலர்ந்த ஞானகோ சிகனுல்வந்த
மாயமு மெண்ணியெண்ணி மனமிக வருந்துவானே.

தேவதாசன் விருத்தம்.

இமையவர் முனிவர்மற்றோ ரெவர்களும் பணிந்துபோற்று
உமையவள் பாகாகைலை யுற்றவா சிவனேநானுஞ்
சமிதையுந் தெர்ப்பைகொய்து தலைதனிற் சுமப்பதற்கு
அமையவைத் ததுமேயுந்த னதிசய மகிமைதானே.

## தேவதாசன்சொல் தரு.

[ஐயோசதாரம்உனைத்தேடியே யிப்போதுமிகத்
தயங்குதேமனம்வாடியே]

என்ற சதாரம்நாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-சாபு.

பல்லவி.

ஐயோ ஈசாஎன்சொல்லுவேன் இவ்விடர்தனை
எவ்விதமாய்வெல்லுவேன்.



சரணங்கள்.

பானுகுலத்திலுன் டானவர்யாவரும்
பாராசாண்டனரே-இப்ப
நானுமெனதன்னை தானுமேமாமறை
யோனுக்கடிமையானோமே-ஐயோ (ஈசா)

மன்னவர்போலநான் மின்னுமுடிதரித்து
வையத்தையாளலேயே-ஐயர்
சொன்னபணிவிடைகள் தன்னையியற்றிடுந்
தொல்லைக்காளாகினேனே-ஐயோ (ஈசா)

மந்திரிபிரதானி தந்திரிமுதலான
மன்னவர்சூழ்வதுபோய்-இந்த
அந்தணச்சிறுவர்கள் வந்துபுடைசூழும்
விந்தைவிளைந்ததுவே-ஐயோ (ஈசா)

வேகமிகுதிரை வாகனமேறிடும்
மேன்மையெல்லாந்தவிர்ந்து-இப்பத்
தேகசிரமையுஞ் சோகமுறக்காலால்
ஏகும்படியாச்சுதே-ஐயோ (ஈசா)

என்முடிமீதினிற் பொன்முடிவைப்பதற்
கில்லாமலிப்பொழுது-முன்செய்
தொன்மைவினைப்பயனால் இம்மையிற்றெர்ப்பைச்
சுமைவைக்கச்செல்கிறேனே-ஐயோ (ஈசா)

அஞ்சுகமேயென்று கொஞ்சியெனதன்னை
அமுதன்னத்தந்ததுபோய்-இப்பக்
கஞ்சியின்றிப்பசி மிஞ்சிக்களைப்புடன்
காட்டிற்குச்செல்கிறேனே-ஐயோ (ஈசா)

(தேவ-வ-ம்.) ஆஆ ஜெகதீசா என்விதிவசத்தை யென்சொல்வேன் ஆஆ எனது தந்தைமுதலான முன்னோர்கள் தலைமுறைதவறாமலரசாட்சிபுரிந்து வந்திருக்க என்றலைமுறையில் யானும் எனது மாதாவும் வேதியர்க்கடிமையானோமே ஆஆ மந்திரி-பிரதானி-சிற்றரசர்கள் சூழ்வதற்குப்பதிலாக இவ்வந்தணச்சிறுவர்கள் சூழும்படி நேரிட்டதே ஆஆ பட்டத்தியானைக் குதிரையேறிச் செல்லக்கூடிய யான் காலாற்செல்லும்படியான காலஞ்சம்பவித்ததே.

மணிமுடி தாங்குதற்குரிய எனது சிரமானது தெர்ப்பைமுதலான சுமைதாங்கிவரப்போகின்றதே ஆ ஆ எனதன்னையானவள் அருமையுடன் கொஞ்சி அறுசுவைப்பதார்த்தங்களுடன் அமுதூட்டினது போய் இப்போது கஞ்சிக்குக்கூட வகையின்றிப்பசித்தாபத்துடன் காட்டுக்குச்செல்கின்றேனே ஆ ஆ ஈசா இத்தீவினையை யெவ்விதமாவென்று எப்போது சுகமனுபவிக்கப்போகின்றேன்.

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

மன்வடி வாகவுற்ற மதனேயே சொல்லக்கேளாய்
தன்மனங் கொண்டபோல்லாக் காவகன் மடையர்வீட்டில்
மின்மினி புடனேயேயும் வேலைசெய் திடவேநேர்ந்த
உன்வர லாறுதன்னை யன்மையா யுரைத்திடாயே.

அசலாத்துப்பிள்ளைகள்சொல் தரு.

[ருக்மிணிவளர்த்தோங்கும் ஒய்யாம்பரியே]
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

தெர்ப்பை கொய்யவந்த பையாவொரு சேதிகேளடா

அநுபல்லவி.

உந்தன்-உற்பவத்தையின்று நீயுஞ் செப்புவதேநன்று-தடம்
ஒழியும்-இந்த வழியும்-மிகக் கழியும்பாரடா (தெர்ப்)

சரணம்.

உயர்மன்னன்சேய்போலே உனைத்தெரிவதினாலே-அந்த
உம்பரகமீது நீங்கள் நம்பிவந்ததேது-உங்கள்
ஊரும்-நல்ல பேரும்-வர லாறுங்கூறடா (தெர்ப்)

(அச-வ-ம்.) அடாய் பையா நடக்கநடக்க வழிதொலையாதிருக்கு ஆகச்சே உன்னுடைய விர்த்தாந்தத்தைச் சொல்லிக்கிண்டு வந்தால் (வழிநடைவார்த்தை வாகனத்துக்குச்சமான) மென்பதுபோல நமக்கு நடைதோறுது வழியுஞ் சிக்கிரங்கழிந்திடுமாதலால் ன்னைப் பார்க்கச்சே ராஜகுமாரனைப்போல காணப்படுவதால் க்குரிய ஊரும்பேரும் வாசகன்னுடைய ராத்துக்கு வந்தி



வேலைசெய்யுங் காரணமும் விபரமாய்ச் சொல்லிக்கிண்டு வருவாயாக.

தேவதாசன் விருத்தம்.

வேதியத் தோழமாரே விபரமாய் நீங்களெங்கள்
சேதியைக் கேட்கவென்று சித்தமுங் கொண்டீரையோ
ஆதியில் நாங்களுற்ற வதிசய மற்றதெல்லாம்
ஓதிட லாமென்றாலென் னுள்ளமும் நடுங்குதையா.

தேவதாசன்சொல் தரு.

[மல்லிகைமுல்லைமலரையிறைத்தகையாலே]
என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

எந்தன்விர்த்தாந்தத்தை யென்னென்றுசொல்லுவேன் மித்ரரே-எந்தன்
தந்தையயோத்தியரிச் சந்திரமகராஜன் மித்ரரே
மாதாபேர்சந்திர மதியென்றுசொல்வாரே மித்ரரே-என்னைச்
சாதாரணமாய்த்தேவ தாசனென்பார்களே மித்ரரே
சத்தியந்தவறுமற் றரணியாண்டிருந்தோமே மித்ரரே-விஸ்வா
மித்திரர்தூதாக வேள்விசெய்யவந்தாரே மித்ரரே
தந்தையிடத்திற்பொன் றகுதியாய்க்கேட்டாரே மித்ரரே-முனி
சிந்தையறியாத்தந்தை திரவியங்கொடுத்தாரே மித்ரரே
கொடுத்தபொருளையந்தக் கோசிகமுனிவரும் மித்ரரே-வேள்வி
முடித்திடும்பொழுதுவந் தெடுத்துப்போவதாய்ச்சொன்னார் மித்ரரே
நல்லதென்றேசொல்லி நாங்களும்வாங்கிவைத்தோம் மித்ரரே-எங்கள்
எல்லையில்மிருகத்தை யேவிவிட்டார்முனி மித்ரரே
மிருகங்கள்தனைக்கொல்லவேட்டைக்குச்சென்றாரே மித்ரரே-தந்தை
வருகுஞ்செயலறிந்த மாதவமுனிவரும் மித்ரரே
நீண்டாப்புலைச்சிகளைச் சேர்த்திடும்படிசொன்னார் மித்ரரே-பிதா
வேண்டாமென்றுரைத்திட மிக்ககோபத்தைக்கொண்டார் மித்ரரே
கொண்டகோபத்தைக்கோமான்கண்டுமனதுநொந்து மித்ரரே-சாமி
தொண்டனெனைக்கேட்டாலுஞ்சுகமாய்த்தருவேனென்றார் மித்ரரே
தேசம்நகரமற்ற செல்வங்களனைத்தையும் மித்ரரே-வகை
மோசமதாகவே முனிவர்பறித்துக்கொண்டார் மித்ரரே

முன்னேகொடுத்தயாகப் பொன்னுங்கொடுக்கும்படி மித்ரரே-மிதா
தன்னிடத்திலந்தத் தவமுனிகேட்டாரே மித்ரரே
கையிற்பொருளில்லாமற் காதலியுடனென்னை மித்ரரே-அந்த
வெய்யமறையவர்க்கு விற்றுகடனைத்தீர்த்தார் மித்ரரே
கடன்கொடுத்தபின்றந்தை நடந்துவிட்டாரெங்கேயோ மித்ரரே-நாங்கள்
உடன்பட்டுமறையோர்க்கு ஊழியஞ்செய்யவந்தோம் மித்ரரே
வஞ்சகங்குடிகொண்ட மறையவரெங்களுக்கு மித்ரரே-மனங்
கொஞ்சமுமிளகாமற் கொடுமைகள்செய்கிறுரே மித்ரரே
தாய்க்குக்கொடியவேலை சமைத்தார்செய்கிறுளையா மித்ரரே-இளஞ்
சேய்க்குத்தகுந்தவேலை செப்பிடாமற்படிக்கு மித்ரரே
காடுசென்றில்லைதர்ப்பை களைந்துவரவென்றுரே மித்ரரே-உங்கள்
கூடவருகிறேனென் கொள்கையுமிதுதானே மித்ரரே
தாயும்நீங்களெனக்குத் தந்தையும்நீங்களே மித்ரரே-இந்த
மாயந்தலைவிதியின் மகிமையோநானறியேன் மித்ரரே

(தேவ-வ-ம்.) ஆஆவேதியமித்திரர்காள் என்விர்த்தாந்தத்தையென் சொல்லப்போகின்றேன் பாருங்கள் யானிருப்பது அயோத்தியாபுரி, என்பெயர் தேவதாசன், என்றந்தைபேர் அரிச்சந்திரமகாராஜன், தாய்பேர் சந்திரமதி, நாங்கள் சத்தியந்தவுமுவாமலராசகுதிபுரியுங்காலத்தில் விஸ்வாமித்திரர் யாகஞ்செய்வதாகச் சூதாயெனது தந்தையிடம் பொன்கேட்டுவாங்கி முத்திரையிட்டு எங்கள் வசத்தில்வைத்துவிட்டு யாககாலத்திலெடுத்துக் கொள்வதாகச்சென்று எங்கள் ராஜ்ஜியத்தில் மிருகங்களையேவ அவைகளைக்கொல்ல என்றந்தை வேட்டைக்குச்செல்ல அவ்விடம் முனிவர்வந்து நீசப்பெண்களைப் புணரும்படிவேண்ட என்னத்தைக் கேட்கினுந்தருவேன் அன்னியப்பெண்களைக் கூடேனென்று என்பிதா மறுக்க முனிவர் இதுதான் சமயமென்று எங்கள் நாடுநகரம் பரிவாரமாதிகளனைத்துந் தந்திரமாய்ப் பெற்றுக்கொண்டு யாகப்பொன்னைக்கொடுக்கும்படி வினவ அதுகொடுக்க வகையில்லாததினால் இக்காசிக்குவந்து என்னையும் எனதன்னையையுங் காலகண்டையருக்கு விற்றுக் கடனைச்செலுத்திவிட்டுத் தந்தையும் மந்திரியும் எங்கோ சென்றுவிட்டனர்கள் எனதன்னை வேதியர்வீட்டு வேலைசெய்துகொண்டிருக்கின்றுள் யான் காட்டுவேலைசெய்யவந்திருக்கின்றேன் இதுதான் எனது சரித்திரம் இப்போது நீங்கள்தான் எனக்காதாரமான சுற்றமாயிருக்கின்றீர்கள் மித்ரர்காள்.



அசலார்த்துப்பிள்ளைகள் விருத்தம்.

ஆஹஹா ராஜபுத்ரா அவஸ்தையு முனக்கிவ்வாறு
பாகமாய் வரலாமோநீ பயப்படவேண்டாம்நோக்குத்
தாகமா யுள்ளதெர்ப்பை சமிதைமற் றவைகளெல்லாம்
வேகமா யெடுத்துவந்து வேணது தருவோம்மையா.

(அச-வ-ம்.) ஆஆ ராஜபுத்ரா நோக்கு இப்போர்ப்பட்ட சங்கடமெல்லாம் வரவேணுமா நல்லது நீபயப்படாதே நோக்குவேண்டிய தெர்ப்பை-இலை-சமிதை முதலானதும் நாங்களே பறித்துக் கட்டிக்கொடுக்கிறோம் மையா.

(தேவ-வ-ம்.) அப்படியே செய்யுங்கள் நண்பர்காள்.

சுப்பு விருத்தம்.

நாணுவா தாவிஸ்வநாதாசேஷு
நாமுமிந்தப் பயல்துயரங் கேட்டுக்கிண்டு
தோணுமிலை சமிதைதெர்ப்பை முதல்மற்றெல்லாந்
தலங்குவன முள்ளவெகு தூரம்வந்தோம்
காணுமதி பசியகலக் கொண்டுவந்த
கட்டமுதை யுண்டுவிட்டுக் காட்டிற்சென்று
வேணுமென்ற வஸ்துவெல்லா மெடுத்துக்கிண்டு
வேகமுடன் காசிநகரேகலாமே.

(சுப்பு-வ-ம்.) அடாய் நாணு வாதா விஸ்வநாதா சேஷு நாமானால் இந்தப்பயல் சொல்லிக்கிண்டுவந்த பரிதாபத்தைக் கேட்டுக்கிண்டுவெகுதூரம் வந்துவிட்டோம் அதோ நன்னாய் இலை-சமிதைதெர்ப்பமுதலான வஸ்துக்களுள்ள வனந்தோணுது ஆகச்சே நாமிங்குதானே யுட்கார்ந்து சட்டவட்டமாய்க் கட்டுச்சாதந்தின்னுட்டு அப்பால் வனத்துக்குட் செல்வோமடாய்.

(மற்றவர்கள் வசனம்.) அப்படியே செய்வோமடாய்.

(சுப்பு-வ-ம்.) ஆனால் இந்தப்பயனுக்குக் கொஞ்சஞ் சாதங்கொடுங்களேன் பாபந்தின்னட்டும்.

(மற்-வ-ம்.) அப்படியே கொடுக்கிறோமடாய் நீயுங் கொடுப்பார்ப்போம்.

(சுப்பு-வ-ம்.) அடாய் உங்களிடத்திலே பேசிக்கிண்டே மற ந்துட்டுத் தின்னுட்டேனே.

(சேஷு-வ-ம்.) அடாய் நாணுமப்படித்தானே.

(நாணு-வ-ம்.) அடாய் நாணுமப்படித்தான்.

(விஸ்-வ-ம்.) அடாய் நாணுமேற்படித்தான்.

(வரா-வ-ம்.) அடாய் நாணுஞ் சொல்லவாவேணும்.

(சுப்பு-வ-ம்.) அடாய் தேவதாசா எல்லோரு மறந்துட்டு சாதத்தையெல்லாந் தின்னுட்டோமே இனியென் செய்கிறது.

(தேவ-வ-ம்.) ஆஆ நேயர்காள் அந்தப்பொசிப்பு எனக்குக் கொடுத்துவைத்தாற்றானே கிடைக்கும் அதனாற் பாதகமில்லை வன த்துக்குட்செல்வோம் வாருங்கள்.

(சுப்பு-வ-ம்.) அனுலப்படியே செல்வோம்.

(சேஷு-வ-ம்.) அடாய் சுப்பு இவனைப்பார்க்கவைத்துத் தின் னுட்டத்தைப்பற்றி நேக்குரொம்ப விசனமாயிருக்கடாய்.

(சுப்பு-வ-ம்.) அடாய் நேக்கும் பரிதாபமாகத் தானிருக்கு என்செய்வது நல்லது இதோ வனத்திற்குள் வந்துட்டோம் இங்கு ள்ள தெர்ப்பை-சமிதை-இலை முதலானவைகளை யறுத்துச் சுமை கட்டிக்கிண்டு இந்தப் பயலுக்கும் ஒரு சுமைகட்டிக் கொடுப்போ ண்டாய்.

(சேஷு-வ-ம்.) அப்படியாவது செய்வோண்டாய்.

பொது விருத்தம்.

இட்டமாய் வார்த்தைபேசி யேந்தலின் சேயைத்தங்கள்
ஒட்டவே யிருக்கவைத்துக் கேலிபோல் மறையோர்மைந்தர்
கட்டமு தெல்லாந்தின்றுகானகத் தினுக்குட்சென்று
பொட்டெனத் தெர்ப்பைமற்ற பொருளெலாந் தேடினாரே.



## அசலாத்துப்பிள்ளைகள் தெர்ப்பைமுதலானவை கொய்யுந் தரு.

[வீதிவீதிகள்தோறும் விலைகூறினென்]
என்ற சருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு
இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

பல்லவி.

அசலாத்துப்பாலரோடினர் அவ்வனத்தினில்
அரியவஸ்துகள்தேடினர்.

அநுபல்லவி.

வசமானசமிதைகள் வகைவகையாய்முறித்தார்
குசையிலைமுதலெல்லாம் இசைவாகவேபறித்தார் (அச)

சரணம்.

அனைத்துமோர்புறங்கொட்டினர் பக்குவமாக
ஆருக்கோர்சுமைகட்டினர்
மனத்துயருடன்வந்த மன்னவன்மகனுக்குத்
தனித்தொருசுமைகட்டித் சந்தனரேகனுக் (அச)

---

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

சின்னவா வனத்துக்குள்ளே தேடியே சமிதைதெர்ப்பை
பின்னுமே புள்ளதெல்லாம் பிடுங்கியான் விதமாக
நன்னய சுமைபுங்கட்டி நாங்களும் வைத்துவிட்டோம்
உன்னுடை பாகத்திற்கே யொருசுமை யெடுத்துக்கொள்ளே.

---

(அச-வ-ம்.) அடாய் தேவதாசா இவ்வனத்திலுள்ள தெர்ப்பை-சமிதை-இலை முதலானதுமெடுத்து ஆறுசுமைகட்டிவைத்துவிட்டோம் நீயொரு சுமையெடுத்துக்கோ போதுபோவதற்கு முன்னே ஆத்துக்குப்போகலாண்டா.

தேவதாசன் விருத்தம்.

பொன்னகரோர்கள்போற்றும் பூசுரச்சிறுவரேமுன்
சொன்னசொற் படியெனக்கோர் சுமையது கட்டிவிட்டீர்
அன்னதை யெடுத்துக்கொள்ள யாதொரு தடையுமில்லை
இன்னமும் யானோர்சேதி யியம்பிடக் கேட்டிடீரே.

---

## தேவதாசன்சொல் தரு.

[விரசமானவார்த்தைவேண்டாம் விட்டுவிடடா]
என்ற ட்ராமாப்பதத்தின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அந்தணர்களே யானுமிப்போ தறையக்கேளுமே

அநுபல்லவி.

எந்தனுக்கு கந்த நீங்கள்
இனிதாயிப்போது
தந்தசமை போதும்-ஆனாற்
றருப்பைபோதாது (அந்த)

புற்றிவிதோ சுற்றித்தெர்ப்பைப்
புல்த்தெரியுதே
சற்றிருங்கள் முற்றுங்கொய்து
க்ஷணம்வருகிறேன் (அந்த)

(தேவ-வ-ம்.) ஆஆ அந்தணமித்ரர்காள் பாருங்கள் நீங்களெனக்காகக் கட்டிக்கொடுத்த சுமையானது போதுமானதாயிருந்தாலும் தெர்ப்பைமட்டுங் குறைவாயிருப்பதாற் காலகண்டையர் கோபித்துக்கொள்வாராதலால் அதோ புற்றருகில் அனேக தெர்ப்பைப்புற்கள் செழிப்பாய் முளைத்திருக்கின்றன அவைகளையும் பறித்துக்கொண்டுவருகின்றேன் மித்ரர்காள்

அசலார்த்துப்பிள்ளைகள் விருத்தம்.

எதடாய் தேவதாசா எங்கள்சொற் கேட்கமாட்டாய்
போதிதோ போரதிங்கே புதரில்வாழ் மிருகஜாதி
வாதனை யுண்டாம்நோக்கு வைத்ததெர்ப் பையுமேபோரும்
சேதமில் லாமற்றூக்கிச் சீக்கிரம் வருகுவாயே.

---

(அச-வ-ம்.) எதடாய் தேவதாசா நீ யெங்கள் வார்த்தையைக் கேள்க்கமாட்டாய்போவிருக்கே பார் போதுபோரது இனிமேலிங்கே மிருகஜாதிகளுடைய உபத்திரவமுண்டாகுமாகச்சே இந்தத் தெர்ப்பையேபோரும் எடுத்துக்கிண்டு சீக்கிரம் வாயேன்டாய்.



(தேவ-வ-ம்.) இதோ க்ஷணத்திற்குட்கொய்துகொண்டு ஓடி வருகின்றேன் போய்விடாமல் இவ்வாலாமரத்தின்கண்ணே நில்லுங்கள் நில்லுங்கள்.

---

பொது விருத்தம்.

அவ்வரிச்சந் திரன்மனைவி சேயைவிற்றும்
அவன்பறைய னுக்கடிமைப் பட்டான்பொன்னைச்
செவ்வையுடன் செலுத்திவிட்டா னிப்போதென்ன
செயலிலிருக் கின்றானென் றறிவேனென்று
ஒவ்வியந்த மாமுனிவன் ஞானக்கண்ணால்
ஓர்ந்தசுதன் றெர்ப்பைகொய்யப் போருஞ்சேதி
அவ்வளவுங் கண்டவனைக் கொல்லப்பாம்பை
அழைப்பிப்பான் புற்றினுக்குள் நுழைப்பிப்பானே.

---

## விஸ்வாமித்திரர் துராலோசனை.

ஆஆ என்ன கஷ்டகாலம் அரிச்சந்திரன் தன்பெண்டுபிள்ளையைக் காசியிலுள்ள வேதியனுக்குவிற்றுக் கடனைத்தீர்த்தும் தான் பறையனுக்கடிமைப்பட்டுத் தாருக்கூலியை வாங்கிக்கொடுத்தும் சுக்கிரபகவானுடைய இமிசையை விட்டுத் தப்பித்துக்கொண்டானே ஆஆ எனது சபதம் நிறைவேற மார்க்கமில்லாமற் போய்விட்டதே இனியென்செய்வேன் நல்லது இன்னும் அவனைச் சும்மாவிடக்கூடாதாகையால் இப்போதென்ன ஸ்திதியிலிருக்கின்றார்களென்று ஞானதிருஷ்டியாற் பார்க்கின்றேனிப்போது ஆஆ அரிச்சந்திரனும் சத்தியகீர்த்தி மந்திரியும் காசியிலுள்ள சுடலைகாத்துக்கொண்டிருக்கிறார்கள் சந்திரமதி காலகண்டையர் வீட்டில் வேலைசெய்துகொண்டிருக்கின்றாள் தேவதாசன் வேதியச் சிறுவருடன் கானகஞ்சென்று தெர்ப்பைகொய்யப் புற்றருகிற் போகின்றான் அந்தப்புற்றுக்குள் ஓர் காளகண்ட சர்ப்பத்தையிருக்கும்படியேவித் தேவதாசன் றெர்ப்பைகொய்யுஞ் சமயத்திற் கையில் வெடுக்கென்றுகடித்து உயிரை மடித்திடும்படி செய்து அதனுலினிமேல் என்ன விபரீதம் விளையுமோ அதையும் பார்க்கின்றேனித்தப்பகனார்.

பொது விருத்தம்.

நில்லுநில் லென்றேபாலன் நிமிஷத்தி லோடிச்சென்று
வல்லமா முனிவன்விட்ட மாயசர்ப் பமுமேவாழும்
இல்லமா கியபுற்றோர மெழிநுடன் வளர்ந்ததெர்ப்பைப்
புல்லினை யறுக்கச்சற்று புத்தியுந் தயங்குவானே.

தேவதாசன் விருத்தம்.

படைத்தவா தில்லையென்னும் பதிதனிற் காளியோடு
நடித்துமென் றவனேதூய நவமணி யிழைத்தசெம்பொன்
முடித்தரும் புத்தவம்ஸ முறைப்படி நானுஞ்செங்கோற்
பிடித்திடுங் கரத்தாற்றெர்ப்பை பிடுங்கிட விதித்திட்டாயே.

## தேவதாசன்சொல் தரு.

[என்னுடன்நீபோசாததுஞாயமோ இத்தனைகோபம் ஏற்குமோடாசாமி]
என்ற இந்திரசபாவின் வர்ணமெட்டு.
இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சிவசிவாவுன்னைத் தினந்தொழுமென்னைத்
தெர்ப்பையுங்கொய்யச் செய்தனையையோ (சிவ)

புற்றிதோகாணுதே புல்மிகத்தோணுதே
புதர்செலக்கொஞ்சம் பதறுதேநெஞ்சம் (சிவ)

மாமுனிசூதோ மகிமையுமேதோ
மறையவர்தொண்டாய் வந்தனன்கண்டாய் (சிவ)

குழந்தையுநானே குடங்கையிற்றானே
குசையெனுமீதைக் கொய்வேனிப்போதே (சிவ)

(தேவ-வ-ம்.) ஆஆ ஜெகதீசா சூர்யராஜவம்ஸத்திற் பிறந்த யான்முறைப்படி செங்கோற்பிடிக்கத்தகுந்த கரத்தாற் தெர்ப்பை பறிக்கும்படி விதித்துவிட்டனையே ஆஆ. இந்தப்புற்றருகிற் றெர்ப்பைப்புற்கள் செழுமையாய் வளர்ந்திருக்கின்றன அவைகளைப்பறிக்கலாமென்றால் என்மனத்திடங் கொள்ளாமற் பதறி ஓர்வித பீதிய





டைக்கின்றதே ஆஆ இதுவும் விஸ்வாமித்திரர் சூதோ யாதோ தெரியவில்லையே ஆஆ காலகண்டையர்க்கடிமை வேலைசெய்யவந்த யான் பயமுற்றுப் பறிக்காமற்சென்றால் அவர் அடித்துத் தொந்திப்பாரே யிதற்கென்செய்வேன் நல்லது எப்படியிருந்தாலுஞ்சரி இதோ தெர்ப்பைகொய்கின்றேன்.

பொது விருத்தம்.

சீலமாய்த் தேவதாசன் றெர்ப்பையுங் கொய்யும்போது
கோலமா முனிவன்மாய்கைக் கொள்கையாய்ப் புற்றிலுற்ற
காலனைப் போன்றநாகங் கைதனிற் கடிக்கவந்தப்
பாலகன் கதறிவீழ்ந்து பதறியே புலம்புவானே.

தேவதாசன் விருத்தம்.

அரகரா சிவனேயீசா ஐயையோ வென்னசெய்வேன்
தரமுடன் றெர்ப்பைமற்ற சகலமும் பறித்துத்தந்த
திரமுள மறையோர்வீட்டுச் செல்வரே தோழமாரே
விரைவினி லோடியிங்கே வேகமாய் வருகுவீரே.

## தேவதாசன்சொல் தரு.

[மோடியாலரா நாசாமிகுநாபை மோடியாலரா]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-ஏகதாளம்.

கண்ணிகள்.

ஓடிவாருங்கள்-என் னுயிர்போகுதேயிங்கே (ஓடி)
அபயமபயம்-ஓ ஐயமாரேயிங்கே (ஓடி)
பாம்புதீண்டிற்றே-மெய் பதறுகிறதேயிங்கே (ஓடி)

(தேவ-வ-ம்.) ஐயையோ வேதியமித்திரர்காள் என்னைச் சர்ப்பந்தீண்டி உயிர்பாதவிக்கின்றது ஆஆ ஓடிவாருங்கள் சீக்கிரம்.

(சேஷ-வ-ம்.) அடாய் சுப்பு அந்தப்பயல் அழுறானே என்னடாயது.

(சுப்பு-வ-ம்.) அடாய் சேஷா எதோ பார்ப்போம் எல்லோ ரும்ஓடிவாருங்கள் சீக்கிரம்.

(அச-வ-ம்.) அடாய் தேவதாசா நோக்கென்ன வந்துடுத்து சொல்லுறாய்.

தேவதாசன் விருத்தம்.

தெர்ப்பையுங் கொய்யுதற்குச் சீலமாய்க் கூடவந்த
விப்பிரச் சிறுவர்காளென் விதிவச மோவலாது
சற்பனை முனிவர்செய்த ஜாலமோ முன்னையாலும்
இப்படி வருகுமென்றே யெண்ணிலே னென்னசெய்வேன்.

தேவதாசன்சொல் தரு.

[சாமிக்கார்போய்ச்சொல்லுவார்]

என்ற பதசாகித்தியத்தின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-இந்துஸ்தானி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயோ என்னசெய்குவேன்

அநுபல்லவி.

கையினில்நாகங் கடித்திதோசோகங்
காட்டுதேவிஷந்தலைக்கேறி ஐயோ
காட்டுதேவிஷந்தலைக்கேறி மதிமாறி (ஐயோ)

கண்கள்பஞ்சடைந்து காலெலாங்குடைந்து
களைக்குதேயென்னவினிச்செய்வேன் ஐயோ
களைக்குதேயென்னவினிச்செய்வேன் என்றுய்வேன் (ஐயோ)

நெஞ்சடைபடுதே நிலையதுகெடுதே
நீங்குமோவெனக்கிந்தத்தொல்லை ஐயோ
நீங்குமோவெனக்கிந்தத்தொல்லை இடமில்லை (ஐயோ)

விதியிதுதானே விஷம்பொறுப்பேனே
வேதியகுலத்தோழமாரே ஐயோ
வேதியகுலத்தோழமாரே சொல்லுவீரே (ஐயோ)





(தேவ-வ-ம்.) ஆஆ வேதியமித்திரர்காள் அந்தோ யான் றெர்ப்பைகொய்துகொண்டிருக்குஞ் சமயத்தில் இந்தப்புற்றிலிருந்து ஓர்காளசர்ப்பமானதுவந்து என்கரத்திற்றீண்டி விஷந்தலைக்கேறி மனந்தடுமாறி நிலைகுலைந்து தேகமெல்லாம் நடுங்குகின்றதே ஆஆ கண்கள் பஞ்சடைகின்றனவே ஆஆ கால்களெல்லாங் குடைகின்றனவே ஆஆ மேனியெல்லாங்களைத்து வியர்வையுண்டாகின்றதே ஆஆ நெஞ்சடைக்கின்றதே ஆஆ சகிக்கமுடியவில்லையே ஆஆ இத்துன்பம் என்னைவிட்டுநீங்குமோநீங்காதோ தெரியவில்லையே ஆஆ கொஞ்சமேனுந் தைரியமில்லையே ஆஆ எனக்கிதுதான் முடிவுகாலம்போலிருக்கின்றதே இதற்கென்செய்வேன் மித்திரர்காள்.

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

வள்ளலின் சேயாநோக்கு வந்திட லாமோகஷ்டம்
பிள்ளையார் பிடிக்கப்போயோர் பெருங்குரங் காய்ச்சமைந்த
கொள்கைபோ லாச்சுதேடா கொடுவிஷம் போக்குதற்கு
உள்ளதன் மருந்துமெங்கட் கொன்றுமே தெரியாதப்பா.

(அச-வ-ம்.) ஐயையோ தேவதாசா நோக்கு இப்பேர்ப்பட்ட கஷ்டமாநேரவேணும் ஆஆ (பிள்ளையார்பிடிக்கக் குரங்காய்ச்சமைந்தது) என்னும் பழமொழிபோலாகிடுத்தே ஆஆ எங்களுக்கு மருந்துகூடத்தெரியாதே யென்னசெய்வோங்கண்மணி.

(தேவ-வ-ம்.) ஐயோ மித்திரர்காள் என்னுயிரானது பறக்கின்றதே யென்செய்வேன்.

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

சமிதையு மிலையுந்தெர்ப்பை சகலமும் பறித்துநோக்குச்
சுமையது கட்டிவைத்துத் தூக்கிடச் சொன்னதற்கு
இமிசையுங் சொல்வதற்கே யெங்கள்சொற் றட்டிவிட்டு
நிமிஷமே வருவேனென்று நீயிங்கே வந்தாயேடா.

## அசலாத்துப்பிள்ளைகளுக்குந் தேவதாசனுக்கும் தர்க்கம்.

[விஸ்வேசாவுந்தனைநான் வேண்டினபலனிதுவோ]
என்ற நீதிநெறி அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு
இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

அசலாத்துப்பிள்ளைகள்சொல் கண்ணி

போகவேண்டாமென்றுனக்குப் புத்திமிகச்சொன்னோமடா
வேகமாகவெங்கள்சொல்லை மீறிவிட்டுவந்தாயடா
வினையிதோ வினையிதோ வினையிதோ வினையிதோ (போக)

தேவதாசன்சொல் கண்ணி

என்னுடையதலைவிதி யிப்படிவரலாச்சுதே
அன்னையிடமிந்தச்சேதி யறைந்திடவேணுமையா
ஐயரே ஐயரே ஐயரே ஐயரே (என்)

அசலாத்துப்பிள்ளைகள்சொல் கண்ணி

ஆதரவுசொல்லியுன்னை யழைத்துமேவந்திருக்க
ஏதுமுகங்கொண்டுன்னன்னை யிடத்திற்குச்செல்வோமடா
ஏங்குதே ஏங்குதே ஏங்குதே ஏங்குதே (போக)

தேவதாசன்சொல் கண்ணி

எந்தனன்னைகேட்டாளானால் ஏங்கியேயுயிர்விடுவாள்
சிந்தைகலங்காதவட்குத் தேறுதலைசொல்லுவீரே
செல்வரே செல்வரே செல்வரே செல்வரே (என்)

அசலாத்துப்பிள்ளைகள்சொல் கண்ணி

கூட்டிவந்தநாங்களுன்னைக் காட்டினிலேவிட்டுவிட்டுத்
தாட்டிகமாய்நாங்களுந்தன் தாயிடத்திலென்னசொல்வோம்
தர்மமோ தர்மமோ தர்மமோ தர்மமோ (போக)

தேவதாசன்சொல் கண்ணி

பேசமுடியவில்லையே பிரியுதேயென்னுயிரும்
நாசமுனிகூறுஞ்சனி நாட்டமென்றுசெப்புவீரே
நல்வரே நல்வரே நல்வரே நல்வரே (என்)

---



(தேவ-வ-ம்.) ஆஆ மித்திரர்காள் எனக்குப் பேசமுடியவில்லையாகையால் விஸ்வாமித்திரர் வஞ்சனையினாலும் சனிபகவான் ஞேஷத்தினாலும் விதிவசத்தினாலுஞ் சம்பவித்த இச்சேதியை யெனது மாதாவிடஞ் சொல்லிவிடுங்கள் இதோ உயிரானது பிரிந்து போகின்றது ஈசன்பதஞ்சேர்கின்றேன் அரகரபரமேஸ்வரா.

பொது விருத்தம்.

சித்தசன் றனைநிகர்த்த தேவதா சனும்விஷத்தால்
மெத்தவுந் துன்பமுற்று மெய்மறந் தயிருநீங்கி
அத்தனார் பதத்தைச்சேர்ந்த வதிசயந் தன்னைக்கண்ட
சுத்தபூ சுரரின்பாலர் துயரது கொண்டிட்டாரே.

அப்பு விருத்தம்.

ஏதடா சேஷூபால னிதுவரை யினுமேவார்த்தை
ஓதினா னரகராவென் றுரைத்ததும் பேச்சைக்காணோம்
சோதனை செய்குவோஞ்சு வாசமே தேனுமுண்டோ
சீதமே விடுமுன்னுகச் சீக்கிரம் பார்த்திடேண்டா.

(சுப்பு-வ-ம்.) அடா சேஷூ ஏதடாய் இன்னேரமட்டும் பேசிக்கிண்டு அழுதுக்கிண்டுஇருந்தான் இப்போது அரகரபரமேஸ்வராவென்னு சொன்னான் மறுபடிபேச்சைக்காணோமே நல்லது சுவாசமேதேனுமிருக்கோ பாரேண்டா.

(சேஷூ-வ-ம்.) அடாய் சுப்பு ஒன்னுங்காணமே நன்னாய் விறகுக்கட்டை போலேயன்னோ விறைத்துப்போயிருக்கு ஆஆ உயிர்போயிடுத்தே யென்செய்கிறது.

(மற்-வ-ம்.) அடாய் சுப்பு சேஷூ வாஸ்தவந்தான்டாய் உடம்பெல்லாஞ் சில்லென்னு குளிர்ந்துபோயிடுத்து.

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

காவினை நாடியின்று கடுகியே வருகும்போது
ஓவிய மாகவுந்த னுற்பவ மனைத்துஞ்சொன்ன
சேவகா தேவதாசா தேன்மொழி வாயாவுந்தன்
ஆவியு மடங்கியீச னடியிணை சேர்த்திட்டாயோ.

## அரலாத்துப்பிள்ளைகள் சொல் தரு.

[ஒருமாதுவரச்சொன்னதென்னைத்தானே]

என்ற ட்ராமாஜாவளியின் வர்னமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயோ-பார்த்திருக்கும்போதேயுயிர் போச்சே

அநுபல்லவி

உயிர்போச்சு வசைப்பேச்சுக் கிடமாச்சு-ஐயோ(பார்)

சரணங்கள்

பாம்புக்குன்மேல் நிம்புமுண்டோ-பாலா
அடாய்பாலா குணசீலா தண்டைக்காலா-ஐயோ(பார்)

முனவினையோ எதுவுந்தெரியோமே
தெரியோமே இந்தத்தீமை அறியோமே-ஐயோ(பார்)

சாகவந்தா யோகருணேசா
எங்கள்நேசா தேவதாசா விசுவாசா-ஐயோ(பார்)

அன்னைதனக் கென்னமொழிசொல்வோம்
என்னசொல்வோம் எதாய்வெல்வோம் எங்கெசெல்வோம்-ஐயோ(பார்)

(அச-வ-ம்.) ஆஆ தேவதாசா நாங்கள் பார்த்துக் கிண்டிருக்கும்போதே சோக்கு உயிர்போயிடுத்தே ஆஆசர்ப்பத்துக்கும்நோக்கும்விரோதமோ அல்லது விதியின்பயனோ ஏதோ தெரியவில்லையே ஆஆ நீமடிந்திடவா எங்களுடன் வந்தாய் ஆஆ தேவதாசா நாங்கள் உன்மாதாமுகத்தில் எவ்விதமாய் விழித்து இந்தச் சேதியைச்சொல்லித் தப்பித்துக்கிண்டுபோவோம் ஆஆ உன்ரூபலக்ஷணத்தையும் இனியவார்த்தையையும் நினைக்க நினைக்கவயற்றைப்பற்றி யெரிகிறதே யென்செய்வோம்.

சேஷு விருத்தம்.

என்னவினிச் செய்வதடா சுப்புநாமும்
இருந்தாழுதா லிவன்பிழைக்கப் போவதுண்டோ
இன்னவனை யெடுத்தேக லாமென்றாலுஞ்
செத்தபிணம் விடுசெல்லக் கூடாதின்றேன்



அன்னையிடஞ் சொல்லிடுவோ மஸ்தமானம்
ஆச்சுதினி யிருந்தாக்கால் மிருகங்கொல்லும்
நன்னயமாய்ச் சுமையனைத்துந் தூக்கிக்கிண்டு
நடக்கலாம் நகர்க்குவழி கடக்கலாண்டா.

(சேஷு-வ-ம்.) அடாய் சுப்பு நாம் கூடியழுவதினால் இவன் பிழைக்கப்போகிறனா ஒருக்காலுமில்லை இவனை யெடுத்துக்கிண்டு போகலாமென்றால் காட்டிற்செத்தபிணத்தை ஆத்துக்கெடுத்துக்கிண்டு போகலாகாது ஆகச்சே நாம் நகரத்துக்குப்போய் இந்தச் சேதியை யிவன்தாயாரிடஞ் சொல்லிடுவோம் இப்போது போது போரது இனியிங்கிருந்தால் மிருகங்கள் நம்மை வாயிற்போட்டுக் கொள்ளுமாதலால் இந்தமட்டோடு சுமையைத் தூக்கிக்கிண்டு ஆத்துக்கு நடக்கலாண்டா.

(சுப்பு-வ-ம்.) அப்படியே செய்யலாண்டா அடாய் சேஷு நேக்கானால் வயற்றைப்பற்றி யெரிகிறதே இவனைப்பெற்றவள்கேட்டால் எப்படியழுவாள்.

(சேஷு-வ-ம்.) ஆம் ஆம் நேக்குமப்படித்தானிருக்கு என் செய்கிறது.

(நாணு-வ-ம்.) அடாய் சேஷு நேக்குமப்படித்தான்.

(விஸ்-வ-ம்.) அடாய் நாணு நேக்குமேற்படிதான்

(வர-வ-ம்.) அடாய் விஸ்வநாதா நானுஞ்சொல்லணுமோ

(சேஷு-வ-ம்.) சரிசரி நடக்கலாம் வாருங்களேன்.

(மற்-வ-ம்.) அப்படியே வருகிறோண்டாய்.

பொது விருத்தம்.

அழுதமா ரடித்தபால ரவரவர் சுமையைத்தூக்கிப்
பழுதிலாக் கரசிநோக்கிப் பாதையில் வருகும்போது
பொழுதுபோ யிரவரைக்கும் புதல்வனைக் காணோமென்று
வழிதனில் நின்றுசந்த்ர மதியுமே புலம்புவாளே.

சந்திரமதி விருத்தம்.

திருவளர் காசிவாழுந் தேவனே விஸ்வநாதா
பெருமைசேர் மறையோர்வீட்டுப் பிள்ளைக ளுடனேசென்ற
அருமைசே ரெனதுபால னஸ்விருள் நேரமாயுந்
தருமலி வனத்தைவிட்டுத் தடத்திலில் வரக்காணேனே.

சந்திரமதிசொல் தரு.

[அரவாபரணனே அபிராமிநேசனே]
என்ற இந்திரசபாவின் வர்ணமெட்டு
இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாபு.

கண்ணிகள்.

காட்டுக்குச்சென்றவென் காளையைக்காணேமே
கடவுளேயென்னசெய்வேன்
தெர்ப்பைகொய்யவேசென்ற, செல்வனைக்காணேமே
தெய்வமேயென்னசெய்வேன்
சமித்துகொணரச்சென்ற தனையனைக்காணேமே
சங்கராஎன்னசெய்வேன்
ஏனோவோர்விதமாக என்மனம்பதறுதே
இறைவனேயென்னசெய்வேன்
அம்மம்மாவென்றுசொல்லி அடிக்கடிவருவானே
ஆதியேயென்னசெய்வேன்
சென்றவிடத்திலேதுந் தீங்குகள்நடந்ததோ
ஜெகதீசாநானறியேன்

(சங்-வ-ம்.) ஆஆ ஜெகதீசா தெர்ப்பைமுதலானதுகொய்ய அசலாத்துப்பிள்ளைகளுடன் கானகத்திற்குச்சென்ற எனது கண்மணியாகியதேவதாசன் அஸ்தமித்து இதுநேரமாகியுந்தமும் வரக்காணேமே ஆஆ என்மனமானது ஒருவிதமாகப் பதறிக்கொண்டேயிருக்கின்றதே ஆஆ அம்மா அம்மா வென்று அடிக்கடிவந்து என்சிந்தைகளிக்கச்செய்வானே ஆஆ சென்றவிடத்தில் என்ன தீங்குகள் நேர்ந்ததோ தெரியவில்லையே ஆஆ ஈசா இனியென்செய்வேன்.



பொது விருத்தம்.

சந்திரமதியுந்தேவ தாசனைக் காணேமென்று
சிந்தையுங் கலங்கிவாடித் தெருவினில் நிற்கும்போது
அந்தணச் சிறுவரெல்லா மடவிவிட் டூர்க்குள்ளாக
வந்தவர் மாதைக்கண்டு மனமிக மயங்குவாரே.

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

சின்னவன் றன்னைநாங்கள் சிறப்புட னழைத்துச்சென்று
பன்னகத் திடத்திலல்ல பசிக்கிரை கொடுத்துவிட்டு
இன்னல்கொண் டிங்குவந்தோ மெங்கள்முன் னேதுமொன்னு
சொன்னசொற் போலேயந்தத் தோகையு நிற்கிறாளே.

அசலாத்துப்பிள்ளைகள்சொல் தரு.

[மன்னன்வரக்காணேனே யென்னநான்செய்குவேன்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயோவிதோநிற்கிறாளே
அந்தச்சந்திரமதியும் (ஐ)

அநுபல்லவி.

பையவெதிர்செல்லமனம் பதறுதேயிந்தத்தினம் (ஐயோ)

சரணம்.

எவ்விதமாயிந்தச்சேதி யியம்பிடமனந்தோயும்
ஒவ்விநாங்கள்சொல்வதென்றால் உழறுமேயெங்கள்வாயும்(ஐயோ)

(அச-வ-ம்.) ஆஆ சந்திரமதியானவள் காலகண்டையர் ஆத்துசேரிக்குமுன்னல் நின்னுவழி பார்த்துக்கிண்டிருக்காளே ஆஆ அவளெதிரக்கச் செல்வதற்கு எங்களுக்கானல் மனம்பதறுகிறதே ஆஆ அவளிடத்தில் தேவதாசனிறந்தசேதியை யெவ்விதமாகச்சொல்லித் தப்பித்துக்கிண்டு வரப்போகிறோம் ஆஆ ஜகரக்ஷகா எங்களையிந்தக்கெதிக்கா ஆளாக்கிவைத்தனே.

(சுப்பு-வ-ம்.) அடாய் சேஷு சந்திரமதியைக்காணச்சே நேக்குப் பயமாயிருக்கே எவ்விதமாயடாய் இந்தவார்த்தையைச்சொல்கிறது.

(சேஷு-வ-ம்.) அடாய் சுப்பு ஆளுக்கொன்றுசொல்லிட்டு ஓடிவிடலாண்டாய்.

(மற்-வ-ம்.) அடாய் சேஷு அதுதாண்டாய்சரி வாருங்களேன் எதிரக்கப்போகலாம்.

(சேஷு-வ-ம்.) அப்படியேபோகலாண்டாய்.

சந்திரமதி விருத்தம்.

கதிரவன் மறைந்தேயெங்குங் கங்குலுஞ் சூழ்ந்ததாலே
இதுவரை திரும்பிவாரா திருந்ததால் வனத்திலேதுஞ்
சதிகள்நேர்ந் துளதோவென்று தயங்கினேன் கானஞ்சென்ற
மதலைக ளெல்லாமிதோ வருகிறார் வருகிறாரே.

---

## சந்திரமதிசொல் தரு.

[ஜர்மதோஹை ஜானி ஜர்மிதோஹை]
என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு.

பல்லவி.

சிறுவர்வருகிறார் இதோ சிறுவர்வருகிறார்

அநுபல்லவி.

தறுகித்தறுகிக் குறுகிக்குறுகிச் (சிறு)

சரணங்கள்.

எந்தனுடைய மைந்தனைமட்டும்
இவர்களுடனேகாணேனே
விவரந்தோணேனே-அந்த விவரந்தோணேனே
தறுகித்தறுகிக் குறுகிக்குறுகிச் (சிறு)

தட்டுக்கெட்டங்கு விட்டுவிட்டிந்தத்
தனையர்கள்மட்டும்வந்தாரோ
மனதுநொந்தாரோ-அதால் மனதுநொந்தாரோ
தறுகித்தறுகிக் குறுகிக்குறுகிச் (சிறு)

யாதோவிதுவுஞ் சூதோதெரியேன்
ஐயையோநன்றுப்பார்க்கிறேன்
பையக்கேட்கிறேன்-ரேதி பையக்கேட்கிறேன்
தறுகித்தறுகிக் குறுகிக்குறுகிச் (சிறு)

---



(சந்-வ-ம்.) ஆஆ இதோ அசலாத்துப்பிள்ளைகளெல்லாம் வருகின்றார்களே ஐயோ எனது மைந்தனைமட்டுங் காணப்படவில்லையே ஆஆ கானகத்தில் விட்டுவிட்டு வந்துவிட்டார்களோ யாதோ சங்கதியொன்றுந் தெரியவில்லையே ஆஆ என்செய்வேன் நல்லது இந்தப்பிள்ளைகளை விசாரிக்கின்றேனிப்போது.

சந்திரமதி விருத்தம்.

மானிலம் புகழுகின்ற மறையவர் பாலரேநல்
ஞானசால் திறங்களெல்லாம் நன்கறிந் திடும்வல்லோரே
கானகத் தினுக்குவந்த காதல்சேய் தேவதாசன்
ஏனிவண் வருகவில்லை யெங்கவன் சொல்லுவீரே.

---

## சந்திரமதிசொல் தரு.

[சந்தஞ்சேர்சந்திரன்மேற் றேசைமானு மோகமானேன்]
என்ற தாராசசந்திரசபாவின் வர்னமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

கண்ணிகள்.

அசலாத்துப் பிள்ளைகளே
அழைத்துப்போனபாலனெங்கே (அச)

குணமுடைய பிள்ளைகளே
கூட்டிப்போனபாலனெங்கே (அச)

என்னிடத்தில் ஒப்பிப்பதாய்
இட்டுப்போனபாலனெங்கே (அச)

நானுமுங்கள் வார்த்தைதன்னை
நம்பியேயனுப்பினேனே (அச)

இவ்விருட்டிற் பாலகனை
எவ்விடத்தில்விட்டுவந்தீர் (அச)

என்மனமும் எங்குதிப்ப
என்குழந்தையெங்கேசொல்வீர் (அச)

---

(சந்-வ-ம்.) ஆஆ அசலாத்துப் பிள்ளைகாள் எனது கண்மணியாகிய தேவதாசனுக்குத் தெர்ப்பை முதலானது பறித்துக்கொடு

த்துக்கையுடன்கூட்டி வருவதாகக் காட்டுக்கழைத்துச் சென்றீர்களே ஆஆ அவனிப்போது உங்களுடன் வரக்காணவில்லையே ஆஆ உங்கள் வார்த்தையை நம்பியனுப்பி வைத்தேனே ஆஆ அவனைக் காணுமல் மனம்பதறுகின்றதே ஆஆ செல்வர்காள் இவ்விருள் சூழ்ந்த நிசிவேளையில் அறியாச்சிறுபிள்ளையை யெவ்விடத்தில்நின்று தவிக்கவிட்டு வந்தீர்கள்.

(சுப்பு-வ-ம்.) அஅஅஅ அம்மா.

(சேஷு-வ-ம்.) உஉஉஉ உன்மகன்.

(நாணு-வ-ம்.) பாபாபாபா பாம்பு.

(விஸ்-வ-ம்.) கககக கடித்து.

(வர-வ-ம்.) இஇஇஇ இறந்தான்.

(சுப்பு-வ-ம்.) வாருங்களடாய் ஓட்டம்பிடிக்கலாம்.

(மற்-வ-ம்.) அப்படியே செய்யலாண்டாய்.

சந்திரமதி விருத்தம்.

சின்னவரே நில்லுங்கள் சென்றிட வேண்டாம்நீங்கள்
சொன்னவார்த் தைகளினுமென் சுதனது சேதியானும்
இன்னதென் றெனக்குத்தோண வில்லையே யையமாரே
அன்னவ னெங்கேயென்று யறைகுவீ ரறைகுவீரே.

---

(சந்-வ-ம்.) ஆஆ வேதியச்சிறுவர்காள் ஓடவேண்டாம் நில்லுங்கள் நில்லுங்கள் நீங்களிப்போது பதஷ்டமாய்ப் பாஷித்தவார்த்தையினுல் எனது மைந்தன்சேதியைத் தெரிந்துகொள்ளமுடியவில்லையாதலால் இன்னெருதரம் விபரமாய்ச் சொல்லுங்கள் கண்மணிகாள்.

(சுப்பு-வ-ம்.) அடாய் சேஷு நேக்கு வயற்றைப்பற்றியெரிகிறது நீ சொல்லடாய்.

(சேஷு-வ-ம்.) அடாய் நாணு நேக்குநாவெழவில்லை நீதான் சொல்லேன்.

(நாணு-வ-ம்.) அடாய் விஸ்வநாதா நேக்குப் பதஷ்டமாயிருக்கு நீதான் சொல்லேன்,



(விஸ்-வ-ம்.) அடாய் வரதா நேக்குப் பயமாயிருக்கு நீதான் சொல்லேன்.

(வர-வ-ம்.) அடாய் சுப்பு நேக்காறுற் கையுங்காலும் நடுங்கிக் கட்டிப் பியெல்லாம் கூழாய்க்கலக்குகிறது நாமெல்லோரும் ஒரேமுகூர்த்தத்திற் சொல்லிட்டு ஒரேயோட்டமா யோடிப்போகலாண்டாய்.

(மற்-வ-ம்.) அதுதாண்டாய் சரியானயோஜனை அப்படியே செய்யலாண்டாய்.

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

சற்குண முடையதேவ தாசனைப் பெற்றதாயே
திற்கவெங் களுக்குக்கால்கள் நிலையது கொள்ளவில்லை
சொற்கள்சொல் வதற்குநாவுஞ் சுருக்குது வாய்திறக்கப்
பற்கள்கிட் டிடுவதாலெப் படியதைச் சொல்வோமம்மா.

---

## அசலாத்துப்பிள்ளைகள்சொல் தரு.

[செலியாரோநானேமிசேது செலிஞெரிபாசி]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயையையோ எவ்விதமா யறைகுவோமம்மா

அநுபல்லவி.

பையனது செய்திசொல்லப்
பதறுதேகமம்மா (ஐயை)

சரணங்கள்.

கமழுமலர்க் கானம்நாடிக்
கடுகிப்போனேமே
சமிதையிலே தருப்பைகொய்து
தருகலானேமே (ஐயை)

கொடுத்ததெர்ப்பை யெடுத்துப்பார்த்துக்
கொஞ்சமென்றுனே
கடுத்துப்பார்ப்பான் அடிப்பானென்று
(ஐயை)

பின்னுமவன் இன்னுந்தெர்ப்பை
பிடுங்குவேனென்றான்
சொன்னதடை தன்னைமீறித்
தூரமாய்ச்சென்றான் (ஐயை)
புற்றருகிற் சுற்றித்தெர்ப்பைப்
புற்பறித்தானே
உற்றசர்ப்பம் பற்றித்தீண்ட
உயிர்மரித்தானே (ஐயை)

(அச-வ-ம்.) ஆஆ அம்மா உன்மகனுக்கு நேர்ந்த விபத்தை யென்னசொல்லப்போகிறோம் பார் நாங்கள் தேவதாசனையழைத் துக்கிண்டு காட்டுக்குப்போய் தெர்ப்பை-சமிதை-இலை முதலான தும்பறித்து ஆளுக்கொரு சுமைகட்டிக்கிண்டு அவனுக்கொரு சுமைகொடுத்தோம் தெர்ப்பை கொஞ்சமாயிருப்பதாற் காலகண் டையர் அடிப்பாரென்று பின்னும்பறிக்க எத்தனப்பட்டான் நாங்கள் வேண்டாமென்று தடுத்தோம் (கேடுவரும்பின்னாலே மதி கெட்டுவருமுன்னாலே) யென்பதுபோல எங்கள் வார்த்தையை மீறித் தூரக்கப்போய்ப் புற்றருகில் நன்றாய்வளர்ந்திருந்த தெர்ப் பையைப்பறிக்கச்சே அந்தப்புற்றிலிருந்தகாளசர்ப்பமானது உன் மகன்கரத்திற் றீண்டியிறந்துவிட்டானம்மா நாங்களென்ன செய் வோம்.

சந்திரமதி விருத்தம்.

இதற்குத்தா னுடைவன்னை யீன்றனன் பாவியந்தோ
பதைக்குதே யெந்தனுள்ளம் பாலகா தேவதாசா
புதர்க்குளே காதேயென்று புத்தியுஞ் சொன்னேனப்பா
அதற்குநீ மாறாய்ச்சென்றே யாருயி ரிழந்திட்டாயோ.

சந்திரமதிசொல் தரு.

[மோடியாலரா காதாடிதுாயை மோடியாலரா]
என்ற ஜாவளியின் வர்ணமெட்டு.
இராகம் காபி ஏகதாளம்.
கண்ணிகள்.

ஐயோமகனே-இனி யானென்செய்குவேன் (ஐயோ)



வெய்யபாம்பாலே-உயிர் விட்டாயோமண்மேலே (ஐயோ)
எனைமறந்தாயோ-நீ யெப்படிப்பறந்தாயோ (ஐயோ)
பாவியானேனே-நான் பஞ்சையாய்ப்போனேனே (ஐயோ)
உயிர்தரிப்பேனோ-இனி ஒண்டியாயிருப்பேனோ (ஐயோ)

(சர்-வ-ம்.) ஐயையோ தனயா பாம்புக்கிரைகொடுக்கவா உன்னை வளர்த்தேன் ஆஆ என்னைப் பூமிக்குப்பாரமாய்வைத்துப் பரதேசியைப்போல பரதவிக்கவிட்டு நீமட்டும் பூமிபாரத்தைத் தவிர்த்துக்கொண்டனையே ஆஆ எனக்கடிக்கடி பலவிதகதைரியங்க ளைச்சொல்லி மனந்தேற்றுவாயே ஆஆ கண்மணி என்னை மறந்து விட்டனையே ஆஆ கொடியசர்ப்பம் உன்னைக்கடிக்கும்போது என்னமாய்ப்பறந்துதவித்து உயிர்விட்டனையோ தெரியவில்லையே ஆஆ யான் பாவியாகிவிட்டேனே ஆஆ இனிமேலென்னுயிரை வைத்துக்கொண்டு பூமியிலெவ்விதமாயிருக்கப்போகின்றேன் ஆஆ கண்மணி என்வாயில் மண்ணைப்போட்டுவிட்டாயே யினியென் செய்வேன்.

சந்திரமதி சொல்லுதல்.

சிங்காரபத்யம்.

இப்படிவருமென்று சொற்பனங்கண்டிலேன்
எண்ணமுங்கொண்டிலேன் எந்தன்மகனே
தெர்ப்பையிற்யோகிகள் செய்ததோர்மாயமோ
தேவர்கள்ஞாயமோ எந்தன்மகனே
முப்பிறப்பதனிலே முடிவுற்றபாபமோ
முன்னோர்கள்சாபமோ எந்தன்மகனே
அப்பனேயினிமேல் யானென்னசெய்குவேன்
யாவரைவைகுவேன் எந்தன்மகனே

கற்பனைப்பாம்பினாற் கடியுமுண்டு
காசினியிலுன்னுடைய கவலைவிண்டு
எப்பவும்என்மீது மறதிகொண்டு
ஈசனடிசேர்ந்தயே யெந்தன்மகனே.

(சந்-வ-ம்.) ஐயோ கண்மணி உனக்கிப்பேர்க்கொத்த ஆபத் துவருமென்று யான் சொற்பனங்கூடக் காணவில்லையே ஆஆ இது

விஸ்வாமித்திரர்செய்த மாயமோ அல்லது தேவர்கள்செய்த ஞாய மோ தெரியவில்லையே ஆஆ ஒருவேளை முற்ஜென்மத்திற்செய்த பாபதோஷத்தால் நேர்ந்ததோ அல்லது முன்னோர்களிட்ட சாப மோயாதோ ஒன்றும் புலப்படவில்லையே ஆஆ காளசர்ப்பத்தாற் கடியுண்டு பூவுலகபாசத்தைவெறுத்துப் பெற்றுவளர்த்த மாதா வாகிய என்னையுமறந்து ஜகதீசனுடைய பொற்பாதநிழலி லமர்ந்து விட்டனையே ஆஆ வத்சா இனிமேலுன்னை யெப்போது காணப் போகின்றேன்.

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

அம்மாவுன் பிள்ளைவிதி வசத்தினாலே
யாருயிரை யிழந்தானென் றறிந்திருந்து
சும்மாநீ யழுவதினால் வருவதுண்டோ
சுகமில்லை யாதலினால் நீயிப்போதே
சிம்மாதி வளர்காடு சென்றேயங்கே
செத்தவனை யெடுத்தேகித் தகனஞ்செய்வாய்
எம்மாலே சுமைதாங்க முடியவில்லை
யேகிறோம் ஆத்திறுக்குப் போகிறோமே.

(அச-வ-ம்) ஆஆ அம்மா உன்பிள்ளைவிதிவசத்தாலிறந்துவிட் டானென்பதை நன்றாய்த் தெரிந்திருந்தும் (ஆண்டாண்டுதோ றும் அழுதுபுரண்டாலும் மாண்டோர்வருவதுண்டோ மானிட ரே) யென்பதுபோல நீயவனை நினைந்து வெள்ளைமுட்டிமோதி யழுவதினால் எழுந்துவந்திடுவனோ ஒருக்காலுமில்லையாகச்சே நீயிப் போதே காட்டுக்குப்போய் அவனையெடுத்துத் தகனஞ்செய்யவே ண்டிய வழியைப்பார் எங்கள் தலையிற் சுமையிருப்பதாற் கழுத்து நோகிறது நாங்கள் ஆத்துக்குப்போகிறோமம்மா.

சந்திரமதி விருத்தம்.

எப்படி மனஞ்சகிப்பே னொழிலுள சிறுவரேநீர்
தெர்ப்பையைப் பறித்துத்தந்து சித்தம்வைத் தழைத்துவந்து
ஒப்பிலைப் பதற்கில்லாம லொண்டியாய்க் காட்டில்விட்டுச்
சர்ப்பமுங் கடிக்கச்செய்து சாக்குறவைத் திவண்வந்தீரே.



சந்திரமதிசொல் தரு.

[தேவாவீதென்னமாயஞ் செய்தாயேயனியாயம்]
என்ற சதாரம்நாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயோபாலரேயிந்த அனியாயத்திற்கென்செய்வேன்

அநுபல்லவி.

பையனைநானிழந்து பாரிலெவ்விதமுய்வேன் (ஐயோ)

சரணங்கள்.

பூம்பொழில்தனக்கின்று புதல்வனைக்கூட்டிச்சென்று
சோம்பித்தனிவிடுத்தீர் பாம்புக்கிரைகொடுத்தீர் (ஐயோ)

இப்படியென்றுநானே சொற்பனமறியேனே
கற்பனையிதுதானோ தப்பிதமென்செய்தேனோ (ஐயோ)

தடமதுஇன்னதென்றும் இடமதுமெனக்கொன்றும்
அடையாளந்தெரியாதே அதையுரைப்பீரிப்போதே(ஐயோ)

(சந்-வ-ம்.) ஆஆ பாலர்கள் அன்புடனெனது பாலகனை வனத்துக்கழைத்துச்சென்ற நீங்கள் பின் னுங்கொஞ்சந் தெர்ப்பை பறித்துக்கொடுக்கச் சோம்பல்கொண்டு தனிமையாய் விடுத்துப் பாம்புக்கிரைகொடுத்து வந்துவிட்டீர்களே ஆஆ இப்படிவருமெ ன்று சொற்பனங்கூடக் காணவில்லையே ஆஆ இதுவும் ஈசன்கற்ப னையோ அல்லது யான் பெரியோர்களுக்கேதேனுந் தப்பிதஞ்செய் தேனோ தெரியவில்லையே ஆஆ இவ்வனியாயத்திற் கென்செய்வேன் ஆஆ சிறுவர்காள் நல்லது அவனிறந்துகிடக்குமிடமும் போகவே ண்டியதடமு மெனக்குத் தெரியாதாகையால் எனக்கதன் விபரத் தைத் தெரிவியுங்களப்பா.

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

மாதரசே நீமயங்க வேண்டாமிந்த
வழிசென்று லாலமர மொன்றேயுண்டு
சாதனமா யதற்குவடக் குள்ளகாட்டிற்
றருப்பைமுளைத் துள்ளபுற்று மேடுமுண்டு

ஆதரவா யதற்குத்தெற் காசுத்தானே
அச்சிறுவ னிறந்துகிடக் கின்றானம்மா
சோதனைசெய் தேபார்த்துக் கொள்வாயுண்மை
சொல்கிறோம் நாங்களிதோ செல்கிறோமே.

(அச-வ-ம்.) ஆஆ அம்மா நீவிசனப்பட வேண்டாம் பார்இந் தவழி நீளக்கப்போனால் அங்கோர் பெரிய ஆலாவிருக்ஷமிருக்கு அதற்குநேர் வடக்கேயுள்ள காட்டிற் றெர்ப்பை முளைத்த ஓர் புற் றுமேடிருக்கு அந்தமேட்டுக்குத் தென்புறத்தில் உன்மகன் இறந் துகிடக்கிறான் போய்ப்பார்த்துக்கொள்ளம்மா நாங்களிதோ செல் கிறோம் செல்கிறோம் செல்கிறோம்.

பொது விருத்தம்.

விப்பிரச் சிறுவரெல்லாம் விபரமாய்ச் சேதியாவுஞ்
செப்பியே யவர்களில்லஞ் சென்றபின் சேய்க்குநேர்ந்த
அற்பனை தன்னையந்தச் சந்திர மதியுமெண்ணிப்
பற்பல விதமதாகப் பதறுவாள் கதறுவாளே.

சந்திரமதி விருத்தம்.

அரவினுக் கிரையானயோ வப்பனேதேவதாசா
விரதமு மிருந்தாரோர் வேளையா யுபவாசித்துத்
தரைதனை மெழுகியுண்ட தவத்தினுக் கென்றந்த
வரமதா லுன்னைப்பெற்ற மகிமையு மிதுதானோடா.

## சந்திரமதிசொல் தரு.

[மல்லிகைமுல்லைமலராயிறைத்தகையாலே]
என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

அரியதவத்தைச்செய்தேயரனதுகிருபையால் மைந்தனே-உன்னைப்
பெருமையுடனோநாளும் பெற்றுமகிழ்ந்தேனடா மைந்தனே
ஒருவேளைதவிர்ந்தாக்கால் உடல்வளராதென்று மைந்தனே-தினம்
அருமையாய்டிக்கடி பழுதூட்டிவளர்த்தேனே மைந்தனே



நடந்துதிரிந்தாகி நவிறுமொழியைக்கேட்டு மைந்தனே-நான்
அடைந்தசந்தோஷத்தை யாரிடஞ்சொல்வேனடாமைந்தனே
மேன்படலமென்ற விருப்பமெல்லாந்தவிர்ந்துமைந்தனே-இப்பப்
பாம்புக்கிரைகொடுத்துப் பாதகியானேனே மைந்தனே
பிள்ளைபெற்றவரெல்லாம் பெருபலனடைவாரே மைந்தனே-உன்னைக்
கொள்ளிகொடுப்பதற்கோ குணமாய்வளர்த்தேனடா மைந்தனே
நீயிருக்கிறாயென்று திருபனைமறந்தேனே மைந்தனே-எந்தன்
வாயினில்மண்போட்டு வானுலகடைந்தாயே மைந்தனே
பெற்றவர்ப்பிறந்தோர் புற்றியெரிபுதடா மைந்தனே-யார்க்குங்
குற்றங்குறைகள்மற்ற கொடுமையென்செய்தோமடா மைந்தனே
சுதறியழுதாற்கால கண்டையர்வைவாரே மைந்தனே-மனம்
பதறித்தேடியென்று பார்க்கப்போகிறேனடா மைந்தனே
வேதியர்வீட்டினில் வேலையெல்லாஞ்செய்து மைந்தனே-உந்தன்
சேதியைச்சொல்லிநான் சீக்கிரம்வருகிறேன் மைந்தனே

(சந்-வ-ம்.) ஆஆ தனையா எனதருந்தவத்திற்கிரங்கி யீசனரு ளியசித்தால் உன்னையன்று மகிழ்ச்சியடைந்திருந்தேனே ஆஆ மே னிவாடாமல் அடிக்கடி பழுதூட்டி நாளொருமேனியும் பொழு தொருவண்ணமாய் வளர்த்து வந்தேனே ஆஆ உனதன்ன நடை யுங் [illegible] வாழியுங்கண்டு சந்தோஷமடைந்திருந்தேனே ஆஆ உன்றன் [illegible] சுதந்தை மடையவாயென்று மன்னவனையுமறந்திரு [illegible] ல் மண்ணைப்போட்டு வானுலகடைந்து விட்டனையே [illegible] ர்பெற்றவர்கள் நற்பலனையடைவார்களென்று சொல் வ[illegible] னா ஆஆ அதற்கு விரோதமாயுன்னைப் பாம்புக்கிரைகொடுத் து பாதகியாகி விட்டேனே ஆஆ உன்னை நமனுக்கொப்படைக் கவா அருமையாய்வளர்த்தேன் ஆஆ உன்னைப்பெற்றவயறு பற்றி யெரிகின்றதே ஆஆ சத்தமிட்டழுதாற் காலகண்டையர் திட்டு வாரே ஆஆ செல்வமே உன்னை யெப்போது காணப்போகின்றேன் இல்லது அந்தவீட்டில் நானசெய்யவேண்டிய வேலைகளை யிப் பொழுதே செய்துவிட்டு [illegible] விபத்தைத்தெரிவித்து விடைபெற்று உன்னிடம் வருகின்றேன [illegible] னி ஆஆ இதுவும் [illegible] ப்ரமலபிதந் தான்போலிருக்கின்றதே [illegible] டுமைக்கென்செய்வேன்.

பொது விருத்தம்.

காலகண் டையர்வீட்டிற் கடினமாய்த் தினமியற்றும்
வேலைக ளுள்ளதெல்லாம் மெல்லியுஞ் செய்துக்கொண்டு
பாலகன் காட்டிற்சென்று பாம்பினு லிறந்ததெண்ணி
ஓலமிட் டலறிமென்மே லுருகுவா ளுருகுவாளே.

சந்திரமதி விருத்தம்.

தீவினை யிதுவோப்ரம்ம தேவனே யுலகிலென்போற்
பாவியு முண்டோயானும் பாதக மென்செய்தேனோ
காவினிற் காளசற்பங் கடித்துயிர் மடிந்தான்பாலன்
ஆவியும் பதறுதேயன் யாயமுஞ் செய்திட்டாயே.

## சந்திர்மதிசொல் தரு.

[அடிபாவி துணிந்துவெட்டகைவருமோ-இந்தப்
பாதகத்தைபார்க்கவோநான்காத்திருந்தேன்]
என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயையோஎன்னசெய்வேன் ப்ரம.
அனியாயஞ்செய்தனையே ப்ரம்ம
புத்ரனில்லாவெனக்கு ப்ரம்மதே
புதல்வன்றனையளித்தாய் ப்ரம்மதேவ.
அளித்தபாலகன்றன்னை ப்ரம்மதேவா-
அபகரித்துக்கொண்டாயே ப்ரம்மதேவா
தேசமிழக்கவைத்தாய் ப்ரம்மதேவா-உள்ள
செல்வமுமிழக்கச்செய்தா ப்ரம்மதேவா
அரசனையும்பிரித்தாய் ப்ரம்மதேவா-நாங்கள்
அடிமைப்படவிடுத்தாய் ப்ரம்மதேவா
செல்வனும்நானுமாக ப்ரம்மதேவா-வேலை
செய்துகொண்டிருக்கவே ப்ரம்மதேவா
பாலகன்றன்னையையோ ப்ரம்மதேவா-கானிற்
பாம்புக்கிரைகொடுத்த ப்ரம்மதேவா





பாவிநான்பிள்ளைப்பெற்று — ப்ரம்மதேவா-மிகப்
　　பட்டதுயர்போதுமையா — ப்ரம்மதேவா
தர்மந்தவறினேமோ — ப்ரம்மதேவா-யோக
　　தபசிகளைவைதோமோ — ப்ரம்மதேவா
தெய்வகுறைசெய்தோமோ — ப்ரம்மதேவா-நாங்கள்
　　செப்புமொழிதப்பினேமோ — ப்ரம்மதேவா
கொடுப்பதைக்கெடுத்தோமோ — ப்ரம்மதேவா-வேறு
　　குறைகளென்னசெய்தோமோ — ப்ரம்மதேவா
பொய்சொல்விவாழ்ந்ததுண்டோ — ப்ரம்மதேவா-வந்த
　　புலவரையிகழ்ந்தோமோ — ப்ரம்மதேவா
பாவிநான்செய்தவமோ — ப்ரம்மதேவா-இப்பப்
　　பாலகனையிழந்தேனே — ப்ரம்மதேவா
புதல்வன்றனையிழந்து — ப்ரம்மதேவா-இனிப்
　　பூமியிலிருக்கப்போயோ — ப்ரம்மதேவா

(சந்-வ-ம்.) ஆஆ சிருஷ்டிகர்த்தாவே இப்படி யன்யாயஞ்செய்துவிட்டனையே ஆஆ புத்திரனில்லாத எனக்குப் பிள்ளைக்கலிதீர்த்து மறுபடியும் பிடுங்கிக்கொண்டனையே ஆஆ எங்கள் நாடுநகர பவுஷுபாக்கியாதிகளையிழக்கவைத்துப் புருஷனையும்பிரித்து என்னையும் வேதியர்க்கடிமைப்படுத்திக் குற்றேவல்செய்யும்படி வைத்ததுபோதாதென்று பாலகனையும் பாம்புக்கிரையாக்கிவைத்தனையே ஆஆ இப்படியேற்படுவதற்கு நாங்கள் தர்மஞ்செய்யவில்லையா, தவசிரேஷ்டர்களைவைதோமா, தெய்வகுறைசெய்தோமா, சொன்னவாக்குத்தப்பினோமா, பொய்சொல்விவாழ்ந்தோமா, கவிவாணரையிகழ்ந்தோமா, ஒன்றும் புலப்படவில்லையே ஆஆ எந்தக்காரணத்திலாவது பாலகனையிழந்துவிட்டேனே ஆஆ பாவியாகியநான் பிள்ளைப்பெற்றுப் பட்டகஷ்டம் இவ்வளவுபோதாதா ஆஆ புதல்வனைப்பறிகொடுத்துப் பூமியிலிருக்கத்தகுமா ஆஆ ப்ரம்மதேவா இனியென்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

ஆறுமோ மனதுபாவி யன்னைநான் கொண்டதுச்சம்
மாறுமோ வொருநாளேனு மைந்தனே புற்றிற்பாம்பு
சீறுமப் பொழுதேயுன் றிரும்பிவர் திடமேகாதா
நாறுபூங் கரத்திற்றுன்னே நலமுடன் றாங்கினேயோ.

## சந்திரமதிசொல் தரு.

[பக்ஷிகளாபறவைகளா உங்களைநான்கும்பிடுவேன்
பாலன்லோகிதன்வரக்காணீர்களா]

என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சுதனேயுனக்கிவ்விதி விதிவருமென்றுநானுஞ்
சொற்பனக்கானெனடா என்மகனே
முன்னமெனக்குத்தெரிந்தால் உன்னைநானனுப்புவேனோ
மோசமாய்ப்போச்சுதடா என்மகனே
வருஞ்செதிகேட்பதற்கு வழிபார்த்திருந்ததற்கு
மரித்தசெதிகேட்டேனே என்மகனே
பாம்புக்குநானுமுன்னை பறிகொடுத்துத்தனியாய்ப்
பாதவிக்கலானேனே என்மகனே

(சந்-வ-ம்.) ஆஆ தனையா உனக்கிவ்விதவிதி நேரிடுமென்று சொற்பனங்கூடக்காணவில்லையே ஆஆ அப்படித் தெரிந்திருக்கும் பக்ஷத்தில் உன்னை வனத்துக்கனுப்பி யிருக்கமாட்டேனே ஆஆ மோசம்போய்விட்டேனே ஆஆ நீ திரும்பிவருஞ்செதிகேட்க வழி பார்த்துக்கொண்டிருந்ததற்கு இறந்தசெதி கேட்கலானேனே ஆஆ உன்னைப்பாம்புக்கிரைகொடுத்துவிட்டுத் தனிமையாய்நின்று தவிக்கின்றேனே ஆஆ இந்தத்துன்பத்திற்கென்செய்வேன் கண்மணி.

காலகண்டையர் விருத்தம்.

ராத்திரி காலந்தன்னில் ராகதா ளங்களோடு
சேர்த்தியாய்ப் பாடுகின்றாய் நேக்கது சுகமென்றேவி
பார்த்திடிற் கடிந்துசண்டை பண்ணுவா ளடிநீசந்தி
ஆத்தினில் சோக்குவேலை யாதுமே யில்லையோடி.

(       ர்-வ-ம்.) அடி சந்தி நீயிந்த ராத்திரிகாலத்தில் ராகதா ளத்துட       ாடுகிறது நேக்குச்சுகமாயிருக்கு ஆனாற் காலகண்டி கேட்டாற் சண்டைக்கு வருவளே நோக்கு ஆத்திலே வேலையில்லையோடி சந்தி இல்லாவிட்டால் கன்னுப்பாடிக்கிண்டிரு.



சந்திரமதி விருத்தம்.

வேலையில் லாதநாளும் வேளையு முண்டோசாமி
காலையில் வீட்டுவேலை கடும்பகற் சாணவேலை
மாலையிற் றுவையல்வேலை வளர்பிசி காவல்வேலை
சோலையில் நடந்திருக்குந் துக்கமோர் வேலையாச்சே.

### சந்திரமதிசொல் தரு.

[வில்வேசாவுந்தனோநான் வேண்டினபலனிதுவோ]
என்ற நீதிநெறி அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

என்வயற்றெரிச்சல்தன்னை யென்னசொல்வேன்வேதியரே
முன்வினையோநானறியேன் மோசம்வந்துநேர்ந்ததையா
மொழிகிறேன் மொழிகிறேன் மொழிகிறேன் மொழிகிறேன் ()

பாலகனுங்காட்டினிலே பாம்புதீண்டிமாண்டானென்று
சிலருடன்கூட்டிச்சென்ற சிறுவர்வந்துசொன்னாரையா
தேவனே தேவனே தேவனே தேவனே (என்)

சேதிகேட்டநேரமதாய்ச் சித்தமிகவாடுதையா
ஏதுமறியாச்சிறியோன் இக்கெதிக்காளாகினனே
என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேன் ()

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி என்வயற்றெரிச்சலை யென்சொல்வேன் ஆஆ காட்டுக்குத் தெர்ப்பை கொய்யச்சென்ற எனது மைந்தன் சர்ப்பந்தாற்கடியுண்டு மாண்டானென்று கூடப்போயிருந்த அயலாத்துப்பிள்ளைகள் வந்து சொன்னார்களே ஆஆ அந்தச்சேதி கேட்ட நேரமாக என்மனம் பாதகித்துக் கொண்டிருக்கின்றதே ஆஆ அறியாச்சிறுபிள்ளை யிக்கெதிக்காளாகி விட்டானே ஆ இனியென்செய்வேன் ப்பு.

## காலகண்டையருக்கும் சந்திரமதிக்குஞ் சம்பாஷணை.

(கால-ர்-வ-ம்.) அடி சந்தி நான் விருத்தாப்பியனுகச்சே நீ சொல்வது சேக்குநன்னுய்க் காதிற்கேட்கலே கொஞ்சம் பலமாய்ச் சொல்லடி பார்ப்போம்.

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனதுமைந்தன் காட்டிற் சர்ப்பந் தீண்டி மடிந்தானென்று அயலாத்துப்பிள்ளைகள் சொன்னார்கள் அதனாற்போய்ப் பார்த்துவரவிடைதாருங்கள் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) அடி சந்தி உன்மகன் தர்ப்பைபறித்துக் கொண்டு வராமற் காட்டிற் சப்பரக்கட்டி விளையாடிக்கிண்டிருக் கான் நன்னுயிருக்கு பிள்ளைப்பு அதுதான் இன்னும் வரலேப்போ யிருக்கு.

(சந்-வ-ம்.) இல்லை ஸ்வாமி நாகசர்ப்பங்கடித்து மடிந்துவிட் டானும் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) நாவற்பழத்தைக்கடித்தா விழுங்கி விட்டான் சரிசரி ருஜியாயிருந்ததுபோலிருக்கு கொட்டையுஞ்சேர்த்து விழுங்கிவிட்டான் அதற்குப் பேதிக்குக் கொடுத்தாற்போச்சு.

(சந்-வ-ம்.) இல்லை ஸ்வாமி அரவங்கடித்து மாண்டு விட்டானும் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) அரசம்பழமா தின்று விட்டான் பசிக்கரக் எடுத்துத்தின்னுட்டான்போலிருக்கு அதற்காக கதறனித்துப்போ கிறது.

(சந்-வ-ம்.) இல்லை ஸ்வாமி பன்னகங்கடித்து மாண்டானும் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) பல்லில் நகத்தையா கடித்தான் சிறுபயல் தானே விளையாட்டுத்தனமாய்க் கடித்திருப்பன் தர்ப்பையைக் கழுவிவிட்டால் எச்சல்போகிறது.

(சந்-வ-ம்.) இல்லை ஸ்வாமி உரகங்கடித்துச் செத்துவிட்டா னும் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) உரக்கியா படுத்திருக்கான் பாயம் கஞ்சியில் லா மயக்கத்திலே படுத்திருப்பன் இன்னுஞ்சற்றுநேரத்தில் வந்து



விடுகிறான் அதற்குச் சாதங்கொண்டு போகவா பார்க்கிறை நன்னுயிருக்கடி சந்தி நன்னுயிருக்கு.

(சந்-வ-ம்.) இல்லை ஸ்வாமி பாம்புதீண்டியிறந்தானும் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) மாம்பூவையா தின்னுவிட்டான் ஏதோ மாம் பழம்போலே ருஜியாயிருக்குமென்று தின்னுட்டான்போலிருக்கு கொஞ்சஞ் ஜலஞ்சாப்பிட்டாற்போகுது அதற்கென்னசெய்கிறது.

(சந்-வ-ம்.) இல்லை ஸ்வாமி காளசர்ப்பங்கொத்தி யிறந்தா னும் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) அவன் காளைமாட்டை பிடிப்பானேன் அது கொம்பிலிடிப்பானேன் இதென்னடி போக்கிரித்தனம் சரிசரி நம் மாத்துமாட்டை மேய்த்துக்கிண்டிருந்த வழக்கத்திலேற் கிட்டப் போயிருப்பன் அதுமுட்டியிருக்கும் காயமில்லையே.

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி பாலகன் காட்டிற் றெர்ப்பைகொய் யும்போது அதற்குள்ளிருந்த விஷப்பாம்பு கையிற்கடித்து மடிந்து விட்டானும் பார்த்துவர விடைதாவேண்டும் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) உன்மகன் பாம்புகடித்தா மாண்டுவிட்டான் நேர்த்திநேர்த்தி நன்னுயிருக்கு நன்னுயிருக்கு.

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி என்வயிறு தீப்பிடித்தெரிகின்றதே இனியென்செய்வேன் ப்ரபு.

காலகண்டையர் விருத்தம்.

போச்சுது பொருளுமன்றிப் போனது தெரிந்துகொண்டாற்
கார்சுழச் சென்றுகாலகண்டியும் வருகுவாளே
மூச்சுநான் விட்டால்சோம மூனையும் பிடுங்கிவைப்பள்
பேச்சுனக் கென்னபோடி பிதற்றுறாய் பிதற்றுறாயே.

(கால-ர்-வ-ம்.) அடி சந்தி பொன்னைக்கொட்டி வாங்கின சேக்கன்னேவயறெரியும்நோக்கே தூக்குத் தூக்கந்தருத்திக்கிண்டுவரு கிறது பார் என்பொருள்போனதுமல்லாதே காலகண்டி யிந்தச் சேதிகேட்டால் என்மண்டையிலுள்ள மூணுநரைமயிரையும் பிடுங் கிடுவாளே நானென்னடிசெய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

எரிகிற நெருப்பிற்பின்று மெண்ணெயை வார்த்தாற்போலே
தெரிகிற ஞதிபர்நீருஞ் செப்பிய வசனத்தாலே
அரியதோர் பாலன்றன்னை யரவினுக் கிரைகொடுத்து
விரிதுயர் கொண்டவென்முன் விதண்டையும் பேசலாமோ.

சந்திரமதிசொல் தரு.

[ஐயோவொரு பெண்பிறந்தகதையை
யாருடன்சொல்வேனம்மா திரிசீரடியே]
என்ற இராமநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயையோஇந்தமொழி தெய்வத்துக்கடுக்குமோ
அபவாதம்பேசவேண்டாம் மறையவரே
பத்துமாதஞ்சுமந்து பெற்றவென்வயறது
பற்றியெரிந்திடாதோ மறையவரே
நானேயனியாயமாய்த் தானேகாட்டுக்கனுப்பி
நாகத்திற்கிரைதந்தேன் மறையவரே
ஆவிபதறுதையா அங்கமுஞ்சோருதையா
ஆபத்துக்கென்னசெய்வேன் மறையவரே
அழத்துயிர்மடிந்தவென் சுதன்மேல்வீழ்ந்தழாவிட்டால்
துக்கமுந்தீராதையா மறையவரே
அதனாலேயினி அடியாள்போய்வரவிடை
அளித்தாதரிக்கவேணுமையா மறையவரே

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தாங்களிப்படி யபவாதம்பேசுவது தெய்வத்திற்கடுக்காதே ஆஆ பத்துமாதஞ்சுமந்துபெற்ற வயறு பற்றியெரியாதா ப்ரபு ஆஆ நானே யந்யாயமாகப் பாலகனைக் காட்டுக்கனுப்பிப் பாம்புக்கிரைகொடுத்துவிட்டேனே ஆஆ நினைக்க நினைக்க என்னுயிர்பதறி அங்கமெல்லாஞ் சோருகின்றதே ஆஆ இப்பொழுது மரணமடைந்த என்னுடைய மைந்தனைக்கண்டு மேல்வீழ்ந்தழாவிட்டால் எனதுதுக்கம் நிவர்த்தியாகாதே ஆஆ ஸ்வாமி மைந்தனையெடுத்துத் தகனஞ்செய்துவர அடியாளுக்கு விடைகொடுத்து ரக்ஷிக்கவேண்டும் ப்ரபு.



காலகண்டையர் விருத்தம்.

எத்தாயப் பேசுகிற சித்தைப்பார்த்தால்
எனக்குக்கோ ரெத்தனமாய்க் காணுதேடி
பித்தாநா றுபொன்னைக் கணக்கில்லாமற்
பாழாகக் கொட்டிவெறுங் கையனானேன்
சொத்தாத ரவையிழந்த தாலேநேக்குத்
தூக்கமுண்டோ பசியுண்டோ வொன்றுமில்லை
அத்தோடு பயலைபுநா னனுப்பிமோசம்
ஆச்சுதினி யுனையனுப்பும் பேச்சுமுண்டோ.

(காலக-வ-ம்.) அடி சந்தி நீயெத்தாய்ப்பேசுகிற சித்தை புரிம் பண்ணுகிர பாசாங்கையும்பார்க்கச்சே நீயோடிப்போக வழி தேடுவதாய்க் காணப்படுகிறதே நன்னாயிருக்கு விருதாவில் என் கையிலிருந்த பொன்னைக் கொட்டிக்கொடுத்து வெறுங்கையனானேனே அதுதான் கண்டபலன்போலிருக்கே ஆஆ அதையெல்லாம் நினைத்தால் நேக்கு நித்திரைவாரதா பசியெடுக்கிறதா ஒன்னுமில்லை அத்தோடு பயலையுமனுப்பி மோசம்போயிட்டேன் அப்படியிருக்க உன்னையுமனுப்பி மோசம்போவேனென்னு பார்க்கிறையோ போடிபோடி சித்துமுண்டேபோ.

சந்திரமதி விருத்தம்.

சேயனு மிறந்தானென்ற சேதியைக் கேட்டபோதே
தாயவன் றனையெடுத்துத் தகனமுஞ் செய்வதற்கு
ஞாயமாய் விடையுங்கேட்டால் நல்குவ திலையோசாமி
மாயமாய் வார்த்தைகூறி வாதனை செய்கிறீரே.

சந்திரமதிசொல் தரு.

[சந்த்ரசூடனு என்னைச்சாருமையல்தீரவாடா]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-இந்துஸ்தானிகமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

அந்தணரேநீர் சொல்வ தன்யாயமன்யாயஞ்சாமி

அநுபல்லவி.

மைந்தனைநானிழந்து மனம்பொறுத்திருப்பேனோ (அந்)

சரணம்.

அடிமைகொண்டாலுமென்ன யான்செய்திடமாட்டேன்சூது
விடியுமுன்னே வருவேன் விடைதருவீரிப்போது (அந்)

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தாங்கள் சொல்வது அனியாயமாயிருக்கின்றதே ஆஆ யாவரேனும் பிள்ளையிறந்தசேதிகேட்டு மனம்பதறியழாமலும் பார்த்தவர்மனங்கொள்ளாமலுமிருப்பார்களா ஆஆ யானடிமையாயிருந்தபோதிலுந் தங்களைவஞ்சித்து ஓடிப்போய்விடுவேனோ ஒருபோதும் போகமாட்டேன் ஆஆ ஸ்வாமி யான் மகனைத் தேடியெடுத்துக் கட்டியழுது தகனஞ்செய்துவிடிவதற்குள் வந்துவிடுகின்றேன் விடைதாருங்கள் ப்ரபு.

காலகண்டையர் விருத்தம்.

செத்தவன்றுக் தக்கிழக்கே யிருந்தாலென்ன
திரும்பியது மேற்காகக் கிடந்தாலென்ன
பத்தியுட னழுதாக்கா லெழப்போரானோ
பக்குவமாய்த் தகனித்தால் மோக்ஷமுண்டோ
இத்தனையாத் திரோக்கே னனுப்பிவைத்தால்
இங்குநீ வரும்வார்த்தை யென்னவுண்மை
நித்திரையும் வருகிறது விடிந்தபின்னால்
நீசொலும்வார்த் தையையெடுத்துப் பேசலாமே.

(கால-ர்-வ-ம்.) அடி சந்தி செத்தவன்றுத்தக் கிழக்கிலிருந்தாலென்னமேற்கிலிருந்தாலென்ன நீகட்டியழுதால் எழுந்துவந்திடுவனோ அல்லது உன்கையாலேதகனஞ்செய்தால் மோக்ஷங்கிடைக்கப்போகிறதோ எதுக்கடி வெர்ன்னே ஆத்திரப்படுகிறைபார் உன்னையனுப்பினால் நீதிரும்பிவருவது என்ன நிச்சயம் உன்வார்த்தை நேக்கென்ன நம்பிக்கை நல்லது இப்போது நேக்கு நித்திரைவருகிறது இனிமேல் வெர்ன்னே அலட்டினால் நேக்குக்கோபம்வந்திடும் எல்லாம் போதுவிடிந்தபின் யோஜிக்கலாம்போடி.

சந்திரமதி விருத்தம்.

என்னதான் துன்பமுற்ற விடைஞ்சல்கள் நேரிட்டாலுஞ்
சொன்னசொற் றவறமாட்டேன் றூயரேவிடைகொடுத்தாற்



சின்னவன் றன்னைத்தேடிச் சீக்கிர மெடுத்துச்சுட்டு
வின்னமில் லாமல்நானும் விடியுமுன் வருகுவேனே.

சந்திரமதிசொல் தரு

[பெண்ணேபுனக்கென்னகோபமடி கோபமடி]

என்ற வீரசூரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

சத்தியமாய்வருவேன் பாரும் சுவாமிபாரும்-இப்பத்
தடையிலாமலெனக்கு விடையதுதாரும் (சத்தி)

செத்தவெகுநேரமு மாச்சே நேரமாச்சே-எந்தன்
சிந்தைகலங்கியுள்ள திடமெல்லாம்போச்சே (சத்தி)

சந்தேகமினிமேல்வை யாதீர் வையாதீர்-இத்
சமயமையாவினிமேற் றாக்கஞ்செய்யாதீர் (சத்தி)

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி போனகாரியத்தை முடித்துக்கொண்டு விடியுமுன்னமே சத்தியமாக வந்துவிடுகின்றேன் பாலகனிறந்து வெகுநேரமாகிவிட்டது எனது மனமயங்கித்திடங்கலங்கிநிற்கின்றது இனிமேலாவது தடைசொல்லாமல் விடைதாருங்கள் ப்ரபு.

காலகண்டையர் விருத்தம்.

சந்திநீ சொல்லும்வார்த்தை சற்றும்நம் பிக்கையில்லை
எந்தன்முன் னலேசத்ய மியம்புனாலேயிப்ப
உந்தனை விடுவேனந்தி இன்னமே லகனைத்திர்த்து
விந்தைசேர் கானஞ்சென்று விடியுமுன் வருகுவாயே.

(கால-ர்-வ-ம்.) அடி சந்தி உன்வார்த்தை நேக்கு நம்பிக்கையில்லை ஆகிலும் நீசத்தியஞ்சொல்வதால் உன்னையனுப்பிவைக்கிறேன் நீ ஆத்திலுள்ள வேலைகளெல்லாஞ்செய்துட்டுக் காட்டுக்குப் போய்ப் போதுவிடியுமுன்னமே வந்துசேரடி சந்தி.

(சந்-வ-ம்.) வீட்டுவேலைகளெல்லாஞ் செய்து முடித்துவிட்டேன் ப்ரபு.

(காலை-ர்-வ-ம்.) அடி சந்தி வீதிமுத்தமெல்லாம் பெருக்கியெடுத்தயோ.

## எதிர்மொழித்தரு.

[அணிப்பொன்னம்பலத்தேகண்டகாட்சிகள்
அற்புதக்காட்சியடி அம்மா அற்புதக்காட்சியடி]
என்ற காட்சிக்கண்ணியின் வர்னமெட்டு.

இராகம்-சாமா-தாளம்-சாபு.

சந்திரமதிசொல்கண்ணி

புத்திரசோபத்தைச் சித்தத்தில்வையாமல்
முத்தம்பெருக்கினேனே ஐயோசாமி
முத்தம்பெருக்கினேனே

(காலை-ர்-வ-ம்.) ஆமடி. சந்தி விச்சித்திரமாய்ப் பேசுகிறையே கோலமிட்டையோ.

சந்திரமதிசொல் கண்ணி.

பாலகனையிழந்த மூலமாய்நானிங்கே
கோலமுமிட்டேனையா ஐயோசாமி
கோலமுமிட்டேனையா

(காலை-ர்-வ-ம்.) நல்லதடி சந்தி நீ முத்தம்பெருக்கினதிலேயும் கோலமிட்டதியேயும் பார்த்தால் திருவிளக்கேற்றிவைக்கமறந்துட்டாய்போலிருக்கே.

சந்திரமதிசொல் கண்ணி.

அருமையுடனேபெற்ற சிறுவனையுமறந்து
திருவிளக்கேற்றினனே ஐயோசாமி
திருவிளக்கேற்றினனே

(காலை-ர்-வ-ம்.) அடி சந்தி இதுவெல்லா மிருக்கட்டும் நேக்கும் நம்மிட ஆம்பிடையாளுக்கும் பஞ்சணைமெத்தை விரித்துச் சப்பரகூடமஞ்சம் அலங்கரித்தயோ.



சந்திரமதிசொல் கண்ணி.

கொஞ்சவயதுடைய என்சுதனையிழந்து
பஞ்சனையலங்கரித்தேன் ஐயோசாமி
பஞ்சணையலங்கரித்தேன்

---

(கால-ர்-வ-ம்.) அடி சந்தி நோக்கு வேலையிட வேணுமானால் இன்னமிருக்கு நேக்குத் தூக்கம்வாரது நோக்குத் தூக்கம்வாரது என்னசெய்கிறது.

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தாங்கள் வேலைசொல்லும்படி பாக்கிவைக்கவில்லை எல்லாவேலையுஞ்செய்து முடித்து விட்டேன் இப்போது தயவுசெய்து விடைதாருங்கள் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) அப்படியானால் நீ யிப்போதேபோய்க் காரியத்தை முடித்துக்கிண்டு போதுவிடியுமுன்னே வந்துசேரடி சந்தி.

(சந்-வ-ம்.) ஆஆ ஸ்வாமி தேவரீர் இன்னேரத்திற்குப் பிற்பாடு மனமிளகி உத்திரவுகொடுத்ீர்களே அதுவே போதுமானது இதோ சென்றுவருகின்றேன் ப்ரபு.

(கால-ர்-வ-ம்.) அப்படியே போய்வா சந்தி.

பொதுவிருத்தம்.

வேதிய ரிடத்தில்நல்ல விடையது பெற்றுக்கொண்ட
மாதிருள் நேரந்தன்னில் மறையவர் வீட்டுப்பாலர்
ஓதிய வழியைநாடி யோடியே வனத்துட்சென்று
பாதையுந் தெரிந்திடாமற் பரதவித் தலறுவாளே.

---

சந்திரமதி விருத்தம்.

விழிதனிற் பார்த்ததெல்லாம் விரியிருளன்றிவேறு
வழியிது காடுமேடு மலையிது வனமிதென்றுங்
குழியிது நதியிதென்ற குறிப்பது தோணவில்லை
எழிலுள பாலன்செத்த விடமெதோ தெரிந்திலேனே.

---

## சந்திரமதிசொல் தரு.

[இன்னுள்ளவலகாதே வாணிகுண மெச்சுளினே]

என்ற ஜாவளியின்ஜாடை வர்ணமெட்டு.

இராகம்-பரசு-தாளம்-ஆதி.

பல்லவி.

எங்குகண்டுதேடுவேன்-ஐயோ
என்மகனிறந்தவிடம் (எங்கு)

அநுபல்லவி.

கங்குலும்பெருகுதே கால்நடைகுறுகுதே
கன்னிகைநானொருத்தி யென்னசெய்வேன்
கதிதானோ-தலை விதிதானோ-ஐயோ
கானகத்தில் நாலுமிப்பேர (தெங்)

பாலகனைவிடுத்துப் பாம்புக்கிரைகொடுத்துப்
பாதவிக்கவந்ததும் விரதமிதோ
பாவிநானே-உமா தேவிகோனே-ஐயோ
பாரவிருள் நேரமதில் (எங்)

வழியதுகாணேனே வகையொன்றுந்தோணேனே
மதகரிபுலிசிங்கம் விதவிதமாய்
வருகுதையோ-மனம் உருகுதையோ-ஐயோ
மாவிருளிற் காவினுக்குள் (எங்)

ஆலமரத்தையந்தப் பாலகர்களுமுந்த
அடையாளமாயுரைத்தார் தட்டிநிலே
அதுங்காணேன்-வழி விளங்கேன்-ஐயோ
அவ்விருளில் மெல்லியநான் (எங்)

கொள்ளிவாய்ப்பேய்களுங் கூளிகள்நாய்களுங்
கூடியேகத்துதே காடெடவனுங்
குற்றமிதுவோ-சர்ப்பப் புற்றுமேடுவோ-ஐயோ
கோரமயினிற் பாதையறி (தெங்)

---

(சந்-வ-ம்.) ஆஆ ஜெகதீசா பாலகனைப் பாம்புக்கிரைகொடுத்த பாவியாகிய யான்வேதியரிடம் விடைபெற்றுக்கொண்டு அநேக தூரங்கடந்துவந்தேனே ஆஆ கால்நடைதளருகின்றதே ஆஆ மக



னிறந்தவிடந் தெரியவில்லையே ஆஆ இருள் மிகுதியினால் வழியொன்றுந்தெரியவில்லையே ஆஆ அசலாத்துப்பிள்ளைகள் அடையாளஞ் சொன்ன ஆலமரமாவது புற்றுமேடாவது புலப்படவில்லையே ஆஆ வழிதவறிவிட்டதோ யாதோ தெரியவில்லையே ஆஆ கரடி புலி சிங்கம் யானைமுதலியவை கர்ச்சனைசெய்துகொண்டு வருகின்றனவே ஆஆ கொள்ளிவாய்ப்பேய் காளி கூளி நாய் நரி முதலியவை பயங்கரப்படச் சப்தமிடுகின்றனவே ஆஆ இவ்விருள்சூழ்ந்த கானகத்தில் மைந்தனிறந்தவிடத்தை யெவ்விதமாய்த் தேடிக்கண்டு பிடிக்கப் போகின்றேன் ஆஆ ஈசா பாவியாகிய யான் கேட்டுவந்த வரமிது தானோ ஆஆ இனியென்செய்வேன்.

### சந்திரமதி விருத்தம்.

நன்மனை யிழந்தேனொடு நகரினை யிழந்தேன்மற்ற
பொன்முழு திழந்தேனுள்ள புகழினை யிழந்தேன்பின்னும்
மன்மதன் போன்றசின்ன மகனையு மிழந்தேனந்தோ
ஜென்மமு மென்னைப்போல ஜெகத்தினிற் கண்டிலேனே.

---

## சந்திரமதிசொல் தரு.

[அறியாமல்மதிமோசமானேனே இந்தமங்கையாலேநான்]

என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-சாபு.

பல்லவி.

என்போற்ஜென்மமெடுத்தோர் காணேனே-புவிதனிலே
என்போற்ஜென்மமெடுத்தோர் காணேனே.

அநுபல்லவி.

காணேனே-வகை தோணேனே-புவிதனிலே (என்)

சரணங்கள்.

இன்னமென்னகஷ்டங்கள் நேருமோ-ஐயையோ ஈசா
இன்னமென்னகஷ்டங்கள் நேருமோ
நேருமோ-மனம் ஆறுமோ-புவிதனிலே (என்)

வழியின்னதென்றுகாண வில்லையே-இவ்விருள்தனில்
வழியின்னதென்றுகாண வில்லையே
இல்லையே-மிகு தொல்லையே-புவிதனிலே (என்)

நடந்துகால்களயர்ந்து போச்சுதே-ஐயையோ நானும்
நடந்துகால்களயர்ந்து போச்சுதே
போச்சுதே-வாதை யாச்சுதே-புவிதனிலே (என்)

செடிகளுடைமயிரைப் பிய்க்குதே-ஐயையோவிங்கே
செடிகளுடைமயிரைப் பிய்க்குதே
பிய்க்குதே-முட்கள் தைக்குதே-புவிதனிலே (என்)

மரங்களுடலைத்துங் கிறுதே-ஐயையோவிங்கே
மரங்களுடலைத்துங் கிறுதே
கிறுதே-ரத்தம் பீறுதே-புவிதனிலே (என்)

கரிகள்புலிகள்சப்தங் காட்டுதே-ஐயையோவிங்கே
கரிகள்புலிகள்சப்தங் காட்டுதே
காட்டுதே-பயம் வாட்டுதே-புவிதனிலே (என்)

மகனிறந்தவிடத்தைக் கண்டிலேன்-நான்பெற்றெடுத்த
மகனிறந்தவிடத்தைக் கண்டிலேன்
கண்டிலேன்-மனங் கொண்டிலேன்-புவிதனிலே (என்)

மரமும்புற்றுமெங்கையோ ஈசனே-பிள்ளைகள்சொன்ன
மரமும்புற்றுமெங்கையோ ஈசனே
ஈசனே-உமை நேசனே-புவிதனிலே (என்)

(சங்-வ-ம்.) ஆஆ ஜெகதீசா என்போற் பாபஜென்மமெடுத்தவர்கள் பூவுலகில் யாவரிருக்கின்றார்கள் ஆஆ இன்னுமென்ன கஷ்டங்கள் நேருமோ தெரியவில்லையே ஆஆ காரிருள்சூழ்ந்த இக்கானகத்தில் வழியொன்றும் புலப்படவில்லையே ஆஆ நடந்து நடந்து பாதங்கள் நோகின்றதே ஆஆ செடிகள்பட்டுச் சேலைகள் கிழிக்கின்றது தலைமயிர் பிய்த்துபோகின்றதே ஆஆ மரங்கள்கீறி மேனியிற்காயமுண்டாகி ரத்தம்வடிகின்றதே ஆஆ மிருகஜாதிகள் சப்தத்தாற் பயங்கரமுண்டாகின்றதே ஆஆ மைந்தனிறந்தவிடந் தெரியவில்லையே ஆஆ வழியில் ஓர் ஆலமரமிருக்கின்றதென்றும் அதற்கு வடக்கிற் புற்றுமேடிருக்கின்றதென்றும் அதற்குத் தெற்கிலிறந்து கிடக்கின்றானென்றும் அசலாத்துப்பிள்ளைகள் சொன்னார்களே ஆஆ அந்த இடந்தென்படவில்லையே ஆஆ ஈசா இனியெங்குகண்டு தேடுவேன்.



சந்திரமதி விருத்தம்.

காட்டில்வாழ்மிருகங்காளென் கண்மணி மகனுக்கிசன்
ஓட்டினி லெழுதிவைத்த வுண்மைபோல் மறையோர்பாலர்
கூட்டிவந் தரவினாலே கொன்றன ரென்றசேதி
கேட்டிவண் வந்தேன்கண்டாற் கிளத்துவீர் கிளத்துவீரே.

சந்திரமதிசொல் தரு.

[சுந்தரஞ்சேர் சந்திரன்மேற் றேகைநாளு மோகமானேன்]
என்ற தாராச்சந்திரசபாவின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

கண்ணிகள்.

கானில்வாழ் யானைகளே
கண்மணியைக்காணீர்களோ
பங்கமில்லாச் சிங்கங்களே
பாலன்வரக்காணீர்களோ
வலுவில்மிகு புலியினங்காள்
மைந்தன்றன்னைக்காணீர்களோ
திடமிருந்த கரடிகளே
செல்வன்றன்னைக்காணீர்களோ
நரியினங்காள் அரியமகன்
நல்வனத்திற்செத்ததெங்கே
மான்மரைகாள் கான்முழையும்
மாண்டவிடஞ்சொல்வீர்களே

(சந்-வ-ம்.) ஆஆ கானகத்தில்வாழும் யானைசிங்கங்காள் ஆஆ புலிகரடிகாள் ஆஆ நரியினங்காள் ஆஆ மான்மரைகாள் எனது மைந்தனெவ்விடத்திலிறந்துகிடக்கின்றானோ தெரியவில்லையே ஆஆ நீங்களேதாவது கண்டிருந்தாற் சொல்லலாகாதா, ஆஆ மிருகஜாதிகள்கூடப் பேசவில்லையே இனியென்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

மறையவர் துணையுமில்லை மற்றுமோ ருதவியில்லை
இறையவன் கிருபையில்லை யேதொரு கதியுமில்லை

முறையிலா மிருகஜாதி முழுதுக்குந் தயவுமில்லை
பறவைகா ளெனக்குநீங்கள் பற்றுள துணைகாண்பீரே.

## சந்திரமதிசொல் தரு.

[வன்னகாலமினங்களுக்கு வந்தகோலம்நானறியேன் ஈஸ்வரனே]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

வன்னமுள்ள அன்னங்களே
மைந்தன்செத்த தெந்தவிடம்
வழுத்துவீரே

குயிலினங்காள் மயிலினங்காள்
குழந்தைசெத்து விழுந்தவிடங்
கூறுவீரே

தெள்ளுமொழிக் கிள்ளைகளே
சிறந்தமகன் இறந்தவிடஞ்
செப்புவீரே

சொக்குமெழிற் கொக்குகளே
எதனுமெங்கே அதன்விபரஞ்
சொல்லுவீரே

பெருமையுள்ள குருவிகளே
பெற்றபிள்ளை யுற்றவிடம்
பேசுவீரே

மாடப்புறக் காடைகளே
மதனைநிகர் சுதனிறந்த
வளமுரைப்பீர்

(சந்-வ-ம்.) ஆஆ அன்னங்காள் குயில்மயில்காள் ஆஆ கிளிகாள் கொக்குக்குருவிகாள் ஆஆ மாடப்புறக்காள் காடையினங்காள் எனது மைந்தனிறந்துகிடக்கு மிடத்தைக் கண்டிருந்தாற் சொல்லுங்களே ஆஆஇனத்தைக்காட்டாவிடினும்வனத்தையாவது காட்டுங்களே ஆஆ பக்ஷிஜாதிகளுக்குக்கூட மனமிளகவில்லையே ஆ தெற்குவடக்குத்தெரியாத இவ்விருளில் எவ்வழிசெல்வேன்.



## சந்திரமதி விருத்தம்.

நின்றுநான் மயங்கலாச்சு நேரமோ ஜாமமாச்சு
ஒன்றுமே தெரியவில்லை யோடியிவ் வனத்திற்குள்ளே
சென்றுதேடுவதற்கேதுந் தீவெளிச் சமுமேயில்லை
என்றுரை மைந்தன்றன்னை யெப்படிக் காண்பேனேயோ.

## சந்திரமதிசொல் தரு.

[கைசஜாதுடாலாதியா மைனஜாவுசேசையா]
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-இந்துஸ்தானி-ஆதிதாளம்.

பல்லவி.

எப்படிக்கண்டுபிடிப்பேன் ஈமக்கடனைமுடிப்பேன்

அநுபல்லவி.

கப்புமிருளிலேதடன் கண்டுசேயிறந்தவிடம் (எப்ப)

சரணங்கள்.

விப்பிரரிடத்திலேநான் விடியுமுன்வாரேனென்று
செப்பியமொழியதுவுந் தப்பிடாமற்படியின்று (எப்ப)

காடதிலேமேடுமொன்று காணுதிதுதானோகாணேன்
நாடிவந்தபாலன்செத்து நல்லிடமெதுவோதோணேன் (எப்ப)

காலினலேமெள்ளமெள்ளக் கன்னிகைதடவிப்பார்ப்பேன்
பாலகன்கிடைப்பானாற் பாரமனத்துயர்தீர்ப்பேன் (எப்ப)

(சந்-வ-ம்.) ஆஆ இவ்விருளிற் பாதைதெரிந்து என்மகனிறந்தவிடத்தை யெவ்விதங்கண்டுபிடிப்பேன் ஆஆ விடிவதற்குள்ளாகத் திரும்பிவருவதாகக் காலகண்டையரிடஞ் சொல்லிவந்த சத்தியவாக்குத்தப்பாம லிருக்கவேண்டுமே அதற்கென்செய்வேன் ஆஆ இங்கோர் மேடானது புலப்படுகின்றதே ஆஆ இதுதான் புற்றுமேடாயிருக்குமோ யாதோ தெரியவில்லையே ஆஆ ஒருவேளையிருந்தாலுமிருக்கலாம் நல்லது மகனிருக்கின்றானென்று இம்மேட்டைச்சுற்றிக் காலினாற்றடவிப்பார்க்கின்றேன் இருந்தாலெடுத்து என்மனத்துயர் தீர்த்துக்கொள்கிறேன்.

பொது விருத்தம்.

அடவியிற் புற்றுமேட்டை யணுகியே சுற்றிச்சுற்றித்
தடவியே வருகும்போது சந்திர மதியின்காலில்
இடறியே தேவதாச னிருப்பிடம் விட்டுக்கொஞ்சங்
கடகடென் றருண்டுநீண்ட கட்டைபோற் றுரன்றிறனே.

சந்திரமதி விருத்தம்.

காலினற் றடவிவந்தேன் கட்டைபோற் றட்டுதொன்று
பாலகன் றனேயாதோ பார்க்கிறேன் கயிலெடுத்து
வாலமன் மதனைப்போன்ற வடிவுள தேவதாசன்
கோலமாய்க்காணுதிந்தக் கொடுமைக்கென் செய்வேனையோ.

## சந்திரமதிசொல் தரு.

[மோடியாலாா நாசாமிகுாாயை மோடியாலாா]
என்ற ஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-காபி-ஏகதாளம்.

கண்ணிகள்.

ஐயையோபாலா-எந்த ஞஞ்சக்குணசீலா(ஐயை)
இங்கேவந்தாயோ-முனி யேவியிறந்தாயோ(ஐயை)
பாம்புக்குன்மீது-கொடும் பகையோஎப்போதும்(ஐயை)
இதற்கோநான்பெற்றேன்-இனி யெந்தனுயிரற்றேன்(ஐயை)
பெற்றவயறு-ஐயோ பற்றியெரியுதே(ஐயை)
மண்ணுமெத்தையோ-ஈசன் பண்ணும்விதத்தையோ(ஐயை)
என்னசெய்வேன்டா-இனி யெவரைவேண்டா(ஐயை)

(சந்-வ-ம்.) ஐயையோ தனையா இவ்விடத்திற்குவந்தா இறந்து விட்டனை ஆஆ இது விஸ்வாமித்திரரின் வஞ்சகமோ அல்லது பாம்புக்குன்மீது பகையோ தெரியவில்லையே ஆஆ இப்படிச் சாக வா உன்னைப் பெற்றுவளர்த்தேன் ஆஆ உன்னைப் பெற்ற வயறு னது பற்றியெரிகின்றதே ஆஆ பஞ்சணையிற் சயனித்துறங்கும் உன க்கு இந்தப் புழுதிமண்ணுனது மெத்தையாகிவிட்டதா ஆஆ கண்



மணி இந்தவகை மோசத்திற்கு யாரைநொந்து கொள்வேன் ஆஆ உன்னையிழந்து யான் உயிர்வைத்திருக்கக்கூடுமோ ஆஆ வத்சா இதற்கென்னடா செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

அனத்தினி லேறும்வேத னமைத்ததோர் விதிவசம்போல்
வனத்தினில் வந்துபாம்பால் வல்லுயிர் மடித்துக்கொண்டு
மனத்துயர் தனில்விடுத்த விளஞ்சிறு பாலாமுன்னுன்
நினைத்தவை யெல்லாமிந்த நிமிஷமே போச்சுதேடா.

## சந்திரமதிசொல் தரு.

[மன்னன்வரக்காணேனே யென்னான்செய்குவேன்]
என்ற டாமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்வேன்டாமகனே
இந்துவைநிகர்முகனே (என்)

அநுபல்லவி.

சின்னவயதினில்நீயே பொன்னுலகுசேர்ந்திட்டாயே(என்)

சரணங்கள்.

காதுகுத்திவைத்துநான் கண்குளிரப்பார்க்கலையே
ஏதுகுற்றஞ்செய்தேனடா இச்சைதனைத்தீர்க்கலையே(என்)

பள்ளிதனில்நானுமுன்னைப் படிக்கவைத்தாக்காணேனே
கொள்ளிவைப்பேனென்றுமுன்னை குறியெண்ணுந்தோணேனே (என்)

தேசமதையாள்வாயென்று சிந்தைமகிழ்கொண்டேனடா
பேசமுடியாதசெத்த பிணமாகக்கண்டேனடா (என்)

தந்தையைப்போலுந்தனுக்குத் தங்கமுடிவைக்கலையே
இந்தவினைவருமென்று சிந்தையில்நினைக்கலையே (என்)

மாதவமுனியினாலே வகைமோசமாச்சுதடா
ஆதவன்குலமுன்னோடு அடியோடேபோச்சுதடா (என்)

(சந்-வ-ம்.) ஆஆ தனையா உனக்குக் காதுகுத்திக் கண்ணாற் பார்க்கவில்லையே ஆஆ உன்னைப் பள்ளியிற்படிக்கவைத்துக் காண

ப்பெறுத பாவியாகினேனே ஆ ஆ கோசலைநாட்டை யாசுபுரிவா யென்று மகிழ்ந்திருக்க இப்போது ப்ரேதமாய்க் காணலானேனே ஆ ஆ உனது தந்தையைப்போல் நீயும் ராஜமுடி தரிக்குமுன் இவ் விது சம்பவம் நேருமென்று கிஞ்சிற்றேனும் நினைக்கவில்லையே ஆ ஆ விஸ்வாமித்திரமாமுனிவர் வஞ்சகத்தால் இவ்வரியசிறுவயதிற்பொ ன்னுலகடைந்து சூரியகுலத்தின்வேரினையறுத்துவிட்டனையே ஆ ஆ எனக்கு நீகொள்ளிவைக்கவேண்டுவதிருக்க உனக்கு நான்வைக்க நேருமென்று முன்னால் யாதொரு குறியுந் தென்படவில்லையே ஆ ஆ எனதிச்சையெல்லாம் பிச்சைபுகச் செய்துவிட்டனையே இனி யென்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

நாட்டினை யாளும்போது நாளொரு மேனியாக
ஊட்டியே வளர்த்தெடுத்து வுத்தனைப் பாதுகாத்த
மேட்டிமை யெல்லாங்கெட்டு மிருகஜா திகளடர்ந்த
காட்டினிற் படுத்துறங்குங் காலமும் வாச்சுதோடா.

சந்திரமதிசொல் தரு.

[மல்லிகைமுல்லைமலராயிறைத்தகையாலே]

என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

சற்றுபசிபொறுக்கத் தாளமாட்டாயடா பாலகா-இன்று
முற்றும்பசியடக்க முடிந்தவிதமென்னடா பாலகா
மெல்லியபஞ்சணை மெத்தையிற்படுப்பாயே பாலகா-இப்பக்
கல்லுமுள்ளுமடர்ந்த காட்டிற்படுத்தாயடா பாலகா
விடிவிளக்கவிந்திட்டாற் றுடிதுடித்தழுவாயே பாலகா-இந்தக்
கொடியவிருளினைக்கைக் கொண்டவிதமென்னடாபாலகா
அருகினிலிருந்தா ராட்டிறைறுறங்கிடும் பாலகா-இன்று
ஒருவர் துணையுமின்றி யொண்டியாய்க்கிடந்தாயே பாலகா
தாய்பின்னைமுதலான சகலரையுமறந்து பாலகா-துஷ்ட
நாய்நரிபேய்களின்காட்டுமுண்டாச்சுதோடாபாலகா
என்னைக்காணவிட்டால் ஏங்கியழுவாயே பாலகா-உந்தன்
அன்னைவந்திருக்கிறே னென்பாயெழுந்திரடா பாலகா



அம்மா அம்மாவென்றே யடிக்கடியழைப்பாயே பாலகா-இப்பச்
சும்மாவொருமொழியுஞ் சொல்லாதிருக்கிறாயே பாலகா
நினைக்கநினைக்கவெந்தன் னெஞ்சம்புண்ணாகுதடா பாலகா-இந்த
மனக்கவலையையெப்ப மாற்றப்போகிறேனடா பாலகா

---

(சந்-வ-ம்.) ஆஆ கண்மணி அரைநிமிஷமும் பசிதாங்கமுடியாத நீ இன்றுமுழுதும் எப்படிச்சகித்திருந்தனையோ தெரியவில்லையே ஆஆ மிருதுவான பஞ்சணையிற்படுத்துறங்கும் நீ கல்லுமுள்ளுமடர்ந்த காட்டிற்படுக்கும்படிநேரிட்டதே ஆஆ விடிவிளக்கில்லாமலிருளிற்றூங்கப் பயப்படும் நீ இக்கொடியவிருளிற் படுத்துக்கொண்டிருந்தனையே ஆஆ அருகினிலிருந்து தாராட்டினால் நித்திரைகொள்ளும் நீ யாதொருதவியுமின்றித் தனிமையாய்க்கிடந்தனையே ஆஆ தாய்பிள்ளைகளைமறந்து நாய்நரிபேய்களின் சினேகத்தையடைந்தனையே ஆஆ என்னையரைக்கணங்காணாவிட்டால் ஏக்கமுற்று அம்மா அம்மாவென்று அழைத்துக்கதறும் நீ உனதன்னையாகிய என்னிடத்தில் யாதொரு மொழியும் பேசாதிருக்கின்றனையே ஆஆ உன்னை நினைக்கநினைக்க என் மனம் புண்ணாகின்றதே இந்தத்துயரம் எப்போது தீரப்போகின்றதடா கண்மணி.

சந்திரமதி விருத்தம்.

பொன்னரு மணியேயெந்தன் புத்ரரத் தினமேகொண்ட
மன்னனைப் பிரிந்தநாளாய் மகனிருக் கின்றாயென்று
உன்னிநான் றுயரம்யாவு மொழித்துயிர் தரித்தேனப்பா
என்னைநட் டாற்றிற்கைவிட் டேகினா யினியென்செய்வேன்.

---

## சந்திரமதிசொல் தரு.

[தேவாவிதென்னமாயஞ் செய்தாயேயனியாயம்]
என்ற சதாரம்நாடகத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயோமகனேயென்னைக் கைதவறவிட்டாயே

அநுபல்லவி.

பையரவங்கடித்துப் பதைத்துயிரைவிடுத்து (ஐயோ)

சரணங்கள்.

பத்துமாதஞ்சுமந்து பெற்றமனதுநொந்து
கத்திப்புழுகவிட்டுக் கடவுட்கடிமைப்பட்டு (ஐயோ)

மன்னன்றனைவிடுத்து மைந்தனுனையடுத்து
என்னசுகங்கண்டேண்டா பின்னுந்துயர்கொண்டேண்டா ()

பாலாஇவ்வனம்காடிப் படர்ந்தவிருளிற்றேடி-
காலாற்றட்டியேயுன்னைக் கையிலெடுத்தேனன்னை (ஐயோ)

(சந்-வ-ம்.) ஆ ஆ தனையா உன்னைச் சதமாய் நம்பியிருந்தே னே ஆஆ பத்துமாதஞ் சுமந்துபெற்ற பாவியாகிய நான் மனம்ப தைத்துக் கதறியழும்படி கைதவறவிடுத்துப் பாம்பாற்கடியுண்டு பரமபதிக்கடிமைப்பட்டுக் கைலாசஞ் சென்றுவிட்டனையே ஆஆ நாதனைவிடுத்து உன்னைச்சார்வையடுத்ததற்குப் பின்னுந்துக்கத்தை யனுபவிக்கும்படி நேரிட்டதேயன்றிச் சுகமொன்றுங் கண்டிலேனே யே ஆஆ இருள்சூழ்ந்த இவ்வனத்தில் நீயிருந்தவிடந் தெரியா மற் காலாற்றட்டியெடுத்தேனே ஆஆ என்வாயில் மண்ணைப்போ ட்டுவிட்டனையே இதற்கென்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

விப்பிரச் சிறுவரோடு வேதியர் வீட்டுக்காகத்
தெர்ப்பையு மிலையுங்கொய்யச் சேர்ந்துவந் திந்தக்காட்டிற்
சற்பனை விதியினாலே காளமா விஷத்தைக்கொண்ட
சர்ப்பமுங் கடித்தபோது தனையனே யழுதிட்டாயோ.

சந்திரமதிசொல் தரு.

[கண்மணியேயின்னந்தூக்கமா எழுந்திரடா]

என்ற தேசிகெதி அரிச்சந்திரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-ராபு.

பல்லவி.

எப்படியழுதாயோபாலா உடல்பதறி
எப்படியழுதாயோபாலா



அநுபல்லவி.

சர்ப்பமுங்கடிக்கும்போது
அப்பனைநினைந்தழுதாயோ
அப்பனைநினைந்தழுதாயோ
கற்பமுங்கலங்கியும்
என்கண்மணியே
உடல்பதறி (எப்)

அம்மாஅம்மாவென்றுநீ
பெம்மான்றனைநினைந்தாயோ
பெம்மான்றனைநினைந்தாயோ
அல்லிவிழுந்தாயோடா
என்கண்மணியே
உடல்பதறி (எப்)

சதிவிதுவென்றுசொல்லிச்
விதியைநினைந்தழுதாயோ
விதியைநினைந்தழுதாயோ
சஞ்சலமிகவுங்கொண்டு
என்கண்மணியே
உடல்பதறி (எப்)

பாம்புனைத்தொடும்பொழுது
தேம்பித்தேம்பியழுதாயோ
தேம்பித்தேம்பியழுதாயோ
பக்கத்திற்றுணையில்லாமல்
என்கண்மணியே
உடல்பதறி (எப்)

எந்தவிதமேங்கினையோ
வந்ததுன்பந்தாங்கினையோடா
வந்ததுன்பந்தாங்கினையோடா
இவ்விடத்திற்றூங்கினையோ
என்கண்மணியே
உடல்பதறி (எப்)

(சந்-வ-ம்.) ஆஆ தனையா உன்னைச் சர்ப்பங் கடிக்கும்போது கற்பங்கலங்கி யெப்படிக்கதறியழுதனையோ தெரியவில்லையே ஆஆ ஒருவேளை யுனதுதந்தையை நினைத்தழுதனையோ அல்லது அம்மம் மாவென்று என்னை நினைந்தழுதனையோ அல்லது கடவுளை நினைந் தழுதனையோ தெரியவில்லையே ஆஆ ஒருவேளை யிவ்விதமோசஞ் சம்பவித்ததேயென்று விதியைநினைந்தழுதனையோ அல்லது பக்கத் திற்றுணையில்லையென்றுபயந்து தேம்பித்தேம்பி யழுதனையோ தெ ரியவில்லையே ஆஆ எவ்விதம் புலம்பினையென்றெனக்குப் புலப்பட வில்லையே ஆஆ கொடும்பாம்பால் நேர்ந்த துன்பத்தைத் தாங்கி யயர்ந்து நித்திரைசெய்கின்றனையோ ஆஆ கண்மணி நீவாய்திறந்து சொல்லாமல் யானெவ்விதமாயறிவேன்.

சந்திரமதி விருத்தம்.

பற்றுநீங் கியதவத்தோர் பான்மையைப் போலநீயும்
உற்றுநோக் காமலென்முன் னொருமொழி யும்பேசாமல்

முற்றுமே வாயைமூடி மோனமா யிருக்கலாமோ
சற்றுநீ யெழுந்துபார்த்துச் சங்கதி சொலடாபாலா.

## சந்திரமதிசொல் தரு.

[மாதேநீயென்னோடேகூட வனத்துக்கேகலாம்வாடி]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-இந்துஸ்தானி-காபி-ஏகதாளம்.

பல்லவி.

சற்றுநீயெழுந்திரடா தனையாமொழிகூறடா

அநுபல்லவி

பெற்றவள்மீதென்ன கோபம் ப்ரம்மன்செய்ததோவிச்சாபம் ()

சரணங்கள்

இன்றுமுனக்குந்துக்கமோ எந்தன்மீதினிலேக்கமோ
அன்னை மோசம்போனேனடா அரும்பாவியானேனடா ()

ஆபத்துக்காலந்தனிலே ஐயோநானுமில்லையென்று
கோபத்துடனிருக்கிற கொள்கைபோலகாணுதின்று (சற்று)

எந்தனைமறந்தாயோடா இப்புவிதுறந்தாயோடா
மைந்தனேநானென்னசெய்வேன் மங்கையெவ்விதமாய்ய்வேன் (சற்)

(சர்-வ-ம்.) ஆஆ கண்மணி சற்றெழுந்து சம்பாஷிக்கலாகா தா ஆஆ பெற்றதாயாகிய என்மீதென்னகோபம் ஆஆ உனக்கிப்படி யேற்பட்டதானது ப்ரம்மசாபமாயிருக்குமோ அப்படி யேற்படுவதற்கு யாதொரு ஞாயமுமில்லையே ஆஆ ஆபத்துக்காலத்தில் யான் சமீபத்திலிருக்கவில்லையென்ற கோபமாயிருக்கலாம் வாஸ்தவந்தான் உன்னைத் தனிமையாயனுப்பி வைத்தால் இவ்வாபத்துக்குதவாமல் யான் மோசம்போய்விட்டேனே ஆஆ இப்போது தூக்கமோ அல்லது என்மீதிலேக்கமோ ஒன்றும் புலம்படவில்லையே ஆஆ யானிது நேரபரியந்தம் பரிதாபப்பட்டும் எழுந்திராமலும் வார்த்தை பாவியாமலுமிருப்பதை யோஜித்தால் என்னையுமறந்து இவ்வுலகவாழ்க்கையையுந் துறந்துவிட்டனைபோ லிருக்கின்றதே ஆஆ செல்வமே யானுன்னைக் கைதவறவிடுத்து என்செய்வேன் எவ்விதமாய்ய்வேன்.



சந்திரமதி விருத்தம்.

அதிகசுந் தரனேயெந்த னற்புதக் கிளியேநாதி
பதியையு மிழந்தேன்கொண்ட பதியையும் பிரிந்தேன்மற்ற
நிதியையுந் தாரைவார்த்தேன் நின்னையும் பறிகொடுக்குஞ்
சதியது வருகுமென்று தையல்நா னறிந்திலேனே.

## சந்திரமதிசொல் தரு.

[அறியாமல்மதிமோசமானேனே இந்தமங்கையாலேநான்]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-சாபு.

பல்லவி.

சதிவருமென்றுநானுங் காணேனே-என் கண்மணியே
சதிவருமென்றுநானுங் காணேனே

அநுபல்லவி.

காணேனே-வகை தோணேனே-என்கண்மணியே (சதி)

சரணங்கள்.

என்னைப்புரப்பாயென்று எண்ணினேன்-இனியெப்போதும்
என்னைப்புரப்பாயென்று எண்ணினேன்
எண்ணினேன்-மோசம் பண்ணினேன்-என்கண்மணியே (சதி)

பத்துமாதஞ்சுமந்து பெற்றேனே-உந்தனைநானும்
பத்துமாதஞ்சுமந்து பெற்றேனே
பெற்றேனே-துணை யற்றேனே-என்கண்மணியே (சதி)

பெற்றவயறும்பற்றி யெரியுதே-ஐயையோவுன்னைப்
பெற்றவயறும்பற்றி யெரியுதே
எரியுதே-உயிர் பிரியுதே-என்கண்மணியே (சதி)

கோசிகமுனிசெய்த கோலமோ-பாவியாகிய
கோசிகமுனிசெய்த கோலமோ
கோலமோ-தெய்வ ஜாலமோ-என்கண்மணியே (சதி)

(சந்-வ-ம்.) ஆஆ கண்மணி உனக்கிவ்வித மோசம்வருமென்று யான்சொற்பனத்திலுங் காணவில்லையே ஆஆ உனது தந்தையைப்பிரிந்துவிட்டதினிமித்தம் நீதான் என்னை யாதரிப்பவனென்

றெண்ணியிருந்ததற்கு இப்படி மோசம்பண்ணிவிட்டனையே ஆஆ உன்னைப் பத்துமாதஞ்சுமந்துபெற்றேனே ஆஆ பெற்றவயிறு பற்றியெரியும்படி துணைபிரிந்து என்னைத் தனிமையாய் விட்டுவிட்டனையே ஆஆ என்னுயிரானது உடலைவிட்டுப் பிரியும்படியான நிலைமையிலிருக்கின்றதே ஆஆ இதுவும் பாவியாகிய விஸ்வாமித்திரமுனிசெய்த மாய்கையோ அல்லது தெய்வசங்கற்பமோ தெரியவில்லையே ஆஆ இனியென்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

நன்னெறி தவறிடாமற் நாட்டினை யாண்டகீர்த்தி
மன்னவன் பெற்றெடுத்த மைந்தனென் றறிந்திருந்தும்
பன்னகத் தாலேகொன்ற பாதகத் தெய்வமேநான்
என்னதான் செய்வேனிப்போ தென்குடி கெடுத்திட்டாயே.

## சந்திரமதிசொல் தரு.

[மல்லிகைமுல்லைமலரையிறைத்ததையாலே]
என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு
இராகம்-[illegible]க்குலகாம்போதி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

ஐயையோவென்குடிக் கநியாயஞ்செய்தாயே தெய்வமே-இந்த
வையத்திலென்போல மாபாவியாருமுண்டோ தெய்வமே
ஒருபிள்ளை தன்னைநான் அருமையாய்வளர்த்தேனே தெய்வமே-அந்தப்
பெருமைதெரிந்திருந்தும்பிடுங்கிக்கொண்டாயையோதெய்வமே
பாலகனையிழந்து பழிகாரியானேனே தெய்வமே-இந்தக்
கோலம்விளைப்பதற்குக் குறையென்னசெய்தேனோ தெய்வமே
பிள்ளையிருக்கிறான் பெற்றவளெனக்குமே தெய்வமே-பின்னாற்
கொள்ளிவைப்பானென்று குணமாயிருந்தேனே தெய்வமே
மைந்தனுக்குநான்கொள்ளி வைக்கவேசெய்தாயே தெய்வமே-இந்த
விந்தைக்காகவோவுன்னை வேண்டித்தவமிருந்தேன் தெய்வமே
என்பிள்ளையோடுநா னிறந்திடுவேனாகில் தெய்வமே-எங்கட்
கன்புடன்கொள்ளிவைத் தடக்கஞ்செய்வோரில்லை தெய்வமே
அடவிதனையகன்றிவ் வர்த்தராத்திரிதன்னில் தெய்வமே-சுடச்
சுடலையெவ்விடங்கண்டு சுதனையெடுத்துச்செல்வேன்தெய்வமே



(சர்-வ-ம்.) ஆஆ தெய்வமே என்குடியைக் கெடுத்துவிட்டனையே ஆஆ வையகத்தில் என்போற் பாவிகளொருவருமில்லையே ஆஆ ஒருபிள்ளைப்பெற்று அருமையாய் வளர்த்தபெருமை நன்குணர்ந்தும் இரக்கமின்றிப் பறித்துக்கொண்டனையே ஆஆ பாலகனையுமிழந்து பழியுஞ்சுமந்துகொண்டேனே ஆஆ எனக்கிவ்விதந் தீங்குநேருதற்கு என்னகுற்றஞ்செய்தேனோ தெரியவில்லையே ஆஆ பிள்ளையெனக்கு அந்தியகாலத்திற் கொள்ளிவைப்பானென்றெண்ணியிருக்க அவனுக்கு யான் கொள்ளிவைக்கும்படி செய்துவிட்டனையே ஆஆ திருவுளமே இதற்காகவோ வுன்னைவழிபட்டுவந்தேன் ஆஆ யான் என்பிள்ளையுடன் மடிந்திடுவேனாகில் எங்களைத்தகனஞ்செய்து கர்மாதிகாரியங்களைமுடிக்கத்தக்க சுற்றத்தாரொருவருமில்லையே ஆஆ இவனையாவது தகனஞ்செய்யலாமென்றால் இவ்வர்த்தராத்திரிவேளையிற் சுடலை யெவ்விடமென்றுதெரிந்து தூக்கிச்செல்லப்போகின்றேன் ஆஆ (அழுதழுதும்பெற்றாலும் அவள்தான்பெறவேண்டும்) என்பதுபோல யானெவ்வளவுதான் கதறியழுதாலும் யான்றானே தகனஞ்செய்யவேண்டும் ஆதலாற் பாவியாகிய நான் பாலகனையெடுத்துக்கொண்டு சுடலை தேடிச்செல்கின்றேனிப்போது.

சந்திரமதி விருத்தம்.

நாவினில் மதுரமாக நவின்றிடு மகனேயிந்தப்
பூவினி லுன்னைப்போல புத்திரன் பார்ப்பதுண்டோ
பாவிநா னுன்னைத்தீய பாம்பினுக் கிரைகொடுத்துக்
காவினிற் புலம்பிநிற்கக் கடமையும் பட்டிட்டேனே.

## சந்திரமதிசொல் தரு.

[பஞ்சமாபாதகம்படாதோ எந்தன் பாவவினைகளுன்னைத்தொடாதோ]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-திரிபுடைதாளம்.

கண்ணிகள்

தனையனேநானென்ன செய்வேனடா-இனித்
தகனஞ்செய்தெவ்விதம் உய்வேனடா (தனை)
உன்னைக்கைதவறவும் விட்டேனடா இந்த
உலகினில்நான்பாவி கெட்டேனடா (தனை)

பெற்றவயறெரிந்து குழைபுதடா-நானும்
பேசுமொழியுன்காதில் நுழையாதோடா ()
கானமலையுமுனக் குறவாச்சுதோ-இந்தக்
காட்டுநரிநாய்களும் வரலாச்சுதே (தனை)
யாருமற்றபாவியும் ஆனேனடா-எனக்கு
ஆதாரமிலாமற் போனேனடா (தனை)
என்னுந்தண்ணீருமெனக் கிறைப்பாயென்று-முன்னால்
எண்ணியிருந்ததெல்லாம் போச்சேயின்று (தனை)
கொள்ளியெனக்கிடாமல் நடந்தாயடா-நானுங்
கொள்ளியுனக்குவைக்கத் தொடர்ந்தேனடா (தனை)
கர்மஞ்செய்வாயென்றுநான் இருந்தேனடா-பாவக்
கர்மமெல்லாந்தொலைத்தே இறந்தாயடா (தனை)
தூக்கிமடியில்வைத்துத் சுமந்தேனடா-இப்பத்
தூக்கிப்போட்டுச்சுடவுநான் அமைந்தேனடா (தனை)
படைத்தபிரமனவன் படுபாவியே-துக்க
பாரமெனக்களித்தான் பழிதாவியே (தனை)
என்னமாயமுதானால் கேட்பாயோடா-இந்த
இடுக்கண்தனிலிருந்து மீட்பாயோடா (தனை)
மறையவருடன்கொண்ட மாதேவியும்-விடிந்தால்
வம்புச்சண்டைக்கிழுப்பார் மூதேவியும் (தனை)
இப்பவேயுனையெடுத் தேகிறேண்டா-சுடலை
எவ்விடமென்றுதேடிப் போகிறேண்டா (தனை)

(சங்-வ-ம்.) ஆஆ தனையா உன்னைத் தகனஞ்செய்தெவ்விதஞ் ஜீவித்திருக்கப்போகின்றேன் ஆஆ உன்னையிழந்து யான் கெடும்படிநேரிட்டதே ஆஆ பத்துமாதஞ் சுமந்துபெற்ற வயறுநோகின்றதே ஆஆ என்பரிதாபமொழியானது உனது செவியிற்கேட்கவில்லையோ ஆஆ இக்கானமும் மலையும் உனக்கு நேசமாய்விட்டது போலிருக்கின்றது அதனால் இக்குற்ற நாய்நரிகள் உன்னைப்பார்க்க வருகின்றதே ஆஆ ஆதரவில்லாத பாவியானேனே நீயெனக்குக் கொள்ளிவைத்து என்னுந்தண்ணீருமிறைப்பாயென்று நம்பியிருந்தேனே ஆஆ இப்போது நானுனக்குக் கொள்ளிவைக்க வரலா





னேனே ஆஆ எனக்குக் கர்மஞ்செய்வதற்குப்பதிலாய் உனது பாபகர்மங்களைத் தீர்த்துக்கொண்டுபோய்விட்டனையே ஆஆ உன்னைத்தூக்கி மடிமேல்வைத்துப் பாற்கொடுத்தபாரம் நீங்கிச் சுடலையிற்கொண்டுபோய்ச் சுடும்படியான பாரம் ஏற்பட்டுவிட்டதே ஆஆ நம்மைப்படைத்த பாவியாகிய பிரம்மதேவன் இந்தத்துக்கபாரத்தைக் கொடுத்துவிட்டானே ஆஆ யானெவ்விதங் கதறினும் நீயென்னவென்று கேட்கவுந் துக்கத்தை மீட்கவும் போகின்றனையா ஒருக்காலுமில்லையே ஆஆ இங்கு [illegible]லகாரஞ்செய்து விடிந்துவிடும் பக்ஷத்திற் பாவியாகிய காலகண்டையரும் அவர்மனைவியும் வம்புச்சண்டைக்கு வருவார்களே யென்செய்வேன் நல்லது உன்னைத் தகனஞ்செய்வதற்காக இப்பொழுதே யெடுத்துக்கொண்டு சுடலையிருக்குமிடந் தேடிச்செல்கின்றேன்.

பொது விருத்தம்.

தாய்மயானத்தைத்தேடித் தகனமுஞ் செய்வதற்குப்
போய்வரலாமென்றெண்ணிப் பொறுமையாய்த்தோளின்மீது
சேய்தனை யெடுத்துக்கொண்டு சென்றிடும் பொழுதங்குற்ற
பேய்களும் பின்றொடர்ந்து பேசியே தடுத்ததன்றே.

## பேய்கள்சொல் சிந்து.

[வெள்ளிவெளிச்சத்திலே விடியற்காலநேரத்திலே
புளியம்பூரவிக்கைக்குள்ளே பூரான்வந்துபூந்ததடி
தில்லாத்தான்டாங்குராஜா தில்லாத்தான்டாங்கு]

என்ற சிந்தின் வர்ணமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

வல்லுயிராய்மாண்டவர்கள் வயதுமுடியும்வரை
தொல்லுலகிற்பேய்களாகத் தோன்றுமவர்நாங்கள்தானே (தில்)

குடியில்லாவீடுகளிற் கொண்டாட்டம்போட்டிடுவோம்
விடியும்வரையினுமே வீதியிலுலாவிடுவோம் (தில்)

கோபுரத்தில்நித்தியமுங் குடியிருந்துவாழ்ந்திடுவோம்
தீபமில்லாமாளிகையிற் றிருநடனமாடிடுவோம். (தில்)

தோடியிலேயிருந்து திருக்கூத்துமாடிடுவோம்
காரிருளிலோருருவாய்க் காலில்லாமற்காட்டிடுவோம் (தில்)

இருட்டினிலேயொண்டியா யேகிடுமனிதர்களை
அரட்டிமிரட்டிக்காந்த லடித்திடச்செய்திடுவோம் (தில்)

உச்சிப்பொழுதினிலே யொண்டியாய்ச்சுடலைதனில்
அச்சமுற்றுவந்தவரை யடித்துயிர்வாங்கிடுவோம் (தில்)

துடுக்காகவேயெவருஞ் சுடலைதனிற்பூஜைசெய்ய
நடுச்சாமவேளைவந்தால் நாக்குத்தள்ளப்போட்டிடுவோம் (தில்)

காமுகர்கள்ராத்திரியிற் கலவிபுரிந்தாடுச்
சாமவேளைவீதிவந்தாற் றலையைத்திருகிடுவோம் (தில்)

இறைச்சிக்குழம்புகளை யிருட்டினிற்கொண்டுவந்தாற்
பறித்துக்கொண்டேயவரைப் பயங்காட்டியோட்டிடுவோம் (தில்)

விற்புருவமாதர்களை மேவித்தலைசுற்றவைப்போம்
கற்புடையாளென்றறிந்தாற் காதவழிசென்றிடுவோம் (தில்)

பேய்கள் விருத்தம்.

எங்கள்கா வலிலேயுள்ள விளஞ்சிறு பாலன்றன்னை
மங்கைநீ யெடுத்துச்செல்ல வாய்க்குமோ யோக்யந்தானே
செங்கையிற் றூக்கிக்கொண்ட சிறுவனை வைக்காவிட்டால்
உன்கழுத் தினையொடித்தே யுயிர்வதை செய்வோம்பெண்ணே.

---

## பேய்கள்சொல் தரு.

[சன்னதிகண்டுகொண்டேன் கண்டவுடனே
சௌபாக்யம் பெற்றுக்கொண்டேன்]
என்ற கவிக்குஞ்சரமையர்கீர்த்தனையின் வர்ணமெட்டு
இராகம்-மோகனம்-தாளம்-சாபு.

பல்லவி.

மார்க்கமல்லடி மங்கையே மைந்தனைத்தரையே
வைத்துச்செல்லடி நங்கையே

அநுபல்லவி.

நீர்க்குமுடனேயிங்கே செத்தவனெங்கள்சொந்தம்
ஏற்கைதவறினவன் இனியென்னடிசம்பந்தம் (மார்)



சரணங்கள்.

பேய்களோடுபேயாச்சுதே மானிடனென்னும்
பேரென்பதிளிப்போச்சுதே
நாய்நரிகளடுக்க நாங்களதைத்தடுக்கத்
தாய்வந்தனுமெள்ளத் தாங்கியெடுத்துக்கொள்ள (மார்)

யாரென்றுபார்த்துக்கொண்டாய் பேய்களிடத்தில்
அனுகாதுன்ஜெபமுங்கண்டாய்
காரிருளிலேவந்து கதறிப்பதறிநொந்து
வீரியமாயெடுத்தால் வெளியிற்செலத்தொடுத்தாய் (மார்)

சொன்னவார்த்தையைக்கேளடி கேளாதபோனாற்
றுடிதுடித்துயர்மாளடி
அன்னையென்றினியெண்ணேம் ஆயென்றுசட்டைபண்ணேம்
சின்னவனுடன்செல்லச் சித்தம்வைப்பதுநல்ல (மார்)

---

(பேய்கள் வசனம்.) ஹே மாதே எங்கள் காவலிலிருந்த இந்தப் பாலகனை நீயெடுத்துச்செல்வது தகாதகாரியம் ஏனென்னில் பார் எப்பொழுது வல்லுயிராய் மாய்ந்தானோ அப்பொழுதே விடனென்ற நாமம்போய் எங்களைப்போன்ற பேயாகிவிட்ட அவனுடையதேகமானது உன்னுடைய பாத்தியத்தைவிட்டு எங்களுக்குச் சொந்தமாகிவிட்டதினிமித்தம் நாய்நரிகளைக்கூட நெருங்கவொட்டாமற் றடைசெய்துக் கொண்டிருக்கின்றோம் அங்ஙனமிருக்க (சந்தடிசாக்கிற் கெந்தபொடிகாற்பணம்) என்பதுபோல இவ்விருள்நேரத்தில் மெல்லவந்து தாயென்ற சொந்தம்பாராட்டிக் கட்டியழுது தூக்கிச்செல்கின்றனையே ஹே கோதாய் எங்களிடத்தில் உனது ஜாலதந்திரஞ்செல்லாதாகையால் இப்பொழுது மரியாதையாய்ப் பாலகனை வைத்துவிட்டுச்செல் இல்லாவிட்டால் உன்னை க்ஷணநேரத்திற் கொன்றுவிடுவோந் தெரியுமா பெப்பெப்பெப் பெப்பே.

சந்திரமதி விருத்தம்.

ஐயையோ வென்னைப்போலே யவதிகள் படுவோரிந்த
வையகத் தினிலேயுண்டோ வல்லர வத்தால்மாண்ட
மையனைத் தகனஞ்செய்யப் பாவிநான் போகும்போது
மெய்யது நடுங்கப்பேய்கள் மிரட்டியே தடுக்குதீசா.

## சந்திரமதிசொல் தரு.

[வீதிவீதிகள்தோறும் விலைகூறினேனே]

என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம் சாபு.

பல்லவி.

இந்தவிதிக்கென்செய்குவேன் ஜெகதீசனே
எவ்விதமினியுய்குவேன்

அநுபல்லவி.

வந்தவிடத்திற்பேய்கள் மறுத்துத்தடைகாட்டுதே
சிந்தைகலங்கிமிகத் தியங்கிப்பயமலாட்டுதே (இந்)

சரணங்கள்.

எப்படியிதைப்போட்டுவேன் பாலகனுக்கு
எவ்வாறுதணல்மூட்டுவேன்
பெப்பெப்பெப்பேயென்று பெரியசத்தமிடுதே
அப்பப்பாவெனக்குள்ளம் ஐயமிகப்படுதே (இந்)

உற்றதுணையுமில்லையே இவ்விருளினில்
உதவியொருவரில்லையே
கொற்றவனைப்பிரிந்த கொள்கையுமிதுதானோ
பெற்றபிள்ளையையிந்தப் பேயிடம்விடுவேனோ (இந்)

ஆதரிப்பதுன்பாரமே கதியிலாத
அடியாளையிந்தநேரமே
பாதிமதிதரித்த பரமனேவிசுவேசா
மேதினியோர்பணியும் விமலனேகாசிவாசா (இந்)

(சந்-வ-ம்.) ஆஆ ஜெகதீசா இந்தக்கஷ்டத்திற் கென்செய்வேன் ஆஆ பாலகனையெடுத்துப் போகவந்தவிடத்திற் பேய்கள் வந்து வழிமறித்துக் குழந்தையைவைத்துப்போவென்று பயங்காட்டுகின்றமையால் எனக்குத் தேகமெல்லாம் நடுங்கின்றதே ஆஆ இவைகளை யெப்படியோட்டி யெனது பாலகனைத் தகனஞ்செய்வேன் ஆஆ பெப்பெப்பேயென்று பெருஞ்சப்தமிடுவதாற் கொன்றுவிடுமோ யாதோவென்று சந்தேகப்படுகின்றதே ஆஆ எனக்கு யாதொரு துணையுமில்லையே ஆஆ இம்மார்க்கத்தில் யாராவது வந்



தாலும் உதவியாயிருக்குமே ஆஆ நாதனைப்பிரிந்ததற்குப் பலனிது தான்போலிருக்கின்றதே ஆஆ விஸ்வேசா இந்தச்சமயத்தில் நீ தான் காத்துரக்ஷிக்கவேண்டும் ஆஆ ஈசனுக்குக்கூடக் கிருபைவரவில்லையே ஆஆ பேய்கள் சுற்றிலும்நெருங்கி வருகின்றனவே யினி யென்செய்வேன்.

(பேய்-வ-ம்.) சீக்கிரம் பிள்ளையை கீழேவைத்துவிட்டுச்செல் இல்லாவிட்டால் உன்னைக் கொன்றுவிடுவோம் பெப்பெப்பெப் பெப்பே.

சந்திரமதி விருத்தம்.

காரிருளினிலேயெந்தன் காதல்மைந் தனையெடுத்துத்
தாரிபார்த் தேகும்போது தடைசெயும் பேய்காள்கேளீர்
பாரினில் நானுமுண்மைப் பதிவிர தையுமேயானால்
நேரினிற் புலப்படாமல் நிமிஷத்தில் மறைகுவீரே.

(சந்-வ-ம்.) ஆஆ பேய்காள் யான் மைந்தனைத் தகனஞ்செய்வதற்காக எடுத்துக்கொண்டு வழிதேடிச் செல்லும்போது தடைசெய்து பயங்காட்டுகின்றீர்களே ஆஆ யான் பதிவிரதையென்பது நிஜமானாற் கண்ணுக்குப்புலப்படாமல் மறைந்துவிடுவீர்களாக ஆஆ பேய்கள் எனது பதிவிரதாதர்மத்துக்குப்பயந்து ஓடிவிட்டமையால் யான் சுடலைதேடிச் செல்கின்றேனிப்போது.

பொது விருத்தம்.

சந்திர மதியுந்தேவ தாசனை யெடுத்துச்செல்ல
விந்தைசேர் சுடலைதன்னில் வெட்டியான் வேலைக்காக
வந்தமர்ந் துள்ளகீர்த்தி மன்னரிச் சந்த்ரனன்று
முந்திய ராஜநேர்மை முறைநினைந் துருகுவானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

நீதியி லெவனைப்போல நிருபர்க ளில்லையென்று
மேதினி தனிலுள்ளோர்கள் விளம்பிடும் படியதாகத்
தீதிலா துலகையாண்ட செம்மல்யா னென்றறிந்துஞ்
ஜோதியே யென்னையிந்தச் சுடலைகாத் திடச்செய்தாயே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[வாராயோவாராயோகண்ணே வைகுந்தமன்னே]
என்றகீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாபு.

பல்லவி.

சம்மதந்தானோஜெகதீசா இதுவுனக்குச்
சம்மதந்தானோஜெகதீசா

அநுபல்லவி.

செம்மலென்றும்பேர்படைத்துத் தேசமதையாண்டதுபோய்த்
தன்மைப்புலையனுக்கிறைய் இதுவுனக்குச் (சம்)

உல்லாசமாய்மகுடம் உற்றசிரமீதினிலே
குல்லாயணியவேவைத்தாய் இதுவுனக்குச் (சம்)

செம்பொன்னுடைதரித்த தேகமதிலேகறுத்த
கம்பளமுடுக்கவேவைத்தாய் இதுவுனக்குச் (சம்)

தரணிபுகழுஞ்சிம்மா தனத்திலிருந்ததுபோய்ப்
பாணியிருக்கவேவைத்தாய் இதுவுனக்குச் (சம்)

செங்கோற்பிடித்தகையாற் செத்தபிணமத்தனையுஞ்
சங்கேதமாய்ச்சுடவைத்தாய் இதுவுனக்குச் (சம்)

(அரி-வ-ம்.) ஆஆ ஜெகதீசா யான் சத்தியவாக்கு அரிச்சந்திர மகாராஜனென்று பெயர்பெற்று மனுமுறைதவறாமல் உலகத்தை யாண்டதுபோய் சுடலைகாக்கும் புலையனாகச்செய்தனையே ஆஆ ரத்தினமணிமுடிதரித்த எனது சிரத்தில் பீற்றற்குல்லாய் தரிக்கவும் பொற்சரிகையுடைதரிக்கும் எனது தேகத்தில் கருங்கம்பளியணியவும் நவமணியிழைத்த சிம்மாதனத்திலிருந்த யான் பாடைக் கொம்புகளால் நிர்மித்த பாண்மீது வீற்றிருக்கவும் செங்கோற் பிடித்த எனதுகரத்தாற் பிணங்களைச்சுடவுஞ் செய்தனையே ஆஆ ஈசா இதுவுனக்குச் சம்மதந்தானோ யானென்செய்வேன்.

பொது விருத்தம்.

வள்ளல்தன் னிலைமைதன்னை மனதினி லெண்ணியெண்ணி
உள்ளமு முருகிவாடி யுறக்கமா யிருக்கும்போது.





பிள்ளையை யெடுத்துச்சென்ற பெண்மணி யந்தமார்க்கம்
மெள்ளவே சென்றபின்னு மெய்யயார் அருகுவாளே.

சந்திரமதி விருத்தம்.

கடவுளே யென்னசெய்வேன் காரிருள் மிகுதியாலே
நடமது தெரிந்திடாமற் றட்டுமுட் டுற்றுநானும்
அடவியிட் டிங்குவந்தே னடியெலாம் நோகுதிப்பச்
சுடலையெங்குளதோகாணேன் றுகையென்செய்வேனையோ.

## சந்திரமதிசொல் தரு.

[சாமிநீரென்னுடனே சரசமாடவாருமே]
என்ற டிராமாப்பதத்தின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

சுதனையெடுத்துக்கொண்டு சுடலைதேடிவந்தேனே

அநுபல்லவி.

பதமெல்லாம்நோவெடுக்குதே என்செய்வேன் (சுத)

சரணங்கள்.

பழிகாரத்தெய்வமது பண்ணும்விதமோவிது
வழியுந்தெரியவில்லையே என்செய்வேன் (சுத)

புடமதுபோல்வேகுதே புகைமிகவுண்டாகுதே
சுடலையிதோநானறியேன் என்செய்வேன் (சுத)

சுடலையிதுதான்போலே தோன்றுகிறதினாலே
கடனைமுடிப்பதெவ்விடம் அறியேனே (சுத)

(சந்-வ-ம்.) ஆ! எனது புதல்வனையெடுத்துக்கொண்டு சுடலை தேடிவந்தேன் கால்களெல்லாம் நோவெடுக்கின்றது இன்னுஞ் சுடலையிருக்குமிடந் தெரியவில்லையே. ஆ! பழிகாரத்தெய்வம் என்னை யிப்படிச் சோதிக்கின்றதே ஆ! இங்கு பற்பல்விடங்களிலும் புடம்போல வெந்துக்கொண்டு வெளிச்சங்காணப்படுகின்றது எங்கும் புகைகிளம்பிக்கொண்டிருக்கின்றதே இதுதான் சுடலையாயிருக்கக் கூடுமோ? கல்லறை சமீபத்திற்சென்று பார்க்கின்றேன் ஆ! இங்கு

ப்ரேதப்புகை வாசனையடிப்பதால் இங்கு வெந்துக்கொண்டிருப்பதெல்லாம் ப்ரேதங்கள்தான் ஆதலால் இதுதான் சுடுகாடுபோலிருக்கின்றது இனி மைந்தனைத் தகனஞ்செய்யவேண்டிய பக்குவத்திற்கு யானென்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

காட்டமுங் கையிலில்லை கடவுளே யெருவுமில்லை
நாட்டமா யவையிருக்கும் நல்லிடந் தெரியவில்லை
நீட்டமாய் மகனைவைத்து நீற்றிடு தற்குத்தக்க
மூட்டமும் போடுதற்கு முத்தனே வகைசெய்யாயோ.

## சந்திரமதிசொல் தரு.

[இத்தனைகோபமாகுமா]
என்ற பதத்தின் வர்ணமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.
என்னமாய்த் தகனஞ்செய்வேன்

அநுபல்லவி.
புவி-மன்னர்புகழ் சின்னவனை
இன்னிசியிற் கன்னிநான் (என்)

சரணம்.
கட்டைகளை வெட்டிவரத்
திட்டமாயெண்ணிடில்-மேலே
அட்டதிசை முட்டவிருள்
கட்டியிருப்பதினாலே
தட்டுக்கெட்டுநானிங்கு
முட்டைகள்சம்பாதித்து (என்)

(சந்-வ-ம்.) ஆஆ ஜெகதீசா எனது மைந்தனைத் தகனஞ்செய்யவேண்டுமானால் விறகும் எருவும் வேண்டுவதாயிருக்கின்றன அவைகளைச் சவதரித்துவரலாமெனில் இப்போதெங்கும் இருள் கவிந்துக்கொண்டிருப்பதால் யான்றட்டுக்கெட்டு எவ்விதமாய்க் கொண்டுவருவேன் என்பாலகனை யெவ்விதந் தகனஞ்செய்வேன். ஆஆ கடவுளே நீயாவது முன்னின்று முடித்துவைக்கலாகாதா.



சந்திரமதி விருத்தம்.

கட்டழகுடையபாலா கடவுள்கா வலிலேயுன்னை,
விட்டுநீ வேகமாக விரைந்துபோய்ச் சுடலைதன்னிற்
சுட்டுதி மிச்சமாகத் தோன்றிடுங் கட்டைமுட்டை
சட்டமா யெடுத்துவந்து தகனமுஞ் செய்கிறேனடா.

(சந்-வ-ம்.) ஆஆ தனையா உன்னைத் தெய்வகாவலாக வைத்துவிட்டு யூரணிந்த மயானத்துக்குட் சென்று அங்கு வெந்துமீந்து கிடக்கக்கூடிய கட்டைமுட்டைகளை யெடுத்துவந்து நன்றாயடுக்கி உன்னைவைத்துத் தகனஞ்செய்கின்றேன் அதுவரை யிவ்விடத்திலேயேயிரடா கண்மணி.

பொது விருத்தம்.

விளைப்பய றுலையந்த மெல்லியும் பாலன்றன்னைத்
தனித்தொரு புறமாய்வைத்துத் தாயுமச் சுடலைசென்று
கனத்துடன் கிடந்தபாடைக் கம்புகள் கட்டைமுட்டை
அனைத்தையு மெடுத்துவந்தே யவ்விட மடுக்கினளே.

சந்திரமதி விருத்தம்.

பாலகா சுடலைக்குள்ளே பக்குவ மாகச்சென்று
கோலுடன் கட்டைமுட்டை கொண்டுவந் தடுக்கிவிட்டேன்
சீலமா யுன்னைத்தூக்கிச் செம்மையா யிதன்மேல்வைக்கக்
காலமோ தனையாவிந்தக் கட்டையில் வைத்திட்டேனே.

## சந்திரமதிசொல் தரு.

[அழகுள்ள இவாரடி யென்ப்ராணசகி]
என்ற ட்ராமஜாவளியின் வர்ணமெட்டு.
இ-ம். கமாஸ்தாளம். சாபு.

பல்லவி.
மகனைபடுத்துக்கொண்டாயோ இந்தக்கட்டையில்
மகனைபடுத்துக்கொண்டாயோ

அநுபல்லவி.
தகனஞ்செய்திடநேர்மையாய் இந்தக்கட்டையில் (மக)

சரணங்கள்.

வஞ்சிநான்கேட்டுவந்த வரமிதுதானோபாலா
நெஞ்சுக்கல்லும்வைத்திட்டேனே உனக்கிப்போது
நெஞ்சுக்கல்லும்வைத்திட்டேனே
தகனஞ்செய்திடநேர்மையாய் இந்தக்கட்டையில் (மக)

வாய்க்கரிசிக்குப்பதில் மண்ணைத்தெள்ளியிட்டேனே
தாய்க்குதவாமற்போனாயே பெற்றுவளர்த்த
தாய்க்குதவாமற்போனாயே
தகனஞ்செய்திடநேர்மையாய் இந்தக்கட்டையில் (மக)

அன்னைபிதாவுக்குநீ அருங்கொள்ளிவைப்பதற்கு
முன்னேநான்கொள்ளிவைக்கவும் முடிந்ததடா
முன்னேநான்கொள்ளிவைக்கவும்
தகனஞ்செய்திடநேர்மையாய் இந்தக்கட்டையில் (மக)

(சந்-வ-ம்.) ஆஆ தனையா உன்னைத் தகனஞ்செய்வதற்குத் தகுந்த வொழுக்கமாய் இந்தக்கட்டையிற் படுத்துக்கொண்டனை யே ஆஆ யான் கேட்டுவந்த வரமிதுதானா ஆஆ பெற்றதாய்க்குத வாமற் போய்விட்டனையே ஆஆ தாய்தந்தைகளுக்குக் கொள்ளி வைக்கவேண்டியகடமை உன்னைச் சார்ந்ததாயிருக்க இப்போது நானுனக்குக் கொள்ளிவைக்க ஏற்பட்டேனே ஆஆ இதோ நெஞ் சுக்கல்வைக்கலானேனே ஆஆ வாய்க்கரிசிக்குப்பதிலாக இதோ உன்வாயில் மண்ணைத்தெள்ளியிடலானேனே இதுவும் விதிவசந் தானா இனியென்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

கள்ளிபோ லிலைத்தேயிந்தக் காட்டினி லுள்ளமுட்டை
சுள்ளியு மெடுத்தடுக்கித் தூக்கியே யுனைக்கிடத்தித்
தெள்ளிய மண்வாயிட்டுச் சிறியநெஞ் சுக்கல்வைத்தேன்
கொள்ளியும் வைப்பதென்றற் குசுதென் மனதுபாலா.



சந்திரமதிசொல் தரு.

[மாதவமேயிவ்வுருவாய் வந்ததுமென் விதிவசமோ]
என்றட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மைந்தனேநான்கொள்ளிவைக்க
மனதுமெவ்விதந் துணிவேன்

அநுபல்லவி.

உந்தனைநான் அந்தவிஷ
உரகமதற் கிரைகொடுத்தேன் (மைந்)

சரணங்கள்.

வெந்துவிட்டால் உந்தனது
தந்தைவந்துகேட்பாரடா
உந்தனது விந்தைசொன்னால்
உயிரைவிடப்பார்ப்பாரடா (மைந்)

பத்துமாதம் வைத்திருந்து
பெற்றகும்பிபற்றுதடா
எத்தனைநான் கத்திடினும்
இனியதொந்தமற்றுதடா (மைந்)

என்மகனே கண்மிநானும்
எதிரில்வந்துநிற்கிறேன்டா
முன்மலிந்த கண்மலினை
மூண்டுகொள்ளிவைக்கிறேன்டா (மைந்)

(சந்-வ-ம்.) ஆஆ தனையா உன்னைப் பாம்புக்கிரை கொடுத்த பாவியாகிய நான் உனக்குக்கொள்ளியும் வைக்க என்னமாய்த் துணிவேன் ஆஆ அப்படிவைப்பேனாகில் நீவெந்து சாம்பலாகி விடுவாயே ஆஆ உனது தந்தைவந்து மகனெங்கேயென்று கேட் டால் யானென்ன விடையளிப்பேன் ஆஆ நீயிறந்த சேதியைச் சொல்வேனாகில் உடனே உயிரைவிட்டுவிடுவாரே ஆஆ இக்காரண ங்களையெல்லாம் நினைக்கநினைக்கப் பத்துமாதஞ் சுமந்துபெற்ற வய றுனது குபீர்க்குபீரென்று பற்றியெரிகின்றதே ஆஆ யானெவ்வித மாய்க் கதறியழுதாலும் நம்மிருவருக்குந் தொந்தமேற்படப்போ

கின்றதா ஆஆ கண்மணி இதோ யானுன்னெதிரில் நின்று முன் செய்த கன்மவினைப்பயனாற் கொள்ளிவைக்கின்றேன் யாதொரு விக்கினமன்னியிற் றணலாயெரிந்து சாம்பலாகக்கடவை.

பொது விருத்தம்.

சந்திரமதியுமர்த்த சாமநேரத்தில்வந்து
மைந்தனைக் கட்டையேற்றி வருந்தியே கொள்ளிவைத்த
விந்தையைக் காவல்காக்கும் வெள்ளிச் சந்த்ரராஜன்
அந்தவே ளையினிற்கண்டே யையமுங் கொண்டுவானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

நதியணி சிவனேகாசி நன்னகர் விஸ்வநாதா
விதிவசத் தாலேநாளும் வெட்டியா னானாளாய்
அதிசய மிதனைப்போலே யறிந்திலேன் சுடலைக்குள்ளே
புதியதாய் வெளிச்சமொன்று புகையுடன் றெரியுதையோ.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[துதியையங்கான் றுணையாய்வரு தாயாகார்த்திகேயா]
என்ற எச்சரிக்கைத்தண்ணியின் வர்ணமெட்டு.
இராகம்-சகானா-தாளம்-ரூபகம்.
கண்ணிகள்.

ஆகாவிங்கே யேதோவொரு
அக்கினிச்சுவாலை
வேகாவிடா துன்னிவிம்ப
வேகுதேயென்மேலே (ஆகா)

அருகினிலோர் தெரிவைசத்தம்
அலறிக்கேட்கவானேன்
மாநிமமதை யின்னதென்று
மனதிலறியேனே (ஆகா)

ஆதலினால் இப்பொழுதே
அவ்விடநான்சென்று
சேதியது இன்னதென்று
தெரிந்துவாரேனின்று (ஆகா)



(அரி-வ-ம்.) ஆஆ இந்தமயானத்திற் பிரேதஞ்சுடுமிடத்தைக் கடந்து நாதனமாயோரிடத்திற் றணலானது கொழுந்துவிட்டெரிகின்றது அதனருகில் ஓர்பெண்ணின் ரோதனக்குரலும் கேட்கின்றது அதன்காரணந் தெரியவில்லையாதலால் யானவ்விடஞ் சென்று காரணந்தெரிந்து வருகின்றேனிப்போது.

சந்திரமதி விருத்தம்.

தேரினிற் கொள்ளிவைத்து நிற்கிறேன் மரத்தைப்போலே
பாரினி லென்னைப்போன்ற பாவிக ளொருவரில்லை
ஊரினி லொண்டியானே னுதவியில் லாமற்போனேன்
யாரினி யென்னைவைத்தே யாதரிப் பவர்களப்பா.

## சந்திரமதிசொல் தரு.

[கண்மணியேயின்னந்தூக்கமா எழுந்திரடா]
என்ற நீதிநெறி அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-தேசிகமாஸ்-தாளம்-சாபு.
பல்லவி.

மகனேமகனேமகனே நான்பெற்றெடுத்த
மகனேமகனேமகனே

அநுபல்லவி.

தகனமுஞ்செய்வதற்கோ சதிகாரியுன்னைப்பெற்றேன்
புகலிடம்வேறயில்லையே இனியெனக்குப்
புகலிடம்வேறயில்லையே நான்பெற்றெடுத்த (மகனே)

தனையாகிப்போனாயே தணலாயெரிகிறாயே
கனவிலுங்காணேனேடா இனிமேலுனைக்
கனவிலுங்காணேனேடா நான்பெற்றெடுத்த (மகனே)

வெந்துசாம்பலாவாயடா விண்ணுலகம்போவாயடா
எந்தக்காலமுன்னைக்காணுவேன் பாவிநானுமே
எந்தக்காலமுன்னைக்காணுவேன் நான்பெற்றெடுத்த ( )

(சந்-வ-ம்.) ஆஆ தனையா பழிகாரியாகிய நான் உன்னைத் தகனஞ்செய்வதற்காகவா பெற்றேன் ஆஆ இப்போது கொழுந்துவிட்டெரிகின்றனையே ஆஆ சீக்கிரத்தில் வெந்துநீறாகிவிடுவாயே ஆஆ

இனிமேலுன்னை யெக்காலத்திலுஞ் சொற்பனத்திலாவது காணப் பேர்கின்றேனு ஆஆ கண்மணி இனிமேலென்னடா செய்வேன்.

பொது விருத்தம்.

பெண்ணொருத்தி மகனைநினைத் தலறுகின்றாள்
  பிணமொன்று வேகுதலை யோஜித்தாக்கால்
வண்ணமக னிறந்திருப்பா னெனக்குநல்கும்
  வாய்க்கரிசி பணந்துண்டு கொடுத்திடாமற்
றிண்ணமுடன் கரவடமாய்த் தகனஞ்செய்த
  செயலாகத் தோனுதென்றே யரிச்சந்த்ரக்கோன்
எண்ணமது கொண்டனே ப்ரேதந்தன்னை
  யெட்டியுதைத் திடவோர்மைப் பட்டிட்டானே.

## அரிச்சந்திரன் நிர்க்காலோசனை.

ஆஆ இங்கு யாரோ வோர் பெண்ணனவள் மகனே மகனே யென்று ரோதனஞ்செய்கின்றனள் அருகினில் ஓர் பிரேதம்வேகின்றது அதனை யோஜிக்குமிடத்து தன்மகனிறந்து விட்டான்போற் காணப்படுகின்றது அதற்காக எனக்குச் செல்லவேண்டிய (வாய்க்கரிசி-முழத்துண்டு-காற்பணம்) முதலானவைகளைக் கொடாமற் றிருட்டுத்தனமாய்ப் பிரேதஞ்சுடுதற்கு வந்திருக்கின்றனள்போற் காணப்படுகின்றதாகையால் இந்தப் பிரேதத்தைச் சுடவொட்டாமற் காலாலுதைத்துத்தள்ளிவிடுகின்றே னிப்போது.

அரிச்சந்திரன் விருத்தம்.

கொள்ளிவைத் திடுவோரெல்லாங் கொடுத்திடும் வழக்கம்போல
உள்ளதைக் கொடுத்துவிட்டே யுன்கடன் முடித்திடாமல்
மெள்ளவிவ் விருள்நேரத்தில் வேகவைத் திடுதற்குக்
கள்ளமா யெனதுகாவற் கடந்துநீ வரலாமோடி.



## அரிச்சந்திரன் சொல் தரு.

[வாடிக்கிற்பதேது காரணமோ]

என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-ரூம்பைதாளம்.

பல்லவி.

கள்ளி நீயும் யாருநர் பேர்சொல்லடி எந்தன்
காவலைக் கடந்துவுள்ளே மேவிப்பிணஞ் சுடுகின்ற
கள்ளி நீயும் யாருநர் பேர்சொல்லடி.

அநுபல்லவி.

கொள்ளிவைத்தா யோடியெனக் குள்ளபணந்தா-நீசி
நீசி நீசி நீசி உந்தன்
பிள்ளையைச்சுடாதேயிதோ தள்ளிவிடுகிறேன்பாராய் (கள்)

மகனே மகனேயென்று மிகவழுகிற-ஜாலி
ஜாலி ஜாலி ஜாலி இங்கே
தகனஞ்செய்யாதேயிப்போ தகனுவாயடிகொடுங் (கள்)

பிரட்டும்பூ தங்களுடன் அாட்டும்பேய்களை-யேய்த்து
ஏய்த்து ஏய்த்து ஏய்த்து இங்கே
திருட்டுத்தனமாய்வந்து இருட்டினிற்பிணஞ்சுடுங் (கள்)

கட்டைமுட்டை களெடுத்துச் சுட்டிடவுனக்குத்-தானே
தானே தானே தானே இங்கே
திட்டஞ்செய்ததாரடிநா னெட்டியுதைக்கிறேன்பாராய் (கள்)

(அரி-வ-ம்.) ஆ-ஆ இவ்வர்த்தராத்திரிவேளையில் எனதுத் திரவில்லாமற் பேய்பூதமுதலானவைவாழுஞ் சுடலைக்குள் வந்து எனக்குச் செல்லவேண்டிய(வாய்க்கரிசி-முழத்துண்டு-காற்பணம்) முதலானவை கொடாமல் மகனே மகனேயென்று கதறித் திருட்டுத்தனமாய்ப் பிரேதஞ்சுடவந்த கள்ளி யோ எந்தவூர் உனது நாமதேயம் யாது யாவருத்திரனின்பேரில் இங்குற்ற கட்டைமுட்டைகளை யெடுத்துப் பிணஞ்சுடுகின்றனை அடி-துஷ்டை மயானகாவலனாகிய யானிருக்கின்றேனென்பது உனக்குத் தெரியாதா என் காவலைக்கடந்து உள்ளேவந்து இவ்வித அக்கிரமஞ்செய்யலாமா நீயெனதனுமதியின்றி யிங்கு தகனஞ்செய்ய எத்தனித்தமையால்

இதோ இந்தப்பிரேதத்தைக் காலாலுதைத்துத்தள்ளி விடுகின்றேன் ரிந்தப் பகதூர்.

சந்திரமதி விருத்தம்.

கருத்தினிற் கோபம்வேண்டாங் காவலர் வேந்தே பாலன்
விரித்திடு படத்தைக்கொண்ட விஷமுள பாம்பினாலே
மரித்தனன் காட்டுக்குள்ளே மங்கைநா னெடுத்துக்கொண்டு
ஒருத்தியாய் வந்தேன்காவ லுண்டெனத் தெரிந்திலேனே.

---

## சந்திரமதிசொல் தரு.

[அடிஎன்மானுன்னைக்கலைபினி யாகிலுமென்னையாளையா]
என்ற கீதாமிர்தசாரத்தின் வர்ணமெட்டு.
இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பாவிநானிங்கே காவலுண்டென்று
பக்குவமறியேனையா
மேவுமிருளிற் கூவிமகனை
வேகவைக்கவந்தேனையா (பாவி)
விதமுமின்னதென் றிதயமறிந்தால்
மீறவென்மனம்நாடுமோ
உதவியிருந்தாற் சுதனைத்தூக்கிநான்
ஒண்டியாய்வரக்கூடுமோ (பாவி)
கட்டையில்வைத்துச் சுட்டமகனைக்
காலினுலெட்டியுதைத்தயே
திட்டையாகவே மூட்டையடுக்கிச்
செம்மைசெய்ததைச்சிதைத்தயே (பாவி)
யாருமற்றவன் ஊருமற்றவள்
யானென்றுனக்குத்தோணுமே
காரியம்நிறை வேறும்படியாய்க்
கட்டளையிடவேணுமே (பாவி)

---

(சந்-வ-ம்.) ஆ ஆ சுடலைக்காவலா காட்டிலிறந்த மகனை மயா னத்திற் கொண்டுவந்து வைத்துச் சுடவந்தேன் ஆனால் நீயிங்கு



காவலாயிருக்கின்றாயென்றும் உனக்கறிக்கைசெய்து சுடவேண்டு மென்றும் யானறிந்திலேன் அப்படி யறிந்திருப்பேனாகில் அக்கிர மமான காரியத்தைச் செய்ய என்மனந் துணியாது இவ்விபரத்தை ச் சொல்வதற்காவது எனக்குரித்தாகிய மனுஷாளுதவியிருக்கும் பக்ஷத்தில் இவ்வர்த்தராத்திரிவேளையில் இறந்தபிள்ளையை நானே சுமந்துகொண்டு தனிமையாய்வந்து சுடுவேனா ஆ ஆ யானகாவ லா கட்டையில் வெந்தபிள்ளையைக் காலாலுதைத்துத்தள்ளி ஒழு ங்காயடுக்கிய கட்டைமுட்டைகளையுங் கலைத்துவிட்டனையே ஆ ஆ யான் ஊரும் உறவினருமற்ற அனாதை எனக்கு யாதொரு திக்கு மில்லையாதலால் இப்பொழுது தகனஞ்செய்து கொள்ளும்படி யுத் திரவு கொடுக்கவேண்டுமப்பா.

அரிச்சந்திரன் விருத்தம்.

பக்குவ மாகவிங்கே பாலனை நெருப்பில்வைத்தே
அக்கிர மத்தைச்செய்தா யிதட்டிநான் கேட்டதற்குத்
துக்கமு மிகவுங்கொண்டு துடிதுடித் தழுதயாதுந்
திக்கிலை யென்றாய்பெண்ணே சித்தமு மிளகலாச்சே.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

[பெண்ணேயுனக்கென்னகோபமடி]
என்ற வீராநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

திக்கில்லையென்றுசொன்ன மானே மடமானே-நீயுஞ்
செய்தகுற்றமதனை நான்பொறுத்தேனே (திக்)
காப்பனுமுடன்முழத் துண்டு இன்னுங்
காவலனுக்குளவாய்க் கரிசியுமுண்டு (திக்)
கொடுத்துவிட்டுமுன்போல நீயே பெண்ணேநீயே-நல்ல
குணமுடனேமகனைச் சுட்டுக்கொள்வாயே. (திக்)

---

(அரி-வ-ம்.) ஹே மாதே நீதிக்கில்லாத அனாதையென்று சொன்ன நிமித்தம் எனதுத்திரவின்றியில் மயானத்திலுள்ள கட்

டை முட்டைகளை யெடுத்து அக்கிரமாய்ப் பிரேதஞ் சுடவாரம் பித்த குற்றத்தை மன்னித்துக்கொண்டேன் நல்லது இப்போது வாய்க்கரிசியும் முழத்துண்டும் காற்பணமும் என்னிடத்திற் கொடுத்துவிட்டு உன்மகனைத் தகனஞ்செய்து கொள்வாயாக.

சந்திரமதி விருத்தம்.

பித்தா ... வேண்டிக்கொண்டே னதையுண ராமற்காசு
கொடுத்திட வேணுமென்று கூறுகின் றுயேயப்பா
தடுத்தனக் கினிநான்சொல்லுஞ் சங்கதி வேறுமுண்டோ
எடுத்தனக் களிப்பதற்கே யில்லையென் கையிற்றனே.

---

சந்திரமதிசொல் தரு.

[விரசமானவார்த்தைவேண்டாம்விட்டுவிடடா]

என்ற ட்ராமாப்பதத்தின் வர்னமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னநான்செய்வேன் கையிலேது மில்லையேயையா.

அநுபல்லவி

பன்னகத்துக் கென்மகனைப்
பறிகொடுத்தேனே
உன்னிமனம் பின்னமாகி
உனையடுத்தேனே (என்)

எனதுகையிற் றனமிருந்தால்
இனங்கள்கூடுவார்
வினவியபோற் கனமுழக்க
மேழம்போடுவார் (என்)

நீதயவாய்க் காதலனை
நீற்றுவாயென்று
பாதமதைப் பேதமின்றிப்
பணிகிறேனின்று (என்)

---

(சந்-வ-ம்.) ஆஆ மயானகாவலா பாம்புகடித்திறந்த என் பிள்ளையைச் சுடுவதற்காக உனக்குக்கொடுக்க என்கையிலொரு



காசுகூடக் கிடைப்பதே அப்படி யென்கையிற் பொருளிருக்கும் பக்ஷத்தில் என்கூடப் பந்துஜனங்கள் கூடிவரமாட்டார்களாமகனை யெடுத்துவரப் பல்லக்குக் கிடைக்காதா மேழவாத்தியம் போடமாட்டார்களா இவ்விடத்திலுள்ள குறைக்கொள்ளிக் கட்டைமுட்டைகளை யெடுத்துச் சுடுதற்கு என்மனம் ஒப்புமா ... என்னை வாய்க்கரிசி முழத்துண்டு காற்பணங் கே... ன்று ... ட்கின்றனையே யானெங்கிருந்து கொடுப்பேன் ஆஆ ஈமக்காவலா நீ தயவுசெய்து எப்படியாவது என்மகனைத் தகனஞ்செய்து வைக்கவேண்டும் இதோ வுனது பாதத்தையாவது பிடிக்கின்றேன் மயானகாவலா.

---

அரிச்சந்திரன்சொல் தரு.

[அகிலப்ரபஞ்சமும் உம்மாலேநான் ஆண்டுவாரேன்மந்திரி]

என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-இந்துஸ்தானி ஆதி.

கண்ணி.

வணங்காதேயெனக்குள வாய்க்கரிசியைமட்டும்
வாங்காமல்விடுவேனோ-காற்
பணமுடன்முழத்துண்டு குணமாயெடுத்துக்கொண்டு
பறந்துவருவாய்மானே.

---

(அரி-வம்.) ஹே மாதே நீசனாகிய என்னை நீ வணங்குவது சரியன்று யானோ இச்சுடலைக்கதிகாரியான வீரவாகுத் தோட்டிக் கடிமைப்பட்டவன் எனக்குரியது வாய்க்கரிசி நீ யேழையென்று சொல்வதால் வாய்க்கரிசியை நிறுத்திக்கொண்டு எஜமானுக்குரிய முழத்துண்டுங் காற்பணமுமாவது கொண்டுவந்துகொடுத்துவிட்டு உன்மகனைத் தகனஞ்செய்துகொள் மானே:

சந்திரமதி விருத்தம்.

திரமுடன் சுடலைகாக்குந் தீரனே யீரமில்லா
வரமர மதனில்நாளும் வந்திடு மோயாதொன்றுங்
கரமதி லில்லையென்றுங் கன்னிநா னேழையென்றுந்
தரமதா யுனக்குமுன்னே சாற்றினேன் சாற்றினேனே.

---

## சந்திரமதிசொல் தரு.

[மோகமுனேதாளலோ முத்துப்பேட்டோராஜுசாமி]

என்ற ஜாவளியின் வர்னமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சொன்னதெல்லா முன்னிடமற்
சும்மாவாது செய்கிறுயே (சொ)

அநுபல்லவி.

என்னிடத்திற் பொன்னிருந்தால்
இதுவரையுந்தடையேது
கன்னிகைநான் உன்னடிமை
கட்டளை தருவாயிப்போது (சொன்)

(சந்-வ-ம்.) ஆஆ மயானகாவலா யான் சொல்லிக்கொண்ட பரிதாபங்களெல்லாஞ் செவிமடுக்கக் கேட்டும் கொஞ்சமேனும் நெஞ்சமிளகாமல் இன்னும் பணமும் முழச்சேலையுங் கொண்டுவாவென்று வற்புறுத்துகின்றனையே இது தர்மமா ஆஆ என்கையிற் பொருளிருந்தால் இதுவரையிலும் நீகேட்ட வஸ்துக்களைச் சவதரித்துக் கொடாமலிருப்பேனு ஆஆ சுடலைக்காவலா யானுனக் கடிமையாதலால் என்மீது கிருபைகூர்ந்து தகனஞ்செய்ய விடையளிப்பாயாக.

பொது விருத்தம்.

பிணமது சுடுவதற்குப் பேசியே கையிலேதும்
பணமில்லை யென்றுசொன்ன பாவையின் கழுத்திற்றாலி
குணமுடன் மின்னக்கண்ட கோவரிச் சந்த்ரனந்த
க்ஷணமிகு கோபங்கொண்டு சாற்றுவான் சாற்றுவானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

கையினி லில்லையென்று கபடமாய்ப் பசப்பியிந்தப்
பையனைச் சுடுவதற்குப் பக்குவஞ் செய்வாயென்று
பொய்யுரை செய்தாயுன்னைப் போலுல கினிலேஜாலத்
தையலு மீண்டோவுந்தன் சங்கதி தெரிந்திட்டேனே.



## அரிச்சந்திரன்சொல் தரு.

[வாடியிங்குநீவாடி நான் வந்தனனுந்தனைத்தேடி]

என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-சகானு-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

என்னசொல்கிறுயடி ஜாலி-உன்
எத்தையறிவேனடி நீலி
பொன்னில்லையென்றுசொன்னுய் கேலி-இதோ
மின்னுதேயுன்கழுத்திற் றாலி
நன்னயமாகவிற்றுக் கூலி-இப்ப
நல்குவாயடிநிரு மூலி (என்ன)

(அரி-வ-ம்.) ஆஆ பெண்ணே உன்னைப்போல இந்திரஜால மகேந்திரஜால தந்திர மந்திர சாமர்த்தியவித்தை கற்றவர்களை யாரிதுவரையிலுங் கண்டிலேன் பார் ஏதோ பிள்ளையிறந்து போனுனென்று அழுகின்றனை அவனைத் தகனஞ்செய்வதற்குக் கூலிகொடுக்க வகையில்லையென்று அடிக்கடி காலில் விழுகின்றனையே இது நல்லவிந்தைதான் பார் இதோ வுன்கழுத்தில் விலைமதிக்கத்தகாத திருமங்கிலியம் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதே அதை விற்றுக் கூலி கொடுப்பதற்கு என்னதடையிருக்கின்றது பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

கடவுளே கைலைவாழுங் கர்த்தனே யுமைபங்காளா
புடவியில் யாவருக்கும் புலப்படா ரகசியத்தைச்
சுடலையிற் பிணங்கள்சுட்டுச் சொற்படி யேவல்கேட்குங்
கடையனும் புலையன்கண்ணுற் கண்டிடச் செய்திட்டாயே.

## சந்திரமதிசொல் தரு.

[மல்லிகைமுல்லைமலரையிறைத்தகையாலே]

என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

ஐயையோகைலைவாசமுரனேயிதுநீதி தானே-இந்த
வையகத்திலிற்கற்பு வழுவிநடந்தவள் நானே

புருஷனுக்கன்றியிப் புவியிலுள்ளோர்யார்க்கும் ஐயோ-எந்தன்
திருமங்கிலியங்காணத் தெரியாதென்றுசொன்னதுபொய்யோ
அய்யோத்திமாநக ரரிச்சந்த்ரவேல்கண்ட தாலி-இந்த
வெய்யபுலையன்கண்டு விளைவுகிறானையோ கேலி
மறையவர்களாலாசிர் வாதபலம்பெற்ற தாலி-நீசப்
பறையன்கண்ணாற்கண்டு பண்ணுகிறானேயோ கேலி
பாலகனைக்கொடும் பாம்புகடித்ததி னாலே-இந்தக்
கோலம்விளைந்தே குறைகளுண்டாச்சேமென் மேலே
நீதிதவிர்ந்தோமோ நீசப்பறையன்கண் ணாலே-எந்தன்
ஜோதிமங்கிலியத்தின் சொருபங்கண்டான்மன்னன்போலே
மன்னவனைப்பிரிந்து மைந்தனையுமிழந்தேன் ஈசா-இன்னும்
என்னபிழைவருமோ கன்னியறியேனுமை நேசா

---

(சந்-வ-ம்.) ஆஆ ஜெகதீசா எனது தந்தையாகிய மதிசயம காராஜனுக்கு ஆதியில் நீகொடுத்த வரப்பிரசாதப்படி எனது பர்த்தாவான அரிச்சந்திரமகாராஜனையன்றி மற்றவர்கள் கண்களுக்குப் புலப்படாததும் வேதியர் முதலான பெரியோர்களா லாசீர்வதிக்கப் பெற்றதுமான எனது திருமங்கலியத்தைப் புலையன் கண்ணிற் கண்டு பரிகாசஞ்செய்யும்படியாகிவிட்டதே ஆஆ ஒரு வேளை யெனது பதிவிரதாதர்மத்துக்கு இன்றுடன் பங்கம்நேர்ந்து விட்டதோ அல்லது நீதிதவறிநடந்தோமோ தெரியவில்லையே ஆஆ எனது தனயனாகிய தேவதாசன் பாம்பாற்கடியுண்டிறந்ததினிமித்தந் தகனஞ்செய்யும்பொருட்டு இச்சுடலைக்கு வந்ததினாலல்லவோ இவ்வித சம்பவங்கள்நேரிட்டது ஆஆ எனது மன்னவனையும் பிரிந்து மைந்தனையுமிழந்து தேவரகசியமான சங்கதியும் வெளியாகி விட்டதே ஆஆ இன்னும் என்னென்ன விபத்துகள் நேரிடுமோ தெரியவில்லையே இனி யென்செய்வேன்.

---

பொது விருத்தம்.

இதுவுமென்ன விந்தையதா யிருக்குதையோ
இவளுரைத்த பரிதாப வார்த்தைதன்னை
மதிதனிலே யாராக்ஷி செய்தாலிந்த
மாதெனது மனைவிசந்த்ர மதியைப்போலுஞ்



274

சதியாலத் தாலிறந்த பாலன்தேவ
தாசன்போ லுங்காணப் படுகுதென்று
பதியிழந்த அரிச்சந்த்ர மன்னன்கண்டு
பதறுவான் கீழ்விழுந்து கதறுவானே.

---

## அரிச்சந்திரன் தீர்க்காலோசனை.

ஆஆ என்ன விந்தையாயிருக்கின்றது இந்தமங்கையானவள் இதுவரையும் பாஷித்த விசேஷங்களை யாராக்ஷிசெய்யுமிடத்து இவள் எனது மனைவியாகிய சந்திரமதியைப்போலும் பாம்புகடித்திறந்திருப்பவன் எனது ஏகபுத்திரனாகிய தேவதாசனைப்போலுங் காணப்படுகின்றதே ஆஆ எனது கண்மணி மகனுமிறந்து விட்டானா ஆஆ ஜெகதீசா இனிமேலென்னசெய்வேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பொய்புரைத் திடுதற்குள்ளம் பொருந்திடா மற்படிக்கு
வையக மிழந்தேன்பாலா மாநக ரிழந்தேனப்பா
கையினி லுள்ளபொன்னுங் கண்மணி யிழந்ததல்லால்
ஐயையோ வுன்னைக்கூட யானிழந் திடவுமாச்சே.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

[மன்னன்வரக்காணேனே யென்னநான்செய்குவேன்]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

ஐயையோமகனேயினி யானென்னசெய்வேனடா

அநுபல்லவி.

வையகத்தையாள்வாயென்று மகிழ்வுகொண்டிருந்தேனே (ஐயை)

சரணங்கள்.

மகிமைசேர்திரிசங்கு மகனாகநான்பிறந்தேன்
தகைமையுடனயோத்தித் தலைவனெனச்சிறந்தேன் (ஐயை)
என்வயற்றில்நீபிறந்து என்னசுகங்கண்டாயடா
பன்னகத்தினால்மடிந்து பாரசுகங்கொண்டாயோடா (ஐயை)

பாம்புகடிக்கும்போதிலே பதறியுயிர்விட்டாயோ
தேம்பியேயழுதேயுமா தேவர்க்கடிமைப்பட்டாயோ (ஐயை)
சுட்டகட்டையோவுனக்குக் கிட்டினதடாசுதனே
எட்டியேகாலாலுதைத்து விட்டேனடாமன்மதனே (ஐயை)

(அரி-வ-ம்.) ஆஆ தனையா நீயென்போல வையகத்தை யரசாள்வாயென்று மகிழ்ச்சியாயிருந்தேனே அங்ஙனமிருக்கப் பாம்பாற்கடியுண்டு மாண்டுபோகவா உனக்கு விதிவச மேற்பட்டது ஆஆ அயோத்தியாபுரிக்கிறைவனாகிய திரிசங்குமகாராஜா வயற்றிற் பிறந்து நீதிவழுவாத நிருபனென்னும் பெருமையைப்பெற்றேனே நீயென்வயற்றிலுதித்து என்னசுகத்தையடைந்தனை ஆஆ உன்னைப் பாம்புகடித்தபோது பதைபதைத்து ஜீவனைவிட்டனையோ அல்லது என்னை நினைந்து தேம்பியழுது இனிமேற் றந்தையைக்காணப்போகின்ற தில்லையென்றன்னிச் சிவபிரான் றிருவடிக்கடிமைப் பட்டனையோ தெரியவில்லையே ஆஆ சுடலையிற்சுட்டெரிந்த குறைக்கொள்ளிமுதலான கட்டைமுட்டைகளா வுனக்குக்கிடைக்கவேண்டும் ஆஆமகனே நீயென்றறியாமற் பாவியாகிய யானுன்னைக்காலாலுதைத்துத்தள்ளி விட்டேனேஇனிமேலுன்னையெப்போதடா காணுவேன் கண்மணி.

அரிச்சந்திரன் விருத்தம்.

அடிக்கடி யருகில்வந்தென் னையனே யென்றுசொல்லி
மடிக்குளே வீற்றிருந்து மதுரமாய் மொழிவதெல்லாம்
நொடிக்குளே மறைந்துவாயில் நுரையது தள்ளப்பாம்பு
கடிக்கவுங் கடவுள்செய்த கற்பனை தானோபாலா.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[கைசஜாதடாலாதியா மைனஜாவுரேசையா]
என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

பல்லவி.

உன்னையிழந்தென்னவிதம் உய்குவேன்டாமகனே

அநுபல்லவி.

மன்னர்கள்சிகாமணியே என்னுடையகண்மணியே (உன்னை)





சரணங்கள்.

காலகண்டையர்க்கு விற்ற காலமதிலென்முன்னீயே
சீலமாய்ப்போய்வாரேனென்று செப்பிமகிழ்வாய்வந்தாயே (உன்னை)

அன்றுகண்டநானுமுன்னை யின்றுகாணலாச்சுதடா
நன்றுபெறலாமென்றவென் நாட்டமதுபோச்சுதடா (உன்னை)

மணமாயனுப்பியுன்னைப் பிணமாகக்கண்டேனடா
கணமாகிலுமகலாக் கவலையுங்கொண்டேனடா (உன்னை)

(அரி-வ-ம்.) ஆஆ தனையா உன்னைப்பறிகொடுத்து விட்டு யா னெவ்விதமா யுயிர் வாழ்ந்திருப்பேன் ஆஆ காலகண்டையருக்கு விற்றகாலத்திற் பிதா போய்வருகின்றேனென்று விடைபெற்று வந்தனையே ஆஆ அன்று பார்த்த வுன்னை யின்று பார்க்கநேரிட் டும் பிணமாகக்கண்டேனேயன்றி சுகமாகக் காணவில்லையே ஆஆ உன்னாலெனது சூரியகுலந்தழைத்தோங்குமென் றெண்ணியிருந்த வெண்ணமெல்லாம் மண்ணாய்ப்போய்விட்டதே ஆஆ ஆருத்தய ரத்திற்காளாக்கி வைத்துவிட்டனையே ஆஆ கண்மணி இனியென் செய்வேன்.

பொது விருத்தம்.

என்னவிந்தை யிதுநேரம் வரையில்நானும்
இவரையொரு புலையனென்றே யெண்ணலானேன்
சொன்னமொழி யாலெனது நாதன்போலே
தோணுதில்லா விடிற்புலி காணப்போமோ
மன்னவனை வைதுவிட்டே னையோவிந்த
பாபத் திற்கென்ன செய்வேனென்று
தன்னைநொந்து கொண்டுசந்த்ர மதியுந்துக்கந்
தணிகுவாளினவமனந் துணிகுவாளே.

சந்திரமதி தீர்க்காலோசனை.

ஆஆ என்னவிந்தையாயிருக்கின்றது யானிதுநேரபரியந்தம் இவரை நீசப்புலையனென்றெண்ணி யிருந்தேன் இப்போதிவர் பரி தாபமாய் மொழிந்தகாரணங்களால் எனது பர்த்தாவைப்போல காணப்படுகின்றதே அப்படியில்லாவிடில் எனது திருமங்கிலியத்

தைக் காணமுடியாதே ஆஆ யானிவரைப் பலவாறு தூஷித்து விட்டேனே இந்தப்பாபத்திற் கென்செய்வேன் நல்லது இவர் நீசக்கோலத்துடன் சுடலைகாக்கவந்த விர்த்தாந்தத்தை விசாரிக்கின்றேனிப்போது.

சந்திரமதி விருத்தம்.

பொன்னகரோர்கள்வாழ்த்தப் பூவுளோர் பணிந்துபோற்றச்
சொன்னசொற் றவறிடாத துரையெனப் பெயர்வகித்து
நன்னய முடனயோத்தி நகரினை யரசுசெய்த
மன்னவா வுமதுசெம்பொன் மலரடி வணங்கினேனே.

சந்திரமதிசொல் தரு.

[மன்னுநீர்மனஞ்சோர்ந்து வாடநான்சகிப்பேனோ]
என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத் தருவின் வர்ணமெட்டு.
இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்னுவுமக்கிவ்விதி வந்ததறிகிலேனே

அநுபல்லவி.

முன்னுமெங்களைவிற்ற பின்னால்நடந்ததென்ன (மன்னு)

சரணம்.

நீசத்தத்துவம்பெற்று நீருஞ்சுடலையுற்று
வாசஞ்செய்குவதேது மர்மமின்னதென்றோதும் (மன்னு)

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணகாந்தா எங்களைக் காலகண்டையருக்கு விற்றுப் பிரிந்தபின்னால் நடந்தவிர்த்தாந்தங்கள் யாதொன்றுமெனக்குத் தெரியாதாகையால் சத்தியந்தவறாத தங்களுக்கு இப்பேர்க்கொத்த நீசத்தத்துவங் கிடைத்துச் சுடலைகாக்கவந்த காரணம்யாது ப்ராணநாத.

அரிச்சந்திரன் விருத்தம்.

அற்புதக் குயிலேயெந்த னாசைநா யகியேநல்ல
கற்பினில் வழுவிலாத கன்னிரத் தினமேதேனே
சொற்பழு தில்லாமானே சொர்ணமே பின்னால்நேர்ந்த
சற்பனை தன்னையெவ்வாறு சாற்றிடத் துணிவேன்பெண்ணே.



அரிச்சந்திரன்சொல் தரு.

[மாதேநீயென்னோடுகூட வனத்துக்கேகலாமோடி]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-இந்துஸ்தானிகாபி-ஏகதாளம்.

பல்லவி.

மங்கையேயென்சங்கடத்தை வாய்திறந்தெப்படிச்சொல்வேன்

அநுபல்லவி.

உங்களைவிற்றபின்னாலே உற்றசேதிகேள்மென்மேலே (மங்)

சரணங்கள்.

நாடறியமுனிவர்க்கு நன்குகடன்றீர்த்தேன்பெண்ணே
கூடவந்ததரகருங் கூலிகேட்டாரடிகண்ணே (மங்)

கொடுக்கவகையில்லாமற் குணமதுகெட்டேனடி
அடுத்துப்பறையனுக்கு அடிமைநான்பட்டேனடி (மங்)

அடிமையும்பட்டுநானே அவன்சொற்படியேமானே
சுடலையுங்காக்கவிங்கே தோன்றினேனடியேதேனே (மங்)

என்னுடையவரலாறு இதுதானறிந்துகொள்வாய்
அன்னமேநானென்னசெய்வேன் அகமெலிவெல்லாந்தள்வாய் (மங்)

(அரி-வ-ம்) ஆஆ ப்ராணசகி யானுங்களைவிற்று விஸ்வாமித்திரர் கடனைத்தீர்த்த பின்னர் கூடவந்த நக்ஷத்திரத்தரகர் கூலிகேட்டார் அவருக்குக்கொடுக்க வகையில்லாமல் இக்காசியிலுற்ற வீரவாகுவென்னுஞ் சுடலைப்புலையனுக்கடிமைப்பட்டுத் தரகர்கூலிக் கடனைத்தீர்த்து வீரவாகு சொற்படி யிந்த மயானங்காத்துக்கொண்டிருக்கின்றேன் இதுதான் எனது வரலாறு பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

வாசவன் முதல்விண்ணோர்கள் மதித்தனு தினமும்வாழ்த்தத்
தேசமன் னவர்களெல்லாந் திருமுடி வணங்கிப்போற்றக்
கோசலை நாட்டையாண்ட கொற்றவ னென்றெண்ணாமல்
நீசனு மும்மையிந்த நிலைமையில் வைத்திட்டானே.

## சந்திரமதிசொல் தரு.

[அடிபாவிநினைந்துவெட்டக்கைவருமோ இந்தப்
பாதகத்தைப்பார்க்கவோநான்காத்திருந்தேன்]

என்ற கருநாடகஅரிச்சந்திரநாடகத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

| | |
|---|---|
| துரையேயுமக்கிக்கெதி | வரலாமா-பிணஞ் |
| சுடும்படிவேலையவன் | றரலாமா |
| தலைவர்கள்புடைசூழுஞ் | சபைநாதா-அந்தச் |
| சாம்புவனுக்குமைமைநன்றாய்த் | தெரியாதா |
| மன்னர்கள்முடிபட்ட | மலர்ப்பாதம்-இந்த |
| மயானத்தைச்சுற்றலாச்சோ | முனிபேதம் |
| செங்கோற்பிடித்தகையால் | மனம்வாடி-இங்கே |
| தீமூட்டும்படியாச்சோ | புகைமூடி |
| குடைநீழலிலிருந்த | குணபூமா-இந்தக் |
| கொள்கைக்காளாகினீரோ | முகசோமா |
| பார்க்கப்பார்க்கவெனக்குப் | பர்த்தாவே-மனம் |
| பதறுதென்செய்வேன்ப்ராண | கர்த்தாவே |

(சந்-வம்.) ஆஆ ப்ராணப்ரியா தங்களுக்கிப்போர் கொத்து விதிவரலாகுமா ஆஆ பாவியாகிய வீரவாகுவானவன் றங்களுக்கிந்த விவித்தமான வேலைகொடுக்கலாகுமா ஆஆ அந்தச் சண்டாளன்றங்கள் யோக்யதையறிய வில்லையா ஆஆ சிற்றரசர்களுடைய ரத்தினமகுடம்பட்டுத் தழும்பேறிய தங்கள்பாதமானது விஸ்வாமித்திரர் வஞ்சனையினுற் சுடலையிற்றிரியும்படியாகவும் செங்கோற்பிடித்த கரமானது பிணைப்புகைபடியத்தணல் மூட்டும்படியாகவும் நேர்ந்ததா ஆஆ எப்பொழுதும் மன்னவர்புடைசூழவும் பூச்சக்கரக்குடை கவியவும் சபைக்கு நடுநாயகமாகவு மிருப்பீர்களே இப்போதிந்தக் கர்மத்தொழிலுக்கா ளாகினீர்கள் ஆஆ தங்களைப் பார்க்கப்பார்க்க என் மனமானது அடிக்கின்றதே யென் செய்வேன் ப்ராணநாத.





## அரிச்சந்திரன்சொல் தரு.

[வந்தனமையா ஏனையா வந்தனமையா]

என்ற [illegible]ராமாத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-பியாகடை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எவரைவிட்டதடி விதிவசம் எவரைவிட்டதடி

அநுபல்லவி.

சிவனரிமல ரவனைவிட்டதோ
சிந்தையுருகாதே சந்திரமதியே (எவனை)

(அரி-வ-ம்.) ஆஆ எனது சிந்தைக்கிசைந்த சந்திரமதி விதிவசமானது யாவரை விட்டிருக்கின்றது பார் அப்பேர்க்கொத்த அரிகரப்ரம்மாதிகளை விட்டாலல்லவோ நம்மை விடப்போகின்றது நீயதைப்பற்றி விசனப்படவேண்டாம் பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

சாலவே மறையோர்வீட்டுத் தனையர்க ளுடனேயின்று
காலகண் டையருக்குக் காட்டினி லிலையுந்தெர்ப்பை
கோலுடன் மற்றதெல்லாங் கொண்டுவந் திடவேசென்ற
பாலகன் பாம்புதீண்டிப் பதைத்துயிர் மடிந்தானையா.

## சந்திரமதிசொல் தரு.

[வேதமுடிவிலிசை யானவிஸ்வாமித்ர ரிஷியே]

என்ற கருநாடக அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

நடந்தவிபரமிது
ஆச்சே நேரம்
மடிந்துவெகுநேரமும்
ஆச்சே-இனி

விடிந்திடிலெங்கன்மீது
பேச்சே யெங்கும்
தொடர்ந்திடுமேவீண்வசைப்
பேச்சே

புத்திமிகுந்தமன்னு
மீது இனி
செத்தசுதனையினி
மீது இந்த

அர்த்தராத்திரிதன்னில் வைத்திருப்பதற்கேயா
காது-ஒரு போதும்.
மகனையெடுத்திப்போதே தகனஞ்செய்யும்வழியைப்
பாரும்-வழு பாரும் இனி
அகமெலிவதினுலே சுகமில்லைமனமது
தேருந்து-யர் மாறும்.

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணகாந்தா தனையனிறந்து வெகுநேரமாயிற்று அன்றியும் விடிவதற்குள்ளாகத் தகனஞ்செய்துவருவதாகக் காலகண்டையரிடம் விடைபெற்று வந்திருக்கின்றேன் ஒரு சமயம் விடிந்துவிடும்பக்ஷத்தில் என்வாக்குப் பழுதாகி யேசுதற்கிடமாயிருக்கும் தாங்கள் மைந்தனிறந்ததையெண்ணிச் சிந்தை கலங்கிக்கொண்டிருப்பதிற் பிரயோஜனமில்லையாதலால் மனதைத்திடப்படுத்திக்கொண்டு இறந்தமகனை யெடுத்துத் தகனஞ்செய்யவேண்டிய வழியைப்பாருங்கள் நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

மனைவிநீ சொன்னவார்த்தை மறுத்திடா மற்படிக்குத்
தனையனை யெடுத்திப்போது தகனமுஞ் செய்வேனுகில்
எனையெஜ மான்றுரோக மெட்டியே பிடிக்குமென்று
தினையள வேனுமெண்ணஞ் சிந்தையி லில்லையோடி.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[சீராரவையில்வளர் சிறந்தோர்களேவந்தனம்]
என்ற நவரசலீலாவமிர்தஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-சாபு.

பல்லவி.

பெண்ணேசும்மாநானே பிணஞ்சுடவேமாட்டேனே

அநுபல்லவி.

வண்ணப்பணமுந்துண்டு வந்தாற்காரியமுண்டு (பெண்)

சரணங்கள்.

பொய்புரைக்கவொண்ணுமற் புவிமுதலாய்த்தோற்றேனே
வையமிகழும்படி மயானமுங்காத்தேனே (பெண்)





மற்பவரிடஞ்சென்று மர்மமெல்லாம்புகன்று
பறையனுக்களித்திடும் பரிசுவாங்கிவாவின்று (பெண்)

(அரி-வ-ம்.) ஆ ஆ சந்திரமதி உனது சொற்படி நமது பிள்ளையென்ற அபிமானத்தைவகித்து யானிலவசமாகப் பிணஞ்சுடமாட்டேன் ஏனென்றால் ஒருபொய்யுரைப்பதற்கு மனஞ்சம்மதியாமல் நாடுநகரமுதலான சம்பத்துக்களையுமிழந்து உங்களையுந்தோற்றுப் பறையனுக்கடிமைப்பட்டு உலகுநகைக்கும்படி சுடலையுங் காத்துக்கொண்டிருக்கின்றேனே அங்ஙனமிருக்க எஜமான்றுரோகஞ்செய்ய மனமொப்புவேனு ஒருக்காலுமில்லையாதலால் நீ யிப்பொழுதே காலகண்டையரிடஞ்சென்று வீரவாகுக்குச் செல்லவேண்டிய முழத்துண்டுங் காற்பணமும் வாங்கிவந்து கொடுப்பாயாகில் உன் மைந்தனைத் தகனஞ்செய்கின்றேன்பெண்ணே சீக்கிரஞ்சென்றுவா

சந்திரமதி விருத்தம்.

புத்திரனோடுசென்ற பூசுரப் பாலர்வந்து
[illegible]த்தனன் பாம்பினாலே சேயனென் றுரைக்கக்கேட்டுச்
சத்தமிட் டழுததற்குத் தண்டமீண் டாகப்பேசிச்
சொத்தெலாம் போச்சுதென்று சொன்னவர் பொன்னீய்வாரோ.

## சந்திரமதிசொல் தரு.

[அருமைக்கண்மணியைக்காணேனே - யிந்த
ஆபத்துக்கென்செய்வேனே]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாபு.

கண்ணிகள்.

அந்தணர்கொடும்பாவி யாச்சே-அவர்
அன்பாய்க்கேளாரேயெந்தன் பேச்சை (அந்)

மைந்தனிறந்தானென்றேன் முன்னால்-பாவி
மனதிரங்காதிருந்தார் மன்னு (அந்)

அவரோஇதற்குப்பொருள் கொடுப்பார்-கேட்டால்
அதட்டிச்சினந்துமுக்கி கடுப்பார் (அந்)

குணமாகநான்சென்று தானே-கேட்டுக்
கொடுத்தால்வாங்கியேவரு வேனே (அந்)
பாலனைப்பார்த்துக்கொள்ளும் நாதா-நமது
பங்கினிற்றெய்வமிருந் காதா (அந்)

(சந்-வ-ம்.) ஆ ஆ ப்ராண்காந்தா நமது மைந்தன்கானகத்திற் ப்பாம்பு தீண்டியிறந்தானென்று நான்சேதிகேட்டு அழுதுகொண்டு காலகண்டையரிடத்திற் சொன்னவுடனே கொஞ்சமேனு மனதிரங்கவில்லையே அப்பேர்ப்பட்ட பாவியா என்வார்த்தைக்கிணங்கிப் பணமுந்துண்டுங் கொடுக்கப்போகின்றார் நல்லது நான் சென்று இதமானவார்த்தையாடிக் கேட்கின்றேன் கொடுத்தால் வாங்கி வருகின்றேன் அதுவரையினும் பாலனைப் பார்த்துக்கொள்ளுங்கள் ப்ராணநாத்.

(அரி-வ-ம்.) அப்படியே பார்த்துக்கொள்கின்றேன் சீக்கிரஞ் சென்றுவா பெண்ணே.

(சந்-வ-ம்.) அப்படியே சென்றுவருகின்றேன் ப்ரபு.

பொது விருத்தம்.

என்சபதம் நிறைவேறு திருப்பதாலே
யிவ்விருளில் நித்திரையும் வரவேயில்லை
புஞ்சவய துப்பயலைச் சர்ப்பந்தீண்டப்
பகலில்முடித் ததின்பின்று மென்றைச்சென்று
வஞ்சமுனி மனக்கண்ணு லனைத்தும்பார்த்து
மாதுவரும் வழியிலவ்வூர் மன்னன்சேயை
நெஞ்சிளகாக் கள்வர்கொன்று போட்டுவிட்ட
நேர்மைகண்டே யங்குசெல்ல நினைத்திட்டானே.

## விஸ்வாமித்திரர் துபாலோசனை.

ஆ ஆ எனது சபதமானது நிறைவேறுகிருக்கின்ற நிமித்தம் இவ்வர்த்த ராத்திரிவேளையில் நித்திரைகூட வரவில்லையே யென் செய்கின்றது நல்லது இன்று பகலில் அரிச்சந்திரன் மகனாகிய தேவதாசன் றெர்ப்பைக்குப்போனவிடத்திற் காளசர்ப்பத்தையே





விக் கடிக்கும்படி செய்தேனே அதன்பின்னால் நடந்த விர்த்தாந் தங்களைப்பற்றி ஞானதிருஷ்டியாற் பார்க்கின்றே னிப்போதி ஆது தேவதாசன் பாம்புக்கடியினலிறந்து விட்டான் அவனைச் சந் திரமதியானவள் சுடலையிலுள்ள தன் பர்த்தாவாகிய அரிச்சந்திர னுடைய காவலில்வைத்துவிட்டு வீரவாகுக்குச்செல்லவேண்டியமு முத்துண்டுங் காற்பணமும் வாங்கிப்போவதற்காகக் காலகண்டை யனைத்தேடிக் காசிக்குள் வருகின்றாள் அவள் வருகின்ற வழியில் அன்னகர்க்காவலனாகிய காசிராஜனுடைய மைந்தனைச் சில கள் வர்கள் கவர்ந்துவந்து ஆபரணங்களை யெடுத்துக்கொண்டு கழுத் தை முறித்துக் கொன்றுபோட்டிருக்கின்றார்கள் ஆகையால் யா னிப்பொழுதே காசிக்குச்சென்று இன்னும் என்னென்ன விப ரீதங்கள் விளையுமோ அதையுந் தெரிந்துகொண்டு எப்படியாவது சபதம் நிறைவேறும்படியானவழி தேடுகின்றே னிந்தப்பகதார் இதோ செல்கின்றேன் காசிக்கு.

## காசிமாநகரத்திற்கிறைவனாகிய காசிராஜன் முதலாவதுசபை.

பொது விருத்தம்.

சித்திரஞ்சேர் காசிநகர் மன்னன்றாங்குஞ்
 செயலறிந்த கள்வர்சிலர் மனைக்குட்சென்று
பத்தினியி னருகினிலே துயின்றசின்னப்
 பாலகனைக் கவர்ந்துகொண்டு வெளியேசெல்லுஞ்-
சத்தமதைக் கேட்டரச னெழுந்துகள்வர்
 சற்பனைசெய் தேகியதை யறிந்திடாமல்
நித்திரைகொள் ளாமையினால் நகர்சோதிக்க
 நேர்ந்திட்டான் கொலுச்சபையைச் சேர்ந்திட்டானே.

காசிராஜன் கொலுவுக்குவருந் தரு
[வேதமனத்தெஜா கிற்குணதோப்பு]
என்ற இந்துஸ்தானியின் வர்ன்மெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

காசிமாநகர்வாழ் ராஜன்கொலுவந்தான்

அநுபல்லவி.

தேசம்புகழத் திருமுடிதிகழக் (காசி)

சரணம்.

அர்த்தராத்திரியில் யாவருமுய்யச்
சுத்தமாய்நகரைச் சோதனைசெய்யக் (காசி)

(காசிராஜன் வசனம்) யாரடா இவ்விடத்திற் சேவகன்.

(சேவ-வ-ம்.) இதோ காத்துக்கொண்டிருக்கின்றேன்மகராஜ்

(காசி-வ-ம்.) நமதுபிரதானையதிசீக்கிரமழைத்துவருவாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே யழைத்துவருகின்றேன் மகராஜ்.

பொது விருத்தம்.

சுந்தரக் காசிமன்னன் துரிதமா யழைத்துக்கொண்டு
வந்திடும் படியுரைக்க வாசல்காத் திருந்தவீரன்
அந்தவே ளையிலேசென்றே யறிக்கையுஞ் செய்யக்கேட்ட
மந்திரி மனமகிழ்ந்து மன்னவன் முன்வந்தானே.

மந்திரி விருத்தம்.

ஈசனுர் செம்பொற்பாத மிறைஞ்சிடு நேமாபோற்றி
வாசவன் முதலோர்வாழ்த்து மங்கள சமுகாபோற்றி
தேசமெண் டிசைகொண்டாடுந் தீரகெம் பீராபோற்றி
நேசமாய்க் காசியாளு நிருபனே போற்றிபோற்றி.

மந்திரிசொல் தரு.

[மோகமுனேதாளலோரா முத்துப்பேட்டோராஜசாமி]

என்ற ஜாவளியின் வர்னமெட்டு

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தூங்குமென்னைக் கூட்டிவரச்
சொன்னதென்ன துரைமன்ன (தூ).



அநுபல்லவி.

நீங்களிந்த நேரமதில்
நித்திரைகொள்ளாமலெங்கும்
பாங்கிருளா யோங்குமிந்தப்
பாதிராத்திரிவேளையங்கு (தூங்கு)

(மந்திரி வசனம்.) ஆஆ மகராஜ் தாங்களிப்போது நித்திரை கொள்ளாமல் இக்கொடிய காரிருள்சூழ்ந்த அர்த்தராத்திரிவேளையில் நித்திரைசெய்துகொண்டிருந்த என்னை யழைத்துவரும்படி யாக்ஞாபித்தருளிய காரணம் யாது மகராஜ்.

காசிராஜன் விருத்தம்.

படுத்தயர்ந் துறங்குகின்ற பக்குவந் தனையிவ்வேளை
கெடுத்தழைத் திடவேசெய்தன்ன கிருத்தியம் யாதென்றென்னைத்
தடுத்துநீர் கேட்டதாலே சங்கதி சொல்வேன்மந்த்ரி
அடுத்துநாம் நகர்சோதிக்க வழைத்தன னறிகுவீரே.

காசிராஜன்சொல் தரு.

[தாணிபோதனலுவிண்டவோரா அலா]

என்ற ஜாவளியின் வர்னமெட்டு.

இராகம் - கமாஸ் - தாளம் - சாபு.

பல்லவி.

நித்திரையதுவர வில்லையே-மந்த்ரி
நித்திரையதுவர வில்லையே

அநுபல்லவி.

இத்தநிநகர்சுற்றி முற்றும்பரிசோதிப்போம் (நித்)

சரணம்

மனையிற்சப்தமுநான்கண்டேன் துயிலும்விண்டேன்
கனிவுடனகரைச்சோதனைசெய்ய மனங்கொண்டேன் (நித்)

(காசி-வ-ம்.) ஹே ப்ரதான் யானின்று நித்திரைசெய்துகொண்டிருக்கும்போது சற்றுநேரத்திற்கு முன்னே நமதந்தப்புரத்தில் ஓர்விதமான சப்தங்கேட்டுத் திடுக்கெனவிழித்தேன் அதுமுத

லெனக்குக் கொஞ்சமேனும் நித்திரைவரவில்லையாதலால் நாமிரு வரும் விடியும்வரை நகரைச்சுற்றிச் சோதனைசெய்து வருவோம் ப்ரதான்.

மந்திரி விருத்தம்.

மாமதன் றனைநிகர்த்த மன்னவா நகரில்நான்கு
சாமமும் பரிசோதிக்கத் தக்கதாய்க் காவலாட்கள்
நேமுகஞ் செய்துவிட்டேன் நிசியிருள் வேளை தன்னில்
நாமெதற் காகவீணாய் நடந்திட வேண்டும்பூமா.

(மந்-வ-ம்.) ஆஆ மகராஜ் நமது நகரத்தை நான்குசாமமும் பரிசோதனைசெய்து குற்றம்நடந்தாற் கண்டுபிடித்துக் கொண்டு வரும்படி தலையாரிகளை நியமித்திருக்கின்றேனே அங்ஙனமிருக்க நாமெதற்காக நிசிவேளையில் வீணுகச்சுற்றியலையவேண்டு மகராஜ்.

(காசி-வ-ம்.) ஆனால் நித்திரைவரும்வரையில் இச்சபாமண்டபத்திற் சம்பாஷித்துக்கொண்டிருப்போம் ப்ரதான்.

(மந்-வ-ம்,) அப்படியே செய்வோ மகராஜ்.

பொது விருத்தம்.

கள்வர்களன் றரண்மனையிற் கவர்ந்துசென்ற
காசிமன்னன் பாலகனைக் கொலைபுரிந்து
உள்ளபொருளத்தனையு மெடுத்துக்கொண்டு
ஊரருகிற் போட்டுவிட்டே யோடிப்போகக்
கொள்ளிவைக்க மூழ்த்துண்டும் பணமும்வாங்கக்
குணமுடனே யந்தவழி யாகத்தானே
மெள்ளவந்த சந்திரமா மதியுந்துக்கம்
மேவினள் வழிநடுகக் கூவினளே.

சந்திரமதி விருத்தம்.

பலபல தேசமன்னர் பணிந்திடப் புவியையாண்ட
வலமிகு மன்னனுக்கு மனைவியா யமைந்தென்னுச்சு
சிலவினுக் கொருகாசின்றித் திகைத்துளம் வருந்தலானேன்
உலகினி லென்னைப்போலே யுண்டுமோ பாவியையோ.



சந்திரமதிசொல் தரு.

[தேவாவீதென்னமாயஞ் செய்தாயேயனியாயம்]
என்ற சதாரம்நாடகத்தருவின் வர்னமெட்டு.
இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் - ஆதி.

பல்லவி.

என்னைப்போற்கொடும்பாவி யிவ்வுலகினிலுண்டோ

அநுபல்லவி.

பொன்னைப்போலேவளர்ந்த புதல்வன்றனையிழந்த (என்)

சரணங்கள்.

மாயப்பாம்பிடம்விட்டு மகனைக்கொன்றபொல்லாத
தாயெனப்பெயர்வாய்ந்துந் தகனப்பொருளில்லாத (என்)
மகனுக்கேயழுவேனோ மன்னனுக்கழுவேனோ
தகனஞ்செய்யக்கொடுக்குந் தனத்துக்கேயழுவேனோ (என்)
பார்ப்பானிடத்திற்சென்று பணங்கேட்கவரலாச்சே
காற்பணப்பொருளேனுங் கையிலில்லாமற்போச்சே (என்)
இங்கொருகுழந்தையும் இறந்துகிடப்பதேனோ
சங்கதியறியேனே தனையனுமிவன்றானோ (என்)

(சந்-வ-ம்.) ஆஆ தெய்வமே என்போற் கொடியபாவிகள் இவ்வையகத்தில் யாவரிருக்கின்றார்கள் ஆஆ சொர்னம்போன்ற மகனை பாம்புக்கிரைகொடுத்த தாயென்று பழியேற்றுக்கொண் டுமன்றித் தகனஞ்செய்வதற்குக் கையிற்பொருளில்லாமற் கல் நெஞ்சமுடைய பார்ப்பானிடம்போய்க் கேட்கும்படிநேரிட்டதே ஆஆ மைந்தனிறந்ததை யெண்ணியழுவேனோ அல்லது மன்னவன் கட்டுக்காப்பதை யெண்ணியழுவேனோ அல்லது தகனஞ்செய்வதற் குப் பொருளில்லையென்றழுவேனோ ஆஆ யானெதற்கென்றழுவேன் ஆஆ இவ்வழியில் ஏதோ வோர் குழந்தைகிடக்கின்றதே இது யா வருடைய குழந்தையோ தெரியவில்லையே ஒருவேளையான் மயா னத்தில்வைத்துவந்த என்மைந்தனைப் பேய்பூதங்களேதாவதுகொ ண்டுவந்து இவ்விடத்திற் போட்டுவிட்டுப் போய்விட்டனவோ நல் லது கையினிலெடுத்து நன்றாய்ப்பார்க்கின்றேன் ஆஆ எனது மை ந்தன்போலதானே யிருக்கின்றது ஆஆ இங்குவந்த காரணந் தெரி யவில்லையே என்செய்வேன்.

பொது விருத்தம்.

பாதைதனிற் கள்வர்களாற் கொலைபுரிந்து
பணிகளெல்லா மபகரித்துக் கொண்டேயன்று
வீதிதனி லெறிந்துவிட்ட காசிவேந்சேய்
மெல்லிவரும் வழிதனிலே கிடக்கக்கண்டு
சூதையறி யாமலதை யெடுத்துப்பார்த்துச்
சுதன்றேவ தாசனென்றே மதித்துக்கொண்டு
கோதையந்தச் சந்திரமா மதியுந்துக்கங்
கொள்ளுவா ளுடல்பதறி விள்ளுவாளே.

சந்திரமதி விருத்தம்.

சுந்தர மாகவுன்னைச் சுடலையில் வைத்துவிட்டு
அந்தண ரிடத்திற்செம்பொன் னென்னைநான் வாங்குதற்கு
வந்திடும் பொழுதிலிந்த வழிதனில் மகனேநீயும்
விந்தையாய்க் கிடந்ததான விதமெதோ வறிகிலேனே.

## சந்திரமதிசொல் தரு.

[இன்னும்நாதன்வரக்காணேனே யென்னசெய்வேன்தோகைமானே]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

மைந்தனேயுனக்கிந்தவிதி
வந்ததெவர்செய்தசதி.

அநுபல்லவி.

தந்தையைக்காவல்வைத்தேனே தப்பிவந்ததறியேனே
வந்ததெவர்செய்தசதி (மைந்)

சரணம்.

பூதந்தூக்கிவந்துவிட்டதோ பூமியிரையாய்க்கேட்டதோ
ஏதுகாரணங்களென்று மாதுநானறியேனென்று
வந்ததெவர்செய்தசதி (மைந்)





(சந்-வ-ம்.) ஆஆ தனையா உனக்கிப்பேர்ப்பட்ட விபத்தா அடிக்கடி வரவேண்டும் ஆஆ மயானத்தில் உன்றந்தையைக் காவல் வைத்து வந்தேனே அவர் காவலைக்கடந்து இவ்விடத்திலுன்னை யாவர்கொண்டுவந்து போட்டார்களோ தெரியவில்லையே ஆஆ ஒருவேளை பூதங்களானது தூக்கிக்கொண்டுவந்து போட்டிருக்கக் கூடுமோ அல்லது பூமாதேவியானவள் தகனஞ்செய்வதற்கு முன்னே தா னருந்திவிடவேண்டு மென்றெடுத்துக்கொண்டு வந்தனளோ எனக்கொன்றுந் தெரியவில்லையே ஆஆ கண்மணி யென்னடாசெய்வேன்.

பொது விருத்தம்.

நகர்முழுதுந் தலையாரி மார்களன்று
நன்குடன்சோ தனைசெய்து வருகும்போது
பகலுதய மாவதற்கு விடியுங்காலம்
பாரவிருள் விலகிவரும் வேளைதன்னில்
மகனெனவே காசிமன்னன் சேயைக்கண்டு
வாரியெடுத் தழுஞ்சந்த்ர மதியைப்பார்த்து
மிகவுமனச் சந்தேகங் கொண்டேயந்த
மெல்லியிடஞ் செல்லுதற்கு விள்ளுவாரே

தலையாரிகள் சம்பாஷணை.

(மூத்ததலையாரி வசனம்.) அடா தம்பி நாம் இக்காசிமாநகரத்திற் குற்றங்குறை நடவாமல் நகர்சோதனை செய்துகொண்டு வரும்போது இவ்விடியற் காலநேரத்தில் யாரோ வோர் பெண்ணனவள் கையிலொரு குழந்தையைவைத்துக்கொண்டு நம்மைக் கண்டவுடனே புலம்புகின்றாள் அந்தக்காரணந் தெரியவில்லையே.

(இளையதலையாரி வசனம்) ஆஆ அண்ணா அவள் பேயோ பூதமோ ராக்ஷசியோ மனுஷியோ திருடியோ ஒன்றுந் தெரியவில்லையாதலாற் சமீபத்திற்சென்று பார்ப்போமண்ணா.

(மூத்-வ-ம்.) அப்படியே பார்ப்போந்தம்பி.

(இளை-வ-ம்.) ஆஆ அண்ணா இவளைப்பார்த்தால் ராக்ஷசியைப்போல காணப்படுகின்றது கையில்வைத்திருக்கும் பிள்ளையானது நமது ராஜபுத்திரன்போல காணப்படுகின்றதண்ணா.

கெனும் பொடியவும் வாயில் ரத்தங்கக்கும்படியாகவும் நையப்பு டைத்துத் தள்ளிக்கொண்டு வருகின்றார்களே ஆஆ என்னுடம்பெல்லாம் நொந்து ஜீவன்றுடிக்கின்றதே ஆஆ ஏனென்று கேட்பாரில்லையே ஆஆ நானொன்று நினைக்க நீயொன்று நினைத்துவிட்டனையே ஆஆ மண்ணுய்ப்பிறந்தாலுஞ் சுகப்படுவேனே ஆஆ பெண்ணுய்ப்பிறந்து பெரியகஷ்டங்களை யனுபவிக்கின்றேனே. ஆஆ எனக்கிவ்வளவு பலன்போதா ஆஆ இன்னும் என்னென்ன தீங்குகள் விளையுமோ தெரியவில்லையே ஆஆ. இந்தத் துன்பங்களை யனுபவிக்கவா என்னைப்படைத்தனை ஆஆ இக்கஷ்டத்தை யெப்படிச்சகிப்பேன்.

தலையாரிகள் விருத்தம்.

கள்ளிநீ கற்றசித்து வித்தையெல்லாங்
காட்டிமிகச் சிணுங்கிடினும் விடுவதுண்டோ
உள்ளபொருளுக்காசைப் பட்டுக்கொண்டே
உயிரினையுங் கொன்றுவிட்ட தல்லாற்பின்னும்
பிள்ளைதனைத் தின்றுவிடப் பார்த்தாய்நீயும்
பிணந்தின்னும் பேயன்றி மனுஷியன்று
மெள்ளவுநீ யழும்நீலித் தனங்கள்போதும்
வேகமுடனெங்கள்பின்னே நடந்துவாடி.

(தலை-வ-ம்) அடி கள்ளி நீ கற்றசித்த வித்தைகளெல்லாங் காட்டிச் சிணுங்கினல் நாங்கள் விடப்போகின்றோமா பார் பொருளுக்காசைப்பட்டுப் பிள்ளையைக் கொன்றதுமல்லாமற் குழந்தையையுந் தின்னப்பார்த்தனையே நீ பிணந்தின்னும் பேயேயன்றி மனுஷியாகத்தோன்றவில்லையே நல்லது நீயழுத நீலித்தனம் போதும் நடந்துவாடி துஷ்டி நடந்துவா.

சந்திரமதி விருத்தம்.

மதியணி சிவனேகாசி மாநகர் விஸ்வநாதா
நதிபுனைந் தவனேகைலை நாயகா வுமையாள்பாகா
கதியிலா நானுமிந்தக் கஷ்டமும் படுவதற்கு
விதிவசந் தானேவுன்னை வேண்டின பலனேதேவே.



### சந்திரமதிசொல் தரு.

[பெண்ணையுனக்கென்னகோபமடி. கோபமடி]
என்ற வீரசூராநாடகத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

இதுவிதிவசந்தானோஈசா விசுவேசா-நான்
ஏதொன்றுமறியேனே மாதுமைநேசா (இது)

அடிதாழப்பெலனுண்டோதேகம் எந்தன்றேகம்-இந்த
அன்யாயம்நடக்குதே யறியாயோபாகம் (இது)

வாயாலுதிரங்கக்கலாச்சே கக்கலாச்சே-இதால்
மடிந்திடலாமெனிலும் மற்றவர்க்கேச்சே (இது)

ஏதுக்குநான்ஜென்மம்பெற்றேன் ஜென்மம்பெற்றேன்-இவர்கள்
இனியடிப்பாரானால் என்னுயிரற்றேன் (இது)

(சந்-வ-ம்.) ஆஆ விஸ்வேசா இதுவும் விதிவசந்தானோ ஆஆ யானொரு குற்றமுஞ் செய்யவில்லையே ஆஆ இப்பாவிகளடியைத் தாங்குவதற்கு என்னுடலில் மாமிசப்பலனுளதா ஆஆ இவ்வித ஞாயவிரோதமான காரியங்கள் நடப்பதெல்லாம் உனக்குத்தெரியவில்லையா ஆஆ வாயிலுதிரம் வரும்படியாயடிக்கின்றார்களே ஆஆ இந்தத்துன்பத்தைச் சகிப்பதைப்பார்க்கிலும் மடிந்துவிடலாமென்றால் உலகத்தார் நகைப்பார்களே ஆஆ யானெதற்காகப் பெண்ணென்று பாபஜென்மமெடுத்தேன் ஆஆ இனிமேலடிவிழுமானால் உயிர்போய்விடும்போலிருக்கின்றதே ஆஆ என்னைப் பரிசோதிக்கின்றனையே ஆஆ மகாதேவா யானென்செய்வேன்.

(தலை-வ-ம்.) அடி நீலி பார்க்கின்றவர்கள் பரிதாபப்படும்படி பாசாங்கு பண்ணியழுகின்றனையே இதனால் உன்னைவிட்டு விடுவோமா சீச்சீ மூர்க்கி நடசீக்கிரம்.

### பொது விருத்தம்.

சந்திர மதியைக்கட்டித் தடத்தினில் மேனியெங்கும்
நொந்திடும் படியடித்து நுண்மையாய்த் தள்ளிக்கொண்டு

வந்தகல் நெஞ்சரான மாதலை யாரிமார்கள்
அந்தநற் காசிமன்ன னம்பலஞ் சேர்ந்திட்டாரே.

(தலை-வ-ம்.) மகாராஜ் தலையாரிகள் வந்தனம்புரிகின்றோம்

(காசி-வ-ம்.) கல்யாண் தலையாரிகாள்.

காசிராஜன் விருத்தம்.

நகரினைப் பரிசோதித்த நற்றலை யாரிமாரே
ஜெகமெலாம் புகழும்விஸ்வ தேவனு ருளினாலே
பகலிர வினாள்மட்டும் பார்த்ததே யில்லைகுற்றந்
தருதியா யின்றேதேனுஞ் சங்கதி நடந்ததுண்டோ.

## காசிராஜன் சொல் தரு.

[பசிபந்தஹரா நைனஹரா நௌரதனஹரா]
என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு.
இராகம்-நேசிகதோடி-தாளம்-சாபு.

பல்லவி.

தலையாரிகளே யூரிலேதுஞ் சங்கதியுண்டோ

அநுபல்லவி.

கலைமகளோ மலைமகளோ
கமலையோமாது
கட்டிக்கொண்டு கிட்டிவந்த
காரணமேது (தலை

தையலது கையிலொரு
தனையன்காணுமிதே
பொய்யிலாமல் மெய்யுரையாய்
புகலவேணுமே (தலை)

(காசி-வ-ம்) ஹே தலையாரிகாள் இன்று நகர்சோதனையில் என்ன விசேஷம் நடந்தது சரஸ்வதி பார்வதி மகாலக்ஷுமிக் கொப்பான இந்த மாதுயாவள் இப்படி முன்கட்டுப் பின்கட்டா ய்ப் பிணைத்துக்கொண்டு வந்தகாரணம் யாது இந்தக் குழந்தை யாவருடையது அதன் விபரத்தை யுண்மையாகத் தெரிவிப்பீர் களாக.



293



தலையாரிகள் விருத்தம்.

மன்னவா நாங்களிந்த மாநகர் தன்னைராத்ரி
வின்னமில் லாயுற்சுற்றும் வேளையிவ் விடியும்நேரங்
கன்னிகை யிவளுஞ்செய்த காரிய மதனைநாங்கள்
என்னமா யெடுத்துச்சொல்வோ மெங்கள்வாய் கூசுதையா.

தலையாரிகள்சொல் தரு.

[மோகமுனைதாளலேரா முத்துபெட்டோராணசாமி]
என்ற ஜாவளியின் வர்ன்மெட்டு.
இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்னவனே முன்னில்நிற்கும்
மங்கைராக்ஷசியையா (மன்)

அநுபல்லவி.

இன்னகரந் தன்னைநாங்கள்
என்றும்போலசுற்றும்போது
கன்னிகையின் அன்னியாயங்
கழறுவோங்கேளுமிப்போது (மன்)

மங்கையிவள் உங்களது
மைந்தனைத்திருடிக்கொண்டு
அங்கமீது தங்கநகை
அனைத்துங்கவர்ந்ததுண்டு (மன்)

சேர்வமுள்ள பாலனையுங்
கொன்றுவிட்டசேதிகண்டோம்
காலமுள்ள நீலிதன்னைத்
தாக்கியேபிடித்துக்கொண்டோம் (மன்)

(தலை-வ-ம்.) ஆஆ மகராஜ் பாருங்கள் யாங்கள் நகர்சோதனை செய்துகொண்டு வரும்பொழுது இந்தக் கள்ளியானவள் தேவரீருடைய மைந்தனைக் கவர்ந்துகொண்டுவந்து ஆபரணங்களையெல்லாந்திருடி மறைவாய்ப்புதைத்து வைத்துவிட்டுக் குழந்தையைக் கொன்று மடிமீதில்வைத்துச் சதையைக்கடித்து ரத்தத்தைக் குடித்

துக்கொண்டிருந்தாள் நாங்கள் கண்டுபிடித்துக் கட்டிக்கொண்டு வந்தோ மகராஜ் இவள் ராக்ஷதமுண்டை.

காசிராஜன் விருத்தம்.

என்மக னிறந்திட்டானே இதுவுநான் முன்னேசெய்த
கன்மமோ வல்லாற்றெய்வ கட்டளை தானேகானேன்
மன்மதன் போன்றசின்ன மைந்தனைக் கொல்வதற்கு
மின்மன மொவ்வுவாளோ விள்ளுவீ ருண்மைதானே.

காசிராஜன்சொல் தரு.

[ஏலாநாபை சாலுராமேரீஜமு]

என்ற ஜாவளியின் வர்னமெட்டு.

இராகம்-காபி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

பல்லவி.

உள்ளதைச்சொல்லுங்கள் கள்ளமில்லாமலே

அநுபல்லவி.

பிள்ளையைக்கொல்லச்சிந்தை கொள்ளுவதெனில்விந்தை (உள்)

சரணம்.

தீரமுடனேயிந்தத் திக்கிலாப்பெண்கொடிக்கு
ஓரமுரைப்பீரானல் உடனே தலைவெடிக்கும் (உள்)

(காசி-வ-ம்.) ஹே தலையாரிகாள் பெண்ணாய்ப் பிறந்தவர்கள் குழந்தையை மனந்துணிந்து கொல்வார்களென்பது ஆச்சரியத்திற்கிடமாயிருக்கிறது அன்றியும் பெண்ணுக்கு ஓரஞ்சொல்லத்துணிவீர்களானல் உங்கள் தலைவெடித்துப்போகுமாதலால் நீங்கள் பொய்வார்த்தைகூறுமல் நடந்த வுண்மையைமட்டுஞ் சொல்வீர்களாக.

தலையாரிகள் விருத்தம்.

பெண்ணவள் பாபம்பொல்லாப் பெரிதென நெடுநாளாகத்
திண்ணமாய்த் தெரிந்தநாங்கள் செப்பிட மாட்டோம்பொய்யே
அண்ணலே யிவளுங்கொன்றே யருந்தினள் ரத்தந்தன்னைக்
கண்ணினாற் கண்டேகட்டிக் கையுடன் கொடுவந்தோமே.



(தலை-வ-ம்.) ஆஆ மகராஜ் யாங்களெதற்காகப் பொய்சொல்லப்போகின்றோம் பெண்பாபம்பொல்லாதென்பது எங்களுக்குத் தெரியாதா பாருங்கள் இவள் கொன்று உதிரத்தைக் குடித்துக் கொண்டிருக்கும்போது கண்ணாரப்பார்த்துப் பிடித்துக்கொண்டு வந்தோ மகராஜ்.

காசிராஜன் விருத்தம்.

உந்தனைப் பார்க்கும்போதே யுலகமா தாவைப்போல
சிந்தயிற் றோணுதல்லாற் சித்தசன் றனைநிகர்த்த
மைந்தனைக் கொலைபுரிந்த வஞ்சிபோற் காணவில்லை
எந்தன்முன் னுனதுசேதி யின்னதென் றுரைப்பாய்பெண்ணே.

காசிராஜன்சொல் தரு.

[கைசஜாதுடாலாதியா மைனஜாவுரேசையா]

என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.

பல்லவி.

மாதேநீயுமெந்தநகர் வழங்கும்பேரென்னபகர்

அநுபல்லவி.

காதலனைக்கொன்றவர்யார் கலங்கிடாமல்மனந்தேர் (மாதே)

சரணம்.

பாலகனைக்கீழேவைத்துப் பக்குவமாய்மொழிமானே
சீலமுடனுண்மைதனைச் செப்புவதால்நன்மைதானே (மாதே)

(காசி-வ-ம்.) ஹே பெண்ணே நீயார் எந்தவூர் உனது நாமதேயம் யாது இந்தக்குழந்தையைக் கொன்றவர்கள் யாவர் நீ வியாகூலப்படாமற் பாலகனைக் கீழேவைத்துவிட்டு உண்மையை விபரமாகச் சொல்வாயாக.

சந்திரமதி விருத்தம்.

கையுறப்புண் ணுக்குக்கண் ணாடியும் வேண்டுவாரோ
வையகந் தன்னையாளு மன்னருக் குண்மையான
மெய்யிது பொய்யிதென்ற விபரமுந் தெரிந்திடாதோ
ஐயமேலக் கேட்டாலென்ன சங்கதி சொல்வேனையா

## சந்திரமதிசொல் தரு.

[நின்னுநம்மிநானு நிரஜனயனு]

என்ற ஜாவளியின் வர்ணமெட்டு

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னவாநீரோதும் வார்த்தையுந்தகாது

அநுபல்லவி.

கன்னிகையின்மீது சின்னமுள்ளபோது (மன்)

சரணங்கள்.

சேயன்கையிலுள்ள செய்கைபார்த்துக்கொண்டீர்
வாயில்ரத்தமுள்ள வகையதுங்கண்டீர் (மன்)

மேனியிற்றுர்நாற்றம் வீசுவதும்பார்த்தீர்
மானினியின்பாவம் வாய்க்குமென்றுவேர்த்தீர் (மன்)

நீதிமுறைபோலே நேர்மையொடுநீரே
தீதுதன்மைகண்டு சிக்ஷைபுரிவீரே (மன்)

---

(சந்-வ-ம்.) ஆ ஆ மகாராஜ் தாங்களேகாதிபதியாயிருப்பதால் தங்களுக்குத் தெரியாத யோஜனையிராதாகையால் என்கையிலிறந்த பிள்ளையொன்றிருப்பதையும் எனது வாயில் ரத்தம்படிந்திருப்பதையும் எனது தேகத்திற் புலால்நாற்றம் வீசுவதையும் ப்ரத்தியக்ஷமாய்ப்பார்த்தீர்கள் என்னைப் பிள்ளைசகிதமாய் முன்கட்டுப் பின்கட்டுக்கட்டித் தள்ளிவந்த தலையாரிகள் வாய்மொழியை ருபிற் கேட்டுப் பெண்பாவம்நேருமோ யாதோவென்று மனம்வருந்தலானீர்கள் அங்ஙனமிருக்க இதுவிஷயத்தைப்பற்றி யென்வாய்மொழியெதற்காகக் கேட்கவேண்டும் தாங்களோ மனுதர்மப்பிரகாரம் நன்மைதிமையைப் பகுத்தறிந்து மனுநீதிவிதிப்படி யெவ்விதஞ் செய்யவேண்டுமோ அவ்விதஞ்செய்வதைப்பற்றி யெனக்கு யாதும் ஆக்ஷேபமில்லை மகாராஜ்.

### காசிராஜன் விருத்தம்.

ஆகம நீதிநூல்க ளனைத்துநன் குணர்ந்தமந்த்ரி
பாகமாய் நடந்தசேதி பாவையைக் கேட்டதற்கு
யூகமா யறிந்துகொள்ளிலன் றுண்மையை வெளிவிடாமற்
கூகமாய் வார்த்தைசொல்லுங் கொள்கையையறிந்திட்டீரோ



## காசிராஜன்சொல் தரு.

[அன்னையேநானுன்னைநம்பி னேனெனக்கருள்புரிகுவாய்]

என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தமாதுசொல்லும்வார்த்தைக் கென்னசெய்குவோமந்திரி

அநுபல்லவி.

மைந்தனிறந்ததுன்பமிகவும் வருத்துகின்றதேதந்திரி (இந்)

சரணம்.

பார்க்கும்பொழுதேகொன்றவளாகப் பாவனைகாட்டவில்லையே
தீர்க்கமாகவேயோசியாவிடிற் சேருமேபெருந்தொல்லையே (இந்)

---

(காசி-வ-ம்.) ஹே ப்ரதான் எனக்குமைந்தனிறந்து விட்டானென்ற மனவருத்தமதிகமாயிருக்கின்றது அப்படியிருந்தாலும் இந்த மங்கையானவள் கொன்றிருப்பாளென்று யானம்பவில்லை ஏனென்றாற் சிசுவதை செய்தவர்களுடைய முகக்குறி கண்குறி வசனக்குறி யெல்லாம் வேற்றுமையாயிருக்கும் இவளைப்பார்த்தால் மகாலக்ஷுமியைப்போலிருக்கின்றது பாரும்.

### வெண்பா.

ஒற்றிற்றெரியாசிறைப்புறத்தோர்தமெனப்
பொற்றேருடனையாத்தெரிதந்தம்குற்றம்
அறிவரியதன்றஞ்சுவதேசெங்கோன்மைசென்று
முறையிடினுங்கேளாமையன்று

என்று சொல்லப் பட்டிருக்கிறது அதாவது வேவுக்காரர் சொல்வதை யுண்மையென்று நம்பாமல் தாமே நேரிற்சென்று தெரிந்துகொண்ட சங்கதியாயிருப்பினும் ஒருவர்மீது குற்றங்களை நிக்ஷேபிப்பது எளிதல்லவென்று பயந்து நிதானிப்பதே யரசர்நீதியென்று நீதிநூல்கள் முறையிடுகின்றன அங்ஙனமிருக்கத் தலையாரிகளுரைத்தவார்த்தையைநம்பி நாமொருகாரியத்தைச் செய்யத்துணிவோமேயானால் மிகுந்த கெடுதிகள் சம்பவிக்குமென்பது திண்ணம் எப்படியெனிற் பாரும்.

வெண்பா.

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே-மூதேவி
சென்றிருந்து வாழ்வாளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னன் மனை.

என்று சொல்லப்பட்டிருக்கின்றது அதாவது சபையிலிருந்து பக்ஷபாதஞ்சொன்னவன் வீட்டிற்பேய்களடையும் வெள்ளெருக்கு முளைக்கும் கறையான் புற்றுகளுண்டாகும் மூதேவியிருந்து வாழ்வாள் பாம்புகள் குடியிருக்கும் என்று மனுநீதிகள் முறையிடுவதால் எந்த விஷயத்தையுந் தீர்க்காலோசித்துத் தீர்ப்புரைக்கவேண்டுவது நம்மைச்சார்ந்த கடமையாயிருக்கின்றது ஆகையால் இவளைப் பிணந்தின்னும் ராக்ஷசியென்று சொன்னால் நாம் நம்புதற்கிடமுண்டா ப்ரதான்.

மந்திரி விருத்தம்.

வாரிதியி னுளங்கண் டாலும்பெண்கள்
மனத்தாளங் காணுதற்கு முடியாதென்று
தேரியநூல் வல்லோர்க ளுரைப்பாரேனுந்
தெரிவைகையிற் பிள்ளையுடன் சேர்த்துக்கட்டி.
நாரியிவள் கொன்றனளென் றேபிடித்து
நமதுமுன்னே கொண்டுவந்து விட்டதாலே
காரிகையுங் கொன்றதுமெய் பொய்யென்றேநான்
கண்டுரைக்க வல்லபமு முண்டோமன்னா.

(மங்-வ-ம்)ஆஆ மகராஜ் பாருங்கள் கடலினுளத்தைக் கண்டாலுங் கன்னியர் மனத்தாளத்தைக் காணமுடியாதென்று ஆன்றோர்கள் சொல்வார்கள் ஆகினும் ஒருபெண்ணைக் கையிற்பிள்ளையுடனே சேர்த்துக்கட்டி இவள் தான் கொன்றவளென்று பிடித்துக்கொண்டு வந்திருப்பதால் இவள் கொலைசெய்தாளென்றுஞ் செய்யவில்லையென்றும் யானெவ்விதங்கண்டுசொல்வேன் மகராஜ்.

காசிராஜன் விருத்தம்.

கன்னல்நேர் மொழியினளே கன்னிநீ யாகையாலே
மன்னவர் சபையிதென்று மனதினிற் பயங்கொள்ளாமல்



நன்னய மாகவுண்மை நவின்றிடு வாயேயானால்
உன்னைவிட் டிடுவேனீயு முறுதியாய் நம்புவாயே.

(காசி-வ-ம்.) ஹே மாதே நீ பெண்பாலாயிருப்பதால் ஏதோ ராஜசபையென்று பயங்கரப்படவேண்டாம் உண்மையைச் சொல்வாயாகில் உன்னை விட்டுவிடுவேன் மானே, இதை நிச்சயமாய் நம்புவாயாக.

சந்திரமதி விருத்தம்.

சொல்லிடும் விஷயமெல்லாந் தோன்றலே முன்னேசொன்னேன்
மெல்லியை யினிமேற்கேட்க வேண்டுவ தில்லைநீரும்
நல்லவ ராகையாலே நன்குதீங் கின்னதென்று
வல்லப மாகக்கண்டு வழுத்துவீர் தீர்ப்புத்தானே.

(சங்-வ-ம்.) ஆஆ மகராஜ் யான் சொல்லவேண்டிய விஷயங்களெல்லாம் ஏற்கனவே தெரிவித்துக்கொண்டேனாதலால் இனிமேலென்னைக் கேட்கவேண்டுவதில்லை தாங்கள் நீதிமானாயிருப்பதால் ஞாயங்களைப் பகுத்தறிந்து நீதியைச் செலுத்துங்கள் மகராஜ்.

காசிராஜன் விருத்தம்.

கொன்றிட வில்லையென்று கூறினல் நமதுவார்த்தை
மன்றினி லெவருநம்ப மாட்டன ரென்றேயெண்ணி
ஒன்றுமே யுரைத்திடாம லுண்மைகண் டுரைப்பீரென்று
குன்றியே வார்த்தைசொல்லுங் குணமதாய்க் காணுதையா.

## காசிராஜன்சொல் தரு.

[அடிமைநானுன்னடைக்கலமினி யாகிலுமெனையாளையா]
என்ற கீர்த்தனாமிர்தசாரத்தின் வர்ணமெட்டு.
இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பிள்ளையைக்கொன்ற கள்ளியிவளாய்ப்
பேசினர்களேமந்திரி
கள்ளளவுமெய் கொள்ளலவையும்
இல்லையேயூகதந்திரி

ஏசயனிறந்த மாயமும்விதிச்
செய்கைபோலவேகாணுதே
தூயமங்கையை நேயமாய்ப்போகச்
சொல்லயோசனைதோணுதே (யின்)

---

(காசி-வ-ம்.) ஆஆ ப்ரதான் நமது பிள்ளையை யிவள்தான் கொன்றாளென்று தலையாரிகள் சொல்கின்றார்களே அப்படி யிவள் கொன்றிருப்பாளாகில்-நான் கொல்லவேயில்லையென்று சாதிப்பாளன்றோ ஏதோ பதிவிரதையான தினிமித்தம் நாம் கொல்லவில்லையென்று சொன்னால் யாவரும் நம்பமாட்டார்களென்றும் கொன்றோமென்று பொய்கூறக் கூடாதென்றும், எண்ணியல்லவோ (மீனுக்குவாலும் பாம்புக்குத்தலையுங் காட்டுவது) போல பட்டும் படாமலும் வார்த்தைபாஷிக்கின்றனள் இதனால் இவள் கொன்றிருப்பாளென்று யானம்பவில்லை நமது மைந்தன் விதிவசத்தாலிறந்திருக்கக்கூடும் ஆதலால் இவளை விட்டுவிடலாமென்று யோஜிக்கின்றேன் ப்ரதான்.

(மந்-வ-ம்.) தங்களிஷ்டம்போற் செய்புங்கள் மகராஜ்.

தலையாரிகள் விருத்தம்.

இவளைவிட்டு விடுவீரே யானால்வேந்தே
யிருட்டுவீட் டினில்நுழையுந் திருட்டுக்கையுங்
கவருவதை விடமாட்டா தென்றுசொல்லுங்
கட்டுரைபோல் ராக்ஷசியும் பிணத்தைத்தின்னும்
விவரமதை விடமாட்டா ளின்னுமுள்ள
வெகுபேரைக் கொலைசெய்வா ளெங்களைத்தான்
உவகைகொண்டே தின்றிடுவா ளாகையாலே
ஓடுவோம் வேறுநகர் நாடுவோமே.

---

(தலை-வ-ம்.) ஆஆ மகாராஜ் இவளைச் சும்மாவிட்டுவிடும்பக்ஷத்தில் (இருட்டுவீட்டுக்குட்போனாலுந் திருட்டுக்கைசும்மாவிரா) தென்பதுபோல இந்த ராக்ஷசியானவள் பிணந்தின்னும் வாயைவைத்துக்கொண்டு சும்மாவிருக்கமாட்டாள் இன்னும் அனேக மனிதர்களைக் கொலைசெய்வாள் கட்டிப்பிடித்துவந்த எங்களையுஞ் சாப்பிட்டுவிடுவாளாதலால் எங்களுண்மை வார்த்தையை நம்பாமல் விட்



டுவிடுவீர்களானால் இவள் வாய்க்கிரையாகாமற் றப்பித்துக்கொள்ளும்பொருட்டு நாங்களிப்பொழுதே யிவ்வூரைவிட்டு வேறெங்காவது ஓடிப்போய்ப் பிழைத்துக்கொள்கின்றோ மகராஜ்.

காசிராஜன் விருத்தம்.

இத்தலை யாரிமார்க ளியம்பிடும் வார்த்தையாலே
புத்தியு மயங்குதிந்தப் பூவையை விடுவதற்கே
சத்திய மாகநீதி தனைச்செலுத் திடுவதற்கு
யுத்தியொன் றெனக்கிப்போதே யுதயமு மாச்சுமந்த்ரி.

---

காசிராஜன்சொல் தரு.

[சண்முகனைக்காணாமல் என்மனம்வாடுதே தையலேமையலே தாளாமலே]
என்ற பதத்தின் வர்ணமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மந்திரிநானுமொரு யோசனைசொல்கிறேன்
மர்மமாய்ப்பார்த்திட வேணுமே.

அநுபல்லவி.

இந்தவிடமிருந்து மைந்தன்படுத்திருந்த
இடமுதற்றடம்வரை யிவளடியும்
விந்தையுடனிருந்தால் விபரமுடனேகண்டு
விரைவுடன்வருகுவீர் ஒருநொடியில் (மந்)

---

(காசி-வ-ம்.) ஆஆ ப்ரதான் இந்தத் தலையாரிகள் பாஷிப்பது ஒருவிதத்திற்கு உண்மையாயும் ஒருவிதத்திற்குச் சந்தேகமாயுமி ருப்பதால் அந்தச் சந்தேகம் நீங்குவதற்கு ஒருயோசனைசொல்கின்றேன் அதாவது நீரிந்தத் தலையாரிகளை யழைத்துக்கொண்டு அரண்மனையில் மைந்தன்படுத்திருந்த இடமுதற் கொலைபுரிந்ததாய்ச்சொல்கின்ற தடம்வரை சென்று இவளுடைய காலடியடையாளமிருக்கின்றதாவென்று நன்றாய்ப் பார்த்துக்கொண்டுவந்து சொல்லும் அதன்பேரில் இவளுக்கு முடிவுசொல்கின்றேன் ப்ரதான்.

(மந்-வ-ம்.) அப்படியே பார்த்துவருகின்றேன் மகாராஜ். ஹே தலையாரிகாள் வாருங்கள் செல்வோம்.

(தலை-வ-ம்.) அப்படியே வருகின்றோம் ப்ரபு.

பொது விருத்தம்.

வள்ளலெனுங் காசிமன்னன் மனைக்குள்ளாக
மறைந்திருந்து நடந்தவகை யெல்லாங்கண்டேன்
தள்ளமுடி யாமகிழ்ச்சி கொண்டேனெந்தன்
சபதமது மின்றுநிறை வேறலாச்சு
கள்ளர்கள்கா லடியனைத்து மழித்துவிட்டுக்
கன்னியின்கா லடியினைப்போ லுண்டுசெய்ய
மெள்ளமந்தி ரிக்குமுன்னே செல்வேனென்று
விள்ளுவான் கோசிகனுந் துள்ளுவானே.

## விஸ்வாமித்திரர் நுபாலோசனை.

ஆ ஆ யானிந்தக் காசிமகாராஜாவினுடைய அரண்மனையிலொளிந்திருந்து நடந்த விசேஷங்களையெல்லாங் கேட்டேன் இப்போதுதான் யானெடுத்த சபதமானது ஜெயம்பெற்றது நல்லது மந்திரி செல்வதற்குமுன்னதாகவே யானவ்விடங்களுக்குச் சென்று கள்வர்களுடைய காலடிகளெல்லாங் கையாலழித்து விட்டுச் சந்திரமதி காலடிகள்போ லுண்டு செய்துவிடுகின்றேன் அதன்பேரில் நடக்குங்காரியங்களையும் பார்க்கின்றே னிந்தப்பகதூர்.

பொது விருத்தம்.

மந்திரியுஞ் செல்லுமுன்னே விஸ்வாமித்ர
மாமுனிவ னவ்விடத்திற் கேகிமுன்னால்
சிந்தையுடன் கொலைபுரிந்த கள்வர்காலின்
பிதியெல்லாங் கையாலே யழித்துவிட்டுச்
சந்திரமா மதியின்கா லடியைப்போலே
தரையுமுண் டாக்கிவைத்த பின்னால்மந்த்ரி
அந்தவிடங் களையெல்லாம் பரிசோதித்தே
அண்ணலிடம் நண்ணியுண்மை யறைகுவானே.

மந்திரி விருத்தம்.

ஆதியாம் விஸ்வநாத னருளினை யடைந்தெப்போதும்
நீதியா யாவியற்றும் நிருபனே நீரிப்போ—



ஓதிய படியேபால னுறங்கியவிடத்திருந்து
மாதிவள் சென்றுகொன்ற வழிவரை பார்த்திட்டேனே.

## மந்திரிசொல் தரு.

[விரசமானவார்த்தைவேண்டாம்விட்டுவிடடா]
என்ற ராமாப்பதத்தின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்னாநீர்சொன்ன வார்த்தைபோலே வழியைப்பார்த்தேனே

அநுபல்லவி

அன்னியர்கள் அடிகளெதும்
அங்கேகாணேனே
கன்னியிவள் காலடியைக்
காணலானேனே (மன்னா)
ஆதலினால் மாதிவளை
அனுப்பப்போகுமோ
நாதனேகன் நீதிநீறி
நடக்கலாகுமோ (மன்னா)

(மங்-வ-ம்.) ஆ ஆ மகராஜ், தங்களுத்திரவின்படி அரண்மனைக்குச்சென்று மைந்தன் படுக்கையிலிருந்து இந்த மங்கையைப்பிடித்த இடம்வரைசென்று வழியைப் பரிசோதித்ததில் இவள் காலடியைத்தவிர வேறும்னுஷாள் காலடியொன்றுங் காணப்படவில்லையாதலால் இனிமேலிந்த மாதை விட்டுவிடுவதற்கு யாதொரு நாயமில்லை அப்படி விடும்பக்ஷத்தில் நமது மனுநீதிக்குக் குறைவுண்டாகு மகராஜ்.

## காசிராஜன்சொல் தரு.

[மாயாகானிமோசமேலா எமக்குனேசெவி]
என்ற ஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

இனியேனுமுண்மைசொல்லி யேகுவாய்பெண்ணே

அநுபல்லவி.

சனியன்போல்முன்னால் அனியாயஞ்சொன்னால்
சதிவருமென்மேலே விதியதுபோலே (இனி)

(காசி-வ-ம்.) ஹே மாதே இனியாவது உண்மையை யுரைப்பாயாகில் உன்னை விட்டுவிடுகின்றேன் இல்லாவிட்டால் உன்விதிவசம்போலதான்முடியும்போலிருக்கின்றது ஆதலின் இப்போதென்சொல்கின்றனை பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

முன்னமே யுமதிடத்தில் மொழிந்ததை மறுத்திப்போது
பின்னொரு வார்த்தைதன்னைப் பேசிடத் துணிகுவேனே
மன்னவா நீரும்ஞாய வள்ளலா யிருப்பதாலே
நன்னிலை யறிந்துநீதி நடத்துவீர் நடத்துவீரே.

(சந்-வ-ம்.) ஆஆ மகராஜ் யான் முன்னுரைத்த வார்த்தையை மறுத்துஇப்போது நூதனமாக ஒருசேதிசொல்லப்போகின்றேனா ஒருக்காலுமில்லை தாங்கள் ஞாயாதிபதியாயிருப்பதால் என்னைப் பலவிதமான சின்னங்களுடன் றலையாரிகள் பிடித்துவந்திருப்பதையும் என்னுடைய சுபாவத்தையும் பகுத்தறிந்து தேவரீர் சித்தத்திற்குத்தோன்றிய நீதியைச்செலுத்துங்கள்மகராஜ் என்னையேன் அடிக்கடி கேட்கின்றீர்கள்.

காசிராஜன் விருத்தம்.

மண்ணினி லிருந்தயாரும் வழக்கினி லோரஞ்சொன்னால்
நண்ணிடுங் கெடுதியென்று நன்குணர்ந் திருப்பதாலே
பெண்ணிவ ளுண்மையாய் வாய்ப் பிறப்பினை யறிவிக்காமல்
திண்ணிய மாகநீதி செலுத்திடச் சொல்கிறாளே.

காசிராஜன்சொல் தரு

[மாதவமேயிவ்வுருவாய் வந்ததுமென்விதிவசமோ]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எந்தனதுமந்திரியே யென்னவினிச்செய்வோமையா



அநுபல்லவி.

விந்தையுடன் இந்தமின்னாளு
விதிவசம்போல் மதிகுலைந்தாள் (எந்த)

சரணம்.

கொலைகளத்து வீரவாகைக்
கூட்டிவரச்செய்யுமையா
தலையெழுத்துப் போலேயிந்தத்
தையல்சிரங்கொய்யுமையா (எந்த)

(காசி-வ-ம்.) ஹே ப்ரதான் நாமினி யென்செய்கின்றது இந்த மாதின்விதிவசம்போன்ற மதியும் தலையாரிகள் வாய்மொழியும் இவளுடையகாலடியுங் கொலைக்குப்போதுமான சாக்ஷியமாயிருப்பதால் இது ஞாயமாயிருப்பினும் அன்யாயமாயிருப்பினும் அந்தப் பாபபுண்யம் தலையாரிகளைச்சேர்ந்ததாயிருக்கின்றது ஆதலால் மனுதர்மசாஸ்திரப்பிரகாரம்கொலைக்குக் கொலையே தண்டனை விதிக்கவேண்டுமாதலால் இவள் சிரத்தைக்கொய்யும்பொருட்டுக் கொலைக்களத்து வீரவாகையழைத்துவரும்படி செய்வீராக.

(மந்-வ-ம்.) அப்படியே யழைத்துவரச் செய்கின்றேன் மகராஜ் * அடா சேவகா வீரவாகுத்தோட்டியை யதிசீக்கிரமழைத்து வருவாயாக.

(சேவ-வ-ம்.) அப்படியே யழைத்துவருகின்றேன் ப்ரபு.

பொது விருத்தம்.

மேட்டிமை யாகமந்த்ரி வீரவா கென்போன்றன்னைக்
கூட்டிவா வென்றுசொல்லக் குணமுடன் வீரனன்று
தாட்டிக முடனேசென்று சங்கதி யுரைக்கக்கேட்ட
தோட்டியாம் வீரவாகு தோன்றினன் சபையிற்றானே.

## வீரவாகுத்தோட்டிவருஞ் சிந்து.

[வெள்ளிவெளிச்சத்திலே விடியற்காலநேரத்திலே
புளியம்பூரவிக்கைக்குள்ளே பூரான்வந்துபூந்ததடி
தில்லாத்தான்டாங்குராஜா தில்லாத்தான்டாங்கு]
என்ற சிந்தின் வர்னமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

கச்சைவரிந்துகட்டிக் கருங்கச்சைசுங்குவிட்டு
மெச்சிடமீசைமுறுக்கி வீரவாகுதோன்றினனே (தில்)

கையிற்றடிபிடித்துக் கம்பளியுந்தோளிலிட்டு
வெய்யசுடலைகாக்கும் வீரவாகுதோன்றினனே (தில்)

மட்டடங்காத்துட்டர்களை மயானத்திற்கொண்டுசென்று
வெட்டித்தலையெடுக்கும் வீரவாகுதோன்றினனே (தில்)

வழக்கமாய்வாய்க்கரிசி மற்றதெல்லாம்வாங்கிக்கொண்டு
விளக்கமாய்ப்பிணஞ்சுடும் வீரவாகுதோன்றினனே (தில்)

காசிமகாராஜனது கட்டளைப்படிநடக்க
வீசுகத்திகையிற்கொண்டு வீரவாகுதோன்றினனே (தில்)

---

(வீர-வ-ம்.) ஆஆ ஆண்டே வீரவாகு கும்புட்ரேன்.

(காசி-வ-ம்.) கல்யாண் வீரவாகு.

(வீர-வ-ம்.) என்னைக் கூட்டிக்கிட்டு வரச்சொன்னீங்களாமே அது என்னத்துக்கு ஆண்டே.

### காசிராஜன் விருத்தம்.

விந்தைசேர் சுடலைகாத்து வெகுபிணஞ் சுட்டுநீற்றுத்
தந்திடும் பணமுந்துண்டுந் தக்கவாய்க் கரிசிபெற்றுச்
சுந்தர மரகவாழுந் தோட்டியே சபையிலின்று
உந்தனை யழைக்கச்சொன்ன வுண்மையை யுரைசெய்வேனே.

---



## காசிராஜன்சொல் தரு.

[வந்தனந்தந்தே னென்னுடைய வந்தனந்தந்தேன்]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

தோட்டிகேளடா வீரவாகுத் தோட்டிகேளடா

அநுபல்லவி.

சு-ட-லை சுடலை-சுடலை
சுடலைதனிலே திடமுடன்வளர் (தோட்)

சரணங்கள்.

மலர்மகள்போல் இலகுமிவள்
கொலைபுரிந்தாள் தலையைவெட்டடா (தோட்)

கன்னியைக்கூட்டி முன்னமேசென்று
சென்னியைவாங்கடா பின்னேவருகிறேன் (தோட்)

---

(காசி-வ-ம்.) அடா வீரவாகு பார் மகாலக்ஷுமியைப்போன்ற தேஜசுடைய இந்த மங்கையானவள் எனது மைந்தனைக்கொன்றதாகவும் அதைக் கண்ணாற்கண்டு பிடித்துவந்ததாகவுந் தலையாரிகள் சாதிக்கின்றார்கள் அதிற் பழிபாபமிருப்பினும் அவர்கட்கேயன்றி நமக்கன்று ஆதலின் முன்னடி நீ யிவளைக் கொலைக்களத்துக்கழைத்துச்சென்று சிரத்தைக்கண்டனஞ்செய் நானும் மகனைத்தகனஞ்செய்யும்பொருட்டுப் பின்பற்றிவருகின்றேன் வீரவாகு.

(வீர-வ-ம்.) ஆஆ ஆண்டே ஒங்கசொல்லுப்படியே கொலைக்களத்துமேலே கொண்டுக்கிட்டுப்போய் ஒரே வீச்சுலே நாக்குத்தள்ள வீசிப்போடுரேனாண்டே.

(காசி-வ-ம்.) சீக்கிரமழைத்துக்கொண்டு செல்.

(வீர-வ-ம்.) டீ புள்ளையைக்கொன்னகள்ளி மசானத்துக்கு நடடி.

(சந்-வ-ம்.) என்னைத் தள்ளவேண்டாமப்பா நானே நடந்து வருகின்றேன்.

(வீர-வ-ம்.) சீக்கிரம் நடடி எங்கூத்தியாளே.

சந்திரமதி விருத்தம்.

கடுகள வேனுநெஞ்சிற் கருணையில் லாததுஷ்டர்
படுகொலை புரிந்தாளென்று பசப்பிய வார்த்தையாலே
நடுநிலை யின்னதென்று நரபதி யறிந்திடாமற்
சடுதியி லென்னைக்கொல்லச் சாற்றினன் றீர்ப்புத்தானே.

சந்திரமதிசொல் தரு.

[ஐயோநானொரு பெண்பிறந்தகதையை
யாருடன்சொல்வேனம்மா திரிச்சடையே]
என்ற ராமநாடகத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மண்ணுலகத்திலென்போற் பெண்ணாய்ப்பிறந்தவர்க்கு
வாய்க்குமோவிக்கெதியும்-விஸ்வேசனே (மண்)

தேசம்நகரிழந்து செல்வமுதலழிந்து
சிறுமைப்படவைத்தாயே-விஸ்வேசனே (மண்)

பின்னுமெனக்குரிய மன்னவனைப்பிரிந்து
பிள்ளையையுமிழந்தேன்-விஸ்வேசனே (மண்)

கொலைசெய்தேனென்றசில தலையாரிகள்மொழியாற்
கோவுமாக்கினைதந்தான்-விஸ்வேசனே (மண்)

செப்பினபடிக்கென்மேற் றப்பிதமில்லையென்றுன்
திருவுளமறியாதோ-விஸ்வேசனே (மண்)

பிள்ளையைக்கொன்றகொடுங் கள்ளியென்றபவாதப்
பேரொன்றுங்கிடைத்ததே-விஸ்வேசனே (மண்)

இப்படிவருமென்று சொற்பனமறியேனே
இனியென்னசெய்வேனையோ-விஸ்வேசனே (மண்)

(சந்-வ-ம்.) ஆஆ விஸ்வேசா இவ்வையகத்தில் என்போற் பிறந்த பெண்களுக்கு இவ்வித சம்பவங்கள் நேரிடுமா ஆஆ எங்கள் நாடுநகரபவுஷ்பாக்கியாதிகளை யிழந்தும் மன்னனைப்பிரிந்தும் மறையவர் கடிமைப்பட்டும் பாலனைப்பறிகொடுத்தும் தலையாரிக



ளாற் பிள்ளையைக்கொன்றேனென்ற அபவாதத்திற்காளானதுமன்றி சிரசைக்கட்கத்திற் கிடைகொடுக்கும்படி காசிராஜனளித்த ஆக்கினைக்கும் ஆளாகும்படி நேரிட்டதே ஆஆ காசிநாதா யான் கொலைபுரியவில்லை யென்பது உனது திருவுளத்திற்குத் தெரியாதா ஆஆ எனக்கிப்பேர்க்கொத்தவிதி வருமென்று யான் சொற்பனங்கூடக் காணவில்லையே இனியென் செய்வேன்.

(வீர-வ-ம்) டீ நீலி புள்ளையைக்கொண்ணுபோட்டு மாமாலம் பண்ணுரயோ அந்த எத்து எனக்குத்தெரியும் நடடிநட.

(சந்-வ-ம்.) அப்படியே நடக்கின்றேனப்பா.

பொதுவிருத்தம்.

காசிமன்னன் மாதுதன்னை வெட்டச்சொல்லிக்
கட்டளையு மிட்டபடி வீரவாகு
வீசிடுவே னென்றழைத்துச் செல்லுகின்றான்
மெய்யனரிச் சந்திரன்கை யினிலொப்பித்தாற்
கூசிடா மற்படியே துண்டஞ்செய்வான்
கூறியவென் சபதமது பங்கமாகும்
ஆசைமொழி யாற்றடைசெய் திடுவேனென்றே
அருந்தவனு மவ்விடத்தைப் பொருந்தவானே.

விஸ்வாமித்திரர் துராலோசனை.

ஆஆ காசிராஜன் சந்திரமதியை வெட்டும்படிக்குக் கட்டளையிட்டு வீரவாகுத்தோட்டி யழைத்துச்செல்கின்றான் அரிச்சந்திரனவன் மயானத்திலிருப்பதால் அவனிடமொப்பிப்பானாகில் அவன் சத்தியவானானதினிமித்தம் மனைவியென்ற அபிமானத்தை வகிக்காமல் வெட்டிவிடுவான் அப்படி வெட்டிவிடுவானாகில் என்னுடைய சபதம் பங்கமாய்ப்போய்விடுமாதலால் யானிப்பொழுதே மயானத்திற்குச் சென்று அரிச்சந்திரனைக்கண்டு ஆசைவார்த்தைகளைக்கூறிச் சந்திரமதியை வெட்ட வொட்டாமலும் எனது சபதம் நிறைவேறும்படியாகவும்வேண்டிய ஏற்பாடு செய்யும்பொருட்டு இதோ செல்கின்றே னிந்தப்பகலூர்.

பொது விருத்தம்.

நாவினிற் பொய்சொலாத நரபதி கீர்த்தியின்று
பூவுல கினிலிலங்கப் போவதி னுலேயங்கு
மேவியே யறிவோமென்று விண்ணுல கத்திலுற்ற
மாவதிஷ் டருமேயிந்த்ர மன்னன்முன் புகலுவாரே.

வதிஷ்டர்சொல் தரு.

[விரசமானவார்த்தைவேண்டாம் விட்டுவிடடா]
என்ற ட்ராமாப்பதத்தின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்த்ர நாமின்று பூவுலகை மேகுவோம்வாராய்

அநுபல்லவி.

அந்தவரிச் சந்த்ரன்வாய்மை
யறியவேணுமே
முந்திக்காதி மைந்தன்சொன்ன
விந்தைதோணுமே (இந்)

(வதி-வ-ம்.) ஹேற இந்திரகுமார பார் யானுனக்கு முன்னம் அரிச்சந்திரன்பொய்சொல்லாத நீதிவானென்றெடுத்துரைத்ததற்கு மாறுபாடாகப் பொய்சொல்லும்படி செய்கின்றேனென்று சபதங் கூறி யென்னை புனலாகாவலிலெரப்பித்துச் சென்ற எனது பகை வனுகிய விஸ்வாமித்திரன் அரிச்சந்திரனுடைய நாடுநகரபவுஷ பாக்கியாதிகளனைத்தும் பறித்துக்கொண்டு படாதகஷ்டப்படுத் திச் செய்யாத இம்சைகள் செய்தும் அவன் காரியம் ஒன்றும் பலிக்கவில்லை அத்தச்சபதம் இன்றயத்தினம் மெய்பொய் யென்று இரண்டிலொன்று முடிவுறப்போகின்றமையால் அந்த விபரீ தத்தைக்கண்ணுற்று உண்மைதெரிவதற்காகத் தேவகுழாங்களு டன் பூலோகஞ்செல்வோம் வருவாயாக.



இந்திரன்சொல் தரு.

[அன்னையோனுன்னை நம்பினேனெனக்கருள்புரிகுவாய்]
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம் - கமாஸ் - தாளம் - ரூபகம்.

பல்லவி.

மாதவரோநாமிங்கிருந்தந்த மகிமையினைத்துந்தெரிகுவோம்

அநுபல்லவி.

பூதலத்துநற் சேதிமுடிவிற்
போயறிந்துமேவருகுவோம் (மாத)

(இந்-வ-ம்.) ஆஆ தவசிரேஷ்டரே தாங்கள் பாஷிப்பது வாஸ் தவந்தான் நாம் அந்தரவீதியிலிருந்து நடக்கும்விபரீதங்களையெல் லாம் பார்த்துவிட்டு முடிவுறுஞ்சமயத்தில் நமது தேவகூட்டத்து டன் பூலோகஞ்செல்வோம் ப்ரபு.

(வதி-வ-ம்.) ஆஞைப்படியே செய்வோம் இந்திரகுமார.

பொது விருத்தம்.

துய்யமாய் முனிவன்செய்த கொடுமைகள் பலவானுலும்
மெய்புறை தவறிடாத வேந்தரிச் சந்த்ரன்கீர்த்தி
வையகத் தினிலேயெங்கும் வழங்கிடப் போகுஞ்சேதி
தையலா முமையாளுக்குச் சங்கரன் கூறுவாரே.

ஈஸ்வரருக்கும் பார்வதிக்குஞ்சம்பாஷணைத் தரு.

[சாஹித்திசித்ரமானபீதம்பயாரே மனோபைாகினயோர்யாரே]
என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.
இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

ஈஸ்வரர்சொல் கண்ணி.

அவனியில்நடந்திடும் அதிசயந்தெரியுமோ
அடியேயெனதுசகி பார்வதியே

பார்வதிசொல் கண்ணி.

சிவனேயவ்வதிசயந் தெரிகிலேனுகையாற்
திருவுளமிரங்கியே-கூறுமையா

ஈஸ்வரர்சொல் கண்ணி.

அய்யோத்திமாநகர் அரிச்சந்த்ரன்மெய்யனென்
றனைவோருக்குந்தெரிந்திடப்-போகுதடி

பார்வதிசொல் கண்ணி.

மெய்யனென்றவ்வுலகினில் விளம்பிடும்படிக்கான
விபரத்தையின்னதென்று-சொல்லுமையா

(பார்வதி-வசனம்.) ஆஆ ப்ராணநாத் அரிச்சந்திரனைப் பூலோகத்தில் மெய்யனென்று சொல்வதற்கேற்பட்ட காரணத்தைத் தெரிவிக்கவேண்டும் ப்ரபு.

ஈஸ்வரர் விருத்தம்.

தேவரக சியப்படிக்குச் சின்னாள்முன்னால்
தேவேந்த்ரன் சபையிலரிச் சந்த்ரன்றன்னை
ஆவனுடன் மெய்யனென்றே வதிஷ்டன்சொல்
அல்லவென்றே கோசிகனும் வாதுகூறிக்
காவலனைப் பொய்யனெனச் செய்யாவிட்டாற்
கடுந்தவத்திற் பாதிதத்தஞ் செய்வேனென்று
கோவமுடன் சபதமது செய்தானந்தக்
கொள்கையின்று முடியுமங்கே செல்வோம்பெண்ணே.

(ஈஸ்வரர் வசனம்.) அடி ப்ராணசகி பார்வதி பார் ஆதியிலேற்பட்ட தேவரகசியத்தின்படி சின்னாட்குமுன்னால் இந்திரன் சபையில் அவ்வரிச்சந்திரனை மெய்யனென்று வதிஷ்டனும் பொய்யனென்று விஸ்வாமித்திரனும் சம்வாதஞ்செய்தார்கள் அதனாற் கௌசிகன் வாதப்படி அரிச்சந்திரனைப் பொய்யனாக்காவிடிற் றனதுதவத்திற்பாதி அவ்வரசனுக்குக் கொடுப்பதாகச் சபதங்கூறிச்சென்று மன்னனைச்செய்யாத இம்சைகளெல்லாம்புரிந்தும் கோரியகாரியம் பலிதமில்லாமல் இப்போது அவ்வேந்தன் பட்டமகிஷியாகியசந்திரமதியென்னும் பதிவிரதாசிரோமணியை வெட்டும்படியான சம்பவமேற்படுத்திவிட்டான் அவ்வெட்டானது, கழுத்திற்புஷ்பமாலையாகவிழ்ந்து அவ்வரிச்சந்திரனுடைய மெய்மையென்னுங்கீர்த்தியானது திரிபுவனங்களும்பிரகாசிக்கப்போகின்றது அக்கண்காக்ஷி



யைப்பார்க்க இந்திராதிதேவர்களெல்லாம் வருகின்றார்கள் நாமும் அவர்களுடன்சென்று அரிச்சந்திரனுக்குத் தெரிசனங்கொடுத்து வருவோம் பெண்ணே.

(பார்-வ-ம்.) ஆணைப்படியே செல்வோம் ப்ராணநாத்

பொது விருத்தம்.

மைந்தனை யிழந்தகாசி மன்னவன் சொல்லைக்கேட்டுச்
சந்திர மதியைக்கூட்டித் தடபடலாகவந்த
சுந்தர வீரவாகு சுடலையிற் சென்றேயங்கு
விந்தையாய்க் காவலுற்றவேந்தனை யழைத்திட்டானே.

(வீர-வ-ம்.) டே அனிச்சத்தோட்டி எங்கடா இருக்கிறாய்.

(அரி-வ-ம்.) இதோ காத்துக்கொண்டிருக்கின்றேன் வீரவாகு.

வீரவாகுத்தோட்டி விருத்தம்.

பத்திரமாய் நீயுமிங்கே யிருக்கிறாயோ
பாரிந்த மங்கையும்நம் வேந்தனாரின்
புத்திரனை யின்றேதோ கொன்றிட்டாளாம்
பூவைதனை வெட்டிவிடும் படியதாக
உத்திரவு கொடுத்தாரா கையினாலிந்த
ஒண்டொடியை நடுச்சுடலைக் கழைத்துச்சென்று
கத்தியினி லொருவெட்டாற் றலைகீழ்வீழ்கக்
காட்டுவாய் மன்சொல்நிலை நாட்டுவாயே.

(வீர-வ-ம்.) டே அனிச்சா மசானத்திலே பத்திரமாயிருக்கிறாயா நல்லது இந்தத்திருட்டுக்கூத்தியாரு நம்பராசாவோட மகனைக் கொன்னுட்டாளாம் இவளை ராசா ஒரேவெட்டாய் வெட்டிப் போடச்சொன்னாங்கோ ஆகையாலே நீயிவளை நடுமசானத்துக்குக் கூட்டிக்கிட்டுப்போய் தலைகுதிச்சுவிழ இந்தக் கத்தியாலே ஒரே வெட்டாய் வெட்டிபோடடா அனிச்சா.

(அரி-வ-ம்.) அப்படியே வெட்டிப்போடுகின்றேன் வீரவாகு.

(வீர-வ-ம்.) ஆனா நானு ஊட்டுக்குப்போகட்டுமா.

(அரி-வ-ம்.) அப்படியே போய்வாவீரவாகு.

பொது விருத்தம்.

தோட்டியும் விட்டுப்போன தோகையுந் தனதுசொந்த
மேட்டிமை மனைவியென்ற விபரமுந் தெரிந்துகொண்ட
தாட்டிக முடையமன்னன் றனதுளத் தினில்மென்மேலும்
வாட்டிடுங் கவலைகொண்டு வருந்தியே புலம்புவானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

அரகரா சிவனேகாசி யண்ணலே விஸ்வநாதா
தரணிபொன் றுரைவார்த்துத் தனையனை யிழந்துநீசக்
கிரகமுற் றிருக்கச்செய்தாய் கிளிமொழி மனைவியின்றன்
சிரமது துண்டமாகச் செய்யவு மைத்திட்டாயோ.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[இதிசமயமுரா இனகுலதில்கா]
என்ற க்ருத்திகையின் வர்னமெட்டு.
இராகம்-உதயரவிசந்த்ரிகா-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுவுஞ்சம்மதமா-ஈசனேயுனக்கு
இதுவுஞ்சம்மதமா

அநுபல்லவி.

விதிவசமீதோ விமலாநின்சூதோ (இது)

சரணம்.

புரஞ்செலப்பாதை போனவிக்கோதை
சிரந்தனைக்கொய்யச் செய்தனையையோ (இது)

(அரி-வ-ம்.) ஆஆ ஜெகதீசா காலகண்டையரிடம் பணமுதலானவை வாங்கிவருவதாகக் காசிநோக்கிப் பாதையிற் சென்ற எனது மனைவிக்குத் தலைபோகும்படியான ஆபத்தையுங் கொண்டுவந்து விட்டுவிட்டனையே இதுவுனக்குச் சம்மதந்தானு ஆஆ ஈசா இதுவும் விதிவசமோ அல்லது நின்றிருவிளையாடலான சூதோ தெரியவில்லையே இனியென்செய்வேன்.



## சந்திரமதிசொல் தரு.

[மாதவமேயிவ்வுருவாய் வந்ததுமென்விதிவசமோ]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னமதியெண்ணுகின்றீர் என்னுடையநாயகரே

அநுபல்லவி.

முன்னிருந்த மன்னர்களின்
முறையதுபோல் உறுதிகொள்வீர் (என்)

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணப்ரியாபாருங்கள் முன்னிருந்த அரசர்கள்செய்கையும் அவர்கள் தருமங்களும் சாமர்த்தியங்களும் இன்னும் வளர்ந்துகொண்டிருப்பது நன்றாயறிந்த தாங்கள் உலகமாய்கையிலுழன்று மயங்குவது தகுதியன்று ஆதலால் அடியாளைப்பற்றிக் கிஞ்சிற்றேனும் யோஜியாமல் முன்னோர்களின் செய்கைப்படி தாங்களும் மனதைத்திடப்படுத்திக் காரியத்தை நிறைவேற்றுங்கள் ப்ராணநாத.

பொது விருத்தம்.

சூரிய னுதிக்குமட்டுந் தாங்கிய சத்யகீர்த்தி
காரிகை குரலைக்கேட்டுக் கண்விழித் தெழுந்துபார்த்து
நேரினில் மாதைக்கட்டி நிற்கவைத் திருப்பதோர்ந்து
யாரிது செய்தாரென்றே யரசனை வினவுவானே.

சத்தியகீர்த்தி விருத்தம்.

மண்டலந் தன்னையாண்ட மன்னவா வாய்மைநேமா
தொண்டனு னிதுநாள்மட்டுஞ் சொற்பனந் தன்னிற்கூடக்
கண்டதே யில்லையிந்தக் காரணக் காக்ஷிதானுந்
தெண்டனை யிதுவோயாவர் செய்ததித் தீங்குதானே.

## சத்தியகீர்த்திசொல் தரு.

[நின்னுகம்மிநானு நிரஜனயனு]
என்ற ஜாவளியின் வர்னமெட்டு.
இராகம் - காம்போதி - தாளம் - ஆதி.

பல்லவி.

மன்னவாவித்தீது வந்தவகையேது

அநுபல்லவி.

அன்னைகையைக்கட்டி அடித்ததேம்மட்டி (மன்)

சரணங்கள்.

பார்க்கும்போதேமிகப் பதைக்குதேநெஞ்சம்
தீர்க்கமாகச்சேதி செப்புமையாகொஞ்சம் (மன்)

நித்திரையினலே நேர்ந்தவுண்மைகாணேன்
பத்தினியும்வந்த பக்குவங்கள்தோணேன் (மன்)

(சத்-வ-ம்.) ஆஆ மகராஜ் யான் குடிசையிற் சற்று அயர்ந்து நித்திரைசெய்து விழித்தேன் விடிந்துவிட்டது தங்களைக் காணே மென் றெழுந்துபார்த்தேன் இறைவிகட்டுண்டு தங்களிடஞ் சம்பாஷித்துக்கொண்டிருப்பது தெரிந்து இங்கோடிவந்தேன் நல்லது மறையவர்க்கடிமைப்பட்டிருந்த எனதன்னையாகிய சந்திரமதியம்மாள் இவ்விடத்திற்கு வந்திருப்பதும் கரத்தோடுகரம் பிணைத்துக் கட்டியிருப்பதும் தேகமெங்கும் ரத்தமொழுகஅடிபட்டிருப்பதும் பார்க்கப்பார்க்க என்மனமானது பதைக்கின்றதே ஆஆ இப்படிச் செய்த துஷ்டர்கள் யாவர்களோ தெரியவில்லையே ஆஆ இவ்விபத்துநேர்ந்த காரணம் யாது மகராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

குடிகளை வருத்தினேனே குறைவுக ளென்செய்தேனே
படிமிசை யாருஞ்செய்யாப் பாபம்நான் செய்திட்டேனே
இடியின்மே லிடிவீழ்ந்தாற்போ லிடர்கள்மென் மேலுமாகப்
பிடிபிடி யென்றேயென்னைப் பின்பற்றித் தொடருதையா.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[ஜர்மதோரஹை ஜானி ஜர்மதோரஹை]
என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு.
இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - சாபு.

பல்லவி.

என்னசெய்குவேன் மந்த்ரி என்னசெய்குவேன்

அநுபல்லவி.

மன்னும்விதிக்கு உன்னியினிமேல் (என்)



சரணங்கள்.

படம்விரிசர்ப்பக் கடியினலேநம்
பாலன்வனத்தில்மாண்டதாய்ச்
சுடவேவந்தாளே-யிவள் சுடவேவந்தாளே
மன்னும்விதிக்கு உன்னியினிமேல் (என்)

சுடவேபணமும் நொடியிற்கொணரச்
சொல்லியனுப்பினேனையா
இடிபோல்வந்ததே-சேதி இடிபோல்வந்ததே
மன்னும்விதிக்கு உன்னியினிமேல் (என்)

கொலைபுரிந்தனள் தலையைவெட்டென்று
கோதையைக்கூட்டிவந்தானே
புலையனுனவன்-கொண்ட புலையனுனவன்
மன்னும்விதிக்கு உன்னியினிமேல் (என்)

(அரி-வ-ம்.) ஆஆ ப்ரதான் எனக்கடிக்கடி நேரும் விதியின் கொடுமையை யென்சொல்வேன் பாரும் நீர் நித்திரைசெய்துகொண்டிருக்கும்போது இவள் நமது தேவதாசன் றெர்ப்பைகொய்யக் கானகத்திற்குப் போ ளிடத்திற் சர்பந்தீண்டி யிறந்துவிட்டதாகவும் அவனைத் தகனஞ்செய்யவேண்டுமென்றும் இங்கெடுத்துக்கொண்டுவந்தனள் இதோ பாலனைக் காஷ்டத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது அதற்காக வீரவாகுக்குச் செல்லவேண்டிய காற்பணமும் முழத்துண்டும் வாங்கிவரும்படியாக வேதியரிடத்திற்கனுப்பினேன் அங்ஙனமிருக்க இப்போது வீரவாகு இவளைக் கூட்டிவந்து என்னிடமொப்பிவித்து இவள் ஏதோ காசிராஜன் மைந்தனைக் கொலைபுரிந்ததாகவும் அதற்காகத் தலையை வெட்டிவிடும்படி மன்னவனுத்திரவுசெய்திருப்பதாகவுஞ் சொல்லிப்போய்விட்டான் அதன்காரணத்தை யிப்போது விசாரிக்கப்போகின்றேன்ப்ரதான்.

சத்தியகீர்த்தி விருத்தம்.

வள்ளலே நாமுங்கால மகிமையாற் சிலதுதுன்பங்
கொள்ளவு மானதாலிக் கொடுமையை யெந்தக்காலந்
தள்ளிட முடியுமென்று சஞ்சலத் துடனிருக்க
உள்ளரா ளளவுந்தன்ப மோங்கிடச் செய்திட்டீரே.

## சத்தியகீர்த்திசொல் தரு.

[தஷ்தீரமாரேயிந்திஞைகை சேபதல்சுயி]
என்ற இந்துஸ்தானியின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

மன்னுநீர்சொன்ன-வார்த்தைகேட்டு-மனதுவேகுதே

அநுபல்லவி.

சின்னவனேமன்      றன்னிடத்திற்
சேர்ந்துவிட்டானே      (மன்னு)

சரணங்கள்.

மைந்தனிறந்த      விந்தையந்த
மாமுனிகுதோ
எந்தனன்னைக்கு      வந்ததிங்கின்
இயல்பினியேதோ      (மன்னு)

பட்டகாலிலே      படுமென்ற
பழமொழிபோலே
கெட்டகுடிக்கே      கேடுவந்து
கிட்டுதோமேலே      (மன்னு)

(சத்-வ-ம்.) ஆஆ மகராஜ் பாருங்கள் தாங்கள் தேவதாசன் சர்ப்பந்தீண்டி மாண்டானென்று பாவித்தவுடனே என்மனமான அக்கினியிலிட்ட மெழுகுபோலுருகிக் கொண்டிருந்தது இப்போது சந்திரமதியம்மாளைச் சிரச்சேதஞ் செய்வதற்காகக் கொண்டுவந்து விட்டிருப்பதாகப் புகன்றவுடன் அவ்வக்கினியிற் சிக்கிய சருகுபோல் வேகின்றதே ஆஆ (பட்டகாலிலேபடுங் கெட்ட குடியேகெடும்) என்ற பழமொழி காதலாமலகம்போல நமக்கே பலித்துவிட்டதே ஆஆ பாலகனிறந்த கோலமானது விஸ்வாமித்திரர் குதோ யாதோ தெரியவில்லை அன்னைக்குற்பவித்த விபத்தானது யாது காரணத்தினால் நேர்ந்ததென்று துலங்கவில்லையே ஆஆ மகராஜ் இவ்வாறுத்துயரங்களுக்கென் செய்வோம் ப்ரபு.

(அரி-வ-ம்) ஆஆ ப்ரதான் தெய்வகட்டளைக்கு நாமென்செய்கின்றது நல்லது சந்திரமதியின்வாய்மொழியை விசாரிக்கின்றேன்.

(மர்-வ-ம்.) அப்படியே விசாரியுங்கள் மகராஜ்.

306



## அரிச்சந்திரன்சொல் தரு.

[மாயாகானிமோசமேவா ஏமாந்துனேசெவி.]
என்ற ஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தவிதியுந்தனுக்கு-வந்ததேதடி-மானே

அநுபல்லவி.

புந்திமயங்கிப்      பூசுரர்முன்னே
பொன்கேட்டுவருவதாய்ப்      போனதின்பின்னே (இந்)

(அரி-வ-ம்) ஆஆ ப்ராணசகி நீ காலகண்டையரிடத்திற் காற்பணமும் முழத்துண்டும் வாங்கிவருவதாகச் சென்றபின்னர் உனக்கிப்போபட்ட விபத்தான சம்பவம் நேர்ந்தகாரணந் தெரியவில்லையே ஆஆ சந்திரமதி அதன் விபரந்தெரிவிக்கவேண்டும் பெண்ணே.

## சந்திரமதி சொல்லுதல்.

அகவல்.

என்னநான்சொல்வே னெனதுபர்த்தாவே
பொன்னதுவாங்கப் போனதோர்வேளை
பழியிடக்காசிப் பார்த்திபன்பிள்ளை
வழிதனிலிறந்து மர்மமாய்க்கிடந்தான்
தையல்நான்றேவ தாசனென்றெடுத்து
மெய்யினிலணைத்து விசனமுற்றழுதேன்
அந்தவேளையிலே யன்னகர்தன்னைச்
சொந்தமாய்கிதமுஞ் சோதனைசெய்யும்
தலையாரிகளுந் தடபுடலாக
மலைபோலோடி வந்தெனைப்பிடித்து
கட்டியேயடித்துக் காவலன்முன்னே
விட்டுநான்கொன்ற விதமதாய்ப்புகன்றார்
நிசமெனவெண்ணி நிருபனுமென்னை
இசைவுடன்வெட்டி யெறிந்திடச்சொன்னான்
தோட்டியுமிந்தச் சுடுகாட்டினுக்கு
கூட்டிவந்தென்னைக் கொலைசெய்யும்படிக்கு

செம்மலேயுமக்குச் செப்பினனிதுவே
உண்மையாதலினு லுமதுகையாலே
வெட்டிடும்படிக்கு விளம்பினபொழுதே
மட்டடங்காத மகிழ்ச்சிநான்கொண்டேன்
இப்பொழுதேநீ ரின்னகர்மன்னன்
செப்பியபடியே செய்திடுவீரே.

---

அரிச்சந்திரன் விருத்தம்.

கெட்டியாய் மனதுதேர்ந்த கிளிமொழி மானேயுன்னைக்
கட்டியா னிதுநாள்மட்டுங் கைபிடித் தடித்ததில்லை
திட்டியே யறியேனையோ நீவினைப் பயனால்நானும்
வெட்டியா னனதுன்னை வெட்டுதற் குத்தானேடி.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

[ஒருமாதுவரச்சொன்னுளென்னைத்தானே]
என்ற ட்ராமாஜாவலியின் வர்னமெட்டு
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

உன்னைவெட்டமனங் கொள்ளுமோடிபெண்ணே

அநுபல்லவி.

அடிபெண்ணே யெழிற்கண்ணே யிதையெண்ணே(உன்னை)

சரணங்கள்.

அடி-வாழ்ந்திருந்தே வாழ்வனைத்தும்போச்சே
அடிபோச்சே. யிந்தப்பேச்சே வசையாச்சே(உன்னை)

அடி-கத்திகொள்ளக் கைசோருதேமானே
அடிமானே செழுந்தேனே யினிநானே(உன்னை)

அடி-சுடலைகாத்த தொர்தமிதுதானே
இதுதானே பாவிநானே சகிப்பேனே(உன்னை)

அடி-என்னசெய்கு வேண்டிமடமாதே
மடமாதே தெரியாதே இந்தத்தீதே(உன்னை)

---



(அரி-வ-ம்.) ஆஆ சந்திரமதி உன்னை வெட்டுதற்கு என்மனந் துணியுமா ஆஆ இந்தவிபத்தானது உலகத்திற்கெல்லாம் வசையூ கப்போய்விட்டதே ஆஆ வாளாயுதம்பற்றுதற்கு என்கரமானது நடுக்கமுறுகின்றதே ஆஆ இந்தக் கொலைபாதகத்தைச் செய்வதற் காகவா சுடலைகாத்திருந்தேன் ஆஆ இப்படி வருமென்று எனக் குக் கிஞ்சிற்றுந் தெரியாதே இனியென்செய்வேன் பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

நாதனே புடவிதன்னில் நல்லர சாக்ஷிசெய்த
நீதனே சத்தியவாக்கு திருபனே புவியோர்போற்றும்
பாதனே பழிப்பையுன்னிப் பற்பல விதமதாக
வேதனை யடைந்தாலிந்த மேதினி யேசுமையா.

---

## சந்திரமதிசொல் தரு.

[மாதிவளழகை யாரெனெத்துரைக்க மன்னுளென்னுலாகாதாகா]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-கல்யாணி-ஏகதாளம்.

பல்லவி.

விசனமேனுமக்கு வெட்டுவீர்மன்னு
விசனமேனுமக்கு

அநுபல்லவி.

வசையாமென்று மயங்கிடவேண்டாம்(விசன)

சரணம்.

நீர்மேற்குமிழி நேருமிக்காயம்
பார்மேற்புகழைப் படைப்பதேஞாயம்(விசன

---

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணகாந்தா தாங்களேதோ உலகத்திற் பழிப்புக்கிடமாகுமென்று வியாகூலப்படுகின்றீர்கள் பாருங்கள் இத்தேகமானது நீர்மேற்குமிழிபோல நிலையில்லாமலழிந்து போ கக்கூடியது கீர்த்தியானது கல்லுங்காவேரி புல்லும் பூமியுள்ள வரை நிலைத்திருக்கக்கூடியது அங்ஙனமிருக்கத் தாங்கள் மனக்ஷப லப்படும்பக்ஷத்தில் இதுவே யுலகத்திற்கு வசையாகநேரிடும் ஆத லின் தாங்கள் கிஞ்சிற்றேனும் கவலையுறாது மனதைத்திடப்படுத்தி

என்னை யொரேவெட்டாய்வெட்டிக் கீர்த்தியை நிலைநாட்டுங்கள் ப்ராணநாத்.

(அரி-வ-ம்.) ஆனாலப்படியே வெட்டிவிடுகின்றேன் பெண்ணே.

பொது விருத்தம்.

சந்திர மதியைவெட்டத் தலைவனு மொருவாருகச்
சிந்தையுந் தேறிநிற்குஞ் செயலினை யறிந்துகொண்ட
விந்தைசேர் தவத்துவிஸ்வா மித்திர முனிவனங்கு
வந்தர சனைத்தடுத்து வார்த்தைக ளாடுவானே.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

மன்னவா வொருபொய்க்காக வையக மிழந்தாயுள்ள
பொன்னையு மிழந்தாய்நல்ல புதல்வனை யிழந்தாயிப்பப்
பன்னியை வெட்டுதற்குப் பரிவுடன் றுணிவுகொண்டாய்
என்னுரை கேட்பாயானு லிடரெலா மகன்றுபோமே.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[அங்குநானிருந்தவனை யழைத்துவந்ததேண்டிகண்ணே]
என்ற இந்திரசபாவின் வர்ணமெட்டு.
இராகம்-கருட்டி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.
கண்ணிகள்.

வையகம்புகழயோத்தி வாழ்ந்தவரிச்சந்திரனே
பொய்யுரைத்தாற்றுன்பமெல்லாம் போய்விடுமேசுந்தரனே (வைய)
முன்னமேகொடுத்தநகர் தன்னையில்லையென்றுசொன்னால்
கன்னிகையைவெட்டவந்த கஷ்டங்கள்விலகுமுன்னால் (வைய)
தேசநகரந்தருவேன் செல்வனுமெழுந்திடுவான்
யோசனைசெய்வாயேயானால் உள்ளவனை நீகெடுவாய் (வைய)

(விஸ்-வ-ம்.) ஹே அரிச்சந்திரபூபதி உன்மனைவியையேன் வீணாகக் கொலைபுரியத் துணிகின்றனை யூரா நீ முன்னாலெனக்குக்



308

கொடுத்த நாடுநகராதிகளைக் கொடுக்கவில்லையென்று இப்போது அன்னியர்களறியாமலாவது என்னிடத்தில் ரகசியமாய்ப் பட்டும் படாமல் ஒரு பொய்மட்டுஞ் சொல்வாயாகில் யான் வெளியில் யாவரிடத்திலுஞ்சொல்லவில்லை உன்மனைவியையும் வெட்டவேண்டுவதில்லை இப்பொழுதே யுனது நாடுநகரவைசுவ-பாக்கியாதிகளனைத்துங் கொடுத்துவிடுகின்றேன் இறந்துபோன உனது புதல்வனையு மெழுப்பித்தருகின்றேன் இதற்கு நீ யிணங்காமல் மறுப்பாயாகில் இன்னும் பலவிதமான துன்பங்களனுபவிக்கும்படியான சம்பவங்களேற்படுமாதலால் இப்போதென்சொல்கின்றனை மன்னா.

அரிச்சந்திரன் விருத்தம்.

கறந்திடுபால் முலையதனிற் புகுந்திட்டாலுங்
கடைந்தவெண்ணெய் மோரினிலே ரேகித்தாலும்
பறந்திடுகா கம்வெண்மை நிறமானாலும்
பானுமதி தெற்குவடக் காய்ச்சென்றாலும்
இறந்திடுவோ ருயிரதுபெற் றெழுந்திட்டாலும்
எழுகடலி னீரனைத்துஞ் சுவறினாலுஞ்
சிறந்திடுமிவ் வுலகமதே யழிந்திட்டாலுஞ்
செப்பியவாக் கெப்பொழுதுந் தப்பிடேனே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[நின்னுபாசி எட்லஉந்துரு]
என்ற க்ருத்திகையின் வர்ணமெட்டு.
இராகம்-பலஹம்ஸா-தாளம்-ஆதி.
பல்லவி.

இந்தவார்த்தை சொல்வதுஞாயமோ

அநுபல்லவி.

முந்நியேயென்தன் சிந்தையறிந்தும் (இந்த)

சரணம்.

சொத்துகள்போனாலுந் துயர்பலவானாலுஞ்
சத்தியமதுகெடத் தருமோகாண்மென்மேலும் (இந்த)

(அரி-வ-ம்.) ஆஆ தவசிரேஷ்டரே எனது மனவுறுதியை முன்னமே தாங்கள் நன்குணர்ந்திருந்தும் இப்போதென்னவார்த்

தை பாஷிக்கின்றீர்கள் பாருங்கள் எனது நாடுநகரபவுஷ பாக்கியாதிகள் போனாலும் மனைவிமைந்தன் போனாலும் புலால்நாற்றம் பொருந்திய இவ்வனித்தியதேகத்துக்கு என்னென்ன துன்பங்கள் சம்பவித்தாலும் நீதிக்கும் நியாதிக்கும் நேர்விரோதமான பொய்யுரைத்துச் சத்தியவிரதத்துக்குப் பங்கந்தேடிக்கொள்ளப்போகின்றேனா ஒருக்காலுமில்லை அங்ஙனமிருக்கத் தாங்கள் துறவியாயிருந்தும் அடிக்கடி யிவ்வித ஞாயவிரோதமான வார்த்தைகள் பாஷிப்பது தகாதாகையால் வந்தவழியை நாடிச்செல்லுங்கள் முனிவரே.

(விஸ்-வ-ம்.) ஹே அரிச்சந்திரா உனக்குத்தானே நன்மை சொன்னேனேயன்றி அதனாலெனக்கொரு லாபமுமில்லை நீகோபமாகப் பாஷிக்கின்றமையால் இங்கெனக்கென்ன காரியமிருக்கின்றது ஆகையால் யான் சென்றுவருகின்றேன்.

(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள் ப்ரபு.

பொது விருத்தம்.

தனக்குள சமர்த்துமற்ற தந்திர மனைத்துங்காட்டித்
தினைப்பிர மாணமேனுஞ் செம்மலி னிடஞ்செல்லாத
வினைப்பய னோர்ந்துவிஸ்வா மித்திர முனிவன்றானும்
மனத்துயர் கொண்டுமென்மேல் வருந்தியே புலம்புவானே.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

உற்றதோர் பொருளையெல்லா மொழுக்கமாய் வாங்கலானேன்
பெற்றமைந் தனையுங்கொன்றேன் பெண்டிரைக் கொலையுஞ்செய்யுங்
குற்றமுண் டாக்கிவைத்தேன் கொற்றவ னவைகட்கெல்லாஞ்
சற்றகங் கலங்கிடாமற் சத்யமே நிலைகொண்டானே.

விஸ்வாமித்திரர்சொல் தரு.

[இத்தனைகோபமாகுமா]

என்ற பதத்தின் வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

எண்ணமும் மண்ணாய்ப்போச்சுதே

613 307



அநுபல்லவி.

அந்த-அண்ணலரிச் சந்திரனும்
புண்ணியவா னதால் (எண்)

சரணம்.

இந்திரன் சபைதனக்கு
எப்படியினிமேற்செல்வேன்
முந்திய சபதத்திற்குத்
தந்திரங்களென்னசொல்வேன்
அந்தவதிஷ்டன்றனைநான்
எந்தவிதமாய்வெல்வேன் (எண்)

(விஸ்-வ-ம்.) ஆஆ தெய்வமே எனதெண்ணமெல்லா மண்ணாய்ப்போய்விட்டதே ஆஆ எவ்விததுன்பங்களை யேற்படுத்தினாலும் அவ்வரிச்சந்திரனானவன் அதற்கெல்லாம் பயப்படாத சத்தியவைராக்கியமுள்ள சித்தனாயிருக்கின்றானே ஆஆ இந்திரன் சபையில் முன்கூறிவந்த என் சபதமானது இன்றோடு தோர்வையடைந்துவிட்டதே ஆஆ இனிமேலெந்த முகத்தைக்கொண்டு இந்திரன் சபைக்குச்செல்வேன் எனது பகைவனாகிய வசிஷ்டனை ஜெயித்துவிட்டதாய் எந்தவாயாற் சொல்வேன் ஆஆ ஜெகதீசா இப்படிச் செய்துவிட்டனையே இனியென்செய்வேன்.

பொது விருத்தம்.

செங்கையிற் சந்த்ரவாளுந் திகழரிச் சந்த்ரமன்னன்
நங்கையோர் பாகம்வைத்த நாதனுங் காசிவாழுங்
கங்கைவே ணியனைநெஞ்சிற் கருதியே மனைவியான
மங்கையை வெட்டுதற்கு மனமது துணிந்திட்டானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

நதிபல சூழ்கன்னோசி நாட்டினை யரசியற்றும்
மதிதய மன்னன்பெற்ற மகளெனு மயிலேதேனே
அதிகசுந் தரியேபெந்த னைசநா யகியேபுந்தன்
விதிவசம் போலேநானும் வெட்டவே துணிந்திட்டேனே.

### அரிச்சந்திரன்சொல் தரு.

[விஸ்வேசாவுந்தனைநான் வேண்டினபலனிதுவோ]

என்ற கீதநெறி அரிச்சந்திரநாடகத்தருவின் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கட்டவிழ்த்துவெட்டுவேண்டி கண்மணிசந்த்ரமதியே

அநுபல்லவி.

கிட்டவந்துநின்றுநீயுங் கிழக்குமுகமாய்த்திரும்பு
கிரமமாய் கிரமமாய் கிரமமாய் கிரமமாய் (கட்)

சரணம்.

இட்டதெய்வங்களைக்கோரு எந்நிழையேமனந்தேறு
மட்டிலாதகீர்த்திவந்து வாய்க்கும்படியன்புகூறு
மங்கையே மங்கையே மங்கையே மங்கையே (கட்)

---

(அரி-வ-ம்.) ஆஆ சந்திரமதி இப்போதுனது கரங்களைப் பிணைத்திருக்குங்கட்டவிழ்த்து அரசனுத்திரவின் வண்ணம் உனதுசிரத்தை யிந்தக்கட்கத்தாற் கண்டனஞ்செய்து விடுகின்றேன் நீ சமீபத்தில் வந்து கிழமுகமாகத்திரும்பி இஷ்ட தெய்வங்களைத் தியானித்து நமது கீர்த்தி நிலைநிற்கும்படியாகக் கோரிக்கொள் பெண்ணே.

(சந்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ப்ராணநாத்

### சந்திரமதிசொல்லுதல்.

சிங்காரபத்யம்.

கதியுடையகணவனைக் கனவிலும்மறவாத
கன்னிநானுகின்றேற் பரமசிவனே
மதிதயன்மாதவ வரத்தினுலேவந்த
மகளுநானுகின்றேற் பரமசிவனே
சதிபொய்கொலைகளவினைச் சாராதநீதியைத்
தழுவினவளாகின்றேற் பரமசிவனே
பதிவ்ரதாதர்மமது பங்கமில்லாதநற்
பாவைநானுகின்றேற் பரமசிவனே



அதிவிரைவதாகவென் முன்னேவந்து
அம்பிகையிேனடுநற் காக்ஷிதந்து
விதிவலிமையால்நேர்ந்த மிடிமைதீர்த்து
மெல்லியைக்காத்தருள்செய் பரமசிவனே.

(சங்-வ-ம்.) ஆஆ ப்ராணவல்லபா தங்களுத்திரவின் வண்ணம் ேதோ கிழக்கு முகமாகத்திரும்பி இஷ்டதெய்வத்தைத் தியானித் துக்கொண்டேனதலால் தாங்கள் உலகமாய்கையென்னுஞ் சம் ாரசாகரத்தை நினைந்து மனஞ்சோராமல் நீதியை நிலைநிறுத்தும் பொருட்டு ஓரேமனதாயிருந்து எனது சிரத்தைக்கண்டனஞ்செ யுங்கள் ப்ராணநாத்.

அரி-வ-ம்.) அப்படியே யிதோ வெட்டுகின்றேன் பெண்ணே.

அரிச்சந்திரன் விருத்தம்.

வேதமெய்ப் பொருளேகாசி விமலனே விஸ்வநாதா
மாதவர் நிதமும்போற்று மங்கையோர் பாகாவிந்தப்
பூதலத் தினிலேமெய்யின் புகழ்நிலை நிற்கவேண்டிக்
காதல்சேர் மனைவிதன்னைக் கத்தியால் வெட்டுவேனே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[மோகமுனேதாளலேரா முத்துபெட்டோராஜசாமி]
என்ற ஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கத்தியினால்வெட்டுகின்றேன் கங்காதரக்கடவுளே

அநுபல்லவி

சத்தியவா ஞகிலிந்தத்
தையல்சாகாதிருக்கவே
சித்தம்வைத்துக் காக்கவேணுந்
தேவேபுகழ்பெருக்கவே (கத்தி)
மெய்யனன்றிப் பொய்யனென்றால்
மின்னுயிர்போகவேணும்
வையமதில் யாவருக்கும்
மகிமைகளுண்டாக்கவேணும் (கத்தி)

(அரி-வ-ம்.) ஆஆ ஜெகதீசா நீயே கடவுளென்பதும் உனது வாக்கேவேதமென்பதும் அந்தவேதத்திற் சொல்லியதே தர்மமென்பதும் யானந்தத் தர்மமென்னும் விரதத்தைக்கொண்ட சத்தியவானென்பதும் என்னையே பதியாகக்கொண்ட பதிவிரதையிந்தச் சந்திரமதியென்பதும் உண்மையாயிருக்கும்பக்ஷத்தில் யான் இவ்வாளில் வெட்டும்போது இவள் சாவாமைபெறக்கடவது இவையாவும் பொய்யாகில் இவள் சாவைப்பெறக்கடவது அரகர மகாதேவா இதோ வெட்டுகின்றேன் ஆஆ என்ன அதிசயம்* அடி சந்திரமதி யானுன்னைவெட்டின சந்திரவாளாயுதமானது உனது கழுத்திற்புஷ்பமாலையாய்மைந்து விட்டதடி பெண்ணே.

(சந்-வ-ம்.) ஆஆ அப்படியா இதுவும் ஈஸ்வரன் செயல்தான் போலிருக்கின்றது ப்ராணநாத.

மயானகாண்டம் - முற்றிற்று.

# மீட்சிக்காண்டம்.

பொது விருத்தம்.

ஒருமனத் துடனேமன்ன னோங்கிவெட் டியவாளன்று
மருமலர் மாலையாக மனைவியின் கழுத்தில்வீழ்ந்த
தருணமே யிந்த்ரன்மற்ற சகலதே வர்களுஞ்சூழப்
பெருமையாய்ச் சிவனாரங்கு பிரசன்ன மாகினாரே.

ஈஸ்வரர் விருத்தம்.

முன்னமே நகரம்நாடு முனிவனுக் களித்துவிட்டுப்
பின்னவ னாலேயுள்ள பெருமைக ளனைத்துங்கெட்டு
இன்னல்க ளடைந்துமெய்யை யென்றுமே கைவிடா
மன்னவ னுன்னைப்போல வையகத் தினிலேயுண்டே





## ஈஸ்வரர்சொல் தரு.

[மோடியாலரா நாசாமிகுநாபை மோடியாலரா]
என்ற ஜாவளியின் வர்னமெட்டு.
இராகம்-கமாஸ்-ஏகதாளம்.

பல்லவி.

மெச்சினேனடா அரிச்சந்த்ராவுன்னை
மெச்சினேனடா

அநுபல்லவி.

அச்சந்தவ்ளடா-என் அருளைக்கொள்ளடா(மெச்)
பொய்யைவிட்டாயே-எங்கும் புகழப்பட்டாயே(மெச்)
மெய்யன்நீயடா-நல மேன்மைபெற்றுயடா(மெச்)

(ஈஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா யானுன்னை மிகவும் மெச்சினேன் பார் உனக்குப் பலவிதமான துன்பங்கள்நேரிட்டும் பொய்யென்பதைக் கனவிலும் நினையாமற் சத்தியத்தையே விரதமாகப் பூண்டு உத்தமியாகிய சந்திரமதியையும் மனஸ்பூர்வமாக வெட்டத் துணிந்து உலகமெங்கும் புகழும்படியான சற்கீர்த்தியைத் தேடிக் கொண்டாயல்லவோ உன்னைப்போன்ற நீதிமான்கள் இப்பூவுலகில் யாவரிருக்கின்றூர்கள் ஹே அரிச்சந்திரா உனக்கெனது பூர்ணுசீர்வாதத்துடன் என்றுஞ்சத்தியவாக்கு அரிச்சந்திரனென்னும் நாமகரணஞ்சூட்டி யிருக்கின்றேன் இனிமேல் யாதொரு துன்பமும் நேரிடாது நீயாதொன்றுக்கும் பயப்படவேண்டா மரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

சங்கரா போற்றிபோற்றி தற்பரா னந்தாபோற்றி
கங்கைவே ணியனேபோற்றி காளைவா கனனேபோற்றி
மங்கையோர் பாகம்வைத்த மான்மழுக் கையாபோற்றி
எங்களைக் காக்குங்கைலை யீசனே போற்றிபோற்றி.

(அரி-வ-ம்.) ஆரகரமகாதேவா சாம்பசதாசிவா கௌரிநாயகா ஜெகதீசா அடியேன் வந்தனம்புரிகின்றேன்.

(ஈஸ்-வ-ம்.) கல்யாண் அரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) இந்திராதி தேவர்களே அரிச்சந்திரன் வந்தனம் பரிகின்றேன்.

(தேவர்கள் வசனம்.) கல்யாண் அரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) குருசிரேஷ்டரே தொண்டன் வந்தனம்புரிகின்றன்.

(வதி-வ-ம்.) கல்யாண் சிஷ்யா.

சந்திரமதி விருத்தம்.

அரனிடந் தமர்ந்தமானே யம்பிகைத் தாயேபோற்றி
பரமசற் குணியேவானோர் பணியுமை யவளேபோற்றி
மரகத வல்லிகௌரி மாமலை மடந்தாய்போற்றி
தரமுடன் காக்குஞான சங்கரி போற்றிபோற்றி.

(சந்-வ-ம்.) ஆஆ உமாமகேஸ்வரி அடியாள் வந்தனம்புரிகின்றேன்.

(பார்-வ்-ம்.) கல்யாண் சந்திரமதி ஹே பதிவிரதாசிரோமணி நீயென்றுஞ் சுகஜீவியாக வாழக்கடவை.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[மாதவமேயிவ்வுருவாய் வந்ததுமென்வி திவசமோ]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-எதுக்குலகாம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சங்கராநீ ரிங்குவாத் ததியேன்செய்தபுண்ணியமோ

அநுபல்லவி.

பங்கயகு லங்கதிக்கப்
புங்கவரோ டிங்கிதமாய்ச் (சங்)

(அரி-வ-ம்.) ஆஆ கைலாசவாசா எங்கள் பங்கயகுலந்தன்ழைத்தோங்கும்படி அடியேனையோர்பொருட்டாயெண்ணி இந்திராதி தேவர்களுடன் பார்வதிசமேதராயெழுந்தருளி யிங்குவந்ததானது யான்செய்த புண்யவசத்தான்போலிருக்கின்றது ப்ரபு.

314



ஈஸ்வரர் விருத்தம்.

மன்னவா வுனதுசத்ய மகிமையாங் கீர்த்திதன்னைப்
பொன்னகர் புவிபாதாளம் பொருந்தியே யிலங்கச்செய்த
தன்னயந் தன்னைக்கண்ட நாங்களு முன்னைத்தேடி
இன்னிலம் வருவதற்கே யேதொரு தடையுமுண்டோ

(ஈஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா பார் உனது சத்தியமென்னுங் கீர்த்தியானது (சொர்க்க-மத்திய-பாதல) மென்னுந் திரிபுவனங்களிலும் பிரகாசிக்கும்படிசெய்துவிட்டனையே அதனையிருக்க யாங்களுன்னைத் தேடிவருவதற்கு என்னதடையிருக்கிறது அரிச்சந்திரா.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

குரிசிலின் மெய்மையென்னுங் குடத்துறு விளக்குப்பேரிட
விரிகட லுலகில்நன்றாய் விளங்கிடா திருந்ததாலே
திரிபுவ னத்தினுக்குந் தெரிந்திடும் படியதாகப்
பரிவுடன் செய்துவைத்த பண்ணவன் யானேயீசா.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[எங்கிருந்தோமிங்குவந்ததெப்படியாமே]
என்ற இந்திரசபாவின் வர்னமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ஆதி.

சரணங்கள்.

யிர்தவரிச்
எந்தனாலே
சந்திரன்றனே
குந்தபுகழ்
வித்தையுபி
மேவப்பெற்றனே
யாவனுடன்
தேவர்களை
தெரிசிக்கலானான்
காவலருட்
பூவுலகிற்
புனிதமாய்ப்போனான்
மன்னனுக்கு
என்னைப்போலெம்
எவர்செய்தார்நன்மை
இன்னிலமும்
பொன்னிலமும்
புகழுநீதன்மை

(விஸ்-வ-ம்.) ஆஆ ஜெகதீசாபாருங்கள் (குடத்திலிட்ட தீபம்) போல பிரகாசியாதிருந்த இவ்வரிச்சந்திரனுடைய சத்தியமென் னுங் கீர்த்தியானது என்னுலல்லவோ உலகப்ரசித்தியாகித் தாங் கள் மு மூவாதிதேவர்களையும் ஏககாலத்திற் றரிசிக்கலானுன் இ என்போல நன்மைசெய்தவர்கள் யாவரிருக்கின் பூவுலகிலுள்ள மன்னவர்கட்கெல்லாஞ் சிறந்த சத் யவானென்று இதுமுதல் விண்ணுலகும்மண்ணுலகனைத்தும் விய ந்துகூறுமென்பதற்கு யாதுதடையிருக்கின்றது ப்ரபு.

ஈஸ்வரர் விருத்தம்.

வல்லகோசிகனேநீயும் வழுத்துவ துண்மையாகும்
நல்லதிவ்வரசனுக்கு நடத்திய நீங்குமற்ற
தொல்லைகள் விளைந்ததெல்லாந் தூயவர் சபையின்முன்னே
மெல்லவே யெடுத்துயார்க்கும் விபரமாய்க் கூறுவாயே.

—oo—

(ஈஸ்-வ-ம்,) ஹே விஸ்வாமித்திரா நீசொல்வது உண்மையே நல்லது நீ யிவ்வரிச்சந்திரனுக்குச்செய்தநீங்கும் அதனுலிவனடைந்த கஷ்டமும் இத்தேவர்கள் சபையில் எல்லோருந் தெரியச்சொல்லக்கடவை.

## விஸ்வாமித்திரர் சொல்லுதல்.

அகவல்.

விமலனேசொல்வேன் விபரமாய்க்கேளும்
இமையவர்சூழும் இந்திரன்சபைமுன்
போயிருந்தேனப் போதுதேவேந்த்ரான்
தாயகமாகச் சபைதனைப்பார்த்து
புவியரசர்களிற் பொய்சொலாருண்டேல்
விவரமாயெடுத்து விளம்புமென் றுரைத்தான்
வதிஷ்டருமிந்த மன்னனைச்சொன்னுர்
பதஷ்டமாய்நானும் பகைதனைக்கருதி
அரிச்சந்திரவேள் அபத்தனென் றுரைத்தேன்
எரிச்சலாய்வதிஷ்டர் என்னிடத்தினிலே
வாதமுஞ்சொன்னுர் மறுத்துநான்சொன்னேன்
ஆதலினுலே யவ்விடமிருந்த



நாரதரனைத்தும் நலமுடன்கேட்டு
சீருடன்சபதஞ் செய்திடச்சொன்னுர்
அவ்வதிஷ்டருமே யரிச்சந்திரனை
எவ்விதமும்பொய் யியம்பிடச்செய்தால்
புலையனிடத்திற் புசிப்பதுமன்றி
தலையிற்கட்குடந் தாங்கியேதெற்காய்
செல்லுவேனென்று செப்பினர்சபதம்
வல்லவேள்பொய்யை வழங்கிடானுகில்
தவத்தினிற்பாதி தருவதாய்ச்சொன்னேன்
கவுத்துவமாகக் காசினிவந்தேன்
திரிச்சங்கென்னுஞ் செம்மலின்சேயன்
அரிச்சந்திரன்வா ழயோத்தியிற்சென்றேன்
வேள்வியொன்றியற்ற வேணுமாதலினுல்
தாழ்விலாப்பொன்னுந் தருகவென் றுரைத்து
நன்னயமாக நான்வசப்படுத்தி
மன்னவன்றன்னை வார்த்தையின்சமர்த்தால்
நாடுடன்றனது நகரமும்பின்னும்
தேடியேவைத்த செல்வமும்பறித்தும்
காரியம்பலியாக் காரணத்தாலே
ஊரையும்விட்டே யோட்டினேன்சாமி
இன்னும்பலவகை யிடைஞ்சல்கள்செய்தேன்
பின்னுந்தனக்குப் பிரியமாயுள்ள
மனைவிமைந்தனையும் மறையவனிடத்தில்
வினைப்பயன்போலே விற்றிடச்செய்தேன்
அரசனைப்பறையன் ஆட்கொளச்செய்தேன்
வரமதாலீன்ற மைந்தனைக்காட்டில்
பாம்புக்கிரையாய்ப் பண்ணியேவைத்தேன்
வீம்பினுற்காசி வேந்தனின்சேயை
திருடர்கள்கொன்ற செயலதைமாற்றி
அரிவையாற்கொன்ற தாக்கியேவைத்தேன்
மனைவியைக்கொல்லும் வகையதுஞ்செய்தேன்
எனதுகோரிக்கை யிசைந்திடவில்லை
அடர்ந்துநான்செய்த அன்யாயத்தால்
நடந்தவிர்த்தாந்தம் நாதனேயிதுவே.

—o—

ஈஸ்வரர் விருத்தம்.

இத்தனை தானேநீயு மியற்றிய துன்பமின்னம்
மெத்தவுண் டவைகட்கெல்லாம் வேந்தனும் நிலைகொடாமற்
சத்தியந் தன்னைக்காத்தான் சபதம்யார் பக்கமாகச்
சித்தியாச் சென்றவுண்மை செப்புவாய் விஸ்வாமித்ரா.

(ஈஸ்-வ-ம்.) ஹே கௌசிகா நீநடாத்திய துன்பங்கள் இவ்வளவுதானு இன்னுமனேகமுண்டு அப்படிச்செய்தும் அரிச்சந்திரன் சத்தியத்தைக் கைவிடவில்லையல்லவா நல்லது உங்களிருவருக்கும் ஏற்பட்டசபதத்திற் செலித்தவன் யாவன் தோற்றவன் யாவன் அந்தவிபரத்தைச்சொல் சீக்கிரம்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

ஏழைபங் காளாகைலை யீசனே யிமையோர்தேவே
ஆழமு மறிந்திடாம லாழியிற் காலையிட்ட
வேழமு மடிந்தவாறய் வேந்தனை யெதிர்த்தநானும்
ஊழது மடைந்துவிட்ட துண்மையீ துண்மைதானே.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[கருக்கினில்வளர்க்கோதாங்கும் ஓ ஏகாம்பரியே]
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

அரிச்சந்த்ரன்குணங் காணுதாலே யானேதோற்றேனே

அநுபல்லவி.

கருத்தகண்டநாதா-பொற் கமலமலர்ப்பாதா-இந்தக்
கஷ்ட-மும்வ திஷ்டரின திஷ்ட-மாகுமே(அரிச்)

சரணம்.

ஓதியபடிதவம் பாதிகொடுத்தேனியன்
ஊரைபக்கொடுத்தேன்-தல பேரையுமுடித்தேன்இது
உண்மை-யிந்த தன்மை-தனைக் கண்முன்-பாருமே(அரிச்)



(விஸ்-வ-ம்.) ஆஆ சிவபெருமானே பாருங்கள் இவ்வரிச்சந்திரனுடைய மனக்குறிப்பையறியாமற் சிற்றறிவாற் பலவித சங்கடத்திற்குள்ளாக்கிக் கடாசியாக நானேதோற்றேன் அதிஷ்டபாக்கியசாலியாகிய வதிஷ்டரோ செலித்தாராகையால் யான்முன் சொன்ன ஒப்பந்தப்படி யான்செய்த தவத்திற்பாதியும் இவன் கொடுத்த நாடுநகரபவுஷ பாக்கியாதிகளையும் இதோ திருப்பிக்கொடுக்கின்றேன் தங்கள் கண்முன்னுகவே பார்த்துக்கொள்ளுங்கள் ப்ரபு.

(ஈஸ்-வ-ம்.) ஆனல் தாரைவார்த்துக்கொடு சீக்கிரம்.

(விஸ்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் * ஹே அரிச்சந்திர மன்னுகரத்தைநீட்டு தாரைவார்க்கின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

தடுத்துநான் சொல்வதாகத் தவத்தரே நினைக்கவேண்டாம்
அடுத்தடுத் தெனதுசேதி யாவுநன் குணர்ந்தநீரும்
வடுப்பெறும் படிவீணுன வார்த்தைகள் பேசலாமோ
கொடுத்ததைத் திருப்பிவாங்கிக் கொண்டவ ருலகிலுண்டோ.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[அன்னையேசாலுன்னைநம்பி னேனெனக்கருள்புரிகுவாய்]
என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு.
இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கொடுத்தபொருளை மடித்துவாங்கிக்
கொண்டபேர்களைக் கண்டிலேன்

அநுபல்லவி.

எடுத்தவிரதங், கெடுத்துப்பழியை
ஏற்றிடமனங்கொண்டிலேன் (கொடு)

சரணம்.

எந்தன்மனதை யின்னஞ்சோதிக்க
எண்ணுவதென்னநீதமா
சந்ததமெனைச் சத்யவாக்கரிச்
சந்த்ரனென்பதுபேதமா (கொடு

(அரி-வ-ம்.) ஆஆ தவசிரேஷ்டரே பாருங்கள் ஒருவருக்குக் கொடுத்த பொருளை மீண்டும் வாங்கிக்கொண்டவர்களை யானிதுவரை நேரிற்பாராவிடினும் சாஸ்திரங்களிற்கூட அவ்வித ஞாயமிருக்கக்காணவில்லை அங்ஙனமிருக்க யான் மனஸ்பூர்வமாய்த் தங்களுக்குத் தாரைவார்த்துக்கொடுத்த பொருளை மறுபடியும் வாங்கிக்கொண்டு சத்தியவாக்கரிச்சந்திரனென்னும் புகழ்கெட்டு அசத்தியவாக்கரிச்சந்திரனென்னும் பழிப்புக்கிடந்தேடிக்கொள்ளப்போகின்றேனா ஒருக்காலுமில்லை. என் வீணாக இன்னும் மனஞ்சோதிக்கின்றீர்கள் ப்ரபு.

ஈஸ்வரர் சொல் தரு.

[சருணிஞ்சுடகிதி சமயமையா கரிரக்ஷகா கவிதீர்ப்பவையா]

என்ற க்ருத்திகையின் வர்னமெட்டு.

இராகம்-நாகத்வனி-தாளம்-ஆதி.

பல்லவி.

இதின்வரலாறின் விதமதாகூறில்
இன்பமாகுமே துன்பமேகுமே (இதி)

அநுபல்லவி.

சதியல்லவரிச் சந்த்ரபூமசகியே
அதிசயமெல்லாம் அன்புடன்கேட்பாயே (இதி)

(ஈஸ்-வ-ம்.) ஹே அரிச்சந்திரபூமா இதுவரை யுனக்குநேர்ந்த விபத்துக்களின் வரலாற்றை விபரமாகக் கேட்பாயாகில் உனக்கேற்பட்ட துன்பமெல்லாம் நீங்கி யின்பமுண்டாகுமென்பதற்கு யாதுந்தடையில்லை பார் ஆதியிலேற்பட்ட தேவரகசியப்படி சென்றிட்டு முன்னால் உனதுகுலகுருவாகிய இவ்வசிஷ்டன் உன்னைமெய்யனென்றும் இவ்விஸ்வாமித்திரன் உன்னைப்பொய்யனென்றும் வாக்குவாதஞ்செய்து இந்திராதிதேவர்கள்முன்பாகச் சபதமேற்படுத்திக்கொண்டிருந்தும் விஸ்வாமித்திரன் உனது நாவினால் ஒருபொய்சொல்லச்செய்யவேண்டுமென்ற கருத்தால் உனது நாடுநகரபவுஷ்யபாக்கியாதிகளெல்லாம் பறித்துக்கொண்டு பற்பல கஷ்டப்படுத்தினவைத்தானேயன்றி மனஸ்பூர்வமாய் உனது ராஜ்யாதிகளை யபகரித்துக்கொள்ளவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் செய்ததன்று ஆதலின் இப்போது கோசிகமுனிவன் தாரைவார்ப்பதை யங்கீகரித்து உனது ராஜ்யத்திற்குச்சென்று சகஜீவியாய் ராஜ்யபரிபாலனஞ்செய்து வரக்கடவை.



அரிச்சந்திரன்சொல் தரு.

[இதுஞாயமா ஸ்ரீராமச்சந்த்ரா இதுஞாயமா]

என்ற க்ருத்திகையின் வர்னமெட்டு.

இராகம்-ஸ்ரீரஞ்சனி-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுநீதியா-ஓஜெகதீசா-இதுநீதியா

அநுபல்லவி.

பதியாளலாமா பறைத்தொழில்போமா (இது)

(அரி-வ-ம்) ஆஆ ஜெகதீசா ஏதோ தேவரகசியத்தாலுண்டான சம்பவங்களென்பதை யொப்புக்கொண்டேன் ஆகினும் நக்ஷத்திரத்தரகனிடத்தி லடிகள்பட்டு பெண்டுபிள்ளையைப் பார்ப்பானுக்கு விற்றதுமன்றியானும் வீரவாகுவென்னும் பறையனுக்கடிமையாகி நீசத்தொழில் புரிந்துவந்த என்னை யரசாக்ஷிபுரியும்படி யனுக்கிரகஞ் செய்கின்றீர்களே இது ஞாயமா உலகம்பழித்தற்கிடமுண்டாகுமல்லவோ ஸ்வாமி.

ஈஸ்வரர் விருத்தம்.

கூட்டிவந்த தரகனுமே பார்ப்பானல்ல
கொடுமைசூர் குருவான சுக்ரனுக்கும்
மேட்டிமைசேர் மனைவிமைந்தன் றன்னைக்கொண்டோன்
வேதியனே யன்றவனு மக்னியாகுந்
தோட்டியென வுனைக்கொண்டோன் பறையனல்ல
சுந்தரஞ்சே ரெமதர்ம ராஜனாகுங்
காட்டினிற்காத் திருந்தவிடஞ் சுடலையன்று
கனயாக சாலையிது தனைக்காண்பாயே.

(ஈஸ்-வ-ம்.) ஹே அரிச்சந்திரா நீயவ்வித சந்தேகங்கொள்ளவேண்டாம் பார் உன்னுடன் நாகுக்குவந்தவன்வேதியனன்று அவன் சுக்கிரபகவான் உனது மனைவிமைந்தனை விலைக்குக் கொண்டவன்காசிப்பார்ப்பானன்று அவன் அக்கினிபகவான் உன்னையடிமைகொண்டவன் பறையனன்று அவன் எமதர்மராஜன் நீகாத்

துக்கொண்டிருந்த இடமானது சுடலையன்று இம்மயானமானது யஞ்ஞசாலையாக்கும் இது மெய்யென்பதற்கு இக்காடுகளெல்லாம் ஓமகுண்டங்களாகத்தோற்றும் பார்த்துக்கொள்வாயாக.

(அரி-வ-ம்.) ஓமகுண்டங்களாய்த் தெரிவது வாஸ்தவந்தான் ப்ரபு.

(சுக்கிரபகவான் வசனம்.) ஹே அரிச்சந்திரா உன்னைக்கிட்டி கட்டியடித்தது ஞாபகமிருக்கின்றதா யான்றான் முன்னேதருக்கு வந்த சுக்கிரபகவான்.

(அரி-வ-ம்.) அப்படியா வெகு சந்தோஷமுண்டாயிற்று.

(அக்-வ-ம்.) ஹே அரிச்சந்திரா உனது மனைவிமைந்தனை விலைக்குவாங்கினவன் யான்றான் அக்கினிபகவான் இதோ நீ யெழுதிக்கொடுத்த விலைச்சீட்டுப் பார்த்துக்கொள்.

(அரி-வ-ம்.) இந்தச் சீட்டு யானெழுதிகொடுத்தது தான் ப்ரபு.

(எம-வ-ம்.) ஹே அரிச்சந்திரா உன்னையடிமையாகக் கொண்டவன்யான்றான் எமதர்மராஜன் இதோ வுனது மந்திரியெழுதிக்கொடுத்த விலைச்சீட்டுப்பார்த்துக்கொள்.

(அரி-வ-ம்.) இந்தச்சீட்டு எனது மந்திரியெழுதிக்கொடுத்ததுதான் ப்ரபு.

ஈஸ்வரர் விருத்தம்.

மன்னவா வுன்சந்தேகம் வழுவறத் தீர்ந்துபோச்சா
இன்னமு முண்டாவுண்டே லியம்புவா யில்லாவிட்டால்
நன்னயத்துடனேயுந்த னகரினுக் கின்றேயேகி
முன்னமே யாண்டநீதி முறைப்படி யரசாள்வாயே.

(ஈஸ்-வ-ம்.) ஹே அரிச்சந்திரா இப்போதுனது சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டதா இன்னும் ஏதாவது களங்கமிருக்கின்றதா அப்படியிருந்தாற் றெரிவிக்கக்கடவை இல்லாவிடில் உனது ராஜ்யஞ்சென்று முன்போல நீதியாயரசு புரியக்கடவை.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயனே மனச்சந்தேக மகன்றதி லேயென்ன
பொய்யிலா வசனனென்று புகழ்ந்துரைத் தாலுமென்ன



வையகந் தன்னையாள வாக்களித் தாலுமென்ன
மெய்யினிற் பலவாறாக விளையுதே கவலைஸ்வாமி.

## அரிச்சந்திரன்சொல் தரு.

[சங்கரனேயென்னையிந்தச் சஞ்சலப்படவிட்டாயோ]
என்ற ட்ராமாத்தருவின் வர்ணமெட்டு.
இராகம்-காபி-தாளம்-ரூபகம்.
கண்ணிகள்.

சங்கரனே யென்கவலை
சாற்றச்சாற்றவிளையுமே (சங்)
பாலகனைப் பலிகொடுத்துப்
பாரையாளஞாயமோ (சங்)
சர்ப்பமதுக் கொப்படைத்துத்
தாணியாளநீதியோ (சங்)
கன்றிழந்து நின்றமான்போற்
கலங்குதையாஎன்மனம் (சங்)
என்னசெய்வேன் ஏதுசெய்வேன்
இத்துயரம் நீங்குமோ (சங்)

(அரி-வ-ம்.) ஆஆ ஜெகதீசா என்மனக்கவலையைச் சொல்லச்சொல்லத் தீராப்பெருங்கடல்போல் விரியுமே ஆஆ எனது ஏகபுதல்வனாகிய தேவதாஸனைப் பாம்புக்கிரைகொடுத்துவிட்டு ராஜ்யத்திற்குச்சென்று சிங்கோசனத்திலிருந்து ஆளுவது ஞாயமாகுமா ஆஆ நினைக்கநினைக்க என்சிந்தையானது கன்றிழந்த மானைப்போல கலங்கித் திகைக்கின்றதே இதற்கென்செய்வேன் ஸ்வாமி.

(ஈஸ்-வ-ம்.) உனது புதல்வனையெழுப்பித்தருகின்றே னரிச்சந்திரா.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி அப்படியெழுப்பித்தரும் பக்ஷத்தில் அடியேன் ராஜ்யபரிபாலனஞ் செய்ய யாதுந்தடையில்லை ப்ரபு.

காசிராஜன் விருத்தம்.

அந்தரர் முனிவர்போற்று மையனே யரனேசோம
சுந்தரா கொன்றைமாலை சூடிய களபமார்பா
கந்தனை யின்றெடுத்த கௌரிநா யகனேயிப்ப
எந்தன்மைந் தனையுநீரே யெழுப்பியே தருகுவீரே.

(காசி-வ-ம்.) ஆஆ ஜெகதீசா எனது குமாரனையும் எழுப்பித்தரும்படி காசிராஜன் வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன்.

(ஈஸ்-வ-ம்.) அடா காசிமன்னா உனது மைந்தனையும் எழுப்[illegible]ின்றேன் பயப்படாதே.

[illegible]சி-வ-ம்.) தேவரீர் கிருபையிருக்கும்போது எனக்கெ[illegible]ம் ப்ரபு.

[illegible]ஈஸ்-வ-ம்.) இடவிஷப்பாம்பாற் ஜீவனையிழந்த தேவதாசா[illegible]ல் மடிந்த காசிராஜகுமாரா எழுந்திருக்கக்கடவீர்கள்.

பொது விருத்தம்.

அத்தனு மெழுந்துவாவென் றழைத்திடும் போதுராஜ
புத்திர ரிரண்டுபேரும் பூமியிற் படுத்துறங்கி
நித்திரை தெளிந்தோர்போன்ற நேர்மையா யெழுந்திருந்து
பத்தியா யீசன்செம்பொற் பதமது பணிகுவாரே.

## தேவதாசன் ஈஸ்வரனைத் துதித்தல்.

விருத்தம்.

அந்தரர் முனிவர்போற்று மம்பிகை பாகாபோற்றி
மந்திர மறைகளென்றும் வழுத்துமெய்ப் பொருளேபோற்றி
சுந்தனை யின்றெடுத்த கங்கைவே ணியனேபோற்றி
எந்தனை யெழுப்பித்தந்த ஈசனே போற்றிபோற்றி.

(தேவ-வ-ம்.) ஜெகதீசா தேவதாசன் வந்தனம்புரிகின்றேன்

(ஈஸ்-வ-ம்.) கல்யாண் தேவதாசா.

## காசிராஜகுமாரன் ஈஸ்வரரைத் துதித்தல்.

விருத்தம்.

சண்டனை யுதைத்தசெம்பொற் சரணபங் கயனே [illegible]போற்றி
மண்டலத் தவர்துதிக்கு மான்மழு [illegible] போற்றி
அண்டர்கள் முனிவர்போற்றி யடிதொழு மானேபோற்றி
தொண்டனை யெழுப்பித்தந்த சுந்தரா போற்றிபோற்றி.

(காசிராஜகுமாரன் வசனம்.) ஜெகதீசா காசிராஜகுமாரன் வந்தனம்புரிகின்றேன்.

(ஈஸ்-வ-ம்.) கல்யாண் காசிராஜகுமாரா.

(இராஜகுமாரர்கள்வசனம்.) தேவாதிசபையோர்களேபாலர்கள் வந்தனம்புரிகின்றோம்.

(சபையோர்கள் வசனம்.) கல்யாண் பாலர்காள்.

(ஈஸ்-வ-ம்.) ஹே விஸ்வாமித்திரா நீயரிச்சந்திரனிடம் வாங்கிக்கொண்ட ராஜ்யத்தைத் திருப்பிக்கொடுத்துவிட்டதாகத் தாரை வார்த்துவிடு சீக்கிரம்.



(விஸ்-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ப்ரபு ஹே அரிச்சந்திரா கரத்தைநீட்டு தாரைவார்க்கின்றேன்.

(அரி-வ-ம்.) அப்படியே நீட்டிக்கொண்டேன் ப்ரபு.

## விஸ்வாமித்திரர்சொல் தரு.

[மாதேநானுன் தேனேநானுன் பயிலேநானுன் குயிலேநானுன்
மையிலேசிக்கி னேனே மானேதேனே]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.

இராகம்-கமாஸ்-ஏகதாளம்.

பல்லவி.

மன்னுவுந்தன் வாழ்க்கையையுந்தன்
மனமாறவே தாரை வார்த்தேன் கீர்த்தி
சேர்த்தேன் அரிச்சந்த்ர (மன்னு)

சரணம்.

அவனியைநீயே ஆண்டுகொள்வாயே
தவமதனிலும்பாதி தானே-நானே தந்-தேனே
அரிச்சந்த்ர (மன்னு)

(விஸ்-வ-ம்.) ஹே அரிச்சந்திரா நீயெனக்களித்த நாடுநகரபவுஷ பாக்கியாதிகளாகிய செல்வாக்கனைத்தையும் இத்தேவாதிசளறிய உனக்குத்தாரைவார்த்துக் கொடுத்துவிட்டேன் அன்றியும் எனது தவத்திலும் உனக்குப் பாதிகொடுத்து விட்டேனாதலால் நீயுனது ராஜ்யத்திற்குச்சென்று சுகமாக அரசாக்ஷி புரிவாயாக.

(அரி-வ-ம்.) அப்படியே செய்கின்றேன் ப்ரபு.

ஈஸ்வரர் விருத்தம்.

இந்திரனே நீவதிஷ்டன் விஸ்வாமித்ரன்
இக்காசி ராஜனரிச் சந்த்ரமன்னன்
சந்திரமா மதியிளஞ்சேய் தேவதாசன்
சத்தியகீர்த் தியையுமிப்போ தழைத்துக்கொண்டு
சுந்தரவ யோத்திநகர் தனக்குச்சென்று
தோன்றலுக்கு மகுடாபி ஷேகஞ்செய்து
வந்திடுவா யானுமிதோ செல்லுகின்றேன்
வானவர்க ளுடனேதாஸ் தானந்தானே.

(ஈஸ்-வ-ம்.) இந்திரபூமா நீயிப்போது வதிஷ்டன் விஸ்வாமித்திரன் காசிராஜன் முதலானவர்களுடன் அரிச்சந்திரன் சந்திரமதி

தேவதாசன் சத்தியகீர்த்தி மந்திரிமுதலானவர்களை யழைத்துக் கொண்டு அயோத்தியாபுரிக்குச் சென்று நகரத்தாரெல்லோருக் கும் பரிஷ்காரமாய்த் தெரியும்படி அரிச்சந்திரனுக்கு மகுடாபி ஷேகஞ்செய்து வைத்துவா யான்றெய்வகணங்களுடன் எதாஸ்தா னஞ்செல்கின்றேன்.

(இந்-வ-ம்.) அப்படியே செய்துவருகின்றேன் தாங்கள்செ ன்று வாருங்கள்ஸ்வாமி இதோ வந்தனம்புரிகின்றேன் விடைதா ருங்கள்.

(ஈஸ்-வ-ம்.) கல்யாண் இந்திரபூமா நீயுஞ்சென்றுவா.

(வசி-வ-ம்.) ஜெகதீசா வந்தனம்புரிகின்றேன் விடைதாருங் கள்.

(ஈஸ்-வ-ம்.) கல்யாண் வசிஷ்டா அப்படியே சென்றுவா.

(விஸ்-வ-ம்.) சர்வேசா வந்தனம்புரிகின்றேன் விடைதாருங் கள்.

(ஈஸ்-வ-ம்.) கல்யாண் விஸ்வாமித்திரா அப்படியே சென்று வா.

(அரி-வ-ம்.) பரமேசா வந்தனம்புரிகின்றேன் விடைதாருங் கள்.

(ஈஸ்-வ-ம்.) கல்யாண் அரிச்சந்திரா சுகமாய்ச்சென்றுவா

(காசி-வ-ம்.) லோகேசா வந்தனம்புரிகின்றேன் விடைதாரு ங்கள்.

(ஈஸ்-வ-ம்.) கல்யாண் காசிமன்னா அப்படியே சென்றுவா.

(சத்-வ-ம்.) ஜெகரக்ஷகா வந்தனம்புரிகின்றேன் விடைதாரு ங்கள்.

(ஈஸ்-வ-ம்.) கல்யாண் சத்தியகீர்த்தி சுகமாய்ச் சென்றுவா.

(தேவ-வ-ம்.) ஜீவரக்ஷகா வந்தனம்புரிகின்றேன் விடைதா ருங்கள்.

(ஈஸ்-வ-ம்.) கல்யாண் தேவதாசா சிரஞ்ஜீவியாய்ச் சென்று வா.

(காசி-ரா-கு-வ-ம்.) ஆத்மரக்ஷகா வந்தனம் புரிகின்றேன் விடைதாருங்கள்.

(ஈஸ்-வ-ம்.) கல்யாண் காசிராஜகுமாரா சுகஜீவியாய்ச் சென் றுவா.

(சந்-வ-ம்.) பரமேஸ்வரி வந்தனம்புரிகின்றேன்.

(பார்-வ-ம்.) கல்யாண் சந்திரமதி எல்லோருஞ் சுகமாய்ச் சென்றுவாருங்கள்.

பொது விருத்தம்.

ஈசனார் கிருபைகூர்ந்தே யிட்டகட் டளையைப்போல
காசியை விட்டெல்லோருங் களியமாய் வழிகடந்து



321



தேசமெண் டிசையும்போற்றுஞ் சிறந்தவயோத்திசென்று
வாசவனிடத்திலந்த வதிஷ்டருஞ் சொல்லுவாரே.

## வதிஷ்டர்சொல் தரு.

[வந்தனந்தந்தே னென்னுடைய வந்தனந்தந்தேன்]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்துவிட்டோமே யயோத்தி வந்துவிட்டோமே

அநுபல்லவி.

ம-கி-ழ்-வாய் மகிழ்வாய் மகிழ்வாய்
மகிழ்வாகவே புகழ்மேவவே (வந்து)

சரணம்.

மந்திரவேள்வி வழங்குநேமா
அந்தரர்போற்றும் இந்திரபூமா. (வந்து)

(வதி-வ-ம்.) ஹே இந்திரபூமா நாம் ஈசனிடத்தில் மகிழ்வுற்று விடைபெற்றுப் புகழ்பற்றும்படியான அயோத்தியாபுரிக்கு வந்து விட்டோம் இக்கொலுச்சபைக்குச் செல்வோம் எல்லோரும் வாருங்கள்.

(இந்-வ-ம்.) அப்படியே வருகின்றோம் ப்ரபு.

(வதி-வ-ம்.) ஹே விண்ணவர்க்கரசே இதோ கொலுச்சபைக்கு வந்துவிட்டோம் இப்போது நல்ல சுபமுகூர்த்தவேளையாயிருப்பதால் அரிச்சந்திரனுக்கு மகுடாபிஷேகஞ் செய்துவைக்கலாமல்லவோ.

(இந்-வ-ம்.) அப்படியே செய்யுங்கள் ப்ரபு.

(வதி-வ-ம்.) ஹே விஸ்வாமித்திரரே உமது கரத்தாலே வாங்கிக்கொண்டராஜசின்னமுதலானவைகளைத் தாங்கொடும்சீக்கிரம்.

(விஸ்-வ-ம்.) இதோ எடுத்துக்கொள்ளும் வதிஷ்டரே.

(வதி-வ-ம்.) ஹே அரிச்சந்திரா இச்சிம்மாதனத்தில்வீற்றிரு.

(அரி-வ-ம்.) அப்படியே வீற்றிருக்கின்றேன்.

(வதி-வ-ம்.) இந்த மகுடத்தைத் தரித்துக்கொள்.

(அரி-வ-ம்.) அப்படியே தரித்துக்கொள்கின்றேன்.

(வதி-வ-ம்.) இச்செங்கோலைப் பிடித்துக்கொள்வாயாக.

(அரி-வ-ம்.) அப்டியே பிடித்துக்கொள்கின்றேன்.

பொது விருத்தம்.

அட்டதிசை மன்னரெல்லாம் புகழ்ந்துபோற்ற,
ஆனுலகு தேவர்கள்பூ மாரிதூற்றக்
கட்டழகு மங்கையர்க ணடனமாடக்
கட்டியர்க ளிருபுறமுங் கவரிபோட
வட்டவிடு பூச்சக்ரக் குடைகளிட
வல்லகவி வாணர்கள்நற் கவிதைபாடப்
பட்டணமெல் லாமேளத் தொனிமுழங்கும்
படிகண்டா னபிஷேக முடிகொண்டானே.

மகுடாபிஷேகத் தரு.

[மங்கையருக்கெல்லாஞ்சிலாக்யந் தங்கமிருத்த
செங்கையாலணையயோக்யம்]
என்ற ட்ராமாத்தருவின் வர்னமெட்டு.
இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

மகுடாபிஷேகங்கொண்டானே யரிச்சந்திர
மன்னவனெனுஞ்சீமானே

சரணம்.

சத்தியவிரதமாய் நித்தியமரசுக
டத்துபொழுதிவ்வா மித்திரமுனிவனும்-அடுத்து
அடுத்தாநகரைவசப் படுத்தியவுடன்கடன்
கொடுத்ததுபோலவகை முடித்திடக்காசிசென்று
மறையவர்தனக்கன்று இறைவிமைந்தனைவிற்று
பறையனுகிச்சுடலைக் கறையதுகாத்திருந்து
பெண்டுதலையைவெட்டக் கண்டஈசனாலே
விண்டமொழியையொப்புக்கொண்டவுடன்முன்போலே (மகுடா)

(இந்-வ-ம்-) ஹே முனிசிரேஷ்டரே அரிச்சந்திரனுக்கு மகுடாபிஷேக முடிந்துவிட்டமையால் யான்றெய்வலோகஞ்சென்று வருகின்றேன்.

(வதி-வம்.) அப்படியே சென்றுவா இந்திரபூமா.

(இந்-வ-ம்.) ஆனலிதோ வந்தனம்புரிகின்றேன்.

(வதி-வ-ம்.) கல்யாண் வஜ்ரபாணி.

(இந்-வம்.) அரிச்சந்திரா யான் சென்றுவருகின்றேன்.

(அரி-வ-ம்) அப்படியே சென்றுவாருங்கள் ப்ரபு இதோ வந்தனம் புரிகின்றேன்.

(இந்-வ-ம்.) கல்யாண் அரிச்சந்திரா.

(காசி-வ-ம்.) யானுஞ்சென்று வருகின்றேன், விடைதாருங் கோவே.



(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவாருங் காசிவேந்தே.

(காசி-வ-ம்.) இதோ வந்தனம்புரிகின்றேன்.

(அரி-வ-ம்.) இதோ பிரதிவந்தனம் புரிகின்றேன்.

(வதி-வ-ம்.) ஹே அரிச்சந்திரா இன்னும் என்னென்ன தீங்குகள்நேரிட்டாலுஞ் சத்தியத்தைமட்டுங் கைவிடாமற்செங்கோற் செலுத்திவருவாயாக.

(அரி-வ-ம்.) ஆஆ ஸ்வாமி எனதுயிர்போய்விடினுஞ் சத்தியத்தைமட்டுங் கைதவறவிடமாட்டேன் ப்ரபு.

(வதி-வ-ம்.) ஆனல் யான்சென்றுவர விடைதருவாயாக.

(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள் இதோ வந்தனம் புரிகின்றேன்.

(வதி-வ-ம்.) கல்யாண் அரிச்சந்திரபூமா.

(சந்-வ-ம்.) ஸ்வாமி சந்திரமதி வந்தனம்புரிகின்றேன்.

(வதி-வ-ம்.) கல்யாண் மாதுசிரோமணி.

(சத்-வ-ம்.) குருசிரேஷ்டரே சத்தியகீர்த்தி வந்தனம்புரிகின்றேன்.

(வதி-வ-ம்.) கல்யாண் ப்ரதான் சிரேஷ்டா.

(தேவ-வ-ம்.) நாதா தேவதாசன் வந்தனம்புரிகின்றேன்.

(வதி-வ-ம்.) கல்யாண் வத்சா ஹே விஸ்வாமித்திரரே யான் சென்று வருகின்றேன்.

(விஸ்-வ-ம்.) இதோ யானும்வருகின்றேன் வதிஷ்டரே.

(வதி-வ-ம்.) ஆனல் வாருஞ்செல்வோம்.

(விஸ்-வ-ம்.)ஹேஅரிச்சந்திரபூபாயான்சென்றுவருகின்றேன்

(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவாருங்கள் இதோ வந்தனம் புரிகின்றேன்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் கோவே ஹே வதிஷ்டரே வாருஞ் செல்வோம்

(வதி-வ-ம்.)இதோ வருகின்றேன்.

(சந்-வ-ம்.) ஆஆ ப்ராணநாத் யானந்தப்புரஞ்சென்று வருகின்றேன்.

(அரி-வ-ம்.) அப்படியே சென்றுவா ப்ராணகாந்தி.

பொது விருத்தம்.

தூய்யமுனி வஞ்சனையால் நகரம்நாடு
தோற்றுமனை மைந்தனைவே தியர்க்குவிற்று
வெய்யபுலை யன்றனக்கே யடிமையாகி
வெட்டியான் வேலைகொண்டு சுடலைகாத்துப்
பையரவுக் குச்சுதனை யிரைகொடுத்துப்
பத்தினியை வெட்டிநல்ல கீர்த்திபெற்று
வையமெல்லாம் புகழமன்னன் மகுடம்பூண்ட
வளஞ்சொன்னேன்முற்றுறமங் களஞ்சொல்வேனே

## மங்களத்தரு.

[சரிகக்கக்ச நிகமம்மம்மா சரி சமபத பமகரி ஸஸ்ஸஸ்ஸா]
என்றட்டாமாரோட்டின்வர்ணமெட்டு.
இராகம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

பல்லவி.

ஜெய மங்களமே-சுப மங்களமே ஜெய
சுபஜெய சுபஜெய மங்களமே

அநுபல்லவி.

தயவுளகோவரிச் சந்த்ரற்கும்-கலு
தயவுளகோவரிச் சந்த்ரற்கும்
சதமாய் சதமாய் சதமாய் சதமாய் (ஜெய)

பதிவ்ரதைசந்திர மதியாட்கும்-மகா,
பதிவ்ரதைசந்திர மதியாட்கும்
பரிவாய் பரிவாய் பரிவாய் பரிவாய் (ஜெய

சற்குணதேவ தாசற்கும்-அதி
சற்குணதேவ தாசற்கும்
தரமாய் தரமாய் தரமாய் தரமாய் (ஜெய)

சீர்த்திசேர்சத்திய கீர்த்திக்கும்-மிகு
சீர்த்திசேர்சத்திய கீர்த்திக்கும்
தினமும் தினமும் தினமும் தினமும் (ஜெய)

அதிஷ்டமிகுந்தன் வதிஷ்டர்க்கும்-தினம்
அதிஷ்டமிகுந்தன் வதிஷ்டர்க்கும்
அன்பாய் அன்பாய் அன்பாய் அன்பாய் (ஜெய)

வையகம்புகழும் ஐயனுக்கும்-இந்த
வையகம்புகழும் ஐயனுக்கும்
மகிழ்வாய் மகிழ்வாய் மகிழ்வாய் மகிழ்வாய் (ஜெய)

சத்தியவாக்கு
அரிச்சந்திர நாடகம்.
முற்றுப்பெற்றது.

11912
1816